இரட்டை அஞ்சலிகள்

கி. ராஜேந்திரன்

இடியோசை கேட்டு திடுக்கிட்டு விழித்துக் கொண்டாள் ரஸியா. 'மழை கொட்டப் போகிறதா? மின்னல் வெட்டுமா? ஜன்னல்களை சாத்தி விட்டுப் படுப்பது நல்லது...'

கட்டிலை விட்டு இறங்கினாள். அப்போது அந்தக் குரல் கேட்டது. 'ஐயோ! ஐயய்யோ!'

பரபரப்புடன் ஜன்னல் வழியே பார்த்தாள். எதிர் சாரியில் ஒரு வீடு தள்ளி அந்தப் பெரிய கட்டடம் இருந்தது. "அகில பாரத ஹிந்து பரிவார்" என்று போர்டு தொங்கும். இருட்டில் சரியாகத் தெரியவில்லை. ஆனால் ஒரு ஜன்னல் வழியே தீ ஜுவாலையைப் பார்க்க முடிந்தது. தெருவோர சோடியம் வேப்பர் விளக்கொளியில் புகை மேகங்கள் சுருண்டெழுந்தன.

'அந்தக் கட்டடத்தின் மீது இடி விழுந்து தீப்பற்றிக் கொண்டதா? 'ஐயோ' என்று அலறியது யார்? காவல்காரனா?' அனுதாபம் பொங்க உடனே அங்கு போய் உதவத் தோன்றியது. ஆனால் இந்த இரவு நேரத்தில் வெளியே போவது அப்பாவுக்குத் தெரிந்து விட்டால் கொன்றே போட்டு விடுவார்.

அவள் எப்போதுமே டார்ச் லைட்டுடன்தான் படுப்பது வழக்கம். இரவில் ஓரிருமுறை எழுந்து டார்ச் அடித்து மணி பார்ப்பாள். காலை ஐந்து மணிக்குப் படிக்க உட்கார்ந்து விடுவாள். இப்போது சுவர் கடிகாரத்தில் மணி இரண்டரை. பக்கத்து அறையில் அப்பாவும் அம்மாவும் அசந்து தூங்கினார்கள். அங்கே ஜன்னல்கள் தெருவைப் பார்க்க இல்லை. எதிர்ப்புறம். அவளுக்கு வயதுக்கு வந்த பிறகு அவர்கள் தங்கள் படுக்கை அறைக் கதவைத் தாளிடுவதில்லை. அதில் இருவகை பாதுகாப்பு இருப்பது எண்ணி அவள் தனக்குள் சிரித்துக் கொண்டதுண்டு.

மாடிப் போர்ஷன் அவர்களுடையது. ரெண்டு பெட்ரூம்; கிச்சன்; பாத்ரூம்; மாதம் ஆயிரத்து ஐந்நூறு விழுங்கிய 675 சதுர அடி. பாத்ரூம் கதவை வெளிப்புறம் திறந்தால் ஒரு சிறிய 5X5 வராந்தா. அதிலே மரப்படி. ஏறினால் மொட்டை மாடி. ஆவலும் குறுகுறுப்பும் ஓர் அசட்டுத் துணிச்சலும் சேர அவளுக்கு டார்ச் ஒளி வழிகாட்டி அழைத்துப் போனது.

மொட்டை மாடி. திறந்தவெளியில் குளிர் ஜிவ்வென்று தாக்கியது. துப்பட்டாவை தலைக்கு மேலாகக் கொண்டு போய் காதுகளை மறைத்து இழுத்துப் போர்த்திக் கொண்டாள். கைப்பிடிச் சுவர் அருகே நின்ற போது, புகை அடங்கி இப்போது இடிபாடுகள் தெரிந்தன. 'இடிக்கு இத்தனை சக்தியா?' அண்ணாந்து பார்க்க, நட்சத்திரங்கள் பரிகசித்தன.

'இடி விழவில்லை; குண்டு வெடித்திருக்கிறது!' சிலீரென்று உண்மை நெஞ்சில் இறங்கியது, கூரிய ஐஸ் கத்தி போல. அதனால் உசுப்பி விடப்பட்டு இருதயம் 'பக் பக்' என்று உரக்கத் தாளம் போட்டது.

"யாருடா அது! பிடிடா அவனை!" அகில பாரத ஹிந்து பரிவார் அமைப்பின் சென்னைக் கிளையின் காவலாளி. முன்பு "ஐயோ! ஐயய்யோ!" என்று அலறியதும் இவன்தானோ?

திபுதிபுவென்று ஒருவன் தெருவில் ஓடிவந்து சாலையோர மரத்தின் மறைவில் பதுங்கி, சுவர் ஏறி...

'அடப்பாவி! நம் வீட்டின் தோட்டத்தில் அல்லவா குதிக்கிறான்!'

ரஸியாவின் பயம், திகிலாக மாறியது. தான் மொட்டை மாடிக்கு வந்ததே தப்பு! பாதுகாப்பான தன் அறைக்கு உடனே திரும்பி, கட்டிலில் சுருண்டு, போர்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டு கொட்டக் கொட்ட விழித்திருக்கலாமே தவிர...

பின்நோக்கி இரண்டு அடி எடுத்து வைத்தவளின் காலில் ஏதோ தட்டுப்பட, என்னமோ ஏதோ என்று துள்ளி டார்ச் ஆன் செய்த போது...

1

துண்டிக்கப்பட்ட ஒரு கரம் கருகி, கறுப்பாக அங்கு விழுந்து கிடந்தது. ரத்தம் கசிந்து தரையில் பரவிக் கொண்டிருந்தது. 'ஐயோ' என்று அலற எண்ணிய ரஸியாவின் வாய் திறந்ததே தவிர, சத்தம் ஏதும் வரவில்லை.

'இதையா மிதித்தோம்?' அருவருப்புடன் உள்ளங்காலை மொட்டை மாடியின் சொர சொரப்பான தரையில் தேய்த்தாள். 'எப்படி இது இங்கு வந்தது...? காக்காய்... கழுகு... சே! இராது. சாயந்திரம் இங்கு வந்தபோது இதைப் பார்க்கலையே! குண்டு வெடித்த போது தாக்குண்ட ஒரு மனிதனின் உடல் சிதறி, கரம் துண்டிக்கப்பட்டு, தூக்கி யெறியப் பட்டு இங்கு வந்து விழுந்திருக்கிறது.'

வயிற்றைக் குமட்டியது. சுவர் ஓரமாக குந்தினாற்போல் உட்கார்ந்து மென்று விழுங்கி சுதாரித்துக் கொண்டாள். சுவர் ஏறிக் குதித்தவனின் நினைவு வர, கிடுகிடுவென்று படிகளில் இறங்கி வராந்தா கதவை நெருங்கி உள்ளே அடியெடுத்து வைக்க, மலைப்பாம்பு ஒன்று அவள் கழுத்தைச் சுற்றி வளைத்தது... அல்லது மலையாளப் பேய்க் கதைகளில் வருகிற ஓர் அமானுஷ்ய சக்தி... இரண்டுமில்லை, இது ஒரு மனிதனின் கரம்தான். அது சத்தம் எழாதவாறு குரல்வளையை நெரிக்க, ரஸியாவுக்கு திமிரவும் தோன்றவில்லை.

"இதோ பார்... நீ மொட்டை மாடிக்குப் போனது; நான் சுவர் ஏறிக் குதித்ததைப் பார்த்தது; என்னிடம் நீ சிக்கியது



கே : டெபாசிட்தாரர்களுக்கு, மற்றவர்களை விடக் கூடுதலான வட்டியை ஹார்வெஸ்ட் வழங்குகிறதா?

ப : நிச்சயமாக இல்லை. கடன் பெறுவோரிடம் நியாயமான நடவடிக்கைகள் மூலமே டெபாசிட்தாரர்களின் நலன் பாதுகாக்கப்படுகிறது என்பதையும் உறுதியாக நம்புகிறது ஹார்வெஸ்ட். பொதுவாக, மிக அதிக வட்டிக்குக் கடன் பெறுவது எல்லாம், வேறு வழியே இல்லாத இக்கட்டான சூழ்நிலைகளில்தான் பெறப்படுவதாகும். ஹார்வெஸ்ட் இவற்றைவிட்டு ஒதுங்கியே நிற்கிறது.

கே : அப்படி என்றால் உங்கள் விகிதங்கள் குறைவாக இருக்கும் என்றா சொல்கிறீர்கள்?

ப : இல்லவே இல்லை. ஹார்வெஸ்ட் நிறுவனத்தில் டெபாசிட்டுகளுக்கு, பாதுகாப்பான உயர்ந்த பட்ச வட்டி வரம்பு என்று நாங்கள் கருதுவதை வழங்குகிறோம். டெபாசிட்தாரர்களின் முதலீட்டைப் பாதுகாக்க, இது பண வீக்கத்தை உட்படுத்தியது. அத்துடன் வாழ்க்கைக்கு ஒரு வருமானத்தையும் பெற அவர்களுக்கு இது உதவுகிறது. எடுத்துக்காட்டாக, வயது முதிர்ந்தவர்களுக்கு ஆதரவு தேவை என்பதால், பென்ஷன்தாரர்களுக்கு நாங்கள் ஆண்டுக்கு 22% வரை வட்டி வழங்குகிறோம். பெண்களுக்கும் விசேஷ திட்டங்களைக் கொண்டிருக்கிறது ஹார்வெஸ்ட். இந்த வகையில், நிதி பெறுவோராகச் சிறந்த ஈடுபாட்டுடன், சமூக விழிப்புணர்ச்சி கொண்ட ஒரு தொழில் முயற்சியாகும் ஹார்வெஸ்ட்.

கே : ஹார்வெஸ்ட் – ஒரு நிதி நிறுவனமா அல்லது பெனிஃபிட் ஃபண்ட் நிறுவனமா?

ப : எல்லா நிதி நிறுவனங்களும் பெனிஃபிட் நிறுவனங்கள்தான். ஆனால் அதையே எதிர்மாறாக மாற்றிச் சொல்ல முடியாது. ஹார்வெஸ்ட் ஒரு நிதி நிறுவனம் ஆகும் – இது, தேர்ந்தெடுத்த ஒரு சிலருக்கு மட்டுமே இந்திய அரசாங்கம் வழங்கிய அந்தஸ்து. நாங்கள் நிதி அதிகாரிகளின் ஆய்வுக்கு எங்களை உட்படுத்திக் கொள்கிறோம் என்பதையும், சில எல்லைகளுக்கும் வழிமுறைகளுக்கும் உட்பட்டே எங்கள் தொழிலை நடத்துகிறோம் என்பதையும் இந்த அங்கீகாரம் உறுதிப்படுத்துகிறது. ஹார்வெஸ்ட் பெரிதும் மதிக்கும் இந்த ஒழுங்குமுறைச் செயல்முறைகள், டெபாசிட்தாரர்களின் நலனைப் பாதுகாக்கும் வகையில், எங்கள் பணி ஒளிவு மறைவு இல்லாமலும், தன்னகத்தே கட்டுப்பாட்டுடனும் நடைபெறுவதை நிச்சயப்படுத்துகின்றன.

கே : ஹார்வெஸ்ட் 1967–ல் நிறுவப்பட்டது என்றீர்கள்... ஆனால் இப்போதுதானே உங்களைப் பற்றித் தெரிய வருகிறது?

ப : ஹார்வெஸ்ட் அமைப்பின் பின்னணியில் உள்ளவர்கள், தாஹிரி எய்ட் ஃபண்ட் லிமிடெட் என்ற பெயரில் 1967–ல் நிறுவப்பட்டு, ஏற்கனவே இருந்த ஒரு நிதி நிறுவனத்தின் பொறுப்பை மேற்கொண்டார்கள். அவர்களுடைய மதப் பற்றின் கட்டளைகள் காரணமாக, அந்த நிதியானது அதன் பணிகளைத் தொடரவில்லை. அந்தத் தொழில் திட்டத்தை மிகக் குறைந்த காலத்தில் தொடங்கி வைக்க, ஹார்வெஸ்ட் அமைப்பின் பின்னணியில் உள்ளவர்களால் அந்த நிறுவனத்தின் பொறுப்பு மேற்கொள்ளப்பட்டது.

கே : உறுப்பினர்களுக்கு ஹார்வெஸ்ட் அளிக்கும் விசேஷ சேவைகள் என்ன?

ப : டெபாசிட்தாரர்களுக்குப் பலதரப்பட்ட முழுமையான திட்டங்களை நாங்கள் வழங்குகிறோம் – தனி நபர்கள் ஒவ்வொருவருடைய தேவைகளுக்கும் ஏற்ற வகையில் – சாதாரண மக்களுக்கு நகைக் கடன்கள், எங்களுடைய பாதுகாப்புக்கு உரிய உச்ச வரம்புடன், அடைமானத்தின் பேரில் கடன்கள் மற்றும் கடன் வழங்குவதற்கு உறுதுணையான இதர பணிகள் – வர்த்தகம் மற்றும் வணிக உறுப்பினர்களுக்கு... சேவையைப் பொறுத்தவரை, இங்கே முழுவதும் கம்ப்யூட்டர் மூலமான தகவல் விவரங்கள்... மற்றும் வசதியான இடங்களில் அமைந்துள்ள உறுப்பினர் சேவை மையங்கள். ஹார்வெஸ்ட் அமைப்பில் டெபாசிட்தாரர் மற்றும் கடன் பெறுவோர் – இருவருமே இரண்டு கண்களைப் போன்றவர்கள் – எனவே இருவரையும் நாங்கள் சரிசமமாகவே கருதுகிறோம். இல்லை என்றால் நம் இருவரின் எதிர்காலமுமே தெளிவாகத் தெரியாது அல்லவா?

ஹார்வெஸ்ட் பெனிஃபிட் ஃபண்ட். உங்கள் செல்வம் செழித்து ஓங்க, உங்கள் டெபாசிட்டுகளுக்குச் சிறந்த பாதுகாப்பு கிடைக்க, பொறுப்பும் ஈடுபாடும் கொண்ட நிறுவனத்தை நாடுங்கள்.


HARVEST
BENEFIT FUND LIMITED

புதுமை எண்ணங்கள் கொண்ட நிதி

தி. நகர் : 19, வியாசர் தெரு, (வடக்கு உஸ்மான் சாலை அருகில்), சென்னை – 600 017 போன் : 8253597, 8281192
கிளைகள் : ஆழ்வார்பேட்டை : ரூம். நெம்பர் 6, முதல் மாடி, மூகாம்பிகா காம்ப்ளக்ஸ், 4, லேடி தேசிகா ரோடு (சி.பி.ராமசாமி ரோடு), சென்னை 600 004 போன் 4991552, 4992231, 4991056 **ஜார்ஜ் டவுன் :** 41, செம்புதாஸ் தெரு (முதல் மாடி) சென்னை 600 001 போன் 5227891. **அண்ணா நகர், திருவான்மியூர்** (சென்னை) **கோயம்புத்தூர், பெங்களூர்** மற்றும் **ஹைதராபாத்** நகரங்களில் கிளைகள் துவங்கப்பட உள்ளன.

இந்திய அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிதி நிறுவனம். ஸ்தாபிதம் 1967 எங்கள் சேவை உறுப்பினர்களுக்கு மட்டுமே.

Insight-893



மதக் கலவரமா? இங்கா?
கேரள முதல்வர்
ஏ.கே. ஆண்டனி
சிறப்புப் பேட்டி!
பக்கம் 73ல்

எதைப் பற்றியும் யாரிடமும் மூச்சு விடாதே! தப்பித் தவறி பேசினாயோ, தொலைந்தாய்! சாகடிக்க மாட்டேன்! செத்துப் போனாலே தேவலாம் என்று நினைக்குமளவில் பழி வாங்குவேன்! புரிந்ததா?"

'புரிந்தது! இவனைக் கண்டு நான் மட்டு மல்ல; என்னைக் கண்டும் இவன் பயப்படு கிறான். குரலை மாற்றிக் கொண்டு அடித் தொண்டையால் மிரட்டுகிறான்...' கொஞ்ச மாய்த் துணிவு பிறக்க, கையில் டார்ச் லைட் இன்னமும் இருப்பது நினைவு வந்தது. அதை ஆயுதமாகப் பயன்படுத்த முடியும் என்று கூட அவள் தன் படுக்கை அறையில் தனித்து இருக்கும் போது கற்பனை செய்து பார்த்ததுண்டு. இப்போது அந்த அளவுக்கு தைரியம் வரவில்லை. ஆனால் ஸ்விட்சைத் தட்டி டார்ச்சை உயர்த்துவதில் என்ன தப்பு?

அவன் கண்கள் கூச சட்டென்று இறுக்கி மூடிக் கொண்டான். அதற்கு முன் னால் அந்தக் கண்மணிகளின் நீலநிறம் வித்தியாசமாக அவள் கவனத்தைக் கவர்ந் தது. சிவந்த முகத்தில் கருகருவென்று ஒரு நாள் தாடி. அளவுக்கு அதிகமான அடர்த்தி யான புருவங்கள். எடுப்பான மூக்கில் அலாதியான ஒரு பளபளப்பு. காதுகளில் ஒன்றில் லோலாக்கு. ஹிப்பி பாணியில் ஏராள கேசம்; டி ஷர்ட்டுக்கும் மேலாக எட்டிப் பார்த்த மார்பு முடி; திரண்ட தோள்கள்; தன்னைச் சுற்றி வளைத்து ஆண் மையின் ஆளுமையை உணரச் செய்த கரங் கள்.... நிரந்தரமாய் இப்படி சிறைப்பட்டிருந் தால்தான் என்ன... சீச்சீ! உடல் ரசாய னத்தை அறிவு அதட்டி விரட்டியது.

"ரஸியா" - உள்ளேயிருந்து அம்மாவின் குரல்.

"இதோ வரேன்."

பிடியைத் தளர்த்தி, "நினைவிருக்கட்டும்" என்றான் அவன். வராந்தா சுவர் ஏறி, அந்தப் பக்கத்தில் மழைநீர் இறங்கும் பைப் வழியே சறுக்கி இறங்கி ஓடி மறைந்தான்.

"என்னடீ அங்கே?"

"வேறென்ன, தேவதைகள் அழைத்தால் நடுராத்திரியானாலும் எழுந்து வரத்தானே வேணும்?" ரஸியா பிளஷ்டாங்கை இழுத்து விட்டாள். தண்ணீர்ப் பஞ்சம் உள்ள சென்னையில் நாலு சொம்பு நீர் வீணாகிப் போனது.

தூரத்தில் போலீஸ் சைரன் ஒலித்தது. "மெல்ல வாங்க, என்ன அவசரம்?" என்று பரிகசித்தபடியே படுத்தாள். ஒன்றன் பின் ஒன்றாக ஓர் இரவுக்குள் எத்தனை அதிர்ச்சி கள்! கண்களிலிருந்து தூக்கம் துடைக்கப் பட்டு விட்டது. தலைக்கு மேலே மொட்டை மாடியில் ஒரு கரம் துண்டிக்கப்பட்டுக் கிடக் கிறது! வேறொருவனின் வலிமையான கரங்கள் என்னைச் சுற்றி வளைத்த இடங் கள் இன்னமும் வலிக்கிறது. அவன் முகத் தில் ஏதோ வித்தியாசமாகத் தோன்றியதே... என்ன அது?

காலையில் ரஸியா வழக்கத்துக்கு மாறாக ரொம்ப நேரம் தூங்குவது அவள் தாயாருக்கு ஆச்சர்யம் அளித்திருக்க வேண் டும். ஆனால் அதற்குள் குண்டு வெடிப்பு சம்பவம் எல்லாருக்குமே தெரிந்து போக, தெருவே பரபரப்பாகி விட்டிருந்ததால் மெஹருன்னிசா தன் மகளைப் பற்றி நினைத்துப் பார்க்கவில்லை.

'பிறமதங்களை எதிர்ப்பதல்ல நோக்கம்; இந்து மதத்தைப் போற்றுவதே லட்சியம்; இந்தியனாய் வாழ்வதே சாத்தியம்' என்று தனது பேரியக்கப் பணிகளை மூன்றே வரி களில் அடக்கிய அகில பாரத ஹிந்து பரி வாரின் சென்னைக் கிளை அலுவலகத்தில் அதிர்ஷ்டவசமாக அந்த இரவு நேரத்தில் யாரும் இல்லை. அதனால் கட்டடத்துக்குச் சேதம் ஏற்பட்டதேயொழிய, யாரும் உயிர்ப் பலியாகவில்லை.

வாட்ச்மேன் ஒருவன் மட்டுமே இருந் திருக்கிறான். குண்டு வெடித்ததும் அதிர்ச்சி அடைந்து சற்று நேரம் வாயடைத்துப் போனவன், பிறகு "ஐயோ" என்று அலறி யிருக்கிறான். தலைசுற்றி மயக்கமாய் வந் திருக்கிறது. அதை சமாளித்துக் கொண்டு தடுமாறி எழுந்து பார்த்தபோது, நிழலுருவாக ஒரு ஆள் நடமாட்டம் தெரிய, "யாருடா அவன்! பிடிடா அவனை" என்று கூச்சல் போட்டிருக்கிறான். ஆனால் அவனைத் தொடர முடியாதபடி தடுத்தது, குண்டு

ஹார்வெஸ்ட்

உ
லாபம்

மதிப்புமிக்க ஒரு நிதி நிறுவனம் இதன் தொழில் தொடர்புகளால் இதற்கு மேலும் வலிமை.

ஹார்வெஸ்ட் பெனிஃபிட் ஃபண்ட் லிமிடெட் முற்றிலும் மாறுபட்ட நிதி நிறுவனம், தொழில் உலகில் உறுதியான தொடர்புகைளக் கொண்ட பொதுத்துறை நிறுவன இயக்குநர்களின் பக்கபலத்தை இது கொண்டுள்ளது. நல்லறிவு, நன்னெறி மற்றும் நம்பிக்கை ஆகியவற்றின் வித்துக்கள் கவனமாக இங்கே விதைக்கப்படுகின்றன. அறுவடை சிறப்பாக அமைந்து, ஒவ்வொரு முறையும் எங்கள் வாடிக்கையாளர்கள் பயன்பெற வேண்டும் என்பதற்காகத்தான்...

ஆம், சிறந்த சேவைதான் வாடிக்கையாளர் நலன் மற்றும் திருப்திக்கே பங்கு வகிக்கிறது. முழுவதும் கம்ப்யூட்டர் மூலம் இயங்கும் செயல்பாட்டினால் விரைவான, திறன்மிக்க, குறித்த நேரத்தில் கிடைக்கும்படியான விவரங்கள்.

அதுதான் ஹார்வெஸ்ட் நிறுவனத்தின் பணி – உங்கள் நலனுக்கான ஒவ்வொரு செயலையும் உங்களுக்கு லாபகரமானதாக்கி, மகிழ்ச்சி நிறைந்த அனுபவமாக்கிவிடும்.

ஹார்வெஸ்ட் பவுண்டி : பென்ஷன்தாரர்களுக்கு மிகப்பெரும் வருமானம் வருடாந்திர வட்டி 22% வரை வழங்குகிறது.

ஹார்வெஸ்ட கிஃப்ட் : நீண்ட காலத்திற்கு ஒரு திட்டம் 24 மாதங்களுக்கு ரூ.10,000/– முதலீடு செய்யுங்கள் ரூ.15,190/– தொகைக்கான முதிர்வுத்தொகைச் செக்கைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

அல்லது

24 மாதங்களுக்கு ரூ.10,000/– முதலீடு செய்யுங்கள் ஒவ்வொன்றும் ரூ.180/– தொகைக்கான 24 மாதாந்திர வாரண்டுகளைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

ஹார்வெஸ்ட் ஃபார்ச்சூன் : சிறுசேமிப்புகள் பெருமளவு வருமானங்கள் இப்பொழுதே 7 ஆண்டு முதல் 23 ஆண்டுகள் வரை சேமியுங்கள்.

ஹார்வெஸ்ட் குமுலேட்டிவ் : வருங்காலத்திற்கு வழிவகுக்க 4 வருடங்களில் உங்கள் முதலீடு இருமடங்காகிறது.

ஹார்வெஸ்ட் டிரிப்பிள் பம்பர் : மும்மடங்கு மகிழ்ச்சி ரூ.25,000/– முதலீடு செய்து 5 ஆண்டுகளுக்குப்பிறகு ரூ.75,000/– பெற்றுக்கொள்ளுங்கள்.

ஹார்வெஸ்ட் லேடீஸ் ஸ்பெஷல் : மின்னுவதெல்லாம் பொன்னேதான்! மாதம் ஒன்றுக்கு ரூ.500/– வீதம் 12 மாதங்களுக்கு முதலீடு செய்யுங்கள். 12 மாதங்களுக்கு பிறகு 2 கிராம் தங்க நாணயம் ஒன்றையும் ரூ.6,000/– தொகையையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

அல்லது

12 மாதங்களுக்குப் பிறகு 2 கிராம் தங்க நாணயம் ஒன்றைப் பெற்று கொள்ளுங்கள். வட்டி வருமானமாகக் காலாண்டுக்கு ஒரு முறை ரூ.350/– தொகையை வாழ்நாள் முழுவதும் பெறுங்கள்.

HARVEST
BENEFIT FUND LIMITED


Insight-879

புதுமை எண்ணங்கள் கொண்ட நிதி

19, வியாசர் தெரு, (வடக்கு உஸ்மான் சாலை அருகில்) தி. நகர், **சென்னை – 600 017.** போன் : 8253597, 8281192

கிளைகள் : ஆழ்வார்பேட்டை : ரூம். நெம்பர் 6, முதல் மாடி, மூகாம்பிகா காம்ப்ளக்ஸ், 4, லேடி தேசிகா ரோடு (சி.பி.ராமசாமி ரோடு), சென்னை 600 004 போன் 4991552, 4992231, 4991056 **ஜார்ஜ் டவுன் :** 41, செம்புதாஸ் தெரு (முதல் மாடி) சென்னை 600 001 போன் 5227891 **அண்ணா நகர், திருவான்மியூர்** (சென்னை) **கோயம்புத்தூர், பெங்களூர்** மற்றும் **ஹைதராபாத்** நகரங்களில் கிளைகள் துவங்கப்பட உள்ளன.

இந்திய அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிதி நிறுவனம். ஸ்தாபிதம் 1967 எங்கள் சேவை உறுப்பினர்களுக்கு மட்டுமே.



"இந்த ஊர் ஜனங்க மேல தலைவர் கோபமா இருக்கார்!"
"ஏன்?"
"எடைக்கு எடை மனு குடுக்கறாங் களாம்!"

— அம்பை தேவா

வெடிப்பிலே காலில் பாய்ந்து பதிந்து விட்ட ஒரு மரச் சில்லு. ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்லப்பட்டு சிகிச்சை நடக்கிறது. உயிருக்கு ஆபத்தில்லை...

ரஸியா குளித்து, சோப்பு மணக்க மணக்க புத்தாடை தரித்து, முக ஒப்பனைக்கு கண்ணாடி முன் நின்றாள். அவள் முகத்தருகே இரவு டார்ச் ஒளியில் பார்த்த அந்த முகமும் தெரிந்தது! 'ஹிந்து பரிவார் அலுவலகத்துக்கு அவன் ஏன் குண்டு வைக்க வேண்டும்? அவனுடன் ஒரு கூட்டாளியும் இருந்திருக்கிறான். அவன் கரம் தான் இப்போதும் மொட்டை மாடியில் இருக்கிறது. தன் உயிரையே கொடுக்கும் அளவுக்கு ஏன் இந்தப் பகை? அம்மா மெஹருன்னிஸா, அப்பா சுந்தரவதனத்தைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு, ரஸியாவாகிய என்னைப் பெற்றெடுத்து கான்வெண்ட் பள்ளிக்கு அனுப்பவில்லையோ? அங்கே மாதா கோயிலில் மேரி அன்னையிடம் நான் தினமும் பிரார்த்திக்கவில்லையோ? அப்படி எல்லாரும் பரந்தமனப்பான்மையுடன் இருந்தால் என்ன? இம்மாதிரி குண்டு வெடிப்பு சம்பவங்களும் நிகழாது; நான் பயந்து சாகவும் நேராது.'

ஆனால் அந்த பயம் கலந்த நினைவுகளில் ஒரு சுவாரஸ்யம் இருப்பதை ரஸியா உணர்ந்தாள். போலீஸ்காரர்கள் அந்த இடிபாடுகளுக்கிடையில் தடையங்களைத் தேடுவார்கள். தேடட்டும்! அவர்களுக்குத் தெரியாத பல விஷயங்கள் தனக்குத் தெரியும். எவ்வளவு த்ரில்!

பிளஸ் டூ புத்தகச் சுமையுடன் பள்ளிக்கூடம் நோக்கி நடந்த போது ஏற்கெனவே இருந்த போலீஸ் மாருதிகளுக்கு இடையில் மந்திரி ஒருவரின் அம்பாசிடர். "என்னங்க இப்படி நடந்து போச்சு; சி.எம். ரொம்ப அப்செட் ஆயிருக்காரு" என்று சொல்லிக் கொண்டே இறங்கிய மந்திரிக்கு காக்கி அதிகாரிகள் சல்யூட்.

"டிராஜிக்தான் ஸார்; கண்டுபிடிச்சுடலாம்; வி வில் புக் தெம்" என்ற ஐ.ஜி.

"பம்பாயில் நடந்ததுக்கும் இதுக்கும் முடிச்சுப் போட்டு சி.பி.ஐ.கிட்டே ஒப்படைச்சுடலாமான்னு சி.எம். கேக்கறாரு."

"எதுக்கு ஸார், வேணாம், தலைகுனிவு."

"அப்படின்னா ஒரு டைம் லிமிட் கேளுங்க. அதுக்குள்ள கண்டுபிடிங்க. இல்லே, சி.பி.ஐ.க்கு வழி விட்டு விலகுங்க."

அப்போது ஒரு மோட்டார் சைக்கிள், இன்ஜின் ஆஃப் ஆகி வந்து ஓசைப்படுத்தாமல் நிற்க, "திங்க் ஆஃப் தி டெவில் அண்ட் தேர் ஹி இஸ்" என்றார் ஐ.ஜி. "சி.பி.ஐன்னு பேசினதுமே இன்பசாகரன் வந்து நிற்கிறாரு!"

"ஏங்க தமிழ்ல சிந்திக்கவே மாட்டீங்களா? 'நினைத்தேன் வந்தாய் நூறு வயது'ன்னு சொல்றது" என்றான் இன்பா.

மந்திரிக்குக் கரம் குவித்து ஐ.ஜிக்கும் கரம் நீட்டுவதற்கு முன் 'களுக்'கென்ற சிரிப்பு அவனைத் திரும்ப வைக்க... ரஸியா.

மெல்ல மெல்ல போலீஸ் கார்டனை அணுகி, அவர்கள் பேச்சு காதில் விழும் அளவுக்கு நெருங்கி விட, இன்பசாகரன் ஐ.ஜியைக் கிண்டலடித்தது அவளுக்குச் சிரிப்பை வருவித்து விட்டது.

கொஞ்சம் டைட்டான லைட் கிரீன் கான்வெண்ட் யூனிஃபார்ம், இரட்டைப் பின்னலில் அவள்; லைட் கிரே ஸஃபாரியில் அவன். கம்பீரம் ஸபாரி தந்ததல்ல. அவன் அந்த உடைக்கு அளித்தது.

'சம்பந்தமில்லாத விஷயத்தில் மூக்கை நுழைப்பதில் என்ன ஆர்வம் இந்தப் பெண்ணுக்கு!' என்று நினைத்தான் இன்பசாகரன். அத்துடன் 'என்ன அழகு.'

தான் நெருங்கி நின்றது, கேட்டது, சிரித்தது எல்லாமே தப்பு என்று உணர்ந்து சற்றே கலக்கமும் வெட்கமும் அடைந்து திரும்பிப் போக யத்தனித்தாள். ஆயினும் இன்னொரு தடவை இன்பசாகரனை ஏறிட்டுப் பார்ப்பதைத் தவிர்க்க முடியவில்லை. பட்டாம் பூச்சி இறகுகளாக மாறிய கண்ணிமைகள்.

இன்பசாகரன் இதயத்தில் இரண்டு விஷயங்கள் பளிச்சிட்டன. சி.பி.ஐ.யைச் சேர்ந்த தனக்கு போலீஸிடம் ஒத்துழைப்புக் கிடைக்காது. இந்தப் பெண்ணுக்கு குண்டு வெடிப்பு தொடர்பாய் ஏதோ தெரியும் என்பது போலீஸுக்குத் தெரியாது!

(தொடரும்)

2

ரஸியா அங்கிருந்து அவசரமாக அகன்றதும், இன்பசாகரன் அமைச்சரைப் பார்த்தான். "சி.பி.ஐ. பற்றி என்ன ஸார் பேசிட்டிருந்தீங்க? நல்ல விதமாத்தானே?"

"சம்பந்தமில்லாத விஷயத்துல எல்லாம் கூட மூக்கை நுழைப்பாங்கன்னு சொல்லிட்டிருந்தேன்" என்றார் ஐ.ஜி.

"எது சி.பி.ஐக்கு சம்பந்தமில்லாத விஷயம்?: இன்னிக்கு மத அடிப்படை வாதம்கிறது உலகளாவிய பிரச்னை. குண்டு வெடிக்கிறது திருவல்லிக்கேணில மட்டுமில்லே, பம்பாய்ல, காஷ்மீர்ல, கராச்சில, லண்டன்ல, நியூயார்க் வேர்ல்ட் டிரேட் ஸெண்டர்ல, ஒக்லஹோமால, ஜப்பான் பாதாள ரயில் ஸ்டேஷன்ல சயனைட் வாயு பரவுது..."

"யோவ், எனக்கும் நியூஸ் வீக், டைம் எல்லாம் வருதுய்யா, நானும் பார்க்கறேன்!"

"சரி, சரி, உங்க சண்டையை அப்புறம் வைச்சுக்குங்க" என்றார் மந்திரி. "சி.பி.ஐ. ஸார்...."

"பேரு இன்பசாகரன்."

"ஏன் மகிழ்ச்சிக் கடல்னு வைச்சுக்கறது!" கிண்டலடித்தார் ஐ.ஜி.

"நீங்க ஐ.ஜிங்கிறதை முதல்ல மொழி மாற்றம் பண்ணுங்க."

"அடடா, மறுபடி ஆரம்பிச்சுட்டீங்களா?"

"அவருக்கு



சென்ற வாரம்

சென்னையிலுள்ள, 'அகில பாரத ஹிந்து பரிவார்' அமைப்பின் அலுவலகத்தில் ஓர் இரவு குண்டு வெடிக்கிறது. அதே தெருவிலுள்ள ரஸியா வீட்டு மொட்டை மாடியில், குண்டு வெடிப்பில் சிக்கிய ஒருவனின் ஒரு கை துண்டித்து வந்து விழுகிறது. அதைக்கண்டு மிரண்டு கீழிறங்க எத்தனிக்கும் ரஸியா, ஒரு முரட்டு ஆசாமி தன் வீட்டுத் தோட்டச்சுவர் ஏறி உள்ளே குதிப்பதைக் கண்டு மிரள்கிறாள். அவசரமாக வீட்டுக்குள் நுழைய முற்பட்டவளை அந்த ஆள் ஒளிந்திருந்து மடக்கி, "நீ பார்த்த எதையும் வெளியே சொன்னால் தொலைத்து விடுவேன்!" என்று மிரட்டிப் போகிறான்.

புலன் விசாரிக்க வரும் போலீஸ், இந்த விஷயத்தில் சி.பி.ஐ மூக்கு நுழைப்பதை விரும்பவில்லை. என்றாலும் அங்கு வரும் சி.பி.ஐ அதிகாரி இன்பசாகரன், ரஸியாவைப் பார்க்கிறான். 'குண்டு வெடிப்பு பற்றி ரஸியாவுக்கு ஏதோ தெரிந்திருக்கிறது' என்பதைப் பார்த்தவுடன் தெரிந்து கொள்கிறான்.

இனி....

இருட்டு அரண்மனைகள்

கி. ராஜேந்திரன்

என்பேரில் விரோதம் ஒண்ணுமில்லே, ஸார்! ஃபிரெண்ட்லி ஆர்கியுமெண்ட்தான்... இன்னிக்கில்லேன்னாலும் நாளைக்கு தமிழக அரசுக்கு சி.பி.ஐ. உதவி தேவைப்படாமலா போகும்?"

"தேவைப்படும் போது கூப்பிடறோம்" என்றார் ஐ.ஜி. 'கிளம்பு; இடத்தைக் காலி பண்ணு' என்னும் பாவனையில் கை நீட்டினார்.

பற்றிக் குலுக்கினான். "நீங்க கூப்பிடும் போது நான் பிகு பண்ணிக்கமாட்டேன்; ஒத்துழைக்கத் தயாராயிருப்பேன்" என்றான். பிரிந்தான்.

யூனிஃபார்மை வைத்து அந்த வட்டாரத்தில் உள்ள கான்வெண்ட்டைக் கண்டு பிடித்துப் போனான். 'ஒரு மாணவியை முன்பின் தெரியாத ஒருவனுடன் அனுப்புவதா?' மதர் சுப்பீரியர் தலையசைத்தாள். "நோ! நோ!"

இன்பசாகரன் ஐ.டி. கார்டு எடுத்துக் காட்டினான். "காலை பேப்பர்ல பார்த்திருப்பீங்களே... குண்டு வெடிப்பு சமாசாரம்... உங்க கான்வெண்ட் மாணவி ஒருத்தி அந்தக் கட்டடத்துக்கு அருகே வசிக்கிறாள்."

"அவ பெற்றோரைப் போய்ப் பாருங்க."

"அவர்களை விட இவளுக்குத்தான் ஏதோ தெரிஞ்சிருக்கிறதா தோணுது. மேலும் பெரியவங்க 'நமக்கேன் வம்பு'ன்னு தயங்குவாங்க. குழந்தைகளுக்கு குண்டு தைரியம்."

"குழந்தையா?"

"ஒரு பேச்சுக்குச் சொன்னேன். பிளஸ் ஒன் அல்லது பிளஸ் டூ. மாசிலாமணி தெருவிலேர்ந்து வர்றவங்க இன்னும் எத்தனை பேர் இருந்துடப் போறாங்க? சுலபமா கண்டு பிடிக்கலாம்."

ரிஜிஸ்தர் வரவழைத்து, புரட்டிப் பார்த்து ரஸியாவை அழைத்து வர ஆள் அனுப்பினாள். "பெரிய ரிஸ்க் எடுத்துக்கறேன். ஏன் இங்கேயே பேசக் கூடாதா?"

"மனசு விட்டுப் பேசற சூழ்நிலை தேவை. உங்க எதிரே சுருண்டுடுவா. ரிஸ்க் இதுல ஒண்ணுமில்லே. சாயந்திரம் கேட்கிட்டே காத்திருந்து அவளை நான் அழைத்துப் போனால் உங்களுக்குத் தெரியவா போகுது? ஒரு அவசரம் கருதித்தான் உங்க கிட்ட அனுமதிக்கு வந்திருக்கேன்."

"நல்லா வாதம் பண்றீங்க.... எஸ்... கம் இன்... ரஸியா... இந்த அங்கிள் சி.பி.ஐ யைச் சேர்ந்தவரு. குண்டு வெடிப்பு சம்பந்தமா உன்னை ஏதோ கேட்கணுமாம். ஒத்துழைப்பது நம் கடமை இல்லையா?"

"எஸ், மதர்."

"பி கேர்ஃபுல் மிஸ்டர் இன்பசாகரன். என் ஸ்டூடெண்ட்டை ஜாக்கிரதையா பார்த்துக்குங்க" என்று அனுப்பி வைத்தாள்.

மதர் சுபீரியர் எதிரே அடக்க ஒடுக்கமாய் நின்ற ரஸியா, ஒட்டலில் ஐஸ்கிரீம் வழித்து எடுக்கும் போது விஷமமாகப் புன்னகைத்தாள்.

"நீங்க வருவீங்கன்னு நிச்சயமா தெரியும் ஸார்!"

"எப்படி?"

"உங்களைப் பார்த்தா புத்திசாலியா

தோணிச்சு!"

"தாங்க்ஸ்" என்று சிரித்தான். அவள் முகத்தில் இலேசாக எண்ணெய் இறங்கியிருந்தது. வியர்த்து விட்டதில் பவுடரெல்லாம் கரைந்து போய்விட்டது. காலையில் படிய வாரிப் பின்னியிருந்த கேசம் நெற்றி மீதாக அடங்காமல் நெளிந்தது. கண்களின் பளபளப்பு மட்டும் அத்தனை சோர்வையும் விரட்டி விட்டு, 'ஸீக்ரெட் ஆஃப் மை எனர்ஜி புரியுதா?' என்று கேட்டது.

"என்ன கண்டு பிடிச்சீங்க இதுவரை?"

"உன்னை; உனக்கு ஏதோ தெரியும் கிறதை."

"பூ இவ்ளோதானா? ஸ்பாட் இன்வெஸ்டிகேஷன்ல ஒண்ணுமே கண்டு பிடிக்கலையா?"

"என்னை அதுக்கு ஐஜி. அனுமதிக்கலை...."

"ஏன்?"

"தெரிஞ்சாகணுமா? சரி, கேட்டுக்க. நான் சி.பி.ஐ. அவர் போலீஸ். சி.பி.ஐ. மத்திய அரசு சமாசாரம்; போலீஸ் வந்து ஸ்டேட் சப்ஜெக்ட். மாநில அரசின் அனுமதி இல்லாம நாங்க ஸ்டேட் சப்ஜெக்டை விசாரிக்க முடியாது."

"அப்ப, மத்திய அரசுன்னா ஆல் பவர் ஃபுல் இல்லியா?"

"இல்லே. அப்படி பல பேர் நினைக்கிறாங்க. தப்பு. நம்ம அரசியல் சாசனம் மாநில அரசின் உரிமைகள்; மத்திய அரசின் அதிகாரங்கள்; இரு தரப்பும் சேர்ந்து பயன்படுத்தக்கூடிய உரிமைகள்ன்னு பட்டியல் போட்டிருக்கு. நீ காலேஜ்ல பாலிடிக்ஸ் எடுத்துக்க, மந்திரியா வரலாம்; பிரதமரா கூட!"

"அதுக்கெல்லாம் படிப்பு எதுக்கு ஸார்?"

"சரியான கேள்வி. என்கிட்ட பதில் இல்லே. பிரான்ஸ் நாட்டிலே பாலிடிக்ஸ் படிக்காதவன் தேர்தலுக்கு நிற்க முடியாது."

"பாரீஸ் போயிருக்கீங்களா?"

"உம்."

"லண்டன்?"

"லண்டன், பிரஸ்ஸல்ஸ், பிராங்க்ஃபர்ட், ரோம்...."

"அமெரிக்கா?"

"எதிர்காலத்துல போவேன்."

"ரொம்ப செலவாகுமே; பூட்டான் லாட்டரிலே பிரைஸ் அடிச்சீங்களா?"

"சொந்தப் பணம் இல்லே. உத்யோகம் அழைச்சிட்டுப் போகும்."

"ஹை! ஜாலிதான்!"

"இன்டர்போல் வேலைகள் ஜாலியானது இல்லே; சோகமானது; கஷ்டமானது; ஆபத்தானது கூட."

"சி.பி.ஐ.னு சொன்னீங்க?"

"சி.பி.ஐ யோட ஒரு பிரிவுதான். எங்களை இன்டர்போலுக்கு தத்துக் கொடுத்திருக்காங்க."

"சர்வதேச போலீஸ்ல வேலை பார்க்கிறது ஆபத்துன்னா, உங்களோட பேசிட்டிருக்கிறது மட்டும் ஆபத்தில்லையா, சார்?"

தூக்கி வாரிப் போட்டது இன்பசாகரனுக்கு. சற்று தயங்கி, "நீ சொல்றதை நான் மறுக்கலை; ஆனா உனக்குப் பாதுகாப்பு தருவோம்; நீயும் ஜாக்கிரதையா இருக்கணும்."

"நீங்க இருக்கும் போது எனக்கு என்ன ஸார் கவலை?"

"சினிமாவுல வர கமல், ரஜினி, அல்லது சரத்குமார் மாதிரி நான் பெரிய ஹீரோ இல்லே. ஒரே சமயத்துல பத்துப் பேரை 'டிஷ்யூம், டிஷ்யூம்'னு சமாளிப்பேன்னு நினைக்காதே."

"அதெல்லாம் இமேஜ் ஸார்! நீங்க ரியாலிடி. உங்களுக்கு என்ன வயசு ஸார்?"

"கமல், ரஜினியை விட குறைச்சல் இல்லே."

"நம்ப முடியலே ஸார், யூ லுக் வெரி யங்! பிரின்ஸ் சார்மிங்! ஸ்நோ ஒயிட் கதைல வர ராஜகுமாரன் மாதிரி...."

"எப்பவுமே நீ இப்படித்தான் லைட்டா பேசுவியா?"

"இல்லே ஸார் ஹோம்ஒர்க் பண்ணும் போது மட்டும் மூட் அவுட் ஆயிடும். திட்டிக்கிட்டே இருப்பேன். அது முடிஞ்சதும் உற்சாகம் திரும்பிடும்."

"ஒரு மாறுதலுக்காக லெட் அஸ் பி சீரியஸ்."

"ஓ.கே. நேத்து ராத்திரி என்ன நடந்தது, என்ன பார்த்தேன், கேட்டேன், அதானே?"

"யெஸ்."

சொன்னாள். குறுக்கிடாமல் கேட்டுவிட்டு கடைசியில் "மை காட்" என்றான்.

"யாரு ஸார் உங்க கடவுள்? திருப்பதியா? திருத்தணியா?"

"வா வீட்டுக்குப் போகலாம்; அம்மா இருப்பாங்கல்ல?"

"ரெண்டு பேரும் வேலைக்குப் போறவங்க ஸார். ஆனா எங்கிட்ட மூணாவது சாவி இருக்கு. நான்தானே தினம் முதல்ல வீடு திரும்பறவ."

"சரி கிளம்பு. மோட்டார் சைக்கிள் பின்னாடி உட்கார்ந்து பழக்கம் உண்டா?"

"ஓ யெஸ். டாடியோட ஸ்கூட்டர்ல நிறைய போயிருக்கேன்."

தேவைக்கு அதிகமாகவே அவன் மீது சாய்ந்தாள். மடியில் புத்தக மூட்டை.

'நான் உன் தந்தை இல்லை, பெண்ணே; புலன்களை வென்றவனும் இல்லை; கொஞ்சம் நிமிர்ந்து உட்கார்' என்று கூற முடியாமல் செலுத்தினான். 'ஒருவேளை இவள் குற்றமற்ற குழந்தை உள்ளத்துடன் பழக, கள்ளத்தை நாம் விதைப்பதாக ஆகிவிடக் கூடாது.'

வாசலின் கம்பிக் கதவுகளைத் திறந்தால் மாடிப்படி. கீழ் போர்ஷனின் வாசல் உட்புறம் தாளிடப்பட்டிருந்தது. படியேறியதும் மறுபடி ஒரு பூட்டு திறந்து உள்ளே நுழைந்ததும், சீக்கிரம் என்று அவசரப்படுத்தினான். "கழுகோ, காக்காவோ அதைக் கொத்திக் கொண்டு போவதற்கு முன்னால்...."

"கள்ளிப்பெட்டி ஒண்ணு போட்டு மூடித்தான் வைச்சிருக்கேன். மம்மி டாடிக்குக் கூடத் தெரியாது."

"குட் கேர்ல்."

"எனக்கும் கொஞ்சம் மூளை இருக்கில்லே?"

"சேஷன் சண்டைக்கு வருவாரேன்னு பார்க்கறேன். இல்லைன்னா இந்தியாவிலேயே பெஸ்ட் மூளை உன்னுதுதான்னு சர்டிஃபிகேட் கொடுப்பேன்!"

வேக நடை பயின்று, மொட்டை மாடி



"எங்க மானேஜர் ரொம்ப வித்தியாசமானவர்."

"அப்படியா?!"

"ஆமாம்; 'என் கையாலே அதிகமான மெமோ வாங்கினது நீ ஒருத்தன் தான்; அதுக்காக நீ எனக்கு ட்ரீட் கொடுக்கணும்'னு எங்கிட்ட சொன்னாரே!"

— வி. ரெங்கநாதன்

படியேறி கள்ளிப் பெட்டி நீக்கினான்.

பாக்கெட்டிலிருந்து பெரிய பிளாஸ்டிக் உறை ஒன்று எடுத்தான். கர்சிப்பால் வெட்டுப்பட்ட கரத்தின் ஒரு பகுதியை மூடி, அங்கு மூன்று விரல்களால் பற்றி எடுத்து உறைக்குள் இட்டான்.

கீழே இறங்கி வந்து ஒரு பழைய நியூஸ் பேப்பர் கேட்டு வாங்கி பொட்டலம் சுற்றிக் கொண்டான்.

"என்னை ஏன் ஸார் அவன் கொன்னு போடலை?"

வாசலை நோக்கி நடந்தவன் சட்டென்று நின்றான். 'பெண்ணே அடிக்கடி நீ என்னை திடுக்கிட வைக்கிறாய்' என்று நினைத்துக் கொண்டான். அவள் முகத்தில் பயத்தைக் காணோம். புன்னகைதான். கண்களில் குறு குறுப்புதான். 'நடிப்பா? உண்மை உணர்ச்சிகளை ஒளித்துக் கொள்கிறாளா?'

"நிஜமாகவே எனக்குத் தெரியலை ரஸியா" என்ற போது அவனுக்கு தொண்டையை அடைத்தது. கனைத்துக் கொண்டான். "ஒரு வேளை தன் சகாவை இழந்த அதிர்ச்சியாயிருக்கலாம். அல்லது ரொம்பச் சின்னப் பொண்ணு நீ. உன்னைக் கொல்லக் கூடாது; மிரட்டி வைத்தாலே போதும்னு நினைச்சிருக்கலாம். உன்னோட அதிர்ஷ்டம் தான் துணை செய்திருக்கு."

"அதிர்ஷ்டம் என்னிக்கும் துணை இருக்குமா ஸார்? நான் உங்களை சந்திச்சதை அவங்க கவனிச்சிருக்கலாமில்ல? நீங்க என்னைத் தொடர்ந்தது போல அவங்களும் தொடர்ந்திருக்கலாம்ல?"

"குழந்தைத்தனமா பேசிக்கிட்டேவரே. திடீர்னு...."

"குண்டு வெடிச்சது போல பேசறேனா ஸார்? கவலைப்படாதீங்க; எதொன்று ஆனாலும் என் தலை விதியைத்தான் நொந்துக்குவேன்; உங்களால வந்த ஆபத்துன்னு நினைக்க மாட்டேன். நீங்க உங்க கடமையைச் செய்யறீங்க..."

'இந்தச் சிறுமியிடம் தோற்று விட்டோம்; என்னைக் குற்றவாளியாக்கி அனுப்புகிறாள்' என்று எண்ணியவாறு விசிட்டிங் கார்ட் எடுத்துத் தந்தான். "ஏதாவது வித்தியாசமா நடந்துச்சுன்னா, அல்லது ஒரு அவசரம் ஆபத்துன்னா... ஃபோன் பண்ணு. நான் இல்லேன்னாலும், 'அர்ஜண்ட் மெஸ்ஸேஜ்'னு சொல்லி தகவல் கொடு." வேகமாக மாடிப்படி இறங்கி, இயலாமை கோபத்தைக் கிளற அதை மோட்டார் சைக்கிள் ஸ்டார்ட்டர் மீது காட்டி உதைத்தான்.

யமாஹா அவனைச் சுமந்து கொண்டு போய் கடற்கரைச்சாலைக் கட்டடம் ஒன்றின் அருகே இறக்கியது.

நாளிதழ் பொட்டலத்துடன் நடந்தான். "அனுபமா இருக்காங்களா?"

"யார் வந்திருக்கிறதா சொல்றது?"

"இன்பசாகரன்."

பியூன் திரும்புவதற்குள் அறையின் ஸ்பிரிங் கதவைத் திறந்து கொண்டு, சட்டம் போட்டது போல் நிலைவாசல் தோன்ற, மையத்தில் நின்றாள்.

'உடற் பயிற்சி தேவை; உணவு விஷயத்தில் கொஞ்சம் கவனம் செலுத்த வேண்டிய தருணம் நெருங்கி விட்டது' என்று உணர்த்துவது போன்ற உடல்வாகு, ஒரு செழுமையைக் காட்டிக் கவர்ந்தது. நல்ல உயரம். கதுப்புக் கன்னங்கள் சிவந்தன; குவிந்த அதரங்கள் புன்னகையில் விரிந்தன; கண்களோ புருவம் சுருக்கி மின்னலடித்தன!

'இது வரவேற்பா? வேண்டா வெறுப்பா?' தயங்கினான் இன்பா.

(தொடரும்)

ஒரு ரிஸ்ட் வாட்ச் 99,000 ரூபாய்!

உடன் பிறவா சகோதரிகளுக்கென்றே நடத்தப்பட்டதுபோல் ஒரு கண்காட்சி சமீபத்தில் பம்பாயில் ஜகஜ்ஜோதியாக நடந்து முடிந்தது. அழைப்பிதழ் உள்ளவர்களுக்கு மட்டுமே அனுமதி என்ற நிலையிலும் மீன் மார்க்கெட் பிச்சை வாங்கும் படியான கும்பல் அந்த சர்வ தேச நகைக் கண்காட்சியில்!

நுழைவாயிலிலேயே அசத்தியிருந்தார்கள்... ஒவ்வொரு நகை டிசைனரும், தங்கள் தயாரிப்புக்கு எது 'இன்ஸ்பிரேஷ'னாக இருந்தது, எப்படி வடிவமைத்தோம் என்பதைச் சித்திர வடிவில் அமைத்திருந் தார்கள்!

உடுக்கை, திரிசூலம், வேல் போன்ற புராதன, கடவுள் கைகளில் இருக்கிறவைகள் காதணிகளாகவும், சங்கு-சக்கரங்கள் மோதிரமாகவும், பாம்பு, கருடன், அன்னம் போன்ற வாகனங்களை 'ஸாரி பின்'களாகவும் வடிவமைத்து கண்காட்சியையே தெய்வீகமாக்கிவிட்டார்கள்!

உள்ளே ஸ்டால்களில் தங்கம், வைரம், முத்துக்கள் காய்கறி மாதிரி குவிக்கப்பட்டிருந்ததும் டிசைன்களில் நுணுக்கமான சாகச வடிவமைப்பு செய்யப்பட்டிருந்ததும்-உள்ளே நுழைந்தவர்கள் வெளியேற விடாமல் செய்து விட்டன!


ஒரு சாம்பிள் பாருங்கள்-முழுதும் வைரக்கற்கள் பதித்த ஒரு ரிஸ்ட் வாட்ச், வந்திருந்த அத்தனை பேரையும் வாய் பிளக்கச் செய்தது... விலையைக் கேட்டு மூர்ச்சை அடையாதீர்கள்- ரூ.99,000/-.

''உன் மாப்பிள்ளைக்கு, இதை வாங்கி பிரசன்ட் பண்ணலாமே?'' என்று தம் தோழிக்கு ஸ்க்ரூ கொடுத்துக் கொண்டிருந்தார், ஒரு பெண்! அத்தனை விலை கொடுத்து வாங்கவும் ஆள் இருக்கிறார்கள்!

தில்லியைச் சேர்ந்த கன்னா என்ற வியாபாரி ஒரு கலக்கு கலக்கிக் கொண்டிருந்தார். 'Uncut precious stones' என்ற வகைகளில் -வைரங்கள் மட்டுமின்றி மரகதம், கோமேதகம், நீலம், கார்னெட், பீங்க்மீனா என்று விதவிதமாக வைத்திருந்தார். கடைச் சிப்பந்திகளே நடமாடும் மாடல்களாக விதவிதமான நகையலங்காரத்துடன் வலம் வந்தது, பார்க்க வெகு ரம்மியம்!

சர்வதேசக் கண்காட்சி எனினும் பெரும்பாலும் நம் நாட்டுக்காரர்களின் ஆக்கிரமிப்புதான் அதிகம். அயல் நாடுகள் வரிசையில் அரபு நாடுகள், இத்தாலி, பெல்ஜியம் என்று சிலவே இருந்தன.

ஸ்ரீலங்காக்காரர்கள், தம் ப்ளூ டயமண்ட் நகைகளில் புரட்சி பண்ணியிருந்தார்கள். வைரம் கட்ட எல்லோரைப் போல தங்கம், வெள்ளியை உபயோகிக்காமல், 'கார்பனை'யே (வைரமே ஒரு கார்பன்!) பயன்படுத்தியிருந் தார்கள்!



* கார்பனில் பதித்த வைரங்கள் : ஸ்ரீலங்கா ஸ்பெஷல்!



கூட்டம் அதிகம் இருந்தாலும் வாங்குபவர்கள் குறைவு என்று பேசிக் கொண்டார்கள். இதே, அரபு நாடுகளில் நடந்திருந்தால் மொத்த ஐட்டங்களும் காலியாகியிருக்கும் என்றார் ஒரு வியாபாரி.

ஸ்டால் வைக்க ஒரு நாள் வாடகை பதினேழாயிரம் ரூபாய் என்பது வியப்பாக இருந்தது. இன்னொரு வியப்பு-நம்ம ஊர் பிரபல நகைக் காரர்கள் ஒருத்தரையும் காணோம்!

பம்பாயிலிருந்து:
ஜெயஸ்ரீ ராஜ்.

3

இருட்டு இரண்டு மனைகள்

கல்லூரியில் படிக்கும் போது சவால்களை ஏற்பது என்பது ஸ்டார் டீ.வி.யில் வருகிற 'கிரிஸ்டல் மேஸ்' அனுபவம். எல்லோருக்கும் அப்படி தோன்றாது. இன்பசாகரனுக்கு கை கால்கள் பர பரக்கும். படிப்பிலே அவன் சராசரி. ஸ்போர்ட்ஸில் கோப்பைகள் குவிப்பான். என்.சி.சி. யூனிஃபார்மில் மார்ச் பாஸ்ட் முடிந்து கேஷுவலாக வரும் போது பரந்த மார்பையும் பம்மிய புஜங்களையும் மை தீட்டிய விழிகள் ஊடுருவும். முத்து முத்தாய் துளிக்கும் நெற்றி வியர்வையை ஒற்றி எடுக்க விரும்பி கைக்குட்டை அவர்கள் விரல்களிடையே படாதபாடுபடும்.

அவர்களில் அனுபமா ஒருத்தி. "ரொம்பத் தான் வழியறாடா" என்று இவன் நண்பர்கள் அப்பால் சொல்லிச் சிரிக்கும் அளவில், ஏதோ அதிமுக்கிய காரியம் போல் நெருங்கி வருவாள். ஒன்றுமில்லாத விஷயத்தை பேசிப் போவாள்.

"ஃபிரீயாத்தான் பழகும்; தொட்டா மரவட்டை மாதிரி சுருண்டுக்கும்" - சங்கரன் கமெண்ட்.

"ஒரு சாலன்ஜ் வாத்தியாரே?" - ரமேஷ்.

"என்ன?" என்றான் இன்பா.

"அனுவை அழைச்சிக்கிட்டு சினிமா போறே - மாட்னி."

"மாட்னி என்னடா, மகாபலிபுரமே போவேன்!"

"ஆமா போவாரு! 'ஸீஸைட் ரிஸார்ட்'டெல்லாம் இவனை நம்பித்தானே கட்டியிருக்காங்க!"

கொல்லென்ற சிரிப்பினிடையே, "புரூஃப் கொண்டாறணும் வாத்யாரே, சாட்சியம் இல்லேன்னா கேஸ் டிஸ்மிஸ் ஆயிடும். தோற்றுப் போனதாகத்தான் அர்த்தம்!"

"தோல்விங்கறது நம்ம அகராதிலே கிடையாது. ஆனா உன்னோட இண்ட் ஸுஸுகி தேவைப்படும்" என்றான் ராஜனைப் பார்த்து. அப்போது இன்பசாகரனிடம் யமாஹா கிடையாது. பல்லவனே கதி. "என்னடா தயங்கறே?"

"ஹீட் தாங்குமா?"

"ஏண்டா தாங்காது? மகாபலிபுரம் என்ன, மத்தியப் பிரதேசத்துலயா இருக்கு? அதிகபட்சம் போனா முப்பத்தஞ்சு மைல்."

"நான் அதைச் சொல்லலே பிரதர்; உங்க காதல் சூட்டை என் மோட்டார் பைக் தாங்கணுமே!"

அட்டகாசமாகச் சிரித்தார்கள். இன்பாவை உசுப்பி விட்டார்கள். அவர்களின் சவால் இவனை வளைத்துப் போட்டது. அவன் ஆண்மைக்கே ஒரு சோதனையாகி விட்டது.

அனுபமாவை அணுகுவதோ, பேசுவதோ அவனுக்குக் கஷ்டமாக இல்லை. 'எங்கே எங்கே' என்று காத்துக் கிடந்தவளாக மகாபலிபுரம் பிக்னிக் திட்டத்தை



உடனடியாக ஏற்றாள். "உனக்கு என்ன பிடிக்கும்? பண்ணி எடுத்து வரேன்" என்றாள்.

"வீட்டிலே கேள்வி கேட்க மாட்டாங்களா?"

"காலேஜ்ல பிக்னிக் போறதா சொல்லப் போறேன். நாம ரெண்டு பேர் மட்டுமேன்ற விவரம் அவங்களுக்கு ஏன் தெரியணும்?" கண்கள்

எதிர்பார்ப்பில் நட்சத்திரங் களாக மின்னின. குவி அதரங் கள் குறுநகையில் விரிந்தன.

இன்பா இண்ட் ஸுஸுகி யைக் கிளப்பி விட்டுக் காத்திருந் தான். அவள் தடுமாற்றத்துடன் தான் பில்லியனில் அமர்ந்தாள். "மெல்லப் போ; எனக்கு முன் அனுபவமில்லே." அவன் தனக் குள் சிரித்துக் கொண்டு, "வலது கையால் தோளைப் பிடிச்சுக்க, இடது கையால பில்லியனுக்குப் பின்னால் இருக்கிற பாரைப் பிடிச்சுக்க" என்றான். மெல்லச் செலுத்தி, மகாபலி புரம் சாலையை அடைந்த பிறகு படிப் படியாக வேகம் கூட் டினான். நெருங்கி இயல்பா னாள்.

கடற்கரை யோர ஓட்டல் ஒன்றினுள் நுழைந்த போது கூட அவள் தவ றாக ஏதும் எண்ணவில்லை. "எதுக்கு இதெல்லாம்? ரொம்ப செலவாகுமே?" என்றாள்.

"தினமுமா செலவழிக்கப் போறோம்? ஒன்ஸ் இன் எ புளூ மூன்! இவ்வளவு தூரம் ஓட்டி வந்தது டயர்டா இருக்கு; ஷவர்ல குளிச்சு, அரைமணி ரெஸ்ட் எடுத்துட்டு பீச்சுக்குப் போகலாம்."

"ஆமா, ஒரே புழுதி" என்றாள். அவன் படு கேஷுவலாக மாற்றுப் பெயர், விலாசம் எழுதி அறை எடுத்ததை ரசித்தாள். துளிக்கூட பதற்றமின்றி அட்வான்ஸ் தந்தான்.

அறைக்குள் நுழைந்த பிறகுதான் தனிமை திடீ ரென்று அவளைத் தாக்கியது. மிரண்டு திரும்பிய வள், அவன் புன்னகையுடன் தன்னை நெருங்கு வதைக் கண்டாள். "வே... வேண்டாம் இன்பா... நான் சொல்றதைக் கேளு... ஐ ரியலி லவ் யூ!"

"நானும்தான்... அதனால்தான்" என்றான். தோள்களைப் பற்றினான். அவன் கரங்கள் தேட ஆரம்பித்த போது, இலவச மாக எல்லா ஓட்டல் அறைகளிலும் மிஷனரிகளால் வைக்கப் படுகிற பைபிள், தற்செயலாக அவள் கண்களுக்குத் தென்பட் டது. கட்டிலருகே டேபிள் லாம்ப் பக்கத்தில் இருந்தது. வாய டைத்துப் போயிருந்த அவளுக்கு அதைப் பார்த்ததும் என்ன பேசுவது என்று தெரிந்து போயிற்று.

"மதர் தெரஸா என்ன சொல்லியிருக்காங்க, தெரியுமா?"

"என்ன?" அவன் கழுத்தருகே குனிந்து, பரவசமாகிக் கேட்டான்.

"எந்த ஒரு பெண்ணும் தன் கணவனுக்கு முதலிரவன்று தரக்கூடிய மிகப் பெரிய பரிசு தனது கன்னித்தன் மையே."



அவன் சிரித்தான். "அதை நானும் படிச்சிருக்கேன். அது, அவங்க அமெரிக்கா போன போது அங்குள்ள பெண்களுக்குத் தந்த அட்வைஸ். அங்கே ஃப்ரீ லவ் ஜாஸ்தி."

"அது உலகில் எந்தப் பெண்ணுக்கும் பொருந்தக்கூடிய அறிவுரைதான், இன்பா."

"ஆண்களுக்கு காஸனோவா தந்திருக்கிற அறிவுரை ஒண்ணு சொல்லவா?"

"இன்பா, ஸ்டாப் இட்! உன்னை சாகும் வரை நான் காதலிப்பதற்குப் பதில், வாழ்நாள் முழுவதும் வெறுக்கும்படி பண்ணி விடாதே!"

சிலீரென்று தலையில் – முகத்தில் உணர்ந்தான். தண்ணீர் குடுவையை அவன் மீது கவிழ்த்திருந்தாள். அத்துடன் காமம் கரைந்து போயிற்று. பாத்ரூமிலிருந்து டவல் எடுத்து துடைத்துக் கொண்டான்.

"கம், லெட்ஸ் கோ" என்றான்.

பிக்னிக்கை மறந்து சென்னை நோக்கி விரைந்தது ஸுஸுகி.

'சவாலைப் பற்றிக் கூறி ஒரு பிராவைக் கடன் பெறலாமா?' என்று ஒருகணம் யோசித்தான். 'அந்தப் பொய்யான வெற்றி கூட இவளை அவமானத்தில்தானே ஆழ்த்தும்? அதற்கு இவள் எப்படி ஒப்புதலளிப்பாள்?' என்று தானே தர்க்கவாதம் செய்து அந்த எண்ணத்தை ஒதுக்கினான்.

தோல்வியை ஏற்று நான்கு நண்பர்களுக்கு கஸாட்டா ஐஸ்கிரீம் வாங்கித் தந்தான். அத்துடன் அனுபமா மீது இருந்த 'கிளாமர்' போய் விட்டது. பணக்கார வீட்டுப் பெண் சாயாவுக்கு ஓ.கே. சொன்னான்.

விஷயம் கேள்விப்பட்டதும் அனுபமா துடித்துப் போனாள். அப்பாவிடம் வெட்கத்தை விட்டுப் பேசி, இன்பசாகரனின் பெற்றோரைப் பார்த்து வர அனுப்பினாள்.

"டேய் இன்பா! என்னடா இதெல்லாம்?" என்றார் ரங்கநாதன்.

"எனக்கே ஆச்சர்யமா இருக்குப்பா. கோ எஜுகேஷன் காலேஜ்ல கேர்ல்ஸும் பாய்ஸும் ஃப்பிரெண்ட்லியாத்தான் பழகுவாங்க. அதைக் காதல்னு தப்பர்த்தம் பண்ணிக்கிட்டா என்ன செய்யறது, சொல்லுங்க!"

மாமல்லபுரம் பிக்னிக் பற்றிப் பேச அனுவுக்குத் தைரியம் வரப் போகிறதா என்ன? அது அவளையும்தானே பாதிக்கும்?

அவமானத்தைத் தாங்கிக் கொண்டு, அப்பா அம்மாவின் திட்டுக்களை வாங்கிக் கட்டிக் கொண்டு அவனைத் தனிமையில் வந்து சந்தித்தாள்.

"ஐ ஆம் ஸாரி அனு" என்றான். "உன்னைக் கல்யாணம் செய்துகிட்ட பிறகு ஒவ்வொரு முறை உன்னை நெருங்கும் போதும் அன்றைய தினம் நினைவு வரும். அந்தத் தோல்வி, அன்றைய அவமானம், அந்தக் குற்ற உணர்ச்சி, அவற்றோடு என்னால் வாழ முடியாது."

"ஐ ஹேட் யூ இன்பா" என்றாள். "நீயே தப்பு செய்துட்டு, அதுக்காக நீயே பழிவாங்கறே! உன்னை அடியோடு வெறுக்கறேன். ஆனா துரதிர்ஷ்டம் என்னன்னா, ஐ ஆல்ஸோ லவ் யூ. நேற்று, இன்று, நாளை எப்பவும் இந்தக் காதல் மாறாது."

அப்புறம் அவள் கல்யாணத்தை மறந்து படிப்பைத் தொடர்ந்து ஃபாரின்ஸிக் விஞ்ஞானத்தில் நிபுணத்துவம் பெற்று உத்யோகத்தில் அமர்ந்த போது, இன்பா ஐ.பி.எஸ். கேடரிலிருந்து சி.பி.ஐயில் நுழைந்து ஒரு வருஷம் ஆகியிருந்தது.

அவளைத் தன் உத்யோகம் தொடர்பாகவே ஆய்வுகளுக்காக ஓரிரு தடவைகளில் சந்திக்க நேர்ந்திருக்கிறது. ஒவ்வொரு முறையும் இதேபோன்ற வரவேற்புதான். 'வரவேற்பா, வேண்டாவெறுப்பா' என்று புரியாத முக பாவம்தான்.

அவள் அறையின் வாசலிலிருந்து உள்ளே திரும்பினாள். அவன் பின்தொடர்ந்தான்.

"இப்ப என்ன?"

"பாம் பிளாஸ்ட்."

"திருவல்லிக்கேணி குண்டுதானே! பேப்பரில் பார்த்தேன்."

பொட்டலத்தை மேஜை மீது வைத்தான்.

"குண்டு வைத்தவன் சிதறிப் போனான். ஒரு கை மட்டும் துண்டாக எதிர் வீட்டு மொட்டை மாடியில் கிடைச்சுது." பொட்டலத்தை சுட்டிக்காட்டி, "உன் ஆராய்ச்சியில் என்ன தெரியுது, பார்க்கணும்."

"உன்னோட பர்ஸனல் ரிக்வெஸ்ட்டா? அஃபிஷியலா?"

"எப்படி வேணும்னாலும் வைச்சுக்க."

"அது முடியாது; அஃபிஷியல்னா நான்

"என்னங்க... கண்காட்சிக்குப் போகும் போது நீங்க இந்தச் சட்டையைப் போட்டுட்டுப் போகலையே.... ஏது இது?"

"கூட்ட நெரிசலில் சட்டை மாறிடிச்சிடீ!"

— எஸ். எஸ். பூங்கதிர்



அனுமதி பெறணும். சுதந்திரமா இயங்கிய ஃபாரின்ஸிக் டிபார்ட்மெண்டை போலீஸ் இலாகாவுக்குக் கீழே கொண்டு வர தீவிர முயற்சி நடக்குது."

"ஏன்?"

"உன்னைப் போல மத்திய அரசைச் சேர்ந்தவங்க உதவி கேட்கறீங்க. நாங்க ஒத்துழைக்கிறது மாநில அரசுக்குப் பிடிக்கலே. மேலும்..."

"என்ன...?"

"இங்கே போலீஸ் கேட்கிற மாதிரியான சாட்சியங்களை நாங்க உருவாக்கறதில்லே... அவங்களுக்கு வசதியா ரிப்போர்ட் எழுதித் தரதில்லே. நாங்க கண்டறிஞ்ச உண்மையை சொல்றோம். அது போலீஸுக்கு – உயர் அதிகாரிகளுக்கு – அவங்களுக்கு மேலே இருக்கிற அரசியல்வாதிகளுக்குப் பிடிக்கலே. அதனால் இந்த இலாகாவின் நிர்வாகப் பொறுப்பையே போலீஸ் துறையிடம் ஒப்படைச்சுட்டா அவங்க இழுத்த இழுப்புக்கு நாங்க ஆடணும்தானே!"

"என்ன அக்கிரமம்? நீ இதுக்கு சம்மதிப்பியா?"

"வேற என்ன செய்யறது? அநியாயம் எங்க இல்லே? மத்திய அரசிடம் இல்லையா? உங்களிடம் இல்லியா?"

"பர்ஸனலா போகாதே."

"இல்லே; உங்க சி.பி.ஐ.யைச் சொல்றேன். அனுமதிக்கப்படற விஷயத்துலதானே தீவிரம் காட்டறீங்க? அனுமதி மறுக்கப்படும் காரியங்களிலே கண்ணை மூடிக்கிறீங்க!"

"சப்ஜெக்டுக்கு வருவோம். அஃபிஷியலா உதவ முடியாதுன்னாலும் தனிப்பட்ட முறையில் எனக்கு நீ உதவலாம் இல்லியா?"

"அதுலயும் ரிஸ்க் இருக்கு. சர்க்கார் செய்து தந்துள்ள வசதிகளை அதிகாரபூர்வமாயில்லாமல் சொந்தப் பொறுப்பில் நான் பயன்படுத்தறது தப்பு."

"அதிகாரபூர்வமா சி.பி.ஐ. உதவி கேட்டா போலீஸ் டிபார்ட்மெண்ட் மறுக்கும்; தமிழக அரசு நழுவும்."

" 'பிளீஸ், எனக்காக ரிஸ்க் எடுத்துக்க அனு'ன்னு வாய் விட்டுத்தான் கேளேன்."

"அதை நான் கேட்காமலே நீயே செய்து தருவேன்னு எதிர்பார்த்துட்டிருக்கேன்."

"நீ கேட்டு நான் செய்தா எனக்கு நீ கடமைப்பட்டுப் போவே; அது கூடாது. நானே முன் வந்து உதவணும். அப்புறம் என் கதி என்ன ஆனாலும் பரவால்லே! அதானே?"

"அப்படித்தான் வைச்சுக்க. ஐ டோண்ட் கேர். காரியம் ஆனா சரி."

"சுயநல புத்தி துளிக்கூட மாறல. அப்படியேதான் இருக்கு."

"ஏன், முடியாதுன்னு சொல்லிட்டுப் போயேன். அந்த சாமர்த்தியமும் உனக்கு



"அந்த பேஷண்ட்கிட்ட, 'கல்யாணத்துக்குப் பிறகு தலைமுடி நரைக்காது'ன்னு சொன்னீங்களே, அது எப்படி டாக்டர்?"

"கல்யாணம் ஆயிட்டா தலையில முடி எங்கே இருக்கப் போகுதுங்கிற தைரியம் தான்!"

– சீர்காழி. ரேவதி

இருக்கே. வேணும்னா மகாத்மா காந்தி பொன்மொழி ஒண்ணை எடுத்து விடு!"

"முடியாதுன்னு மறுக்க எல்லா சூழ்நிலைகளிலும் ஒரே அளவுகோலைக் கையாள முடியாது. இப்ப உனக்கு உதவணும்னுதான் என் மனசு கிடந்து அடிச்சுக்குது."

"ஏன்?"

"ஏன்னா நான் ஒரு முட்டாள். உன்னை இன்னமும் காதலிக்கிற முட்டாள்."

அவன் அடி உதட்டைக் கடித்து அனுதாபத்தை விழுங்கினான். "ரெண்டு நாள்ல ஆள் அனுப்பறேன். ரிப்போர்ட் கொடுத்து விடு."

"ஆள் அனுப்பிப் பெற முடியாது; உனக்கு வேணும்னா நீயேதான் வரணும். நேரில் வந்து கைநீட்டணும்."

"நீ பிச்சை போடுவியாக்கும். ஓ.கே. நீ இன்னும் அழகாத்தான் இருக்கே. அடிக்கடி உன்னை வந்து பார்க்கறதுலே கண்ணுக்கு உறுத்தல் இல்லே" என்று சிரித்து அவளுக்கு முதுகுகாட்டினான்.

"மாமி சௌக்கியமா?" என்றாள். "முழுகிட்டுத்தான் இருக்காங்களா, இல்லே ஏதாவது நியூஸ் உண்டா?"


அவன் உறைந்தான். மெல்லத் திரும்பி, கண்களில் தீப்பொறி பறக்க, "யூ ஆர் எ டெவில்" என்றான். "கோல்கேட் சிரிப்புடன் கூடிய சைத்தான்!"

"கரெக்ட்! நீதான் தேவதூதன்!" என்றாள் புன்னகை மாறாமல்.

அவன் கதவை அறைந்து சாத்தி வேகமாக நடக்க, பியூன் திடுக்கிட்டு நின்று திருதிருவென்று விழித்தான்.

அவள் புன்னகை மங்கி மறைய, பாதியில் நிறுத்தியிருந்த சோதனையைத் தொடர, டெஸ்ட் டியூபை இரு விரல்களால் பற்றி எடுத்தாள். அந்தக் கோப அழுத்தம் தாங்காமல் டெஸ்ட் டியூப் உடைந்து, கண்ணாடி அவள் விரலைப் பதம் பார்க்க, ரத்தம் சிந்தியது.

(தொடரும்)



இருட்டு அரண்மனைகள்

4

கி. ராஜேந்திரன்

தடய அறிவியல் துறை அலுவலகத்தை விட்டு வெளியேறி, மோட்டார் சைக்கிளைக் கிளப்பியவனுக்கு, எதிர்ப்பக்க வெண்மணல் பரப்பும் தொடுவானமும் அழைப்பு விடுத்தன. மாலை நேரக் கடற்காற்று உடலைக் குளிர்வித்ததே தவிர, உலைக்களமான உள்ளத்தின் தீயை விசிறிக் கொடுத்து கொழுந்து விட்டெரியச் செய்தது.

சாலையைக் கடந்து, மறுபுறம் யமாஹாவை நிறுத்தி, மணல் பரப்பில் கால் புதைய நடந்தான். ஷூ அணிந்து நடப்பது கஷ்டமாக இருந்தது. கழற்றி இடக்கரத்தில் எடுத்துக் கொண்டான். 'ஸாக்ஸ் அழுக்கானால் போகட்டும்' என்று அலட்சியம் செய்து சற்று நடந்ததுமே அலைகள் தெரிந்தன. ஒரே ஒரு கடற்பறவை தன் இனத்தைப் பிரிந்து காணாமற் போய் பறப்பது போல் அகலச் சிறகு விரித்து, கால்களைப் பின்னுக்குத் தள்ளி வானில் வெண்கோடு தீட்டியது. 'கிரீச்' என்ற விகார ஒலி எழுப்பியது. அதற்கு எத்தனை பிரச்னைகளோ என்று சோகப் புன்னகையுடன் நினைத்தான்.

அலைகடலும் ஓய்ந்திருக்க அகக்கடல்தான் பொங்குவதேன்?
நிலமகளும் துயிலுகையில் நெஞ்சகம்தான் விம்முவதேன்?

என்ற அமரர் கல்கியின் பாடல் நினைவுக்கு வந்தது. அவனுடைய கல்லூரி நாட்களில் இரண்டாவது முறையாகப் பொன்னியின் செல்வன் தொடர்கதையாகப் பிரசுரமான போது ஆவலுடன் படித்தது. பூங்குழலி பாடுகிற அந்தப் பாடல் உலகில் உள்ள சிந்திக்கத் தெரிந்த சகலருக்கும் பொருந்தும் என்று நினைத்தான்.

நிறைவேறாத ஆசைகள் யாருக்குத்தான் இல்லை? குற்றம் குறை இல்லாத மனிதர்கள் யார்?

தன் கடமையைச் செய்ய வேண்டியதுதான். ஆனால் அதற்காக ரஸியாவை ஆபத்துக்கு உள்ளாக்கத் தனக்கு ஏது அதிகாரம்? என்றோ (போன ஜன்மத்தில்?) அனுபமாவிடம் தவறாக நடந்து கொண்டது இன்னமும் பழிவாங்குகிறது. அவள் தனக்காக இன்னமும் ஏங்குகிறாள் என்பது புரிந்தது. ஆனால் அவளைக் கல்யாணம் செய்து கொண்டிருந்தால் அது ஒரு பிராயச்சித்தமாக இருந்திருக்கலாமேயொழிய சந்தோஷத்தைத் தந்திராது. அவளை ஒதுக்கி விட்டு சாயாவை மணந்து கொண்டதில் மட்டும் மகிழ்ச்சி என்ன வாழ்கிறது? 'மாமி எப்படி இருக்கா? இன்னும் தலைமுழுகிட்டுத்தான் இருக்காளா?' அனுபமாவின் குத்தலான கேள்வி திரும்பத் திரும்ப காதுகளில் எதிரொலிக்க, மணலை உதைத்தான். ஈரத் தரையில் நண்டுகள் மிரண்டு போய் பக்கவாட்டில் ஓடி வளைகளுள் பதுங்கின. ஸாக்ஸ் அணிந்த பாதங்களை ஒரு தைரிய அலை பொங்கி வந்து நனைத்தது. பேண்ட் கால்களை மடித்து விட்டுக் கொண்டான். ஸாக்ஸ்களைக் கழற்றிப் பிழிந்து பாண்ட் பாக்கெட்டில் திணித்தான்.

சின்னியை அழைத்து வந்திருந்தால் ஒருவேளை அலைகளில் விளையாடி ரசிப்பான். அல்லது, 'பூ இது என்ன பிரமாத விஷயம்?' என்பது போல் பெரிய மனுஷத்தனமாக அலட்சியம் செய்தாலும் வியப்பில்லை. அவனை எடைபோட முடியவில்லை. இன்னது செய்வான்; இப்படி நடந்து கொள்வான் என்று அனுமானிக்க முடியவில்லை. மிகச் சிறிய வயதில் மிகப் பெரிய அனுபவங்களைப் பெற்றதன் விளைவு அது.

சற்றுத் தொலைவில் ஒரு விசைப்படகு போய்க் கொண்டிருந்தது. பெரிய படகு. மீன் பிடிக்கும் டிராலர். அது போன்ற படகு ஒன்றை கோஸ்ட் கார்டுகள் உதவியுடன் அவர்களின் மோட்டார் போட் ஒன்றில் பின் துரத்திச் சென்ற போதுதான் சின்னியை அவன் சந்தித்தான்...

இதாலியக் கனெக்ஷன் அன்று அரசியல் ரீதியிலும் தொழில் – பொருளாதார ரீதியிலும் மட்டுமின்றி, போதைப் பொருள் கடத்தலிலும் இருந்தது. அன்றைய அரசு பொருளாதார ரீதியிலான இதாலிய கனெக்ஷன் பற்றி கவலைப்படவில்லை, வரவேற்கவே செய்தது. ஆனால் போதைப் பொருள்கள் கடத்தல் விஷயத்தில் கவனம் செலுத்தியது; கவலைப்பட்டது.

இந்திய 'இன்டர்போல்' உதவியை இதாலியத் தலைநகர் ரோம் கேட்ட போது, இன்பசாகரனிடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. இந்தியப் பூனைகள், ஈழத்துப் புலிகள், இதாலிய ஓநாய்கள் என்று கைமாறி, ஐரோப்பிய நாடுகளுக்கும் அமெரிக்காவுக்கும் பரவியது, போதைச் சரக்கு.

"இதாலிய மாஃபியாவுக்கு இங்க யார் உதவறாங்க; என்ன நடக்குதுன்னு ரிஷிமூலம் நதி மூலத்தைக் கண்டு பிடிக்கணும் சார்; அவசரப்படக் கூடாது" என்றான் இன்பசாகரன்.

மேலதிகாரி ஒப்பவில்லை. "ஐ வாண்ட் குவிக் ரிஸல்ட்ஸ்" என்றார். "இதிலே பிரதமரே இன்டரஸ்ட் எடுத்திட்டிருக்கார். அவர் மறுபடியும், 'அந்த விஷயம் என்னாச்சு'ன்னு கேட்பதற்கு முன், நாம ஃபைலை குளோஸ் பண்ணி, அவர் மேஜை மேல் வைக்கணும். இதாலிதான் இன்னிக்கு இந்தியாவின் சம்பந்தி தெரியுமில்லே!"

தனது ஆட்சேபணையை ஒரு பெருமூச்சாக வெளிப்படுத்தினான். அவ்வளவுதான் அவன் காண்பிக்கக்கூடிய எதிர்ப்பு. மேலிடத்துக் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து மேம்புல் மேய்வது எளிதாக இருந்தது. சி.பி.ஐ., சர்வதேசப் போலீஸ் என்றெல்லாம் அடையாளம் காட்டாமல் துப்பறிந்தான். அடையாளம் காட்டி கடலோரப் பாதுகாப்புப் படையின் ஒத்துழைப்புப் பெற்றான்.

தரங்கம்பாடி அருகே 'கஞ்சாநகர்' என்றே ஒரு ஊர் இருப்பது அறிந்து ஆச்சர்யம் அடைந்தான். டேனிஷ்காரர்கள் ஆட்சியில் அவர்கள் ஆசீர்வாதத்துடனோ, அல்லது அலட்சியப் போக்கினாலோ அங்கே கஞ்சா வர்த்தகம் தழைத்திருக்கலாம்? ஆனால் இப்போது எல்லோரும் சட்டத்துக்கு அடங்கி நடக்கும் சாதுக்களே - அநேகமாக எல்லோரும்.

அந்தக் கரையோரக் கடல் பகுதியில், அவனுடைய இலக்குக்கு உள்ளான ஒரு மீன் பிடி டிராலரை கோஸ்ட் கார்ட் மோட்டார் போட் பின்துரத்தி வேகம் கூட்டியது. 'ஓவர்டேக்' செய்து, குறுக்காக வந்து, மெகாஃபோன் மூலம் சரணடையுமாறு ஆணை பிறப்பித்தான். ஏ.கே. 47 தான் பதில் சொன்னது! அப்புறம் நடந்த யுத்தத்தில், ஆயுதபலம் மிக அதிகமாக இருந்ததால், அதை



பயன்படுத்த அதிகார பலமும் இருந்ததால் மிகச் சுலபமாக அவர்களை வெற்றி கொண்டான்.

மீன்பிடி டிராலரில் ஏறி சாகாமல் பாக்கியிருந்த மூன்று பேரைக் கைது செய்து, விலங்கு பூட்டிய பிறகு, கீழ்த்தளத்தில் இறங்கி, மீன்களின் நாற்றத்தைச் சகித்துக் கொண்டு விலக்கி, அடியில் இருந்த டார்பாலின் நீக்கி, தென்பட்ட கள்ளிப் பெட்டிகளுள் ஒன்றை நெம்பி உடைத்துப் பார்த்த போது, உள்ளே ஸெல்லஃபேன் பைகளில் அடுக்கடுக்காக வெள்ளை பவுடர்.

கைப்பற்றி, கணக்கு எடுக்கும் பொறுப்பை உதவியாளரிடம் விட்டுத் திரும்பும் போது, ஒரு சின்ன சலனம். சரேலென்று தட்டாமாலை சுற்றி, சந்தேகித்து ஆராய்ந்த போது, பெட்டிகளுள் ஒன்றன் பின்னால் ஒரு சிறுவனின் கோபக் கண்களைச் சந்திக்க நேர்ந்தது. இடக்கரத்தால் உச்சந்தலை முடியைப் பற்றி உயர்த்த, எழுந்த வேகத்திலேயே அந்த இளம்புயல் கத்தி உருவி இவன் நெஞ்சைச் குறிபார்த்தது. கத்தி, இலக்கை அடையு முன் தட்டி விடப்பட்டது; சிறுவனின் கன்னமும் பழுத்தது. சிறுத்தைக் குட்டியாகச் சீறிப் பாய்ந்து பிராண்டினான் அரை டிராயர். அடக்கி, கைகளைப் பின்னால் பிணைத்துக் கட்டி, தனி அறைக்கு அழைத்துப் போய் உட்கார்த்தினான்.

"இந்தச் சின்ன வயசிலேயே இது என்ன வேலை?"

"வயத்துப் பொழப்பு."

"சட்ட விரோதமானது, தெரியுமில்லே?"

"சட்டத்தை மதிக்கிற ஒரு ஆளை இன்னிக்கு இந்தியாவுல காட்டு பார்ப்போம். பிரதமர்லேர்ந்து பியூன் வரை அத்தனை பேரும் சுருட்டறானுங்க. ரேட்டுதான் வித்தியாசம். மந்திரிக்கு லட்சக்கணக்குன்னா அதிகாரிக்கு ஆயிரக்கணக்கு; கிளார்க்குகளுக்கு நூற்றுக்கணக்கு; பியூனுங்க பத்து ரூபா நோட்டுங்களை எண்ணுறாங்க."

அவனுக்குச் சிரிப்பு வந்தது. சிரமப்பட்டு புன்னகையோடு நிறுத்திக் கொண்டு, "முளைச்சு மூணு இலை விடலே; விஜிலன்ஸ் டைரக்டரா பத்து வருஷம் நாற்காலி தேய்ச்சவன் மாதிரி பேசறியே!"

"இதுல என்னங்க ரகசியம்? எல்லாம் ஓப்பனாத்தானே நடக்குது? இப்ப உங்களுக்கு எவ்ளோ வேணும் சொல்லுங்க. ஏற்பாடு பண்றேன். கட்டை அவிழ்த்து விடுங்க. சரக்கை ரிலீஸ் பண்ணுங்க. ஒரு லட்சம்?"

'ராஸ்கல்! ஒரே ஒரு ஃபோன் செய்து, கட்டு கட்டாக நோட்டுகளைப் புரட்டி வந்தாலும் அதிசயப்படறதுக்கில்லே. சரக்கு மதிப்பு ஒரு கோடி தேறுமா?'

"சீச்சீ! லட்ச ரூபாய்க்கு ஆசைப்பட்டு அக்கிரமத்துக்கு துணைபோவேன்னா நினைக்கிறே? என்னைப் பார்த்தா அப்படியா தோணுது?"

"ரூபாய் இல்லே ஸார்! டாலர்! லட்சம் டாலர்! அமெரிக்க டாலர்! எந்த ஊர்ல எந்த வங்கியில கணக்கு ஒப்பன் பண்ணணும் சொல்லுங்க!"

இன்பசாகரனிடம் அருவருப்பும் ஆச்சர்யமும் போட்டியிட்டன. முன்னது வென்றது. "சின்னப் பையனாச்சேன்னு பார்க்கறேன்; இல்லாட்டா இந்நேரம் உன் கையோ காலோ ஏதோ ஒண்ணு முறிஞ்சிருக்கும்" என்று முற்றுப்புள்ளி வைத்தான்.

சிறுவன் நீங்கலாக, கைதான மற்ற மூவரையும் "விசாரித்த" போது, நீலகிரி மலைத் தொடரில் ஒரு காட்டுப் பகுதியில் பல ஏக்கர் நிலப்பரப்பில் மரங்கள் நீக்கி, செடிகள் பயிரிடப்படுவதாகத் தகவல் கிடைத்தது. கஞ்சா செடிகள்! பக்கத்திலேயே பவுடர் தயாரிப்புத் தொழிலகம்.

"ரெய்ட் நடத்து" என்றார் மேலதிகாரி. "நீ கேட்ட நதிமூலம், ரிஷிமூலம் எல்லாம் சிக்கிடுத்து பாரு!"

"எனக்கு அப்படி தோணலை ஸார்" என்றான். "இப்ப நம்மகிட்ட சிக்கி இருப்பவங்களுக்கு, கர்ப்பக்கிரஹம் எங்கே இருக்குன்னும் தெரியாது; அதுல குடியிருக்கிற கடவுள் யாருன்னும் தெரியாது; அந்த தெய்வம் கூரையைப் பிய்ச்சுக்கிட்டுக் கொடுக்குதுங்கிறது மட்டும்தான் புரிஞ்சுக்கிட்டிருக்காங்க."

"தோட்டத்தை அழிச்சு, பாக்டரியை தரை மட்டமாக்கிட்டு வாய்யா; அப்புறம் எந்த தெய்வம் எவ்வளவு கொடுக்குதுன்னு பார்ப்



"அந்த சலூன் கடையில் மட்டும் கியூ நிற்குதே, எப்படி?"

"ரொம்ப சாமர்த்தியம்பா, முதலாளி! நாம எந்தக் கட்சியோ, அந்தக் கட்சி கரை போட்ட துண்டை நமக்குப் போர்த்தி ஷேவிங் செய்வாரு!"

– சக்தி சுப்பிரமணி



''என்ன மேன்! ரொம்ப நேரமா போலீஸ் ஸ்டேஷன் வாசல்லேயே நின்னுக்கிட்டு இருக்கே. என்ன சங்கதி?''

''ஐயாவோட பொண்ணு இங்கேயே 'வெயிட்' பண்ணச் சொல்லுச்சுங்க. ஐயா முன்னாலேயே மாலை மாத்திக்கலாம்னு!''

– வடவள்ளி ராமசுப்ரமணியன்

போம்'' என்றார்.

"அவசரப்படாதீங்க ஸார்! இப்ப பதுங்கினா பின்னாடி பாயலாம்; இப்ப நாம பாய்ஞ்சா, இவங்களோட தலைவன் பதுங்கிடுவான்!"

"என்னய்யா, சடுகுடு ஆட்டத்துக்கு நேர்முக வர்ணனை சொல்றே. பி.எம்.முக்கு ஃபைல் போகணும்கிறேன். புரிஞ்சுக்காம..."

மேலதிகாரி ரொம்ப நல்லவர். அவனுக்குத் தெரியும். பாவம், நல்ல பேர் வாங்க வேண்டும் என்ற ஆசை. பிரதமருக்கு இவர் மீது அபிப்பிராயம் விழுந்தால்... இவர் பெயர் நினைவிருந்தால்... ஒரு சந்தர்ப்பத்தில் ஒரே தூக்காகத் தூக்கி பெரீய பதவியில் உட்கார்த்தி வைத்து விட மாட்டாரா!

சோகமாகத் தலையாட்டி விட்டுப் பிரிந்தான். வழிகாட்ட சின்னியை அழைத்துப் போனான். பாப்பி செடிகளை நெருப்பிட்டுக் கொளுத்தி, பவுடர் ஃபாக்டரியை நொறுக்கி அழித்தான்.

போலீஸ் அளித்த ஒத்துழைப்பும் காட்டிய ஆர்வமும் சின்ன மீன்களைத்தான் பிடித்திருக்கிறோம் என்பதை அவனுக்கு உணர்த்தின. இருபத்தைந்து பேர் கைதானார்கள். அவர்களில் வயிற்றிலும் வாயிலும் அடித்துக் கொண்ட ஒரு கிழவனை சின்னி சமாதானப்படுத்தினான். "வுடு தாத்தா, கொலை குத்தமா பண்ணிட்டே? மிஞ்சினா ஆறேழு வருஷம். அப்புறம் வுட்டுருவாங்க. மாமியார் வூட்ல குந்தி துன்னுட்டு வா."

"நான் அதுக்குக் கவலைப்படலேடா பாவி! உன் கதி என்ன ஆகுமோன்னுதான் அழுவுறேன். ஐயோ பாவம்னு உன்னை உட்கார வைச்சு சோறு போடறதுக்கு நீ சின்னக் குழந்தையும் இல்லே; வேலை வாங்கிட்டுக் கூலி கொடுக்க வயசுப் புள்ளையும் இல்லே..."

இன்பசாகரனுக்குப் பரிதாபம் ஊற்றெடுத்தது. "நான் பார்த்துக்கறேன், கிழவா" என்றான்.

தலைக்கு மேல் கையெடுத்துக் கும்பிட்டான் கிழவன். அதற்கு மேல் நன்றி சொல்ல யாரால் முடியும்?

சிறுவனை நீதிமன்றத்தில் நிறுத்தி, சீர்திருத்தப் பள்ளிக்கு அனுப்பச் செய்ய வேண்டும் என்றார் மேலதிகாரி.

''இந்த விஷயத்துலேயாவது விட்டுக் கொடுங்க ஸார்'' என்று தன்மானத்தைத் துறந்து கெஞ்சவே செய்தான் இன்பா. "இவனை நல்லபடியா வளர்த்து, படிக்க வைச்சுப் பார்க்கறேன்."

அதிகாரி வாய்பிளந்தார். "நிஜமாத்தான் சொல்றியா? எந்தச் சூழல்ல இருந்தவன்கிறதை யோசி. இவனும் உருப்பட மாட்டான்; உன்னையும் நிம்மதியா இருக்க விட மாட்டான். கழுதையைக் கொண்டு போய் அரண்மனை முற்றத்தில் நிறுத்தினாலும் அது குட்டிச் சுவரைத் தேடித்தான் போகும்."

"ஒரு சோதனை முயற்சி சார்!"

"இவ்வளவு பெரிய முட்டாளா நடந்துக்கணும்னு நீ ஆசைப்பட்டா நான் குறுக்க நிற்கலை. உன் சொந்த விஷயம். மறந்து போய் அஃபிஷியல் ரிகார்டுகள்ல ஒரு அரை டிராயரையும் அரெஸ்ட் பண்ணினதா எங்கியாச்சும் எழுதி வைச்சிருக்கப் போறே. ஜாக்கிரதையா பார்த்துடு."

நன்றி கூறிப் பிரிந்தான் இன்பா. ஆனால் அதிகாரி கூறியதுதான் நிஜமாகி விடும் போலிருந்தது. சின்னிக்கும் சாயாவுக்கும் முதல் பார்வையிலேயே ஜென்மப் பகை. ஒவ்வொரு நாளும் அவன் வீடு திரும்பும் போது குற்றப் பட்டியலுடன் சாயா தயாராயிருப்பாள். இன்றைக்கும் கூட...?

ஆதர்ஷ் அபார்ட்மெண்ட்ஸ் வாசலில் யமாஹா நிறுத்தி பூட்டிக் கொண்டு, இரண்டு மாடி ஏறி, டூப்ளிகேட் சாவியால் கதவு திறந்து உள்ளே நுழைந்தான்.

முன் அறையில் ரிடையர் ஆன அப்பா, காலை ஹிந்து நாளிதழின் தலையங்கத்தை சங்கராபரணத்தில் மெட்டமைத்து (படித்து) பாடிக் கொண்டிருந்தார். அவனைக் கண்டதும் அபஸ்வரமாகி எங்கோ இழுத்துக் கொண்டு போனது குரல்.

"குட் ஈவினிங்" என்றார்.

"வாட் இஸ் குட் அபௌட் இட்?" அலுப்புடன் கேட்டான். ஷூ கழற்றி, பொத். லுங்கியை தலை மீதாகக் கவிழ்த்து இறக்கி பாண்ட் ஜிப் சர்ர்... "சின்னி! சின்னி!"

அப்பா தொண்டை கனைத்தார். "வெளியே போனான்."

''இந்த நேரத்திலா? அகாலத்தில் ஏன் அனுப்பினீங்க? சாயா எங்கே? என்ன நடந்துச்சு?'' கற்பனைகள் விரிய பரபரத்தான்.

(தொடரும்)

பார்க் டவுன்
பெனிபிட் பண்ட் லிமிடெட்

மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனம். துவக்கம் 1985 Post Box No: 2806

223, தங்க சாலை, (கந்த கோட்டம் அருகில்) பார்க் டவுன், சென்னை-3 போன்: 582676, 564354

கிளை அலுவலகங்கள்: 2 கிழக்கு மாடவீதி, திருவான்மியூர், சென்னை-41 போன் 413582, 416417

P-995,இரண்டாவது அவென்யு, 12-வது மெயின்ரோடு ஜங்ஷன், அண்ணாநகர், சென்னை-40 போன் 6262656, 6280750



பிக்சட் டிபாசிட்

46 நாள்	90 நாள்	6 மாதம்	1 ஆண்டு	2 ஆண்டு	3 ஆண்டு	4 ஆண்டு	5 ஆண்டு ★
13%	14%	15%	17%	18%	18.5%	19%	20%

21% 5 வருடங்கள் ரூ.50,000/- அதற்கு மேலும்

PB பாண்டு

முதலீடு	காலம்	திரும்பப் பெறும்தொகை
ரூ.25,000	60 மாதம்	ரூ.70,000

குழந்தைகள் கல்வி நலத்திட்டம்

L.K.G. முதல் கல்லூரி தொடக்கம் வரை

வைப்புத் தொகை ரூ. 5,100/-

3-ஆம் ஆண்டு நிறைவிலிருந்து தொடர்ந்து 12 ஆண்டுகள் ரூ.500/- பெறலாம். திட்ட டெபாசிட் காலத்திலிருந்து 16, 17-வது ஆண்டுகளில் தலா ரூ.1,000/- வீதமும், 18-ம் ஆண்டு துவக்கத்தில் ரூ.75,000/-ம் வழங்கப்படும்.

நலத்திட்டத்தின் 5% மாணவர்களுக்கு +2 அரசுத் தேர்வு மதிப்பெண் அடிப்படையில் ரூ.25,000/- பரிசாக ஒவ்வொருவருக்கும் நிதி நிறுவனம் வழங்கும்.

திட்டத்தின்பயனை உங்கள் மழலைச் செல்வங்களுக்கு வழங்கி
மன நிம்மதி பெறுவீர்! மகிழ்ச்சி அடைவீர்!!

கனகதாரா டிபாசிட்

ரூ.50,000/-
முதலீடு செய்வீர்
10ஆம் ஆண்டு முடிவில்
ரூ.50,000/- பெறுவீர்
அடுத்த 20ஆம் ஆண்டு
முடிவில்
ரூ.1 கோடி பெறுவீர்

காமதேனு மாபெரும் திரும்பப் பெறும் திட்டம்

டிபாசிட் திட்டம் 15 ஆண்டுகள்	5-ம் ஆண்டு நீங்கள் பெறும் தொகை	10ம் ஆண்டு நீங்கள் பெறும் தொகை	15ம் ஆண்டு பெறும் தொகை
Rs.6,320	Rs.6,000	Rs.6,000	Rs.56,320

வெகுமதி முதலீட்டுத் திட்டம் - II

ரூ.3450/- செலுத்துவீர்.
252 மாதங்கள் நிறைவில்
ரூ.2 லட்சம் பெறுவீர்.

சேமிப்பு திட்டம் 10% P.a.

செல்வக்களஞ்சியம்

டிபாசிட்	காலம்	வருவாய்
Rs.7,500	15 Yrs	Rs.1,25,000
Rs.9,000		Rs.1,50,000

பொற்குவியல் திட்டம்

டிபாசிட்	காலம்	வருவாய்
மாதா மாதம் ரூ.100/-	25 Yrs	Rs.3,00,000

மறு முதலீட்டுத் திட்டம்

உங்கள் தொகை 45 மாதங்களில் இரட்டிப்பு ஆகும்

டிபாசிட்	12 மாதம்	24 மாதம்	45 மாதம்	60 மாதம்
Rs.1,000	Rs.1,184	Rs.1,430	Rs.2,000	Rs.2,535



பென்ஷனர் நலத்திட்டம் 20% P.a.
ருபாய் 10 ஆயிரமும் அதற்கு மேலும்: காலம் 1 ஆண்டு
வயோதிகர், விதவைகள், ஊனமுற்றோர், கல்வி மற்றும் அறக்கட்டளை பயன் பெறலாம்.

தங்க நகை கடன்
Rs. 3,000 PER 10 GRAM
வீடுகளின் பேரில் கடன் வழங்கப்படும்.
(உச்ச வரம்பில்லை)

ஆலோசகர்:
P. பாலசுப்ரமணியம், B.Sc.
முதன்மை அறங்காவலர்
கந்தகோட்டம், சென்னை - 3.

இயக்குனர் குழுத் தலைவர்:
R. விவேகானந்தன், B.Com.

☐ ரூ. 5/- செலுத்தி பங்குதாரர் ஆவீர். ☐ சேமிப்பே செழிப்புக்கு வழிகாட்டும் ☐ வெள்ளி விடுமுறை

கி. ராஜேந்திரன்

5

தி. நகர் கிளப் ரம்மி, டிஃபன்; இடையே நேரம் கிடைத்தால் அரசியல் பற்றிய அரட்டை என்று காலத்தை ஓட்டிக் கொண்டிருந்தார் ரங்கநாதன். "இத பாரு இன்பா, நீயாச்சு, உன் பெண் டாட்டியாச்சு, உன் வளர்ப்பு மக னாச்சு. என்னை இதுல எல்லாம் இழுக்காதே" என்றார்.

"அதெப்படி? நீங்கதானே சாயா வை எனக்குக் கட்டி வைச்சீங்க?"

"அதுல என்னோட குற்றம் என்ன? 'நல்ல இடம், அழகான பொண்ணு, பணக்காரக் குடும்பம்'னு தரகர் சொன் னார். 'அண்ணலும் நோக்கினான்; அவளும் நோக்கினாள்'னு ஒருத்தரை ஒருத்தர் பார்த்துக்கிட்டீங்க. ஆனா, 'கண்ணொடு கண் இணை நோக்கின், ஒக்கின் வாய்ச் சொற்கள் என்ன பயனும் இல'ன்னு சும்மா இருக்கத் தெரியலே. 'தனிச்சுப் பேச ணும்'னு சொல்லி தோட்டத்துக்குப் போனீங்க. சரியா இருபத்தி மூணே கால் நிமிஷத்துக்குப் பிறகுதான் திரும்பி வந்தீங்க. நீ தாலி கட்ட சம்மதிச்சே, அவ கழுத்தை நீட்ட ஒப்புக் கிட்டா. இதுல என் பங்கு என்ன? ஆசீர்வாதம் தான்."

"அந்தப் பழைய கதை எதுக்கு? இப்ப இவங்க எங்கே போனாங்க? அதைச் சொல் லுங்க."

"எங்கிட்ட சொல்லிட்டா போறாங்க? ஏதோ வாக்குவாதம் நடந்துச்சு..."

"என்ன?"

"அவங்களையே கேட்டுக்க; நான் அதை எப்படி சொன்னாலும் தப்பாப்படும். சின்னி கோவிச்சுக்கிட்டு போனாள். ரெண்டு நிமிஷம் கழிச்சு 'இன்பா வரும் போது சின்னி இங்கே இல்லேன்னா பூகம்பம் வெடிக்கும்'னு சொல்லிக்கிட்டு இவளும் கிளம்பினா..."

அவன் நெடுமூச்சுடன் சஃபாரியை மறுபடி யும் அணிய ஆரம்பித்த போது கதவு திறந்து, ஒருவர் பின் ஒருவராக நுழைந்தனர். அவனைக் கண்டும் காணாதது போல் நடந்து, பாதை பிரிந்து சாயா சமையலறைப் பக்கமும் சின்னி படுக்கை அறைப் பக்கமுமாகப் போனார்கள். 'டமார்' என்று சின்னியின் அறைக்கதவு அறைந்து சாத்தப்பட்டது. இன்பா கை-கால், முகம் கழுவச் சென்றான்.

ஹனிமூன் முடிகிற வரை கூட சந்தோ ஷம் நீடிக்கவில்லை. "என்ன ஓட்டல் இது, எலி வளை மாதிரி! தங்கினா ஃபைவ் ஸ்டார் ஓட்டலில் தங்கணும்; இல்லே, வீட்டோடு இருக்கணும்" என்றாள். பணக்கார வீட்டுப் பெண். நடுத்தரவர்க்க வாழ்க் கைக்கு அனுசரித்துப் போக முடியாமல் தவித்தாள். மாமனார் தயவில் வாழ இன்பாவின் சுய மரியாதை இடம்தரவில்லை. மகளுக்குச் சின்னச் சின்ன வசதிகளைச் செய்து தர அவர் முன்வந்த போது கூடத் தடுத்தான்.


'வீட்டில் சும்மா இருந்தால் பைத்தியமே பிடித்துவிடும்' என்று கூறிக் கொண்டு அவள் வீதிக்கு வீதி முளைத்தெழும் இங்கிலீஷ் மீடியம் பள்ளிகளுள் ஒன்றில் டீச்சராகச் சேர்ந்தாள். நன்கு படித்த, பணக்கார வீட்டுப் பெண் என் பதே போதிய தகுதிச் சான்றிதழ் ஆயிற்று. சம் பளம் பிரமாதமாக ஒன்றும் இல்லை என்றா லும் கையெழுத்து மட்டும் நாலு இலக்கத்துக்கு வாங்கிக் கொண்டார்கள். அவளுடைய சேவா மனப்பான்மையைத் தாராளமாகப் புகழ்ந்தார் கள்.

'டீச்சர் வேலை பார்ப்பதில் அவளுக்கு அப்படியொன்றும் பிரமாத ஆர்வமில்லை; ஒரு குழந்தை பிறந்தால் சமுதாய நோக்கு டாட்டா கூறி விடும்' என்று நினைத்தார் ரங்கநாதன். 'கு.க. கடைப்பிடிக்கிறார்களோ?' என்று அவ ருக்கு சந்தேகமாயிருந்தது. கேட்க பயம். 'பதி னாறில் குழந்தை பெற்று முப்பதில் பாட்டியாக வேண்டாம். ஆனால் சாயாவுக்கு இருபத்தாறு முடிந்து விட்டதாக ஜாதகம் சொல்கிறதே! உடல் வலிமை குன்றாதபோதே பெற்றுக் கொள்வதுதானே தாய், சேய் இருவருக்குமே நல்லது?' ஒருநாள் லீகோ செட் ஒன்று வாங்கி வந்து தரையில் உட்கார்ந்து பார்ட் பார்ட்டாக இணைத்து ஃபயர் இன்ஜின் உருவாக்கினார்.

"என்னப்பா இது?"

"பரவால்லேடா! பேரன் எதிரே இருக்கிறதா நினைச்சுக்கறேன்" என்றார்.

இன்பாவுக்குக் கண்கள் பனித்தன. ஒரு நல்ல டாக்டரைப் பற்றி விசாரித்துத் தெரிந்து கொண்டு போனான். முதலில் தன்னை சோத னைக்கு உட்படுத்திக் கொண்டு அப்புறம் சாயா விடம் நயமாகப் பேசி அழைத்துப் போனான். "ரெண்டு பேர் கிட்டயும் ஒரு குறையும் இல்லே" என்றார் டாக்டர். "சில விஷயங்கள் விஞ்ஞான அறிவுக்கு அப்பாற்பட்டவை. உங்க ளுக்காக நான் பிரார்த்திச்சுக்கறேன்" என்றார். அதற்கும் சேர்த்து கணிசமாக ஃபீஸ் வாங்கிக் கொண்டார்! 'இந்தச் செலவுக்கு புத்திரகா மேஷ்டி யாகமே பண்ணியிருக்கலாம்' என்று தோன்றியது.



'அனுபமாவிடம் கல்லூரி நாட்களில் தப்பாக நடந்து கொண்டதற்காக அவள் சபித்து விட்டாளோ, அதற்குரிய தண்டனையைத்தான் அனுபவிக்கறோமோ?' என்று ரகசியமாக எண்ணினான். 'இது பகுத்தறிவும் இல்லை; பக்தி உணர்வும் இல்லை' என்று தோன்றியது. ஆண்டவன் அன்புமயமானவர் என்றுதான் அவன் கேள்விப்பட்டிருந்தான், படித்துமிருந்தான்.

பிள்ளை இல்லாக் குறைதான் சின்னியை அழைத்துக் கொண்டு போய் வளர்க்க வேண்டும் என்ற எண்ணத்தை உருவாக்கியதா? அல்லது சிறுவனிடம் ஏற்பட்ட பரிவு காரணமா? அல்லது இரண்டும் கலந்த ஒன்றா?

பச்சாதாபம்தான் காரணம் என்று ஒப்புக் கொள்ள சாயா மறுத்தாள். தன்னை அவன் குத்திக் காட்டுவதாக நினைத்தாள். 'இதைவிட மலடின்னு நேரடியாகவே திட்டியிருக்கலாம்' என்றாள். கோபமாகப் பேச எண்ணியவளுக்கு தொண்டை அடைத்தது; நா தழுதழுத்தது.

வருத்தப்படும் போது அவள் இன்னும் அழகாக இருப்பதாக எண்ணினான். நீரும் காற்றும் மட்டுமே உண்டு வாழ்கிறாளோ என்று கருதும்படி கொடி உடல். உயரமும் அதிகமில்லை. அளவான அங்கங்கள். அரும்பாக நெஞ்சகங்கள். அந்தக் கண்கள் மட்டும் மற்ற அவயவங்கள் போலன்றி நீண்டு அகன்று பெரிதாக ஆளை விழுங்கி விடுவது போன்ற பார்வையுடன் விளங்கின. பெண் பார்க்கப் போன போது அவனை அப்படியே கட்டிப் போட்டவை அந்தக் கண்கள்தாம். இப்போது அவை குளங்களாகி கரை உடையப் போவதாக அச்சுறுத்தின.

பரிவுடன் அணைத்தான். அவள் கண்ணீர் சட்டையை ஊடுருவி மார்பை நனைத்தது. அவள் முதுகைத் தடவியவாறே, "நீ நினைக்கிற மாதிரியெல்லாம் இல்லே. எத்தனையோ தம்பதி

கள், ஏன், ஏற்கெனவே குழந்தை இருக்கிறவங்க கூட தத்து எடுத்துக்கறாங்க. ஒரு ஏழைக் குழந்தைக்கு வாழ்வளித்த திருப்தியை அடைய றாங்க..."

அவள் விலகினாள். சோகத்தைத் கோபம் வென்றது. "இந்தக் கதையெல்லாம் வேணாம். தத்து எடுத்துக்கறதுன்னாலும் பால் மணம் மாறாத பாலகனைத்தான் தேடுவாங்க. அல்லது உறவுல சொத்துக்களை அடைய சுவீகாரம் பண்ணுவாங்க. இப்படியா ஊர் பேர் தெரியாத, ஒன்றரைக் கழுதை வயசான தடியனை இழுத்துட்டு வரது? எங்க பிறந்தானோ, எப்படி வளர்ந்தானோ, என்னென்ன பழக்க வழக்கமோ!"

அவனுக்கும் ரோஷம் பிறந்தது. "ஆமாமாம்! பெர்னார்ட்ஷாவைப் படிச்சு, 'தி ஃபைனர் குவாலிடீஸ் ஆஃப் ஹிகின்ஸ்'னு பரீட்சையில் கட்டுரை எழுதி, நூறுக்குத் தொண்ணூறு வாங்கு; மை ஃபேர் லேடி பார்த்து, 'ஐ லவ் ஆட்ரி ஹெப்பர்ன், ஹௌ சார்மிங்'னு பாராட்டு. காரியம்னு வரும் போது கழன்று கொண்டு விடு!"

"அடக்கடவுளே! அந்தப் பையனுக்கு சோறு வடிச்சுப் போடறது போதாதுன்னு படிப்பு வேற சொல்லித் தரணுமா நான்!"

"ஏன் டீச்சர் வேலைதானே பார்க்கிறே!"

"அவனுக்கு சுட்டுப் போட்டாலும் படிப்பு வராது. முதல்ல அட்மிஷனே கிடைக்காது. அப்படியே கிடைச்சாலும் நாலாம் கிளாஸ்லதான் சேர்த்துப்பாங்க. ஏழெட்டு வயசுப் பசங்களுக்கு மத்தியிலே குதிராட்டம் வளர்ந்திருக்கும் இவன் உட்கார்ந்தால் பாடம் ஏறாது; காம்ப்ளெக்ஸ் தான் ஏற்படும்."

"அப்ப வீட்டிலேயே சொல்லிக் கொடு. அடுத்த வருஷம் வயசுக்கு ஏத்த வகுப்பிலே அட்மிஷன் வாங்கிடலாம்" என்று வாதத்துக்கு முற்றுப்புள்ளியாக முத்தம் பதித்தான்.

"எனக்கு நம்பிக்கை இல்லே" என்றுதான் அவள் முத்தாய்ப்பு வைத்தாள். அந்தப்படி தான் நடந்தது. சாயா, சின்னி இருவருக்குமே சிரத்தை இல்லாத போது முன்னேற்றம் எப்படி ஏற்படும்?

உப்புக் காற்றில் நின்று விட்டு வந்தவனுக்கு குளித்தால் தேவலாம் போலிருந்தது. தண்ணீர் சிக்கனம் கருதி தவிர்த்தான். ஒரு போர் பம்பை நம்பி பன்னிரண்டு குடியிருப்புகள். டவலை நனைத்து உடலைத் துடைத்து, பவுடர் தெளித்து உள்ளாடை மாற்றி, லுங்கி இறுக்கினான்.

"சின்னி சாப்பிட வா" என்று அறைக் கதவைத் தட்டினான். திறந்த வேகத்திலேயே கோபம் தெரிந்தது.

"எங்கடா போனே?"

"தம் அடிக்க."

"இன்னிக்கு தம் அடிப்பான்; நாளைக்கு பங் அடிப்பான். தொட்டில் பழக்கம்; திருட்டுத் துட்டு!"

"சாயா பிளீஸ்!"

"ஏன், நான் சொல்வதில் என்ன தப்பு? வேணும்னா உங்க அப்பாஸ்வைக் கேளுங்க. அவர்தான், 'நேற்றைக்கு சீட்டாட்டத்தில ஜெயிச்ச பத்து ரூபாயைக் காணோம்'னு சொல்லிட்டிருந்தாரு. 'ஒருவேளை ஒரு அவசரத்துக்கு வாசல்ல ஏதாவது வாங்க எடுத்தியோ?'ன்னு என்னைக் கேட்டாரு."

"ஏண்டா சின்னி?"

"நான் திருடலே, எனக்குச் சேர வேண்டிய கூலியைத்தான் எடுத்துக்கிட்டேன்."

"கூலியா? எதுக்குக் கூலி?"

"வீடு பெருக்கினதுக்கு; ஒட்டடை அடிச்சதுக்கு; பாத்ரூம் கழுவினதுக்கு; தண்ணீர் பிடிச்சு ரெண்டு மாடி ஏறி கொண்டு வந்து வைச்சதுக்கு."

சாயா பக்கம் பார்த்தான்.

"நிஜம்தான். அதுனால என்ன? நம்ம வீட்டை நாம சுத்தமா வைச்சுக்காட்டா வேற யார் வந்து சுத்தப்படுத்துவாங்க? ரெண்டு நாளா



வேலைக்காரி வரலே. பத்துப் பாத்திரம் நான் தேய்க்கலையா? அதுக்குக் கூலி கேட்கவா, திருடிட்டுப் போகவா?"

இன்பசாகரனுக்கு சாப்பாடு பிடிக்கவில்லை. அவன் உணவருந்தாததால் மற்றவர்களும் பட்டினி. சமையலறையில் எல்லாவற்றையும் மூடி, தவணை முறையில் பெற்ற ஃபிரிஜ்ஜில் வைத்து விட்டு தரை அதிர நடந்து, படுக்கை அறைக்குச் சென்று கட்டிலில் விழுந்தாள் சாயா.

'அத்தனை சின்ன பாதங்களுக்கு இத்தனை வலிமையா! தரையை உதைத்து நடந்ததில் வலிக்குமே!' தடவிக் கொடுக்கலாம் போல மனசில் தோன்றிய எண்ணத்தை கஷ்டப்பட்டு ஒதுக்கினான் இன்பசாகரன்.

ரங்கநாதன் இரவல் வாங்கி வந்திருந்த ஜான் க்ரிஷாமில் ஆழ்ந்தார். சின்னி, ரிமோட் டில் ஸ்டார் மூவி சானல் தேர்ந்தெடுத்து அடல்ட் சினிமா பார்த்தான்.

இன்பா ஒரு கிளிப் போர்டில் இரண்டு வெள்ளைத் தாள்கள் செருகி, கூர் சீவிய கலர் பென்சில்களுடன் சாய்வு நாற்காலியில் அமர்ந்தான். சின்னியிடம் பேச்சுக் கொடுத்துக் கொண்டே ரஸியாவின் வர்ணனைப்படி, அவள் கழுத்தைத் தன் கரத்தால் சுற்றி வளைத்த வன்முறையாளனின் படம் வரைய ஆரம்பித்தான்.

ஆர்ட்ஸ் காலேஜில் சேர்ந்திருக்க வேண்டியவன். 'ஏதாவது பள்ளிக்கூடத்தில் டிராயிங் மாஸ்டர் வேலைதான் கிடைக்கும்' என்று அப்பா அந்த ஆசையில் மண்ணை அள்ளிப் போட்டார்... வளைகோடுகளும் நேர்க்கோடுகளும் வண்ணத்தில் தோன்றின...

''இதபாரு சின்னி! வேலைக்காரன்னு உன்னை நீயே நினைச்சுக்கிட்டா நீ வேலைக்காரன்தான். இந்தக் குடும்பத்துல ஒருத்தன்னு நினைச்சுக்கிட்டா உறவுமுறையை விட ஒட்டுதல் அதிகரிக்கும். அம்மா கோபப்பட்டறா, வேலை வாங்கறான்னு நினைக்காதே. அவளுக்கு எப்படி உதவி பண்ணலாம், சந்தோஷப்படுத்தலாம்னு யோசி. அவ உன்னை மதிச்சு அன்பு செலுத்தற மாதிரி நடந்துக்க.''

''அன்பாவது மதிப்பாவது? என்கிட்ட எதுக்குக் காட்டணும்? ஆஃப்டர் ஆல் நான் ஒரு உருப்படாத கழுதை; கஞ்சா கடத்தறவன்; மாஃபியா தாதாவா உருவாகப் போறவன்...''

ஹிப்பி தலைமுடி... நீலக் கண்கள்... நீண்ட முகம்... குழிவிழுந்த முகவாய்... காது வளையம்... பளபளத்த மூக்கு... பரந்த மார்பு... திரண்ட புஜங்கள்... உம்ம்... இன்னும் என்ன சொன்னாள், ரஸியா...?

''உனக்கு எப்படி புரியவைக்கிறது சின்னி. படிப்பு வராட்டி பரவால்லே; நல்லா படிச்சு முன்னேற முயற்சி பண்ணணும். முயற்சிதான் முக்கியம்; படிப்பு இல்லே. நீ சின்ஸியரா முயற்சி பண்றேன்னு தெரிஞ்சா, அம்மாவுக்கு அனுதாபம் பிறக்கும். அனுதாபம் அன்பா மாறும்.''

சின்னி சில கணங்கள் மௌனம் காத்தான். டீவியை அணைத்தான். தலைகுனிந்தான். அவன் விம்மி, விசும்பி அழும் குரல் கேட்டது. இன்பா எழுந்து போய் தட்டிக் கொடுக்கவில்லை. 'அழட்டும்; அழுது அழுதுதான் தாழ்வு மனப்பான்மையின் விளைவான வெறுப்பு உணர்வுகள் கரைந்து வெளியேற வேண்டும்.'

''இன்னிக்கு ஒரு பெண்ணைப் பார்த்தேன். உன்னை விட ரெண்டு வயசு பெரியவளா இருக்கலாம். பிளஸ் டூ. படுசுட்டி.'' சொல்லிவிட்டு சிந்தித்தான்: 'முஸ்லிம் அம்மாவுக்கும் ஹிந்து அப்பாவுக்கும் பிறந்த அவளுக்கும் மனோதத்துவ ரீதியிலான சில பிரச்னைகள் இல்லாமல் போகாது. ஆனாலும் எவ்வளவு சாமர்த்தியமாக நடந்து கொண்டாள்!'

''அவளை ஒரு ஆபத்து சூழ்ந்திருக்கு. இல்லாட்டி இங்கே அழைச்சு வந்திருப்பேன்; உனக்கு ஃபிரெண்டா இருக்கும்படி சொல்லியிருப்பேன்.''

''எனக்குக் கூடத்தான் உங்களால ஆபத்து ஏற்பட்டது; இன்பா போகுமிடமெல்லாம் ஆபத்தும் பின்னோடு வரும்!''

''ராமனிருக்குமிடம் அயோத்தின்ற மாதிரிதான்! என்ன செய்ய? என் தொழில் அப்படி!''

'சீஃபுக்கு ஃபோன் செய்து ரஸியாவுக்கு ஒரு காவல் ஏற்பாடு செய்ய வேண்டும்' என்று நினைத்தான். 'ஆனால் அவளை அழிக்க வேண்டும் என்று நினைக்கும் அசுரர்களுக்கு ஒரு மஃப்டி கான்ஸ்டபிள் எப்படி தடையாக முடியும்? நான் அவளை சந்தித்துப் பேசியதை வெடிகுண்டு வீரர்களில் யாரேனும் உளவு பார்த்தார்களா, இல்லையா?'

படத்துக்கு இறுதியாக சில டச்சஸ் கொடுத்தான். இங்கே ஒரு கோடு, அங்கே ஒரு புள்ளி, கழுத்தருகே கொஞ்சம் ஷேட். அவள் வர்ணனையை வடித்து எடுத்திருந்தான்.

''சரி, சரி. சாப்பிட வாங்க'' என்றான் சின்னி. என்னோட முட்டாள்தனத்துக்காக எல்லாரும் வயத்தைக் காயப் போட்டுப் படுக்கறதுல என்ன லாபம்?''

''முட்டாள்தனம்னு ஏன் நினைக்கறே? உன்னோட கெட்டிக்காரத்தனம்தான் இவ்வளவு தர்க்கத்துக்கும் இடமளித்து, உன்னை நீயே உணர்வதற்கான உண்மைகளைக் கடைந்தெடுத்துக் கொடுத்திருக்கு! புரியுதா?''

''இப்ப பசி ஒண்ணுதான் புரியுது.''

''படம் நல்லா இருக்கா பாரு'' என்று பெருமையாக நீட்டினான்.

''அட! உங்களுக்கு பென்ஜமின்னைத் தெரியுமா?'' என்று அதிசயித்தான் சின்னி. அவன் தலைநிமிர்ந்த போது முகத்தில் அதிசயத்தின் இடத்தை பயம் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது!

(தொடரும்)

''கடை வீதியில் ஒரு ரஜினி ரசிகருக்கும், ஒரு கடைக்காரருக்கும் பயங்கர சண்டை...!''

''ஏன்...?''

''ரஜினி ரசிகர் ஒரு ரூபாய் கொடுத்து நூறு ரூபாய்க்கு பொருள் கேட்டிருக்காரு...!''

— தக்கலை சு. கந்தையா

காந்தி பிறந்த மண்

படு கமர்ஷியல் ஆகிவிட்ட சாதி ஒழிப்பு சமாசாரத்தை மீண்டும் எடுத்துக் கொண்டு, ஒட்ட ஒட்ட மசாலா அரைத்திருக்கிறார்கள். மிகவும் சென்ஸிடிவான விஷயத்தின் ஆழம் வரையெல்லாம் போகாமல், மேலாகக் கொரித்திருக்கிறார்கள்.

இரு வேஷங்களில் விஜயகாந்த். வெரைட்டி காட்ட முயன்று, ஓரளவு வெற்றி பெற்றிருக்கிறார். மிகவும் பாராட்டுக்குரியவர் அவரது மேக்அப் மேன். இளமை மின்ன வைத்திருக்கிறார். குறிப்பாக, கண்ணாடியும் திருநீறும் சொட்டுநீல வேட்டி-சட்டையுமாக இடைவேளைக்குப் பிறகு வருகிற காந்தி வாத்தியார் கேரக்டர் அத்தனை சுலபத்தில் மறக்க முடியாதது.

சாதி வெறிக்கு எதிரான மிக நீண்ட வசனங்களை, அலட்டிக் கொள்ளாமல் பேசும்விதம் ரசனைக்குரியது. பூப்பறிக்கிற பாடலில் குறும்பு கொப்பளிக்கிறது.

நேர்மாறாக மகன் விஜயகாந்த் கேரக்டர். அடியோ, அடியோ, அடியென்று ஒரே துவம்ச மயம். நமக்கே முதுகுவலி வந்து விடும் போலிருக்கிறது!

விஷத்தைக் குடித்து விட்டு ஒன்றரை மணி நேர ஃபிளாஷ் பேக் கதையைச் சொல்லி முடித்து, கடைசியில் 'குடித்தது விஷமல்ல; சர்க்கரைத் தண்ணி' என்னும் போது எரிச்சல் பொத்துக் கொண்டு வருகிறது.

கொஞ்ச நேரம் வந்து போனாலும் ரேவதி, ரேவதிதான். தீனி போட படத்தில் இடமில்லாததுதான் சோகம்.

சுந்தர்ராஜனின் காமெடி ட்ராக் கவனிக்கப்பட வேண்டியது. 'சிக் ஜோக்' என்னும் வகையைச் சேர்ந்த, சிலருக்கு சிரிப்பும் சிலருக்கு அலுப்பும் தரக்கூடிய விஷயம். தொடர்ந்து நாலு படங்களில் இந்த ஸ்டைலைத் தொடர்ந்தால் - இது ஒரு ட்ரெண்டாகும் வாய்ப்பு தெரிகிறது.

அப்புறம் தேவா. பாடல்கள், எங்கோ கேட்டது போல் இருப்பினும் 'ரிதம்' புதுசாக இருப்பதால் தாளம் போட வைக்கின்றன.

படத்தின் ஹை-லைட், ராஜராஜனின் கேமரா. மாறுபட்ட கோணங்கள், லைட்டிங் மூலம் பிரமிப்பு ஏற்படுத்துகிறார்.

கடைசியாக ஒரு விஷயம். தேசப் பிதாவுக்கும் இந்தப் படத்துக்கும் ஒரு சம்பந்தமும் இல்லை. படத்தில், ஹீரோவின் அப்பாவுக்கு காந்தி என்று பெயர்! ஹே ராம்!

— ஆர்.பி.ஆர்.





நாடோடி மன்னன்

சரத்குமார், தமது அரசியல் ஈடுபாட்டை முதல் முறையாகத் திரையில் பகிரங்கப்படுத்தி உள்ளார். காட்சிக்குக் காட்சி, ஜெயலலிதா கட்-அவுட். வசனங்களில் இம்மி பிசகாத எம்.ஜி.ஆர். ஃபார்முலா. 'வாத்தியார் ஆசியும் அம்மாவோட அன்பும் இருக்கிற வரைக்கும்...' என்றெல்லாம் பொழிகிறார்!

'சரத்குமாரை ஜெயலலிதா 'ஷெரீப்' ஆக்கப்போகிறார்' என்று கொஞ்ச நாள் முன்பு உலவிய வதந்தியையே கதை ஆக்கியிருக்கிறார்கள்.

தம் முயற்சியால் ஒரு சாதாரண செருப்பு தைக்கும் தொழிலாளி எப்படி 'ஷூ மேக்கர் லெவி' ஆகி, பின் 'ஷெரீப்' ஆகிறார் என்பது கதை.

நடுவே ஒரு வில்லன், உயிர்த்தியாகம் செய்கிற உத்தம பத்தினி, கிளாமருக்கு மீனா, ஒப்புக்கு விக்னேஷ், சப்புக்கு கௌண்டமணி – செந்தில்.

தாடியுடன் சரத். தைரியமாக வயசான வேஷம் ஏற்றிருப்பதோடு, அலட்டாமல் செய்திருப்பது சிறப்பு. மகளுக்குக் காதல் பாடம் எடுக்கிற இடங்களில் அபார மெச்சூரிட்டி தெரிகிறது. ஒரு மாறுபட்ட கதையும் திறமைவாய்ந்த இயக்குநரும் கிடைத்தால் நிச்சயம் சாதனை புரியக்கூடும். ஏன் இன்னும் கிட்டவில்லை?

இரட்டை வேடங்களில் மீனா. அம்மா வேஷம் தமாஷாக இருக்கிறது. நவராத்திரியில் குழந்தைகள் போடுகிற மாமி டிரெஸ் மாதிரி. கிளைமாக்ஸில் வில்லனைச் சந்திக்க மகள் வேஷத்தில் போகிறபோது மட்டும் நடிக்க வாய்ப்பு இருக்கிறது. ஆனால் அதைப் பயன்படுத்திக் கொள்ளாதது சோகம்.

மாறாக, டைட் குளோசப்பில் நெற்றி வியர்வையை மட்டும் காட்டி சூழ்நிலைக்குத் தேவையான இறுக்கம் ஏற்படுத்தும் கேமராமேனின் புத்திசாலித்தனம் பாராட்டும்படி உள்ளது.

வீடியோ கேஸட் – போட்டோக்களைக் காட்டி மிரட்டும் வில்லன் கேரக்டரை ரகுவரனை விட யார் சிறப்பாகச் செய்ய முடியும்? குரல் ஏற்ற இறக்கங்கள் மூலம் மட்டுமே வில்லத்தனம் காட்டி அசத்தி இருக்கிறார்.

மிகவும் த்ரில்லிங்காக எடுக்கப்பட்டிருக்க வேண்டிய படத்திற்கு ஒரு ஆர்ட் பிலிம் ரகத் திரைக்கதை என்னத்துக்காக? படா ஸ்லோ!

பாடல்களில் கோட்டை விட்டாலும் ரீ-ரெக்கார்டிங்கில் கொஞ்சம் தரம் காட்டியிருக்கிறார் தேவா. 'ஹாய் ஹாய்' பாடலில் பின்னணி இசை மட்டும் தூள்!

அ.தி.மு.க. அனுதாபிகளுக்குப் படம் பிடிக்கும்!

— ஆர்.பி.ஆர்



''மாமூல் வாங்கட்டும்; அதுக்காக இப்படியா?''

''ஏங்க? என்ன செய் தாங்க?''

''ஆயிரம் ரூபாய்க்கு மேல் மாமூல் தருபவர்களின் பெயர் கல்வெட்டில் பதிக்கப்படும்னு அறிவிச்சிருக்காங்க!''

— கே. ராஜ
திருவேங்கடம்

''நமக்கு கல்யாணம் பண்ணி வைத்த தரகரே நம்ம பொண்ணுக்கும் மாப்பிள்ளை பார்க்கவான்னு கேட்கிறார்டி!'

''வேண்டாங்க! அவளுக்கும் ஒரு உதவாக்கரையைப் பார்த்திட்டு வந்திடப் போறார்!''

— தேனி எஸ்.
மாரியப்பன்



கூவத்தில் குளித்தவர்!

ஆண்டு தோறும் வாழ்த்து!

● சென்னை, ஆர்.கே. நகர் தொகுதி எம்.எல்.ஏ மதுசூதனன், பொங்கல் திருநாளன்று தம் தொகுதியிலுள்ள அனைத்து இந்துக்களுக்கும் ஈகைத் திருநாளன்று அனைத்து முஸ்லிம்களுக்கும் கிருஸ்துமஸ் அன்று அனைத்து கிருஸ்தவர்களுக்கும் ஆண்டு தோறும் தவறாமல் வாழ்த்து அனுப்புவதை வழக்கமாகக் கொண்டுள்ளார்!

- ப. ராம் முருகன், சென்னை - 87

எப்படிப் பிடித்தேன்?

● பேச்சாற்றல் என்பது பீரங்கி மாதிரி. ஒரு ரப்பர் ஸ்டாம்ப் கூட இல்லாத அரசியல் கட்சியில் நுழைந்து, எனது பேச்சாற்றல் மூலம் தான் நான் ஜெர்மன் ஆட்சியைப் பிடித்தேன்!"

- சொன்னவர் ஹிட்லர். ('உலக செய்திகள் 1000' நூலிலிருந்து.)

- ப. ஸ்ரீதரன், கே.கே.நகர்.

கிரிஸ்டல் கூவம்!

● கனிமரா நூலகத்தில், 'அக்கால சென்னைப் பிரமுகர்கள்' என்ற நூலைப் படித்துக் கொண்டிருந்தேன். அதில் பச்சையப்ப முதலியார் பற்றிச் சில வரிகளைப் படித்த போது அசந்து போனேன்!

'ஈஸ்ட் இந்தியா கம்பெனியில் வேலை பார்த்து வந்த பச்சையப்பர், தினம் காலை தம் வீட்டுக்கு அருகே ஓடும் கூவம் நதியில் குளித்துவிட்டுப் பின்னரே அலுவலகம் கிளம்புவார்' என்கிற வரிகளே என் வியப்புக்குக் காரணம். அன்று கூவம் அத்தனை சுத்தமாக இருந்திருக்கிறது!

- வி. பிரபாகர், சென்னை - 41

சீதக்காதி


● அம்பத்தூரில் ஓர் ஓட்டலுக்குக் காப்பி சாப்பிடச் சென்றேன். என் எதிர் டேபிளில் வந்து உட்கார்ந்த இளைஞர், கல்லாவில் இருந்தவரிடம் கெஞ்சிக் கொண்டிருந்தார்.

"முதலாளி, எட்டணா குறையுது. அப்புறம் தாரேன். இப்ப காப்பி கொடுங்க. தலை ரொம்ப வலிக்குது!"

"முழு காசு இருந்தா காப்பி குடி. இல்ல, எழுந்து போயிடு!"

- கவனித்துக் கொண்டிருந்த நான் குறுக்கிட்டு, "அவருக்கு ஒரு காப்பி குடுத்துடுங்க. நான் காசு தரேன்" என்றேன்.

"நீங்க எதுக்கு எனக்குக் காசு தரணும்? வேணாம்!" - முரண்டு பிடித்தார்.



"அம்மா! கூரைக்குப் பக்கத்திலிருந்த ஏணியைத் தள்ளிட்டேன்!"

"எனக்கு வேலை இருக்கு. அப்பாவைக் கூப்பிட்டு எடுத்துவெக்க சொல்லு!"

"அப்பா கூரையிலே தொங்கிட்டு இருக்காரே!"

- ஏ. கிரேஸியாஸ், சென்னை - 21



"உங்க படத்துல சண்டைக்காட்சிகள் எப்படி இத்தனை தத்ரூபமா அமைந்தது?"

"படப்பிடிப்பை காங்கிரஸ் கட்சி ஆபீஸ் வாசல்ல நடத்தினோம். அதான்!"


- புளியரை கணேசன், சென்னை - 30



"அந்த லாரி டிரைவரை ஏன் இப்படிப் போட்டு அடிக்கறாங்க?"

"மணிரத்னம் வீட்டுக்கு எதிர்ல 'பாம்... பாம்'னு ஹாரன் அடிச்சாராம்!"


- இரத்ன. மனோகரன், சென்னை - 99



"நிதி இலாகா ஆலோசகரை ஏன் டிஸ்மிஸ் பண்ணிட்டாங்களாம்?"

"பண வீக்கத்தைக் குறைக்க என்ன வழின்னு கேட்டா, வெந்நீர் ஒத்தடம் கொடுங்கன்றாராம்!"

- என்.கே. பாலசுப்பிரமணியன், சென்னை - 26




"கிளின்டன் அறிக்கை விட்டிருக்கார் படிச்சியா?"

"இல்லையே, என்னவாம்?"

"உனக்கும் எங்கம்மாவுக்கும் நடுவுல நடுவரா செயல்பட அவர் தயாராம்!"

- புளியரை கணேசன், சென்னை - 30



"பிளேனை ஹைஜாக் பண்ணியது ஒரு ஆட்டோ டிரைவராம்!"

"எப்படி தெரிஞ்சுது?"

"டில்லியிலிருந்து கிளம்பின பிளேனை ஐரோப்பா, அமெரிக்கா வழியா பம்பாய்க்கு ஓட்டச் சொன்னானாம்!"

- ஆர். ஷாலினி, சென்னை - 33

ா மெட்ராஸ் மசாலா மெட்ராஸ் மசாலா மெட்ராஸ் மசாலா மெட்ராஸ் மசாலா

"அட, பரவாயில்லப்பா. நீ காப்பி குடி. நான் பிறகு காரணம் சொல்றேன்."

அவர் கேட்கவில்லை. சர்வர் காப்பியை வைத்துப் போன பின்பும் "நீங்க எதுக்கு குடுக்கணும்?" என்று விடாமல் கேட்டுக் கொண்டே இருந்தார்.

ஒரு வழியாகச் சமாளித்து சாப்பிட வைத்தேன். குடித்து முடித்ததும் மறுபடி கேட்டார்.

"நீங்க எதுக்கு எனக்கு காப்பி வாங்கித் தரணும்?"

"உங்க வாட்ச் 'ஸ்ட்ராப்'பில் எம்ஜியார் படம் ஒட்டி இருப்பதைப் பார்த்தேன். நானும் எம்ஜியார் ரசிகன்! நீங்க அந்த ஆளிடம் கெஞ்சுவது எனக்குப் பிடிக்கவில்லை... அதனால் தான்!" என்றேன்.

அவர் கண்களில் கண்ணீர் எட்டிப் பார்த்தது. நா தழு தழுக்க அவர் சொன்னார்.

"பார்த்தீங்களா? தலைவர் செத்துப்போய் இத்தனை வருஷம் கழிச்சும் உதவறாரு!"

- லா.ரா.சப்தரிஷி, சென்னை - 53

மலையாளத் தெருமுனை

● இந்தி தொலைக்காட்சித் தொடர் 'Nukkad' ('தெருமுனை') மலையாளத்தில் 'டப்' செய்யப்பட்டு, 'கவலா' என்ற பெயரில் 'ஏஷியா நெட்'டில் ஒளிபரப்பாகிறது. இதைத் தயாரித்திருக்கும் என்.மோகன் தாஸ் ஒரு சென்னைவாசி. ஆர்.கே.கலர் பிலிம் லேபரட்ரியின் உரிமையாளர். இவரிடம் அதிநவீன ``Avid System'' இருப்பதால் மொழியாக்க விஷயத்தில் தூள் கிளப்புகிறார்! முதல் வாரத்திலேயே 'கவலா'வுக்கு பயங்கர வரவேற்பாம்!

- கா.ரா. குமார், சென்னை - 116

சுவரெல்லாம் சித்திரங்கள்!

● பாரிஸ் கார்னர் சரவண பவன் ஓட்டலுக்கு ஒருதரம் போய்வந்தால் இந்தியாவிலுள்ள அத்தனை அம்மன் கோவில்களுக்கும் போய் வந்த உணர்வு ஏற்பட்டுவிடும்!

கங்காதேவி, காளஹஸ்தி பிரசுன்னாம்பிகை முதல் தமிழகத்து அம்மன்கள் அத்தனை பேர் உருவங்களையும் ஆள் உயர ஓவியங்களாக வரைந்து மாட்டி உள்ளார்கள்!

- டி.என். பாலகிருஷ்ணன், சென்னை -91

வேண்டுகோள்

யானை முகனே!
சங்கத் தமிழ் மூன்றும்
தருகிறேன்...
நீ எனக்கு
பாலும், தெளிதேனும்
பாகும் பருப்பும்
உடனடியாகத் தா!

- அசு. கிருஷ்ணன், வியாசர் நகர்.

மதுரைக்காரர்களே!

அடுத்து உங்கள் முறை. சென்னை வாசிகளை அடுத்து இந்தச் சிறப்புப் பக்கங்களில் இடம்பிடிக்கப் போவது நீங்கள்தான்!

கதை, கட்டுரை, கவிதை, துணுக்கு, ஜோக் என்று ஏதாயினும் சரி.

போஸ்ட் கார்டில் (மட்டும்) எழுதி, மறக்காமல் முகவரிப் பகுதியில் 'மதுரை துணுக்குகள்' என்று குறிப்பிட்டு அனுப்புகள்.

அதிகபட்சம் நான்கு வாரங்கள் நீங்கள் புகுந்து விளையாடலாம்! இடம்பெறும் துணுக்குகளுக்குச் சன்மானம் உண்டு.

மிகச்சிறந்த துணுக்காக ஆசிரியர் தேர்ந்தெடுக்கும் ஒன்றுக்கு ரூ.100/- சிறப்புப் பரிசு.

ஜமாயுங்கள்!

- ஆசிரியர்

சின்னியின் முகத்திலே பரவிய பீதியைப் பார்த்து இன்பசாகரன் கலங்கி விட்டான். சட்டென்று இழுத்து அணைத்துக் கொண்டான்.

"ஸாரிடா."

"பரவால்லேப்பா."

"யாரு இந்த ஆளு? பென்ஜமின்னு சொன்னே? தெரியுமா உனக்கு?"

"காட்டிலே தோட்டத்துக்குச் சில சமயம் வருவான். ஒரு தடவை சரக்கு ஏத்திட்டுப் போன படகிலும் இருந்தான்."

"இவ்ளோதானா?"

"இந்தத் தொழில்ல ஒருத்தரைப் பற்றி ஒருத்தருக்கு ரொம்ப ஒண்ணும் தெரியாது. தெரியப்படுத்தவும் மாட்டாங்க. தெரிஞ்சுக்க பிரியப்படவும் மாட்டாங்க."

"அது சரி, ஆனா இதுக்காக நீ இவ்வளவு பயப்பட வேண்டியதில்லையே?"

"ஒரு சந்தர்ப்பத்துல தோட்டத்துல அவன் நடந்துக்கிட்ட விதத்தைப் பார்த்திருந்தா நீங்களும் நடுங்குவீங்க."

"உனக்கு அதைப் பற்றிப் பேச இஷ்டமில்லேன்னா வேண்டாம், சாப்பிடப் போலாம்."

"இல்லே, சொல்லிடறேன். அதே நினைவா இருந்தா சோறு இறங்காது."

காத்திருந்தான்.

"உங்களுக்குத் தெரியும். காட்டுக்கு மத்தில மறைவா தோட்டம்; பக்கத்துல ஃபாக்டரி. வெள்ளைப் பவுடர் உற்பத்தில, பாக்கெட் கணக்கு சரிப்பட்டு வரலை. ஒரு சின்ன பங்கு காணாமப் போயிட்டிருந்தது. நாலைஞ்சு நாள்ல கண்ணி வைச்சு கண்டுபிடிச்சுட்டாங்க. தோட்டத்துல கூலி வேலை செய்யற ஆதிவாசிப் பொண்ணு ஒருத்தி. டோலின்னு பேரு. ஃபாக்டரில அவளுக்கு ஒருத்தன் உதவி. தினம் ரெண்டு மூணு பாக்கட் மடியிலே அவ கட்டிட்டுப் போறதா தெரிஞ்சு போச்சு."

"ஹெராயின் போதைப் பொருள், தங்கம் மாதிரி யாச்சே! செம பணம். அதான் ஆசைப்பட்டுட்டா."

"அந்தச் சமயத்துல இந்த ராட்சசன் அங்க இருந்தான். வந்து ரெண்டு நாளாகியிருந்தது. விஷயம் கேள்விப்பட்டதும், 'நான் பார்த்துக்கறேன்; எங்கிட்ட விடுங்க'ன்னான். டோலி, வீட்டுக்குக் கிளம்பறப்ப வாசல்ல நின்னு, 'மடியை உதறு'ன்னான். கைல தைல மரத்தின் கிளை ஒண்ணு ஒடிச்சு வைச்சிருந்தான். அவ தயங்கினா. இவன் கையிலிருந்த குச்சியை தலைப்பில் செருகி இழுத்தான். தலைப்பு தளர, மடியிலிருந்து 'பொத்' 'பொத்'துன்னு பாக்கெட்டுங்க விழுந்துச்சு. எல்லாரும் பார்த்துட்டிருந்தாங்க. டோலிக்கு வெட்கமாப் போச்சு. ரோஷம் பொத்துக்கிச்சு. 'நீங்க செய்யறது மலையத்தனை திருட்டு; அதுக்குள்ள நடக்கற கடுகத்தனை சின்னத் திருட்டு இது.



கன்னம் வைச்சுக் கொள்ளையடிக்கிறவன், பிக் பாக்கெட்காரனுக்கு புத்தி சொல்ல வந்த மாதிரி இருக்கு. நகருய்யா, நேரமாவுது'ன்னு வீம்பா பேசிட்டா. இந்த தடியனுக்குக் கோபம் தலைக்கேறிடுச்சு. 'மடில மட்டும்தானா இன்னும் வேற எங்கியாச்சும் ஒளிச்சு வைச்சிருக்கியா'ன்னு கேட்டான். அவ அடுத்தாப்பல நடக்கப் போறதைப் புரிஞ்சுக்கிட்டா. ஒண்டி ஒடுங்கினா. ராட்சசன் விடலே. அங்கியே, அப்பவே அவளை அம்மணமாக்கி அடிச்சான். கையிலிருந்த விளாறு நார்நாரா கிழியற வரை அடிச்சான். அவ உடம்பு பூரா கறுப்புத் தரையிலே சிவப்புக் கோலம் போட்டது போல... மறுநாள் பள்ளத்தாக்கிலே குதிச்சு, பாறையிலே தலை மோத செத்துப் போனா. உடம்பு ரணத்தைப் பச்சிலை வைத்துக் கட்டி குணமாக்கியிருக்கலாம்; ஆனா அத்தனை பேர் எதிரே ஏற்பட்ட அவமானத்தை யாரால, எப்படி சரிப்படுத்த முடியும்?"

சின்னியின் முதுகை வருடிக் கொடுத்தான் இன்பா. "முகம் கழுவிட்டு வா, சாப்பிடலாம். நான் அம்மாவை எழுப்பி அழைச்சிட்டு வரேன்."

இரவு கட்டிலில் சாய்ந்தபடி பென்ஜமினின் படத்தைப் பார்த்தவாறே இன்பா

கி. ராஜேந்திரன்

யோசித்துக் கொண்டிருந்த போது, சாயாவின் கரம் நீண்டு அதை அவன் கையிலிருந்து உருவிப் பறக்க விட்டது. படம் காற்றில் மிதந்து, மெல்லத் தரை இறங்குமுன் இவள் முகம் அவன் நெஞ்சில் புதைந்திருந்தது.

இன்பா புன்னகையுடன் சுற்றி வளைத்து அள்ளிக் கொண்டான். 'டென்ஷன்' மிகுந்த நாட்களில் எப்போதுமே சாயா இப்படித்தான் ஒண்டிக் கொண்டு பாதுகாப்பும் ஆதரவும் தேடுவாள். அது எப்படியோ போய் முடிவதும் உண்டு.

'என்றேனும் ஒருநாள் நிச்சயம் தாயாகப் போகிறவளே! எனக்குத் தகப்பன் என்ற அந்தஸ்தை தரப் போகிறவளே! உன்னை வாழ்த்துகிறேன். உனக்காக இறைவனைப் பிரார்த்திக்கிறேன். வெகுசுலபமாக பென்ஜ



மினின் படத்தை என்னிடமிருந்து பிடுங்கி எறிந்து விட்டாய். ஆனால் அவனால் நேரக் கூடிய அபாயங்களை நான் அல்லவோ எதிர் கொள்ள வேண்டும்? சின்னிக்கும் உனக்கும், அதைவிட நிச்சயமாக ரஸியாவுக்கும் எப் போது என்ன துன்பம் இவனால் நேரக் கூடுமோ? நான் எச்சரிக்கையாக இருக்கிறேன், அன்பே! உனக்கு விவரங்கள் கூறி கலங்க அடிக்கப் போவதில்லை. இன்றைய உன் டென்ஷனை அதிகரிக்கப் போவதில்லை. கவ லையின்றி உறங்கு. என்னுடைய தூக்கத்தையும் சேர்த்து அனுபவி. நிம்மதியான நித்திரையில் ஆழ்ந்து போ...!'

மூன்றாவது நாள் அவன் அனுபமாவுக்கு போன் செய்த போது வீட்டுக்கு வரச் சொன் னாள்.

"ஏன்?"

"ஏற்கெனவே சொல்லியாச்சு. இங்கே சூழ் நிலை சரியில்லை." வைத்து விட்டாள்.

அவள் குறிப்பிட்ட நேரத்துக்கு முன்னதா கவே ஆவல் அவனை அழைத்துப் போனது. அசோக்நகரில் ஃபிளாட் ஸிஸ்டம் பிரபலமா வதற்கு முன் வீட்டுக்கு ஒரு மனை (ஒரு கிரவுண்டு) என்று ஒதுக்கிக் கட்டப்பட்ட இல் லங்களில் ஒன்று. நாலைந்து தென்னைகளுக் கும் ஒரு மாதுளைக்கும் ஒரு மாவுக்கும் கூட இடமிருந்தது தோட்டத்தில். அந்த அளவுக்கு வீடு சின்னது. அனுபமா உத்யோகத்தில் அமர்ந்த பிறகு, லோன் போட்டு மாடி போர் ஷன் கட்டியிருந்தார்கள். இரண்டு அறைகள்; பின்னால் திறந்தவெளி.

அனுவின் தகப்பனார் வரவேற்றார், "வா இன்பா, அப்பா சௌக்கியமா?"

பழசையெல்லாம் அவர் மறந்திருக்க முடி யாது. ஆனாலும் அவற்றால் பாதிக்கப்படா மலிருக்க அவர் எடுத்துக் கொண்ட முயற் சியை அவன் தனக்குள் பாராட்டி நன்றி செலுத்தினான். நேருஜி உருவாக்கிய theory of peaceful co-existence உலக நாடுகளுக்கு மட்டு மல்ல; மனித உள்ளங்களுக்கும் பொருந்தும். அனுபமாவின் காதலை இவன் காலால் எட்டி உதைத்ததை நினைத்து நினைத்துப் பகைமை பாராட்டுவதால் யாருக்கு என்ன லாபம்? வாழு வாழவிடு.

"அப்பாவும் சௌக்கியம், அவர் ரம்மியும் சௌக்கியம்" என்றான்.

"நான்ஸி ரேகன் எழுதிய புத்தகம் ஒண்ணு கிடைச்சுது. நினைவலைகள். அப்பாவுக்கு வேணும்னா படிக்க எடுத்துப் போ. ரேகன் என்னமோ சினிமா ஸ்டார் ஆனதால சுலபமா அமெரிக்க ஜனாதிபதியா வந்துட்டான்னு தான் நினைக்கிறோம். அதுக்கு முன்னாடி சினிமா துறைலயே தொழிற்சங்கத் தலைவனா இருந்திருக்கான்னு அவன் பெண்டாட்டி எழு தின இந்த புத்தகத்தைப் படிச்சாத்தான் தெரிய வருது. முதல்லே கவர்னரா வரதுக்கே எத் தனை பாடுபட்டிருக்கான், மனுஷன்? நம்ம ஊர் கதை மாதிரி இல்லே! அங்கே கிளாமர் மட்டும் போதாது!"

"அப்பாவுக்கு த்ரில்லர்தான் பிடிக்கும். கேட்டுட்டு வந்து வாங்கிப் போறேன்" என்றான்.

அனு உள்ளே நுழைந்தாள். "வா இன்பா. காப்பி சாப்பிடறியா?"

"நான் கொண்டு வரேன். நீங்க மாடில போய் பேசிட்டிருங்க" என்றார் ஆதிமூலம்.

உத்யோக ரீதியில் என்றாலும் அவர்கள் அந்தரங்கமாகப் பேச விரும்புவார்கள் என் பதைப் புரிந்து கொண்டிருந்தார்.

மொட்டை மாடியில் மோடாக்கள் எடுத்துப் போட்டு அமர்ந்தார்கள்.

"போலீஸ் டிபார்ட்மெண்ட் கீழே உன் னோட இலாகா வந்துட்டா என்ன? எதுக்கு இப்படி பயப்படுறே?" என்றான்.

"பயம் இல்லே. வருத்தம். சுதந்திரம் போயி ருச்சே. அதோட சத்தியமும் டாட்டா சொல் லிடும். இந்த மாதிரி ரிப்போர்ட் வேணும்னு கேட்டா, அந்தப் படிக்கு எழுதித் தர ஆராய்ச்சி எதுக்கு? விஞ்ஞானம் எதுக்கு?"

"ஏற்கெனவே ஹோம் மினிஸ்டிரி கீழே இருந்தப்ப மட்டும் என்னவாம்...?"

"அப்பவும் சில சமயம் தலையீடு இருக்கும்; ஆனா போலீஸ் மாதிரி அவ்வளவு மோசமா இருக்காது. எந்த கேஸானாலும் அதுல நேர டியா ஈடுபடறது போலீஸ் இல்லியா?"

"இப்பத்தான் அரசியல்வாதிக்கும் கிரிமி னலுக்கும் வித்தியாசம் இல்லாமப் போச்சே!"

"அதிகாரவர்க்கமோ, அரசியல்வாதியோ, போலீஸோ, ஆட்சி பீடமோ யாருடைய தலை யீடும் இல்லாம இருக்கிறதுக்காகத்தான் மேல் நாடுகள்ல ஃபாரின்ஸிக் இலாகாவை பல் கலைக் கழகத்துடன் இணைந்த ஆய்வுக் கூட மாக வைச்சிருக்காங்க. போலீஸ் இலாகாவுல மட்டுமின்றி, குற்றம் சுமத்தப்பட்டிருப்பவர் சார்பிலே வாதாடற வக்கீல் கூட ஆய்வுப் பணிகளைக் கொடுத்து ரிஸல்ட் வாங்கிப் போவாங்க. ரெண்டு தரப்புக்கும் நடுநிலையா தடய ஆய்வுத் துறை இயங்கும்."

"தனியார்துறைல கூட உண்டு இல்லியா?"

"ஆமாம். அவங்களிடமும் போலீஸ் ஆலோ சனை கேட்கும்; ஆய்வு அறிக்கை கோரும். இங்கதான் எல்லாம் தலைகீழா நடக்குது."

"போகட்டும்; நம்ம விஷயத்துக்கு வா. நான் ஒரு பொட்டலம் தந்தேன். பிரிச்சுப் பார்த் தியா? என்ன தெரிஞ்சுது...?"

"டி.என். ஏங்கறது மனிதனுக்கு மனிதன் வேறுபடும். இரட்டைக் குழந்தைகளுக்குக் கூட

டி.என்.ஏ. மாறுபடும். ஒரே முட்டையிலிருந்து உருவான இரட்டைக் குழந்தைகள் என்றால் மட்டுமே டி.என்.ஏ. ஒரே மாதிரி இருக்கும். அதாவது குரோமோசோம்...."

"இத பாரு, நீ மூணு வருஷம் பி.எஸ்ஸி முடிச்சு, ரெண்டு வருஷம் எம்.எஸ்ஸி ஃபாரின்ஸிக் ஸைன்ஸ் படிச்சு, இப்ப பிஹெச்.டி ஆராய்ச்சி கூட பண்ணறேங்கறது எனக்கு ஏற்கெனவே தெரியும்...."

"அதனால, 'விஞ்ஞான விவரங்களை விட்டுட்டு விஷயத்துக்கு வா; என்ன கண்டு பிடிச்சே, சொல்லு'ங்கறே, அதானே?"

"அதே! உன் ஆராய்ச்சிகளையெல்லாம் சொல்லி அறுக்காதே!"

"ஓகே! கேட்டுக்க. விரல் ரேகை அடையாளங்கள் எடுத்திருக்கேன். ஆனா அதை ஒப்பிட்டுப் பார்க்கணும்னா இவன் ஏற்கெனவே குற்றவாளியா இருந்து, இவன் விரல் ரேகை அடையாளங்கள் போலீஸ் ஃபைல்ல இருக்கணும். அப்படி இருந்தாலும் அதுங்கிட்ட நெருங்க முடியாது. 'ஏன், எதுக்கு' என்கிற கேள்விகள் எழும். 'சி.பி.ஐ.ல கேட்கிறாங்க'ன்னா ஒத்துழைப்பு கிடைக்காது."

"சரி, நான் சீஃப்கிட்ட பேசி, அஃபிஷியல் அப்ரோச்சுக்கு முயற்சி பண்றேன். ஃபிங்கர் பிரிண்ட் செக்ஷன்ல யார் இன்சார்ஜ்னு பார்க்கறேன். மேலே...?"

"போதைப் பொருள்கள் தடுப்புக்கு இருக்கிற மாதிரி குண்டுவெடிக்கிற குண்டர்களுக்கும் தனியா ஒரு பிரிவையே உருவாக்கணும்; அப்பத்தான் இவங்களோட ஜாதகமெல்லாம் சேகரிக்க முடியும். சொல்லிச் சொல்லி அலுத்துப் போச்சு; செவிடன் காதுல ஊதின சங்கு...."

"இல்லாததைப் பற்றி எதுக்குப் புலம்பறே? என்ன தகவல் கிடைச்சுது, அதைச் சொல்லேன்!"

"கேட்டுக்கிட்டு ஓடிடுவே. அப்புறம் உங்கிட்ட சற்று நேரமாவது எப்படி பேசுறது? அதுக்காகத்தான் இல்லாததையும் பொல்லாததையும் இழுக்கிறது" என்று கூறியபடியே வந்த ஆதிமூலம், காப்பி கோப்பைகளைத் தட்டுடன் தரையில் வைத்து விட்டுத் திரும்பினார்.

அவர் உண்மையை விண்டு உரைக்க, இருவருமே மறைத்து வைக்கப்பட்ட மன உணர்வுகள் காட்சிப் பொருள் ஆனதாய் உணர்ந்தார்கள். ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ளவும் கூசி, வேறு பக்கம் நோக்கினார்கள். மாமரத்துக் குயில் தன் மாலை நேரத்துச் சோக கீதத்தை ஆரம்பித்தது. திரும்பத் திரும்ப ஒரே பல்லவியைத் தொண்டை கட்டும் வரை பாடித் தீர்த்தது.

அவள் புடைவைத் தலைப்பால் கண்ணீரைத் துடைத்துக் கொள்வதைக் கவனியாதவன் போல அவன் காப்பியை ருசித்தான். மௌனமாக காப்பி அருந்தி முடியும் வரை காத்திருந்து, "சரி, குறிச்சுக்க" என்றாள்.

"ஒண்ணு : அவன் தொழிலாளி. மம்மட்டியோ அல்லது சுத்தியலோ புடிச்சு வேலை செய்து காய்ச்சிப் போன விரல்கள். ரெண்டு : அவன் பயன்படுத்தியது நவீன ஆர்.டி.எக்ஸ். இல்லே. சாதா ஜெலடின்தான். இரண்டுக்கும் என்ன வித்தியாசம்னு சொல்ல ஆரம்பிச்சா மறுபடி 'போர் அடிக்குது'ன்னு சண்டைக்கு வருவே. சுருக்கமா ஆர்.டி.எக்ஸ். தனு உபயோகிச்சது; ராஜீவை அமரராக்கியது. ஜெலடின்றது சாதாரணமா குவாரியிலே உபயோகப் படுத்தறது. டைனமட்னும் சொல்லுவாங்க. பாறைகளைப் பெயர்க்க ஃபியூஸ் வைச்சு வெடிப்பாங்க. இவன் குவாரியிலே கல்லுடைச்சவனா இருக்கலாம். அங்கிருந்து ஜெலடின் ஸ்டிக்ஸ் திருடிட்டு வந்திருக்கலாம். ஃபியூஸ் வைச்சானோ, டெடனேட்டர் பயன்படுத்தினானோ, அனுபவம் போதாமல் தப்பு செய்துட்டான். அவன் எதிர்பார்த்ததை விட சீக்கிரமா வெடிச்சு, சிதற அடிச்சுடுச்சு. பயிற்சி கொடுத்தவன் சரியா சொல்லித் தரலை, அல்லது அலட்சியம். ஏதோ ஒண்ணு. மனித உயிருக்கு மரியாதை இல்லே."

"நீ சொல்றது பொருந்தி வருது. அவனோட இன்னொருத்தன் வந்திருந்தான். பென்ஜமின். ராட்சசன்."

"மூணு : கரத்திலே பழைய காயத்தோட வடு ஏதுமில்லே. மோதிரம், மருதாணிக் கறைன்னு ஒண்ணும் காணோம். அதனால இதையெல்லாம் தொடர்புபடுத்திப் பார்க்க முடியாது. ஆனா, கருகிய நிலையிலும் கெமிகல் பயன்படுத்திப் பார்த்தா, பச்சை குத்தின இடம் ஒண்ணு இலேசா தெரியுது..."

இன்பா ஆர்வமானான். முன்னுக்குச் சாய்ந்து "சொல்லு! சொல்லு!" என்று அவசரப்படுத்தினான்.

(தொடரும்)



விலைவாசி உயர்வும், ரிஸர்வ் வங்கி கவர்னர் பதவியும் முடிச்சுப் போடப்பட்டுள்ள ஒரு நாடு உள்ளதென்றால் ஆச்சர்யமாக இருக்கிறதா? நியூஸிலாந்து நாடுதான் அது.

விலைவாசி உயர்வு ஒரு குறிப்பிட்ட அளவைத் தாண்டி விட்டால், அந்த கவர்னர் தாமாகவே பதவியை விட்டு விட வேண்டும் என்று ஒரு சட்டம் உள்ளது.

தகவல் : A. சுந்தரம்

இருட்டு அரண்மனைகள்

7

'**து**ண்டிக்கப்பட்ட கரத்தில், பச்சை குத்தப்பட்ட சின்னம் கிளாவர் வடிவம்' என்று அனுபமா கூறக் கேட்ட வினாடியிலிருந்து இன்பசாகரனின் கம்ப்யூட்டர் மூளை அதன் பல்வேறு பரிமாணங்களையும் அலச ஆரம்பித்து விட்டது.

அது ரொம்பப் பிரபலமான சின்னம். சூரியா சுவாமியின் சாந்தி ஆசிரமத்துக்கு உரியது. உதகையின் சந்தடியை விட்டு விலகி, மலைப் பாதையில் எட்டு, பத்து கிலோ மீட்டர் சென்றால் அந்த ஆசிரமம் இருப்பதாக அவனுக்குத் தெரியும். ஆனால் போனதில்லை. இப்போது போக வேண்டிய தருணம் நெருங்குகிறதா?

மேலதிகாரியிடம் பேசிய போது "இடிக்குதே" என்றார்.

"என்ன சார்?"

"கிளாவர் சின்னத்தின் தாத்பர்யம் தெரியுமா?"

"மும்மதமும் சம்மதம். – அதாவது இந்துமதம், இஸ்லாம், கிறிஸ்துவ மதம் எல்லாம் ஒரே இறுதி லட்சியத்துக்குத்தான் பாதை வகுக்கின்றன. கிளாவரின் மூன்று வட்டங்களும் மூன்று மதங்களைக் குறிக்கும். இங்கே இவைதானே பிரதானம்..."

"அது மட்டுமில்லே. மனம், வாக்கு, காயம் என்ற மூன்று அம்சங்களும் தூய்மை என்ற அடிப்படையில் செயல்பட வேண்டும். கீழே ஒரு பீடம் இருக்கு பாரு கிளாவர்ல, அது தூய்மை; அதுக்கு மேலே மற்றது."

"நீங்க போயிருக்கீங்களா சார்?"

"ஓ! பிரமாதமான இடம். குருஜி எனக்கு தங்குவதற்கு ஒரு காட்டேஜ் தந்தார். ஃபைவ் ஸ்டார் வசதி கெட்டுது!"

"எப்ப போனீங்க சார்?"

"நாலைஞ்சு வருஷம் இருக்கும். உள்ள நுழையற கேட்டுக்கு மேலே வரவேற்பு வளைவிலேயே லைட் புளூ கலர்ல கிளாவர் சின்னம் எடுப்பா தெரியும். குருஜிக்கு நீலம்தான் பிடிக்கும். ஆகாயம் நீலம், கடல் நீலம், கடவுள் நீலம் அப்படின்னுவாரு."

"ரொம்பப் பெரிய தத்துவமா இருக்கே ஸார்!"

"என்னய்யா கிண்டலா? இங்க இருந்துட்டு இப்படித்தான் பேசுவே. ஒரு தடவை நேரில் பார்த்துட்டா அவர்தான் தெய்வம்னுவே."

"அது சந்தேகம்தான் சார். ஆனா அவர் குடியிருக்கிற இடம் தெய்வீக அழகு வாய்ந்ததுன்னு ஒப்புக்கறதுல சங்கடம் இல்லே."

"ஐயோ! அதை ஏன் கேக்கறே! கேட்டைத் தாண்டி உள்ளே நுழைஞ்சா மலைச் சரிவுகள்ல பேரி, செர்ரி, பிளம், ஆப்பிள் மரங்களின் தோப்புங்க. இடையிடையே சலசலன்னு இறங்கி ஓடும் ஓடைங்க. அங்கங்க குடிசைகள் மாதிரி தங்கறதுக்கு வசதியான காட்டேஜுகள். பிரதான ஆசிரம கட்டட வாசல்ல ரோஜா தோட்டம். அதுக்கு மத்தியில கிளாவர் வடிவத்துல செயற்கைக் குளம். அதில அளவா ஐந்தாறு நீலோத்பலங்கள்..."

"குருஜி எப்படி ஸார்?"

"எவனாவது செக்ஸ் சாமியாரை நினைச்சுக்கிட்டு ஒப்பிட்டுப் பார்த்து குழப்பிக்காதே! நெருப்பு! கிட்ட நெருங்கினா நம்ம பாபங்களைப் பொசுக்கும்; கெட்ட எண்ணங்களை சாம்பலாக்கும்! காவி உடுத்தறதில்லே. லைட் ப்ளூ பைஜாமா, குர்தாதான். ரொம்ப சிம்பிள். கழுத்துல தொங்கற நீளமான பெரிய ருத்திராட்ச மாலைதான் அவரை மத்தவங்களிடமிருந்து வித்யாசப்படுத்திக் காட்டும். அஃப்கோர்ஸ், முகத்துல இருக்கிற தேஜஸ்..."

கி.ராஜேந்திரன்

"உங்களுக்கு ரொம்ப ஈடுபாடுன்னு தெரியுது."

"எனக்கு மட்டுமென்ன? அவரைக் கடவுளாவே மதிக்கிற எத்தனையோ பேர் இருக்காங்க. அதுனால நான் 'சரண்டர்' ஆயிட்டதா நினைக்காதே. ஏதும் தப்பு நடக்குதுன்னு தெரிஞ்சா பாயத் தயாராயிருக்கேன். ஆனா, பொய்த் தகவல், அல்லது கற்பனைகளை நம்பி ஏதும் நடவடிக்கை எடுத்தே, தொலைஞ்சோம்!"

"ஏன் சார்? சபிச்சுடுவாரா?"

"அவர் ஏன் சபிக்கிறார்? அன்புமயமான வராச்சே! கருணையே கடவுள்னு உருகுவாரே."

"பின்னே?"

"உனக்கு எல்லாம் விண்டு சொல்லணும். பெரிய இடத்து கனெக்ஷன்பா. எத்தனை மந்திரிங்க, தொழிலதிபருங்க, அவர் காலடில விழுந்து கிடக்கிறாங்க தெரியுமா?"

"போலீஸ் அதிகாரிங்க, சி.பி.ஐ.யைச் சேர்ந்தவங்களை விட்டுட்டீங்களே சார்."

"உனக்கு எல்லாமே கிண்டலாத்தான் இருக்கு."

"அதோட டவுட்டாவும் இருக்கு. எதையும் சந்தேகக் கண்ணோட பார்க்கத்தானே நமக்கு பயிற்சி கொடுத்திருக்காங்க."

"டெக்ஸ்ட் புக் சமாசாரமெல்லாம் வாழ்க்கைக்கு சரிப்பட்டு வராது."

"போய் ஒரு நோட்டம் விட்டுட்டு வந்தா என்ன?"

"வரி செலுத்தறவன் தயவுல ஊட்டில ஒரு ஹாலிடேக்கு வழி பண்ணிக்கறே. தம்பதியா போறீங்களா, இல்லே 'தம்'மை விட்டுட்டு பதி மட்டும் போகுதா?"

"பெண்டாட்டியை அழைச்சுப் போனாலும் அவ செலவை நானே ஏத்துக்கறேன் சார்."

"யோசிச்சுப் பாரு; மதங்களிடையே நல்லிணக்கமே உயர்நோக்கமாகக் கொண்ட சூரியா சுவாமி, மனம், வாக்கு, காயம் ஆகியவற்றில் தூய்மையை வற்புறுத்தும் குருஜி, எதுக்காக மதத் துவேஷத்தை யாரோ வளர்ப்பது போல நாடகம் நடத்தணும்? அகில பாரத ஹிந்து பரிவார் கட்டடத்துக்கு குண்டுவைக்க ஏன் ரகசிய ஏற்பாடு செய்யணும்?"

"பரிவார்காரங்க மதத் தீவிரவாதிகள் சார். இந்து ராஜ்யம்னு பேசறவங்க."

"ஆனா பிற மதங்களை வெறுக்கிறவங்களும் இல்லே."

"அப்படித்தானே சார் சொல்லிக்க முடியும்? இவங்களுக்கு அரசியல் நோக்கம் இருக்கு. சூர்யா சுவாமிக்கு அரசியல் தலைவர்களிடம் செல்வாக்கு இருக்கு..."

"அதனால...?"

"இவங்க பிரபலமடையறது அவருக்குப் பிடிக்காம இருக்கலாம்; இவங்களோட வளர்ச்சி ஆபத்தானதுன்னு அவர் நினைக்கலாம்."

"யாருக்கு ஆபத்து?"

"சமுதாய ஒற்றுமைக்கு; ஏன், சூர்யா சுவாமிக்கே கூட!"

ஸீனியர் பெருமூச்சு விட்டார். "ஊட்டி டிரிப் அடிக்கிறதுக்கு இதெல்லாம் காரணம் இல்லே; எதுவுமே சரியா பொருந்தலேன்றது உனக்கே தெரியும். 'மனசுக்குள்ளே என்னமோ குடையுது; பக்ஷி சொல்லுது'ன்னு டிராவல் பர்மிஷன் கேட்க முடியாது. அதுக்காக என்னென்னமோ அடுக்கறே."

"இந்தத் தடவை நீங்க ஜெயிச்சுட்டீங்க ஸார்" என்றான் இன்பசாகரன்.

'எப்பவுமே நான்தான்யா ஜெயிப்பேன்' என்று மேலதிகாரி கூறவில்லை. அவர் தர்க்கம் புரிவதெல்லாம் பல்வேறு கோணங்களையும் அலசிப் பார்க்க வேண்டும் என்பதற்காகவே. 'இன்று தர்க்கத்தில் ஜெயிக்கலாம்; நாளை கிடைக்கக்கூடிய சாட்சியம் நமது வாதத்தைத் தகர்க்கலாம்' என்பதை அறிந்தவர் அவர்.


இந்தத் தொழிலில் தோல்விகளை அடிக்கடி சந்திக்க நேரிடும் என்பதை இன்பசாகரனும் புரிந்து கொண்டிருந்தான். ஒரு துப்பு கிடைக்கும். அதைத் தொடர்ந்து செயல்பட, ஏமாற்றமே மிஞ்சும். சந்தேகத்தின் பேரில் ஒரு நபரைக் கேள்வி மேல் கேள்வி கேட்டுக் குடையும் போது, அந்தக் கேஸில் நடந்தது என்ன என்பதாக நாம் உருவாக்கி வைத்துள்ள ஒரு 'தியரி'க்கு சாதகமாக ஒரு விஷயம் கூட கிட்டாமல் போகும். ஆனாலும், சோர்வடையாமல் தொடர்ந்து செயல்பட வேண்டும். புதிய கோணங்களில் சிந்தித்து, புதிய பாதை வகுத்துச் செல்லத் தயங்கக் கூடாது...



"நீதான் மூக்கும் முழியுமா இருக்கியே... கொத்திண்டு போயிடமாட்டானா."

—கே.ஜி.மூர்த்தி

ரஸியாவிடமிருந்து ஃபோன் வந்த போது அவளை சந்தித்து பல



நாட்கள் ஆகி விட்டன என்ற நினைவு தோன்றியது.

"எனக்கு பயமா இருக்கு ஸார்" என்ற அவள் குரலில் நடுக்கம் இருந்தது. "யாரோ என்னை ஃபாலோ பண்ணிட்டே இருக்காங்க."

"அது நாங்க ஏற்பாடு பண்ணின சி.ஐ.டி. யாத்தான் இருக்கும்."

"இல்லே சார், இந்த ஆளு வேற. விவரமா பேசணும். வீட்டுக்கு வரவா, இல்லே ஆபீஸுக்கா?"

"உன்னை யாரோ ஃபாலோ பண்றாங் கன்னா, நீ என்னை சந்திக்க வரது உனக்கு ஆபத்தா முடியக்கூடும்."

"அப்ப பொது இடத்திலே சந்திப்போம். மியூஸியம் வாசல்ல டைனசார் சிலை இருக் குல்ல, அங்க காத்திருக்கேன்."

"எங்கேயிருந்து பேசறே?"

"நான் என்ன, ஸெல்லுலார் ஃபோனா வைச் சிருக்கேன்? பி.ஸி.ஓ.தான். பாக்கெட் மணில ஒரு ரூபாய் அவுட்."

"இயல்பா நடந்துக்க; வீட்டுக்குப் போக பஸ் ஏறு..."

"இடையில ஆட்டோ நிற்கிற ஸ்டாண்ட் ஒண்ணுல இறங்கி, சரேல்னு ஆட்டோவுக்குத்

தாவி, மியூஸியம் வாசலுக்கு வந்து சேர்றேன்!''

சற்று தொலைவிலேயே யமாஹா நிறுத்தி, யாரும் பின்தொடரவில்லை என்று நோட்டம் பார்த்துக் கொண்டு, பிரும்மாண்ட ஜுராஸிக் பார்க் நாயகனை நெருங்கினான். காத்திருந் தான். கடிகாரம் பார்த்தான்.

சிலையைச் சுற்றி வந்து அவன் கண்ணில் படாமல் ஒளிந்திருந்தவள், 'திடும்'மென்று தோன்றி, புன்னகையில் கன்னங்கள் குவிய வேர்க்கடலைப் பொட்டலம் நீட்டினாள். "ஐஸ் கிரீம் வாங்கித் தர அளவுக்கு துட்டில்லை சார். கொஞ்ச நஞ்சம் பாக்கியிருந்த பாக்கெட் மணியையும் ஆட்டோக்காரனுக்கு அழுதாச்சு. காந்தி தாத்தா டிபன்தான்.''

அந்தக்கணமே அவனுக்குப் புரிந்து போயிற்று : 'ஏமாற்றி விட்டாள்.'

"ரஸியா இது என்ன விளையாட்டு?''

"நீங்களா வரக் காணும்; அதனால ஃபோன் பண்ணி வரவழைச்சேன்.''

"எதுக்கு நான் வரணும்?''

''என்ன இப்படி கேட்டுட்டீங்க? ஒரு பெண்ணை ஆபத்துல சிக்க வைத்து விட்டு, அப்புறம் எட்டிப் பார்க்காமலேயே இருப்பதா? உங்க கடமையை நினைவூட்டினேன்.''

அவன் நெடுமூச்சு விட்டு தலையசைத் தான். "நாட்டி கேர்ல்!''

"எனக்கு பஜ்ஜின்னா ரொம்பப் பிடிக்கும், சார்!''

அடக்க முடியாமல் சிரித்து, எதிரே இருந்த ஓட்டலுக்கு அழைத்துப் போனான். "ஒரு பிளேட் வெங்காய பஜ்ஜி, போர்ன்விடா, காப்பி.''

பஜ்ஜியில் பளபளத்த எண்ணெயைப் பார்த்து விட்டு, "அளவா சாப்பிடு; நாளைக்கு ஏதும் உடம்புக்கு வந்தா என்னைத் திட் டாதே!'' என்றான்.

''அப்ப ஷேர் பண்ணிக்குங்க'' என்று எச்சில் தட்டை மையத்துக்கு நகர்த்தினாள்.

"ரஸியா கொஞ்சம் சீரியஸா நடந்துக்க. என்னை இங்கே வரவழைச்சதுல என் நேரத்தை வீணடிச்சது மட்டுமில்லே; உன்னையும் என்னையும் ஆபத்துக்கு உள்ளாக்கியிருக்கே.''

"அதுலதான் த்ரில்! நெஞ்சை தொட்டுச் சொல்லுங்க; என்னைப் பார்க்கணும்கிற ஆசை உங்களுக்கு எழவே இல்லையா?''

'இல்லை' என்று பொய் சொல்ல அவன் மனம் ஒப்பவில்லை. ஆனால் அவளைப் பற்றிய கவலை உணர்வுதான் அதில் அதிகம் என்பதை விளக்கினான்.

"அப்படி எண்ணி உங்களை நீங்களே ஏமாத் திக்கிறீங்க; உண்மையை சந்திக்க பயப்படுறீங்க!''

"ரஸியா! இது என்ன அபத்தமான பேச்சு? நான் கல்யாணமானவன்.''

''அதனால? கல்யாணமானால் காதல் தோன்றாதா?''

"இது நீ படிச்சிருக்கிற மில்ஸ் அண்டு பூன் புத்தகங்களிலே வர டயலாக்.''

''அதையெல்லாம் எதுக்கு ஸார் படிக்கணும்? உங்க கண்களைப் படிச்சாலே போதுமே! என்னைப் பார்த்ததுமே அதுல தோன்றிய பிரகாசம்.. சந்தோஷம்...''

"ரஸியா! நீ டூ மச்சா போறே... அடிக்கடி என்னை அதிர்ச்சிக்கு உள்ளாக்கறே... எனக்குக் காலாகாலத்துல குழந்தை பிறந்திருந்தா அதுக்கு உன் வயசிலே பாதி இருக்கும்.''

"அப்ப குழந்தை இல்லையா? ஐ ஆம் ஸோ ஸாரி ஸார். உங்க மனசை புண்படுத்திட் டேன்'' என்று மேஜை மீது இருந்த அவன் கரத்தை இடது உள்ளங்கையால் பொத்தினாள். குரலில் மகிழ்ச்சிதான் கொப்பளித்தது.

கரத்தை மெல்ல விடுவித்துக் கொண்டு காப்பி உறிஞ்சினான்.

"டைவோர்ஸ் பற்றி எப்பவாவது யோசிச் சிருக்கீங்களா ஸார்?''

''பஜ்ஜி சாப்பிட்டாச்சா? போகலாமா?'' என்றான்.

சட்டென்று அவள் கண்கள் குளமாயின. "தப்பா பேசிட்டேனா ஸார்? என் நாக்கை அறுத்து எறியணும். எப்பவுமே எனக்கு வாயாடின்னுதான் பேரு.''

"நல்ல பேர் வாங்கினா அதைக் காப்பாத் திக்க முயற்சி செய்யணும். கெட்ட பேர் வாங்கினா அதை மாற்றிக்க முயற்சி எடுக்கணும்.''

அவள் கை உதறி விட்டு எழுந்தாள். ''வரேன் சார்'' என்று கூறி, வாஷ்பேசின் அருகே இரு வினாடிகள் நின்று, வாசலுக்கு விரைந்தாள்.

அவசரமாக பில் பெற முடியாததால் கல்லாவில் இருபது ரூபாய் வைத்து விட்டு படி இறங்கிய போது, அவள் நடைபாதையில் வெகு தூரம் போய் விட்டிருந்தாள். நிலையின் மேல் உத்தரத்தைப் பற்றியபடி சரக்கு மாஸ்டர் எட்டிப் பார்த்து விட்டு, கல்லாவில் இருந்தவனை நோக்கிக் கண்ணடிக்க, இன்பா அவளைப் பின்தொடர்ந்து ஓடினான்.

எட்டிப் பிடித்து, நிறுத்திய போது அவள் சுலபமாகத் திரும்பி அவன் நெஞ்சில் முகம் புதைத்து விம்மினாள். "நான் தப்பு பண்றேன்னு எனக்கே தெரியுது ஸார். ஆனா தவிர்க்க முடியாம தவிக்கிறேன்'' என்று கேவலுக்கிடையே அவள் கூற, நடுத்தெரு என்பதையும் மறந்து, அனு தாபத்துடன் அவள் முதுகைத் தடவினான்.

மியூஸியம் சுற்றுச் சுவரின் உட்பக்கத்தி லிருந்து டெலிலென்ஸ் நீளமாக எட்டிப் பார்த் தது. காமிரா கிளிக்கிற்று. ரஸியாவும் இன்பா வும் நடுத்தெருவில் ஒருவரை ஒருவர் அணைத்த படி நிற்கும் காட்சி கோடாக் வண்ணத்தில் பதிவாகியது.

(தொடரும்)

உதகை பயணம் பற்றி சாயாவிடம் பேச்சு எடுத்த போது, "திடுதிப்புன்னு சொன்னா எப்படி? லீவு போடாம, பர்மிஷன் கேட்காம ஓடிட முடியுமா? வேணும்னா உங்க பிள்ளையைக் கூட்டிட்டுப் போங்க. நாலு நாள் நான் நிம்மதியாய் இருக்கேன்," என்றாள்.

இதைத்தான் எதிர்பார்த்தான். சின்னியை அழைத்துப் போவது அவனுக்கும் சம்மதமாயிருந்தது. விஷயத்தைச் சொன்னதுமே, பெட்டி 'பாக்' பண்ணி ஸ்மார்ட்டாக டிரெஸ் செய்து கொண்டு புறப்பட்டு விட்டான். அவனுக்கு மிகவும் நேசமான மலைப்பகுதிகளுக்கு மறுபடி போவது கண்களில் ஒளியை வரவழைத்து.

"டிக்கெட் கிடைக்குமா? ஒவ்வொருத்தர் பத்துப் பதினைந்து நாள் முன்னதாகவே புக் பண்ணுறாங்களே!"

"ஈ.க்யூன்னு ஒண்ணு எதுக்கு இருக்கு?" என்று கேட்டு கட்டில் மேல் இருந்த பெட்டியில் பேண்ட் ஷர்ட்களை அடுக்கினான். சாயா, ஸ்வெட்டர் எடுத்துத் தந்தாள். "ஈ.க்யூன்னா?"

"எமர்ஜென்சி கோட்டா. ஏதாவது அவசரம் ஆபத்துக்குப் பயன்படுத்த ஏற்பட்ட ஒதுக்கீடு."

"இப்ப என்ன எமெர்ஜென்ஸி?" என்று பயந்தாள்.

"ஆபத்து இல்லே. அவசரம்னு வைச்சுக் கோயேன்."

நம்பிக்கை இன்றி அவனிடம் ஒண்டிக் கொண்டாள். "இப்படித்தான் சொல்வீங்க, ஆபத்தை விலைக்கு வாங்குவீங்க" என்று கழுத்தைச் சுற்றி வளைத்தாள். எட்டுவதற்கு அவள் எம்ப வேண்டியிருந்தது. "ஜாக்கிரதை" என்று விசும்பினாள்.

அவனுக்கு ரஸியாவின் நினைவு வந்தது. "அட்டே எதுக்கு இப்படி அழறே? தைரியமா இரு, மனசு எப்பவும் அறிவின் கட்டுப்பாட்டிலேயே இருக்கணும்" என்று அவளிடம் சொன்னதையே சாயாவிடமும் கூறினான்.

பெட்டி சுமந்து ஹாலுக்கு வந்த போது, "சொல்லிண்டு கிளம்பறது" என்றார் மூன்றாவது பெட்ரூமிலிருந்து எட்டிப் பார்த்த அப்பா.

"உங்க கிட்டே அதிக நேரம் செலவழிக்க முடியறதில்லை. அதுக்காக நீங்க ஏங்கறது எனக்குத் தெரியும். என்ன பண்றது, என் தொழில் அப்படி" என்றான்.

"போடா, இடியட்! எனக்கு ஒண்ணும் அப்படியெல்லாம் குறை கிடையாது. நீங்க சௌக்கியமா, சந்தோஷமா இருக்கணும்கிறது தான் முக்கியம்."

"சமாதானத்துக்குச் சொல்றீங்க. இருக்கட்டும். என் உத்யோகம் தொடர்பா உங்க கிட்ட மனசு விட்டுப் பேசினா எனக்கே நல்லது. உங்களிடம்தான் நம்பிக்கையா பேச முடியும். தெளிவு பிறக்கும்."

"இப்ப போயிட்டு வா. அப்புறமா உனக்கு டைம் கிடைக்கறச்சே பேசலாம், சின்னி ஜாக்கிரதை."

"வரேம்மா, வரேன் தாத்தா!" என்றான் சின்னி. பிரியமாக முத்தமிட்டான். எல்லோருக்கும் ஆச்சர்யமாயிருந்தது. மலைகள் அவனை மானசீகமாக வரவேற்றுக் கொண்டிருந்தன. அவன் மனமெல்லாம் மகிழ்ச்சியில் திளைத்துக் கொண்டிருந்தது என்பது அவர்களுக்குத் தெரியாது.

இருட்டு அரண்மனைகள்

கி. ராஜேந்திரன்

மேலதிகாரி மயில் வாகனன் வர்ணித்திருந்ததை விடவும் ஆசிரமம் அழகாயிருந்தது. சூரிய ஒளி மரங்களின் முனைகளில் வடிகட்டப்பட்டு இறங்கி, பச்சை இலைகளுக்குப் பொன் முலாம் பூசின. சூரிய ஒளி விட்டு விட்டு உடலில் பட்டபோது, ஒத்தடம் தருவது போல குளிருக்கு இதமாய் இருந்தது. பேரி மரங்கள் புஷ்பிக்கிற பருவம். அந்தப் பசுமை மீது நட்சத்திர மண்டலம் காதல் கொண்டு, உல்லாசமாய் உறவாட இறங்கி விட்டிருந்தன. ஆசிரமத்துக்கு வந்த பிறகும் காதல் உவமையே தனக்குத் தோன்றுவது பற்றி இன்பசாகரன் சிரித்துக் கொண்டான். 'ஆனால் பிளம், செர்ரி, பேரி இவற்றை



யெல்லாம் காதலியின் அவயவங்களுக்கு அன்றி வேறு எதற்கு ஒப்பிட முடியும்? கவிஞர்கள் அப்படி நம்மைப் பழக்கி விட்டார்கள்.'

பிற்பகல் சுமார் நாலு மணி அளவில் சூரியனின் உஷ்ணம் இன்னமும் கதகதப்பாக உணர முடிந்த சமயத்தில், சூரியாசுவாமி ஆசிரமத்தின் பிரதான கட்டடத்தின் முன்னே மேடையில் வந்து அமர்ந்தார். பக்தர்களின் மரியாதைகளை ஏற்றுக் கொண்டார்.

சுமார் நாற்பது ஐம்பது பேர் எதிரே நாற்காலிகளில் அமர்ந்திருந்தார்கள். எத்தனை பேர் வருகிறார்களோ அந்த அளவுக்கு மட்டுமே நாற்காலிகள் போடப்படுவதைப் புரிந்து கொண்டான் இன்பா. சிறிய கூட்டமாயினும் பரவாயில்லை; காலி நாற்காலிகள் இருக்கக் கூடாது! நல்ல மனோதத்துவம்.

"நமது இதிகாசங்களுக்கு ஈடாக உலகில் ஏதுமே கிடையாது. அதிலும் ராமாயணம் சகல மக்களுக்கும் வழிகாட்டி. வழிகாட்டுவதற்காக தெய்வமே மனித உருக் கொண்டு வந்தது. ராமாவதாரத்தின் முக்கியமான நோக்கம் என்ன? ராவண சம்ஹாரம். அதை சர்வவல்லமை படைத்த கடவுள் கடவுளாகவே இருந்து சாதிக்க முடியாதா? ஏன் மனுஷ அவதாரம் எடுக்க வேண்டும்? ராவணன், தேவர், அசுரர், கின்னரர் கிம்புருஷர் போன்ற யாராலும் தனக்கு அழிவு கிடையாது என்று வரம் பெற்றிருந்தான். ஆனால் மமதை காரணமாக மனிதனை அதில் சேர்த்துக் கொள்ளவில்லை. அலட்சியப்படுத்தினான். அதனால் பகவான் மானுடனாக அவதரித்து, அவனை அழிக்க வந்தார் என்பது கதை. கதையை நாம் குறை சொல்ல வேண்டாம். பாமர மக்களுக்குக் கதைதான் எடுபடும். ஆனால் யோசித்துப் பாருங்கள். அண்ட சராசரமெல்லாம் ஆட்டிப் படைக்கிற சர்வ வல்லமை பொருந்திய கடவுளுக்கு ராவணசம்ஹாரம் ஒரு பெரிய விஷயமா?

"இல்லை... அவர் மனித அவதாரம் எடுத்ததற்கு அது காரணமில்லை. நம்மைப் போன்ற மனிதர்களுக்கு எடுத்துக் காட்டாகத் திகழ வேண்டும் என்பதற்காகத்தான் ராமாவதாரம். ராமபிரானின் ஒவ்வொரு சொல்லும் செயலும் நமது வாழ்க்கையை சீராக அமைத்துக் கொள்ள வழி காட்டுகிறது...."

அவர் பேச்சு அவனுக்குப் பிடித்திருந்தது. வெறும் கதையாக இல்லாமல் தத்துவமாக நிறையச் சொன்னார். ஆங்கில, சம்ஸ்கிருத இலக்கியங்களிலிருந்து மேற்கோள்கள் காட்டினார். சின்னிக்குத்தான் போர் அடித்தது. இரண்டு மூன்று தடவை அவன் எழுந்து போக முற்பட்ட போது, அவன் கையைப் பிடித்து இழுத்து உட்கார்த்தி வைக்க வேண்டியிருந்தது.

உபந்நியாசம் முடிந்ததும் பிரசாதம் கொடுத்தார். சூடாக நெய்யில் மிதந்த வெண்

பொங்கல். தொன்னையில் முந்திரிப் பருப்பும் மிளகும் எட்டிப் பார்த்தன. படு ருசி. கை கழுவி கர்சிப்பால் துடைத்துக் கொண்டு திரும்பினான்.

மேடையை நெருங்கி, "கொஞ்சம் பேசணுமே" என்றான்.

"பேசணுமா, விசாரிக்கணுமா?" என்றார்.

துணுக்குற்று அவர் முகத்தை ஏறிட்டான். புன்னகை பூத்தார். "எப்படி ஊகித்தேன்? அதிகார தோரணை காட்டிக் கொடுக்கிறது. ஆசிரமத்துக்கு வந்தாலும் ஆணவம் போக மாட்டேனென்கிறது."

"பழக்க தோஷம்" என்றான்.

"காட்டேஜ் வசதியா இருக்கா?"

"ரொம்ப."

"பையனை அனுப்பிவிடு. விளையாடிட்டு வரட்டும். நாம உள்ளே போகலாம், வா. குளிர் அதிகமாயிட்டிருக்கு."

குழந்தைகளுக்கு என்று ஏற்பட்டிருந்த சிறிய பூங்காவில் அவனை விளையாட விட்டான். "கொஞ்ச நேரம் விளையாடிட்டு காட்டேஜுக்குப் போயிடு. நான் சுவாமிகளிடம் பேசிட்டு வரேன்."

பிரதான ஆசிரமக் கட்டடம் அரண்மனை மாதிரி இருந்தது. சுவாமி உள்ளே நுழைந்ததும் மின் விளக்குகள் ஒளிர்ந்தன. வோல்ட்டேஜ் கம்மியாக இருந்தபோதிலும் விளக்குகளின் எண்ணிக்கையாலும் அவை பொருத்தப்பட்டிருந்த சூட்சுமமான இடங்களாலும் கூடம் பிரகாசமாய்த் தெரிந்தது.

ராமாயணக் காட்சிகள் பல அற்புதமான 'மியூரல்'களாக சுவரில் சித்திரிக்கப்பட்டிருந்தன. அவற்றைப் பார்க்கவே பலர் வந்தார்கள். அமைதியாகவும் பக்தியாகவும் மிருதுவாகப் பேசி நடந்தார்கள்.

சூரியா சுவாமி அவனைத் தனி அறைக்கு அழைத்துப் போனார். சின்ன அறை. திண்டு மெத்தையுடன் கூடிய வசதியான பீடத்தில் அமர்ந்தார். தரையில் கம்பளம் விரித்திருந்தது. சுத்தமாயிருந்தது. பணியாளை அழைத்து நாற்காலி போடச் சொன்னார்.

"வேண்டாம்" என்று தரையில் உட்கார்ந்தான். "ஆணவம் அழியட்டுமே!"

"மனசிலிருந்து அழியணும்" என்று கூறி புன்னகை புரிந்தார்.

"உபதேசம் பண்ணறவங்களுக்கே அழியக் காணுமே" என்றான்.

அவர் நெற்றி சுருங்க, "குற்றம் சாட்டுகிறாயா?"

"இல்லை சந்தேகத்தை வெளியிடுகிறேன். மனிதன் உள்ளத்திலிருந்து ஆணவம் அழிந்து போனால் குண்டுகள் ஏன் வெடிக்கின்றன? அகில பாரத ஹிந்து பரிவார் கட்டடம் ஏன் தகர்க்கப்படுகிறது? இந்த ஆசிரமத்தின் ஒரு பணியாளன் ஏன் அநியாயத்துக்கு உயிரை விடுகிறான்?"

"ஏகப்பட்ட கேள்விகளை ஒரே சமயத்தில் எழுப்புகிறாய்" என்றார் புன்சிரிப்பு மாறாமல்.

"ஒன்றுக் கொன்று தொடர்புள்ள கேள்விகள்தானே?"


"இந்த ஆசிரமத்தில் எம்மதமும் சம்மதம் என்பதுதான் அடிப்படை நோக்கம். உனக்குத் தெரிந்திருக்கும். இன்று ராமயணம் பற்றிப் பேசினால் நாளைக்கு திருக்குரான் பற்றியும் அடுத்த நாள் பைபிள் பற்றியும் பேசுவேன். கிறிஸ்துவர்கள், முஸ்லிம்கள் சிலர் மதம் மாற்றுகிறார்களே என்றால் அது அவர்கள் மத தர்மம். நம்முடைய ஹிந்து மத தர்மம் இறைவன் ஒருவனே என்கிறது. எந்த மார்க்கத்தைப் பின்பற்றினாலும் அவனை அடையலாம் என்கிறது. நம்முடைய தர்மத்தை நாம் கடைப்பிடித்தால் போதும். இந்து மதத்துக்கு ஒரு ஆபத்தும் வராது. பயப்பட வேண்டாம்."

"உங்க உபந்நியாசத்தை நான் வெளியே கேட்டு ரசிச்சேன். இங்க மறுபடியும் அதைக் கேட்க வரலை."

"இது உபந்நியாசமில்லே நாட்டு நடப்பு. இந்தக் கருத்தைப் புரிந்து கொள்ளாததால்தான் இந்துமத தீவிரவாதிகள் தோன்றுகிறார்கள். அவர்களை எதிர்க்க பிற மதங்களிலும் அடிப்படை வாதம் பிறக்கிறது. குண்டு வெடிக்கிறது. நானும் பேப்பரில் படிச்சேன், வருத்தப்பட்டேன். வேறென்ன சொல்ல?"

"ஏற்கெனவே கேட்டேனே. இந்த ஆசிரமத்தைச் சேர்ந்த ஒரு பணியாள் அந்த குண்டு வெடிப்பு சம்பவத்தில் ஏன் உயிர் பலியானான்?"

"குண்டு வைத்தவர்கள் இருவர் என்றும் ஒருவன் தப்பிவிட இன்னொருவன் உருத் தெரியாமல் அழிந்து போனான் என்றும் செய்திகள்



"ரஜினி கட்சி ஆரம்பிச்சா வெற்றி நிச்சயம்!"

"எப்படி சொல்றீங்க...?"

"அவருக்கு ஒரு வோட்டு விழுந்தா நூறு வோட்டு விழுந்த மாதிரி!"

— த. சந்திரசேகரன்



"ஆகாயத்தில் அடிக்கடி விமானம் பறக்கணும்!"

"சே! தமிழன் தலை நிமிர என்ன வழின்னு உங்களிடம் போய் கேட்டேன் பாருங்க!"

— உ. ராஜாஜி

வந்திருந்தன."

"அப்படி அழிந்து போனவனின் ஒரு கை மட்டும் சிதறி எதிர் வீட்டு மொட்டை மாடியில் விழுந்து கிடந்தது. அதிலே இந்த ஆசிரமத்தின் சின்னம் பச்சை குத்தப்பட்டிருப்பது தெரிந்தது."

"உடனே ரயிலேறி இங்கே வந்துட்டாயாக்கும்!"

"வேறே எங்கே போவது?"

சூரியாசுவாமி பெருமூச்சு வெளிப்படுத்தினார். "தமிழக போலீஸ் இவ்வளவு தரம் தாழ்ந்து போகணுமா? ஐ.டி. கார்டு இருக்கா?"

எடுத்துக் காட்டினான்.

"ஓ! சி.பி.ஐ. அப்ப இன்னும் கொஞ்சம் சாமர்த்தியமா நடந்துக்கலாமே?"

"எப்படி?"

"அதை நீதான் முடிவு பண்ணணும். ஆனா உன்னோட தர்க்க வாதத்துல இருக்கிற ஓட்டைகளை மட்டும் சொல்றேன். முதலாவது எம்.ஜி.ஆர். மாதிரி பச்சை குத்திக் கொள்ளுங்கன்னு நான் இங்க யாருக்கும் உத்தரவு போட்டது கிடையாது. சுற்றி வந்து விசாரி, எல்லாரையும் கையை நீட்டச் சொல்லிப் பாரு. இரண்டாவது, பச்சை குத்திக் கொள்ள ஆசைப்படறவங்களுக்கு மிக பிரபலமான சின்னங்கள் சீட்டுக்கட்டில் உள்ள ஆடுதன், கிளாவர் போன்றவை தாம். நானே பிரபலமான எளிய சின்னமா இருக்கணும்னுதான் அதைத் தேர்ந்தெடுத்தேன். ஆடுதன்ல ஒரு அம்பு பாயற மாதிரி பச்சை குத்திக் கொள்றது ரொம்ப சகஜம். அப்புறம் கிளாவர். எளிய மக்களுக்கு அரசியல் கலப்பு இல்லாத சின்னங்கள்னா சீட்டுக்கட்டு சின்னங்கள்தான் முதல்ல ஞாபகம் வரும். அதனால இந்த ஆசிரமத்தைச் சேர்ந்தவங்கதான் கிளாவர் சின்னத்தைப் பச்சை குத்திக் கொள்ளணும்கிற அவசியமில்லே. மூன்றாவது அந்த ஆளுக்கு ஒரு கூட்டாளி இருந்தான்னு செய்தி. அவன் எப்படி இருந்தான்? இப்ப அவன் எங்கே? அவனைத் தேடிக் கண்டுபிடி! கேஸ் முடிஞ்சுடும். ஃபைல் குளோஸ் பண்ணலாம்."

"அவனோட 'ஸ்கெட்ச்' இருக்கு. ஆனா அவனை எங்கேன்னு போய்த் தேடறது" என்று சொல்லும்போதே, "அதற்குத்தான் சம்பளம் வாங்குகிறாய்" என்று சூர்யாசுவாமி முகத்தில் அடிக்கக் கூடும் என்று உணர்ந்தான்.

ஆனால் அப்படி அவர் கூறவில்லை. "எனக்கு தியானத்துக்கு நேரமாகி விட்டது" என்று எழுந்தார்.

இந்தத் தொழிலில் தோல்விகள் சகஜம். தோல்விப் படிகளின் மீது ஏறித்தான் வெற்றியை அடைய முடியும் என்பது அவன் அறியாதது அல்ல. ஆனாலும் தர்ம சங்கடமாயிருந்தது.

"எனக்கு நேரம் ஒதுக்கியதற்கு நன்றி" என்றான்.

"என் நேரமெல்லாம் மக்கள் பணிக்கு. அவர்களுக்கு உதவிய நேரம் போக மீதம் உள்ளது பிரார்த்தனைக்கு, தியானத்துக்கு. அதுவும் மக்கள் நலனுக்காகத்தான்."

"நான் வரேன்" என்றான்.

"என்ன அவசரம்? இரண்டு நாள் இருந்து போ. குண்டலினி சக்தி அது இது என்று சொல்லி உன்னை பயமுறுத்த நான் விரும்பலை. பத்மாசனத்தில் இருந்து கண்ணை மூடு. புருவங்களுக்கு மத்தியில் 'ஓம்' எழுது. அதையே தியானம் பண்ணு. உள்ளத்தில் ஒரு பிரகாசம் உண்டாகும். அறிவு கூர்மை பெறும். வெற்றி பெறுவாய்."

ஆசி வழங்கும் பாவனையாக கை உயர்த்தினார். உள் கதவு திறந்து போய்விட்டார்.

தனித்து அந்தச் சிறிய அறையில் விடப்பட்டவனை ஒரு வெறுமை ஆட்கொண்டது. அது சீக்கிரமே, தான் இங்கே வந்து சேரக் காரணமான அனுபமா மீது கோபமாக மாறியது. இயலாமையின் விளைவான ஆத்திரம் என்று உள்ளுணர்வு சொன்ன போதிலும் அதை ஒதுக்கினான். 'அவள்தான், அவளால்தான்' என்று திரும்பத் திரும்பக் கூறிக் கொண்டு அதையே நம்பினான்.

காட்டேஜுக்குப் போன போது அவன் மனம் போலவே இருண்டு கிடந்தது. "சின்னி! சின்னி!" என்று அழைத்தான். விளக்குப் போட்டுத் தேடினான். அவனை விட்டு வந்த, குழந்தைகள் விளையாடுமிடத்துக்கு ஓடினான்.

ஒரே ஒரு மெர்குரி விளக்கு மங்கலாக ஒளி பரப்ப, சறுக்கு மரமும் ஸீ-ஸாவும் கேட்பாரின்றிக் கிடந்தன.

(தொடரும்)

இருட்டு அரண்மனைகள்

கி. ராஜேந்திரன்

9

சின்னிக்கு 'போர்' அடித்தது. 'நான் என்ன குழந்தையா? ஸீ-ஸாவும் சறுக்கு மரமும் விளையாட?' என்று நினைத்துக் கொண்டே நடந்தான். அரண்மனை போன்ற பிரதான கட்டடத்துக்குப் பக்கவாட்டில் பேரி தோப்பு வழியே சென்ற பாதையில் கால்கள் அழைத்துப் போக, மீன் குழம்பு வாசனை நாசிகளைத் தாக்கியது.

அதனால் கவரப்பட்டுச் சென்றவனை உயரமான இன்னொரு கட்டடம் எதிர் கொண்டது. நகர்ப்புறங்களில் பிரபலமாகி விட்ட ஃபிளாட் ஸிஸ்டம் போல நாலு அடுக்குகளில் பன்னிரண்டோ, பதினாறோ குடியிருப்புகள். அவற்றுள் ஒன்றிலிருந்துதான் கமகம!

தொழிலாளர்களுக்கான குடியிருப்பு. சூரியா சுவாமி, ஆசிரமத்தின் கட்டடங்களிலும் சுற்றிலுமுள்ள தோட்டம் தோப்புகளிலும் பணி புரிபவர்களை நன்றாகத்தான் வைத்துக் கொண்டிருக்கிறார். "வா தம்பி" என்றது ஒரு முதிய வரின் குரல். "காட்டேஜுக்கு வழி காட்டணுமா?"

"வேண்டாம்" என்று தலையசைத்தான். "சும்மாதான் சுத்தி பார்த்துக்கிட்டிருக்கேன்."

"தனியாவா வந்திருக்கே?"

"இல்லே, அப்பாவோட. அவர் குருஜி கிட்ட பேசிட்டிருக்காரு. பொழுது போலே... ஏரி மீனா?"

"பின்ன, இங்க கடல் மீன் ஏது?"

"வாசனைலயே வித்தியாசம் தெரியுது."

"சாப்பிட்டுப் போகலாம்."

எளியோருக்கே உரிய பண்பாடு உபசரித்தது. "ஏ புள்ளே, சோறு ரெடியா?"

"அஞ்சு நிமிட்ல தயாராயிடும்."

"குருஜி கூட அசைவமா?"

"பேசப்படாது! நாங்க கூட மட்டன், கோழி தொடறதில்லே. மீன் மட்டும். அதுவும் எப்பனாச்சும் ஒருக்கா... உள்ள வா, உட்காரு."

தயங்கினான். "அப்பா தேடிட்டு வருவாரு."

"அவரும் சாப்பிடலாம். சூர்யாசாமி கருணைல சோறுக்குப் பஞ்சமில்லே."

"அப்பாவுக்கு இதெல்லாம் பிடிக்காது. நான் கை நனைச்சதா தெரிஞ்சா என்னையும் திட்டுவாரு."

"அப்பவே நினைச்சேன், ஆளைப் பார்த்தா நம்ம முகமா இருக்கு; ஆடையைப் பார்த்தா வித்தியாசமா தோணுதேன்னு."

"வளர்ப்பு மகன்."

"இப்பல்லாம், பெத்ததைவிட வளர்ப்புகளுக்குத்தான் யோகம், வா. ஏதோ ஆசைப்பட்டுட்டே. சாப்பிடு. சீக்கிரம் கிளம்பிடலாம், அப்பா வரத்துக்குள்ளே."

வெட்டினான். சூடாக... சுவையாக... ஏப்பம் கால் கிலோ மீட்டருக்கு நீண்டது. 'அப்பா நிச்சயம் மோப்பம் பிடித்து விடுவார்' என்று நினைத்தான்.

வாசலில் குரல் கேட்டது; "ஏம்பா இந்தப் பக்கம் சின்னின்ற பையன் ஒருத்தன் வந்தானா?"

சின்னியைத் தேடி இன்பசாகரன் புறப்பட்ட போது இருள் கவிந்து, வானத்து நட்சத்திரங்கள் சமவெளியை விடவும் இன்னும் பக்கத்தில் இருப்பது போல் பிரகாசமாகத் தோன்றின. தோப்பில் பேரிகள் செழித்து வளர வசதியாக இடை இடையே நிறைய இடம் விட்டு நட்டிருந்ததால் வானச் சுடர்களின் ஒளி, வழி காட்டப் போதுமானதாய் இருந்தது. 'எங்கே போய்விடப் போகிறான்? இந்தப் பக்கம்தான் எங்கேயாவது திரிந்து கொண்டிருப்பான்' என்று பதைப்பை அடக்கிக் கொண்டு நடந்தான். 'விபரீதமாக ஒன்றும் நேர்ந்திருக்காது....'

வெகு சீக்கிரமே அவனுக்கும் மீன் வாடை முகத்தில் அறைந்தது. 'ஒருவனுக்கு வாசனை, இன்னொருவனுக்கு துர்நாற்றம்' என்று எண்ணியவாறு கைக்குட்டையால் மூக்கை மூடிக் கொண்டு ஊழியர் குடியிருப்பை

நெருங்கி விசாரித்தான்.

சின்னி நாடகமாடத் தயாரானான்.

"வாங்கப்பா. பென்ஜமின் பற்றிதான் விசாரிச்சிட்டிருந்தேன்."

'படவா ராஸ்கல்' என்று மனசுக்குள் அவனைத் திட்டிய இன்பசாகரன், "இன்னும் கொஞ்ச நாள் போனால் என் சம்பளத்துல பங்கு கேட்பே போலிருக்கே" என்று கூறிய படியே, பென்ஜமினின் கம்ப்யூட்டர் பட பிரிண்ட்-அவுட் ஒன்று எடுத்து கிழவன் பக்கம் நீட்டினான்.

"கம்ப்யூட்டர் படம் கண்றாவி, அப்பா. நீங்க போட்ட படம்தான் கரெக்டா பென்ஜமினை போட்டோ பிடிச்ச மாதிரி அமைஞ்சிருக்கு."

"என்னடா ஐஸ் வைக்கிறியா?"

"சேச்சே! ஊட்டில ஏற்கெனவே ரொம்ப குளிர். ஐஸே கிடைக்காது; வியாபாரமாகாது" என்ற சின்னி, தான் மடித்து பத்திரப்படுத்தியிருந்த வண்ணப்படத்தை எடுத்துக் காட்டினான்.

"கோவிந்தா! முருகேசு! ஆன்டொணி! காத்த வாப்பா!" என்று எல்லா குடியிருப்புகளிலுமிருந்த எல்லா குடும்பத் தலைவர்களுக்கும் ரிலே ரேஸ் போல தகவல் அனுப்பினான் மேஸ்திரி கிழவன்.

எல்லாரும் வந்தார்கள்: பார்த்தார்கள். தலையசைத்து "தெரியாது" என்றார்கள். "சாமியைப் பார்க்க தினம் தினம் எத்தனையோ அயல் நாட்டுக்காரங்க வராங்க; நாங்க யாருன்னு கண்டோம்?"

"இவன் ஃபாரின் ஆளுன்னு நினைக்கிறீங்களா?"

"பார்த்தா அப்படித்தானே தெரியுது? வெளுப்பான முகம், நீலக்கண், ரிப்பன் கட்டின தலைமுடி. காதுல வளையம்...." எல்லாரும் இன்னொரு தடவை பார்த்தார்கள். மீண்டும் ஒரு முறை தலையசைத்து விட்டுப் போய்ச் சேர்ந்தார்கள்.

இன்பசாகரன் விடைபெற முற்பட்ட போது ஏதோ நினைத்துக் கொண்டவன் போல கிழவன் படத்தை மறுபடியும் வாங்கிப் பார்த்தான்.



"என்ன மேஸ்திரி, ஏதாச்சும் ஞாபகம் வருதா?"

"உம்... ஒரே ஒரு தடவை இங்க பங்களா வாசல்லதான் பார்த்த மாதிரி தோணுது. காரை விட்டு இறங்கி உள்ளே போனான். எனக்கு டியூட்டி நேரம் முடிஞ்சு வீடு திரும்பிட்டேன். முருகேசு சொன்னாப்பல எத்தனையோ பேர் சாமியை தரிசிக்க வராங்க; தனிச்சு பேசணும்னு கேட்டுக்கறாங்க; தங்கள் கஷ்டத்தைச் சொல்லி ஆசி வாங்கிட்டுப் போறாங்க. எல்லாரையும் ஞாபகம் வைச்சுக்க முடியுமா? இது கூட நான் பார்த்த ஆள்தானா இல்லையான்னு

சந்தேகமாத்தான் இருக்கு.”

‘எல்லாரும் ஒரே மாதிரி பேசுகிறார்கள்’ என்று எண்ணினான். ‘ஏன் சூரியாசுவாமியே பட்த்தைப் பார்த்துவிட்டு ஏறத்தாழ இப்படித் தானே சொன்னார்.’

உள்ளேயிருந்து ஒரு பெண் வந்து அவனுக்கு டீ வைத்து விட்டுப் போனாள். ஆவி பறந்தது. “நம்ம வீட்ல சாப்பிட மாட்டீங்க; டீயாவது குடிங்க.”

“பொண்ணா?”

“இல்லீங்க, மருமக.”

“பையன் எங்கே?”

“ஊருக்குப் போயிருக்கான். சாமிதான் அனுப்பியிருக்காரு. பச்மாரின்னு ஒரு இட மாமே. அங்கே ஒரு ஆசிரமம் கட்டுறாராம். தோட்டம் போட அனுப்பியிருக்காரு. திரும்பி வர ஆறேழு மாசம் ஆகும்.”

“உன் மகன் கைல பச்சை குத்தியிருக்கானா?”

‘எதுக்கு இந்த கேள்வி?’ என்பது போல் பார்த்தான் கிழவன். “ஊகும். நமக்கு அதெல் லாம் பிடிக்காதுங்க” என்றான்.

“ஆமாங்க” என்றாள் பாப்பாயி உள்ளே இருந்து எட்டிப்பார்த்து. “எப்பவுமே நாங்க உதய சூரியனுக்குத்தான் வோட்டுப் போடறது.”

மறுநாள் பகல் போதில் சுற்றி வந்த போது ஆசிரமத்தின் பிரதான கட்டடம் மேட்டிலே அமைந்திருப்பது தெரிந்தது. பின்புறம் சரிவில் இரண்டு அடுக்கு மாடி இருந்தது. ஆக மொத் தம் மூன்று அடுக்கு என்றாலும் முன்புறம் மூன் றாம் தளம் மட்டுமே கோபுர பாணியில் கம்பீரத் தோற்றம் தந்தது.

மழைக்காலத்தில் பின்புற வாசல் பயன் படும் என்றும் இரண்டாம் மாடியின் பெரிய கூடத்தில் பிரார்த்தனை, பஜனைகள் நடக்கும் என்றும் சொன்னார்கள். அடித்தளம் கிடங் காகப் பயன்பட்டு வந்தது. ஆசிரமத்துக்கு சொந்தமான நிலங்களில் பயிராகும் உருளை, பீன்ஸ், பேரி, ஆப்பிள் முதலானவை மார்க் கெட்டுக்குப் போகுமுன்னர் அங்கே குவிக்கப் படும். இன்னும் உர மூட்டைகள், கிழங்கு விதைகள் போன்றவை.

ஆசிரமத்தில் தங்குவதற்குப் பணம் வாங்குவதில்லை என்றாலும் அதன் நற்பணி களுக்கு நன்கொடை தரலாம். சுற்று வட்டார கிராமங்களில் நிறைய சமூக சேவை நடக்கிறது. இன்பாவும் ஐநூறு தந்து ரசீது பெற்றான். அத்துடன் போக வர செலவு சேர்த்து ஸ்டேட்மெண்ட் தயாரித்தான். மேலதிகாரியை சந்தித்து கையெழுத்துக்கு நீட்டிய போது கடு கடுத்தார்.

“செலவு எல்லாம் தாராளமா பண்ணறே. என்ன சாதிச்சே?”

“ஒண்ணுமில்லே... இதுவரை....” என்று ஒப்புக் கொண்டான்.

“என்ன அப்படி சொல்லிட்டே, காதல் லீலைகளிலே கின்னஸ் சாதனையே நிகழ்த்தப் போறேன்னு எதிர் பார்த்திட்டிருக்கேன்” என்று கூறி, ஒரு பெரிய காகித உறையை டிராயரிலிருந்து எடுத்து வழ வழ மேஜை மேல் போட்டார். வழுக்கித் திறந்து கொண்ட அதனுள்ளிருந்து 10 X 8 என்லார்ஜ்மெண்டில் வண்ணப்படங்கள் எட்டிப் பார்த்தன.

ரஸியா அவனிடம் ஒண்டிக் கொண்டது; அழுத அவளை அணைத்து அவன் ஆறுதலாக முதுகு தடவியது; அவள் பிரிந்து சென்றது; மறுபடி ஓடி வந்து கழுத்தைக் கட்டிக் கொண் டது... சினிமா காட்சி போல அடுத்தடுத்த ஃபிரேம்களில்....

“லவ் பண்றதுதான் பண்றே, அதுக்கு ஒரு விவஸ்தை வேணாம்? இப்படியா நட்ட நடு வீதியில் டெமான்ஸ்ட்ரேட் பண்ணி தெரு வோட போறவங்க வரவங்களுக்கெல்லாம் பாடம் நடத்தறது?”

“ஸார்! அறியாத பொண்ணு ஸார், பாவம்.”

“யாருக்கு காது குத்தறே? குட்டிக்குதிரை யாட்டம் நிக்குது; சமைஞ்சு ரெண்டு வருஷமா வது ஆகியிருக்கும்.”

“அசிங்கமா பேசாதீங்க. மலர்ந்தும் மலராத

பருவம். வாழ்க்கை புரிஞ்சும் புரியாத மர்மம். அவளுக்கு எல்லாமே நிலவில் குளிப்பது போலத் தோணுது."

"என்னய்யா பழைய கண்ணதாசன் பாட்டெல்லாம் எடுத்து வுடறே? லேட்டஸ்ட் ஏதும் தெரியாதா?"

"யாரோ அயோக்கியப் பசங்க...." என்று கூறியபடியே புகைப்படங்களைக் கிழிக்கப் போனான்.

"நில்லு! நில்லு! படங்கள் எனக்கு வந்திருக்கு" என்று தடுத்தார். மேஜை மீது விட்டெறிந்தான்.

"இதைக் கிழிச்சுட்டா ஆச்சா? நெகடிவ் வைச்சிருக்கானே? உன் பெண்டாட்டி ஸ்கூல் அட்ரஸுக்கு ஒரு செட் அனுப்பவான்னு கேட்டிருக்கானே? இந்தப் பொண்ணு ரஸியாவோட பெற்றோருக்கும் அனுப்பித் தொலைப்பானே? விஷயம் பத்திரிகைகள்ல வரதுக்கு முன்னாடி நாம மேலிடத்துக்கு ரிப்போர்ட் அனுப்பிடறதுதான் நல்லது."

"செய்யுங்க. நாம எதையும் ஒளிச்சு வைச்சதா டில்லி நினைக்க வேண்டாம். ஆனா அவங்க நிலைமைய சரியா புரிஞ்சுக்கப் பண்ணுங்க. இந்த ஆளு யாராயிருந்தாலும் அவன் இப்படி என்னை பிளாக்மெய்ல் பண்றதிலிருந்தே அவன் என்கிட்ட பயப்படறான்னு தெரியுது. அவனை நான் நெருங்கிக் கிட்டு இருக்கிறதா நினைக்கிறான். இதுதான் நம்ம பலம்."

"நிழல் யுத்தம் நடத்திக்கிட்டே இருக்கே. கண்ணுக்குத் தெரியாதவன் முன்னே கையை மடக்கி பாறை போல மஸில்ஸ் காட்டுறே. என்ன பிரயோஜனம்?"

"நமக்கு அவனைத் தெரியாட்டாலும் அவனுக்கு நம்மைத் தெரியுதே ஸார்! நான் இந்தக் கேஸிலிருந்து விலகணும்னு எதிர்பார்க்கிறான். அதுக்கு பதிலா அவனை மேலும் நெருக்கினா பதற்றமடைஞ்சு மேலும் தப்பு பண்ணுவான். தன்னைத்தானே காட்டிக் கொடுப்பான்."

முறைத்தார். "இன்னும் ஒரு சான்ஸ் தரேன். மறுபடி இப்படி ஏதும் அசம்பாவிதம் நடந்தா, கேஸிலிருந்து உன்னை நீக்கி மணிரத்னத்துக்கிட்டே இன்வெஸ்டிகேஷனை ஒப்படைச்சுடுவேன்" என்றார்.

வெறுப்புடன் வெளியேறினான்.. 'எல்லாம் அனுபமாவால் வந்த வினை. ஊட்டிக்கு என்னை அனுப்பி டிபார்ட்மெண்டுக்கு செலவு வைக்காமலாவது இருந்திருக்கலாம்' என்று அவள் மீது கோபம் வந்தது.

மொட்டை மாடியிலிருந்து பார்த்த போது அவள் வீட்டின் தோட்டத்தில் தென்னை மரத்தில் தலை கீழாக நின்று வாலாட்டி 'கீச் கீச்' என்று சத்தமிட்ட அணில் கூட தன்னைப் பார்த்து கேலி செய்வது போல்தான் இன்பாவுக்குத் தோன்றியது.

"தண்டத்துக்கு என்னை அலைக்கழித்தாய்" என்று குற்றம் சாட்டிய போது அனுபமா சிரித்தாள்.

"நான் தப்பு செய்யலாம், ஆனா விஞ்ஞானம் தப்பு செய்யாது. துப்பு துலக்கும் சாமர்த்தியம் உனக்குப் பத்தலேன்னா அதுக்காக விஞ்ஞானத்தைப் பழிக்காதே" என்றாள்.

"நான் விஞ்ஞானத்தைக் குறை சொல்லலே. உன்னைத்தான். என்னைப் பழி வாங்கக் காத்திருந்து இப்படி செய்துட்டே!"

"பழிவாங்கறதா? எதுக்கு?"

"உன் காதலை நான் ஏற்காததற்கு. மஹாபலிபுரம் ரூட்ல அந்த ஹாலிடே ரிஸார்ட்ல உன்னிடம் நான் முறை தவறி நடந்துக்கிட்டதுக்கு...."

அவள் மறுபடி சிரித்தாள். "அதற்குப் பழி வாங்கறதுன்னா இது மாதிரி சின்ன தண்டனையெல்லாம் போதாது."

"வேற?"

"இன்னொருத்தனை நான் காலிச்சா போதும். பொறாமையில வெந்து போயிடுவே!"

அது உண்மை என்று உணர்ந்ததாலேயே அவனுக்கு ஆத்திரம் அதிகரித்தது. "நல்லா காதலி! உன்னிடம் பரிசோதனைக்கு வந்து சேரும் பிரேதங்களில் ஒன்றை வேணுமானாலும் கல்யாணம் கட்டிக்க! என்னை மறந்து தொலை! நிம்மதியா வாழ விடு!"

"மனசைப் புண்படுத்தறதுக்கும் ஒரு அளவு இருக்கு. பிரேதங்களோட பழக நேர்ந்ததாலேயே நான் உணர்ச்சியற்ற ஜடமாயிருப்பேன்னு நினைக்காதே."

தான் அளவு மீறி கடுமையாகப் பேசியதை எண்ணி வருந்தினான். அவளை ஏறிட்டுப் பார்க்கக் கூசி திரும்பிய போது கீழே ஒரு செம்பருத்திச் செடி, ரோஸ் நிறத்தில் இரட்டை மலர்களுடன் மாலைக் கதிரவனின் அரவணைப்பில் நாணம் கொண்டு கன்னம் சிவந்த காதலி போல் காட்சியளித்தது.

அவள் வலக்கரம் அவன் வலது தோளில் பதிந்தது. சிரம் முதுகில் சாய்ந்தது. "இத பாரு இன்பா, உனக்கு என் உடலைத் தந்துதான் என் காதலை நிரூபிக்கணும்னா, அதுக்கும் இப்ப, இத்தனை ஆண்டுகள் கழித்து, நான் தயாராயிருக்கேன்" என்றாள்.


(தொடரும்)

லார்ட் செஸ்டர் ஃபீல்டிடம் ஒருவர், "கடவுளின் படைப்பில் மனிதன் ஒருவன்தான் சிரிக்கும் தன்மை பெற்றிருக்கிறான்" என்றார்.

"உண்மைதான்; சிரிப்புக்கு உள்ளாகிறவனும் அவன்தானே!"

— இது செஸ்டர் பீல்டின் பதில்.

'சிரித்து மகிழுங்கள்' நூலிலிருந்து : **எஸ். எஸ். பூங்கதிர்**



கல்கி

தீபாவளி மலர் '95



• ராதா கல்யாண உத்ஸவம் (வண்ணப்படம் : யோகா)

கண்ணனின் கம்பீரமும்
ராதையின் ரம்மியமும்
இணைந்த கலைப் படைப்பு


விலை ரூ. **45/-**

உள்ளூர் ஏஜெண்டிடம் பதிவு செய்து கொள்ளுங்கள்.
அல்லது பதிவுத் தபாலில் பெற ரூ 60/- அனுப்ப வேண்டும்.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் : வி. முரளி, பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் : கி. ராஜேந்திரன். ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; சந்தா, விளம்பரம் : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் : ரூ. 525/-

நான்காவது பெண்கள் மாநாட்டை ஒட்டி பிரிட்டிஷ் கௌன்சில் நடத்திய, மௌனக் குரல் நாடகம் வீரியமாகவே அரங்கேறியது...





புதுமைப் பெண்களின் மௌனக் குரல்!

பெண்களை இதுவரை புராணங்களிலும் பழங்கதைகளிலும் ஒடுக்கியும் ஒதுக்கியுமே வைத்த போது அவர்கள் குரல்கள் அன்று யாருக்கும் கேட்கவில்லை. ஆனால் இந்த இருபதாம் நூற்றாண்டில், அடக்கி வைக்கப்பட்ட குரல்கள் ஒலிக்கும் போது, அவை சொல்லும் செய்திகள் என்னவாக இருக்கும்?

டாக்டர் வி. பத்மா என்கிற 'மங்கை', தன் கற்பனையில் இரு பாத்திரங்களை மட்டும் உருவாக்கி, அவர்களின் மௌனக் குரலை ஒலிக்கச் செய்திருக்கிறார்.

குறவஞ்சி இலக்கியத்தை அடிப்படையாக வைத்திருப்பதால், குறவன் – குறத்தியும் இதில் உண்டு. தன்னிடம் குறிசொல்லக் கேட்கும் பெண்களை, 'நீ சீதை போல் வாழ்வாய்!' என்றும், 'நீ திரௌபதி மாதிரி வாழ்வாய்!' என்றும் குறத்தி சொல்கிற போது, அவர்கள் அன்றைய ஆணாதிக்க உலகில் எப்படிக் கொடுமைக்கு உள்ளானார்கள் என்ற சினத்தில் இவர்கள் சீற, குறத்தி விளக்குகிறாள்.

ராமன் மனம் மாறி, மறுபடி சீதையை அழைக்கிற போது, தன் சுயகௌரவம் காத்து, 'மண்ணையே அடைந்தாள் – அவள் தாயையே அணைந்தாள்' என்கிறாள் குறத்தி.

'பலிகடா ஆன பின்னும் தன் பழி தீர்த்தாள் பாஞ்சாலி' என்று திரௌபதியின் வெற்றியை எடுத்துச் சொல்லுகிறாள் குறத்தி.

அந்தப் பெண்களின் சீறல்களில் பலருக்கும் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் சம்பிரதாய நாட்டிய அமைப்பைக் கொஞ்சம் ஓரமாக ஒதுக்கி வைத்து, கூத்துப்பட்டறை பாணியில், பாடி மூவ்மென்ட்டுக்கு முக்கியத்துவம் கொடுத்து இந்த நடன – நாடகத்தை வடிவமைத்த இளைஞர் சத்தியஜித்துக்கு, அம்மா சாந்தா தனஞ்செயன் கன்னத்தில் செல்லமாகக் கொடுத்த முத்தம், நியாயமான பாராட்டு!

கலாக்ஷேத்திரா நாடகங்களில் ஊறிய தனஞ்செயனுக்கு இது ஒரு சவாலாக இருந்திருக்குமோ என்னவோ. ஆனால் பிரிட்டிஷ் கௌன்சிலும் ரசிகர்களும் தம் மீது வைத்த நம்பிக்கையைப் பொய்த்துப் போகாமல் காப்பாற்றியிருக்கிறார் தனஞ்செயன்.

நிகழ்ச்சியின் இன்னொரு முக்கிய அம்சம், திரை இசை அமைப்பாளர் வி. எஸ். நரசிம்மனின் இசை. அவரது வயலின் துல்லியமாய் ஸ்டீரியோபோனிக்கில் ஒலித்தது. நடேஷின் அரங்க அமைப்பும், ஒளியமைப்பும் நாடகத்தின் பெரிய ப்ளஸ் பாயின்ட்டுகள். இத்தனை மென்மையைச் சமீபத்தில் வேறு எந்த மேடையிலும் பார்த்ததில்லை.

தமிழ்நாட்டின் வேறு நகரங்களில் உள்ளவர்களும் இதைப் பார்க்க வாய்ப்புத் தர வேண்டும்.

– சாருகேசி

புகைப்படங்கள் : **சத்யஜித்**

10

இருட்டு அரண்மனைகள்

சில தினங்கள் சென்று தருமமிகு சென்னை மாநகரில் மீண்டும் ஒரு குண்டு வெடித்தது. இந்த முறை அதிலே ஓர் அங்கத நகைச்சுவை இருந்தது. போலீஸ் டி.ஐ.ஜி. மருதகாசி வீட்டிலே வெடித்தது என்பதுதான் அசல் குண்டை விடவும் பெரிய குண்டு! வீட்டின் வாசல் பக்கம் சில பகுதிகள் தகர்ந்து, சிமிண்டும் காரையும் உதிர்ந்தன.

ஃபோன் மூலம் செய்தி தெரியவந்ததும் இன்பசாகரன் அடக்கமாட்டாமல் சிரித்து விட்டான்.

மறுமுனையில், "சிரிக்கிற விஷயமாய்யா இது?" என்று கேட்டார் மேலதிகாரி மயில்வாகனம். "நல்லவேளை உயிர்ச் தேசம் ஏதும் இல்லாமல் போச்சேன்னு நான் பெருமூச்சு விட்டுக்கிட்டிருக்கேன்."

"போலீஸோட இமேஜுக்குத்தான் ஸார் பலத்த சேதம்!"

"அடப்பாவி! அதுக்காகவா சிரிக்கிறே? அப்படி மருதகாசிகிட்டே சொல்லி வைக்காதே! 'சி.பி.ஐ. மட்டும் என்ன வாழ்ந்துது'ன்னு திருப்பிக் கேட்பான். இன்னும் தீர்க்கப்படாமல் இருக்கும் கேஸ்களை அடுக்குவான்."

"அவங்க ஒத்துழைச்சாத்தானே ஸார்? இந்த கேஸையே எடுத்துக்குங்க. எவ்வளவோ முன்னேறியிருக்கலாம். அவங்களும் செய்ய மாட்டாங்க, நம்மையும் செய்ய விட மாட்டாங்க."

"தெரிஞ்ச கதைதானே. எதிர்ப்புகள், தடைகளை மீறி வெற்றி பெறுவதில்தான் பெருமை."

"ஸ்பாட்டுக்குப் போய் பார்த்துட்டு வரலாம் ஸார். மருதகாசியிடம் காப்பி டிபன் கேட்போம்."

"பச்சைத் தண்ணி கூட தர மாட்டான். அவன் சாதா தண்ணியே குடிக்கிறதில்லே. கார்ப்பரேஷன் தண்ணியை நம்ப முடியாது; எல்லாவித கிருமிகளுக்கும் அடைக்கலம் தருவதே அதுதான் என்பான்."

"அப்ப மினரல் வாட்டரா?"

"வீட்டிலே பிரமாத பார் வைச்சிருக்கான்யா. எல்லா வெரைட்டியும் உண்டு. காக்டெய்ல் ஸ்பெஷலிஸ்ட்."

"இந்தக் காலை நேரத்தில் கூடவா?"

"அதனாலதான் இப்ப நான் வரலை. நீ போயிட்டு வா. காப்பி ஆசாமி."

"ஓ.கே." கூறிவிட்டு குளிக்கச் சென்றான். அனுபமா தன் மீது வீசிய குண்டு இதைவிட



கி. ராஜேந்திரன்

வும் பயங்கரமானது. ஆர்.டி.எக்ஸ் என்று நினைத்தான். இதயத்தைப் பிளந்து காயப்படுத்தியது. என்ன சொன்னாள்? 'இந்த உடலை உங்களுக்குக் காணிக்கை ஆக்குவதன் முலம்தான் என் காதலை நிரூபிக்க முடியும் என்றால் அதற்கும் இப்போது நான் தயார்' என்றாள் அல்லவா!

அவனுக்கு சப்தநாடியும் ஒடுங்கிப் போனது. பதில் கூற அவன் வார்த்தைகளைத் தேடுவதற்குள் ஆவணி மாதத்துக் கருமேகங்கள் உதவிக்குத் திரண்டு வந்தன. திடுமென்று ஓர் இடி இடித்தது. "வா, உள்ளே போகலாம்" என்று கையைப் பற்றி அழைத்துக் கொண்டு மொட்டை மாடியிலிருந்து வாசலுக்கு மாடிப் படி பக்கம் வருவதற்குள் சடசடவென்று பெய்த மழை சட்டையை ஊடுருவி நனைத்து விட்டது.

'ஒருவேளை அவள் காதலை ஏற்றுக் கொண்டு அவளையே கல்யாணம் செய்து கொண்டிருந்தால் வாழ்க்கை நிம்மதியாய் இருந்திருக்குமோ? தவறு செய்து விட்டோமோ?' என்று இப்போது நினைத்த போது ஷவரின் ஜில் தண்ணீர் முள்ளாக இறங்க, உடல் சில்லிட்டுச் சிலிர்த்தது. துவட்டிக் கொண்ட போது, 'தவறு ஏதும் நடந்து விடவில்லை' என்பதில் உறுதியானான். அவள் தன்னை மறக்க முடியாமல் தவிப்பதும், அவள் அப்பா வரன் பார்ப்பதைத் தடுப்பதும், திருமணத்தைத் தவிர்ப்பதும் துரதிர்ஷ்டம்தான். ஆனால் அவளைத் தான் கல்யாணம் செய்து கொண்டிருந்தால் அது இன்னும் பெரிய துரதிர்ஷ்டமாக இருந்திருக்கும்.

குற்ற உணர்வின் விளைவான ஒரு தாழ்வு மனப்பான்மை தன்னை ஆட்டிப் படைக்கும். காதலுக்காக அன்றி ஒரு கடமையாகக் கருதி அவளைக் கல்யாணம் செய்து கொண்டிருப்பதாக அவளுக்குத் தெரிய வரும்போது ஏற்படும் ஏமாற்றம், இல்வாழ்க்கையை நரகமாக்கி விடும்.

இப்போது உள்ள மனநிம்மதி அப்போது நிச்சயம் இருக்காது. உத்யோகரீதியில் ஆயிரம் விதமான யோசனைகள் இன்றும் உண்டு என்றாலும் வீட்டில் குழப்பமில்லை. சாயாவுடன் இப்போதும் சண்டை பூசல் உண்டு. ஆனால் அது எல்லாமே வெளிப்படை. ஒளிவுமறைவு இல்லை. நிழல் யுத்தம் இல்லை அது.

ஆவி பறக்கும் இட்டிலிகளை சாயா டைனிங் டேபிள் மீது தயாராக வைத்திருந்தாள். கிண்ணத்தில் கொத்சு. விண்டு தோய்த்து வாயில் போட்டுக் கொண்டான். மருதகாசியை நம்பிப் போனால் வயிறு காயும் ஆபத்து உண்டு.

"என்ன அவசரமோ" என்றாள். "ஒரு நாளாவது இருந்து நிதானிச்சு ருசிச்சு சாப்பிடக் கூடாதா?"

"ரசிச்சேனே! கொத்சு பிரமாதம். இந்தக் கை மணமே அலாதி" என்று விரல்களை முத்தமிட்டான். அளவான, அழகான, மிருதுவான



விரல்கள். இத்தனை பத்து பாத்திரம் தேய்த்தும் தினம் தினம் சமையலுக்கு புளி கரைத்தும் கூட மென்மையாக இருந்தன! சின்னியின் காலடி யோசை கேட்டதால் பற்றிய கரத்தை நழுவ விட்டு, "வாய்க்கு ருசியா பண்ணிப் போடறே, சம்பாதிக்கவும் செய்யறே. உலகில் உள்ள என்னைப் போன்ற குணசாலிகளான எல்லா ஆண்களுக்கும் உன்னைப் போன்ற சிறந்த மனைவி அமையக் கடவது" என்றான்.

''ஐஸ் குளிரில் உச்சந்தலை உறைஞ்சு போச்சு'' என்று அவள் கூறி முடிப்பதற்குள் அவன் யமாஹா ஏற படிகள் இறங்கியிருந் தான்.

மருதகாசி வீடு திமிலோகப்பட்டுக் கொண்டிருந்தது. போலீஸ்காரர்கள், அமைச்சர் கள், அதிகாரிகள் என்று பெரிய பட்டாளமே திரண்டிருந்தது.

ஒரு பக்கமாக அழகுக் கதிர்களை அள்ளி வீசிக் கொண்டிருந்த அனுபமா. நெருங்கி னான். ''இப்படி கூட்டம் போட்டா எங்க வேலை எப்படி நடக்கும்? இருக்கிற தடயங்கள் எல்லாத்தையும் அழிச்சுருவாங்க, கலைச்சுரு வாங்க'' என்றாள்.

"வேறே எங்கேயாவது தாக்குதல் நடந்தா போலீஸ் கெடுபிடி பண்ணும். இங்க போலீஸ் தலைமையே தாக்கப்பட்டிருப்பதால் தடுமாறிட் டாங்க போல."

"அப்புறமா எங்களையே குறைசொல்லு வாங்க. 'தடய அறிவற்ற இயல்'னு பட்டம் சூட்டறாங்க."

"அறிவுபூர்வமா பார்த்தா உனக்கு எப்படி தெரியுது?"

"மாலடோவ் காக்டெய்ல்."

"மருதகாசி வீட்டுக்கு வந்ததும் 'காக்டெய்ல்' ஞாபகம் வந்துருச்சா?"

சிரித்தாள். மருதகாசியின் பலவீனம் டிபார்ட்மெண்டில் எல்லாருக்கும் தெரிந்த ஒன்று. விளக்கினாள் :

" 'மாலடோவ் காக்டெய்ல்'ன்றது 'பெட் ரோல் பாம்'முக்கு இன்னொரு பெயர். அதிக சேதம் விளைவிக்காது. தயாரிக்கிறது ரொம்ப சுலபம். காலி பாட்டிலில் பெட்ரோல் நிரப்பி அடிவாரத்தில் கொஞ்சம் கந்தக அமிலம் இருக்கிற மாதிரி பார்த்துக்க வேண்டியது. பாட் டிலை டைட்டா மூடி மேலே பசை, சர்க்கரை, பொட்டாஷியம் குளோரேட் கலவையைப் பூச வேண்டியது. பசை இறுகிக் காய்ந்ததும் பாட் டிலை ஒரு காகிதத்தில் சுற்றி எடுத்துப் போக லாம். இலக்கைக் குறிவைத்து எறிய, பாட்டில் உடைந்து, கந்தக அமிலம், சர்க்கரை–குளோ ரேட் கலவையுடன் இணைசேர, பயங்கர வெடிச் சப்தம் கிடுகிடுக்கச் செய்யும். பெட் ரோல் காரணமாக தீப்பற்றிப் பரவும்."

"காம்பவுண்டு சுவருக்கு வெளியே இருந்த படியே சுலபமா வீசியிருப்பான்."

"மருதகாசியை பயமுறுத்துவது மட்டுமே நோக்கம்; தீர்த்துக் கட்டும் எண்ணம் இல்லே. அப்படியிருந்தா இதைவிடப் பெரிய குண்டு பயன்படுத்தியிருப்பான்."

"மிரட்டுகிற நோக்கம் கூட இல்லேன்னு தோணுது, அனு. ஒரு தமாஷ். 'என்னடா, அகில பாரத இந்து பரிவார் கட்டடத்துக்குக் குண்டு வைச்சவனைப் பத்து நாள்ல பிடிக்கிறேன்னு கெடுவைச்சு பத்திரிகைக்காரங்களுக்கு பேட்டி கொடுத்தியே, என்ன கிழிச்சே? இப்ப உன் வீட்டிலேயே குண்டு வீசியிருக்கேன். என்ன சொல்றேன்'னு ஒரு கிண்டலான சவால்!"

"இருக்கலாம்" என்றாள்.

டி.ஐ.ஜி. இவனைப் பார்த்து விட்டு முன் னேறி வந்து கொண்டிருந்தார்.

"கழுகுக்கு மூக்கிலே வேர்த்துருச்சா?" என்று கேட்டவாறே அவனை நெருங்கினார்.

"உங்க வெற்றியிலே பங்கு கேட்டு வந்தா தப்பு. ஒரு சங்கடத்துல சிக்கும் போது அனு தாபப்பட்டுக் கூடவா வரக் கூடாது?"

''டி.ஐ.ஜி. வீட்டிலேயே குண்டு வீசிட் டான்னு கேலி பண்ணுறியா? எனக்கு ஒண் ணும் சங்கடமில்லே. குண்டு வீசினவனை ஸெக்யூரிடி பார்த்திருக்கான். விவரமா அடை யாளம் சொல்றான். கம்ப்யூட்டர் ஸ்கெட்ச் தயாராக வேண்டியதுதான் பாக்கி."

"விட்னஸ்ஸைக் கூப்பிடுங்க; ஒருவேளை இந்த ஆளா பார்க்கச் சொல்லுங்க." பாக் கெட்டிலிருந்து பென்ஜமின் படம் எடுத்தான்.

மருதகாசி ஜாடை காட்ட, சற்று தொலைவில் நின்ற ஒரு போலீஸ்காரர் வந்து, சல்யூட் அடித்து, படம் பார்த்து, பரபரப் படைந்து, "இவன்தான் ஸார், இவனேதான்" என்றான். "நேரில் பார்த்துப் போட்ட மாதிரி படம் அமையலேன்னாலும் இவன்தான்,

முதல்வர் வீட்டுத் திருமணம்!

"இருபது ஆண்டுகளுக்கு முன் நடைபெற்ற மற்றொரு முதல்வரின் வீட்டுத் திருமணம் இன்று ஞாபகத்திற்கு வருகிறது. கம்யூனிஸ்ட் (CPI) தலைவர் அச்சுதமேனன் கேரளாவின் முதல்வராக இருந்த போது அவர் மகள் திருமணம் நடை பெற்றது. அவர் கேரளாவின் மொத்த ஜனத்தொகையான மூன்று கோடி மக்களையும் அழைத்தார்! தம் கட்சிப் பத்திரிகையான ஜன யுகத்தில் சிறு நோட்டீஸ் மாதிரி ஒரு தாள் இணைத்து அனுப்பினார். அதில் 'அன்பளிப்புகள் ஏற்கப்படமாட்டாது' என ஒரு குறிப்பும் இருந்தது. திருமணத்திற்கு வந்த ஒவ்வொருவரும் மேனனால் நேரிடையாக உபசரிக்கப்பட்டனர். ஒரு குளிர்பானம், ஒரு எலுமிச்சம்பழம், வாசனையில் தோய்த்த பஞ்சு ஆகியன அனைவருக்கும் வழங்கப்பட்டன! ஹூம், அதுவும் முதலவர் வீட்டுத் திருமணம்தான்!

ஆதாரம் : **இந்தியன் எக்ஸ்பிரஸ்**; தகவல் : **ஜானகி ரங்கநாதன்**

TAKEWING B40 - D1 - TN - K

சந்தேகமில்லே."

"ஹிந்து பரிவார் கட்டடத் தகர்ப்பிலும் இவன்தான் சம்பந்தப்பட்டிருக்கான்" என்று கூடுதல் தகவல் தந்தான் இன்பா.

"வாட் நான்ஸென்ஸ்! குற்றவாளியை இனம் காட்டக்கூடிய இவ்வளவு முக்கியமான படம் வைச்சுக்கிட்டு என்கிட்ட இத்தனை நாள் காட்டாம இருந்திருக்கியே?" என்று பாய்ந்தார் மருதகாசி.

"நீங்கதான் சி.பி.ஐ. உதவி வேணாம், தேவைப்பட்டா சொல்லி அனுப்பறேன்னீங்க."

"தமிழக அரசின் பர்மிஷன் இல்லாம கேஸிலே சி.பி.ஐ. நுழையறது தப்பு, தெரியு மில்லே?"

"அப்ப படங்களைக் கொடுத்திடுங்க; நான் வந்த வழி திரும்பறேன்."

மருதகாசி யோசித்தபோதிலும் அப்படி காட்டிக் கொள்ளவில்லை. வேகமாக முடிவுக்கு வந்து, "ரொம்ப பிகு பண்ணிக்காதேய்யா, ஸி.எம். கிட்ட பேசி, சி.பி.ஐ. சம்பந்தப்பட உத்தரவு வாங்கிடறேன். இப்ப இவனைப் பற்றி சொல்லு..."

"வெளிநாட்டு ஆசாமின்னு சந்தேகிக்க இடமிருக்கு; பேரு பென்ஜமின்."

"அயல்நாட்டான் இங்க வந்து எதுக்குக் குண்டு வீசணும்?"

"அதைத்தான் நாம கண்டுபிடிக்கணும்."

"எங்க, எப்படி இவனைப் படம் எழுதினே? யாரு சொன்னாங்க, ஃபாரின் ஆளுன்னு? பேரு எப்படி தெரிஞ்சுது?"

"அதான் சி.பி.ஐ. சாமர்த்தியம். நான் பார்த்த ஒரு நாடகத்துல, 'தோசை தோசைதான்; சப்பாத்தி சப்பாத்திதான்'னு ஒரு டய லாக். அது மாதிரி சி.பி.ஐ. சி.பி.ஐ.தான்; போலீஸ் போலீஸ்தான்!"

அனுபமாவின் 'களுக்' மருதகாசியின் கோபத்தைக் கிளறியது. அவளைக் கண்களால் 'பொசுக்கி' விட்டு இன்பாவுக்கு பதில் சொன்னார் : "ரொம்ப அலட்டிக்காதே! படங்கள் என்கிட்ட இருக்கட்டும். நாளைக்கு எல்லா பேப்பர்லயும், "தகவல் தந்தா கணிசமான பரிசு"ன்ற அறிவிப்போடு பிரசுரிக்கிறேன்."

"அதோட ஏர்போர்ட், ஹார்பர் எல்லாம் அலர்ட் பண்ணிடுங்க. ஆளு கம்பி நீட்டிடப் போறான்."

"நான் நினைச்சேன், சொல்லிட்டே" என்று கூசாமல் பொய் சொன்னார் மருதகாசி. "இன்டர்போலுக்கு படத்தை ஃபாக்ஸ் பண்ணி மேற்கொண்டு விவரங்கள் ஏதும் கிடைக்குமா, பார்க்கறதுதானே?" என்றார் மீசை தடவி.

பதிலுக்குக் கட்டை விரல் உயர்த்தி, "அதை நாலு நாள் முந்தியே செய்துட்டேன். இதுவரை தகவல் இல்லை. பாரீஸ் ஹெட் குவார்ட்டர் ஸிலிருந்து எல்லா ஐரோப்பிய தலைநகர்களுக்கும் செய்தி அனுப்பி, பதில் பெற கொஞ்சம் தாமதமாகத்தான் செய்யும்" என்றான் இன்பா.

நாளிதழில் பென்ஜமினின் படமும் பரிசு அறிவிப்பும் வந்திருந்த பகுதியை அட்டாணா ராகத்தில் படித்துக் கொண்டிருந்தார் ரங்கநாதன்.

"அப்பா! நீங்க பாடறதைக் கேட்க நேர்ந்தா பயந்து போய் அவனே சரணடைஞ்சுடுவான்" என்று இன்பா கூற, சின்னியும் தாத்தாவும் சிரித்தனர்.

அடுப்படி காரியம் என்றாலும் அப்பாவும் பிள்ளையும் பேசிக் கொள்வது தன் காதில் விழாமல் போய் விடக் கூடாது என்பதில் கருத்தாக இருந்தாள் சாயா.

"உதகை சூரியாசுவாமி ஆசிரமத்துக்கு பென்ஜமின் ஒரு முறையேனும் வந்து போயிருக்கலாம் என்று நம்ப இடமிருக்கிறது. ஆனால் சூரியாசுவாமிக்கும் அவனுக்கும் ஆன்மிகத் தொடர்புக்கு அதிகமாக வேறு ஏதும் இருக்கும் என்று தோன்றவில்லை" என்ற இன்பா, பென்ஜமினை மறந்து குருஜி பற்றிப் பேச ஆரம்பித்து விட்டான். "பரம ஞானி; என்னை கணப்போதில் எடை போட்டுட்டார்; எவ்வளவு எளிமையான, அதே சமயம் தத்துவார்த்தமான உபதேசங்கள்! அவ்வளவிருந்தும் எத்தனை அடக்கம்! என்னிடம் நியாயமா கோபப்பட்டிருக்கலாம், ஆனால் பரிவு காட்டினார் மகான்!"

அவன் அடுக்கிக் கொண்டே போக, 'ஒரு தடவையாவது கண்டிப்பா நாமும் பார்த்துவிட்டுத்தான் வரணும்' என்று எண்ணினாள் சாயா.

"எனக்குத் துளிக்கூட பிடிக்கவே இல்லை" என்றான் சின்னி. உடனே சாயாவின் மதிப்பில் சுவாமிஜி மேலும் உயர்ந்தார். "உன் அபிப்ராயத்தை யார் கேட்டா?" என்று சின்னியை நோக்கிக் குரல் கொடுத்தாள்.

"பயலுக்குப் போர் அடிச்சுருச்சு; மீன் குழம்பு வாசனையைப் பிடிச்சுக்கிட்டே ஆசிரமத்தில் தோட்டக்காரர்கள் குடியிருப்புக்குப் போயிட்டான்" என்றான் இன்பா. சாயாவுக்குப் பற்றிக் கொண்டு வந்தது. "இன்னிக்கு மீன் குழம்பு, நாளைக்கு மட்டன் பிரியாணி... தூ! தூ!"

சின்னியோடு சேர்ந்து வாழ்வது அவளுக்கு இதுவரை கயிற்றின் மேல் நடக்கும் சாகசம் என்றால் இனி முள்ளின் மேல் நடக்கும் வேதனை!

அருவருப்பு மாறாமலே வேலைக்குச் சென்றாள். மூன்றாவது பீரியட்டின் போது கூரியரில் ஒரு பாக்கெட் வந்தது. மேலே : PHOTOS - DO NOT FOLD.

(தொடரும்)

கி. ராஜேந்திரன்

கல்யாணத்துக்கு முன்னதாக சாயாவுக்குக் காதல் என்றால் என்ன என்ற உணர்வு கிடையாது. கோடிக்கணக்கான வேறு பல இந்தியப் பெண்களைப் போலவே அவளும் பெற்றோர் பார்த்த வரனுக்குச் சரி சொல்லி, திருமண தினத்தன்று தாலி ஏற்று, புருஷன் வீட்டைப் புகலடைந்தாள்.

கணவனிடம் அவள் குறை கண்டாள். நிறைகளையும் பார்த்தாள். ஆனால் குறை நிறைகளை எடை போட வேண்டும் என்று அவளுக்குத் தோன்றவில்லை. குறைகள் இல்லாத மனிதர் யார்? என்னிடம் குறைகள் இல்லாமலா போகும்? அவை இன்பாவுக்குத் தெரிய வராமலா இருக்கும்?

குற்றம் குறைகளை மீறி ஒரு நெருக்கம் அவர்களிடையே வளர்ந்தது. ஒருநாள் அவன் சீக்கிரம் வந்து விட்டால், 'ஏன்? உடம்புக்கு ஏதாவதா?' என்று மனம் துடித்தது. நேரம் கழித்து வந்தால், 'இன்னும் வரக் காணோமே? ஏன்?' என்று கவலை வாட்டியது. இரவு அவன் மெல்லிய குறட்டை ஒலியுடன் தூங்கிய பிறகும் அவன் கரத்தைப் பற்றி விரல்களைக் கோத்துக் கொண்டு இருக்க ஆவல் உண்டாயிற்று. அவன் தோளிலே தலை வைத்து நெஞ்சிலே கோலம் போடத் தோன்றியது.

காரணமின்றி அவன் கோபித்துக் கொண்டால் வீரியத்துடன் எதிர்வாதம் பண்ணுவதில் ஆனந்தம் உண்டாயிற்று. உரிமையோடு பேசலாம், எதிர்க்கலாம் என்ற துணிவில் ஒரு கிளுகிளுப்பு இருந்தது. தன் தரப்பில் தப்பு இருப்பதாகத் தெரிந்தால் அதை ஒப்புக் கொண்டு 'வெரி ஸாரி' சொல்லி குழைவதில் மகிழ்ச்சி பொங்கியது. வருத்தம் தெரிவிக்கச் சின்ன அளவில் கூடத் தயக்கமே ஏற்படவில்லை.

பிடிக்காத காரியங்கள் நடந்து, அதனால் டென்ஷனாகி விட்டால், கண்மூடி அவனிடம் ஒட்டிக் கொண்டு விடுவதில் இறுகிய மனம் தளர்ந்தது. தனக்கு என்று ஒருவன் இருக்கிறான்; அவனிடம் ஒண்டிக் கொண்டு பிரச்னைகளைச் சொல்லி விட்டால் மனம் சமாதானப்பட்டுப் போகும்.

இல்லறம் என்பது உடலுறவுத் தேவைகளைப் பூர்த்தி செய்வது மட்டுமல்ல; அதற்கும் மேலே எத்தனையோ விஷயங்களில் தோழமையோடு கைகொடுத்து உதவுகிறது என்பதை சாயா நாளடைவில் உணர ஆரம்பித்தாள். இவையெல்லாம் ஒன்று சேர்ந்து தான் காதல் என்று பெயர் பெற்றதோ என்று யோசித்தாள்.

ஓராண்டுக்குப் பிறகும் அவள் கருவுறாத போது அவன் முதலில் தன்னை சோதனைக்கு உட்படுத்திக் கொண்டு, பிறகுதான் தன்னை டாக்டரிடம் அழைத்துப் போக எண்ணினான் என்பது தெரிய வந்த போது நெகிழ்ந்து போனாள். அது விரைவில் தன் கணவனைப் பற்றிய பெருமிதத்தை உண்டாக்கியது. தனது முழு நம்பிக்கைக்கும் பாத்திரமான பாதுகாவலன் அவன். அதே போல் தான் அவளும் அவனுக்கு என்று நினைத்த போது மனம் பூரித்தது.

'கல்யாணத்துக்குப் பிறகும் காதல் மலர முடியும்; கணவனைக் காதலனாகக் காண முடியும்; காதல் அனுபவங்களைப் பெற முடியும்' என்று அவளிடம் யாராவது கல்லூரி நாட்களில் சொல்லியிருந்தால் சிரித்திருப்பாள். ஆனால் இன்று அது உண்மை என்று தெரிய வந்தது. பல தம்பதிகளிடையே கல்யாணத்துக்குப் பிறகு காதல் மலராமலே போய் விடலாம்; பல காதல் திருமணங்களும் கல்யாணத்துக்குப் பிறகு ஏமாற்றத்தில் முடியலாம். இதை அன்றாட வாழ்க்கையில் அடிக்கடி பார்த்துக் கொண்டுதானே இருக்கிறோம்? அப்படியிருக்க, கல்யாணத்துக்குப் பிறகு காதல் மலர்ந்த தன் வாழ்க்கை எவ்வளவு ஜாஜ்வல்ய மானது! எவ்வளவு பெரிய பாக்கியசாலி நான்!'

இன்னும் பலவிதமாகவும் தனது அதிர்ஷ்டத்தை நினைத்து கர்வம் கொண்டிருந்த சாயாவுக்கு, லஞ்ச் டய்ம் வரை காத்திருந்து அந்த உறையைப் பிரித்துப் பார்த்ததும் கடும் பூகம்பத்தில் சிக்கியது போலிருந்தது. 'பூகம்பமும் இல்லை, ஒன்றுமில்லை, தன் உடல்தான் அப்படி நடுங்குகிறது' என்று புரிந்து கொண்டு மேஜையைப் பற்றி சமாளிப்

இரட்டை அரண்மனைகள்

முன்கதை...

சென்னையில், 'அகில பாரத ஹிந்து பரிவார்' அமைப்பின் தலைமையகத்தில் ஒரு குண்டு வெடிக்கிறது. ஒருவன் இறக்கிறான். இறந்தவனின் ஒரு கரத்தை, தன் வீட்டு மாடியில் கண்டெடுக்கிற இளம்பெண் ரஸியா, சி.பி.ஐ. அதிகாரி இன்ப சாகரனிடம் ஒப்படைக்கிறாள். தொடர்வதான நாட்களில் அவளுக்கு இன்பா மேல் காதல் உருவாகிறது.

தனக்குக் கிடைத்த அந்தக் 'கை'யை இன்பா, ஃபாரன்ஸிக் லாபில் பரிசோதிக்கக் கொடுக்கிறான். அங்கு பணியாற்றும் அனுபமா, இன்பாவின் கல்லூரி நாள் காதலி! அவள் தந்த தகவலின்படி, அந்தக் கையில் பச்சை குத்தியிருக்கும் கிளாவர் சின்னம், ஊட்டியில் வசிக்கும் பிரபல 'சூர்யா சுவாமி'யின் ஆசிரமச் சின்னம் என்பது தெரியவர, இன்பா ஊட்டி போய் சூர்யா சுவாமியை விசாரிக்கிறான்; பயன் ஏதுமில்லை.

இடையே, முகம் தெரியாத ஒரு வில்லன், இன்பா–ரஸியா இருவரையும் புகைப்படங்கள் எடுத்து இன்பாவின் மேலதிகாரிக்கு அனுப்புகிறான். கூடவே ஒரு கடிதம் – "இதே படங்களை இன்பாவின் மனைவிக்கும் அனுப்பப் போகிறேன்!"

அதன்படியே அவன் மனைவி பணிபுரியும் பள்ளி முகவரிக்கு – அவள் பெயருக்கு ஒரு கவர் வருகிறது. போட்டோக்கள் உள்ள கவர். இனி...

பதற்குள் டீச்சர்கள் அறையின் நாலாதிசைகளிலிருந்தும் "என்ன? என்ன?" என்ற கேள்விகள் பிறந்தன. "ஒண்ணுமில்லே" என்று அமைதிப்படுத்தி, வெளியே இழுத்திருந்த படங்களை சட்டென்று மீண்டும் உறைக்குள்ளே தள்ளினாள். "லேசா தலை சுத்தறது; அவ்வளவுதான்."

''மசக்கை ஆரம்பிக்கிறதோ, என்னமோ'' என்றாள் ஒரு டீச்சர். மற்றவர்கள் 'குபீர்' என்று சிரித்தனர். சாயாவுக்குக் கோபம் வரவில்லை. டீச்சர்களுடைய கவனத்தை அந்த உறையிலிருந்து திசை திருப்ப கேலிப் பேச்சு உதவியது என்பதால் அவளும் சிரிப்பில் கலந்து கொள்வது போல நடித்தாள்.


நடுங்கும் கரத்தை கஷ்டப்பட்டு இயக்கி அரை நாள் லீவு எழுதி எச்.எம்.முக்கு அனுப்பி விட்டுப் புறப்பட்ட போது அவளுடைய ஜகஜ்ஜோதியான காதல் அரண்மனை இருண்டு போனதுடன், இடிந்து, தகர்ந்து, நொறுங்கியும் விட்டிருந்தது. பட்டப் பகலில் பஸ்ஸுக்காகக் கொளுத்தும் வெயிலில் நின்றபோதிலும் வாழ்க்கையே இருள்மயமாகத் தோன்றியது. ஏமாற்றம் இதயத்தைக் கவ்வியது. எத்தனை நம்பிக்கை, எத்தனை அன்பு, எத்தனை பெருமிதம் கொண்டிருந்தாள் கணவனைப் பற்றி! எல்லாம் போய் நடுத்தெருவில் அநாதையாக விடப்பட்டது போன்ற உணர்வு.

வீட்டிலே யாரும் இல்லை. தனிமை தந்த துணிவில் மறுபடி உறையிலிருந்து படங்களை உருவி எடுத்தாள். கோபம், ஏமாற்றம் இவற்றினிடையே 'எத்தனை அழகான பெண்!' என்ற பிரமிப்பும் ஏற்பட்டது. மதன சாம்ராஜ்யத்தின் வாசலை நெருங்கும் பருவம். மலர் மாலை போல் கரங்களை அவன் தோள்கள் மீதாகப் போட்டு, கழுத்தை அணைத்து குதிகால் எம்ப, நெஞ்சில் சிரம் புதைத்து... ஒரு வேளை எதற்காகவாவது வருத்தப்பட்டு அழுகிறாளோ? இன்பா ஆறுதல் சொல்கிறானோ? அவன் கடமைகளில் ஓர் அங்கமாக இந்த நிகழ்ச்சி நடந்திருக்குமோ? அப்படியானால் இதோ இந்தப் படத்தில் அவன் கரங்களைப் பிடித்துக் கொண்டு சற்று எட்ட நின்று தலை உயர்த்தி சிரிக்கிறாளே, அதற்கு என்ன அர்த்தம்?

இரண்டு மூன்று படங்களைத் தள்ளியதும் ஒரு கடிதம் நழுவி ஊஞ்சலாடியபடி தரை இறங்கியது. எடுத்துப் பிரித்துப் பார்த் தாள். "இந்த போட்டோக்கள் சின்ன வீடு நெ. 2. சின்ன வீடு நெ. 1 பார்க்க, மாலை நேரத்தில் அசோக் நகர் போகவும்!" அவள் பெயர் குறிப்பிடாமல் அனுபமா வீட்டு விலாசம் மட்டும் எழுதப்பட்டிருந்தது. மொட்டைக் கடிதம்தான்; அனுப்பியவன் விலாசம் இல்லாததோடு, கையெழுத்து மூலம் தன்னைக் கண்டுபிடித்து விடக் கூடாது என்பதற்காக இடது கரத்தால் சிரமப்பட்டு கடிதம் வரையப்பட்டிருந்தது. கோணலான, நெளிநெளியான எழுத்துக்கள்.

சில மந்திரிகளுக்கும் மாஜி அமைச்சர்களுக்கும் தான் இரண்டு மூன்று வைப்புகள் என்று கேள்வி. இவருக்குமா? எப்படி என்னை ஏமாற்ற முடிந்தது? ஏன் எனக்கு சந்தேகமே ஏற்படவில்லை? பொய்யாக இருக்க முடியாது. போட்டோக்கள் சாட்சி சொல்கின்றனவே! நெ. 2 மெய்யானால் அசோக்நகர் விவகாரமும் உண்மையாகத் தானே இருக்க வேண்டும்!

உடனேயே அசோக் நகருக்குக் கிளம்பத் தோ...



றியது. ஆனால் கடிதத்தில் "மாலை நேரத்தில்" என்ற சொற்கள் அடிக்கோடிடப்பட்டு வேகத் தடை செய்தன. வாசல் கதவைத் தாளிட்டு விட்டு வந்து மறுபடி உட்கார்ந்து படங்களை நிதானமாகப் பார்த்தாள். ஆவேசத்தோடு விட்டெறிந்தாள்; திரட்டி எடுத்து வந்து உறையிலிட்டு மேஜை மீது வைத்தாள். கடிதத்தைப் படித்துக் கசக்கினாள். திரும்பவும் பிரித்து சுருக்கம் நீக்கி மடித்து உறையிலிட்டாள். விலாசம் மனப்பாடமாகி விட்டது.

அமர்ந்திருந்த நாற்காலி, முள்ளாகக் குத்தியது. வீட்டின் வெறுமை அவளைப் பார்த்து கிண்டலாகச் சிரித்தது. மின்விசிறி ஓடியும் புழுக்கத்தில் வியர்த்துக் கொட்டியது. அவர் தன்னைத் தொட வந்தால் எப்படி அனுமதிப்பது; அணைக்க முற்பட்டால் எவ்வாறு சகிப்பது? அருவருப்பு முட்டி மோதிக் கொண்டு வர, வயிற்றைக் குமட்டியது.

பிரச்னைகள் வரும் போது அவரிடம் போவேன்; இப்போது அவரே பிரச்னை யாகி விட்ட நிலையில் யாரிடம் போக? நேருக்கு நேராகக் கேட்டு விடலாம். ஆனால் உண்மை வருமா? சற்றுமுன் எனக்கு நானே சமாதானம் சொல்லிக் கொள்ள முற்பட்டது போல, அவரும் தன் கடமையின் ஓர் அங்கமாக இப்படி நடந்து கொள்ள நேர்ந்தது என்று ஏதேனும் விளக்கமளித்தால்...? சந்தர்ப்பத்துக்கு ஏற்ப ஒரு கதை பண்ணுவது சிரமமா என்ன? அப்பாவிடம் முறையிட்டால் அவரும் மகனுக்கு சாதகமாகத்தான் பேசுவார்.



அசோக் நகருக்கு சாயந்திரம் போய் விட்டு வந்தால் எல்லாம் உறுதியாகி விடும். அப்புறம் சால்ஜாப்பு ஏதும் சொல்ல முடியாது. அதான் இதை அனுப்பினவனே வழி சொல்லித் தந்திருக்கிறானே! சரி, போகிறோம்; விஷயமும் ஊர்ஜிதமாகிறது என்றால் அப்புறம் இந்த வீட்டுக்கு எப்படித் திரும்பி வருவது? இப்போதே – இங்கு இருக்கும் ஒவ்வொரு வினாடியும் – சித்ரவதையாக இருக்கிறதே. உடம்பெல்லாம் பற்றி எரிகிறதே! முள் சாட்டையை உடலைச் சுற்றி சொடுக்கி ரணப்படுத்துவது போலிருக்கிறதே!

முடியாது! அசோக் நகரிலிருந்து இங்கே திரும்பி வரவே முடியாது! சின்னியுடன் சேர்ந்து வாழ முடியாது என்று ஆத்திரப்பட்டு இரைந்தேனே? இப்போது இன்பாவுடன் சேர்ந்து வாழ்வதே முடியாத காரியமாகி விட்டதே!

இங்கே திரும்பி வர முடியாது என்றால் எங்கே போவது? பெற்றோரிடம் போகலாம். அப்பா உபதேசம் செய்வார். திரும்பவும் கணவனுடன் சேர்த்து வைக்க முயற்சி மேற்கொள்வார். அதை நான் ஏற்காது போனால் வேண்டாவெறுப்பாகத்தான் வீட்டில் இடமளிப்பார்; அப்பா–அம்மாவின் புலம்பலைச் சகித்துக் கொண்டு அங்கே தங்கலாம். ஆனால் முதல் காரியமாக அங்கேதானே என்னைத் தேடிக் கொண்டு இன்பா வருவார்? தன்னை அனுப்பி வைக்கும்படி அப்பாவிடம் கேட்பார். 'வர முடியாது' என்றால் யார் எனக்கு ஆதரவாகப் பேசுவார்கள்? சட்டத்தின் உதவியைக் கூட அவர் நாடலாம். சட்டம் என் சார்பில் பேசாது, நிச்சயம்.

தலைவலி பிளந்தது. பாத்ரூம் அலமாரியில் விக்ஸ் அல்லது மெடாஸின் மாத்திரை ஏதாவது இருக்குமே? விஷமே இருந்து விட்டால் தேவலாம். ஒருவழியாகப் போய்ச் சேர்ந்து விடலாம்.

அலமாரி கதவு திறந்த போது அப்பாவுக்காக ஞாபகமாக மகன் உதகையிலிருந்து வாங்கி வந்திருந்த யூகலிப்ட்ஸ் தைல பாட்டில் கண்ணில் பட்டது. உடனேயே, 'சூரியா சுவாமியைப் போய்ப் பார்த்தால் என்ன?' என்ற எண்ணம் பளிச்சிட்டது. ஆ! அதுதான் சரி!

இன்பா என்ன சொன்னார்? 'ஆச்சர்ய

மான மனுஷன்; நிமிஷமா என்னை இனம் கண்டு கொண்டார்' என்றாரே? அப்படி என்னையும் புரிந்து கொள்வாரா? அவர் ஆசிரமத்திலேயே சேர்ந்து சந்நியாசினி ஆகி விட முடியுமா? விஷம் குடித்து செத்துப் போவதைக் காட்டிலும் இது மேலல்லவா? இந்த உலகில் இனி எனக்கு என்ன இருக்கிறது? குழந்தையா, குட்டியா? கணவரும் இனி இல்லை என்றாகி விட்டது. சின்னிக்காகவோ அப்பாவுக்காகவோ நான் இங்கே இருக்க அவசியம் இல்லை. அவர்களுக்கு நான் தேவையில்லை. நான் இல்லாமலிருப்பதே அவர்களுக்கு நிம்மதியாக இருக்கும். தெய்வத்தினிடமாவது மனசைச் செலுத்தி மன அமைதி பெற முயற்சிப்பது தான் நல்லது.

ஒரு முடிவுக்கு வந்ததும் சாயாவுக்கு பசி கூடத் தெரிந்தது. லஞ்ச் டயத்தில் சாப்பிடப் பிடிக்காமல் திரும்ப எடுத்து வந்திருந்த டிபன் பொட்டலத்தைப் பிரித்தாள். மிளகாய்ப் பொடி தடவிய இட்டிலிகள் மளமளவென்று மறைந்தன! வாட்டர் பாட்டில் காலியானது. காண்டீன் காப்பி இல்லாவிட்டால் என்ன? அதைவிட நல்ல காப்பி போட்டு சாப்பிட்டால் போயிற்று! கண்களைத் துடைத்துக் கொண்டு ஒரு வீம்புடன் எழுந்து போய் மணக்க மணக்க காப்பி தயாரித்து அருந்தினாள். இந்த வீட்டில் கடைசி காப்பி.

புதிய தெம்புடன் படுக்கை அறைக்குள் நுழைந்து ஸூட்கேஸ் நிரப்ப ஆரம்பித்தாள். இவ்வளவு பெரிய பெட்டி வேண்டாம் என்று சற்று சிறிய பெட்டிக்கு மாற்றினாள். சந்நியாசினி ஆகப் போறவளுக்கு ரெண்டு மாற்று உடை போதாதா? தூக்கிக் கொண்டு போக போர்ட்டர் தேடவும் வேண்டாம் அல்லவா?

பர்ஸில் பணம் கொஞ்சமாக இருந்தது. பீரோ திறந்து வீட்டுச் செலவுக்கு வைத்திருந்த பணத்தில் தாராளமாக எடுத்துக் கொண்டாள். ரெடி! பெட்டியோடு அசோக் நகர் போக வேண்டியது. அங்கே சின்ன வீடு நெ. 1 தரிசித்த பிறகு சென்ட்ரல் போய் நீலகிரி எக்ஸ்பிரஸ் ஏற வேண்டியது. ஸ்லீப்பர் அல்லது ஸிட்டிங் ரிஸர்வேஷன் கிடைக்காவிட்டாலும் பாதகமில்லை. ஜெனரல் கம்பார்ட்மெண்டில் ஏறி, தரையில் உட்கார்ந்தபடி பயணம் செய்தாவது மேட்டுப்பாளையம் போய் விட வேண்டும். கூடியவரை ஆட்டோ தவிர்த்து அசோக் நகருக்கும் சென்ட்ரலுக்கும் பஸ்ஸிலேயே போகலாம். ஆட்டோ டிரைவர்கள் விசாரணைக்கு உள்ளாவார்கள்.

'போய் வருகிறேன்; தேட வேண்டாம்' என்று கடிதம் எழுதி வைப்பதா? அல்லது இந்தப் படங்களைப் பார்வையாக மேஜை மேல் வைத்து விட்டுப் போகலாமா? இரண்டுமே வேண்டாம்; அவர்தான் ஸி.பி.ஐ. சூரராச்சே! கண்டுபிடிக்கட்டுமே!

'என்னை சூர்யா சுவாமி ஏற்பாரா? 'திரும்பி கணவனிடமே போ' என்று கூறி அனுப்பி விட்டால்? காலில் விழுந்து கெஞ்சியாவது ஆசிரமத்தில் சேர அனுமதி பெற வேண்டியதுதான்... சரி, சின்னி வருகிற நேரம்; கிளம்பி விடலாம்.'

பெட்டியைத் தூக்கிக் கொண்டு வாசலுக்குச் சென்று கதவைத் திறக்க முற்பட்டவள், திரும்பி ஒருமுறை அந்த இல்லத்தைப் பார்த்தாள். துயரம் பீறிட, விம்மி விம்மி அழுதாள்.

இரவு வழக்கத்தை விடவும் சற்று தாமதமாக வந்த இன்பசாகரன், சின்னி குனிந்த தலை நிமிராமல் பாடப் புத்தகம் படிப்பதையும், அப்பா ராகம் போட்டு நாளிதழ் படிப்பதை மறந்து மேற்கூரையைப் பார்த்தபடி இருப்பதையும் கண்டான். அவர்களின் வழக்கத்துக்கு மாறான இந்தப் போக்கு திகைப்பை உருவாக்க, "அப்பா என்ன ஆச்சு? ஏன் ஒரு மாதிரி இருக்கீங்க?" என்று கேட்டான்.

அவர் தலை தாழ்த்தி, தொண்டை செருமி, தயக்கத்துடன் "சாயா..." என்று ஆரம்பித்தார்.

"சாயாவுக்கு என்ன?" என்று பதறியதில் இன்பசாகரனின் கரிசனமும் காதலும் ஜோடியாக நர்த்தனம் புரிந்தன.

"அவள் இன்னும் வீடு திரும்பவே இல்லே, இன்பா. கவலையா உட்கார்ந்திருக்கேன்" என்றார்.

இன்பசாகரனுக்கு உடனடியாக, தன் மேலதிகாரிக்கு வந்து சேர்ந்த புகைப்படங்களும் அவற்றுடன் இணைத்திருந்த குறிப்பும் நினைவுக்கு வந்தன. அவன் இதயத்துக்குள்ளேயே இப்போது குண்டு வெடித்தது!

(தொடரும்)



"வளர்ப்பு மகனுக்குப் பொண்ணு குடுத்தது தப்பாப் போச்சு..."

"ஏன்...?"

"தலை தீபாவளிக்கு கம்பி மத்தாப்பூவெல்லாம் தங்கக் கம்பில தான் செஞ்சு வாங்கணும்ங்கறார்!"

— எஸ். இராஜேந்திரன்

இருட்டு அரண்மனைகள் 12

மா மனார் வீட்டுக்கு ஃபோன் போட்டு சாயா அங்கே வரவில்லை என்பது உறுதியானதும் சற்றே நடுங்கும் கரத்தால் மருதகாசி நெம்பர் டயல் செய்தான். இரவு நேரம். எத்தனை பெக் இறக்கியிருக்காரோ, என்ன மூடில் இருக்காரோ? சுருதி ஏறுகிற சமயம் தொந்தரவு தரப்படுவதை அவர் விரும்ப மாட்டார். ஆயினும் விஷயத்தின் முக்கியத்துவத்தைக் கருதி...

"ஹுல்ல்ல்லோ ஓஓஓ–" முகமன் கூறிய பாங்கிலேயே மிதப்பு தெரிந்தது.

"இன்பசாகரன் ஹியர்."

"என்னப்பா? பாரிஸ் இன்டர்போல் தலைமைக் காரியாலயத்துலேயே யாராவது குண்டு வைச்சுட்டாங்களா?"

"அதை விடப் பெரிய விஷயம் ஸார் என் ஒய்ஃப்...."

'பலே, பலே! சாயா... சாயாதானே? பிள்ளையாண்டிருக்காளா? கன்கிராட்ஸ்."

"போலீஸ்– சி.பி.ஐ. இரண்டுக்கும் இடையே எங்களைக் கிண்டல் பண்ணி ஜோக் அடிக்கிற இந்த ஒரு விஷயத்துலயாவது ஒற்றுமை இருக்கிறது பற்றி சந்தோஷம் ஸார்."

"அப்ப அது இல்லையா? வேற பிரச்னையா? என்னப்பா அவளுக்கு?"

"இன்னும் வீடு திரும்பலை சார்!"

"ஓடிட்டாளா? கொடுத்து வைச்சவன்யா, நீ. எங்களுக்கெல்லாம் அப்படி அதிர்ஷ்டம் அடிக்குதா பார்த்தியா? ஃபோனிலேயே விடறேன், ஸிப் பண்ணிக்க! சியர்ஸ்!"

முதல் ஜோக் போலவே இதையும் அலட்சியம் செய்து ஒதுக்கினான். புகைப்படங்கள் பற்றியும், அவை அவளிடம் கிடைத்திருக்கக் கூடும் என்பது குறித்தும், அவற்றைப் பார்த்துவிட்டுக் கோபம் அடைந்து அவள் வெளியேறி இருக்கலாம் என்றும் தான் சந்தேகிப்பதை மருதகாசியிடம் கூற அவன் கூசினான். கூறத் தேவையில்லை என்றும் கருதி, "கிட்நாப்பாக இருக்கலாம்னு ஊகிக்கிறேன் சார்" என்றான்.

"அவளை எதுக்கு, யார் கடத்திப் போகணும்?"

"உங்க வீட்டில குண்டு வீசினவங்க; அகில பாரத ஹிந்து பரிவார் கட்டடத்தைத் தகர்த்தவங்க; இன்னும் பல வெடி குண்டுகளை வைக்கத் திட்டம் போட்டிருக்கிற கும்பல். நான் அவர்களை நெருங்கறது பிடிக்காம.... ஒரு வேளை அவங்க மேலே கை போட்டாலும் விலங்கு பூட்டுவதைத் தவிர்க்க..."

"வீட்டுக்குப் பக்கத்துல இருக்கிற போலீஸ் ஸ்டேஷனுக்குப் போ. FIR ஃபைல் பண்ணு. அப்புறம் சாயாவோட சமீப ஃபோட்டோ ஒண்ணு நிறைய பிரிண்ட் போட்டு எல்லா பத்திரிகைகளுக்கும் கொண்டு போய்க் கொடு. 'காணவில்லை'ங்கற தலைப்புக்குக் கீழே பிரசுரிக்கட்டும். பைசா எடுத்துப்போ. காசுக்குத்தான் போடுவாங்க."

"இவ்வளவுதானா?" என்றான் ஏமாற்றக் குரலில். பரபரப்புடன் செயல் படாவிட்டால் கூடப் பாதகமில்லை. ஆறுதலாக இரண்டு வார்த்தைகள் சொல்லக் கூடாது?

"இந்த நடு ராத்திரியிலே வேற என்ன செய்யச் சொல்றே?" என்றார். "நாளைக்கோ நாளன்னிக்கோ



கி. ராஜேந்திரன்

எல்லா நாளிதழ்களிலும் சாயா வோட ஃபோட்டோ வந்துடுச் சுன்னா, அப்புறம் எல்லா போலீஸ் ஸ்டேஷன்களையும் 'அலர்ட்' பண் ணிடலாம். டீ.வில கூட சாயா படத்தைக் கொடுத்து காட்டச் சொல்லலாம். இப்பல்லாம் தூர்தர் ஷன்ல காணாமல் போனவங்க பற்றின அறிவிப்பு போடறாங்களா இல்லியா, தெரியலே. அப்படியே வந்தாலும் எத்தினிபேர் பார்க்கப் போறாங்க? ஏகப்பட்ட சானல்! டெய்லி பேப்பர்தான் பெஸ்ட்!"

"இதெல்லாம் எனக்கு ஏற் கெனவே தெரிஞ்ச ரொட்டீன் தான் ஸார். கொஞ்சம் சீரியஸ்ஸா பேசுங்க; இது கிட்நாப் விவகாரம்."

"தெரியுதுப்பா; நீதானே போட் டுத் தந்திருக்கே, பெஞ்ஜமின் படம். அவனைக் கண்டுபிடி, பெண்டாட்டி தன்னால் வீடு வந்து சேருவா."

வெறுத்துப் போய் ரிஸீ வரை விட்டெறியாத குறையாக வைத்தான். உடன் ஒலித்தது. 'யார்? ஒருவேளை சாயா?' மின்னல் வேகத்தில் ரிஸீவர் செவிக்குப் பாய்ந்தது. சாயாவின் அப்பா.

"எனக்கு பயமாயிருக்கு, மாப்பிள்ளை" என்றார்.

"எனக்கும்தான் மாமா. ரெண்டு காரியம் சொல்றேன், செய்யறீங்களா?" மருதகாசி சொன்ன யோசனைகளை செய லாக்குமாறு கேட்டுக் கொண்டான்.

"கார்த்தால முதல்வேலையா..." என்றார்.

"சரி, கவலைப்பட்டு கொட்டக்கொட்ட முழிச்சிக்கிட்டு உட்கார்ந்திருக்கிறதால ஒரு பிரயோஜனமும் இல்லே. தூங்கப் பாருங்க" என்று கூறி ரிஸிவரை வைத்தான். ஆனால் உபதே சத்தை அவனாலேயே கடைப்பிடிக்க முடியவில்லை. தூக்கத் துக்குப் பதில் துக்கம்தான் வந்தது.

புத்தகம் படித்தபடியே ஆடி விழுந்த சின்னியை கைத் தாங்கலாக அழைத்துப் போய் படுக்க வைத்தான். போர்த்தி விட்டு ஃபான் சுழலச் செய்தான்.

"என்னடா நடந்தது?" என்றார் அப்பா. "சரியாத்தானே இருந்தா? எப்படி திடீர்னு..."

கடத்திப் போகப்பட்டிருக்கலாம் என்பதற்கான கார ணத்தை விளக்கினான். போட்டோ விவகாரமும் சொன் னான். "அது அவளுக்குக் கிடைத்திருக்கலாம்... அதனால் கோபப்பட்டு..."



"நீ அவகிட்ட உடனே சொல்லியிருக்கணும். ன்னை பிளாக்மெய்ல் பண்ணுறாங்கன்னு அவ ளுக்குத் தெரிஞ்சிருந்தா ஏமாந்திருக்க மாட்டா."

"பெஞ்ஜமின் இந்த அளவுக்குப் போவான்னு நான் எதிர்பார்க்கலே. இவ என்னை முழுசா நம்பி என் விளக்கத்தை ஏற்றுப்பாளான்னும் சந் தேகம். சும்மா கிடக்கும் சங்கை ஊதிக் கெடுப்பா னேன்னு..."

"பெண்டாட்டிகிட்ட எதையும் மறைக்கிறது தப்பு. இன்னொருத்தர் மூலமா தெரிய வரதுல தான் ஆபத்து அதிகம். கண், காது, மூக்கு வைத்து, கற்பனை விரிந்து பரந்து..."

"அந்த பெஞ்ஜமின் என் கைல ஒரு நாள் மாட்டாமலா போவான்..." பற்களை நறநறத்தான்.

"உனக்காக பிரார்த்திச்சுக்கறேன்" என்று அப்பா ரங்கநாதன் பூஜை அறைக்குள் புகுந்தார்.

மறுநாள் காரியாலயத்தில் அவன் மேஜை மீது இருந்த ஃபாக்ஸ் கடிதம் சோர்வை ஓரளவு அகற்றி நிமிர்ந்து அமரச் செய்தது. பெஞ்ஜமின் பற்றி தகவல் கேட்டு எழுதியதற்கு இன்டர்போல் பாரிஸ் தலைமையகத்திலிருந்து வந்திருந்த பதில்.

அவன் ஃபாக்ஸ் செய்த படத்தின் பிரதிகளை பல ஐரோப்பிய தலை நகர்களுக்கும் அனுப்பிய தில் பயன் இல்லை. அடுத்த கட்டமாகச் சில சிறிய நகரங்களுக்கும் அனுப்பியதில் வெனிஸ் நகரிலிருந்து மட்டும் ஒரு பதில் வந்தது. அவர் களுடைய போலீஸ் ஃபைலில் கிட்டத்தட்ட இந்த சாயல் கொண்ட முகம் இருக்கிறது. பெயர் அன் டோனியோ டி பெஞ்ஜமின். இந்திய பாஸ்

போர்ட். போதை மருந்து வியாபாரத்துக்கு உதவியதாக சந்தேகத்தின் பேரில் கைதாகி, போதிய சாட்சியம் இல்லாததால் விடுதலை.

"தம்மாத்துண்டு தகவல்'' என்று இன்பா முகம் சுளித்தான். ஆயினும் ஏதோ ஒரு படி முன்னேற்றம்... முன்னேற்றம்தானா? போதை மருந்து கடத்தல் பேர்வழி எதற்கு அகிலபாரத ஹிந்து பரிவார் கட்டடத்துக்குக் குண்டு வைக்க வேண்டும்?'தப்புத் தண்டா பண்ணுகிறவர்கள், குண்டர்கள், மாஃபியா கும்பல், யாரானாலும் அவர்கள் செயல்பாட்டிலே ஓர் ஒழுங்குமுறை இருக்கும். அந்த ஒழுங்கு முறையே அவர் களைக் காட்டிக் கொடுக்கும்' என்பதெல்லாம் அவன் போலீஸ் பயிற்சியில் கற்ற ஆரம்பப் பாடங்கள்... அதிகம் சிந்திக்க இடம் தராமல் ஃபோன் ஒலித்தது.

"அனு பேசறேன்."

பரபரப்படைந்தான். அவள் ஃபோன் போடுவது வழக்கமில்லை. தேவையானால் இவன்தான் தொடர்பு கொள்வான்.

"என்ன...? என்ன?"

"ஃபோனில் சொல்ல முடியாது. கார்டன் உட்லண்ட்ஸுக்கு வாங்க; நானும் பர்மிஷன் போட்டுட்டு ஆட்டோ பிடிச்சு வந்து சேர் றேன்."

"சாயா பற்றியா?"

"நேரில் சொல்றேனே" என்ற பதிலிலேயே அவளைப் பற்றிய விஷயம்தான் என்பது ஊர் ஜிதமாயிற்று. கொஞ்சமும் எதிர்பாராத இடத்தி லிருந்து தகவல்! மேஜை மேல் இருந்தனவற்றை அப்படி அப்படியே இழுப்பறைகளில் தள்ளிப் பூட்டினான். மயில் வாகனத்திடம் சொல்லிக் கொள்ளக் கூட தாமதிக்கவில்லை.

டேபிள் பிடித்து, ஒரு கோக் வர வழைத்து ஐந்து நிமிஷங்களை ஓட்டிய பிறகு அவள் வந்து சேர்ந்தாள். அவசரத்திலும் அவனை சந்திக்க வருவதற்காக முகத்தை டச்-அப் செய்து கொண்டிருந்தாள். ஆனால் அவன் கவனிக்கும் மனநிலையில் இல்லை. கேள்விக்குறி தேக்கி ஏறிட்டான்.

"சாயாவிடம் யாரோ நம்மைப் பற்றி தாறு மாறா சொல்லியிருக்காங்க'' என்று கூறிய படியே அமர்ந்தாள்.

"எப்படித் தெரியும்?"

"நேற்று சாயந்திரம் வீட்டுக்கு வந்திருந்தா."

திடுக்கிட்டு நிமிர்ந்தான். கோக் எக்கச்சக்க மாக மூச்சுக்குழலில் இறங்கி, புரை ஏறியது. "பாவி, அவதான் நினைச்சுக்கறா!" என்று தலை யில் தட்டிக் கொண்டான்.

"நீ சின்னவீடு செட்-அப் பண்ணியிருக் கிறதா சாயா எண்ணுகிறாள்."

திகைத்தான். மெல்ல சுதாரித்துக் கொண்டு கம்மிய குரலில், நீ என்ன சொன்னே?"

"உண்மையை. இப்படி வீடு தேடி வர அள வுக்கு விஷயம் வளர்ந்ததுக்கப்பறம் நிஜத்தைச் சொல்றதுதான் நல்லதுன்னு பட்டது. நான் உன்னைக் காதலிச்சது; இன்னமும் காதலிக் கிறது; நீ கல்லூரி நாட்களில் என்கிட்ட அத்து மீறி நடந்துக்கிட்டது; பிறகு வருந்தியது; என் னைக் கல்யாணம் செய்து கொள்ள உனக்குப் பிடிக்காம போனது; என் காதல் ஒரு தலை பட்சமாகி விட்டது... எல்லாவற்றையும்."


"ஒப்புக்கிட்டாளா?"

" 'இன்னும் ஒருவரை ஒருவர் சந்திச்சுகிட் டிருக்கீங்களா'ன்னு கேட்டா. 'உத்யோக ரீதியா அப்பப்ப இன்பா வரு வான்... நான் தடய அறிவியல் துறையில் இருப்பதால்'.. என்றேன்."

"நம்பினாளா?"

"அவருக்கு உன்மேல் அன்பு இருக்கு, நட்பு இருக்கு, ஆனால் காதல் இல்லையாக்கும்!' என்று கிண்டலாகத்தான் கேட்டா. அந்த பரி காசப் புன்னகையை என்னால் மறக்கவே முடியாது!"

வெயிட்டர் வந்துநிற்க காப்பி ஆர்டர்



"பட்டாசுக் கடைக்கெல் லாம் என்னோட வரவேண் டாம்னு உனக்கு எத்தனை தடவை சொன்னேன்? உன் னால கடைக்காரர் பேயறைஞ்ச மாதிரி ஆயிட்டார் பார்!"

"அப்படி என்ன கேட்டுட் டேன்?! தீபாவளிக்குக் கட்டிக் க்கப்போற புடைவை கலருக்கு மேட்சா, அதே கலர்ல பொறியா கொட்டுற புஸ்வாணம் இருக்கு தான்னு கேட்டேன்! அவ்ளோ தானே?"

— நாகலை இளவல்



''எதுக்கு மெட்டல் டிடக்டர் மூலம் சோதனை போட றீங்க மாமா?''

''தலை தீபாவளியின் போது நீங்க கேட்ட சீர்வரிசையை நான் தராத கோபம் உங்களுக்கு இன்னும் இருக்கான்னு கண்டு பிடிக்க....!''

செய்தான்– அவளுக்காக. "சாயாவுக்கு உன் விலாசம் கொடுத்தது யார்? விசாரிக்கலையா?"

"கேட்டேன். கூரியரில் ஒரு கடிதம் வந்ததாம், 'சின்ன வீடு' என்று குறிப்பிட்டு என் பெயர் இல்லாமல், விலாசம் மட்டும் தரப்பட்டிருந்ததாம்."

'கடிதம் அனுப்பியது என்னைப் பின் தொடர்ந்து வந்து, ரஸியாவுடன் சேர்த்துப் புகைப்படங்கள் எடுத்தவனாகத்தான் இருக்க வேண்டும். அவன் அனுபமா வீட்டுக்கும் என்னை நிழலாகத் தொடர்ந்திருந்தால் ஆச்சர்யமில்லை. சின்ன வீடு என்று முடிவு கட்டி சாயாவுக்கும் தெரிவித்திருக்கிறான். கூடவே ஒரு செட் புகைப்படங்களையும் அவளுக்கு அனுப்பியிருக்கலாம். அவற்றை அனுபமாவிடம் காட்ட வேண்டிய அவசியமில்லை என்று சாயா கருதியிருக்கலாம். எதையும் உறுதியாகத் தீர்மானிக்க முடியவில்லை. ஊகங்கள்... ஊகங்கள்...'

"அப்புறம் என்ன நடந்தது? வேற என்ன பேசினீங்க?"

"விசேஷமா ஒண்ணுமில்லே. 'போயிட்டு வரேன்'னு புறப்பட்டுட்டா."

"எங்கே போறேன்னு ஏதாவது சொன்னாளா?"

கோப்பையை வாயருகே கொண்டு போனவன் துணுக்குற்றதில் காப்பி தளும்பியது. உடையில் படாமலிருக்க முன்னுக்குச் சாய்ந்ததில் மேஜை மீது சிந்தியது.

"இல்லியே ஏன்? வீட்டுக்குப் போறேன்னு சொன்னதாத்தான் நினைச்சேன்!" கண்கள் அகல விரிய, "எதுக்கு கேட்கறே?" என்றாள். அப்போதே அவளுக்குப் புரிந்துவிட்டது போல்தான் இருந்தது. என்றாலும் அவன் வாயால் கூறக்கேட்டு உறுதிப்படுத்திக் கொள்ள விரும்பினாள்.

"சாயா நேற்று ராத்திரி வீடு திரும்பலை, அனு" என்றான் குரல் நடுங்க.

அவன் கரங்களைத் தன் இரு உள்ளங்கைகளிலும் பொத்தி மூடினாள். "ஐம் ஸாரி' இன்பா... கவலைப்படாதே; ரெண்டு நாள்ல கோபம் அடங்கித் திரும்பிடுவா. நான் எதையும் மறைக்கலே, உண்மைதான் பேசியிருக்கேன் றதை உணரும்போது, தப்பு ஏதும் நடக்கலைங்கிறதும் புரிஞ்சுடும். சமாதானமடைஞ்சு வந்துடுவா; நிச்சயம் வரத்தான் போறா."

"விஷயம் அவ்வளவு சுலபமானது இல்லே, அனு. ஒரு வேளை என் எதிரிகள் அவளை கிட்நாப் பண்ணிட்டுப் போயிருக்கலாமோன்னு சந்தேகிக்கிறேன்."

"யாரு? வெடிகுண்டு வீரர்களா? இருக்காது. கடத்திக்கிட்டுப் போயிருந்தா இந்நேரம் ஃபோன் பண்ணி, தங்கள் தேவை கூறி, மிரட்டி இருப்பாங்களே. சாயாவின் குரலைக் கூட நீ ஃபோனிலே கேட்க அனுமதிச்சிருப்பாங்க."

"ஒருவேளை நான் அவங்களை நெருங்கி வரதை உணர்ந்து, இவளை ஆபத்துக்கு ஒரு பாதுகாப்பு கவசமா உபயோகிக்க தீர்மானிச்சிருந்தா?"

"எனக்கு அப்படி தோணலை. ஒருவேளை அதுவே நிஜமாயிருந்தாலும் சமயம் வரும்போது அவர்களையும் வென்று சாயாவையும் மீட்கிற சாமர்த்தியம் உனக்கு உண்டு." தன்னிடம் நம்பிக்கை உள்ளதாக அவள் காட்டிக் கொண்டது அவனுக்கு ஆறுலாய் இருந்தது.

"இதிலே இன்னொரு கோணம் இருக்கு அனு; அந்த ஆங்கிள் உனக்குத் தெரியாது" என்று ஆரம்பித்து, ரஸியா பற்றியும் புகைப்படங்கள் குறித்தும் சொன்னான். "உன் விலாசம் தந்தவன், அந்தப் புகைப்படங்களையும் அவளுக்குக் கிடைக்கச் செய்திருக்கலாம்னு சந்தேகிக்கிறேன்."

எல்லாவற்றையும் அனுதாபத்துடன் கேட்டுக் கொண்டவள், சற்று யோசித்து, "ஃபோட்டோக்கள் அவளுக்குக் கிடைச்சிருக்குன்னே வைச்சுப்போம்; அதுபற்றி உன்னிடம் விளக்கம் கூடக் கேட்காமலா ஓடிடுவா?"

"அவ புத்திசாலிதான்; ஆனா ரொம்ப உணர்ச்சி வசப்படறவ. எனக்கு அவ திரும்ப வேணும் அனு!" அவன் கண்கள் குளமாக, அவன் விரல்களை வருடினாள்.

"உணர்ச்சிகள் பால் பொங்குவது போல, இன்பா! சிறிது நீர் தெளித்து அடக்கி, சிந்தனையால் கிளறினால், மெல்ல கொதித்து இறுகும். முடிவு பாஸந்தி போல திரண்டு இனிக்கும். ரெண்டு மூணு நாள் அவளுக்கு அவகாசம் கொடு."

கொடுத்தான். காத்திருந்தான். மூன்று நாட்கள் பல ஃபோன் கால்களை ஆர்வமுடன் எடுத்து ஏமாற்றமடைந்த பிறகு, நான்காம் நாள் மாலை வேண்டாவெறுப்புடன் ரிஸீவரை எடுத்து, அதட்டலாக "ஹலோ" கூற, மறுமுனையில் ஒரு பெண்ணின் விம்மல் ஒலி கேட்டது!

(தொடரும்)

இருந்த நடிப்பாற்றலை இனம்கண்டு கொண்ட தேவிகாராணி, அவரை மிலிட்டரி காண்டீன் கிளார்க் உத்தியோகத்திலிருந்து இழுத்து, 'ஜாவர் பாட்டா' என்ற படத்தில் நடிக்க வைத்தார். தொடர்ந்து, 1947-ல் அவர் நடித்து வெளிவந்த 'ஜுக்னு' என்ற படம் அவருக்குத் திருப்பு முனையானது! அதன் மூலம் புகழின் உச்சிக்கே சென்ற அந்த ஸ்டார் – திலீப் குமார்!

இன்னொருவர், பஞ்சாப்காரர். 1923-ல் லாகூரில் பட்டப் படிப்பை முடித்து விட்டு, அடங்காத நடிப்பார்வத்தால் பம்பாய்க்கு ரயில் ஏறினார். கையில் இருந்தது வெறும் முப்பது ரூபாய்!

நடிக்க வாய்ப்பு கிடைப்பது அத்தனை சுலபமாக இல்லை – அப்போதே! போர்க்காலமாதலால் ராணுவ சென்சார் அலுவலகத்தில் வேலை கிடைத்தது. ராணுவ வீரர்கள் தம் குடும்பங்களுக்கு எழுதும் கடிதங்களைப் படித்து, சென்சார் செய்யும் அந்த வேலைக்கு சம்பளம் அறுபத்தைந்து ரூபாய்! அதில் நாற்பத் தைந்து ரூபாயைத் தம் தங்கைகளின் படிப்புச் செலவுக்காக அனுப்பி விட்டு, மீதி இருபதில் காலம் தள்ளுவார்.

நேரம் கிடைக்கும் போதெல்லாம் சின்னச் சின்ன அமெச்சூர் நாடகங்களில் நடித்து, 1945-ஆம் ஆண்டு ஒரு திரைப்படத்தில் வாய்ப்பு கிடைக்கப் பெற்றார். படம் சூப்பர் ஹிட்! மென்மையான காதல் ஹீரோவாக, நாடு முழுவதும் மக்களின் கனவு நாயகனாக வலம் வந்து – இன்றைக்கும் நடித்துக் கொண்டு திரை உலகில் தமது பொன் விழாவை இந்த ஆண்டு கொண்டாடும் அவர் தேவ் ஆனந்த்!

– **கலா**

நன்றி : **ராஷ்ட்ரீய சகாரா**



என்ன காரணம்?

புனேயைச் சேர்ந்த 52 ஜில்லா பரிஷத் அதிகாரிகள் மைசூர் மற்றும் பெங்களூரில் உள்ள பல்வேறு உரத் தொழிற்சாலைகளுக்கு 'கல்விச் சுற்றுலா' என்ற பெயரில் போய் ஜாலியாகப் பொழுதைக் கழித்து விட்டு வந்தனர். இந்தச் சுற்றுலாவுக்கு அரசு அனுமதித்த தொகை ரூ. 12,000தான். ஆனால் அவர்கள் செலவு செய்தது ரூ. 70,000. அதைப் பற்றி அவர்கள் துளியும் கவலைப்படாமல் ரூ 70,000க்கான பில்களை மாநில அரசுக்கு அனுப்பி வைத்தனர். காரணம் வழக்கம் போல் அரசாங்கம் எந்தக் கேள்வியும் கேட்காமல் செலவு செய்த தொகைக்கான பில்களை அப்படியே 'பாஸ்' செய்து விடும் என்ற தைரியம் தான்.

ஆனால் இம்முறை நடந்தது என்ன தெரியுமா? 'அதிகமாகச் செலவு செய்த பணத்தை உங்கள் கையிலிருந்து கட்டுங்கள்' என்று ஒரு தாக்கீதை அரசு அவர்களுக்கு அனுப்பி வைத்தது!

''டூர் கிளம்பும் போது மஹாராஷ்ட்ராவில் காங்கிரஸ் கட்சி ஆட்சியிலிருந்தது. எங்கள் பில்கள் மேலிடத்தைச் சென்று அடையும் போது பிஜேபி - சிவசேனா ஆட்சிக்கு வந்து விட்டது. அதுதான் காரணம்'' என்கிறார் இதன் தலைவர் கோல்டே.

நன்றி : இந்தியன் எக்ஸ்பிரஸ்

– க. மாரியப்பன், கோவை.

கி. ராஜேந்திரன்

விம்மல் ஒலி கேட்டதுமே, "சாயா! சாயா! அழாதேம்மா! எங்கே இருக்கே சொல்லு! இதோ ஓடி வரேன்" என்றான். அடுத்தகணமே அவள் அருகே ஆதரவாக நிற்கத் துடித்தான்.

"நான் சாயா இல்லே ஸார், ரஸியா!"

"சே! நீதானா!" ஏமாற்றமும் வெறுப்பும் பொங்கச் சொல்லி விட்டான். 'எல்லா கஷ்டத்துக்கும் இவள் தானே காரணம்?' என்ற கசப்புணர்வைத் தவிர்க்க முடியவில்லை.

மறுமுனையில் விம்மல் அதிகரித்தது. "ஸோ ஸாரி ஸார்! ஒரு அபாயம், ஆபத்துன்னா ஃபோன் பண்ணச் சொன்னீங்க. அந்த தைரியத்துலதான் டயல் செய்தேன். உங்களுக்கு வெறுப்பா இருக்கு. வைச்சுடறேன்."

சொன்னாளேயொழிய வைக்கவில்லை. அவளிடம் கோபப்படுவதில் அர்த்தம் இல்லை என்பது மட்டுமல்ல; அறிவீனம் கூட என்று உடன் உணர்ந்து, "இரு... இரு... ரஸியா! இப்ப என்ன புது ஆபத்து?" என்றான்.

"தபால்ல ஒரு பாக்கெட் வந்திருக்கு ஸார்!"

"ஓப்பன் பண்ணாதே! பார்ஸல் குண்டா இருந்து தொலைக்கப் போறது! நான் வர்றேன்."

"பார்ஸல் குண்டா இருந்தா தேவலையே ஸார். ஒருவழியா செத்துப் போயிடலாம். இது அதைவிட மோசம். அருவருப்பானது, கொடூரமானது!"

உடனடி ஆபத்து இல்லை என்று தெரியவந்ததில் நெடுமூச்சு பிரிந்தது.

"எங்கேயிருந்து பேசறே?" பி.ஸி.ஓ. தானே?"

"ஆமா."

"பொது இடத்துல நாம் சந்திக்கிறது விபரீதமா முடியறது. நீ வீட்டுக்கே திரும்பிப் போ. நான் அரை மணியிலே வரேன்" என்றான்.

யமாஹாவில் போய் இறங்கி, எக்ஸ்நோரா நட்டிருந்த சாலையோர மரக்கன்றின் பின்னால் தன்னை மறைத்துக் கொள்ள முயன்று தோல்வி தழுவிய ஸி.ஐ.டியிடம், ஐ.டி. அட்டை காட்டி விட்டுப் படியேறினான்.

பள்ளி மாணவியாக இல்லாமல் ஒரு நக்மாவாகவோ ரோஜாவாகவோ தன்னை உருமாற்றிக் கொள்ள அரும்பாடுபட்டிருந்தாள். லிப்ஸ்டிக்கும் ரூஷூம் ஐப்ரோ பென்சிலும் மஸ்காராவும் டீ ரோஸ் ஸெண்டும் யார்ட்லி பவுடரும் மழுமழுப்பான கால்களைக் காட்டிய மினி ஸ்கர்ட்டும் எதையும் வெளிக்காட்டாமலேயே ஆர்வத்தை வளர்த்த ஃப்ரில் வைத்த பிளவுஸூம் 'சொக்கப் போகிறாயா இல்லையா' என்று மிரட்டின!

காப்பியுடன் வரவேற்றாள். "இன்ஸ்டண்ட் காப்பி இல்லே ஸார். அசல் காப்பி! கொட்டை வறுத்து, அரைத்து, டிகாக்ஷன் இறக்கி நானே போட்டேன்" என்று பெருமையாகச் சொன்னாள்.

ஆவி பறக்க கமகமத்தது. பிற்பகல் நேரம். பெற்றோர் வீட்டில் இல்லை. வந்த காரியம் சீக்கிரம் முடித்துத் திரும்புவது நல்லது...

"என்னமோ பார்ஸல்னே, பயங்கரம்னே..."

"அந்தச் சனியன் இருக்கவே இருக்கு. முதல்ல காப்பியைச் சாப்பிடுங்க. அப்புறம் பார்க்கலாம்."

ஸிப் செய்தவன், சட்டென்று கோப்பையை மேஜை மேல் வைத்தான். "ஏய்! மறுபடி என்னை ஏமாத்தறயா என்ன! கடைசில புலி வரது கதையாயிடும்!"


"இல்லே ஸார்! நிஜமாத்தான்! ஆனா பாருங்க. உங்க கிட்ட ஃபோன்ல பேசினதுமே பயம் போயிடுச்சு. என்ன ஆபத்தானாலும் நம்மைக் காப்பாத்த ஒருத்தர் இருக்கார்ன்ற தைரியம். ஏன் ஸார், ஸஃபாரிக்குள்ள தோள்ல துப்பாக்கி தொங்க விட்டிருப்பீங்கல்ல? ரிவால்வர்! அதைக் கொஞ்சம் எடுத்துக் காட்டறீங்களா? ரொம்ப நாளா பார்க்கணும்னு ஆசை!"

"ரிவால்வரையெல்லாம் தொட ஒரு தகுதி வேணும்!"

"என்ன ஸார் செய்யணும்? மூணு நாள் பட்டினி கிடந்து, ரெண்டு நாள் கண் முழிச்சு, ஒருநாள் பூரா பத்திர காளியை பூஜை பண்ணணுமா?"

"உன் பாப்பா புத்தியை கொஞ்ச நேரமாவது மூட்டை கட்டி வைக்க மாட்டியா?"

"ஊஹூம்! என்னால முடியாது ஸார். அதுவும் உங்களை நேரிலே பார்த்துட்டா உற்சாகம் பிய்ச்சுக்கிட்டுப்



போகுது. லேசுப்பட்ட ஆளா நீங்க! ஸி.பி.ஐ.! இண்டர்போல்! ஜேம்ஸ் பாண்டும் ஷெர்லாக் ஹோம்ஸூம் கலந்து வந்த அவதாரம்!"

'ஆமாம், பெண்டாட்டியைக் கூடக் காப் பாற்றத் தெரியாத 007' என்று நினைத்தான்.

"காப்பி ரஜினியா இருக்கா ஸார்? ஸூப்பரா, சூடா..."

"ஓ! ஏ கிளாஸ்" என்றான் நிஜமான ரசனை யுடன்.

"தினம் இதே மாதிரி காப்பி போட்டுத் தரேன் ஸார்! நீங்க சரின்னு சொல்ல வேண் டியதுதான்."

"உன் அசட்டுத்தனத்துக்கு ஒரு முடிவே இல்லையா?"

"அப்பா அம்மா கூட ஆட்சேபிக்க மாட்டாங்க. யார் தலைல என்னை கட்டறதுன்னு அவங்களுக்கு ஒரே கவலை!"

"உனக்குன்னு ஒருத்தன் பிறக்கா மலா இருப்பான்?"

"சந்தேகம்தான் ஸார். ஒரு முஸ்லிம் அம்மாவுக்கும் ஹிந்து அப்பாவுக்கும் பிறந்தவளுக்கு வரன் தேடி கல்யாணம் பண்ணி வைக்கிறது பகீரதப் பிரயத் தனம். அதனால அவங்களை மாதிரியே நானும் லவ் மேரேஜ் செய்துகிட்டா சந்தோஷப்படுவாங்க."



"காதல் கல்யாணத்துக்கு ஆணும் பெண்ணுமா இரண்டு பேரோட சம்மதம் தேவை. இதுக்கு என்னோட ஒப்புதல் இல்லே."

"ஏன் ஸார் பயந்து ஒதுங்கறீங்க? உங்க மனசு என்னை லவ் பண்றதை தைரியமா ஒப்புக் கொள்ளுங்களேன்."

"லவ் என்ற வார்த்தைக்கு ஆங்கிலத்திலே ஏகப்பட்ட அர்த்தம் இருக்கு. காதலுக்கும் அதுதான்; காமத்துக்கும் அதுதான்; தாய் பாசத்துக்கும் சகோதர அன்புக்கும் கடவுளின் கருணைக்கும் கூட, அதே வார்த்தைதான்."

"ஜூனியர் காலேஜ்ல ஏகப்பட்ட லெக்சர் கேட்கிறேன் ஸார். வீட்டிலே வேற வேண்டாம்."

அவன் எழுந்தான், "நானும் என் நேரத்தை வீணடிப்பதற்காக இங்கே வரவில்லை" என்றான்.

"நேரம் என்ன ஸார், உங்க வாழ்க்கையே வீணாகிட்டு இருக்கு. ஓ.கேன்னு ஒரு வார்த்தை சொல்லுங்க. கல்யாணம் முடிஞ்சு ஒரே வருஷத்திலே ரெண்டு கைகளுக்கும் ரெட்டைக் குழந்தைகளா பெற்றுத் தரேன்!"


பலவீனமான இடத்தில் அடித்தாள். பற்களை நறநறத்து, கோபத்தை அடக்கிக் கொண்டான். "ரஸியா" என்று பொறுமையாக அழைத்துப் பேசினான்; "பருவ மாற்றம் உன்னை ரொமாண்டிக்கா பேச வைக்கிறது. நாவல்களைப் படிச்சுட்டு கற்பனைகளில் இறங்கறே. இது அசட்டுத்தனம். வாழ்க்கையை மேம்போக்கா பார்க்கிறதும் காதலைக் கனவு போல பாவிக்கிறதும் தப்பு. படிப்பிலே தீவிர கவனம் செலுத்து. நாளடைவில் மனசு தெளியும். உனக்கேற்ற ராஜகுமாரனை சமயம் வரும் போது இனம் கண்டுகொள்வே."

அவள் கோபமாக முகத்தைத் திருப்பிக் கொண்டாள். அவனுக்குப் பரிதாபமாக இருந்தது. அதனால் இன்னும் சொன்னான் : "எனக்குக் குழந்தை இல்லேன்ற வருத்தம் இருக்கத்தான் செய்யுது. அதை மறைக்கலே. ஆனா சாயா மூலம்தான் நான் புத்திரபாக்கியத்தை அடைய விரும்பறேன். அதுக்காக எத்தனை காலம் வேணும்னாலும் ஏக்கத்தோடு காத்திருப்பேன். அது ஒரு தவம். அதுதான் காதல்."

அவள் அவனைத் திரும்பிப் பார்த்தாள். கண்களில் நீர் தளும்பி கன்னங்களில் வழிந்தது. அந்த ஒரு கணத்தில் அவள் சிறுபிள்ளைத்தனம் மாறி மனமுதிர்ச்சி பெற்று விட்டது போல் காணப்பட்டாள்.

"ரொம்ப லக்கி ஸார் உங்க சாயா" என்ற போது குரல் தழுதழுத்தது. "உங்களைக் கணவனா அடைஞ்சிருக்காங்களே!"

'அவ அதிர்ஷ்டத்தையும் என்னோட வீரத்தையும் நீதான் மெச்சிக்கணும்' என்று முணுமுணுத்துக் கொண்டான். சாயாவை இழந்து



நிற்பதால் ஏற்பட்ட டென்ஷன் முன்னிலும் அதிகமாயிற்று.

"ஒருநாள் அவங்களை வந்து சந்திக்கணும் ஸார்."

"ஓயெஸ். அவளைத் தேடி கண்டுபிடிச்சதுக்கப்புறம் அழைச்சிட்டுப் போறேன்."

"தேடி கண்டுபிடிக்கிறதா?" புருவ வில்கள் வளைந்து கொடுக்க, புதிரான பார்வை சந்தேக அம்புகளைச் செலுத்தின.

"ஆமாம். பேப்பர்ல கூட அவ படம் வந்திருக்கே! நீ ஒருவேளை கவனிச்சிருக்க மாட்டே. அவ இப்போ என்னோட இல்லாததுக்கு நீதான் காரணம்!"

"ஸார்!" – பதறினாள்.

"பயப்படாதே! உன்னை அறியாமலேயே நீ காரணமாகியிருக்கே" என்று புகைப்படங்கள் விஷயம் விளக்கினான்.

"என்னை மன்னிச்சுடுங்க ஸார்" என்று விரல்களால் தன் கண்களையும் கன்னங்களையும் துடைத்துக் கொண்டே சொன்னாள்.

"போகட்டும், என்னை எதுக்குக் கூப்பிட்டே, அதைச் சொல்லு சீக்கிரம்."

பக்கத்து அறைக்குள் போய் பார்சலை எடுத்து வந்தாள். அதைத் தாறுமாறாகக் கிழிக்காமல் ஒட்டப்பட்டிருந்த இடத்தில் லேசாகக் கீறி, பிரித்திருந்தாள். மேலே ஸ்டாம்பு ஒட்டி அவள் பெயர் விலாசம் எழுதிய தாள் சுற்றியிருந்தது. உள்ளே அட்டைப் பெட்டி.

திறந்தான். அருவருப்பில் முகம் சுளித்தான்.

உள்ளே ஒரு கரப்பான் பூச்சி. கனமான அட்டை மீது மல்லாக்கப் படுக்க வைத்து நகர முடியாமல் இரு இடங்களில் ஊசி குத்தியிருந்தது. இன்னும் உயிருடன் இருந்தது. வேதனையில் கால்களையும் மீசையையும் இயந்திர கதியில் அசைத்துக் கொண்டிருந்தது.

"இது என்ன அக்கிரமம்? சிலுவையில் அறையப்பட்ட ஏசு மாதிரி? இப்படி ஒரு பூச்சியை வதைப்பவன் மனுஷனையும் கொடுமைப்படுத்தத் தயங்கவே மாட்டான்."

"அப்பவே இதுக்கு விடுதலை கொடுத்திருப்பேன்; நீங்க பார்க்கணுமேன்னுதான்..."

பெட்டியை மூடினான். "நீதான் எனக்கு பென்ஜமினை அடையாளம் சொன்னே. என்னை அடிக்கடி சந்திக்கிறே. அவனோட கட்டளையை மீறி நடந்துக்கறே. அதனால உன்னை எச்சரிக்கிறான்!"

"ஐயோ!"

"நீ ரொம்ப ஜாக்கிரதையா இருக்கணும், ரஸியா. நாங்க ஸி.ஐ.டிக்கள் மூணு பேரை ஷிஃப்டுல போடலாம். ஆனா, அவங்களை விட உன்னைக் காப்பாத்தக் கூடியது உன்னோட நடத்தைதான். சாமர்த்தியமா, சமர்த்தா நடந்துக்க."



புறப்பட்டான். வீதியில் கரப்புக்கு விடு தலை தந்து, வீட்டை அடைந்த போது அந்த கரப்பான் போலவே மனம் காயமடைந்து உடலும் சோர்வுற்றிருந்தது.

அப்பா பிலஹரி ராகத்தில் ஹிந்து நாளிதழ் செய்தி ஒன்று படித்துக் கொண்டிருந்தார். அவன் வந்து ஷூ கழற்றி, ஸாக்ஸ் உறுவிய போதும் தொடர்ந்து பாடினார். 'சூரியா சுவாமி' என்று பெயர் அடிபடவே காது தீட்டினான்.

"குருஜி அமெரிக்கா போறாரா! சக்கை போடு! கிளிண்டன் காட்டிலே மழைதான்!" என்றான் உற்சாகமாக.

"மீனம்பாக்கம் விமான நிலைய பேட்டி" என்றார் அதே ராகத்தில்.

"என்ன சொல்லியிருக்கார்?"

"ஹிந்து மதம்தான் எல்லா மதங்களையும் மதிச்சு மரியாதை செலுத்தறதாம். அதனால தான் ஹிந்து மதத்துக்கு உலகெங்கும் வரவேற்பாம். அதன் ஒரு வெளிப்பாடுதான் இவர் அமெரிக்காவுக்கு அழைக்கப்பட்டிருப்பதாம்."

"எத்தனை நாள்?"

"தெரியலே. முதல்ல ஒரு மாசம் ஐரோப்பிய நாடுகள்ல சுற்றுப்பயணம். அப்புறம் அமெரிக்கா. போற இடமெல்லாம் மத இணக்கம், ஒற்றுமைக்குப் பாடுபடுவேன்னு சொல்லியிருக்கார். 'குண்டு வெடிக்கிறதுக்குப் பதிலா பூக்கள் மலரணும்'னு ஒரு இயக்கம் ஆரம்பிச்சிருக்கார். அதன்படி ஒவ்வொருத்தனும் தினம் ஒரு மலரை வேற்று மதத்தைச் சேர்ந்த ஒருவனுக்குக் கொடுக்கணும்!"

"அருமையான ஐடியா! குருஜிக்குத்தான் இப்படி தோணும்" என்று சிலாகித்தான்.

"சாயா இல்லாம சாப்பிடப் பிடிக்கவே யில்லே. ஆனாலும் வயத்தை ரொப்பணுமே? நானும் சின்னியுமா சேர்ந்து உப்புமா கிளறியிருக்கோம். டேஸ்ட் பண்ணிப் பாரு."

"ஆகட்டும்பா" என்று வருத்த தொனிக்கு மாறி, கை கால் கழுவி வந்து அமர்ந்தான். சின்னி பரிமாற, அப்பா, "கேஸ் என்னாச்சு?" என்றார். "ஏதாவது முன்னேற்றம் உண்டா?"

"விசேஷமா ஒண்ணுமில்லேப்பா. பென்ஜமின் பற்றி வெனிஸ்லேர்ந்து தகவல் வந்துச்சு. அங்க போலீஸ் ரிகார்டுல பதிவாகி இருக்கான். ஆனா குண்டு வைக்கிறவனாயில்லே. போதை மருந்து கடத்தறவனா..."

"அதனால...?"

"ஒரு பேட்டர்ன் இல்லியே? பென்ஜமின் பற்றி சின்னி சொன்னது பொருந்தி வருது. ஆனா அதே பென்ஜமின் எதுக்கு அகில பாரத ஹிந்து பரிவார் கட்டடத்துக்குக் குண்டு வைச்சு தகர்க்கணும்?"

"குற்ற இயல்லயும் ஒழுங்குமுறை உண்டுன்னு நீ பாடம் படிச்சிருக்கறது அவங்களுக்கும் தெரிஞ்சிருக்கலாமில்லையா?"

அவன் சாப்பிடுவதை நிறுத்தி ஏறிட்டான். "என்ன சொல்றீங்க?"

"குண்டு வெடிப்பை ஒரு திரையாக அவன் பயன்படுத்தியிருக்கலாம்... உன் கவனத்தை சிதற அடிப்பதற்காகவே..."

உப்புமாவுக்காகத் திறந்த வாய் வியப்பில் திறந்தபடியே இருக்க, கரம் செயலிழந்தது. "அப்பா, ஸி.பி.ஐ. சீஃபா உங்களைத்தான் போடணும்" என்றான்.

"அதெல்லாம் ஒண்ணுமில்லேடா. அகதா கிரிஸ்தில ஆரம்பிச்சு ராபர்ட் லுட்லும், டாம் கிளான்ஸி வரை ஏகப்பட்ட கிரைம் ஃபிக்ஷன் படிக்கிறேனா..."

"சாயந்திரம் இன்னொரு சந்தேகத்தையும் எழுப்பினார்" என்றான் சின்னி. "என்ன தாத்தா அது?"

"பிரமாதமா ஒண்ணுமில்ல. பச்மாரிக்கு ஒரு ஆளை குருஜி அனுப்பியிருக்கிறதா ஊட்டில சொன்னாங்கல்ல...? அது நிஜம்தானான்னு ஊர்ஜிதப்படுத்திக்க நீ மெஸ்ஸேஜ் அனுப்பாமலா இருந்திருப்பே..."

கை உதறி எழுந்தான். "குருஜியின் பேச்சுத் திறமையே என்னைக் குருடாக்கியிருக்கு அப்பா" என்று வாஷ்பேஸினை அணுகினான்.

"டேய்! டேய்! தட்டுல இருக்கிறதையாவது சாப்டுட்டுப் போடா" என்ற அவர் கூப்பாடு செவிடன் காதில் ஊதிய சங்காயிற்று. யமாஹா சத்தம் சில நொடிகளில் கேட்க,

"தாத்தா! உங்க மகன் உங்களுக்கு ஒரு தேங்க்ஸ் கூடச் சொல்லாமல் போறார் பாருங்க" என்று குற்றம் சாட்டினான் சின்னி.

"இதுக்கு நன்றி ஒரு கேடா! அவனை மேற்கொண்டு புதிய ஆபத்துக்கள்ல சிக்க வைச்சதுக்கு என்னை நானே ஜோட்டால அடிச்சுக்கணும்" என்றார் தாத்தா, கைகளைப் பிசைந்தவாறு. விரல்களில் "மளக், மளக்'கென்று சொடுக்கு விழுந்தன.

(தொடரும்)

14

இருட்டு அரண்மனைகள்

இரண்டாவது நாள் பதில் வந்து விட்டது. ஃபாக்ஸ் கடிதம். "பச்மார்ஹிக்கு நேரில் போய் நன்றாக விசாரித்து விட்டோம். சூரியா சுவாமியின் ஆசிரமம் எதுவும் அங்கு உருவாக்கப்படவில்லை. எனவே, அதில் தோட்டம் போட உதகையிலிருந்து யாரும் அங்கு வருவது என்ற கருத்துக்கே இடமில்லை. யாரும் வரவில்லை என்றே உறுதியாகச் சொல்லலாம்."

பச்மார்ஹி சின்ன இடம். அங்கே விசாரணையில் தவறு ஏதும் நேர்ந்திருக்க முடியாது. அப்படியானால் உதகையில் தான் சந்தித்த அந்த மேஸ்திரி கிழவன் தான் தப்பு செய்திருக்க வேண்டும்? என்ன சொன்னான்?

"ஊருக்குப் போயிருக்கான். சாமிதான் அனுப்பியிருக்காரு. பச்மாரின்னு ஒரு இடமாமே? அங்கே ஒரு ஆசிரமம் கட்டுறாராம். தோட்டம் போட அனுப்பியிருக்காரு. திரும்பி வர ஆறேழு மாசம் ஆகும்..."

ஏன் அப்படி பொய் சொன்னான்? இல்லை, எளிய மக்கள் பொய் சொல்ல மாட்டார்கள். அப்படியே சொல்வதென்றாலும் இத்தனை வாசாலகமாக பொய் பேசத் தெரியாது. முதலில் பச்மார்ஹி என்று ஒரு ஊர் இருக்கிறது; அது மத்தியப் பிரதேசத்தில் உள்ள ஓர் எழிலார்ந்த இடம்; சுற்றுலா பயணிகளை ஈர்க்கும் தலம் என்பதெல்லாம் அவனுக்குத் தெரிந்திருக்கவே நியாயமில்லை. அங்கே சூரியாசுவாமி ஒரு ஆசிரமம் அமைக்கிறார் என்றும் அதற்குத் தோட்டம் போட இங்கிருந்து ஆள் அனுப்ப வேண்டும் என்றும் கற்பனை செய்ய சத்தியமாய் அவனால் முடியாது. அவனுடைய கற்பனை, கோவை அல்லது மதுரையில் உள்ள மாமன் அல்லது அத்தை வீடு தாண்டி போகாது. ஆக, அவன் சொன்னது பொய் இல்லை; தான் நிஜம் என்று நம்பியதையே கூறியிருக்கிறான்.


யார் அவனிடம் அப்படி கதை அளந்தது? அவன் மகன் முனியனே அப்படி கூறி விடைபெற்றுப் புறப்பட்டிருக்கலாம். ஆனால் முனியனாலும் இப்படி ஒரு கற்பனைக் காரணத்தை ஜோடித்திருக்க முடியாது. பொய் சொல்ல வேண்டிய அவசியமும் அவனுக்கு இல்லை. எனவே, வேறு யாரோ சொல்லிக் கொடுத்ததைத்தான் அப்படியே அப்பாவிடம் ஒப்புவித்து விட்டு மகன் புறப்பட்டிருக்க வேண்டும். எங்கே போனான்? ரகசியமாக வேறு எதற்கு, யார், எங்கே முனியனை அனுப்பினார்கள்?

குருஜியே அனுப்பியிருப்பாரோ? இருக்கலாம். அதைவிட பென்ஜமினுடன் அவனுக்குத் தொடர்பு ஏற்பட்டு, அவன் கற்றுத் தந்த நாடக வசனத்தைத் தன் அப்பாவிடம் பேசி விட்டு மகன் பென்ஜமினுடன் சேர்ந்து புறப்பட்டு சென்னை வந்தான் என்று நம்புவது எளிது. அதுதான் குண்டு வெடிப்பு கேஸுக்குப் பொருந்தி வருகிறது.

ஆனால் பச்சை குத்தப்பட்ட கிளாவர் சின்னம் விஷயம் உதைக்கிறதே! இறந்தவனின் துண்டிக்கப்பட்ட கரத்தில் இருந்த அந்த சின்னத்துக்கு என்ன விளக்கம்? உதகையில் என்ன சொன்னார்கள்? பச்சை குத்துதல் என்ற உடனேயே எம்.ஜி.ஆர். நினைவுக்கு வர, கிழவன், "நமக்கு அதெல்லாம் பிடிக்காதுங்க" என்றான். மருமகள் பாப்பாயி, "எப்பவுமே நாங்க உதயசூரியனுக்குத்தான் வோட்டுப் போடறது" என்று கட்சி அபிமானத்தை உடைத்துச் சொல்லி விட்டாள்.

முடியைக் கோதி விட்டுக் கொண்டான். யோசிக்க யோசிக்க குழப்பம் அதிகரித்தது. உடனே அனுபமாவைப் பார்க்க வேண்டும். காரசாரமாகப் பேசி அவளை முட்டாளாக்க முயற்சி செய்ய வேண்டும். வாதப் பிரதிவாதங்களால் தான் தெளிவு பிறக்கும். வெண்ணெய் போல் உண்மை திரண்டு எழும்.

அவள் ஃபோனிலே குறிப்பிட்ட நேரத்தில் மாலையில் சென்றான். ஹவுஸ் கோட்டில் அவனை வரவேற்றாள். மேல் பட்டன்கள் இரண்டு பிரிந்து கிடந்தன.




கி. ராஜேந்திரன்

அதுவே அவனுக்குப் பிடிக்கவில்லை. அத்தனை நெருக்கமானவனாக அவள் தன்னைக் கருத வேண்டுமா? புடைவை உடுத்தாவிட்டாலும் சல்வார் கமீஸாவது அணிந்திருக்கலாமே? 'பளிச்'சென்று முகம் கழுவி, லேசாக மேக்-அப் செய்திருந்தாள். ஹவுஸ்கோட்டும் புதிதாக இருந்தது. ஒரு வண்ண மலர் வனத்தை அப்படியே சுருட்டி எடுத்து வந்து உடையாகத் தைத்தது போல் காட்சி தந்தது. அவளுடைய செழுமையான உடலுக்கு ஒரு சைஸ் குறைவாக இருந்து இறுக்கியது.

ஓர் அன்னியோன்னியம் அளித்த சுதந்திரத்துடன் அவள் கேஷுவலாக ஹவுஸ்கோட் அணிந்து அவனை வரவேற்கவில்லை. திட்டமிட்டேதான் அந்த உடையைத் தேர்ந்தெடுத்திருக்கிறாள். என்ன அர்த்தம்? 'வா. இரட்டை சோபாவில் என் அருகில் உட்கார். உனக்காகத்தான் காத்திருக்கிறேன். அள்ளிக் கொள்.'

சாயாவைப் பிரிந்து வாழ நேர்ந்திருப்பது ஒரு பலவீனத்தை வளர்த்து விடக் கூடாது. வழக்கத்தை விட எட்டத்தில் அமர்ந்தான். ஃபேன் காற்றில் முன்முடி மின்னலாக நெளிந்து நெற்றியில் இறங்க, அவள் அவனுடைய பயத்தைப் புரிந்து கொண்டு பரிகாசம் எட்டிப் பார்க்கப் புன்னகை புரிந்தாள். அவள் கண்களைத் தவிர்த்து, "நான் சொல்வதைக் கவனமாகக் கேள்" என்றான்.

அப்பா எழுப்பிய சந்தேகங்கள்; போபாலுக்கு தான் ஃபாக்ஸில் கடிதம் அனுப்பியது; கிடைத்த பதில்; தொடர்ந்து தான் செய்த யோசனைகள் எல்லாம் கூறினான். "விஞ்ஞானம் தப்பே செய்யாது என்று நெஞ்சு நிமிர்த்திச் சொன்னே."



"இப்பவும் சொல்றேன்."

"ஆனா அதைக் கையாண்ட விதத்துல நீ தப்பு செய்திருக்கலாமே?"

"என்ன தப்பு?"

"துண்டிக்கப்பட்ட அந்தக் கரம்... அதிலே வெடிமருந்து காரணமாக ஓரிடம் இலேசாகக் கருகிப் போக அதைக் கிளாவர் சின்னம் பச்சை குத்தப்பட்டதாக நீ நினைத்து...."

"உளறாதே... அப்படியெல்லாம் குளறுபடி நடக்க வாய்ப்பே இல்லை."

"அலட்டாதே... கிளாவர் சின்னம் ஒண்ணு தான் இப்போ இடிக்குது. பென்ஜமின் வந்து போனதை ஒரு தடவையாவது பார்த்தவங்க ஆச்ரமத்துல இருக்காங்க. அதனால தன் அப்பாகிட்ட பச்மார்ஹிக்குப் போறதா சொல்லிட்டு, பென்ஜமினோட சேர்ந்து முனியன் இங்க வந்ததா முடிவு கட்டலாம்."

"ஏன், பென்ஜமினும் அவனுமா இங்க வரும் போது, வழியில் எங்கேயாவது முனியன் பச்சைக் குத்திக் கொண்டிருக்கலாமே?"

"அதுக்கு பென்ஜமின் சம்மதம் தந்து காத்திருந்திருப்பான்னு நம்ப முடியலே."

"பென்ஜமின் உடன் இல்லாத போது? ரெண்டு பேரும் எப்பவுமே சேர்ந்து இருந்திருப்பாங்கன்னு நினைக்கிறியா? முனியன் தோட்டக்காரன்; பென்ஜமினோ அயல்நாட்டவன்னு கூட சந்தேகிக்க இடமிருக்கு. ஸ்டார் ஓட்டல்ல தான் தங்கி இருந்திருப்பான். முனியன் ஏதாவது சந்துல ஒரு லாட்ஜுல. அங்க போய் கதவைச் சாத்திக்கிட்டு முனியனுக்கு பென்ஜமின் டிரெய்னிங் கொடுத்திருக்கணும். பாம் தயாரிக்க இல்லேன்னாலும் வெடிக்கிறதுக்காவது கற்றுத் தந்திருக்கணும். ஹிந்து பரிவார் கட்டடம் இருக்கும் இடம், அந்த வட்டாரம் எல்லாத்தையும் நோட்டம் விட முனியனுக்கு உதவியிருக்கணும். இதற்கெல்லாம் ரெண்டு மூணு நாளாவது ஆகியிருக்கும். இதற்கிடையில பச்சை குத்தறவன் எவனையாவது முனியன் சந்திச்சிருக்கலாம்..."

"குண்டு வைப்பதற்காகத்தான் தன்னை பென்ஜமின் அழைச்சு வந்திருக்கான் என்பது தெரியவந்ததும் முனியன் பயந்து கூட போயிருக்கலாம். தன் கதி என்ன ஆகுமோ? தான் யார் என்பதாவது தெரியவரட்டும் என்பதற்காகத் திட்டமிட்டே பச்சை குத்திக் கொண்டிருக்கலாம்!"

"இப்பத்தான் அர்த்தத்தோட பேசறே" என்றாள். "முனியன் ஏழை. அவன் முன் விரோதத்தால் குண்டுவைக்கப் போவதில்லை. பென்ஜமினின் ஏதோ ஒரு மிரட்டலுக்குப் பயந்து அல்லது பணத்துக்கு ஆசைப்பட்டுத்தான் வந்திருப்பான், ஊட்டிலேர்ந்து."

தலையசைத்து ஒப்புக் கொண்டான். "பென்ஜமின் தோற்றத்தில் அயல்நாட்டான் போலிருந்



ததாக ஊட்டிலதான் சொன்னாங்க. ஒரு ஃபாரின் ஆசாமிக்கு முனியனிடம் இந்த அளவுக்கு நெருங்கி வருவது சாத்தியமா...? வேறெதுவும் இல்லாவிட்டாலும் பாஷையாவது இடையூறா இருந்திருக்கணுமே?"

"அது சரி, ஆனா பாரிஸிலிருந்து வந்த இன்டர்போல் செய்தி, வெனிஸ் நகரில் உள்ள போலீஸ் ரிஜிஸ்தர்படி பென்ஜமினுக்கு இருப்பது இந்தியன் பாஸ்போர்ட் என்று சொல்லவில்லை?"

பளிச்சென்று நிமிர்ந்தான். அந்தக் கணத்தில் தோன்றிய எண்ணம் அவனைத் தூக்கி வாரிப் போட்டது. முகத்தில் திகைப்பு பரவியது.

"என்ன இன்பா? எதுக்கு இப்படி பேயறைஞ்ச மாதிரி பார்க்கறே?"

"அனு! நீ கம்ப்யூட்டர்ல குற்றவாளியின் படம் வரைஞ்சு அவனுக்குப் பல வேஷங்களும் போட்டுப் பார்க்கறே, இல்லியா?"

"ஆமாம். மீசை வைப்பேன், தலைப்பா கட்டுவேன், தாடி வளர்த்துக் காட்டுவேன். இப்படியெல்லாம் வேஷம் போட்டு குற்றவாளி தப்ப முயற்சி செய்யலாம்னு கம்ப்யூட்டர் படம் வரைந்து தருவேன். முக்கியமான கேஸ்கள்ல அது நியூஸ் பேப்பர்கள்ல கூட பிரசுரமாகும்."

"அதுக்குப் பதிலா... அனு... வேஷத்தைக் கலைக்க கம்ப்யூட்டரைப் பயன்படுத்தினா என்ன?"

"என்ன சொல்றே இன்பா?" என்றாள். வியப்பில் விழிகள் விரிந்தன.

"யோசி! பென்ஜமின்! அவன் படத்தைப் பார்த்தாலே வேஷம் போட்டவன் போல தோணலை? ஹிப்பி முடி, காதில் வளையம், நீலக் கண்கள்..."

"ஃபன்டாஸ்டிக்" என்றாள். அவன் கரங்களை உரிமையோடு பற்றி குலுக்கினாள். "இதோ ஒரு நொடியிலே டிரஸ் மாற்றிக்கிட்டு வந்துடறேன்" என்று உள்ளே விரைந்தாள்.

"ஆஃபீஸ் சாவியை மறக்காம எடுத்து வா" என்று குரல் கொடுத்தான்.

செக்யூரிட்டியின் தயக்கத்தில் நியாயம் இருந்தது. "அவசரம்" என்று சொல்லி வாசல்

"சயனைட் அருந்தியும் ஹீரோ சாகவில்லை என்று கதை பண்ணியிருக்கீங்களே - ஜனங்க ஒப்புக்கணுமே?"

"நீங்கதானே சாகாவரம் பெற்ற கதா பாத்திரத்தைப் படைக்கச் சொன்னீங்க!"

— எஸ். குருமூர்த்தி

கதவு திறக்கச் செய்தாள். "பொறுப்பு என்னுது" என்று கூறி ரிஜிஸ்தரில் கையெழுத்திட்டாள். நாளை வரை காத்திருக்க இருவருக்குமே பொறுமை இல்லை. பரபரப்புடன் நடந்து பர்ஸிலிருந்து சாவி எடுத்து தன் அறைக்கதவு திறந்தாள். கம்ப்யூட்டர் பிரிவுக்கு சென்று, ஏஸி போட்டு, கம்ப்யூட்டர் லாக் நீக்கி, கோட் கொடுத்து...

"இப்போதைய என் அனுமானம் சரியென்றால்..."

பென்ஜமின் வண்ணப்படம் திரையில் வர வழைத்தாள். "சரியென்றால்...?"

"காலம் கடந்த ஞானோதயம்."

"பெட்டர் லேட், தென் நெவர்; நம்பிக்கை இழக்காதே!"

படத்தில் மாறுதல்கள் செய்ய ஆரம்பித்தாள். காது வளையம் நீக்கி, புருவங்கள் அடர்த்தி குறைத்து...

"மூக்கில் ஒரு பளபளப்பு கண்டதாக ரஸியா சொல்லியிருக்கா."

"ஒட்டவைத்த ரப்பர் மூக்காக இருக்கும்" என்று அதனை செப்பனிட முற்பட்டாள்.

"கண்களின் நீலத்தை நீக்கு... அது நீல நிற காண்டாக்ட் லென்ஸாக இருக்கலாம். அயல் நாட்டவன் சாயலைத் தரும்."

"முடியை அகற்றி க்ளோஸ் கிராப் வைக்கவா?"

"மொட்டையாகவே விடு" என்றான்.

அந்தத் திருத்தம் முடிந்ததும் இருவருமே விக்கித்துப் போனார்கள். "ருத்திராட்ச மாலையும் நீல ஜிப்பாவும்தான் பாக்கி" என்றாள் அனு, தான் பத்திரிகைகளில் பார்த்துள்ள படங்களின் நினைவில். அவற்றையும் சேர்த்துப் பூர்த்தி செய்தாள்.

கம்ப்யூட்டர் திரையில் சூரியா சுவாமி!

"உதடுகளை சற்று நெளிய விடு; அவன் என்னைப் பார்த்து கேலியாகச் சிரிக்கட்டும்" என்று கூறி சோர்ந்து உட்கார்ந்தான்.

'அப்பா! சில நாள் முன்னதாக எனக்கு ஐடியா கொடுத்து உசுப்பி விட்டிருக்கக் கூடாதா?' என்று மானசீகமாகப் பேசி, பற்களை நறநறத்தான். 'ஆனால் அவரை நொந்து என்ன பயன்? எனக்கல்லவோ யோசனை தோன்றியிருக்க வேண்டும்.'

"என்ன இப்படி இடிஞ்சு போய் உட்கார்ந்துட்டே இன்பா?"

"வேற என்ன செய்யறது அனு? தமது ஐரோப்பிய, அமெரிக்க சீடர்களின் அழைப்பை ஏற்று குருஜி பறந்துட்டாரே!"

"கமான் இன்பா, டோண்ட் கிவ் அப். அடுத்த நடவடிக்கை யோசி. மறுபடி பாரிஸ் – இன்டர்போல் தலைமைக் காரியாலயத்துக்கு ஃபாக்ஸ் அனுப்பு."

"அவங்க தகவல் தருவாங்க, அனு. ஆக்ஷன் எடுக்கிறதுங்கிறது வேற. அதுக்கு குருஜி அவங்க நாட்டு சட்டத்தை மீறியிருக்கணும்; அது நிரூபிக்கப்படணும்."

"அல்லது நம்ம மத்திய அரசு அவனை குற்றவாளியா அறிவிச்சு திருப்பி அனுப்பச் சொல்லி கேட்கணும்."

"ரொம்ப சிக்கலான சமாசாரம், அனு. கைக்கெட்டின தூரத்தில் இருந்தான், ராஸ்கல்! நழுவிட்டானே!" என்று மறுபடி அங்கலாய்த்தான்.

கேசத்தைக் கோதி விட்டு, கன்னத்தில் தட்டிக் கொடுத்தாள். "எனக்கு உன்னிடம் நம்பிக்கை இருக்கு இன்பா. யூ வில் கெட் ஹிம். அவன் உலகத்தின் எந்த மூலைல போய்ப் பதுங்கினாலும் சரி, கடைசில வெற்றி உனக்குத்தான்."

"ஒரு பக்கம் சாயாவைக் காணோம். இன்னொரு பக்கம் சூரியாசுவாமி தப்பி ஓடிட்டான். நான் யாரைன்னு தேடுவேன் அனு?" என்று தழுதழுத்தான்.

ஆற்றாமை குடிகொண்டிருந்த நெஞ்சத்தை அவள் தடவிக் கொடுத்தாள். அவன் சிரத்தைத் தன் உடம்போடு அணைத்து ஆசுவாசப்படுத்தினாள்.

"எதுக்கு முதல்ல லீட் கிடைக்குதோ அதைத் தொடர்ந்து போ. ஒன்றுக்காக இன்னொன்றை அலட்சியப்படுத்தாதே. ரெண்டுமே முக்கியம்தான்."

விலகி, கரம் கொடுத்து நிற்கச் செய்தாள். "முகம் துடைத்து புறப்படு. வாசலில் ஸெக்யூரிடி உன்னை இந்தக் கோலத்தில் பார்க்கக் கூடாது."

அவன் துணிவை வரவழைத்துக் கொண்டு கம்பீர நாடகமாடி நடந்தான். அவளும் அறை பூட்டி புறப்பட்டாள்.

ஸெக்யூரிட்டி அசிங்கப் புன்னகையோடு நேரம் குறித்து வாசல் கதவு பூட்டினான்.

மேலதிகாரிக்கு விளக்கமாக எடுத்துச் சொல்லி, அவர் ஒப்புதல் பெற்று, பாரீஸுக்கு இன்பா அனுப்பிய ஃபாக்ஸ் கடிதமும் குருஜி – பென்ஜமின் படங்களும் இன்டர்போல் தலைமைக் காரியாலயத்தை அடைந்தன. அங்கிருந்து ஒரு வாரம் சென்று பதில் வந்தது :

"வெனிஸில் மறுபடி பென்ஜமின் நடமாட்டம். வலையை அவனுக்கு மட்டுமின்றி அகல வீச வேண்டியிருக்கிறது. நேரில் வரவும்."

(தொடரும்)



காதலுக்கு எய்ட்ஸும் தடையல்ல!

லா ஜென் கிரீன். அமெரிக்க சினிமா உலகில் புகழ் பெற்றுக் கொண்டிருந்த இளம் நடிகை. இருபது பிளஸ் வயது. டிம ரிச் மொண்ட்; ரேஸ் கார் ஓட்டும் இளைஞர். இருவரும் நண்பர்களானார்கள்.

ஒருநாள் ஜென்னின் வீட்டுக்கு வந்த ரிச், "நான் உன்னை மிகவும் நேசிக்கிறேன். உன்னைத் தவிர வேறொரு பெண்ணை என் வாழ்க்கையில் நினைத்துக் கூடப் பார்க்க முடியாது. நீ இல்லாவிட்டால் எனக்கு வாழ்க்கையே இல்லை!" என்று காதல் டயலாக்குகளை அள்ளி வீச, ஜென் அப்படியே உருகிப் போய் விட்டார். ரிச்சுக்கு இதயத்தைத் தனியாகத் தராமல் தம்மோடு சேர்த்து மொத்தமாகவே தந்து விட்டார்!

அடுத்த சில நாட்களுக்குப் பிறகு ரிச், ஜென்னை சந்திக்க வரவில்லை. டெலிபோன் செய்தாலும் சரியான பதில் இல்லை. ரிச் தம்மை ஏமாற்றி விட்டாரோ என்று ஜென் குழம்பிக் கொண்டிருந்த நேரத்தில் வந்த செய்தியொன்று, அதிர்ச்சி தருவதாக இருந்தது.

* ஜென்-டானி : "எங்கள் வாழ்க்கை மிகவும் குறுகியது!"

அதுதான் ரிச் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் இறந்து போய் விட்டார் என்கிற செய்தி!

ஜென்னுக்கு அதிர்ச்சியோடு சந்தேகமும் வர, தமக்கும் எய்ட்ஸ் இருக்கிறதா என்று பரிசோதித்துப் பார்த்த போது, ஆம்; எதிர்பார்த்த மாதிரியே அவருக்கும் எயிட்ஸ்!

"நான் வாழ்க்கையையே வெறுத்தேன். எனக்கும் எய்ட்ஸ் என்பது உறுதியானவுடன் அவமானத்தால் குறுகிப் போனேன். வீட்டிலேயே முடங்கிக் கிடந்தேன். இப்படிப்பட்ட வாழ்க்கை அவசியந்தானா என்று யோசித்து யோசித்துக் குழம்பியதில் என் நிம்மதி தொலைந்து போனது. கடைசியில் பிரார்த்தனையில் நேரத்தைச் செலவிட்டேன். அதன் பிறகுதான் ஓரளவுக்கு நிம்மதி கிடைத்தது!" என்கிறார் ஜென்.

இந்தச் சூழ்நிலையில்தான் டானி கிரீன் என்கிற சக நடிகரின் நட்பு கிடைத்தது. அவருடைய ஆறுதல் வார்த்தைகள் ஜென்னின் மனப்புண்களுக்கு மருந்தாக அமைந்தன. மீண்டும் டெலிவிஷனில் நடிக்கத் தொடங்கினார் ஜென்.

முதலில் ஜென்னுடன் நட்பாக மட்டுமே பழகிய டானி கிரீன், மெல்ல மெல்லத் தமது மனம் ஜென்னின் மீது காதல் கொள்வதை உணர்ந்தார். ஒருநாள் ஜென்னிடம், "நான் உன்னை மணக்க விரும்புகிறேன்!" என்று எந்தவிதமான அலங்கார வார்த்தைகளுமின்றி வெளிப்படையாகச் சொன்ன போது, "நான்சென்ஸ்!" என்று சொல்லி வாய் விட்டுச் சிரித்தார் ஜென்.

"காதல் என்பது மனம் சம்பந்தப்பட்டது. அதனால்தான் உனக்கு எய்ட்ஸ் இருப்பது தெரிந்தும் என் மனம் உன்னையே நாடுகிறது!" என்றார் டானி.

ஜென்னும் டானியின் உண்மையான காதலைப் புரிந்து கொண்டார். கடந்த 90-ஆம் ஆண்டு இருவருக்கும் திருமணம் நடந்தேறியது.

"எங்கள் மணவாழ்க்கை மிக மிகக் குறுகியது என்பது எங்களுக்குத் தெரியும். இறப்புக்குப் பிறகு மீண்டும் நாங்கள் சொர்க்கத்தில் நிச்சயம் சந்தித்துக் கொள்வோம்!" என்கிறார், ஜென்.

முப்பத்து மூன்று வயதாகும் ஜென், இப்போது எய்ட்ஸ் பற்றிய விழிப்புணர்வுப் பணியில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறார்!

நன்றி : **சன்**

தொகுப்பு : **எஸ். சந்திரமௌலி**

பரதன் அச்சகத்தில் அச்சிட்டவர் : வி. முரளி, பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் : கி. ராஜேந்திரன். ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; சந்தா, விளம்பரம் : 2345622; மானேஜிங் டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் : ரூ. 525/-.



துணிச்சலின் வரலாறு!

குடியரசுதின விழா அணிவகுப்பு நடந்து கொண்டிருந்தது. ஒரு பெண் போலீஸ் அதிகாரி, ஒரு காவல்துறை அணிக்குத் தலைமை ஏற்று வருவதைப் பார்த்தார் அன்றைய பிரதமர் இந்திரா காந்தி. மறுநாளே அந்த அதிகாரியைத் தம்முடன் காலை உணவுக்கு அழைத்து கௌரவித்தார்.

கிரண் பேடி மட்டும் பிடிவாதமாக இருந்திரா விட்டால் அவருக்கு இந்தப் பெருமை கிடைத்திருக்காது.

"கையில் கனமான வாளை ஏந்தி பதினைந்து மைல் தூரம் நடக்க வேண்டும். உன்னால் முடியுமா...?"- கிரணின் பெயரைப் பட்டியலிலிருந்து நீக்கிய உயரதிகாரி இப்படிக் கேட்டபோது,

"ஒரு போலீஸ் அதிகாரிக்குரிய அத்தனை பயிற்சிகளையும் பெற்ற நான் இந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டும் என்று நினைக்கிறீர்களா?" என்ற பதில்தான் வந்தது.

மறுபேச்சின்றி, "ஓ.கே! டெல்லி போலீஸ் படைக்கு நீங்களே தலைமை ஏற்று, அணிவகுப்பில் கலந்து கொள்ளுங்கள்" என்றார் ஐ.ஜி.

திகார் ஜெயிலை, திகார் ஆஸ்ரமாய் மாற்றினார் கிரண் பேடி என்பது எல்லோரும் அறிந்ததே. ஜெயிலில் தியானம் பயின்ற ஆயுள் தண்டனைக் கைதி டி.பி. சிங். அவர் கூறுகிறார்:

"என் மைத்துனனைக் கொலை செய்ததற்காகத் தண்டனை அனுபவித்துக் கொண்டிருக்கிறேன். ஒன்பதரை ஆண்டு ஜெயில் வாசத்தில், என் பெற்றோர் ஒரு தடவை கூட என்னை வந்து சந்தித்ததில்லை. பழிவாங்கும் எண்ணமும், என் பெற்றோர் மீது கோபமும் என்னுள்ளே கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்தன. தியானப் பயிற்சிக்குப் பின் நான் முற்றிலும் மாறிவிட்டேன். மனம் அமைதியாகிவிட்டது. என்னை வந்து ஒருமுறை சந்திக்கும்படி என் பெற்றோருக்குக் கடிதம் எழுதியிருக்கிறேன். அவர்களின் காலில் விழுந்து வணங்கி, ஆசிபெற என் மனம் துடிக்கிறது."

திகாரில் கிரண் பேடி நிகழ்த்திய அற்புதங்களைக் கேள்விப்பட்ட அன்னை தெரசா அவரைப் பார்க்க விரும்பினார். அன்னையின் ஆசிரமத்துக்குப் போய், அவரைக் கிரண் பேடி சந்தித்தார். அன்னை, அன்போடு கிரண் பேடியைக் கட்டித் தழுவிக் கொண்டார். சிறிது நேரத்துக்கெல்லாம் இன்னொரு முறையும் தழுவிக் கொண்டார். கிரண் பேடி விடைபெற்றுக் கொண்டு, ஆசிரமத்தின் நுழைவாயில் வரை வந்துவிட்டார். திடீரென, அவரை நிற்கச் சொல்லிவிட்டு வெறும் காலுடன் ஓடிவந்து மூன்றாவது தடவையாய் அவரைத் தழுவிக் கொண்டார். கிரணுக்குச் சந்தோஷமாய் இருந்தாலும் காரணம் புரியவில்லை. "அன்னை தெரசா, என்னவோ தெரியவில்லை. உன்னை இன்னொரு முறை கட்டிக் கொள்ள வேண்டும் போல இருந்தது!" என்றார் சந்தோஷம் பொங்க.

- 'ஐ டேர்' (கிரண் பேடியின் சர்ச்சைக்குரிய பணிக்கால வரலாறு மற்றும் அவரது தனிப்பட்ட வாழ்க்கையைச் சொல்லும் புத்தகம்)

எழுதியவர் : பர்மேஷ் தங்வல்;

வெளியீடு : UBSPD;

சென்னை - 34.

விலை ரூ. 295/-.

15

இரண்டாம் இடம்

கி. ராஜேந்திரன்

வெனிஸ். உலகின் மிக அழகிய நகரங்களுள் ஒன்று. நாள்தோறும் ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகளைக் கவர்ந்திழுக்கும் ‘கால்வாய்கள் நகரம்’. ஏட்ரியாடிக் கடல் உப்பங்கழிகளாக உட்புகுந்து நிலத்தைக் கூறுபோட்டதால் நூற்றுக்கணக்கான தீவுகளை உள்ளடக்கிய நகரம். “கிராண்ட் கனால்” என்று அழைக்கப்படுகிற பிரதானமான பெரிய உப்பங்கழியின் கரையோரமாக கருங்கல் தளம் போடப்பட்ட நடைபாதையில் காலாற நடந்து கொண்டிருந்தாள் சாயா. கடற்காற்று காரணமாக அந்த அகண்ட கால்வாயில் “களுக் களுக்”கென்ற சப்தத்துடன் சிற்றலைகள் எழும்பி விழ, ஸ்பிரே ஸெண்ட் போல நீர்த்துளிகள் உடலில் பட்டு சிலீரிட்டன.

பெரும் பணக்காரர்களை ஏற்றிக் கொண்டு நாடு நாடாகச் சுற்றுலா போகும் சொகுசு கப்பல் ஒன்று, அந்த ஆழமான, அகன்ற கால்வாயில் ‘பூம் பூம்’ என்று ஒலி எழுப்பிச் சென்றது. பயணிகள் மேல்தளத்தில் நின்று கையசைத்து, கரையில் இருப்போருக்கு மகிழ்ச்சி தெரிவித்தனர்.

கால்வாயின் மறுகரையில் புராதன அரண்மனைகளும் மாதா கோயில்களும் மறைந்து கொண்டிருந்த சூரியனின் கடைசி கிரணங்களின் ஒளியில் தகதகத்துக் கொண்டிருந்தன. சீக்கிரமே அவை சாம்பல் நிற நிழலோவியங்களாக மாறத் தொடங்கின. ஒரு மாதா கோயிலில் “டண்-டணால், டண்-டணால்” என்று மணியோசை எழ, சாயா நடந்து கொண்டிருந்த எதிர்க்கரையில் அதன் எதிரொலியே போல் இன்னொரு மாதா கோயிலின் மணி ஒலிக்கத் தொடங்கியது. அடுத்து, எதிரும் புதிருமாக கால்வாயின் இரு கரைகளிலுமிருந்த ஏராளமான மாதா கோயில்களின் மணியோசைகள் வானக் கூரையை நோக்கிப் பரவ, எங்கும் ஒரு சாந்நித்தியம்.

கால்வாய்க் கரையில் ஆங்காங்கே நடைபாதை உணவு விடுதிகள். ஆனால் நடப்பவருக்கு இடையூறு இன்றி, கால்வாய் மீதாக மேடை அமைத்து மேஜை நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. வண்ண விளக்குகளும் மலர் அலங்காரமும் பசிக்காதவர்களுக்குக் கூட பசிக்கும் ஆர்வம் ஊட்டி வரவேற்றன. ‘பளீர்’ வெண்மையில் மேஜை விரிப்புகளைப் பரப்பிக் கொண்டிருந்தான் ஓர் ஊழியன்.

ஒரு நாற்காலியில் அமர்ந்து “ஸ்பகட்டி - டொமேட்டோ ஸாஸ்” என்று ஆர்டர் செய்தாள் சாயா. இடியாப்பம் போல்தான். ஆனால் தடிமனாக இருக்கும்; வழுக்கிக் கொண்டு போகும்; அதை ஃபோர்க் என்கிற முள்கரண்டியில் சுற்றி எடுத்து தக்காளி ‘சட்னி’யுடன் சேர்த்து வாய்க்குள்ளே தள்ளுவது அனுபவமற்றவர்களுக்குப் பெரிய சவால்! சாயாவுக்குத் தெரிந்துதான் இருந்தது. ஆனாலும் வயிற்றை நிரப்பியாக வேண்டுமே! அதுவும் சைவ உணவாக இறங்க வேண்டுமே!

ஸர்வர் திரும்பி வரும் வரை ‘கோக்’ டின் உடைத்து ஸிப் செய்தவாறு சுற்றுப்புற எழிலை ரசித்தாள். இரவு ஒன்பது மணி வரை இருட்டாது என்றார்கள். மங்கலான மாலையே நீடித்தது. எதிர்கரையில் முதல் மின்விளக்கு ஏற்றப்பட்டு மத்தாப்பூவாக கால்வாய் நீரில் பிரதிபலித்தது. சற்று நேரத்தில் இன்னும் ஒன்று, மேலும் ஒன்று. ஒவ்வொரு மின்விளக்கும் இரட்டிப்பாகி நீரில் பூத்தது.

வெனிஸ் பற்றி அவள் படித்ததுண்டு. ஆனால் இத்தனை அழகுக்கு அவள் தயாராக வில்லை. மூச்சு விடவும் மறக்கச் செய்யும் கொள்ளை எழில். அதனை அப்படியே அள்ளிப் பருக தனக்குக் கிடைத்த அதிர்ஷ்டத்தை எண்ணி மகிழ்வதா அல்லது கணவனிடம் கோபித்துக் கொண்டு கிளம்பி வர நேர்ந்த துரதிர்ஷ்டத்தை நொந்து கொள்வதா? இப்போது கூட இதெல்லாம் ஒரு சொப்பனமோ என்று தோன்றியது.

ஆனால் ஏஸி அருகே நிற்பது போல் ஜில்

லென்று உடலைத் தழுவும் காற்று, கால்வாயில் சீறிப் பாய்ந்து செல்கிற மோட்டார் போட், நிதானமாக நகரும் ஒரு கோண்டோலா படகு, தேய்ந்து தேய்ந்து இப்போது தொலைதூரத்தில் கேட்கின்ற மாதா கோயில் மணி ஓசை, ஒரு பெருமிதப் புன்னகையுடன் இத்தாலி நாட்டின் சிறப்பு உணவை அவள் எதிரே வைத்து அதன் இருபுறமும் காவலர் போல ரொட்டிக் கூடையையும் நறுக்கிய பச்சைக் காய்கறி கிண்ணத்தையும் நிறுத்துகிற வெய்ட்டர் - இவையெல்லாம் நிஜம், நிஜம், நிஜமேதான்.



அவள் சென்னையிலிருந்து உதகைக்குச் சென்ற போது, ஃபிராங்க்ஃபர்ட்டுக்குப் பறப்போம், அங்கிருந்து வெனிஸுக்கு வருவோம் என்றா நினைத்தாள்? சூரியா சுவாமியை சந்திக்க முடியுமா, சந்தித்தாலும் பேச முடியுமா, பேசினாலும் அனுதாபத்தைப் பெற முடியுமா, அல்லது அறிவுரை வழங்கி அனுப்பி விடுவாரா என்றல்லவா கவலைப்பட்டுக் கொண்டிருந்தாள்! மாலைப் பிரார்த்தனையும், அரை மணி நேர உபந்நியாசமும் முடிந்து, சுண்டல் விநியோகமும் நடந்து, அவரை வணங்கியவர்களுக்கு ஆசி வழங்கிய நேரத்தில் கூட அவளுக்கு நம்பிக்கை பிறக்கவில்லை. அறிவுரை வழங்கினால் கூடப் பரவாயில்லை; நாலு பேர் முன்னிலையில் கோபித்துக் கொண்டால்...? அவரிடம் என்ன பேசுவது, எப்படிப் பேசுவது என்றெல்லாம் யோசித்து, இரவெல்லாம் மனசுக்குள் ஒத்திகை பார்த்து நெருங்கியவளுக்கு ஆச்சர்யம் காத்திருந்தது.

அவளைப் பார்த்ததுமே ஒரு விரலைச் சுட்டி, புருவம் சுருக்கி, "உன்னோட துக்கத்தின் அனல் அலைகளை நான் உணர்றேன்; முதல்ல சூடு தணியணும், விபூதி வாங்கிக்கோ" என்று கூறிக் கொடுத்தார். அவள் திலகத்துக்கு மேலே உச்சி நெற்றியில் இட்டுக் கொள்ளும் போது, "உனக்கு நெருங்கினவங்க யாரோ சமீபத்துல இங்கு வந்திருக்கணும்; அதனாலதான் இந்த பாதிப்பு எனக்கு ஏற்படறது" என்று கூறி, மெய் சிலிர்க்க வைத்தார். 'மகான்தான் இவர்!'

பக்தர்களுக்கு விடைகொடுத்து அனுப்பி விட்டு பிரதான கட்டடத்துக்குள் அவர் நுழைந்த போது பசுவைப் பின்பற்றும் கன்று போலச் சென்றாள். யாரும் தடுக்கவில்லை. தனி அறையில் கதவு திறந்தே இருக்க, அவர் சிம்மாசனத்தில் சாய, இவள் தரையில் அமர, மறுபடி விபூதி தந்து, "உன் துயரம் எனக்குப் புரியறது; கணவன் சரியில்லே. அப்படித்

லைகள்

தானே?" என்று பரிவுடன் கேட்டார்.

அதுவரை வைராக்கியமாய் இருந்தவள், நிலைகுலைந்து விம்மி அழுதபடியே அவர் பாதங்களை நமஸ்கரித்தாள். "சுவாமி, என்னை இந்த ஆசிரமத்தில் ஏற்றுக் கொள்ளுங்க; சந்நியாசினி ஆகி விட உபதேசம் பண்ணுங்க" என்றாள்.

கொஞ்சமாகச் சிரித்தார் சூரியா சுவாமி. "நீ நினைக்கிறது போல சந்நியாசம் வாங்கிக்கிறது அவ்வளவு சுலபமில்லே. அதுக்குண்டான வயசும் உனக்கில்லே, மனப்பக்குவமும் வரலே."

"சுவாமி எனக்கு ஏற்பட்டிருக்கிற கொடுமைகள் பற்றித் தெரிஞ்சா நீங்க இப்படி சொல்ல மாட்டீங்க."

"அடடா! எனக்குத் தெரியாதா, என் பக்தர்களோட நிலைமை? ஆனாலும் சொல்லு, கேட்டுக்கறேன். மனசு விட்டுப் பேசினா உனக்கு ஆறுதலா இருக்குமே!"

அவள் மடைதிறந்த வெள்ளம் போல் பேசினாள். குழந்தை இல்லாதது; சின்னி வந்து சேர்ந்தது; இப்போ சின்ன வீடுகள் பற்றிய தகவல் தெரியவந்தது; நேரில் சந்தித்து உறுதி செய்து கொண்டது, எல்லாம்....

"உனக்காக அனுதாபப்படறேன்" என்றார். "ஆனால் இல்லற வாழ்க்கையிலே உனக்கு ஏமாற்றம் ஏற்பட்டிருக்கே தவிர, 'போதும்' என்று ஒதுங்கற, துறக்கிற நிலையை நீ எட்டலே. அந்தக் கட்டத்தை நீ அடைஞ்சிருந்தால் இந்த அறைக் கதவை மெனக்கெட்டு திறந்து வைத்து விட்டு இங்க வந்து என் எதிரே உட்கார மாட்டே!" என்று கூறி, கபடமின்றிச் சிரித்தார். "கிரகஸ்தாசிரமம் கசக்கிற வரையிலே கடவுள் சிந்தனையோட, நீ கணவனோட சேர்ந்து அறவாழ்க்கை நடத்தணும்."

"முடியாது சுவாமி! என்னால முடியாது! மறுபடியும் என்னை அந்த நரகத்துல தள்ளி சோதிக்காதீங்க!"

"நரகமாவது? சொர்க்கமாவது? எல்லாம் நம்மோட கற்பனைதான். இப்ப நிகழ்வதுதான் சத்தியம். அதை நிகழ்த்துபவன் சத்தியம்."

"எனக்குப் புரியலே" என்றாள், விசும்பலினிடையே.

"எல்லாம் புரியும். உன் கணவன்கிட்டேருந்து சில காலம் பிரிஞ்சு வாழ்ந்தாலே போதும். உனக்கு அவன் பேரிலும் அவனுக்கு உன் பேரிலும் இருக்கிற பிரியம் ரெண்டு பேருக்குமே புரிஞ்சு போகும். ரெண்டு பேருமே மனம் திருந்தி, ஆண்டவன் மன்னிப்பைப் பெற்று விட்டால் அப்புறமென்ன, ஆனந்த மயம்தானே!"

"பிரிஞ்சு வாழ எங்கே போவேன்? இங்கே இருக்கக் கூடாதுன்னு சொல்றீங்க. அப்பா வீட்டுக்குப் போனா அடுத்த நிமிஷமே இன்பாவுக்கு ஃபோன் பண்ணி வரவழைச்சுடுவார்."

"அப்ப... வேறென்ன செய்யலாம்? உம்ம்..." என்று யோசித்து, திடுமென்று தலைதாழ்த்தி, "ஃபாரின் டூர் போறியா?" என்று கேட்டார்.

"என்னது!" – ஆச்சர்யத்தில் திக்குமுக்காடிப் போனாள்.

"ஐரோப்பாவிலே பத்து நாள், அதிகபட்சம் ரெண்டு வாரம் ஒரு டிரிப் அடி. எல்லா ஏற்பாடுகளும் நான் கவனிக்கறேன்."

"ரொம்ப செலவாகுமே சுவாமி. அவ்வளவு பணம்..."

"அந்தக் கவலையெல்லாம் உனக்கு எதுக்கு? எனக்கு அயல்நாட்டுல நிறைய சிஷ்யர்கள் இருக்காங்க. அவங்க கவனிச்சுப்பாங்க."

"இந்த அநாதைகிட்ட இத்தனை கருணையா...?"

"அநாதைன்னு இன்னொருதரம் சொல்லாதே; என்கிட்ட அடைக்கலம்னு வந்தவங்க யாரும் அநாதை இல்லே!"

அதற்கு மேல் அவளுக்கு மறுக்கவோ, தயக்கம் காட்டவோ தோன்றவில்லை.

"நானே அயல்நாடுகளுக்கு ஒரு டூர் போறதாத்தான் இருக்கேன். சூரிய வழிபாடு இயக்கத்தை வளர்க்க, காயத்ரி மகிமையை எடுத்துச் சொல்ல என்னை பக்தர்கள் அழைக்கிறாங்க. கூடவே உன்னையும் கவனிச்சுக்கறேன். ஆனா நாம நெருங்கியிருக்க முடியாது. ஒரே விமானத்துல பயணம் செய்தாக கூட, நீ தனியா, நான் தனியா போற மாதிரிதான் இருக்கணும். தனித்தனி ஹோட்டல்லதான் தங்கணும். நீ உருமாறவும் செய்யணும். ஏன்னா, உன் கணவன் ஸி.பி.ஐ. இண்டர்போல் பிரிவைச் சேர்ந்தவன். போலீஸிலும் சொல்லியிருப்பான். நூற்றுக்கணக்கான போலீஸார் உன்னை இப்பகூட தேடிக்கிட்டு இருப்பாங்க. நாளைக்கு பேப்பர்ல உன் ஃபோட்டோ வந்தாக் கூட ஆச்சர்யமில்லே..."


சாட்டை சுற்றி இழுத்து விடப்பட்ட பம்பரமானாள். ஊட்டியில் இருந்த ஒரு ஐந்து நட்சத்திர ஓட்டலின் பியூட்டி பார்லரில் அதி நவீன ஃபேஷன்களில் ஊறித் திளைக்கும் பணக்கார நங்கையானாள். புதிய தோற்றப் பொலிவுடன் ஃபோட்டோ ஒட்டிய பாஸ்போர்ட், இதாலிய, ஜெர்மானிய விஸாக்கள்

''எப்படியெல்லாம் ஏமாத்த ஆரம்பிச்சிட்டாங்க பாரு...''

''ஏன், என்னாச்சு?''

''அடுத்த வாரம் ஐ.நா. சபை பொதுச் செயலாளர் பதவி காலியாகுது; நம்ம எம்.எல்.ஏ. சிபாரிசுடன் அந்த வேலையை உங்க பையனுக்கு வாங்கித் தர்ரேன்னு சொல்லிட்டு, ஒருத்தன் அட்வான்சா, ஐயாயிரம் ரூபாய் வாங்கிட்டுப் போயிட்டானாம்!''

– எம். அசோக்ராஜா



எல்லாம் வந்து சேர்ந்தன. மாயாஜாலம் போல் வெகு துரிதமாகக் காரியங்கள் நடக்க, சுவாமி ஜியின் செல்வாக்கு எத்தகையது என்று புரிந்து பிரமித்தாள். போக வர விமான டிக்கெட், ஏடு ஏடாக எழுதிய ஒரே புத்தகமாகக் கைக்குக் கிடைத்தது. எந்த எந்த நகரில் எத்தனை நாட்கள், என்ன தேதிகளில், எந்த ஓட்டல், அதன் விலாசம், ஃபோன் நம்பர், ஒவ்வொரு நகருக்கும் விமானம் வரும் நேரம், புறப்படும் நேரம், ஃபிளைட் நெம்பர் முதலிய விவரங் களுடன் பயணத் திட்டம் நகலுடன் வந்து சேர்ந்தது. அமெரிக்கன் எக்ஸ்பிரஸ்காரர்கள் நேரில் வந்து ஒவ்வொரு காசோலையிலும் "சாரதா" என்று கையெழுத்து போடச் செய்து, 'டிராவலர்ஸ் செக்' தந்து, அதே பெயரில் எடுக்கப்பட்ட பாஸ்போர்ட்டில் குறித்து முத் திரையிட்டனர். பெரிதாக இரண்டு ஸூட் கேஸ்கள் வந்து சேர்ந்தன. அவற்றை நிரப்ப ஒரு கட்டு நூறு ரூபாய் நோட்டு தந்து, ஊட்டி யின் ஃபேஷன் கேந்திரங்களில் ஷாப்பிங் போகச் சொன்னார் குருஜி. தவிர ஒரு வேனிடி கேஸ் நிறைய அழகு சாதனங்கள்.

"இத்தனையும் தூக்கிக் கொண்டு நான் ஊர் ஊரா அலையணுமே?"

"நீயா தூக்கப் போறே? ஏரோப்ளேன் தூக் கும். ஏர்போர்ட்ல டிராலியில் வைத்துத் தள்ள போர்ட்டர் உதவப் போறான். செலவாகு மேன்னு கவலைப்படறவங்கதான் இதுக்கெல் லாம் யோசிக்கணும். உனக்கென்ன? ஜெர்மனி போய்ச் சேர்ந்ததும் எவ்வளவு வேணுமோ கேட்டு வாங்கிக்க. குடும்பக் கஷ்டத்தை மற. என்னைக் கூட மறந்துடு. நன்றி உணர்ச்சியால் கட்டுப்பட்டுக் கிடக்காதே. எல்லா இடங் களையும் ஹாய்யா சுற்றிப் பாரு. நீ படிச்சவ. நாலு இடம் போக வர முடியும். பேசி, பழகி புரிஞ்சுக்க முடியும். இங்கிலீஷ் தெரிஞ்சா போதும். எல்லா இடத்திலும் சமாளிக்கலாம்" ஏராள தன்னம்பிக்கை விதைத்தார். முளை விட்டு செழித்து வளர்ந்தது.

சென்னை விமான நிலையத்தில் அவர் பத்திரிகையாளரை சந்தித்து தமது அயல்நாட் டுப் பயணத்தின் நோக்கங்களை விவரிப்பதை எட்ட இருந்து கேட்டு மரியாதை வளர்த்தாள். ஃபிராங்ஃபர்ட்டுக்கு ஒன்பது மணி நேரம் என்றாலும் முதல் விமானப் பயணம் என்ப தால் அலுப்புத் தட்டாததோடு ஒவ்வொரு வினாடியும் சுவாரஸ்யமாகவே இருந்தது.

அங்கு விமானம் மாறி, வெனிஸ் சேர்ந்து, ஏர்போர்ட் பஸ்ஸில் நகர மையத்தை அடைந் தாள். விசாரித்ததில், தனது ஹோட்டலுக்குப் போக கிராண்ட் கெனாலில் படகு பஸ்ஸில் ஏறி னால் பதினாலாவது ஸ்டாப் என்று தெரிய வந்தது.

பஸ் போலவேதான் எதிரும் புதிருமாக இருந்த ஸ்டாப்களில் மாறி மாறி நின்று, பயணி களை ஏற்றி, இறக்கி விட்டுச் சென்றது விசால மான படகு. அந்தப் பயணமே வெனிஸின் அழகை முழுமையாகக் காட்டிக் கொடுத்தது. கோண்டோலா படகுகளில் தேன்நிலவுப் பயணிகள் திண்டில் சாய்ந்திருக்க, படகோட்டி காதல் பாட்டுக்களை 'கணீர்' குரலில் நெஞ்சு நெகிழப் பாடி அவர்களை மேலும் நெருங்கி வரச் செய்தான். டாக்ஸி போட்களாக விசைப் படகுகள் பல இருந்தும் நீரில் ஒரு சொட்டு எண்ணெய் மிதக்கவில்லை. ஐம்பதடி தூரத் துக்கு ஒன்றாக அழகிய கலை உணர்வோடு கூடிய பழங்காலத்துப் பாலம் கால்வாயின் இரு கரைகளையும் வில்லாக இணைத்து, நகர மாந்தர் கால்நடையாக இரு பக்கமும் சென்று வர உதவின.

ஓட்டல் அறையில் பெட்டிகள் வைத்து, இலேசாக ஒப்பனை செய்து கொண்டு, பாஸ் போர்ட், டிக்கெட், பணம் ஆகியன அடங்கிய கைப்பையை மட்டும் எடுத்துக் கொண்டு புறப் பட்டு, காலாற நடந்து வந்து, இதோ, இந்த உணவு விடுதியில் ஸ்பகடியுடன் போராடுகிறாள். வாயருகே கொண்டு போனதும் வழுக்கி மறு படி தட்டு நிரப்பியது! வயிறை அரைகுறை யாகத் திருப்திப்படுத்தி, 'போதும்' என்று எழுந்த போது, வெனிஸ்ஸின் எல்லா விளக்கு களும் ஏற்றப்பட்டு கால்வாய் முழுவதும் மினுக்கும் நட்சத்திரங்கள்! அந்த எழிலில் சொக்கியபோதே, 'இன்பா, எனக்கு துரோகம் செஞ்சே! இப்போ பார், நான் ஐரோப்பா டூர் அடிக்கிறேன்!' என்று பெருமிதமும் பொங்கியது.

ஹோட்டல் அறை திரும்பிய போது விமானப் பயணம்தான் என்றாலும் நேர வித்தி யாசம் காரணமாக ரொம்பக் களைப்பாக இருந்தது. நைட்டிக்கு மாற பெட்டி திறந்தாள். கலைந்திருப்பது 'பளிச்'சென்று தெரிந்தது. துணுக்குற்று மற்றொரு பெட்டி திறக்க, அது வும் வைத்தபடி இல்லாது தாறுமாறாக...

'யார் வந்தார்கள்? என்ன சோதனை இட் டார்கள்? எதற்கு?'

குளிரிலும் வியர்த்தாள். விதிர்விதிர்த்தாள்.

(தொடரும்)

ருதா... ருதா... ருதா

கண்டுபிடிச்சாச்சு.... அத்தனைக்கும் மருந்து... மூப்பு, பிணி, சாக்காடு அனைத்தும் இனி இல்லை. இனி மனிதர் அனைவரும் மார்க்கண்டேயன்தான் என்று நான் குதித்துக் கொண்டிருந்ததை எதிர்க்கூண்டில் இருந்து அல்பினோ முயல் பயந்து போய் பார்த்தது.

பார்.. உன்னைச் சிறிது நேரத்தில் கிழ முயலாய்க் காட்ட முடியும். எல்லாம் என்னால் எளிதில். இனி நான்தான் உலகத்தின் இளமைக் கடவுள்.

இங்குபேஷன் சேம்பரில் இருந்த நாய் திடீரென முடி இழந்து, தோல் சுருங்கி, கண்களில் காட்ராக்ட் வந்து மாண்டு போக... பக்கத்தில் இருந்த கிழ நாய் ஜம்மென்று இளமையாய் மாறி நின்றது. வெகு சீக்கிரம் – சில மணி நேரங்களில் இந்த மாயாஜாலம் மொட்டு மலர்வது போல்... சூரியன் உதிப்பது போல் அத்தனையும் ஜாலம்... இனி இயற்கை என் கையில்.

'என்ன இந்த கிழட்டுப் புரொபசர் புலம்பிக் கொண்டிருக்கிறானே' என பார்க்கிறீர்களா... கொஞ்சம் இந்த அறிவியல் என்றால் வயிற்றைப் புரட்டுபவர்கள் அடுத்த பாராவுக்குப் போகலாம். ஏஜிங் என்ற மூப்பு இயல் இருக்கிறது இல்லை? அதில் நான் புரொபசர். மேக்ஸ், ரூபனர், ஹோபிளிக் போன்றவர்கள் சித்தாந்தங்களைக் கரைத்துக் குடித்து, குடித்து கிழடு தட்டிப் போனவன். இந்த மூப்பை வெல்ல வேண்டும்; சாகும் வரை இளமையாய் அந்த மார்க்கண்டேயன் போல் வாழ வேண்டும் என்ற வெறி. அதான், ஆராய்ச்சி, ஆராய்ச்சி என இந்த 20-க்கு 60 லேபில் உட்கார்ந்து கடைசியில் கண்டுபிடித்து ஆகிவிட்டது. மூப்பை வெல்லும் ரகசியம். அதாவது நம் உடலில் உள்ள ரத்தத்தில் சூசைடு பிக்மெண்ட்ஸ் என்கிற தற்கொலை நிறமிகள் உள்ளன. அதற்கு எதிராக ஆண்ட்டி நிறமிகள் என்றும் ஒரு வகையுண்டு. குழந்தைகளுக்கு எல்லாம் ஆண்ட்டிதான் அதிகம் இருக்கும், நாளாக நாளாக மாற, ஆண்ட்டி கட்சி மாறி தற்கொலை நிறமியாக மாறும். அவை எவ்வளவுக்கெவ்வளவு தற்கொலை நிறமியாக மாறுகின்றதோ அதன்படி நாம் கிழட்டு முண்டம் ஆகி விடுவோம். ஆனால் நான் இந்த ஆண்ட்டி நிறமி செய்யக் கண்டுபிடித்து விட்டேன். ஆண்ட்டி நிறமி சேர்க்கச் சேர்க்க இளமை வரும்...

இதற்கு முப்பத்தி ஏழு வருடங்கள்...

ஆயாசமாய் இருந்தது. ரொம்ப சந்தோஷப்பட்டு விட்டேன். பி.பி. ஏறியிருக்கும். திரும்பிப் பார்த்தால் ருதா வந்து நின்றாள். என் இனிய 22 வயது செகரட்டரி.

"இந்த ரிப்போர்ட் முப்பத்தி நாலில் சின்ன கரெக்ஷன் இருக்கு பாருங்க புரொபசர்."

"என்ன ருதா...?"

"பாருங்க.. யு.ஜி.சி.க்கு அனுப்ப வேண்டிய ரிப்போர்ட்டில் ஸ்டேட்மெண்ட் டாலி ஆகலை. உங்களுக்குத்தான் தெரியும்... ஏதாவது இன்ஸ்ட்ரூமெண்ட் விட்டுப் போயிடுச்சா...."

"சரி, சரி... பார்க்கறேன்... அது என்ன புது மோதிரமா? நல்ல மாதிரி கல்; நல்ல டிசைனா இருக்கே!" என்று கேட்டதும் இயல்பாய் விரல்களைத் தந்தாள். அந்த ஏசி ரூமிலும் சூடாய் இருந்தாள். என் உள்ளங்கையில் அவள் கைகளைத் தாங்கி வருடி, அந்த விரல்களை நீவிப் பார்த்தேன்.

"வரேன்" என்று வெளியே போன பின்னும் அவள் வாசனை என்னிடம் இன்னும் மிச்சமிருந்தது.

எங்கே போய் விடப் போகிறாள்... இத்தனை வருடங்களில் இங்கே, இந்த லேபில் இரவு பகல் அடைந்து கிடந்து ஒன்றும் இல்லை. கல்யாணம், காட்சி, குழந்தைகள், சினிமா... கோயில் ஏதும் இன்றி லாபின் சின்ன சன்னலின் வழியாகப் பார்க்க... குல்மொஹர் மரங்களின் கீழே ஆராய்ச்சி மாணவர்கள் அரட்டை அடித்துக் கொண்டிருந்தார்கள். ஒவ்வொரு மரத்தினடியிலும் ஒரு ஜோடி....

ராஜன் ஸ்ரீனிவாஸ்

சரேலென்று ஒரு யமஹா சீறிக் கொண்டே போனது. எல்லாம் இளமை! இந்த இளமை, இந்த நாட்கள், விரைந்தாகி விட்டது. எல்லாம் இழந்து விட்டேன். பாழாய்ப் போன ஆராய்ச்சி... ஆராய்ச்சியின் மேல் வந்த காதலால் அந்தக் காலத்துப் பெண்களை விட்டு விட்டதற்காக இப்பொழுது ஏக்கம் வருகிறது. இந்த ருதா மட்டும் கிடைத்தால்? ஆனால், தலை நரைத்த கிழவனைக் கட்டிக் கொள்ளச் சம்மதிப்பாளா...? சம்மதிப்பாள். அதான் இந்த மார்க்கண்டேய தந்திரம்!

நம் சோதனையை நம் மேலே பிரயோகித்தால் என்ன... எல்லாம் சாத்தியம். அந்த உதவாக்கரை ராவுக்கு கிடைத்த பட்நாகர் விருதை விட எனக்குக் கிடைக்கப் போகும் நோபல் சாத்தியம். இளமை சாத்தியம். இத்தனை வருடங்களில் விட்ட அனைத்தும் சாத்தியம். ருதாவும் சாத்தியம். ருதா என்றதும் மனசுக்குள் உள்ளே வாணவேடிக்கை நடப்பது போல் வர்ணஜாலமாய் இருந்தது. உருவம் மாறினால் இந்த தோல் சுருக்கம் போய் நானும் இளைஞன். சீக்கிரம் போய் ஒலிம்பியாவில் கார்டு அடிக்கக் கொடுத்து விடலாம். ருதா வர்ஸஸ்...

எனக்கு இளமை வந்து விட்டாற் போல் இருந்தது. படபடவென்று காரியங்கள் செய்தேன். முதலில் இந்த ஆண்ட்டி நிறமிகள் சேகரிக்க வேண்டும். ருதா ஓடி வந்து என்னைப் பார்க்கும் பொழுது என் நடுங்கும் விரல்களை கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டேன். கொஞ்சம் பொறுமையாக இரு... ருதா உனக்காகத்தான் இருக்கிறாள். ஆண்ட்டி நிறமி தேவையான அளவு சேகரித்து ஆகி விட்டது.

யோசித்து, ஒருநாள் ருதாவை தனியே அழைத்து, "ருதா...."

"என்ன சார், கூப்பிட்டீங்களா?"

"நான் எதுல ஆராய்ச்சி பண்றேன் தெரியுமா...?"

"தெரியும்... மூப்பு பத்தி."

"ஆமாம். இப்போ புதுசா நடத்தப் போகிறேன்... இதுவரைக்கும் மனுஷங்களைப் பத்தி நடத்தல இல்ல?"

"ஆமாம் அப்போ... நான்" என தயங்கினாள்.

"பயப்படாதே... உன்னை ஒன்றும் செய்யப்



வாழைத் தண்டு கூட்டு, மற்றும் பொறியல் செய்யும் பொழுது, அத்துடன் சிறிது முருங்கைக் கீரையும் சேர்த்துச் செய்தால், சுவையும் மணமும் மிகவும் நன்றாக இருக்கும். உடம்புக்கும் மிகவும் நல்லது.

– பா. குணா

போறதில்லை... நீதான் எல்லாவற்றினையும் செய்யப் போகிறாய்... அதோ பார்! அதுதான் இங்குபேஷன் சேம்பர். அதில் நான் போய் மூன்று நாள் வரை அதில் உள்ள சிவப்பு திரவத்தில் மூழ்கியிருப்பேன். சாப்பாடு எல்லாம் அந்த டியூப் வழியாகத்தான். தாயின் வயிற்றில் இருக்கும் குழந்தைக்குத் தொப்புள் வழியாக உணவு போகுதுல்லே, அது போல் எனக்கும் போகும்'' என்றதும் ருதா, "நானும் கூட இருக்கணுமா?'' என கேட்டது கிளி சொல்வது போல் இருந்தது.

நான் கிடைத்த சான்சை நழுவ விடாமல் இழுத்து தலையில் தட்டி,

"ஏய் ஸ்வீட் கேர்ல்! இதை ஆப்பரேட் பண்ணப் போறதே நீதான்! மூணு நாளைக்கு பின்னர் அந்த சிவப்பு நிற சுவிட்சை அழுத்தினால் எல்லா திரவமும் வடிந்து விடும். அப்புறம் அந்தப் பக்கமிருந்து ஆக்ஸிஜன் வரும்."

"சரி!''

''புரிஞ்சுதா... புரியலையின்னா நல்லா கேட்டுக் கொள். நோட்ஸ் எடுத்துக் கொள். அப்புறம் முழிக்காதே! நான் உள்ளே இருப்பேன். சொல்லித் தர ஆளிருக்காது."

பல்லால் கடித்துக் கொண்டு குனிந்தவாறே உதடு சுழித்த பொழுது சுழித்த அந்த உதடுகளை முத்தமிட வேண்டும் போல் இருந்தது. இடலாம், இடலாம். பொறு. இன்னும் நான்கே தினங்கள்... இந்த ருதா வைரமுத்து சொன்னது போல் ரத்த ஓட்டம் பாய்கிற தங்கம். இது முழுக்க எனக்கே சொந்தம்.

"எழுதிக் கொள்!"

கொண்டாள்.

"ஆக்ஸிஜன் வந்தவுடனே நீ பார்த்துக் கொண்டே இரு... நான் கைகாட்டிய பின் இந்த பச்சை நிற சுவிட்சை அழுத்து. நான் வெளியே வந்து விடுவேன். வந்து....'' என்று சொல்லி நிறுத்திக் கொண்டேன். வெட்கமா யிருந்தது. கிழட்டு வெட்கம்.

ராகு காலம், எமகண்டம் இல்லாத நாளாய்ப் பார்த்து நான் இங்குபேஷன் சேம்பரில் உட்கார, எல்லாம் நிகழ்ந்தது, ருதா சரியாய் செய்தாள். ரொம்பவும் அக்கறையோடு கவனித்துக் கொண்டாள். எனக்கு களைப்பு இல்லாமல் இருக்க... சேம்பருக்கு வெளியே வீடியோ போட்டாள். வீடியோவில் இசகுபிசகான காட்சிகள் வரும் பொழுது தலையைக் குனிந்து கொண்டாள். 'இரு... இரு...' என சொல்லிக் கொண்டேன்.

மூன்று நாள் கழித்து திரவம் வடிந்து, ஆக்ஸிஜனிலிருந்து தொப்புள் வழியே ஆண்ட்டி நிறமிகள் போக வேண்டும்.

ருதாவைப் பார்த்து கண்சிமிட்டினேன்.

பிரஷர் சார்ஜ் சரி பண்ணி சுவிட்ச் ஆன் பண்ணவும், மாற்றம் நிகழ்ந்தது.

தோல் சுருக்கங்கள் நீங்கி முறைப்பாக தோல் மாற, என் வரட்டுவெள்ளை முடிகள் கருப்பாய் மாற, வழுக்கை விழுந்த இடத்தில் கருப்பு முடிகள் முளைக்க, ஸ்பீல்பெர்க்கின் லாஸ்ட் குருசைடு படத்தில் ஒருவன் எலும்புக் கூடாய் மாறுவானே, அதுபோல் மாறிக் கொண்டிருந்தேன். சும்மாவா? 37 வருடங்கள் பின்நோக்கிப் போய்க் கொண்டிருந்தேன். சேம்பரின் மேல் இருந்த பில்லையில் தெரிந்த எலக்ட்ரானிக்ஸ் நம்பரில் வயது சரசரவென்று மாறிக் கொண்டிருந்தது.

என் மாற்றத்தினை எல்லாம் ருதா ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்தாள். எனக்கு மேல் சட்டை இல்லாமல் கூச்சமாய் இருந்தது. 'எல்லாம் உனக்காகத்தான் பெண்ணே' என்று சொன்னேன்.

சேம்பருக்கு வெளியே கேட்டிருக்காது.

சேம்பரின் மேலிருந்த என் வயது

65

62

60

என மாறி மாறி

32

30

28

26..........

நான் ருதாவைப் பார்க்க, அவள் ஆவலோடு என் மாற்றத்தினைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

நான் நிறுத்து நிறுத்து என்று சைகை காட்டியதை கவனிக்காமல் சுவாரஸ்யமாய் என்னைப் பார்த்துக் கொண்டிருக்க,

18

16

என்று போய் கடைசியில் 0.6 என்று வரவும், சட்டென்று சுவிட்சை நிறுத்தி என்னைத் தன் கைகளில் எடுத்து முத்தமிட்டு, "இதற்குத்தானே ஆசைப்பட்டீர்கள்? இந்தா இன்னொரு முத்தம்!'' என்றாள். பின் என் கன்னத்தினைத் தட்டி, "சாயங்காலம் வீட்டுக்குப் போகும் பொழுது அரசாங்கத் தொட்டிலில் போட்டு விட்டுப் போயிடறேன். சரியா? சமத்தா இருக்கணும்'' என்றதும், நான் புரியாமல் மழலையில் அழ ஆரம்பித்தேன்.



ஒரு 'உம்மா'வின் கதை

படத்தில் கறுப்பு உடையணிந்த நபர் ஒருவர், வெள்ளை உடையணிந்த பெண் ஒருத்தியை, அள்ளி அணைத்து முத்தம் கொடுப்பதைப் பாருங்கள். ஆனால் இவர்கள் கணவன் - மனைவியோ, காதலர்களோ இல்லை. சொல்லப் போனால், சற்றும் முன்பின் அறிமுகமில்லாதவர்கள்.

இந்த போட்டோவிற்குப் பின்னால், உள்ள சுவாரசியமான கதையை விவரிக்கிறது 'லைஃப்' பத்திரிகை.

நியூயார்க் நகரில், டைம்ஸ் சதுக்கத்தில், 1945 ஆகஸ்ட் பதினான்காம் நாள் இந்த போட்டோ எடுக்கப்பட்டது.

இரண்டாம் உலகப் போரில், ஜப்பான் சரணடைந்த தருணம் அது! மொத்த அமெரிக்காவும் மகிழ்ச்சியில் திளைத்துக் கொண்டிருந்தது. அந்த நேரத்தில்தான் கறுப்பு உடையணிந்த அமெரிக்க கடற்படை வீரர் ஒருவர், எதிரே வந்த ஒரு பெண்மணி யைக் கட்டிப் பிடித்து முத்தமிட்டார்!

லைஃப் பத்திரிகையின் புகைப்பட நிபுணர் ஆல்பிரட் எய்சென்ஸ் டெட் (இப்போது வயது 96) அந்தக் காட்சியைப் புகைப்படமெடுத்துவிட அது, லைஃப் பத்திரிகையில் வெளியாகி, பரபரப்பூட்டியது!

சமீபத்தில் - அதாவது சுமார் 50 ஆண்டுகளுக்குப் பிறகு, அந்தப் புகைப்படம் மீண்டும் பரபரப்பு ஏற்படுத்தியுள்ளது. 'அந்தப் போட்டோவில் முத்த மிட்டுக் கொண்டவர்கள் யார்; அவர்கள் இப்போது எங்கே, எப்படி இருக்கிறார்கள்' என்று ஆராய்ந்து கண்டு பிடிக்க முயன்றது 'லைஃப்' இதழ்.

போட்டோ பெண்மணி இப்போது கலிபோர்னியாவில் வசிக்கும் எழுபத்தி ஏழு வயது 'எடித் ஷைன்' என்பது சுலபமாகவே தெரிந்து விட்டது!

ஆனால், அவருக்குத் தம்மை முத்தமிட்டவரின் முகம் நினைவில்லை என்பதால் அந்த ஆண் யார் என்பதைக் கண்டு பிடிக்க மிகவும் சிரமப்பட்டது 'லைஃப்'. விவரம் தெரிந்ததும், பலரும் அந்தக் கறுப்பு உடை நபர், தான்தான் என்று கூறிக் கொண்டு, லைஃப் பத்திரிகையோடு தொடர்பு கொள்ள ஆரம்பித்து விட்டார்கள்!

ஷைன், அவர்கள் ஒவ்வொருவரையும், பரபரப்பான அந்த முத்தத்தை விவரிக்கச் சொன்னார்!

"முத்தமிட்ட பிறகு என்ன சொன்னீர்கள்?" என்று கேட்டார்.

ஒவ்வொருவரின் முத்த விவரிப்பும் ஒவ்வொரு மாதிரி இருந்தது. முத்தமிட்ட பிறகு, 'உங்களுடைய முகவரியைக் கேட்டேன்; டின்னருக்குப் போகலாமா என்று கேட்டேன்' என்று பலவித பதில்கள் வந்தன.

"நீங்கள் போலி ஆசாமி!" என்று சொல்லி, அனைவரையும் ஷைன் அனுப்பி வைத்து விட்டார்.

இறுதியில், நியூயார்க் போலீஸின் துப்பறியும் அதிகாரியாய் இருந்து ஓய்வு பெற்ற 'கார்ல் மஸ்கரெல்லோ' என்ற 68 வயது ஆசாமி, ஷைனைச் சந்தித்து, தான்தான் அவரை ஐம்பது வருடங்களுக்கு முன் முத்தமிட்ட நபர் என்று சொன்ன போது, ஷைன் வழக்கமான கேள்விகளைக் கேட்டார்.

திடீரென எதிரே வந்த நர்ஸை, யாரென்று தெரியாது என்றாலும், கட்டிப் பிடித்து அழுத்தமாய் முத்தமிட்டேன். சில நிமிடங்கள் அது நீடித்தது. அதன் பின் நானும் சரி, அவரும் சரி, ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. நான் பாட்டுக்கு நடந்து, அந்த இடத்தை விட்டு அகன்றேன்" என்றார் கார்ல்.

"எஸ்! நீங்கள்தான் அன்று என்னை முத்தமிட்டவர் என்பதில் துளியும் சந்தேகம் கிடையாது" என்றார் ஷைன்!

எதிரே வந்த பெண்ணை, கார்ல் ஏன் திடீரென்று முத்தமிட்டார்?

கார்ல் கூறும் பதில் :

"அப்போது எனக்கு வயது பத்தொன்பது. அமெரிக்கக் கடற்படையின் நீர் மூழ்கிக் கப்பல் ஒன்றில் எனக்கு வேலை. இரண்டாம் உலகப் போரில், ஜப்பானியப் படைகள் சரணடைந்த செய்தி கேட்டு, மக்கள் எல்லாருக்குமே மகிழ்ச்சி தாளவில்லை. யாரோ ஒருவர், என்னிடம் மூன்று பீர் பாட்டில்களைத் தர, அவற்றை ஒரே மூச்சில் நான் குடித்து முடித்தேன். உற்சாகம் ஊற்றாகப் பீறிட்டது. எதிரில் கண்ட பெண்களையெல்லாம் முத்தமிட்டுக் கொண்டே போனேன். அவர்களுள் ஒருத்தி வெள்ளை உடையணிந்த நர்ஸ்.... அதாவது, இந்த ஷைன்!"

தகவல் : **எஸ். சந்திரமௌலி**

16 கி. ராஜேந்திரன்

இருட்டு அரண்மனைகள்

குருஜியும் பென்ஜமினும் வேறு வேறல்ல என்பதாகத் தெரிய வந்த பிறகு குழப்பங்கள், சந்தேகங்கள் தீர்ந்து, நடந்தது எல்லாமே ஒன்றோடொன்று பொருந்தி வருவதை இன்பா உணர்ந்தான். அகில பாரத ஹிந்து பரிவார் கட்டடத்தில் குண்டு வெடித்ததில் லட்சிய நோக்கு ஒன்றுமில்லை. ஒரு திசை திருப்பும் முயற்சி; அவ்வளவே. குருஜியின் உத்தரவுக்குக் கட்டுப்பட்டு சென்னை வந்திருக்கிறான் முனியன். பணத்தாசை காட்டியோ அல்லது மிரட்டியோ குண்டு வைக்க அவனைத் தயாரித்திருக்கிறார். அவன் பயந்திருக்கிறான். இந்த ஆபத்தான காரியத்தில் ஈடுபடும் போது தனக்கு ஏதாவது ஆகிவிட்டால் தான் யார், எங்கிருந்து வந்தவன் என்பதாவது பிறருக்குத் தெரிய வரட்டும் என்ற நோக்கில் கிளாவர் சின்னத்தை பச்சை குத்திக் கொண்டிருக்கிறான். சம்பவம் திட்டமிட்டபடி நடந்து முடிந்திருக்கிறதா என்று உறுதிப் படுத்திக் கொள்ள பென்ஜமின் உருவில் முனியனைப் பின்பற்றி வந்திருக்கிறார் சூரியா சுவாமி. முனியனின் ஆயுசு முடிந்து போய் விட்டதைத் தெரிந்து கொண்டிருக்கிறார். செக்யூரிட்டியிடம் தப்பி, ரஸியா வீட்டு மாடியில் அவளை மிரட்டி விட்டு, மீண்டும் சூரியா சுவாமியாக உருமாறி, ஊட்டி திரும்பி முனியனின் அப்பாவிடம் அவன் பச்மார்ஹி சென்றிருப்பதாகவும் திரும்பிவர ஆறேழு மாதங்கள் ஆகும் என்றும் சொல்லியிருக்கிறார்.

"அதை அப்படியே அப்பாவிக் கிழவன் என்னிடம் ஒப்பிக்க, நானும் நம்பி ஏமாந்துட்டேன் ஸார்! குருஜியோட ஆசிரமம், போதை மருந்துங்களைக் கள்ளத்தனமாக தயாரிக்கவும் அயல் நாடுகளுக்கு கடத்திப் போகவும் அந்தாளு போட்டுக் கொண்ட திரை. அந்தத் திரைக்கு முன்னால் ஆன்மிக நாடகம் அரங்கேற்றியிருக்காரு."

இன்பா மேலதிகாரி மயில் வாகனத்திடம் விளக்க, "ஆசிரமத்துல ரெய்ட் நடத்துவமா?" என்றார்.

"அவசரப்பட வேண்டாம்" என்று பாரிஸிருந்து வந்த ஃபாக்ஸ் கடிதம் காட்டினான்.

"இப்ப என்ன செய்யணும்கிற?"

"ஃபாரின் போக பர்மிஷன் வேணும்."

"அடி சக்கை! முதல்ல ஊட்டி; இப்போ ஐரோப்பா டூர், அப்புறம் என்ன அமெரிக்காவா?"

"அவசியம் நேர்ந்தா அங்கேயும் தான் போகணும்."

"தும்பை விட்டு வாலைப் பிடிக்கிறியே? ஆளை இங்கியே மடக்கிப் போடாம நழுவ விட்டுட்டு, இப்ப சிங்கப்பூர் போறேன், சிகாகோ போறேன்னா? உன் அப்பன் வீட்டுப் பணமா? மக்களோட வரிப்பணம் மிஸ்டர்!"

ஃபாக்ஸ் கடிதத்தை ஒரு விரலால் தட்டிக் காட்டினான். "கவனிங்க சார்! வலையை இன்னும் பரவலாக விரிக்க வேண்டியிருக்குதுன்னு எழுதியிருக்காங்க. அதனால குருஜியை நாம இங்கே அரெஸ்ட் பண்ணாததே நல்லதாச்சு. இந்த சுறா மீனைப் பயன்படுத்தி பெரிய திமிங்கிலத்தைப் பிடிக்க நினைக்கிறாங்க. இதான், எல்லாம் நன்மைக்கேன்றது..."

"குப்புற விழுந்தாலும் மீசைல மண் ஒட்டலேன்றதும் இதுதான்! எதையாவது சொல்லி ஃபாரின் டிரிப்புக்கு வழி தேடிக்க. உன் காட்டுல மழை!"

"வேணாம் ஸார்! நீங்களே போயிட்டு வாங்க. காரியம் நல்லபடியா முடிஞ்சா சரி."

"நீ கேஸை சரியா கையாளாம கோளாறு பண்ண வேண்டியது; ரிப்பேர் பார்க்க நான் வரணுமா? மேலும் இந்தாளு உன்னைத்தான் கூப்பிட்டிருக்கான். கிளம்பு. நான் டில்லிக்கு ஃபோன் போட்டு பர்மிஷன் வாங்கறேன்!"

"குருஜியை அரெஸ்ட் பண்ணிக் கொண்டு வர அனுமதி பெறுமாறு நமது அயல்நாட்டுத் தூதரகங்களையும் முடுக்கி விடணும் ஸார்."

"அதுக்கும் ஏற்பாடு பண்றேன். நீ அங்க போயாவது சுறுசுறுப்பா காரியத்துல இறங்கு. நைட் கிளப், பீப் ஷோன்னு அலைஞ்சு உடம்பைக் கெடுத்துக்காதே!"

"அவசியம் ஏற்பட்டா நைட் கிளப் உள்ளேயும் தான் சார் நுழையணும். எந்த சினிமாவுல வேணும்னாலும் பாருங்க,



மாஃபியா கும்பலைப் பிடிக்கறதுக்கு முன்னாடி ஹீரோ மூணு நைட்கிளப்லயாவது புகுந்து புறப்படுவான்!''

"அது சரி, ஆனா சினிமா ஹீரோ மாதிரி நீ லவ் பண்ணத் தயாராயிருக்கியேயொழிய, வீரத்தைக் காட்ட மாட்டேன்றியே? இதுவரை டிஷ்யும் காட்சி ஒண்ணு கூட இல்லே!''

"இப்பத்தானே ஸார், வில்லன் யாருன்னே தெரிய வந்திருக்கு; இனிமே பாருங்க...''

"புரூஸ்லி கணக்கா தூள் கிளப்பிடுவியாக்கும்! உன் பவிசு எனக்குத் தெரியாதா? சரி சரி, இடத்தைக் காலி பண்ணு. பாஸ்போர்ட், விசா எல்லாம் சரி பார்த்துக்க. ஸூட், கோட்டுன்னு ஏகப்பட்டது பில் பண்ணாதே. பழசே போதும்.''

"டிரை கிளீனிங் பில்லாவது ஸாங்ஷன் பண்ணுங்க ஸார்'' என்று கூறி விட்டுப் பிரிந்தான்.

வீடு திரும்பும்போது, 'அயல் நாட்டுப் பயணத்திட்டம் தீட்டும் தீவிரத்தில் சாயா பற்றிய நினைவே எழவில்லை' என்ற எண்ணப பிறந்து அவனைக் குற்றவாளியாக்கியது.

வெட்கமும் துயரமும் சேர, "அவளைப் பற்றி இன்னும் ஒரு விவரமும் தெரியாத நிலையில் நான் எப்படி ஃபாரின் போவேன்? எந்த தைரியத்தில்?'' என்றான் அப்பாவிடம்.

"கவலைப்படாதேடா'' என்று தோளில் தட்டிக் கொடுத்தார் ரங்கநாதன். "கோபம் தணிஞ்சு திரும்பி வந்துடுவா. அப்புறம் கண்ணும் கருத்துமா நான் கவனிச்சுக்கறேன்.''

"ஒருவேளை அம்மாவை பிணைக் கைதியா வைச்சிருந்தாங்கன்னா, ஒரு மெஸேஜ் கிடைச்சதும், 'அம்மாவை விட்டுடுங்க; அவங்களுக்குப் பதிலா நான் வந்து சரண்டர் ஆறேன்'னு சொல்வேன்'' என்றான் சின்னி.

வளர்ப்பு மகனைக் கட்டி அணைத்துக் கொண்டான். "உனக்கு இன்னொரு முக்கிய வேலை இருக்கு சின்னி.''

மறுநாள் ரஸியாவிடம் அழைத்துப் போய் அறிமுகப்படுத்தினான். "படு சுட்டி

யான பொண்ணு. ஃபிரீயா, கபடமில்லாம பழகுவா. அம்மா மாதிரியே இவளையும் ஆபத்து சூழ்ந்திருக்கு. சூரியா சுவாமி விமானமேறி பறந்துட்டதால அம்மாவுக்கோ இவளுக்கோ அபாயம் நீங்கிட்டதா சொல்ல முடியாது. அவனோட அடியாட்கள் இங்க நிலைமையை கவனிச்சுக்கிட்டேதான் இருப்பாங்க."

"ஏன் ஸார் சின்னியை பயமுறுத்தறீங்க?" என்றாள். "எனக்கு ஒரு ஆபத்துமில்லே சின்னி. டோண்ட் ஒர்ரி!"

"இவளுக்கு நீ பாதுகாப்பா இருக்கணும் சின்னி."

''நிச்சயமா'' என்று அப்பாவின் வலக் கரத்தை இரு கைகளாலும் பற்றிக் கொண்டான்.

''ரஸியா! ஒரு சமயம் போதுன்னா நீ வீட்டுக்கு ஃபோன் செய்து இவன்கிட்டே தயங்காம உதவி கேட்கலாம்."

"அதுக்கு அவசியமே நேராது சார்."

"நேராட்டா நல்லாதாச்சு; நேர்ந்தா என்ன செய்யறதுன்னுதானே இப்ப பேச்சு" என்றான் சின்னி. "நான் பார்த்துக்கறேன் அப்பா. நீங்க நிம்மதியா போயிட்டு வாங்க."

"போய்ட்டு வரதா? எங்கே!"

"அப்பா ஃபாரின் டூர் போறார். பிரான்ஸ், ஜெர்மனி, இதாலி, இங்கிலாந்து, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஜப்பான், சைனா..."

''ஏண்டா வீனஸ்ஸையும் மார்ஸையும் விட்டுட்டே?"

"அடுத்த டிரிப்புக்கு ஏதாவது பாக்கி விட்டு வைக்க வேண்டாமா அப்பா!"

குபீர் என்று சிரித்து விட்டாள்.

"என்ன சிரிக்கிறே ரஸியா! ஸ்பேஸ் ஷிப் கூடத் தேவையில்லே! ஸூப்பர்மேன் மாதிரி ஜிங்குன்னு புறப்பட்டு விண்வெளியிலே பறப்பார்!"

"அட! எனக்குத் தெரியாம போச்சே!"

''ஒரு நாள் நீல நிற பெட்ஷீட்டைக் கழுத்தில் கட்டிக்கிட்டு டைனிங் டேபிள் லேர்ந்து சோபாவுக்குப் பாய்ந்தார் பாரு....!"

''அந்த டீவி 'தங்கப் பரிசு' போட்டியில் ரொம்ப கஷ்டமான கேள்வியா கேட்டாங்க."

''அப்படி என்னதான் கேள்விங்க?"

''சற்றுமுன் செய்திகள் வாசித்த பெண்மணிக்கு எத்தனை கண்கள்?"

(புளியரை கணேசன்



அவள் மறுபடி வெள்ளிமணி ஓசை எழுப்பினாள். 'நன்றாகப் பழகுவார்கள்' என்று நினைத்தான். ரஸியாவை அவள் பெற்றோர் கவனித்துக் கொள்ள வேண்டும்தான். என்றாலும் கூடுதல் பொறுப்பாக சின்னியையும் ஏற்பாடு செய்ததில் கொஞ்சம் நிம்மதி. ஸி.ஐ.டி.யும் தொடர்ந்து இருப்பான்.

"ஃபாரின் டூர் எதுக்கு?" என்றாள் ரஸியா.

"பென்ஜமினைப் பிடிச்சு, அவன் கன்னத்துல நாலு அறை வைச்சு, விலங்குமாட்டி, இழுத்து வர!" என்றான் சின்னி உற்சாகமாக.

அவள் கலவரமடைந்து பார்த்தாள்.

"ஆபத்தான காரியம் அங்கிள். ஜாக்கிரதையா இருங்க, பிளீஸ்'' என்றாள். அவன் தோள்கள் பற்றி எம்பி கன்னத்தில் முத்தம் பதித்தாள்.

"பெஸ்ட் ஆஃப் லக்!"

'அங்கிள்' என்ற சொல் ஒரு மனமாற்றத்தை உணர்த்தி இதயத்தை வருட, புன்னகையுடன் விடை பெற்றான்.

ஒன்பது மணிநேர விமானப் பயணத்தில் ஒரே ஆசனத்தில் சிறைப்பட்டிருக்கும் போது ஏற்படக் கூடிய உடல் சோர்வு நீங்க, 'பறக்கும் போதே தேகப் பயிற்சி' என்று வீடியோ காட்சி தோன்றியது. அதன்படி செய்த தேகப்பயிற்சி இதமாகத்தான் இருந்தது. மனச் சோர்வு நீங்க வீடியோ திரையில் ஐன்ஸ்டைன் ஆஜரானார். 'விஞ்ஞான அறிவை விடவும் காதல் உணர்வே முக்கியமானது, சிறந்தது' என்று தமது மருமகளுக்கு உணர்த்தி, அவளை ஒரு மோட்டார் மெக்கானிக்குடன் இணைத்து வைக்க, நயமான நகைச்சுவை நாடகம் அரங்கேற்றினார். விஞ்ஞானி ஐன்ஸ்டைனை ஒரு சினிமாக் கதையின் பிரதான கதாபாத்திரமாக்கிய ஹாலிவுட் மூளையை வியந்து போற்றினான் இன்பா.

ஃபிராங்ஃபர்ட்டை அடைந்ததும் உடன் விமானம் மாறி, பாரிஸ், சார்லஸ் டிகால் விமான நிலையத்தில் இறங்கினான். அவனை வரவேற்க "இன்பசாகரன்'' என்று ஆங்கிலத்தில் பெரிதாக எழுதிய அட்டையை உயர்த்திப் பிடித்துக் கொண்டு நின்ற கறுப்பரை அணுகினான்.

"மிஸ்டர் இன்பா? நான் ஜேம்ஸ்."

'ஜேம்ஸ் பாண்ட்?'' என்று கண் சிமிட்டி புன்னகை உதிர்த்தான் இன்பா.

"இல்லே, ஜேம்ஸ் பிளாக்!'' என்று கூறி, "இது ஜோக் இல்லை'' என்றும் சேர்த்துக் கொண்டதன் மூலம் மனசு சுத்தமான வெள்ளை என்று உணர்த்தினான் கறுப்பன்.

"பாகேஜ்?"

பிரிஃப்கேஸ் தவிர, கையோடு கொண்டு வந்து விட்ட பெட்டியை உயர்த்திக் காட்டி "இவ்வளவுதான்'' என்றான்.



''என்னுடைய முதல்படம் ''நூறாவதுநாள், இரண்டாவது படம் ''இருபத்தைந்தாவது வாரம்'', மூன்றாவது படம் ''பொன்விழா''...

''கொஞ்சம் இருங்க. எல்லாமே இப்படி பிரமாதமாக ஓடியிருக்கும் போது இப்ப உங்களுக்குப் படமே இல்லையே, ஏன்?''

''பிரமாதமாக எங்கே ஓடுச்சு? இதெல்லாம் நான் நடிச்சப் படங்களோட பெயருங்க!''

"ஓகே, போகலாம்."

பாஸ்போர்ட், கஸ்டம்ஸ் எல்லாம் பிளாக் உடனிருக்கவே லகுவாகக் கடந்து இண்டர் போல் காரில் ஏற, வழுக்கிச் சென்றது.

"விமானம் இறங்கிய போது பாரிஸின் அழகைப் பார்க்க முடியவில்லை."

"விமானங்கள் நகருக்கு மேலாகப் பறக்கத் தடை இருக்கிறது. ஃபிராங்க் ஃபர்ட் மாதிரி சில நகரங்களில்தான் தவிர்க்க முடியாமல் தரையிறங்குமுன் பறவைக் கண்ணோட்டத்தில் நகரைக் காணலாம். மற்ற நகரங்களில் விமானத் தளத்தை எட்டத்தில் வைத்தும், விமானம் இறங்கும் திசையை கட்டுப்படுத் தியும் நகரவாசிகளை விமானங்களின் சத்தத்திலிருந்து காப்பாற்றுகிறார்கள்."

காது கிழிப்பதையே பண்பாடாகக் கொண் டுள்ள இன்றைய தமிழகத்தை எண்ணி பெரு மூச்சு விட்டான்.

"ப்ாரிஸ் சிறிய நகரம்தான். முக்கியமான இடங்களெல்லாம் மையப் பகுதியில் நெருக்க மாகத்தான் இருக்கிறது. பலர் கால்நடை யாகவே போய்ப் பார்க்கிறார்கள்."

"சென்ற தடவை வந்த போது ஸீன் நதியில் படகுப் பயணம் செய்தேன். ஆற்றின் இரு கரைகளிலும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த கட்டடங்களை விளக்கிக் கொண்டே வந்தார் வழிகாட்டி. மறக்க முடியாத அனுபவம்."

"அதோ, ஐஃபல் டவர்!"

எஃகினால் ஆன உலக மகா அற்புதம் தொலைவில் தெரிந்தது. கியூவில் நின்று, உயரே சென்று பார்த்ததும் நினைவு வந்தது.

"முதல் தடவை வந்தபோது இருந்த பிரமிப் பும் உற்சாகமும் இப்போது இல்லை" என்றான்.

"அடுத்த தடவை வரும்போது காதலியுடன் வந்தால் எல்லாமே புதுசாகத் தெரியும். சிலிர்ப் பாக இருக்கும்!"

'சாயாவுடன் வருவேன்' என்று உறுதியாக எண்ணிக் கொண்டான்.

சற்று நேரத்தில் கார் நிற்க, "வந்து விட் டோம்" என்றான் பிளாக்.

"எங்கே?"

"இண்டர்போல் தலைமையகத்துக்கு. சீஃப் உங்களை எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்."

"எவ்வளவு நேரமாகும்?"

"அது உங்கள் சாமர்த்தியம். எவ்வளவு சீக் கிரம் கழன்று கொள்கிறீர்கள் என்பதைப் பொறுத்தது. அப்புறம் ஹோட்டலுக்கு அழைத் துப் போகிறேன். களைப்பாகத்தான் இருக்கும்."

அவன் யோசனைப்படி பெட்டியைக் காரிலேயே வைத்து, பூட்டி விட்டு பிரீஃப் கேஸுடன் மட்டும் பின் தொடர்ந்தான்.

மத்திய கிழக்கு மற்றும் இந்தியாவுக்கென தனி பிரிவு இருந்தது. அதன் தலைவர் சொகுசு நாற்காலி விட்டு எழுந்து பிரும்மாண்ட அறைக்கு ஏற்ற மாபெரும் மேஜையைச் சுற்றி வந்து கைகுலுக்கினார். "வெல்கம்" என்றார். "ஜான் கார்மிக் என்பது என் பெயர்."

அறைக்குள் நுழையும் போதே கவனித் தான். சந்தன மரத்தில் கலை நயத்தோடு செதுக்கிய கீதோபதேச சிற்பம். கண்ணாடிப் பெட்டியில் பாதுகாப்பாக, ஸ்பாட் லைட்டில் பளபளப்பாக. அவன் பார்வை சென்ற திசை கண்டு, "வருஷம் ஞாபகமில்லை, பல ஆண்டு களுக்கு முன் இங்கே நடந்த இண்டர்போல் மகாநாட்டின்போது உங்கள் நாட்டிலிருந்து வந்திருந்த பிரதிநிதிகள் கொடுத்துச் சென்ற பரிசு. அந்தக் குதிரைகளின் கம்பீரத்தைப் பாருங்கள். அசாத்திய அழகு" என்றார்.

"இந்த சிற்பம் வெளியிடும் செய்தி அதை விட அழகானது" என்றான்.

"ஆமாம். சுருக்கமாக, கடமையைச் செய்; பலனைக் கருதாதே."

"இப்போ நம் கடமை என்ன?"

புன்னகை அரும்ப, "நேரத்தைச் சேமிக்க நீங்கள் விரும்புவது புரிகிறது... பென்ஜமின் பற்றிக் கேட்டிருந்தீர்கள். அவன் சூரியா சுவாமி என்ற பெயரில் மொட்டை சாமியாராக ஐரோப்பிய சுற்றுப் பயணம் மேற்கொண்டி ருப்பதாகவும் தெரியப்படுத்தியிருந்தீர்கள்."

"ஆமாம்."

"அப்படி இருக்க முடியாது. இந்தக் கணத் தில் சூரியாசுவாமி பாரிஸில் இருக்கிறார். பென்ஜமின் வெனிஸில் இருக்கிறான். இரு வரையுமே எங்கள் ஏஜெண்டுகள் கண் காணித்து வருகிறார்கள்!"

"என்னது!" திகைப்பும் சோர்வும் தாக்க, கால்கள் துவள, இன்பாவை ஒரு நாற்காலி ஏந்திக் கொண்டது.

(தொடரும்)

கி. ராஜேந்திரன்

இருதயப் படபடப்பு சற்று அடங்கியதும் சூர்யா சுவாமிக்கு ஃபோன் செய்தாள். "சாயா பேச றேன்."

"சாரதான்னு சொல்லு: அதான் இப்ப உன் பெயர், பாஸ்போர்ட் பிர காரம்."

"எனக்கு பயமாயிருக்கு. நான் வெளியே போயிருந்தபோது என் அறைக்குள் யாரோ புகுந்து பெட்டி களைத் திறந்து குடைஞ்சிருக்காங்க."

"ஏதாவது காணோமா?"

"இல்லே, ஆனா கலைஞ்சிருக்கு."

''அவ்வளவுதானே? பாஸ் போர்ட்? பணம்? பிளேன் டிக்கெட்?"

"அதெல்லாம் பத்திரமா இருக்கு. ஹேண்ட் பேகில்தான் எப்பவும் வைக்கிறது. அது கையை விட்டுப் போகாது."

''பின்னே என்ன, கவலைப் படாதே. இதாலியர்களுக்கே பொதுவா மோசடி பேர்வழிகள்னு பேர் உண்டு. ஒரு வேடிக்கை கேளு. நான் தங்கியிருக்கிற இந்த ஓட்டலுக்குள் நுழைஞ்ச போது ரிஸப்ஷன்ல இருக்கிறவன், 'Italians are crooks! Italians are crooks!'ன்னு திரும்பத் திரும்பச் சொல்லி, மேஜையைக் குத்திக்கிட்டிருந்தான். 'என்னப்பா விஷயம்' னேன். நாலு பால் பாயின்ட் பேனா வாங்கி னானாம்; எதுவுமே ரெண்டு வரிக்கு மேல் எழுத மாட் டேங்குதாம்! 'ஏம்பா, நீயும் இதாலியன் தானே'ன்னு கேட்டேன். 'ஆமாம், என்னையும் சேர்த்துத்தான் சொல் றேன்'னு ஆத்திரத்தோட நாலு பால்பா யிண்ட் பேனாக்களையும் குப்பைத் தொட்டி யில் வீசி எறிஞ்சான்!" சூர்யா சுவாமி சிரித் தார்.

"எனக்கு சிரிப்பு வரலே" என்றாள் கடுப் பாக.

"வர வேண்டாம். சீரியஸ்ஸாவே இரு. ஆனா சொன்னபடி கேட்டு நடந்துக்க'' என்றார் அதட்டலாக.

''அப்ப டின்னா?"


''உனக்குத் தரப்பட்டிருக்கிற பயணத் திட்டத்தைப் பின் பற்றினால் போதும்; வேறெதையும் கண்டுக் காதே."

"அத்து மீறி சிலர் என் அறைக்குள் நுழை வதைக் கூடவா?"

''அதான் சொன்னேனே, பணம் பாஸ் போர்ட்டுன்னு ஏதாவது கிடைக்குமான்னு பார்க்க பெட்டியைக் கிளறியிருப்பாங்க. உன் அறையைச் சுத்தம் பண்ண வருகிற ஹோட்டல் சிப்பந்திகளாகக் கூட இருக்கலாம். அடுக்கடுக் கான உன் ஸாரியிலும் நைட்டியிலும் அவங் களுக்கு அக்கறை இல்லே. திரும்பிப் போயிட் டாங்க. அவ்வளவுதான், விடு." உத்தரவாகக் கூறி ஃபோனை வைத்து விட்டார்.

அவர் பேச்சு தோரணையே மாறி விட்ட தாக உணர்ந்தாள். வெகு நேரம் பெட்டிகளை வெறித்துப் பார்த்தபடி கட்டிலில் அமர்ந்திருந் தாள். 'என்ன நடக்கிறது? நான் எந்த ரகசியத் திட்டத்திலாவது என்னை அறியாமல் சிக்கியிருக்கிறேனா? இன்பாவிடம் ஏற்பட்ட கோபம், பழிவாங்கும் உணர்வு, அவனைப் பிரிந்திருக்க வேண்டும் என்ற வேகம், தன்னா லும் அயல்நாட்டுச் சுற்றுப் பயணம் மேற் கொள்ள முடியும் என்பதில் கர்வம், சூரியா சுவாமியிடம் ஏற்பட்ட வியப்பு கலந்த மரியாதை எல்லாம் சேர்ந்து என்னை சிந்திக்க விடாமல் செய்து தவறான பாதையில் தள்ளி விட்டனவா?'

கதவு உட்புறம் தாளிட்டு விட்டு வந்து படுத்தாள். தூக்கம் வரவில்லை. எழுந்து போய் பெட்டிகளை ஆராய்ந்தாள். 'மாறியிருக்கிறதோ?' என்னதான் புதிய பெட்டி களானாலும் பயணத்தின் போது ஒரு கீறல், அல்லது அடிவாங்கிய சிறு காயம் ஏதே னும் தோன்றும். இவை புத்தம்



புதுசாயிருந்தன. 'மேலும்' விமான லேபிள்கள் கட்டியும் ஒட்டியும் இருந்தனவே; எங்கே?'

யோசித்து, டாய்லெட் பெட்டியிலிருந்து சிறிய கத்திரிக்கோல் எடுத்து ஒரு பெட்டியின் அடிவாரத்தில் குறிப்பாக ஓரிடத்தில் அடையாளக் கீறல் ஏற்படுத்தினாள். 'பார்ப்போம், என்ன ஆகிறதென்று.'

காலை ஃபோன் ஒலிக்க விழித்தாள்.

''குருஜி பேசறேன்.''

மௌனம் சாதித்தாள்.

"என்ன வெறுப்பா? நேத்து கொஞ்சம் கோபமா பேசிட்டேனில்ல? ரொம்ப களைப்பா இருந்தப்ப ஃபோன் செய்து வாங்கிக் கட்டிக்கிட்டே!" என்று சிரித்தார். "போகட்டும், நான் பாரிஸ் கிளம்பறேன். நீ உன் புரோகிராம் படி சரியா நடந்துக்கிட்டா ஒரு பிரச்னையும் உனக்கு வராது. நான் காரண்டி. ஆனா திட்டத்தை மாற்றினா, நான் பொறுப்பேற்க முடியாது. என்னமும் நடக்கும். ஜாக்கிரதை. பெண் பிள்ளை. தனியா இருக்கே."

''சரி'' என்றாள் ஒட்டுதலன்றி. அந்நியோன்னியம் போய்விட்டது. அந்நியம் தோன்றி விட்டது.

ஏதோ ஒரு விதத்தில் நாம் பயன்படுத்தப்படுகிறோம் என்ற எண்ணத்துடன் குட்டி குளியலறையின் கண்ணாடி



கதவைத் தள்ளித் திறந்தாள். வெது வெதுப்பான ஷவர், குளிருக்கு இதமாக உடம்பைப் பிடித்து விட்டு, சோர்வைப் போக்கியது. நிலைக் கண்ணாடியில் பார்த்த போது அருகில் இன்பா, புன்சிரிப்புடன்!

'இல்லை; அது ஆழ்மனத்தின் ஏக்கம். இப்போது ஒரு கவலை என்றதும் அவன் துணை நாடும் உள்ளத்தின் பிரமை.'

தும்பைப் பூவாக டர்க்கி டவல் ஹோட்டலின் உபயம். சுற்றிக் கொண்டு வெளியே வந்தாள். சின்னஞ் சிறிய அறைதான். 10'X5'! ஆனால் அதற்குள்ளேயே எத்தனை வசதி! பெட்டி வைக்க மேஜை, 'வார்ட்ரோப்' ஒற்றைக் கட்டில், குட்டி குளியலறை, ஒரு ஜன்னல், திரைச்சீலைகள், அறை விளக்கு, படிக்க விளக்கு, இரவு விளக்கு....

உடையணிந்து, மேக்அப் தரித்தாள். தம்மாத் தூண்டு அறைக்கு ஒரு நாளைக்கு 1,00,000 லிரா வாடகை! ஒரு கோக்கோ கோலா 4,000 லிரா! ஒரு ஐஸ் கிரீம் 2,500 லிரா! ஒரு 'பிட்ஸா' சாப்பிட நினைத்தால் 35,000 லிரா எண்ணி வைக்க வேண்டும்! யாராவது கோடீசுவரனாக விரும்பினால், சொர்ப்பம் டாலர்களுடன் இதாலிக்கு வந்தால் போதும்!

ஹோட்டலை விட்டு வெளியே வந்ததும் உற்சாகம் மறுபடி தொற்றிக் கொண்டது. வெனிஸ்ஸின் அழகுகளையெல்லாம் அவசர அவசரமாக அள்ளிப் பருக முற்பட்டாள். பண்டைக் கால அரண்மனை. மறு பக்கம் ஆலயம். இடையில் பிரும்மாண்டமான நிலா முற்றம். டூரிஸ்டுகளின் நெரிசல். அவர்களிடமிருந்து சோளமோ, வேர்க்கடலையோ பெற சடசடக்கும் புறாக்கள். அரண்மனை பால்கனியில் கம்பீர குதிரைச் சிலைகள். உள்ளே ஒவ்வொரு பிரும்மாண்ட அறையிலும் காணப்பட்ட உயிரோவியங்கள். கத்தி, கேடயம், வில், அம்பு, ஈட்டி, கதை என்று பலவற்றை காட்சிப் பொருள்களாக்கிய ஆயுத அறை, நீதி மன்றம், ராஜ சபை, கீழே இறங்கிச் சென்றால் இருண்டு கிடந்த பாதாளச் சிறைகள். கைதிகளை ஆறுக்கு ஆறு கொட்டடியில் கட்டிப் போட்ட சங்கிலிகள்; கொடுமைப்படுத்திய சங்கதிகள். 'சுரங்கம் வெட்ட முடியாது; அப்படியே வெட்டினாலும் தப்ப முடியாது! சமுத்திர நீர் உட்புகுந்து ஆள் அம்பேல்தான்!' என்று நினைத்தவாறே படியேறி, வெளியேறி சுதந்திர கடற்காற்று சுவாசித்தாள்.

பிற்பகலில் ஒரு டூரிஸ்ட் கும்பலுடன் தன்னையும் இணைத்துக் கொண்டு விவரமறிந்த ஒரு கைடு விளக்க உரை தர வெனிஸ் நகரின் சந்து பொந்துகளில் புகுந்து புறப்பட்டாள். எங்கு பார்த்தாலும் உப்பங்கழிகள் இருப்பதால் அந்தக் காலத்திலேயே தூண்கள் அமைத்து

அருள்வாக்கு


சகலமும் ஆன பரமாத்மா, நாம் அவரை எந்த ரூபத்தில் உபாசித்தாலும் அந்த ரூபத்தின் மூலம் அருள் புரிகிறார். படிப்படியாக நம் மனநிலையை உயர்த்துகிறார். கடைசியில் மனசே இல்லாத, மனசைக் கடந்த நிலை உண்டாகிறது. மனசு கடந்த அந்த நிலையிலேயே குணமும் ரூபமும் கடந்த பரமாத்மாவை உள்ளபடி அநுபவிக்க முடிகிறது. ஆரம்பத்தில் நமக்குப் பலவித மனோ விகாரங்கள் இருக்கும் போது, 'பரமாத்மா எல்லாம் கடந்தவர்' என்றால் அதில் பிடிப்புக் கொள்ள முடியவில்லை. ரூபத்தில், குணத்தில் அவரை உபாசித்தால், அது முற்றிய நிலையில், எல்லாவற்றுக்கும் அதீதமான பரமாத்மாவை உள்ளபடியே அநுப

அதன் மீது கட்டடம் எழுப்பும் கலையைத் தெரிந்து வைத்திருந்தார்கள். ஈரப்பசை சுவரில் ஏறாதிருக்க நில மட்டம் அளவுக்கு அஸ்திவாரச் சுவர் உயர்ந்ததும் காரீயத்தை உருக்கி வார்த்து அதன் மீது மறுபடி கல் அடுக்கினார்கள். உப்பு நீர், குடிக்க உதவாதாகையால் மழை நீரைத் தொட்டியில் சேமித்தார்கள். கண்ணாடிப் பொருள்கள் உருவாக்கும் கலையில் தலைசிறந்து விளங்கினார்கள்.

"பைசா நகரத்து சாய்ந்த கோபுரம் போல் இங்கேயும் இருக்கிறது பாருங்கள்!" அவர் சுட்டிக் காட்டிய திசையில் கூம்பு வடிவ கோபுரம் ஒன்று, சதுப்பு நிலத்தில் அஸ்திவாரம் ஒரு பக்கம் இறங்கியதால் சாய்ந்து காட்சி தந்தது. ஒவ்வொரு நாளும் காலே அரைக்கால் மில்லி மீட்டர் அளவுக்குக் கண்ணுக்குப் புலப்படாத படிக்கு சாய்கிறது.

கோண்டோலா படகில் ஏறினாள். நகரில் சாலைச் சந்துகள் போலவே நீரிலும் கால்வாய்ச் சந்து பொந்துகள். கடல் பொங்கி வருவதும் வீடுகளின் உள்ளே புகுவதும், குடியிருப்போர் முதல் மாடிக்கு இடம் பெயர்வதும் ஆண்டு தோறும் நிகழும் பருவகாலச் சம்பவம். பழகி விட்டது அவர்களுக்கு. கட்டடங்களின் புராதனத் தோற்றத்தைப் பாதுகாத்து, நவீன வசதிகளைப் புகுத்தி, படு சுத்தமாக வைத்துக் கொண்டு டூரிஸ்டுகளை ஈர்க்கின்ற சாமர்த்தியம் பணத்தை வாரிக் குவிக்கிறது.

'இன்றோடு சரி, நாளை ரோமாபுரிக்குப் புறப்பட வேண்டும்' என்ற நினைவோடு படகுப் பயணத்தின் ஒவ்வொரு வினாடியையும் ரசித்தாள். வானம் சிவந்தது; நீரும் அனல் பிழம்பானது. பார்த்துக் கொண்டிருக்கும் போதே கனல் அடங்கி சாம்பல் பூத்தது. ஒளி



விக்க முடிகிறது. மஞ்சள் பழத்தை மஞ்சளாகவே பார்க்கிறபோது மேற்கொண்டு மனசுக்கு வேலை இல்லாதது போல், பரமாத்மாவைப் பரமாத்மாவாகவே பார்க்கிறபோதும் மனசுக்கு வேலை இல்லாமல் போகிறது. உபாசனையின் போது, ''பரமாத்மாவை இப்படி இப்படி பாவனை செய்தால் அதற்கு இன்னின்ன மந்திரம் ஜபிக்க வேண்டும். இன்னின்ன ஆசாரம் வேண்டும். இன்னின்ன பூஜா பத்ததி வேண்டும்'' என்று விதிகள் இருக்கின்றன. பாவனை போய், அவரை உள்ளவாறு அறிகிறபோது எந்த விதியும் இல்லை. செயலும் இல்லை. சரீரம் மனசு இவற்றின் காரியமாகிற உபாசனை, இப்போதுதான் அநுபவமாகிற ஞானம் என்பதாகப் பழுத்து விடுகிறது.

—ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

யார் மூலம் மனித சமுதாயத்துக்கு நன்மை அதிகரிக்கிறதோ, அவனே மிகச் சிறந்த மனிதனாவான். இறைவனின் படைப்புகள் அனைத்தும் அவன் குடும்பத்தினராவர். இறைவனின் படைப்புகளுக்கு மிக அதிகம் உதவி செய்ய முயற்சி செய்பவன், இறைவனுக்கு மிக நெருங்கிய அன்பனாகின்றான்.

— நபிகள் நாயகம்

யும் இருளும் கலந்து உறவாடும் நேரம் வெனிஸ்ஸில் மிக அதிகம்.

அறைக்குத் திரும்ப விசைப்படகுக்கு மாறி, படகுத் துறையில் இறங்கும் போது இரு பெட்டிகளுடன் படகில் ஏறிய அந்த உருவம்.... 'ஏற்கெனவே பார்த்திருக்கிறோமே! எங்கே? எப்போ? அவன் சுமக்கும் அந்தப் பெட்டிகள் என்னுடையன போலிருக்கே? கேட்பதா? வேண்டாமா? சூரியாசுவாமி எச்சரித்தாரே! வம்பை விலைக்கு வாங்கியதாகி விடுமோ?'

இதற்குள் படகு நகர்ந்துவிட, அவனை ஆழ்ந்த பார்வையால் அளந்து கொண்டு ஹோட்டலுக்குத் திரும்பி, சாவி பெற்று நெஞ்சு தடதடக்க அறையை அடைந்தாள். பெட்டிகள் வைத்த இடத்தில். ஆனால் திறந்து நோக்கிய போது எதிர்பார்த்தபடியே சற்று கலைந்துதான் இருந்தது. ஸூட்கேஸின் அடிவாரத்தில்... அவள் செய்திருந்த அடையாளக் குறி.... காணப்படவில்லை! இவை வேறு பெட்டிகள்! எல்லாமே ஒரே மாதிரி அமைப்பு கொண்டவை. இந்தப் பெட்டிகளை இங்கே வைத்து, துணிமணிகளை இடம் மாற்றிய பிறகு, ஏற்கெனவே இருந்த பெட்டிகளை எடுத்துச் சென்று இருக்கிறான்... பென்ஜமின்!

அந்தக் கணத்தில் நினைவு வந்து விட்டது! கணவனுடன் கட்டிலில் குலவ நினைத்த வேளையில் அவன் பென்ஜமினின் படத்தைப் பார்த்தவாறு சிந்தனையில் ஆழ்ந்திருக்க, தான் வெறுத்துப் போய் அந்தப் படத்தை உறுவிப் பறக்கவிட்டது....

சாயாவுக்கு உடல் சில்லிட்டது.

****

இருட்டைக் கிழித்துப் புறப்படும் மின்னல் போல இன்பாவின் சோர்விலிருந்து ஒரு கோபம் சீறியது. ''அப்படியானால் நாங்கள் பின்பற்றிய அணுகுமுறைகள், பிரயாசைப்பட்டு கண்டு பிடித்த, தடயங்கள், எடுத்த முடிவுகள் எல்லாமே தப்பா?'' என்று மேஜையை அறைந்தான்.

புன்னகை புரிந்தார் ஜான் கார்மிக். ''முதலில் இன்டர்போல் ஏஜெண்டுகளிடம் பேசுங்கள்'' என்றார். சூரியாசுவாமியைக் கண்காணிக்கும் ஏஜெண்டுடன் செல்லுலர் ஃபோன் தொடர்பு ஏற்படுத்தித் தந்தார். ''சூரியா, ஆல் இதாலியா ஃபிளைட் 162ல் பாரிஸ் வந்தாயிற்று. தன் பக்தர்களில் ஒருவன் ஃபிளாட்டில் தங்கியிருக்கிறான். எதிர்ப்புறம் உள்ள கட்டடத்தில் ஓர் அறையில், போலீஸ் பாட்ஜ் காட்டி ஜன்னல் அருகே இடம் பிடித்திருக்கிறேன். பைனாகுலர் மூலம் பார்க்கும் போது சூர்யா பூஜை செய்வதாகத் தோன்றுகிறது.''

அடுத்து வெனிஸ். அங்கே பென்ஜமின், தன் கேர்ல் ஃபிரெண்ட் ஒருத்தியுடன் சல்லாபித்தவாறு கோண்டோலா படகில் கால் நீட்டி சாய்ந்து, சூரியனின் இளம் கதிர்கள் தரும் ஒத்தடத்தை அனுபவித்துக் கொண்டிருப்பதாக மற்றொரு இன்டர்போல் ஏஜெண்ட் சொன்னான்.

இன்பா ஃபோனைத் திருப்பித் தர, பெற்றுக் கொண்ட கார்மிக், ''இதனால் உங்களுடைய அனுமானங்கள் தவறு என்று சொல்லிவிட முடியாது'' என்றார்.

கேள்விக்குறி தேக்கி ஏறிட்டுப் பார்த்தான் இன்பா.

''சூர்யாசுவாமி இந்தியாவில் இருக்கும் போது, ஏன் வெளிநாட்டிலும் கூட தேவை

யான சமயங்களில் பென்ஜமின் வேஷம் புனைகிறான்; சூர்யாசுவாமி, பென்ஜமின் என்று இரு பெயர்களில் இருவித பாஸ்போர்ட் வைத்திருக்கிறான் என்று ஊகிக்கலாம். நிஜ பென்ஜமின் ஒருவனும் அயல் நாட்டில் அவனுக்கு உதவ இருக்கிறான்."

"ஆக மொத்தம் சூரியாசுவாமி, பென்ஜமின் இருவருமே பாதகர்கள். பென்ஜமினைப் பிடித்து கம்பி எண்ண வையுங்கள். சூரியா சுவாமியைக் கைது செய்து என்னிடம் ஒப்படையுங்கள். இந்தியாவுக்கு இழுத்துப் போகிறேன்."

"செய்யலாம்; போதிய சாட்சியங்கள் வேண்டும்."

"போதை மருந்துகளுடன் கையும் களவுமாகப் பிடிக்கலாமே, இப்போது!"

"சாத்தியம்தான். ஆனால் தாமதிக்கக் காரணம் இருக்கிறது."

"என்ன?"

"சூரியாசுவாமி நம்மை ஸான் ரோக்கோ விடம் அழைத்துப் போவான் என்று எதிர் பார்க்கிறோம்." ஒரு ஃபைலை அவனிடம் தந்தார்.

பிரித்தான். மேலாக ஒரு ஃபிரெஞ்சு நாளிதழ் 'கிளிப்பிங்'. அழகாகக் கத்திரிக்கப்பட்டு, ஒரு தாளில் ஒட்டி, ஃபைல் செய்யப்பட்டிருந்தது.

"சில மாதங்களுக்கு முன் இந்த நிருபர் ஒரு பாரிஸ் நைட்கிளப்பில் ஸான்ரோக்கோவை பேட்டி கண்டிருக்கிறார். தனக்கு ஆஃப்கனிஸ்தான், பாகிஸ்தான், இந்தியா, சிலோன், தாய்லாந்து என்று பல நாடுகளிலிருந்து போதை மருந்து கடத்தப்பட்டு வருகிறது என்றும் ஐரோப்பா முழுவதற்கும் தான்தான் விநியோகம் செய்வதாகவும் பெருமையடித்துக் கொண்டிருக்கிறான் ஸான்ரோக்கோ. 'மாஃபியா மன்னன் பிரத்யேக பேட்டி - ஒரு ஸ்கூப்' என்ற தம்பட்டத்துடன் பிரசுரமாகியிருக்கிறது."

புகை மண்டலத்தினிடையில் இரு பக்கமும் இரண்டு முக்கால் நிர்வாண அழகிகள் துணையிருக்க, மேலுதடு முழுவதையும் மறைத்த மீசை, கறுப்புக் கண்ணாடி, ஒட்ட வெட்டப்பட்ட பொன்முடி, டி ஷர்ட், அமைதிச் சின்ன டாலருடன் மைனர் செய்ன், வாயில் சிகரெட் சகிதம் படத்திலிருந்த ஸான்ரோக்கோ இன்பாவைப் பார்த்துச் சிரித்தான்.

"சூரியாசுவாமி இவனுக்கு வேலை செய்வதாக நம்புகிறோம்."

"நீங்கள் இவன் மூலம் அவனை, அவன் மூலம் இன்னொருவனைப் பிடிக்கணும் என்று காலம் தாழ்த்தும் நேரத்தில், போதை மருந்து ஏராளமாய் விநியோகமாகி, ஆயிரக்கணக்கான இளைஞர்கள் அதற்கு அடிமையாகிக் கொண்டிருக்கிறார்கள்."

"மறுக்க முடியாது, ஆனால் உச்சியிலிருக்கிற இவனை வளைத்துப் போடாதவரை வியாபாரம் தொடரும். சூரியாசுவாமிக்குப் பதில் வேறு ஒருவன் பிரமோஷன் பெற்று வந்து சேர்வான். அவசரப்பட்டு ஆயிரக்கணக்கான வாலிபர்களைக் காப்பாற்றுவதை விட, நிதானத்துடன் செயலாற்றி லட்சக் கணக்கான இளைஞர்களைக் காப்பது மேலல்லவா?"

பெருமூச்சு விட்டான்.....

"என்ன உங்கள் யோசனை?"

சொன்னார்.

(தொடரும்)

தாகம் தீர்த்த பாபா!

போன வருடம் தமது பிறந்த நாளன்று பேசும் போது, ஆந்திரப் பிரதேசத்திலுள்ள அனந்தபூர் மாவட்டத்தில் நிலவும் தண்ணீர் பஞ்சத்தின் தீவிரத்தைப் பற்றிக் குறிப்பிட்ட சத்ய சாயிபாபா, அதனைத் தீர்க்க ஒரு புதிய குடி நீர்த் திட்டத்தையும் அறிவித்தார். திட்டத்தை நிறைவேற்ற தமது அடுத்த பிறந்த நாளை கெடு வைத்தார். சொன்ன மாதிரியே அற்புதம் நிகழ்ந்து விட்டது. சில தகவல்கள் :



- திட்டச் செலவான 220 கோடியில், மாநில, மத்திய அரசின் பங்கு ஒரு ரூபாய் கூட இல்லை. முழுக்க முழுக்க இந்தியாவிலும், அயல் நாடுகளிலும் வாழும் பாபா பக்தர்கள் அளித்த நன்கொடையிலிருந்தே செலவிடப்பட்டுள்ளது.
- 2300 கி.மீ. தூரத்துக்கு பைப்புகள் புதைத்து, 268 மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டி, 120 தரை மட்ட நீர்த் தேக்கங்களை உருவாக்கி, தண்ணீர் வழங்கப்படுகிறது. ஆயிரம் கிராமங்கள் இதனால் பலனடையும்.
- அடுத்த மூன்றாண்டுகளுக்கு திட்டத்தை பராமரிக்கும் பணியையும் சத்ய சாயி டிரஸ்ட் ஏற்றுக் கொண்டுள்ளது.

— மௌலி

இருட்டு அரண்மனைகள்

18

கி. ராஜேந்திரன்

சர்வதேச போலீஸ் அமைப்பின் பாரிஸ் தலைமையகத்தில் இருந்த வசதிகளைப் பார்த்து பிரமித்துப் போனான், இன்பசாகரன். வரிசை வரிசையாக கம்ப்யூட்டர்கள், ஃபாக்ஸ் வசதிகள், செல்லுலார் ஃபோன், சாதா ஃபோன், காண்டீன், ஓய்வுக்கூடம், மாநாடுகளுக்கான கூடம், நூலகம், பூமி மட்டத்துக்குக் கீழே கார் பார்க் என்று விரிந்தன. பணி முடிந்ததும் சற்று நேரம் விளையாடிச் செல்ல பிலியார்ட்ஸ் அறை கூட இருந்தது.

கம்ப்யூட்டர்கள், லட்சக்கணக்கான கிரிமினல்கள் குறித்தும் சந்தேகத்துக்குரிய ஆசாமிகள் பற்றியும் ஜாதகங்கள் சேகரித்து வைத்திருந்தன. விரல் ரேகை அடையாளமா? முகச் சாயலா? பூர்வாசிரமப் பெயர்களா? திவ்யசரித்திரமா? எது வேண்டுமானாலும் தட்டினால், கொட்டின.

உலகைப் பகுதி பகுதியாகப் பிரித்து, ஒவ்வொரு பிரிவுக்கும் சிலர் பொறுப்பாக்கப்பட்டிருந்தனர். அவர்கள் தம் பகுதியில் உள்ள நாடுகளிலிருந்து அதிகாரபூர்வமாகக் கேட்கப்படும் தகவல்களுக்கு விடைகளைக் கம்ப்யூட்டர்களிடம் பெற்று அனுப்பிக் கொண்டிருந்தனர். புதிதாகப் பெறப்படும் தகவல்களைப் பதிவு செய்து கொண்டிருந்தனர்.

ஜேம்ஸ் பிளாக் உடன் வர, வேகமாக ஒரு ரவுண்ட் அடித்து விட்டு இன்பா திரும்பிய போது ஜான் கோர்மிக் அவனுக்காகத் தயாராக இருந்தார். "வெனிஸ்ஸிலிருந்து நான் எதிர்பார்த்துக் கொண்டிருந்த ஃபாக்ஸ் தகவல் கிடைத்து விட்டது. இனி நாம் தொடர்ந்து பேசலாம்" என்றார்.

மேஜை மீது டிரேயில் இருந்த கோப்பைகளை டீ கெட்டிலில் சாய்த்து தேநீரால் நிரப்பினார். தங்க நிறம். ஆவி பறந்தது. "பால்?"

"நான் கவனித்துக் கொள்கிறேன்" என்று சின்ன ஸாஷே பிரித்து கவிழ்த்தான். சர்க்கரைக் கட்டி சேர்த்து கலக்கியவாறு அவரை நோக்கினான்.

"சூரியாசுவாமி ஒரு கோவேறு கழுதையைத் தன்னுடன் அழைத்து வந்திருக்கிறான்."

"கழுதையா?"

"கேள்விப்பட்டதில்லையா?" என்று உதடுகளில் புன்னகை நெளிய விட்டார். "ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டுக்கு போதை மருந்து கடத்தி வருபவர்களை கோவேறு கழுதை என்கிறோம். கழுதை பொதி சுமக்கும். என்ன சுமக்கிறோம் என்று தெரியாமலே சுமக்கும். அப்படி இவர்களும் கூலிக்குத் தெரிந்து சுமப்பதும் உண்டு; சில சமயம் நாம் போதை மருந்து கடத்துகிறோம் என்பது தெரியாமலே கூட சுமப்பதும் உண்டு. இத்தகைய ஏமாளிகளை போதை மருந்து கடத்துகிறவர்கள் நன்றாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். தெரியாமலே சுமப்பதில் ஒரு அனுகூலம் இருக்கிறது. இவர்கள் வெகு இயல்பாக நடந்து கொள்வார்கள். கஸ்டம்ஸ் செக்கிங்கில் சுலபமாகத் தப்பி விடுவார்கள். கூலிக்குத் தெரிந்தே கடத்துகிறவர்கள், இயல்பாக நடந்து கொள்ளப் பிரயாசைப்பட வேண்டும். ஒத்திகை பார்த்துக் கொள்ள வேண்டும். கஸ்டம்ஸ் அதிகாரிகளைக் கடப்பதும் கஷ்டம்."

"சூரியாசாமியின் கழுதை எந்த வகை?"

"முதல் வகை. ஒரு பெண் கழுதை. இந்தியாவிலிருந்து சூரியாசுவாமியுடன் அதே விமானத்தில் வந்தாள். ஆனால் நெருங்கி உட்காரவில்லை. வெனிஸ்ஸில் தனித்தனி ஓட்டல்களில்தான் தங்கினார்கள். என்றாலும் பென்ஜமின் இரண்டு பெட்டிகள் சுமந்து அவள் அறைக்குப் போய்த் திரும்பியதால் அவளைக் கழுதை என்றே சந்தேகிக்க வேண்டியிருக்கிறது."

"பெட்டிகளை மாற்றி எடுத்து வருவதன் மூலம் போதை மருந்துகள் விநியோகமாகின்றன என்கிறீர்களா?"

"கரெக்ட். அடுத்து அவள் ரோம் நகருக்கோ அல்லது பாரிஸுக்கோ, எங்கே போகிறாளோ அங்கே பென்ஜமின் பின்தொடரலாம்."

"எனக்கு என்ன திட்டம் வைத்திருக்கிறீர்கள்?"

"இப்போ சூர்யாசுவாமி பாரிஸில்; அவள்



வெனிஸ்ஸில். நிஜ பென்ஜமினுக்கோ உன்னை அடையாளம் தெரியாது. அவள் அடுத்து எங்கே போகிறாளோ அங்கு பறந்து போ. யதேச்சையாக சந்திப்பது போல் சந்தித்துப் பேசு. நீங்கள் இருவருமே இந்தியர்கள்; தமிழ் நாட்டினர் என்பதால் இயல்பாக அமையும். அவள் தெரிந்து செய்கிறாளா தெரியாமல் செய்கிறாளா என்பதை உறுதிப்படுத்திக் கொள். பிறகு அதற்கேற்ப பயமுறுத்தியோ, ஆசை காட்டியோ, அல்லது அவள் தேசபக்தி யையும் நேர்மை உணர்வையும் தூண்டியோ காரியத்தை சாதிக்கப் பார்."

"அவள் மூலம் நான் என்ன சாதிக்க வேண் டும்?"

"ஸான் ரோக்கோ பற்றி தெரிந்து கொள். சூரியாசுவாமியிடம் அவள் தன் சாமர்த்தியத் தைக் காட்டி விவரம் அறிந்து நமக்குத் தகவல் தரட்டும்."

"அதற்கு அவள் பணம் கேட்டால்?"

'கொடுப்போம். ஆனால் பண்டத்தைப் பெற்றுக் கொண்ட பிறகுதான் அதற்கான விலையைத் தர முடியும்."

"பென்ஜமின் பார்த்துக் கொண்டு சும்மா இருப்பானா?"

"இரண்டு சுற்றுலா பயணிகளின் சந்திப் பில், நட்பில் சந்தேகிக்க என்ன இருக்கிறது? ஒருவேளை அவன் இதில் தில்லுமுல்லு ஏதோ நடப்பதாக நினைத்தால் சூர்யாசுவாமிக்குத் தக



''கேடி கண்ணுசாமி மனசு யாருக்கு வரும்?''

''என்ன விஷயம்ங்க?''

''நாளைலேர்ந்து ரிடயராகும் நான் கஷ்டப் படப் போறேனேன்னு எனக்காக ஒரு 'பெனி பிட் கொள்ளை' நடத்தப் போறானாம்!''

— ஞா. ஞானமுத்து

வல் கொடுப்பான். அவர் திரும்பி வந்து உன்னை அடையாளம் கண்டுகொள்வதற்கு முன்னால் நீ மறைந்து விடு. அவளை நம் பக்கம் இழுத்து நமக்காக வேலை செய்வதாக ஒப்புதல் பெற்ற பிறகு நீ அவளுடன் சேர்ந்து காணப்படப் போவதில்லையே."

"அவள் உல்லாசப் பயணத்தினிடையே ஒரு சல்லாபத்தில் ஈடுபட்டதாகத்தான் பென்ஜமினும் சூர்யாசுவாமியும் நினைத்துக் கொள்வார்கள்" என்றான் ஜேம்ஸ் பிளாக். "உற்சாகம் தரும் சுற்றுலாப் பயணம், தனியே அழகிய பெண், கம்பீர ஆண், யதேச்சையான சந்திப்பு, காந்த ஈர்ப்பு, நெருங்கி வரத் தடையற்ற சுதந்திரச் சூழல், கவலைகளை மறந்த சுவாரஸ்யப் பேச்சு, குளிர், அரவணைப்பு, இதம், அப்புறம் எட்ஸட்ரா!"

"உங்கள் நாட்டின் பண்பாடு அடிப்படையில் பேசுகிறீர்கள்."

"உண்மைதான். 'வென் இன் ரோம் லிவ் லைக் எ ரோமன்' என்று சொல்லேன் அவளிடம். இதெல்லாம் கற்றுத் தரவா வேண்டும்?"

ஜான் கோர்மிக் இடைபுகுந்தான். "சமுதாயக் கட்டுப்பாட்டில் அடிமைப்பட்டு இருந்தவர்கள் திடீரென்று தளைகள் தகரும் போது தடுமாறி விழுவது சுலப சாத்தியம்தான். அப்படி அவள் சரியும் போது தாங்கிக் கொள்ள நீ அருகிலிருப்பாய்."

"அப்படியானால் சரிவது அவள் மட்டுமல்ல நானும்தான்."

"இருக்கலாம், இங்கே இதையெல்லாம் சரிவு என்றே நாங்கள் நினைப்பதில்லை; அந்தக் காலம் மலையேறி விட்டது இப்போது இதெல்லாம் இயல்பு."

" 'ஃபிரி லவ்' என்று அதற்குப் பெயர் சூட்டியும் இருக்கிறீர்கள், தெரியும். தமிழ்நாட்டுப் பெண்களிடம் அதெல்லாம் சுலபத்தில் எடுபடாது. அந்த அளவுக்குப் போகாமலே காரியத்தை முடிக்கப் பார்க்கிறேன். எனக்கு அவளை யார் அடையாளம் காட்டுவார்கள்?"

"இன்டர்போல் ஏஜெண்ட் அவளைப் பின்தொடர்கிறானே, அவன் ஜாடையாக அவளை உனக்குக் காட்டிக் கொடுப்பான். அதற்கு அதிகமாக அவனிடம் எதிர்பார்க்காதே. பென்ஜமின் உஷாராகி விடலாம்."

"போட்டோ எடுத்து அனுப்பச் சொல்லியிருக்கலாமே? உபயோகப்படுமே?"

"அதை மறப்போமா என்ன? ஃபோட்டோ ஃபாக்ஸ் செய்யச் சொல்லியிருந்தேன். அதை எதிர்பார்த்து நான் காத்திருந்த நேரத்தில்தான் நீ ஜேம்ஸுடன் இந்தக் கட்டடத்தைச் சுற்றிப் பார்த்து விட்டு வந்தாய்."

ஃபைல் பிரித்து நீட்டினார். மேலாக ஃபாக்ஸ் ஃபோட்டோ கூடுதலாகச் சேர்த்திருந்தது. "டெலிலென்ஸ் போட்டு நமது ஏஜெண்ட் மறைவிடத்திலிருந்து எடுத்தது."

படத்தில், நெற்றி பாதி மறைத்து அரைக் கழுத்துடன் முடிவடைந்த நூதன ஹேர் டூ, ரேபான், ஏராள மேக்-அப், சின்னஞ்சிறு பொட்டு, துப்பட்டா துறந்த ஸல்வார் கமீஸ் அணிந்து எடுப்பாகத் தோற்றமளித்த பெண், தூரத்தில் எதையோ ஆர்வமாகப் பார்ப்பது போல முகம் சற்றே திரும்பியிருந்தாள்.

வெறித்தான்.

"என்ன நாக்அவுட்டா?"

"மைக் டைஸன் பஞ்ச்! இவளை எங்கோ எப்போதோ பார்த்த மாதிரி இருக்கு."

"ஹுரே! ஐம்பது பர்ஸெண்ட் வெற்றி ஏற்கெனவே கிடைத்து விட்டது!" என்றார் ஜான் கோர்மிக்.

'எல்லா சாலைகளும் ரோமாபுரிக்கே அழைத்துப் போகின்றன' என்பதாக ஒரு சொற்றொடர் வழக்கில் இருக்கிறதே, அதன் முழு அர்த்தத்தையும் புரிந்து கொள்ள இங்கு நேரில்தான் வர வேண்டும்' என்று நினைத்தாள் சாயா.

'ரோமாபுரியில் இருப்பதை விடவும் வானளாவும் நவீன கட்டடங்கள் இதர உலக மகாநகரங்களில் இருக்கலாம்; ஆனால் இங்கு உள்ளது போல் ஒவ்வொரு கட்டடத்துக்கும் ஒரு தொன்மைச் சரித்திரத்தைக் கேட்டு அதிசயிக்க முடியாது. நகருக்கு அழகு ஊட்ட அலங்காரமான பொங்குப்புனல்கள் இருக்கலாம்; ஆனால் ரோமாபுரிப் புனல்களில் இணைந்துள்ள சிற்ப அழகுகளை வேறெங்கும் பார்க்க முடியாது. மாபெரும் தேவாலயங்களைப் பலரும் அமைக்கலாம்; ஆனால் அவற்றில் இங்கு இருப்பன போன்ற உன்னதமான சுவரோவியங்களைக் காண முடியாது...

'இப்படி சொல்லிக் கொண்டே போக

லாம்... ஏன், பிற தேசங்களில் எத்தனையோ சாமர்த்தியசாலிகளான குற்றவாளிகள் இருக்கலாம்; ஆனால் அவர்கள் எல்லோருமே இதாலிய மாஃபியா கும்பலிடம் பிச்சை வாங்கத்தான் வேண்டும். இவர்களைப் போன்று உலக நாடுகள் பலவற்றிலும் கிளை விட்டுப் படர்ந்த கொடூரக் கொள்ளையர் அமைப்பு வேறு கிடையாது. இப்படியும் ஒரு பெருமை இதாலிக்கு!' என்று நினைக்கும்போதே சிரிப்பு வந்தது சாயாவுக்கு. அந்தச் சிரிப்பை விரட்டி அடித்தது, 'அந்த மாஃபியா கும்பலின் பிடியில் நானும் சிக்கியிருக்கிறேனோ?' என்ற எண்ணம்.

ரோம் நகரத்தை சுற்றுலா பஸ்ஸில் அமர்ந்து சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்த போது அவளுக்குப் பரவசமும் பயமும் மாறி மாறி ஏற்பட்டன.

லியனார்டோ டா வின்ஸி என்ற மாபெரும் சிற்ப - ஓவியக் கலைஞனும், இலக்கிய வாதியும், விஞ்ஞானியும், கட்டடக் கலை நிபுணருமான மேதையின் பெயரைத் தாங்கி நின்ற பிரும்மாண்ட விமான நிலையத்தில் இறங்கி, வழி விசாரிக்க அவசியமின்றிச் செய்த அம்புக் குறிகளையும் படங்களையும் பின்பற்றியே ரயில் நிலையத்தை அடைந்து விடலாம். அதுவும் நடக்க அவசியமின்றி கன்வேயர் பெல்ட்டில் நின்றபடி பயணித்தே போய் விடலாம். ரோமாபுரியின் மையமான இடத்தில் ரயில் பாதை முற்றுப் பெற, இறங்கி, டாக்ஸி பிடித்து ஓட்டலை அடைந்தாள்.

வெனிஸ்ஸில் இருந்ததை விட அறை விசாலமாகவும் வசதிகள் மிகுந்தும் இருந்தது. வாடகையோ குறைவு! யோசித்ததில் ஆச்சர்யம் மறைந்தது. வெனிஸ் சின்ன நகரம். ஹோட்டல்கள் குறைவு. டூரிஸ்டுகளே ஏராளம். ரேட் உயர்கிறது. ரோம் அதற்கு நேர் மாறுதல்.

பெட்டிகளை டிராலியில் வைத்துத் தள்ளியவாறு அவளுக்கும் வழிகாட்டி அழைத்து வந்த ஹோட்டல் சிப்பந்தி, 'டிப்' பெற்றுக் கொண்டு திரும்பியதும், முதல் காரியமாக அந்த ஸூட்கேஸ்களை ஆராய வேண்டும் என்று பரபரத்தாள். மாறி மாறி வரும் ஒரே மாதிரி ஸூட்கேஸ்களை ஊர் ஊராகக் கொண்டு செல்வதன் மூலம் தான் எதையோ கடத்திப் போக சூர்யாசுவாமிக்கு உதவுவதாகத் தோன்றியது. உறுதிப்படுத்திக் கொண்டு, என்ன கடத்துகிறார்கள் என்று தெரிந்து கொள்ளவும் விரும்பினாள்.

இதில் ஆபத்து உண்டு. சூர்யாசுவாமி முன் போல் இல்லை. ஃபோனில் கடுமையாகப் பேசினார்.

அச்சத்தை ஆவல் குறுகுறுப்பு வென்றது. கதவைத் தாளிட்டு விட்டு, ஸூட்கேஸைத் திறந்து, துணிமணிகளை வெளியே எடுத்துப் போட்டு ஆராய்ந்ததில், உள் கனபரிமாணம் வெளி கன பரிமாணத்தை விடக் குறைவாக இருப்பது புரிந்தது.


வேனிடி பேக் திறந்து ஒப்பனை உபகரணங்களுக்கிடையில் இருந்த மெலிதான கத்திரிக் கோல் எடுத்து, ஒற்றைக் கூர்முனையால் பெட்டியின் அடிவாரத்தில் ஒரு மூலையில் குத்திப் பார்த்தாள். மிருதுவாக இறங்கியது. உருவிய போது வெள்ளைப் பவுடர் ஒட்டிக் கொண்டு வந்தது.

'சந்தேகமே இல்லை. போதை மருந்துதான் கடத்துகிறார்கள்.' மறுபடி துணிமணிகளை அழகாக, கச்சிதமாக அடுக்கினாள். 'இன்பாவைப் பழிவாங்குவதாக நினைத்துக் கொண்டு இப்போது இவர்களிடம் மாட்டிக் கொண்டு முழிக்கிறேன். எனக்குத் தெரியும் என்பது அவர்களுக்குத் தெரியவந்தால்...?'

'என்ன செய்து விடுவார்கள்?' என்ற ஒரு வீம்பான எண்ணமும் எழுந்தது. 'இப்போது என் உதவி அவர்களுக்குத் தேவை! எனக்கு ஒன்றுமே தெரியாதது போல் நடிப்பதும் கஷ்டமல்ல...'

'அப்படி நடிப்பதன் மூலம் அவர்களுடைய அக்கிரமத்துக்குத் துணை போகிறேன்; பல்லாயிரக்கணக்கான இளைஞர்களின் வாழ்க்கை பாழாகக் காரணமாகிறேன் என்பது நிச்சயம். ஆனால் எனக்கு வேறு வழி என்ன? இப்போது முரண்டு பிடித்தால் கொலை விழும். நிகழ்ச்சி நிரலின்படி பயணத்தை முடித்துக் கொண்டு ஊர் திரும்பி விட்டால் போதும்!'

பல்வேறு ஹோட்டல்களில் தங்குவோர் நகரைச் சுற்றிப் பார்க்க பயணத் திட்டங்களும் பஸ்களும் இருந்தன. ஆங்கிலத்தில் விளக்க உரை தர விஷய ஞானமுள்ள அழகிகளும் இருந்தனர். காலை டூர், பிற்பகல் டூர், இரவு



''வர வர எதைத்தான் டீவியில் நேரடி ஒளி பரப்பு செய்வது என்றில்லாமல் போய் விட்டது.''

''என்ன விஷயம்?''

''சென்ட்ரல் ஜெயிலில் இருந்து பத்து கைதிகள் தப்பிக்கப் போகிறார்களாம். அதை நேரடி ஒளிபரப்புச் செய்ய ஒரே போட்டியாம்.''

– பத்மா சுந்தரம்

டூர் என்று வகைக்கு ஒன்றாக டிக்கெட் பெற்றுக் கொண்டு சுற்றுலா பஸ்ஸுக்குக் குறித்த நேரத்தில் தயாராக இருந்தாள்.

ரோம் நகரமே குன்றுகளின் மீது அமைந்திருக்கிறது. சொகுசு பஸ், சாலைகளின் ஏற்ற இறக்கங்களில் சென்ற போது பழங்காலக் கட்டடங்களின் அழகு, சிலைகளின் கம்பீரம் எல்லாம் ரசிக்க முடிந்தது. குறிப்பாக குதிரை மீது மார்க்கஸ் அரேலியஸ். ஞானத்துடன் இணைந்த வீரம்!

பண்டைய ரோமாபுரி இயற்கையின் சீற்றத்தால் சிதைந்து புதையுண்டு போக, அந்தப் புராதன கட்டடங்கள் மீதே இன்று காணப்படும் தொன்மையான கட்டடங்கள் எழுப்பப் பட்டுள்ளன! ஓரிடத்தில் பஸ் நிறுத்தி, இதற்கு நிரூபணம் தந்தாள் வழிகாட்டி. "இந்தக் கட்டடம் எழுப்ப அஸ்திவாரம் தோண்டிய போது, பண்டைக்கால அரண்மனை தெரிந்தது. அதன் ஒரு பகுதியை நாம் காண வகை செய்து, அதன் மீது புதிய கட்டடம் எழுப்பியிருக்கிறார்கள், பாருங்கள்!"

'சரித்திரத்துக்குள் சரித்திரமா!' என்று ஆச்சர்யப்பட்டு முடிவதற்குள், நகருக்குள் நகரமாகவும் தனிநாடாகவும் விளங்கும் வாடிகேனின் ஸெயின்ட் பீட்டர் சதுக்கம் வந்து விட்டது. நாலு கால்பந்து மைதானங்களை இணைத்தது போன்ற அதன் பரப்பளவு, வட்ட வடிவமைப்பு, மத்தியில் எகிப்திய ஊசிமுனைத் தூண், இருபுறமும் பொங்குபுனல்கள், வரிசையாக நின்ற சிலைகளின் கலையழகு எல்லாம் மூச்சடைக்க வைத்தன எனில், அந்த நிலா முற்றத்தையொட்டி அமைந்த ஸெயிண்ட் பீட்டர் தேவாலயமோ, ஆண்டவனின் மகிமையை உணர்த்தவே போல் விண்ணளாவி நின்றது.

உள்ளே டூரிஸ்டுகள் மயம். அந்த ஜனநெரிசலின் மத்தியிலும் ஒரு சாந்நித்தியத்தை உணர முடிந்ததுதான் ஆச்சர்யம். வண்ணத் தூரிகை ஓவியங்களைப் போலவே தோற்றமளித்த மொஸைக் ஓவியங்களையும் வெண்கலச் சிற்ப அற்புதங்களையும் ரசித்தவாறே சுற்றி வந்த சாயா, பளிங்கினால் ஆன Pieta என்ற சிலை பார்த்துத் தன்னை மறந்தாள். தாயின் மடியில் ஏசுவின் உயிரற்ற உடல் – சிற்பியின் உயிர்ப் படைப்பாக! உயர் படைப்பாக.

சுயநினைவு பெற்ற போது, 'ஐயோ, மற்றவர்கள் நம்மைப் பிரிந்து போயிருப்பார்களோ' என்ற கவலை உந்தத் திரும்பினால், அவர்களும் அவளைப் போலவே அந்தப் புனிதத்தில் கரைந்துதான் போயிருந்தார்கள்!

இந்த அற்புதச் சிலையை உடைப்பதற்கென்றே அமெரிக்காவிலிருந்து சுத்தியுடன் விமானமேறி வந்து, யாரும் தடுப்பதற்கு முன் தன் பைத்தியக்கார முயற்சியில் சிறிதளவு வெற்றியும் பெற்று விட்டவனை, கலையுணர்வற்ற மூர்க்கன் என்பதா, மாபாதகன் என்பதா...? நல்லவேளை, சிறிதளவே சேதம். விரிசலே தெரியாமல் செப்பனிட்டு, இப்போது முன்புறம் பாதுகாப்பாக புல்லட் புரூஃப் கண்ணாடி!

சாயா சென்ற இடமெல்லாம் மைக்கலாஞ்சலோ, பெர்னினி என்ற இரண்டு மாபெரும் கலைஞர்களின் பெயர்கள் திரும்பத் திரும்ப ஒலித்தன. அவர்களும் இதர பல சிற்ப சித்திர மேதைகளும் ரோமாபுரியை உலகின் நிரந்தரக் கலைக்கேந்திரமாக்கி விட்டனர்!

டூர் முடிந்த போது, டைம் மிஷினில் பயணித்து சரித்திர காலத்தில் உலவி, திரும்ப நிகழ் காலத்துக்கு வந்து சேர்ந்தது போலிருந்தது. பசியும் தெரிந்தது. ஆப்பிள் பை (இனிப்பு சேர்த்து வேகவைத்தது), மினரல் வாட்டர் என்று வாங்கிக் கொண்டு அறைக்குத் திரும்பினாள். லிஃப்ட்டில் உயரும்போதே, 'பெட்டிகள் மாறியிருக்குமா? வெனிஸ்ஸில் இரண்டு முறை மாறினவே?' என்ற நினைப்புடன் இருந்தாள். 'அறைகளை சுத்தப்படுத்தி, படுக்கை விரிப்புக்களை மாற்றும் ஊழியர்கள் ஆங்காங்கே சூரியா சுவாமியின் வள்ளல் தன்மையால் ஆதாயம் அடைந்திருக்க வேண்டும். சாவி கொடுத்து உதவுகிறார்கள்!'

பெட்டிகள் எதிர்பார்த்தபடியே மாறித்தானிருந்தன. 'இந்த ஸூட்கேஸ்களின் அடிவாரத்தில் என்ன பதுக்கியிருக்கிறார்கள்?' நெஞ்சு படபடக்க ஆராய்ந்தாள். கத்தரிக்கோல் முனை இறங்க மறுத்தது. கடினமாக ஏதோ தட்டுப்பட்டது. ஒரு ஓரமாக அடிவாரத் துணி கத்திரித்து விலக்கிப் பார்த்த போது, கண்கள் மலர, வாய் விரிய, திகைப்பின் எல்லைக்கே மூச்சு இழுத்துக் கொண்டு போயிற்று!

(தொடரும்)



"உங்க கிராமத்துக்குச் சாலை வசதி கேட்டிருந் தீங்களாமே! எதுக்கு?"

"குடிநீர் வசதி கேட்டுச் சாலை மறியல் பண்ணத் தான்!

- உ. ராஜாஜி



க்ளோஸ்-அப் முகங்கள் வெவ்வேறு போஸில் கேஸட் கவர்களின் மீது தோன்றி நம்மை அசர வைக்கிறது. டக்கென்று அவற்றை அடுத்தடுத்துப் பார்த்தால் ஒரு புகைப்பட ஆல்பத்தைப் புரட்டியது போன்ற எண்ணம் எழவே செய்கிறது. விற்பனையை நிர்ணயிப்பதில் கேஸட் உறைகளுக்கு (wrappers) நிச்சயம் பங்கு உண்டு என்கிறார்கள்.

"இதுவரை தங்கள் தயாரிப்புகளை பளிச்சென்று பார்வையில் படுமாறு வைக்க எந்த கேஸட் நிறுவனமும் பணம் தந்ததில்லை. எந்தக் கடையிலுமே இந்த உத்தி பின்பற்றப்படவில்லை என்றே நினைக்கிறேன். ஆனால் 'மியூஸிக் டுடே' நிறுவனம் தங்களுக்காக (குறிப்பிட்ட கட்டணத்துக்கு) ஒரு ஷெல்பை ஒதுக்கி, அவர்களது கேஸட்டுகளை மட்டும் அவற்றில் அடுக்கி வைக்கக் கேட்டிருக்கிறார்கள்" என்று கூறுகிறார் 'கீதா கேஸட்' ஐயப்பன்.

இந்த வருஷம் எந்த கேஸட்டுக்காகவும் பாடுவதில்லையென்று தீர்மானித்திருக்கிறார் உண்ணிகிருஷ்ணன். காரணம்? "கர்நாடக இசையைப் பொறுத்தவரை நான் இன்னும் கொஞ்சம் 'மெச்சூர்' ஆக வேண்டுமென்று நினைக்கிறேன். தவிர, ஐந்தாறு மாதங்கள் வெளிநாடு போயிருந்தேன். அதனால் அதிகம் பயிற்சி செய்ய முடியவில்லை. கேஸட் நிறுவனத்தினர் அதிக பாடல்கள் கேஸட்டில் இடம்பெற்றால் விற்பனைக்கு உதவுமென நினைப்பதால், விஸ் தாரமான ஆலாபனைக்கு இடமில்லாமல் போகிறது...." என்று அடுக்குகிறார். "அடுத்த ஆண்டிலிருந்து, வருடத்திற்கு மூன்று கேஸட்டுகளுக்கு மேல் கொடுக்கப் போவதில்லை" என இப்போதே முடிவு செய்து விட்டார்.

"வட இந்தியாவில் ஒரு 'கஜல்' ஆல்பம் வெளியிட வேண்டுமென்றால் அதை 'ஒரு வருட ப்ராஜெக்ட்'டாக எண்ணி திட்டமிடுகிறார்கள். இங்கோ பரபரப்புக்குத்தான் முன்னுரிமை" என்று வருத்தப்படுகிறார்.

வருங்காலத்தில் கேஸட் வியாபாரம் இதே சூட்டோடு தொடருமா? இப்போதெல்லாம் காம்பாக்ட் டிஸ்குகளைத் தரமான முறையில் இந்தியாவிலேயே ஒலிப்பதிவு செய்ய முடிகிறது. அதன் விலை கிட்டத்தட்ட பாதியாகி விட்டது. அதைப் போட்டுக் கேட்பதற்கான 'டெக்'கின் விலையும் கணிசமாகக் குறைந்திருக்கிறது. இன்னும் ஐந்து வருடங்களில் ஸி.டி.க்கள் கேஸட்டுகளின் இடத்தைப் பிடித்துவிடும்!

- ஜி.எஸ்.எஸ்.

படங்கள் : ராஜநாராயண்

கி. ராஜேந்திரன் **19**

டாலர் நோட்டுக்கள்! ஒவ்வொரு நோட்டும் நூறு டாலர்! கட்டு கட்டாக, அடுக்கு அடுக்காக, ஸூட்கேஸ்களின் அடிவாரத்தில், ரகசிய அறைகளில் பரவலாக!

நடுங்கிய உடலை பெரு முயற்சி செய்து கட்டுப்படுத்திக் கொண்டு கட்டிலில் அமர்ந் தாள். என்ன நடக்கிறது என்பது இனி அரிச் சுவடி பாடம். தான் செல்லும் ஒவ்வொரு ஐரோப்பிய நகருக்கும் சூரியாசுவாமி சார்பில் போதை மருந்து கடத்திப் போகிறாள். அறையை விட்டு ஊர் சுற்றிப் பார்க்க இவள் கிளம்பிப் போனதும், நோட்டுக்கட்டுகள் அடங் கிய பெட்டிகளுடன் உள்ளூர் ஏஜெண்ட் வந்து, அவற்றை வைத்து விட்டு, போதை மருந் துகள் அடங்கிய பெட்டிகளை எடுத்துப் போகிறான். அடுத்து பென்ஜமின் விஜயம் செய்கிறான். அவன் மீண்டும் போதை மருந் துகள் அடங்கிய பெட்டிகளை வைத்துவிட்டு பணம் நிரம்பிய பெட்டிகளை எடுத்துப் போகிறான். பணத்தை அவன் சூரியா சுவாமி யின் நெம்பர் அகௌண்டில், ஸ்விஸ் வங்கிக் கிளையில் கட்ட, இவள் போதை மருந்து சுமந்து அடுத்த நகருக்குப் பயணமாகிறாள். எந்த எந்த நகரங்களிலெல்லாம் விநியோகமாக வேண்டுமோ அவற்றுக்கெல்லாம் விமான டிக் கெட் வாங்கிக் கொடுத்து இவளை சுற்றுலா அனுப்புகிறான் குருஜி. தப்பித் தவறி மாட்டிக் கொண்டால் கம்பி எண்ணப்போவது இவள் தான். தனக்கு ஒன்றுமே தெரியாது என்று குருஜி சாதித்து விடுவான்! ஆனால் காரியம் இடையூறின்றி நிறைவேறினால் அவனுக்குக் கோடி கோடியாகப் பணம்! வருமானவரி கிடையாது! ஊட்டி ஆசிரம நிர்வாகம் போன்ற சில அம்சங்களுக்குத் தேவைப்படும்போது கொஞ்சம் கொஞ்சமாகப் பணம் தமிழகம் வந்து சேரும்- அயல் நாட்டு பக்தர்களின் அன்புக் காணிக்கை என்ற பெயரில்!

என்ன செய்வது? தனக்கு ஒன்றுமே தெரி யாது என்று நாடகமாடுவது தவிர வேறு என்ன செய்ய முடியும்? ஆப்பிள் பணியாரம் சாப் பிட்டு வயிற்றை நிரப்பி, மினரல் வாட்டர் குடித்து தாகம் அடக்கி, பிற்பகல் சுற்றுலாவுக் குத் தயாராக வேண்டியதுதான்!


பயணம் என்னவோ சுவாரஸ்யமாகத் தான் இருந்தது. ரோமுலஸ், ரீமஸ் என்ற இரண்டு குழந்தைகள் கூடையில் கிடத்தப்பட்டு, ஆற்றிலே மிதந்து வந்து, கரை ஒதுங்கி, ஓநாயிடம் பால் குடித்து வளர்ந்து, குன்றின்மேல் ரோமாபுரியின் முதல் கட்டடம் எழுப்பி, அவர்களில் ஒருவன் பொறாமையால் சண்டை போட்டுச் சரிந்த கதை தொடங்கி, ஃபாஸிஸ சர்வாதிகாரி முசோலினி வரையில் ரோமாபுரியின் சரித்திரத்தை அத்தியாயம் அத் தியாயமாகப் பார்த்துப் "படிக்க" சான்றுகள், புகழ்பெற்ற கட்டடங்களாக அல்லது பாது காக்கப்பட்டு வரும் இடிபாடுகளாக இன்றும் இருக்கின்றன. எத்தனை மன்னர்கள்! சக்கர வர்த்திகள்! சர்வாதிகாரிகள்! எத்தனை புகழ் பெற்ற கிறிஸ்துவ மதகுருமார்கள்! போப்பாண் டவர்கள்! மாமேதைகளான சிற்ப, ஓவிய, கட்ட டக்கலை வல்லுனர்கள்! அனைவருக்கும் நினைவஞ்சலி செலுத்திக் கொண்டு ரோமாபுரி பழைமையும் புதுமையும் கலந்து கம்பீரமாகக் காட்சி தருகிறது. பல மியூஸியம்கள் வேறு, விலை மதிக்க முடியாத பளிங்குச் சிலைகளை யும் ஓவியங்களையும் பாதுகாக்கின்றன. எதைப் பார்ப்பது? எதை விடுவது? மூன்று மணிநேர அவசர டூர், இத்தாலியின் சரித்திர சிறப்புக்கும் கலைப் பாரம்பரியத்துக்கும் ஒரு சாம்பிள் சுற்றுலாதான்!

கிறிஸ்து பிறப்பதற்கு நானூறு ஆண்டு களுக்கு முற்பட்ட கோயிலின் இடிபாடுகள் தொடங்கி, ரோமன் ஃபோரம் என்ற பகுதியில், எத்தனையோ உன்னதமான கட்டடங்களின் சிதைவுகள். அவற்றை புதுப்பிக்காமல் அப்படி அப்படியே பாதுகாத்து, தீயினாலும் படை யெடுப்புகளாலும் பாழ்பட்டமைக்குக் கதைகள் கூறி, ஒரு கனவுலகப் பயணத்தில் அழைத்துப் போனார் வழிகாட்டி.

"அதோ பாருங்கள்"என்று குன்றின் உச்சியி லிருந்து கை காட்டியபோது, கீழே ஒரு நீண்ட மெகா தாழ்வாரம் போன்ற அமைப்பு தெரிந் தது. "அந்த நாளில் ரத சாரத்தியப் போட்டிகள் நடந்த இடம். கற்பனையைச் சிறகடிக்க விடுங் கள்; அல்லது 'பென்ஹர்' சினிமாவையாவது ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள்!"

மேலும் பயணித்து இன்னொரு இடத்தில் இறங்கினால், கலோஸியம்! தோல்வி கண்டும் கலங்காத வீரன் போல் தகர்ந்து போன பிறகும் தலை நிமிர்ந்து நிற்கும் விளையாட்டு அரங்கம்!

இருட்டு அரண்மனைகள்



"இன்றைக்கு உலகின் எந்தப் பகுதியில கட்டப்படும் புத்தம்புது ஸ்டேடியம் எதுவானாலும் இதற்கு ஈடாகுமா!" என்று கேட்டார் கைடு. "சிங்கம், கரடி போன்ற பயங்கர மிருகங்களுடன் இங்கு கிளாடியேட்டர்கள்– திண்தோள் தீரர்கள்– ஆயுதமின்றி சண்டை போடுவார்கள். சுற்றிலும் பல்லாயிரக் கணக்கான மக்கள் அமர்ந்து வேடிக்கை பார்ப்பார்கள். எட்டு வகுப்பினருக்கு எட்டு நுழை வாயில்கள்; படிப்படியாக உயரும் இருக்கைகளுடன் கூடிய வட்ட வடிவ அமைப்பு எல்லாம் கூட அதிசயமில்லை. யுத்தம் நடக்கிற தரை மட்டத்துக்குக் கீழே பிரும்மாண்ட நில வறை; அதிலே துஷ்ட மிருகங்களை அடைத்து வைக்கக் கூண்டுகள்; கிளாடியேட்டர்கள் வந்து போக வசதிகள்! ஆரவார வரவேற்புக்கிடையே ஒருபுறம் சிங்கம் மேலேறி வரும்; மறுபுறம் வீரர் உயர்ந்து தோன்றுவார்" என்று அவர் கூறி வந்த போது, சாயாவும் பிறரும் குட்டிச் சுவர்களையா பார்த்தார்கள்? நீரோ மன்னனின் ஆட்சியில் நடைபெற்ற கொடூர விளையாட்டைக் கண்டுதான் சிலிர்த்தார்கள்!

தேவாலயங்களுள் ஒன்றான ஸான் பியட்ரோவில் மைக்கலாஞ்சலோவின் 'மாஸ்டர் பீஸ்' சிருஷ்டி என்று கருதப்படும் மோஸஸ் சிலையைக் கண்டு ரசித்து உருகினாள் சாயா. தாடிச் சுருள்களில் ஒவ்வொரு முடி இழையும் துல்லியமாகத் தெரிந்தது; மெலிந்த உடலில் புடைத்து நின்ற ரத்த நாளங்கள் பளிங்குச் சிலையில் பாங்காகப் புலப்பட்டது. எதிரே இருப்பவரைத் துச்சமாகப் பார்த்து ஊடுருவும் கண்கள் பயபக்தியை உருவாக்கின. இவையெல்லாவற்றையும் விட மோஸஸ்ஸின் தலையில் இரண்டு சிறிய கொம்புகளைக் காண்பித்ததில் சிற்பி தனது அற்புதமான கற்பனைத் திறனை வெளிப்படுத்தியிருந்தார்! 'நீ என்ன கொம்பனோ?' என்று யார்தான் கேட்டுவிட முடியும்? இந்தக் கொம்புகள் பேரறிவின் உருவகம்; ஞான ஒளியின் வெளிப்பாடு!

டிரெவி ஃபவுண்டனுக்கு அவள் வந்து சேர்ந்தாள். எதிரே, சாதாரண பொங்கு புனலா அது! கலை ரசனையின் சிகரம்! கடலரசன் கிளிஞ்சல் வடிவத் தேரில் ஏறி, நீர்க்குதிரைகள் அதனை இழுத்து உயர, பவனி வருகிறான்! மன்னர் வருகையை அறிவித்து சங்கு ஊதும் கட்டியக்காரர்கள்; ஏவலுக்குக் காத்திருக்கும் கடல் கன்னிகள்; எதிரே கடலின் உருவகமாகத் தெரிந்த நீர்த் தடாகம். இந்தச் சிற்ப விசித்திரத்திற்கிடையே நாலைந்து இடங்களில் குட்டி அருவிகளாகச் சொரியும் டைபர்

நதி நீர்! பதினேழாம் நூற்றாண்டைச் சேர்ந்த கலைஞன் நிக்கோலோ ஸால்வியின் நினைவான, நிறைவான கனவு!

அறைக்குத் திரும்பியபோது போன் ஒலித்தது. "குருஜி பேசறேன். பாரிஸில் இருக்கேன். ஆனால் அங்கே நடப்பது தெரியும். அப்பப்ப செய்தி வரும்"என்றான். வெறுப்பு மௌனத்தில் முடிய, அவன் தொடர்ந்தான்: 'நீ சம்பந்தமில்லாத விஷயங்கள்ல தலையிடறே; தேவையில்லாம சூட்கேஸ்களைக் குத்திக் கிழிக்கிறே! ஆபத்துல அநாவசியமா சிக்கிக்காதே! ஜாக்கிரதை!"என்று எச்சரித்தான்.

எரிச்சல் பற்றிக் கொண்டுவர, "உனக்கு வெட்டகமாயில்லே? ஆன்மிக உயர்வுக்கு ஆசிரமம் நடத்தறதா சொல்லிக்கிட்டு போதை மருந்து கடத்தறியே?" என்றாள்.

"இதிலே வெட்கப்பட என்ன இருக்கு சாரதா?" என்றான். "இதுவும் ஆன்மிகம்தான்! என் பக்தர்களுக்கு பூலோகத்திலேயே சொர்க்கத்தைக் காட்டறேன்! நீயும் டிரை பண்ணிப் பார்க்கிறியா? நாளைக்கு பென்ஜமினை இன்ஜெக்ஷன் ஸிரிஞ்சோட வரச் சொல்லவா?"

"அடப்பாவி" என்று சபித்து ஃபோன் துண்டித்தாள்.

* * * *

பாரிஸின் பிரதான சாலையாகிய 'சாம்ப்ஸ் எலைஸி'யில் கார் சென்று கொண்டிருந்தது. எதிரே 'ஆர்க் டி டிரயம்ப்' என்ற வெற்றி வளைவு நெப்போலியனை நினைவூட்டியதோடு, உலகப் போர்களில் உயிர் துறந்த பிரெஞ்சு வீரர்களுக்கும் அஞ்சலி செலுத்திக் கொண்டிருந்தது.

"பாரிஸில் நீ என்ன பார்க்க விரும்புகிறாய்? நாட்டர் டாம்? ஐஃபெல் டவர்? மௌலின் ரூஷ்? அநேகமாக நாளைக் காலை நீ புறப்பட வேண்டியிருக்கும்" என்றான் ஜேம்ஸ் பிளாக்.

சென்ற முறை வந்தபோது இன்பசாகரன் நாட்டர்டாம் தேவாலயத்தின் அழகில் சொக்கி, விக்டர் ஹியூகோவின் கூனன் கதை நினைவு கூர்ந்து கண் பனித்திருந்தான். ஐஃபல் டவரின் மேலே லிஃப்ட்டிலும் கால் நடையாகவும் அனுமதிக்கப்பட்ட உயரம் ஏறி பாரிஸைப் பறவைக் கண்ணோட்டத்தில் கண்டு களித்திருந்தான். லீடோ நைட் கிளப்பில் நிர்வாணத்தையும் வென்ற கலையழகு மிக்க காட்சி ஜோடனைகளைப் பார்த்து பிரமித்திருந்தான்.

"பார்க்க வேண்டியது எவ்வளவோ; ஆனால் இருக்கிற குறைந்த நேரத்தில் பார்த்தே ஆகவேண்டும் என்று நான் நினைப்பது லூவர் மியூஸியம். குறிப்பாக மோனாலிஸா ஓவியம். சென்ற தடவை நான் வந்தபோது வாராந்திர விடுமுறை என்று சொல்லி விட்டார்கள்."

"ஜெட் பயணக் களைப்பைப் பொருட்படுத்தாமல் வந்தால், இப்போதே அழைத்துப் போகிறேன்"என்றான் ஜேம்ஸ். "ராத்திரி அசந்து தூங்கி சமாளித்துக் கொள்கிறாயா?"

"சரி" என்றதும் காரைத் திருப்பினான். வரிசை வரிசையாகப் பழைமை முகப்பு மாறாத வீடுகள். முன்புறத்தை மட்டும் அப்படியே வைத்துக் கொண்டு, பின் பக்கம் இடித்து நவீன வசதிகளுடன் புதுப்பித்துக் கொள்வார்கள். புராதனத் தோற்றத்துக்கு அத்தனை முக்கியத்துவம்.

ஒற்றுமை, அமைதி என்ற அர்த்தத்தில் பெயரிடப்பட்டது "கான்கார்ட்" சதுக்கம். ஆனால் இங்கே தான் புரட்சியின்போது கலிட்டோன், இயந்திர கதியில் இயக்கப்பட்டு ஆயிரக் கணக்கான தலைகள் உருண்டன! மத்தியில் எகிப்திய அன்பளிப்பான ஊசி முனை ஜெய ஸ்தம்பம். இதைத் தாண்டியதும் மாபெரும் பூங்காவனம். மரங்களுக்குத்தான் இங்கே எத்தனை மவுசு!

லூவர் மியூஸியம் கடல் போன்றது. ஏழெட்டு திக்குகளில் கிளைபரப்பி விரிந்து பரவும் கட்டட அமைப்பு. மோனாலிஸா இருக்கிற இடத்துக்கு அம்புக் குறிகள் அழைத்துப் போயின. அவற்றைப் பின்பற்றி மற்றவற்றைப் புறக்கணித்து முன்னேறினார்கள்.

சின்னஞ் சிறிய ஓவியம். அளவான வெளிச்சம். ஃபிளாஷ் ஒளி புராதனப் படத்தைப் பாதிக்கும் என்பதால் 'NO PHOTOGRAPHY'. சிலர் தடை உத்தரவை மீறி, "பளிச், பளிச்!"

ஆனால் அந்தப் புன்னகை 'பளிச்' அல்ல. அமைதியான, இலேசான மர்மம் இழையோடுகிற முறுவல். வெகு நேரம் நின்று பார்க்கச் செய்கிற, கவனத்தைத் திசை திருப்ப விடாமல் ஈர்க்கிற பார்வை, உதட்டு நெளிவு, அதில் ஏளனம்?

'சொல் மோனாலிஸா! அந்தப் பெண் யார்? மர்மத்தை விடுவி! அந்த ஃபோட்டோவில் இருப்பவள்... சாயாதானே? வெனிஸ்ஸுக்கு அவள் ஏன் வந்தாள்? இன்டர்போலின் கண்காணிப்புக்கு உள்ளாகும் வகையில் அவள் ஏன் சூரியாசுவாமியுடன் வரவேண்டும்? என்னிடம் கோபித்துக் கொண்டு அவனிடம் தஞ்சம்புகுந்து, அவனால் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கிறாளா?'



"பின்னே எத்தனை நாளைக்குத்தான் 'பேஷ் பேஷ்', 'பலே'ன்னு சொல்றதாம்?"

— அகிலா

"நகர்வோமா?" என்றான் ஜேம்ஸ். "இன்னும் நிறைய பார்க்க வேண்டியிருக்கிறது."

கால்கள் கெஞ்சும் வரை சுற்றிப்பார்த்தான். வேக வேகமாய் நடந்தான். அப்படியும் மியூஸியத்தின் இரு பகுதிகளைத்தான் வளைய வந்திருந்தான். எல்லாமே அற்புதங்கள்தாம். எல்லாமே விலை மதிக்க முடியாத பொக்கிஷங்கள்தாம். ஆனால் மோனலிசா பார்த்த பிறகு வேறு எதுவும் மனசில் நிற்கவில்லை. 'நாளை நான் சந்திக்கப் போகிற அவள், நிஜமாக சாயாவாகவே இருந்து விட்டால்? என்ன பேசுவது? எப்படி நடந்து கொள்வது?'

வெளியே வந்த போது இருட்டியிருந்தது. சாலை விளக்குகள் கூட பழைமைப் பாணி மாறாமல்தான் இருந்தன. துடைத்துத் துடைத்து வைத்துக் கொள்கிறார்கள். அவற்றின் நவீன சோடியம் வேப்பர் பிரகாசம் தொன்மைக் கலைச் சிறப்பைத்தான் பறை சாற்றின.

இத்தனை அழகுக்கும் அடிப்படைக் காரணங்கள் என்ன? முதலாவது பழம் பெருமை போற்றி, புதுமையைப் புகுத்தும் ஆர்வம்; இரண்டாவது, சுத்தம், பரம சுத்தம்; மூன்றாவது, இப்படி இருப்பதில் டூரிஸ்டுகளை ஈர்த்து பணம் பண்ண முடியும் என்ற ஞானம். 'நம்மூரை நினைத்தால் பெருமூச்சுதான் மிஞ்சுகிறது' என்று எண்ணினான்.

ஏகப்பட்ட விளக்குகள் பகட்டாக ஒளிர்ந்த பகுதிக்கு அழைத்துப் போனான் ஜேம்ஸ். "பாரிஸின் நைட்கிளப்புகள் அடர்த்தியாக உள்ள பகுதி. என்ன பார்க்கிறாய்? பிரெஞ்சு மண்ணுக்கே உரித்தான கேன்கேன் நடனமா? அல்லது தமிழ் மண்ணுக்கே உரியதான பரத நாட்டியமா?"

"பரதமா?" என்று வியந்தான்.

"இன்று ஒரு அரங்கேற்றம். தலைமை வகிக்கப் போவது யார் தெரியுமா? மூர்ச்சை அடையாதே! சூரியா சுவாமி!"

"பொருத்தம்தான்! பரதநாட்டியத்தின் தெய்விகத் தன்மை பற்றிப் பேசுவார். ஆன்மிகத் தேடலுக்கு எப்படி உதவுகிறது என்று விளக்குவார்'' என்றான் வெறுப்பு இழையோடிய குரலில். "இங்கே சதங்கை ஒலி கேட்பதுதான் ஆச்சர்யம்."

"ஓரிரு பரத நாட்டியப் பள்ளிகளே பாரிஸில் இருக்கின்றன. உத்யோகம் நிமித்தம் இங்கே குடியேறியவர்களின் மனைவிமார்கள், அந்தக் கலை தெரிந்திருப்பதால் ஆரம்பித்து விடுகிறார்கள். நல்ல விதமாகப் பொழுது போகிறது. வருவாயும் கிடைக்கிறது."

"பயிலும் மாணவிகள்?"

"பிரெஞ்சு மாணவிகள் உண்டு. ஆனால் பெரும்பாலோர் இங்கு குடியேறிய தமிழர்களின் குழந்தைகள்தாம்."



''உங்க ரெண்டு பேரையும் எங்கேயோ பார்த்த மாதிரி இருக்குதே?''

''சிதம்பரத்துல பார்த்திருப்பீங்க. கண்டுக் காதீங்க.''

—டி.வரதன்

''போய்ப்பார்க்கலாம்'' என்றான். கார் வேகமெடுத்தது.

அரங்கின் கடைசி மூலையில் நின்று பார்த்தார்கள். முன் வரிசையில் சூரியாசுவாமி. பெரும்பாலும் ஸ்ரீலங்கா தமிழர்கள். யுத்தத்தில் சிக்கித் தவிக்க விரும்பாமல் புகலிடம் தேடி வந்தவர்கள். பாரிஸில் ஏதோ பிழைப்பு நடத்தி காலத்தை ஓட்டுகிறவர்கள். சொத்துக்களைக் காசாக்கிக் கொண்டு வந்து குடியேறிய வசதியானவர்களும் உண்டு. பாண்டிச்சேரி தமிழர்களும் நிறையப் பேர்.

"இங்கு ஸ்ரீலங்கா தமிழர்களிடம் புலிகள் தண்டல் வசூல் செய்கிறார்கள்'' என்று கிசுகிசுத்தான் ஜேம்ஸ். மேடையில் ஒரு பன்னிரண்டு வயது சிறுமி ஆடிக் கொண்டிருந்தாள். 'சென்னையிலே நாம் பார்க்கும் பல அரைவேக்காடு நடனத்துக்கு இது எவ்வளவோ தேவலாம்' என்று எண்ணினான். "வரி வசூல் எதற்கு?'' என்று வினவினான்.

"இயக்கத்துக்குத்தான். அதி நவீன ஆயுதங்களுக்கு எவ்வளவு செலவாகும் தெரியுமா? வரி வசூல் இங்கு மட்டுமல்ல. ஸ்ரீலங்கா தமிழர்கள் உலகின் எந்தப் பாகத்தில் குடியேறி இருந்தாலும் அங்கெல்லாம் நடக்கும். தவிர, போதைப் பொருள் கடத்தலிலும் புலிகள் பணம் பண்ணுகிறார்கள்."

"அதைச் சொல்லு'' என்றான் இன்பா. "எல்லா இடத்திலும் இந்த போதைப் பொருள் சனியன் எப்படியோ புகுந்து கொள்கிறது. மாணவரிடம், கலைஞர்களிடம், ஆன்மிகத்தில், யுத்த களத்தில்...."

"போதாக்குறைக்கு ருஷ்ய மாஃபியா வேறு'' என்றான் ஜேம்ஸ்.

"அதென்ன புதிய கதை?''

"வெளியே வா, சொல்கிறேன்''என்று நகர்ந்தான் ஜேம்ஸ்.

அவனைப் பின்பற்றி கார் பார்க் நோக்கி நடக்கும் போது, 'இருக்கிற குழப்பம் போதாது என்று இது என்ன புது சிக்கல்?'என்று மேலும் பிரச்னைகளைச் சந்திக்கத் தன்னைத் தயார் படுத்திக் கொண்டான் இன்பா.

(தொடரும்)

நெல்லை துணுக்ஸ்



வேஷம்

நெல்லை மாவட்டத்தில், ரெட்டியார்கள் திருமணச் சடங்கில் ஒரு வினோதம். மாப்பிள்ளைக்குப் பெண் வேஷம் போட்டு, மணப் பெண் அருகில் நிறுத்துகிறார்கள்!

– எஸ். ஆர். சுப்ரமணியம், அம்பை.

பூகம்ப சமாளிப்பு

அமெரிக்க சுற்றுப்பயணம் முடித்து, அறிஞர் அண்ணா ஒரு தரம் ஜப்பான் சென்றிருந்தார். அந்நாட்டு அமைச்சர் ஒருவர் அண்ணாவிடம் கிண்டலாக, ''இந்தியாவில் குறிப்பாக உங்கள் மாநிலத்தில் அடிக்கடி கிளர்ச்சியும் புரட்சியும் வெடிக்கிறதே, எப்படி சமாளிக்கிறீர்கள்?'' என்று கேட்டார்.

பூகம்பத்தை நீங்கள் எப்படிச் சமாளிக்கிறீர்களோ, அதுபோலத்தான்!''

- இது அண்ணா சொன்ன பதில்.

- 'மூன்று முதல்வர்களுடன்' என்னும் நூலிலிருந்து

: செய்யது மைதீன், மேலப்பாளையம்.

ஸ்கோர் என்ன?

தற்போது திருநெல்வேலி நகரை உலுக்கி வருவது, ஜாதி சண்டைகளால் நடக்கும் கொலைகளே! கலவரம் ஓய்வதுபோல் தெரியும். சட்டென்று மறுபடி சூடு பிடித்துவிடும்! பஸ்கள் ஓடாமல், கடைகள் திறக்காமல், நகர வாழ்க்கை சில மாதங்களாக ஸ்தம்பித்து விட்டது என்றே சொல்லலாம். கிரிக்கெட்டில், 'ஸ்கோர் என்ன?' என்று கேட்பது போல, 'இன்று எத்தனை கொலை?' என்று கேட்பது இங்கே சகஜமாகி விட்டது.

– எஸ். முகமது யூசுப், நெல்லை – 1.

BEWARE OF BOARDS

என் உறவினர் ஒருவரது வீட்டின் வாசற்கதவில் உள்ளே நாய்கள் இருப்பதைக் குறித்து எச்சரிக்கும் விதமாக, 'Beware of dogs' என்று எழுதி வைத்திருந்தார்கள். அங்கே, தச்சு வேலைக்காக வந்த ஒருவர், போர்டு வாசகம் புரியாமல், உள்ளே நுழைந்துவிட, நாய் கடித்துக் குதறிவிட்டது! பின், வீட்டுக்காரரே மருத்துவச் செலவை ஏற்றுக் கொண்டது ஒருபுறம் இருக்கட்டும் -

இதுபோன்ற எச்சரிக்கை வாசகங்கள் தாய்மொழியிலேயே எழுதப்பட வேண்டியதன் அவசியம் புரிகிறதல்லவா? கூடவே சிறு படமும் (உதா : நாய் படம்) வரைந்து வைக்கலாமே!

*- வீ. முத்தையா, நெல்லை - **6.***

போஸ்டர் கலக்கல்

ஒருநாள் காலை உறங்கி எழுந்து வாசலுக்கு வந்தவன், எதிர்ப்பக்கச் சுவரில் ஒட்டப்பட்டிருந்த போஸ்டரைக் கண்டு அதிர்ந்தேன்.


'பிரபல ஆட்டோ தேவா கைது!' கொட்டை எழுத்துக்கள் பயமுறுத்தின. ஆட்டோ தேவா என் நண்பன். அன்று அவனுக்குத் திருமணம் வேறு!

பயந்தபடியே போஸ்டரை மேலும் படித்தபோது விழுந்து விழுந்து சிரித்தேன்.

''இன்று காலை 10 மணிக்கு தேவாவைக் கைது செய்து, பெரியோர்கள் மணமகள் செல்வியின் இதயச் சிறையில் அடைக்க இருக்கிறார்கள். அனைவரும் வருக!''

இதுமாதிரி போஸ்டர் ஒட்டி, 'கலக்கு'வதில் நெல்லை மக்களுக்குப் பேரானந்தம்!

– கோ. ரா. சந்திரன்,
சங்கரன்கோவில்.



இனி வரவிருக்கும் ஆண்டில் எதிர்கொள்ள வேண்டிய மாபெரும் சவால்களை எல்லாம் சந்திக்க முற்றிலும் தயாராக உள்ளது இந்த நிறுவனம். இந்த செல்வச் செழிப்பிலும் வளர்ச்சியிலும் நீங்கள் நிச்சயம் பங்கு பெற வேண்டும்.

இதற்கு நல்ல நாள் பார்க்க வேண்டிய அவசியமே இல்லை. இதில் நீங்கள் சேரும் நாளே, வளமான வருங்காலத்திற்கு நல்லதொரு தொடக்கம் ஆகும்.

இன்றே சான்மேக் சீட்டில் சேர்ந்திடுவீர்!

குரூப் குறியீடு	சீட்டுச் சந்தா ரூ.		மாதங்கள்	சீட்டு மதிப்பு ரூ.	நிர்வாகக் கட்டணங்கள் ரூ.	அன்பளிப்புகள்
B	500	X	20	10,000	40.00	பிக்னிக் பேக்
F	500	X	30	15,000	75.00	மூடியுடன் கூடிய ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரம்
HF	750	X	20	15,000		
JF	1,000	X	15	15,000		
J	1,000	X	25	25,000	85.00	டிராவல் பேக்
G	1,500	X	20	30,000	105.00	லஞ்ச் செட்
RK	2,000	X	15	30,000		
S	2,500	X	20	50,000	135.00	சூட்கேஸ்
R	2,000	X	25	50,000		
LH	2,500	X	40	1,00,000	280.00	டீலக்ஸ் சூட்கேஸ்
LK	4,000	X	25	1,00,000		
LS	5,000	X	20	1,00,000		
LG	5,000	X	30	1,50,000	400.00	வெள்ளிப் பொருள்
TL	5,000	X	40	2,00,000	500.00	
CL	10,000	X	30	3,00,000	600.00	
PL	12,500	X	40	5,00,000	800.00	தங்க நாணயம்

குறிப்பு : எல்லா சீட்டு குரூப்புகளுக்கும் ஏலத் தொகைக்கு 30% உச்ச வரம்பு.
முன் அனுமதி பெற்றது.

சான்மேக் சிட்ஸ் லிமிடெட்

நிர்வாக அலுவலகம்: "லஷ்மி டவர்ஸ்", 27, டாக்டர் ராதாகிருட்டிணன் சாலை, மயிலாப்பூர், சென்னை 600 004. தொலைபேசி : 8258637, 8240051.

கிளைகள் : சென்னை: அண்ணா நகர் ✆ 6214454. அசோக் நகர் ✆ 4824757. அண்ணா சாலை ✆ 8520921. மயிலாப்பூர் ✆ 4992488, 4990027. புரசைவாக்கம் ✆ 6425036. தி. நகர். ✆ 8278515. மேற்கு தாம்பரம் ✆ 2366327. கடலூர் ✆ 22728. கோயம்புத்தூர் ✆ 446375, 471403. கும்பகோணம் ✆ 24844. மதுரை ✆ 540849. நெய்வேலி ✆ 22984. சேலம் ✆ 446607. திருச்சி ✆ 25324. திருவண்ணாமலை ✆ 22922, 23333. திருநெல்வேலி ✆ 322032. பெங்களூர் ✆ 368331. திருப்பதி ✆ 24376. ஐதராபாத் ✆ 397879. விசாகப்பட்டினம் ✆ 545854.

BID FOR A BETTER LIFE

SRICHAKRA COMS. 748/95.

இருட்டு அரண்மனைகள்

20

கார்கள் நிறுத்துமிடம் பூமி மட்டத்துக்குக் கீழே இருந்தது. இம்மாதிரி பல அண்டர் கிரவுண்ட் கார் பார்க்குகள் பாரிஸின் சாலைப் போக்குவரத்தை இலகுவாக்கின. காரில் அமர்ந்து ஸேஃப்டி பெல்ட் அணிந்ததும் (அணியாது போனால் கடுமையான அபராதம்) "இந்திராவா? சக்தியா? எங்கே போகலாம்?" என்றான் ஜேம்ஸ்.

'சக்தி'என்றதும் தமிழக அரசியல் நினைவு வர, "இந்திராவே தேவலாம்"என்றான் இன்பா.

பகல் நேர பாரிஸ், ஃபிரெஞ்சு சரித்திரத்தையும் கலைப் பாரம்பரியத்தையும் பறை சாற்றியது என்றால், இரவு நேர பாரிஸ், ஒளி அமைப்பின் ஜாஜ்வல்யத்தால் மாயா ஜால புரியாகத் திகழ்ந்தது!

இந்திரா ரெஸ்டாரண்ட், மசால்தோசை முதல் பட்டர்நான், பன்னீர் கோஃப்தா வரை பலவித இந்திய உணவு வகைகளை வழங்கியது.

"கணிசமான அளவில் இந்திய ரெஸ்டாரண்டுகள் உள்ளன.. ஃபிரெஞ்சு மக்களும் ஒரு மாறுதல் விரும்பி வருவார்கள்''என்றான் ஜேம்ஸ்.

ஆர்டர் செய்து முடித்ததும், ''ருஷ்ய மாஃபியா பற்றி என்ன?"என்று நினைவூட்டினான் இன்பா.

''புதிய விஷயமில்லை; எப்போதுமே இருந்து வருவதுதான். ஆனால் சோவியத் ருஷ்யா ஒரு கட்டுக்கோப்பான கம்யூனிஸ்ட் சாம்ராஜ்யமாக இருந்தவரை கெடுபிடிகள் நிறைய. அதனால் தலைமறைவாகக் காரியங்கள் நடந்து வந்தன. 1991ல் சோவியத் ருஷ்யா கரைந்து போய், தனித்தனி நாடுகளாகப் பிரிந்ததுடன் கட்டுப்பாடுகளும் தளர்ந்தன. ருஷ்ய அண்டர் கிரவுண்ட் மாஃபியா, டூரிஸ்டுகள் என்ற போர்வையில் அயல்நாடுகளில் பரவ ஆரம்பித்தனர்."

"இஸ்ரேலுக்குத்தான் அதிகம் போனதாகக் கேள்வி?"

"உண்மைதான். அதற்கு முக்கிய காரணம் அங்கே பணம் கொண்டு போவதற்குத் தடை ஏதும் இல்லை. கறுப்புப் பணம், லஞ்சப்பணம், திருட்டுப் பணம், கள்ளக்கடத்தல் வியாபாரத்தில் சம்பாதித்த பணம் எதையும் கொண்டு போய் வெளுப்பாக்கலாம். அதோடு குடியேற நினைப்பவர்களுக்கு அதிக சிரமமில்லை. 'யூதன்''என்று சொல்லிக் கொண்டு ருஷ்ய மாஃபியாவைச் சேர்ந்த பலர் அந்நாட்டின் பிரஜைகளாகி, பிறகு ஆண்ட்வெர்ப், பெர்லின், நியூயார்க் என்று பரவுகிறார்கள்."

"பெரும்பாலும் போதை மருந்துதானா?"

"உள்ளதற்குள் சுலபமாகப் பணம் பண்ணும் வழி அதுதான். ஆனால் அணுகுண்டு தயாரிப்புக்குத் தேவையான பொருள்கள், வைரங்கள், கறுப்புப்பணம் என்று பலவற்றையும் கடத்துகிறார்கள். கறுப்பை வெளுப்பாக்கி முதலீடு செய்து தருகிறார்கள். கம்ப்யூட்டர் நிபுணர்களைப் பயன்படுத்தி, வங்கிகளின் கம்யூட்டர் இயக்கத்தில் வெளியே இருந்தவாறே ஊடுருவி, ஒரு கணக்கிலிருந்து இன்னொரு நாட்டில்



உள்ள வேறு கணக்குக்கு பணத்தைக் கொண்டு போய் விடுவார்கள்!"

"எமகாதகர்கள்"என்றான் தமிழில்.

"என்ன?"

அர்த்தம் சொன்னான்.

"மெய்யாலுமே அப்படித்தான். ஒருவர் பின் ஒருவராக ஐரோப்பாவில் உள்ள மாஃபியா தலைவர்களைப் பரலோகத்துக்கு அனுப்பிவிட்டு, அவர்கள் இடத்தில் தாங்கள் அமர்ந்து கொண்டு, அவர்களுடைய மாஃபியா சாம்ராஜ்யத்தை இவர்கள் ஆளத் தொடங்கி விடுகிறார்கள்! ஏற்கெனவே உள்ள ஆள், படை, வர்த்தக உறவுகள் எல்லாம் புதிய மாஃபியா மன்னன் வசப்பட்டு விடுகிறது."

"தேசங்கள் ராணுவபலம் காட்டி மோதிக் கொள்வது போல் இது ஒரு அண்டர் கிரவுண்ட் யுத்தம் என்று சொல்லுங்கள்! சூரியாசுவாமியை இவர்கள் தீர்த்துக் கட்டக் கூடாதோ!"

"கூடவே ஸான்ரோக்கோவுக்கும் அவர்கள் குட்பை சொல்லி மேலுலகுக்கு அனுப்பி வைப்பதாகவே வைத்துக் கொள்வோம். அதனால் நமக்கு என்ன ஆதாயம்? பழைய மாஃபியா கும்பலுக்குப் பதில் புதிய மாஃபியாவுடன் போராடப் போகிறோம் அவ்வளவுதானே!"

"அது உங்கள் பாடு; என் பணி முடிந்து நானாவது ஊர் திரும்பலாம் அல்லவா?'' என்று எழுந்தான்.

''அப்படியாவது உன் ஆசை நிறைவேறினால் சரி" என்று கிரெடிட் கார்ட் காட்டி பில் பெற்றுப் புறப்பட்டான் ஜேம்ஸ் பிளாக்.



கி. ராஜேந்திரன்

பாரிஸின் மையமான பகுதியில்தான் அமைந்திருந்தது இன்பா தங்கிய ஹோட்டல். ஆனால் பிரதான சாலையில் இன்றி உள்ளடங்கி ஒரு குறுகிய தெருவில் அடக்க ஒடுக்கமாக. அதனால் மிதமான கட்டணம். அதுவே இந்திய நோக்கில் ஆளை முழுங்குவது. சிறிய அறைக்குள்ளே விசால கட்டில், டீ.வி., குட்டி ஃப்பிரிஜ்



"அந்த பாட்ஸ்மேன் என்ன தகராறு பண்றார்...?"
"ஆக்ஷன் ரீ ப்ளேயில் காட்டிய ரன்னையும் அவ ரோட கணக்கில் சேர்த்துக்கணுமாம்!"
- ஞா. ஞானமுத்து

உள்பட பல வசதிகள்.

"ஜெட் களைப்பு தீர தூங்கு. அதிகாலை யில் வந்துவிடுவேன், ஏர்போர்ட்டுக்கு அழைத் துப் போக. ஃபிராங்க்ஃபர்ட் ஃபிளைட் ஆறு மணிக்கு."

"பிராங்க்ஃபர்ட்?"

"ஆமாம்; சாரதா ரோம் நகருக்கு வந்து விட்டாள். அவளுடைய அடுத்த ஹால்ட் ஃபிராங்க்ஃபர்ட்தான். நீ அங்கே அவளுக்காக தயாராய் காத்திருப்பாய்" என்று ஜேம்ஸ் விடைபெற்றான்.

சின்னி படித்துக் கொண்டிருந்தான். "நமது தேசத் தந்தை அண்ணல் காந்தியடி களின் முக்கியமான கோட்பாடுகள் வாய்மை யும் அஹிம்சையுமாகும். 'வாய்மை எனப்படு வது யாதெனில் யாதொன்றும் தீமையிலாத சொலல்'என்கிறார் திருவள்ளுவர்..."

"டேய்! ஒரு வேடிக்கை கேட்டியா! நீதிபதி உத்யோகம் கேட்டு வந்த ஒருவனை நேர்முகத் தேர்வில் சோதித்தபோது, இந்திராகாந்தி, மகாத்மா காந்தியின் மகள்'னு பதில் சொல்லி யிருக்கான்"என்றார் ரங்கநாதன்.

"தாத்தா! டோண்ட் டிஸ்டர்ப்"என்றான் சின்னி. "பரீட்சைக்குப் படிக்கிறேன், தெரி யலை?"

"தெரியலைடா. சின்னி படிப்பான்றதையே நம்ப முடியலே; பரீட்சைக்குப் படிப்பான்றதை நிச்சயமா நம்ப முடியலே!"

"தாத்தா ப்ளீஸ்..."

"என்னடா விபரீதம் இது? விழுந்து விழுந்து படிக்கிறே? இதுக்குமேல மழை கொட்டினா தமிழ்நாடு தாங்காதுடா! ஏற்கெனவே அந்த அம்மாவோட தண்ணீர்ராசி, புழலேரி, ரெட் ஹில்ஸ், செம்பரம்பாக்கம் ஏரி எல்லாம் ரொம்பி வழியுது..."

"தாத்தா கிளப்புக்குப் போய் ரம்மி ஆடுங்க; இல்லாட்டி உங்க ரூம்ல கதவை சாத்திக்கிட்டு ஹிந்து பேப்பரை ராகம் போட்டுப் படிங்க. என் பிராணனை ஏன் வாங்கறீங்க?"

"டீ.வி.ல இன்னிக்கு போல்ட் அண்ட் தி பியூட்டிஃபுல்டா... ஒரு எபிஸோட் விட மாட்டியே... இப்ப என்னடான்னா டீ.வி.ல பாச்சை அடையுது. என்னையும் பார்க்க விட மாட்டேன்ற."

"உன் காது மந்தம். எட்டு வீட்டுக்குக் கேட் கிற மாதிரி வால்யூம் வைக்கிறே. நான் எப்படி படிக்கிறது?"

"பிரமாத ஐ.ஏ.எஸ். படிப்பு பாழாய்ப் போகிறதாக்கும்."

புத்தகத்தை டப்பென்று மூடினான். "நான் மொட்டை மாடிக்குப் போறேன், படிக்க"என்று புறப்பட்டான்.

"வேண்டாம் வேண்டாம். அப்புறம் டீ போட்டு எடுத்துக்கிட்டு நான் மூணு மாடி ஏறி வரணும். இங்கியே படி. நான் வாயை மூடிக்கிறேன்."

"பிளாஸ்திரி போட்டு ஒட்டினாத்தான் உண்டு" என்று அலுத்துக் கொண்டு மறுபடி படிக்க உட்கார்ந்தான்.

டிங்டாங்!

பரபரப்புடன் எழுந்தான்.

"படியேண்டா! வாசல்ல யாருன்னு நான் பார்க்க மாட்டேனா?"

அதட்டலை அலட்சியம் செய்து டெஸ்க்கை பச்சை குதிரை தாண்டி, சோஃபாவை ஹைஜம்ப் செய்து பாய்ந்து போய் கதவைத் திறக்க... ரஸியா. "ஹாய்!"

"ஹாய்!"

"அதானே பார்த்தேன்"என்றார் தாத்தா. "கேர்ல் ஃப்ரெண்ட் வரான்னா என்ன சுறு சுறுப்பு! என்ன தாவல்! தாண்டல்!"

இருவரும் புன்னகை பரிமாறி நின்றார்கள்... நின்றார்கள்... நின்றார்கள்....

"உள்ளே வரது"என்றார் ரங்கநாதன். "விலகி வழி விடேண்டா. இடிச்ச புளி மாதிரி நின்னுக்கிட்டிருக்கே..."

வெட்கத்துடன் நகர்ந்தான். ரஸியா உள்ளே வந்தாள். வீடே பிரகாசமானதாய் உணர்ந்தான்.

"தாத்தா! எப்படி இருக்கீங்க?"

"ரொம்ப வருத்தமா."

"அடடா! ஏன் தாத்தா? என்ன ஆச்சு? அங்கிள்-ஆண்டிகிட்டேயிருந்து ஏதாவது நியூஸ் வந்துச்சா?"

"ஒண்ணையும் காணோம். ஒரு நியூஸும் வராததே ஒரு விதத்துல நல்ல நியூஸ்தான்!"

"அப்ப எதுக்குத் தாத்தா நீங்க வருத்தப்பட ணும்?"

"இந்தப் பயலாலதான். இவனைக் கவனிச் சுக்கறதே எனக்குக் காரியமாப் போச்சு. ரம்மி ஆடப் போக முடியலே; ஒரு கதை, காலட்சே பம்னு போக முடியலே; டீ.வி பார்க்கக் கூட விடமாட்டேன்றான். படிப்பு கெடுதாம்!"

"வெரிகுட்! அப்ப சின்னி நல்லா படிக்கி றான்னு அர்த்தம்."

"படிக்கிறானாவது! தூக்கத்துல சொப்பனம்

கண்டு உளறுறது கூட அல்ஜிப்ராவும் ஜியா மெட்ரியும்தான். என்னதான் மந்திரம் போட்டியோ, பையன் அடியோடு மாறிட்டான்!''

"மந்திரம் மாயம் ஒண்ணுமில்லே தாத்தா. மனோதத்துவம்தான். ஒருத்தன் நல்லா படிக்கணும்னா பாடம் புரியணும்.பாடம் புரிஞ்சா நிச்சயம் ஆர்வமா படிப்பாங்க. ஆனா கிளாஸ்ல ஐம்பது பேருக்கும் புரியும்படியா சொல்லித்தர டீச்சருங்களுக்கு முடியறதில்லே. நான் சின்னிக்குப் புரியாத பாடங்களைக் கற்றுக் கொடுக்கிறேன். தன்னால இன்டரஸ்ட் வந்துடுச்சு.''

"இன்டரஸ்ட் உன்னிடமா, பாடத்திலா என்றுதான் சந்தேகம்''என்று முணுமுணுத்துக் கொண்டார். "அதனாலயே இவனை சதாசர்வ காலமும் கண்காணிக்க வேண்டியிருக்கு.''

"என்ன தாத்தா, திட்டறீங்களா?''

"திட்டறதா எதுக்கு? உனக்கு நன்றில்ல சொல்லணும். நீ இல்லாட்டா இந்தப் பய எட்டாவது ஸ்டாண்டர்டிலேயே எட்டு வருஷமானாலும் நன்றி விசுவாசத்தோட உட்கார்ந்திருப்பான்.''

சிரிப்பை அடக்கிக் கொண்டு, "தாத்தா, ரொம்ப கிண்டல் பண்ணாதீங்க, ஒரு நல்ல திருப்பம் ஏற்பட்டிருக்கு. மறுபடி திசை மாறிடப் போகுது.''

"தாத்தா ரஸியாவுக்கு டீ போட்டுத் தரக் கூடாதா? வளவளன்னு பேசிட்டிருக்கீங்களே?''

"ஆமாண்டா! மளிகை, காய்கறி வாங்கிட்டு வந்து உனக்குச் சமைச்சு சாப்பாடு போடறது போதாதுன்னு வாஷிங் மிஷின், வாக்குவம் கிளீனர் எல்லாம் எனக்காக வாங்கிப் போட்டிருக்கான் என் பிள்ளை. பத்துப் பாத்திரம் தேய்க்கிறது ஒண்ணுதான் பாக்கி. நாளைலேர்ந்து அதுவும் நடந்துடும். வேலைக்காரி ஊருக்குப் போறாளாம். போதாக் குறைக்கு நீ நாளைக்கு நாற்பது தடவை டீ கேட்கிறே!''

"நான் போட்டுத் தரவா தாத்தா?''என்று சோஃபா விட்டு எழுந்து சமையலறை சென்றாள்.

தாத்தா ஹாய்யாக சோபாவில் சாய்ந்து, சின்னியின் 'வெவ்வவ்வே'யை சந்தித்தார். "வாய் கோணிக்கப் போறதுடா! அப்புறம் ரஸியா உன்னைத் திரும்பிக் கூடப் பார்க்க மாட்டா.''

"அவ அரைமணி நேரம்தான் இருப்பா. அதுக்குள்ள நான் ரெண்டு பாடமாவது அவளிடம் கத்துக்கலாம்னு பார்க்கறேன். நீங்க என்னடான்னா அவளை வேலை வாங்க நீங்க...''என்று பால்பாயிண்ட் பேனாவை அவர் மீது வீசினான்.

"டிங்டாங்''என்றது அழைப்புமணி.

"வாசல்ல யாரு, பாருங்க தாத்தா.''

"போனதடவை மணி அடிச்சப்ப துள்ளி



வாசல் திறக்கிறது!

எட்டு வருடம், பத்து வருடம் ஒரு குருவிடம் நடனம் கற்றுக் கொண்டுவிட்டு, மேடை ஏற 'சான்ஸ் எங்கே' என்று காத்திருக்கும் நூற்றுக்கணக்கான மாணவிகளுக்கு, நாரத கான சபா டிரஸ்ட்டின் 'நாட்டியரங்கம்' ஒரு வாசலைத் திறந்து வைத்திருக்கிறது.

மேடை, விளம்பரம் மட்டும் கொடுப்பதோடு நின்று விடாமல், நடனக் கலைஞருக்குச் சன்மானமும் கொடுக்கிறார் ஆர். கிருஷ்ணசாமி என்பதுதான் இதில் முக்கிய அம்சம்.

''சபாக்காரர்கள் பணத்தை வாங்கிக் கொண்டு தான் நடன நிகழ்ச்சி கொடுக்கிறார்கள் என்ற அவப் பெயர் நீங்க வேண்டுமானால், இது மாதிரி ஒரு முயற்சியைத் துணிந்து மேற்கொள்ளத்தான் வேண்டும்!'' என்கிறார் ஆர். கே.

ஒவ்வொரு மாதமும் மூன்றாம் சனிக்கிழமை மாலையில் இரண்டு இளம் நடனக் கலைஞர்களுக்கு வாய்ப்பு; மறுநாள் ஞாயிறன்று காலை பத்து மணிக்கு பரதநாட்டியத்தின் ஏதாவது ஒரு அம்சம் (அலாரிப்பு, ஜதிஸ்வரம் - இப்படி) பற்றி புகழ்பெற்ற நடனக் கலைஞரின் லெக்சர்-டெமான்ஸ்ட்ரேஷன். (ஆங்கிலத்தில் உரையை அச்சிட்டு விநியோகித்து விடுகிறார்கள்!)

''இப்போது மினி ஹாலில் நடக்கும் இந்த நடன நிகழ்ச்சிகளை மெயின் ஹாலில் நடத்துகிற அளவுக்கு ரசிகர்கள் உருவானால் அதுதான் என் குறிக்கோளுக்குக் கிடைத்த வெற்றி!'' என்கிறார் நாரதகான சபா கிருஷ்ணசாமி.

— எஸ்.வி.என்.

ஓடினியே? இப்ப சுவாரஸ்யம் போயிடுச்சாக்கும்?''

''அறுக்காதீங்க தாத்தா''என்றான். என்றாலும் தாத்தா தன்னையும் ரஸியாவையும் இணைத்துப் பேசுவதை இதயத்துக்குள் ரசித்தான். இதமான வருடல்!

கதவு திறந்தார். ''யாரு!''

''உள்ளே வரலாமா?''என்றாள்.

''யாருன்னு தெரிஞ்சா தேவலாம்.''

''வாசல்ல நின்றபடியே எப்படி விளக்கிச் சொல்றது?''

''நீ...நீ...''

''உம், ஞாபகப்படுத்திப் பாருங்க.''

''அனுபமாதானே!''

''கரெக்ட்! கண்டுபிடிச்சுட்டீங்களே! இப்பவாவது உள்ளே வரலாமா?''

விலகி நின்றார். ''ஸாரி. வா! வா!''



''நம்ம தலைவர் எதையும் புதுமையா செய்கிறவர்னு சொல்றியே, எப்படி?''

''அடுத்த மாதம் ஐயாயிரம் பெண்களுக்கு 'மஞ்சள் நீராட்டு விழா' நடத்தப் போறதா சொல்லி இருக்காரே!''

– எஸ். எஸ். பூங்கதிர்

பழைய நினைவுகளின் பிரவாகம்: அனுவின் அப்பா தன்னிடம் வந்தது. அவளுக்கும் இன்பாவுக்கும் இடையே காதல் மலர்ந்திருப்பதாகத் தயக்கத்துடன் கூறி, திருமண சம்பந்தம் கோரியது. இன்பா விட்டெறிந்து பேசியது. 'கல்லூரியில் சகமாணவியிடம் ஃபிரீயாகப் பழகினால் அதைக் காதல் என்று தப்பர்த்தம் பண்ணிக் கொள்ளக் கூடாது'என்று கூறி அவரைத் தலைகுனிய வைத்து, திருப்பி அனுப்பியது... அந்தச் சமயத்தில் ஓரிரு தடவை பார்த்ததுதான் அவளை... ''எத்தனை நாளாச்சு!'' என்றார்.

''ஆமாம் ஸார். ஆனால் உங்க மகனை அடிக்கடி உத்யோக ரீதியில் சந்திக்கிறேன். எனக்கு ஃபாரின்ஸிக் டிபார்ட்மெண்ட்டில் வேலை.''

''அப்படியா!''

''இன்பாகிட்டேயிருந்து ஏதாவது ஃபோன் வந்ததா?''

''இதுவரைக்கும் இல்லே.''

''ஒரு முக்கியமான விஷயம் ஸார். சொல்லிட்டுப் போகத்தான் வந்தேன்.''

கொஞ்சம் கலவரத்துடன் ஏறிட்டார்.

''எனக்கு ரிஸர்ச் ஸ்காலர்ஷிப் கிடைச்சிருக்கு. ஃபாரின்ஸிக் ஸயன்ஸ்ல இப்படி.என்.ஏ. ஆராய்ச்சிக்கு ரொம்ப முக்கியத்துவம் ஏற்பட்டிருக்கு. புதுசு புதுசா பிரமிக்க வைக்கிற பல விஷயங்கள் தெரியவர வாய்ப்பிருக்கு.''

''எந்த யூனிவர்ஸிடி?''

''பெர்க்லி.''

''அமெரிக்காலயா? அவங்களே கூப்பிட்டுக் கொடுக்கிறதுன்னா, அந்த அளவுக்கு நீ படிச்சிருக்கியா?''

''ஏற்கெனவே டாக்டரேட் ஸார்!''

''ஒண்டர்ஃபுல்!''

ரஸியா டீ கொண்டு வந்து வைத்தாள். அழைப்புமணி ஒலித்து, குரல் கேட்டதும் நாலு கோப்பைகளில் டீ கொண்டு வந்ததை மனசுக்குள் பாராட்டினார் ரங்கநாதன்.

''ரஸியாதானே? உன்னைப் பற்றி இன்பா நிறைய சொல்லியிருக்கார். சின்னி பற்றியும் தான்...''

வணக்கம் சொல்லி அடக்கமாக அமர்ந்தாள். ''டீ சாப்பிடுங்க.''

ருசி பார்த்து, ''நல்லா இருக்கு; இலேசாசுக்கு தட்டிப் போட்டிருக்கே இல்லே?'' என்றாள்.

ரஸியா புன்னகையுடன் நெளிய, ''உங்க ஆசி வேணும் ஸார்'' என்றாள் ரங்கநாதனைப் பார்த்து.

''நிறைய இருக்கும்மா.''

''இன்னொரு ரிக்வெஸ்ட். அப்பா தனியா இருப்பார்... நான் போயிட்டா...''

''நான் அடிக்கடி போய் கவனிச்சுக்கறேன். பேசிப் பழக ஆளிருந்தால் தனிமை தெரியாது...''

''பத்து நாள்ல புறப்படறேன். அதுக்கு முன்னால் இன்பா திரும்பி வருவாரா தெரியாது. எனக்காக அவரிடம் சொல்லணும்.''

''ஷ்யூர்...''

''எங்க இருந்தாலும் அவரை மறக்க மாட்டேன்.''

''புரியுது அம்மா''என்றார். அவள் கண்கள் பனிப்பதைப் பார்க்க அவருக்கும் நீர் திரையிட்டது. ''அநேகமா நீ புறப்படறதுக்கு முன்னால் அவனே திரும்பி வந்தாலும் வந்துடுவான்.... பார்த்தியா, மணி அடிக்குது!''

எல்லோரும் ஃபோன் நோக்கித் திரும்பினார்கள். 'இன்பாதான் பேசுகிறானோ? அல்லது... ஒரு வேளை... சாயா பற்றி ஏதாவது தகவல் கிடைக்குமோ?'

(தொடரும்)

கோட்டை நகரில் (பிராங்க்ஃபர்ட்) ஹோட்டல் அறையை அடைந்ததும் முதல் காரியமாக சென்னைக்கு ஃபோன் போட்டான், இன்பா. 'இப்போது அங்கே மாலை நேரமாயிருக்கும். அப்பா ஒரு வேளை கிளப்புக்குப் போயிருந்தாலும் சின்னி வீட்டில் தான் இருப்பான்.'

"ஹலோ!"

"சின்னி! அப்பா பேசறேன்."

சின்னிக்கு உடம்பெல்லாம் சிலிர்த்தது. "ஹாய் அப்பா! எப்படி இருக்கே? எங்கேருந்து பேசறே?"

"பிராங்க்ஃபர்ட். டேய் சின்னி! ஒரு குட் நியூஸ். அம்மாவைக் கண்டு பிடிச்சுட்டேன்! இங்கதான் இருக்கா!"

"என்னது? பிராங்க்ஃபர்டிலேயா!"

"ஆமாண்டா! ஆச்சர்யமாயில்லே! அதிகமா போனா இன்னும் ஒரு வாரத்துல திரும்பி வந்துடுவேன், அம்மாவையும் அழைச்சுக்கிட்டு. தாத்தா சௌக்கியமா! நீ எப்படி இருக்கே?"

"எல்லாரும் சௌக்கியம்தான். அம்மாவை பேசச் சொல்லேன். அங்கே எப்படி அவ...?"

"அம்மா தற்சமயம் என்னோட இல்லே. அவளைப் பார்க்கத்தான் கிளம்பிக்கிட்டிருக்கேன். எல்லா கதையும் திரும்பி வந்து விவரமா சொல்றேன். அப்பா இருக்காறா?"

"உம்... அப்பா, ரஸியா, அனு ஆண்டி எல்லாரும் இருக்காங்க. அனு ஆண்டி அமெரிக்கா போறாங்களாம். சொல்லிக்கிட்டுப் போகத்தான் வந்திருக்காங்க."

"என்னது! அமெரிக்காவா?"

"ஆமா, இதோ ஆண்டியே பேசறா" என்று ரிஸீவரைக் கொடுத்தான்.

தொண்டை அடைப்பது போலிருந்தது. குழந்தைகள் இரண்டுபேர் முன் கண் கலங்க விரும்பாமல் சிரமப்பட்டு தன்னை கட்டுப் படுத்திக் கொண்டு விவரம் சொன்னாள்.

"கங்கிராட்ஸ்! அருமையான வாய்ப்பு அனு" என்றான். "நீ புறப்படறதுக்கு முன்னாடி நான் வந்துடுவேன். நேரில் பேசலாம்."

"சரி... உங்களையெல்லாம் பிரியணுமேன்னு தான்..."

"அனு! உன்னை நினைச்சு நான் ரொம்பப் பெருமைப்படறேன். விஞ்ஞான ரீதியா நீ சாதிக்கப் போறது எவ்வளவோ இருக்குன்னு தெரியுது. உன் மனசை விசாலப்படுத்திக்க. சின்னச் சின்ன ஏமாற்றங்களைப் பொருட் படுத்தாதே. பெரிய லட்சியங்கள் உனக்காகக் காத்திருக்கு!"

அப்பாவிடம் பேசினான். சாயா பற்றி சந்தோஷமாய்ச் சொன்னான். அப்புறம் ரஸியா விடம்: "சின்னி உன்னை ஜாக்கிரதையா கவனிச்சுக்கறானா அல்லது நீதான் சின்னியைப் பார்த்துக்கறியா?"

கி. ராஜேந்திரன்

"ரெண்டும்தான், அங்கிள்" என்றாள். "சின்னி ரொம்ப நல்லா படிக்கிறான். டபுள் பிரமோஷன் கிடைச்சாலும் ஆச்சர்யமில்லே!"

"தாங்க்ஸ், ரஸியா. உன்னோட பாதிப்புத் தான் காரணம். வைக்கட்டா? ஸீ யூ!"

ரஸியா ஃபோனை வைத்து விட்டுத் திரும்பவும், உற்சாகம் தாங்காமல் சின்னி அவளுடைய இரண்டு கன்னக் கதுப்புக்களையும் கிள்ளி எடுத்துத் தன் விரல்களை முத்தமிட்டுக் கொண்டான். "என் அம்மா கிடைச்சுட்டாங்க! கிடைச்சுட்டாங்க!" என்று சோபா மேல் ஏறி கூத்தாடி அதை துவம்சம் செய்தான்.

"ராத்திரி நம்ம எல்லாருக்குமே வடை பாயசத்தோட சாப்பாடு" என்று அனு சமையலறைக்குள் புகுந்தாள்.


"இன்னிக்கு இனிமே பாடம் படிக்கிறது மகா பாவம்! டீவி பார்க்கலாம்; இல்லே, கேரம் விளையாடலாம்" என்றான் சின்னி.

"சின்னீ ஈஈஈ"என்று ரஸியா நீட்டலாக அழைத்தாள், எச்சரிப்பதுபோல்.

பரம சாதுவாக புத்தகம் பிரித்தான்.

பான் நகரம் ஜெர்மனியின் புதுதில்லி. பிராங்க்ஃபர்ட் ஜெர்மனியின் மும்பாய். திரும்பின பக்கமெல்லாம் அதி நவீன வடிவங்களில் வங்கிக் கட்டடங்கள் விண்ணளாவி, ஜெர்மானிய மார்க்கின் ஸ்திரத்தன்மையையும் உயர் மதிப்பையும் பறை சாற்றின. இந்தத் தொழில் வர்த்தகக் கேந்திரத்தில் ஒவ்வொரு

21



டூரிஸ்ட்டின் கவனத்தையும் ஈர்த்து, அண்ணாந்து பார்க்கச் செய்தது உயர மான, கனத்த தூண் வடிவத்தின் உச்சியில் குடை விரித்தாற்போலிருந்த 'ரிவால்விங் ரெஸ்டாரண்ட்.' இந்தச் சுழலும் உணவு விடுதியை ஜெர் மானியர் மிகவும் விரும்பி அருந்தும் பீர் தயாரிக்கும் நிறுவனம் ஒன்று அமைத்திருந்தது. ஒரு மேஜை கிடைத்து அமர்ந்து விட்டால், சாப்பிட்டு முடிப்பதற்குள் உணவு விடுதியே இரண்டு மூன்று முறை மெல்லச் சுழன்று வந்து, பிராங்க் ஃபர்ட்டை பறவைக் கண்ணோட்டத்தில் சுற்றிப் பார்க்கச் செய்து விடும். உணவை ரசிக்க முடியாது என்று தெரிந்திருந்த போதிலும் அந்த உல்லாச உயரத்தை ரசிப்பதற்காக சாயா லிஃப்ட் ஏறி வந்து அமர்ந்தாள். ரொட்டியுடன் வெஜிடபிள் சூப் கொண்டு வரச் சொல்லி விட்டு கண்ணாடி ஜன்னல்களினூடே வெளியே பார்வையைச் செலுத்தினாள்.

"சாயா!"

திடுக்கிட்டுத் திரும்பினாள்.

இன்பா! அவள் இதயம் நழுவி வயிற்றுக்கு இறங்கி விட்டது போலிருந் தது. அவன் முகத்தில்... அது கடுமையா? கருணையா?

மெல்ல எழுந்து, குற்றம் செய்துவிட்ட சிறுமி டீச்சரைக் கண்டு நடுங்குவது போல் நின்று, "என்னைக் கைது செய் யத்தானே வந்திருக்கிறீர்கள்?''



என்றாள் கண் கலங்க.

"ஆமாம்; சிறைப்படுத்தத்தான், என் கரங்களுக்கிடையில்"என்று கைகளை அகல நீட்டி புன்னகைத்தான். தென்பிழந்திருந்த கால்களை எப்படியோ இயக்கி, இரண்டடி எடுத்து வைத்து, அவன் மீது உடல்பளு முழுவதையும் இறக்கினாள். அவன் அணைக்கவும் ஓசை அடக்கி விம்மினாள்.

சுற்றிலும் உணவு மேஜைகளை ஆக்கிரமித்திருந்த டூரிஸ்டுகள் இந்த நிஜ நாடகக் காட்சியை வெகுவாக ரசித்துக் கை தட்டினார்கள். "கோ ஆன், கிஸ் ஹர்!" என்று தூண்டினார் அமெரிக்கர் ஒருவர், உரத்த குரலில்.

"யா, யா" என்று வேறு பலர் ஆமோதித்தனர்.

இன்பா அவள் சிரம் வருடி மெல்லத் தலையை உயர்த்திக் கன்னத்தில் முத்தமிட்டான்.

'ஓ'என்று ஏமாற்றத்தொனிகள் நாலாபுறமிருந்தும் எழுந்தன. "கோ ஆன், கிஸ் ஹர் நைஸ்லி!"

அவள் முகவாயை உயர்த்தி அதரங்களில் தன் உதடுகளை ஒற்றி எடுத்தான். சந்தோஷ ஆரவாரம் கிளம்ப, குளிரில் ஏற்கெனவே சிவந்துவிட்டிருந்த சாயாவின் கன்னங்கள் மேலும் கனிந்தன.

அமர்ந்தார்கள். ஒருவர் கையை ஒருவர் விடாமலே இருந்தார்கள்.

"என் முட்டாள்தனத்துக்கு மன்னிப்பு உண்டா?"என்று கேட்டாள். "உங்களிடம் கோபித்துக் கொண்டு ஒரு பிசாசிடம் சிக்கிக் கொண்டேன்!"


"இப்போது புரிகிறதா உனக்கு? அனுபமா பற்றி கலகம் செய்து மொட்டைக் கடிதாசு எழுதியது இந்த சூர்யா சுவாமிதான். பென்ஜமின் உருவில் சென்னையில் வளைய வந்திருக்கிறான். போட்டோக்களும் அனுப்பியிருந்தானில்லையா?"

"ஆமாம்; அவையெல்லாம் பொய்தானே?"

"முழுப்பொய்"என்று சுருக்கமாக ரஸியா பற்றியும் அனுபமா குறித்தும் விளக்கினான். "அப்பா சொன்னார், இதையெல்லாம் நான் உன்னிடம் மனசு விட்டு பேசியிருக்கணும்னு. அப்படி செய்திருந்தா இந்த விபரீதமெல்லாம் நடந்திருக்காது."

"சதா வேலை வேலைன்னு பெண்டாட்டியிடம் பேசக் கூட உங்களுக்கு நேரம் இருப்பதில்லை."

"அது மட்டும் காரணமில்லே சாயா. நான் ரகசிய பிரமாணம் எடுத்தவன். உத்யோக ரீதியான விஷயங்களை அவற்றுடன் தொடர்பில்லாதவர்களுடன் பேசக் கூடாது என்று கற்று, அப்படியே பழகியவன்."



அருள்வாக்கு

ஜாதியில் உயர்வு-தாழ்வு நிச்சயமாக இல்லை. எவனொருவனும் தான் இன்னொருவனைக் காட்டிலும் உசந்தவன் என்று நினைக்கிறதே பாபம் என்று சாஸ்திரங்களில் சொல்லியிருக்கிறது. மஹான்களும் இப்படித் தான் நமக்கு வழிகாட்டியிருக்கிறார்கள். ''நாயினும் கடையேன்'' ''நாயடியேன்'' என்றெல்லாந்தான் அவர்கள் தங்களைச் சொல்லிக் கொள்கிறார்கள். இந்த மனப்பான்மை சுதந்திர யுகத்தில் போய் விட்டதுதான் கோளாறு. பழைய அடக்க மனோபாவம் நமக்கு வர வேண்டும். வந்து விட்டால் காரியத்தில் ஜாதி இருக்குமே தவிர, மனஸில்

"நடந்தது நடந்து போச்சு. இப்ப இந்த மாஃபியா கும்பல்லேர்ந்து காப்பாத்தி என்னை முதல் ஃபிளைட்ல சென்னைக்கு அழைச்சுப் போயிருங்க. முடியுமானா இன்னிக்கே இப்பவே பறந்துடுவோம்."

"அது அவ்வளவு சுலபமில்லே, சாயா. குருஜியின் ஆட்கள்- பென்ஜமின் தவிர வேறு சிலரும் உன்னை கண்காணிச்சுக்கிட்டு இருப்பாங்க. தப்பி ஓடறதா தெரிஞ்சா கொலை விழும். நிச்சயம். இது மில்லியன் டாலர் வியாபாரம். மனித உயிர்கள் துச்சம்."

அவளுக்கும் தெரிந்தே இருந்தது. சூர்யா சுவாமியின் டெலிஃபோன் எச்சரிக்கைகள் காதுகளில் ஒலித்தன.

"முதலில் சாப்பிட்டு முடி. இங்கேயிருந்து ஐம்பது அறுபது கிலோமீட்டர் தூரத்தில் ரைன் நதியும் மைன் நதியும் இணைகிற இடம் ஒன்றிருக்கு. குன்றின் மேலிருந்து பார்க்க அற்புதமாய் இருக்குமாம். அங்கே போய்ப் பேசலாம்."

உப்புச்சப்பற்ற உணவுகூட ருசித்தது சாயாவுக்கு. கவலைகள் கனவாயின. கணவனின் அருகாமை களிப்பை ஏற்படுத்தியது.

இன்டர்போல் உபயமாக இன்பாவிடம் வாடகைக் கார் இருந்தது. ஒரு நாளோ இரண்டு நாட்களோ வைத்துக் கொண்டு ஊரை விட்டுக் கிளம்பும் போது திருப்பித் தந்து விடலாம். டிரைவர் ஸீட் இடப்புறம்; சாலையின் வலப்புறம் கார் செல்ல வேண்டும் என்பதை மறக்காமலிருந்தால் போதும்; கார் ஓட்டுவது ஒரு சுகானுபவம். சாலையா அது? வழவழப்பாகக் கண்ணாடிபோல். ஆனால் உறுதியாக. சொகுசு காரோ புஷ்பக விமானம் போல் காற்றில் மிதப்பதாகத் தோன்றியது. போக்குவரத்து

எள்ளளவும் பேதம் இராது. வாழ்க்கை முறையிலும் (பொருளாதார ரீதியிலும்) பேதம் இல்லாமல் எல்லாரும் எளிமையாக இருந்து விட்டால் கொஞ்சம் கூடப் பொறாமை, வயிற்றெரிச்சல் இருப்பதற்கு இடமில்லாமல் போகும்.

அந்த மாதிரி நிலையை உடனே ஏற்படுத்துவதற்கான தைரியமும், தியாக புத்தியும் நமக்கு இருந்தாலும் இல்லாவிட்டாலும், இப்படிப்பட்ட ஒரு ideal-ஐயாவது (லக்ஷ்ய நிலையையாவது) நாம் புரிந்து கொண்டால், கொஞ்சம் கொஞ்சமாக வழி திறக்க இடமுண்டாகும். இதற்குப் பராசக்தி அநுக்ரஹம் செய்ய வேண்டும்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.



ஊசியில் நூலைக் கோக்க வேண்டுமானால், நூல் முனையைக் கூராக்கி, நீட்டிக் கொண்டிருக்கும் பஞ்சுத் துணுக்குகளை எடுத்தெறிய வேண்டும். அப்பால் ஊசியின் காது வழியாக நூல் எளிதாகப் போகும். அது போல ஈசுவரனிடம் உனது மனத்தையும் இருதயத்தையும் ஒருமிக்கப் பண்ண வேண்டுமானால், அடக்கத்தோடும் பணிவோடும் வீண் கர்வமில்லாதவனாய் இருந்து, ஆசைகளாகிய பரந்து நிற்கும் துரும்புகளைக் களைந்தெறிய வேண்டும்.

– ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர்

நிறையத்தான். ஆனால் ஒழுக்கம் இருந்தது. அதனால் ஓட்டுவது சுலபமாயிருந்தது. சாலைகளுக்கான ஒரு வரைபடம் வைத்துக் கொண்டு பாதை கண்டுபிடித்துச் செலுத்தினான். ஆங்காங்கே அறிவிப்புப் பலகைகளும் வழி காட்டின.

''உங்களை நான் சந்தித்து, உங்களோடு காரில் செல்வதை சூர்யா சுவாமிக்குத் தகவல் தெரிவிப்பார்கள் அல்லவா?''

"நிச்சயம். இப்ப கூட நமக்குப் பின்னால் வர கார்ல அவன் ஆட்கள் இருப்பாங்கன்னு நினைக்கிறேன். செல்லுலர் ஃபோன்ல நேர்முக வர்ணனை கொடுத்திட்டிருப்பாங்க."

சிரித்தாள். ''அவங்களுக்கு நீங்க என் கணவர் என்பது தெரியாது!" என்று கூறிவிட்டு மறுபடி கலகலவென்று சிரித்து அவன் தோளில் சாய்ந்தாள்.

"ஆமா, கண்டவனோட நீ ஜாலியா ஊர் சுத்தறேன்னுதான் குருஜிக்கு செய்தி போகும். ராத்திரி அவர்கிட்டேயிருந்து நீ ஃபோன் எதிர் பார்க்கலாம். 'ரொம்ப தேறிட்டே! புருஷனுக்கு இப்படி துரோகம் பண்றியே'ன்னு கேட்கப் போறார்!"

தாங்க முடியாமல் மனம் விட்டுப் பெரிதாகச் சிரித்தாள் சாயா. உற்சாகம் கரைபுரண்டு ஓடியது.

"சிரிக்க முடியறப்பவே நல்லா சிரிச்சுடு; நாளைக்கு நிறைய ஆபத்துக்களை நாம் சந்திக்க வேண்டியிருக்கும்" என்றான்.

குன்றின்மேல் செல்வது போன்ற உணர்வே ஏற்படவில்லை. பாதை வளைந்து வளைந்து உயரவில்லை. என்றாலும் காரை விட்டு இறங்கி, அடர்ந்த சோலை வழியே ஒற்றையடிப் பாதையில் நடந்து, அதன் முடிவில் பார்த்தால் அந்தக் காட்சி பிரமிக்க வைத்தது!

ஒரு குன்றின் சரிவில் படிப்படியாக உயர்ந்த மேடைகள். கீழ்ப்படியிலிருந்து நோக்கினால் இன்னும் கீழே ரைன் நதியும் மைன் நதியும் கம்பீர அமைதியுடன் ஒன்று கலந்து, பசுமையான மலைகளின் பின்னணியில் ஒரே ஆறாக முன்னேறும் காட்சி. கப்பல் என்றே கணிக்கத் தக்க அளவில் பிரும்மாண்டப் படகுகள், சரக்கையும் உல்லாசப் பயணிகளையும் ஏற்றிச் சென்றன. பாதாளத் தொலைவில் உள்ள இவற்றையெல்லாம் குன்றின்மேலிருந்து கிட்டத்தில் பார்க்க வசதியாக டெலஸ்கோப்பு காசு போட்டால் இயங்கியது.

''நீங்கதான் ரைன், நான்தான் மைன்; இணைவோம்!''என்று ஒண்டிக் கொண்டாள். சுற்று வட்டாரத்தில் நிறையக் காதலர்கள் அதே போன்ற நிலையில் இருந்தது துணிவைத் தந்தது.

ஒருவர் இடையை ஒருவர் சுற்றி வளைத்தவாறே திரும்பினால், ஆறுகளுக்கு எதிர்ப்புறம், குன்றுச் சரிவில், உயர்ந்து உயர்ந்து செல்லும் மேடைகளின் உச்சியில்,அப்பாடி! எவ்வளவு பெரிய சிற்பக் காட்சி!

ஜெர்மனியின் எல்லைப் பகுதிகளை ஆக்கிரமித்து முன்னேறிய பிரெஞ்சு படைகளை இந்த ஆற்றங்கரையில் தடுத்து நிறுத்தியது மட்டுமல்லாமல், பின்வாங்கவும் செய்த ஒரு மகத்தான ஜெர்மானிய வெற்றியின் நினைவுச் சின்னம். ஜெர்மானிய மன்னரும் சரணடையும் பிரெஞ்சு தளபதியும் ஆளுயரக் கல்லோவியங்கள் என்றால் அதன் இருபுறமும் ரைன் நதி தேவதையும் யுத்த தேவதையும் மூன்றாள் உயரச் சிற்பங்கள்! 'இரண்டு தேவதைகளும் தந்தை நாட்டைக் காக்க வேண்டும்' என்ற



''நீங்க பறவை வளர்க்கிறதை என்கிட்ட சொல்லவே இல்லையே? இது என்ன பறவை? இவ்வளவு சின்னப் பறவையை நான் பார்த்ததே இல்லை.''

''நாசமாப் போச்சு! அது பறவை இல்லை. எங்க வீட்டுக் கொசு.''

– என். உஷாதேவி

பிரார்த்தனை கீழே கவிதையாகப் பொறிக்கப் பட்டிருந்தது.

"இங்கே உட்கார்"என்று ஒரு சிமெண்ட் இருக்கையைச் சுட்டிக் காட்டினான். பக்கத்தில் கால் தூக்கி ஊன்றி, முழங்கால்மேல் கரம் பதித்துக் குனிந்து, "கவனமாய்க் கேள்" என்றான். தன் திட்டம் விவரித்தான். சுற்று வட்டார சுந்தர அழகெல்லாம் காணாமல் போய், அடுத்து வரும் ஆபத்துக்கள் திரை ஓவிய மாயின.

மாலை மயங்கும் நேரம் அருகே இருந்த ஒரு கிராமத்துக்கு அழைத்துப் போனான். பழைமைத் தோற்றம் மாறாத, அதே சமயம் புதுமைப் பொலிவு குன்றாத வீடுகள்; பெரிய பெரிய கூழாங்கற்கள் பாவிய, அப்போதுதான் அலம்பி விடப்பட்டது போன்ற சந்துகள்; ஜெர்மானிய கிராம இசை மிதந்து வந்த உணவு விடுதிகள்; இசைக்கேற்ப நடனமாடிய ஜோடிகள். காலாற நடந்தபோது மறுபடி சாயாவின் உள்ளத்தில் உல்லாசம் துளிர்த்தது.

பிராங்க் ஃபர்ட்டுக்கு அவர்கள் திரும்பிய போது அது வண்ண விளக்குகளில் ஜொலித்துக் கொண்டிருந்தது.

''பசிக்கிறதா? இந்திய ரெஸ்டாரண்ட் தேடுவோமா?''

''வேண்டாம்; கொஞ்சம் பழங்களும் இரண்டு பால் பாக்கெட்டும் வாங்கிட்டு ஹோட்டல் ரூமுக்குப் போயிடலாம்.''

''பாலும் பழமுமா? இது என்ன முதலிரவா?''

"சீ!" அவன் தோள்களைப் பொய்க் கோபத்துடன் குத்தினாள். பிறகு, "ஒரு விதத்தில் அப்படித்தான். வெறுத்து ஒதுக்கினவ, புத்தி தெளிஞ்சு திரும்பியிருக்கேன். புத்தம் புதிய சூழல்ல நம்மோட இந்த எதிர்பாராத சந்திப்பு, ஏதோ மறு ஜென்மத்துல நடக்கிற மாதிரிதான் இருக்கு."

"சரி, எங்க தங்கியிருக்கே, சொல்லு."

ஹோட்டல் கார்டு எடுத்துக் காட்டினாள். வழி விசாரித்துப் போனார்கள்.

மஞ்சம் அவர்களை ஏந்திக் கொள்ளக் காத்திருந்தது.

அவர்கள் எதிர்பார்த்தபடியே நள்ளிரவுக்கு மேல் சூர்யாசுவாமியிடமிருந்து ஃபோன் வந்தது.

"சாரதா! உன் புருஷன்தான் உனக்குத் துரோகம் பண்ணினானென்றால் நீயும் தாசி போல் நடந்து கொள்ளலாமா?"என்று கோபமாகக் கேட்டார்.

"வாயை டெட்டால் போட்டு அலம்புங்க. இங்க என் கூட இருக்கிறது என் கணவர்தான்."


"என்ன! இன்பசாகரனா!"

"ஆமாம்."

"உன்னைத் தேடிக் கண்டு பிடிச்சுட்டானா? என்னிடமிருந்து பிரிச்சு அழைச்சுட்டுப் போக வந்திருக்கானா? சாரதா! உன்னை எச்சரிக்கிறேன்! நான் கொடுத்த வேலையை நீ இன்னும் முடிக்கலே. முடிக்காத வரை உன் உயிர் உனக்குச் சொந்தமில்லே! எந்தக் கணமும் பறிச்சுடுவேன். இன்பாகிட்டயும் சொல்லிவை! உங்க உடல்கள் கூட ஊர் போய்ச் சேராது!"

''தெரியும், தெரியும்''என்றாள். இன்பா தயாரித்துத் தந்திருந்த நாடக வசனம் பேசத் தயாரானாள்.

(தொடரும்)



காதலன் : உன்னை கட்ன புடைவையோடதானே வரச் சொன்னேன். நீ கையோட இத்தனை புடைவையை எடுத்துக்கிட்டு வந்திருக்கியே...

காதலி : இதெல்லாம் நான் கட்ன புடைவைதாங்க....

காதலன் : .....! ......! .....!

— செங்குன்றம் கே. ஆர்.

நாடகமாடுவது என்று தீர்மானித்த பிறகு வசனம் பேசுவது சாயாவுக்கு சுலபமாகவே இருந்தது. "இன்பா உங்களிடமிருந்து என்னைப் பிரிச்சு திரும்ப அழைச்சிக்கிட்டுப் போக நினைக்கலே; நம்மோட சேர்ந்துக்கத்தான் விரும்பறார்"என்றாள் ஃபோனில்.

மறுமுனையில் மௌனம்.


"குருஜி?"

"யோசிக்கறேன். ரெண்டு நாள் முன்னால் தான் ஆன்மிகப் போர்வையில் நான் அக்



கிரமம் பண்றதா திட்டினே..."

"மறுக்கலே, அது ஏமாற்றப்பட்டதிலே உடனடியாக ஏற்பட்ட நியாயமான தார்மிகக் கோபம். ஆனா இப்ப இவர் என்னை யோசிக்க வைச்சிருக்கார். யதார்த்தத்தைப் பார்க்கச் செய் திருக்கார்."



22

நல்ல காரியம்.'

"இவர் உங்களைக் கைது பண்ணி அழைச் சிட்டுப் போறதாவே வைச் சுக்கிட்டாலும் உங்களுக்கு வலது

கி. ராஜேந்திரன்

கரமா இருந்து உதவினது யார்? இவரோட பெண்டாட்டி; போலீஸ்காரன் மனைவி! இது வெளியே தெரிந்தால் இவருக்கு அவமானமில்லையா? டிபார்ட்மெண்டுக்குத் தலை குனிவாகாதா?"

"அப்ரூவரா மாறினா கூட உனக்குக் குறைந்தபட்ச தண்டனை கிடைக்கும். போதை மருந்து கடத்தல்ன்றது மிகப் பெரிய குற்றம்."

"அதனால்தான் தயக்கம்; உங்களோட ஒத்துழைக்கவும் நினைக்கிறோம்."

மெல்லச் சிரித்தான் சூர்யாசுவாமி. அதில் வெற்றிப் பெருமிதம் தூக்கலாகத் தெரிந்தது.

"போலீஸ்காரன் பெண்டாட்டியை உங்க கள்ளக்கடத்தல் வியாபாரத்துக்கு தந்திரமாப் பயன்படுத்திக்கிட்டது உங்க சாமர்த்தியம். இப்ப போலீஸ்காரரையே வளைச்சுப்போடவும் ஒரு சந்தர்ப்பம்."

"எந்தக் குடுமியும் சும்மா ஆடாது. பதிலுக்கு என்ன எதிர்பார்க்கிறான்?"

"எத்தனையோ பேரை கவனிச்சுக் கறீங்க; இவருக்கும் அப்பப்ப ஒரு பிரீஃப் கேஸ் அனுப்பாமலா போயிடுவீங்க!"

"ஸ்விஸ் அகௌண்ட்ல கூட பணம் போடலாம். ஆனா அவன் தன்னை நிரூபிக்கணும். அதுக்குக் காலம் கனியணும்."

"ஏற்கெனவே கனிஞ்சிருக்கு... உங்களுக்குக் கொஞ்ச நேரம் முன்னாலதான் ஸான் ரோக்கோன்னு ஒருத்தர் ஃபோன் பண்ணினார்..."

"......"


"ஹல்லோ?"

"சொல்லு!"

"உங்களைப் போலவேதான் என்னை மிரட்டினார். 'உயிரோட ஊர் போய்ச் சேர்ற ஆசை இல்லையா? யாரோ வழியோடு போறவனை இழுத்துக்கிட்டு வந்து கொஞ்சறியே? நம்ம தொழிலுக்கு இந்தச் சபலமெல்லாம் உதவாது. விஷயம் லீக் ஆச்சுன்னா ஆபத்து'ன்னு எச்சரித்தார். 'நீ யாரு? என்னைப் பற்றி உனக்கு என்ன தெரியும்'னேன். 'என் பார்வைலேர்ந்து எதுவும் தப்பாது. உன்னை, பென்ஜமினை, சூர்யாசுவாமியை எல்லாரையும் கவனிச்சுக்கிட்டுத்தான் இருக்கேன்'னார்... யாரு ஸார்

அரண்மனைகள்

அருள்வாக்கு



இன்றைக்கும் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு நடக்கும் வேதபாடசாலைகள் மூடிப் போகாதபடியும், இவற்றில் மேலும் வித்யார்த்திகள் சேருமாறும் பண்ண வேண்டும். வித்யார்த்திகளுக்கும் அத்யக்ஷகர் (வாத்தியார்)களுக்கும் கணிசமான திரவிய சகாயம் பண்ணினால்தான் இந்தக் காரியம் நடக்கும். பிராம்மணனுக்கு ரொம்பவும் ஜாஸ்தியாக லௌகிக சௌகரியங்களையும், தன வஸதியையும் தரக் கூடாதுதான் என்றாலும், நல்ல ஸம்பாத்தியம் தரக்கூடிய பல தொழில்கள் அவர்களை வசீகரிக்கிற தற்காலத்தில், சிலராவது இப்படிப் பூரணமாக வேதத்தைக் கற்றுக் கொண்டு பிற்பாடு சொல்லிக் கொடுப்பது என்ற பிராம்மண ஸ்வதர்மத்தையே செய்ய வேண்டுமானால், அப்படிப் பட்டவர்கள் ''இல்லை'' என்று ஆகாத அளவுக்கு அவர்களுக்கு, வஸதி பண்ணித் தரத்தான் வேண்டும். ஆதியில் இல்லாத அநேக புதுப்புது சௌகரியங்களும், சுக சாதனங்களும் வந்து விட்ட இந்த நாளில், சிலரை மட்டும் பரம வைராகிகளாக இருந்து கொண்டு ஸ்வதர்மத்தைப் பண்ணுங்கள் என்று சொன்னால், வேதரக்ஷணம் என்பது நின்றே போய் விட வேண்டியதுதான். அதனால் வேதத்துக்கே தங்களை அர்ப்பணித்துக் கொள்ளும்படியாகச் சிலரைப் பண்ணும் போது, அவர்களுக்கு நாம் நன்றாக சம்மானம் செய்து, திரவிய சகாயம் நிறையக் கொடுக்கத்தான் வேண்டும். அவர்களுக்கு 'லக்ஷரி' கூடாதாயினும், மற்றத் தொழில்கள் அவர்களை இழுத்துக் கொள்ளாத அளவுக்கு ஸௌகர்யம் பண்ணித் தரத்தான் வேண்டும்.

– ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

அவர்? சூப்பர் பாஸா?''

''ஆமா, நம்மைப் போலவே இருபது இருபத்தைந்து டீம் அவருக்காக அண்டர் கிரவுண்ட்ல வேலை செய்யறது. சர்வதேச தொழில் வர்த்தக சாம்ராஜ்யம்.''

''அடேயப்பா! அதான் அவ்வளவு அதட்டலா, அதாரிட்டியோட பேசினார்.''

''இன்னும் என்ன?''

''என்னோட இருப்பவர் நீங்க நினைக்கிற மாதிரி இல்லே; என் கணவர்தான்; சி.பி.ஐ.– இன்டர்போல் அதிகாரி; நம்மிலே ஒருத்தர்'னேன். 'அப்படியா? அவனை நான் சந்திக்கணுமே'ன்னார். 'எங்க வரட்டும்'னேன். 'சூர்யாசுவாமிகிட்ட சொல்லு அழைச்சிட்டு வருவான்'னார். எதுக்கு ஸார்?''

''ஆளை எடைபோடத்தான் இருக்கும். ஒரு பார்வையில் நம்பலாமா கூடாதான்னு கண்டு பிடிச்சுடுவார். துரோகின்னு தோணிப் போச்சுன்னா அந்தக் கணமே சுட்டுத் தள்ளிடுவார். பிரேதத்தை அப்புறப்படுத்தற அசிங்கமான வேலை எனக்கு... பென்ஜமினுக்கு...''

''ஐயோ!''

''ஆனா அப்படியெல்லாம் உன் புருஷனுக்கு நேராது. நான்தான் இருக்கேனே. கவனிச்சுக்கறேன். அவனை லண்டனுக்குப் போய் காத்திருக்கச் சொல்லு!''

''லண்டன்ல எங்க?''

''ரஸ்ஸல் ஸ்குவேர்னு ஒரு அண்டர் கிரவுண்டு ஸ்டேஷன் இருக்கு. பாதாள ரயிலில் அங்க போய் படியேறி மேலே வீதிக்கு வந்தா, லெய்ஸெஸ்டர் ஹோட்டல் தென்படும். அதில அறை எடுத்து தங்கச் சொல்லு. என் ஃபோன் காலுக்குக் காத்திருக்கட்டும்.'

''ஓ.கே.''

''அப்புறம் சாரதா... உன் புரோக்ராம்ல சின்ன மாறுதல்... நாளைக்கு நீ பாரிஸ் போறே, இல்லியா...?''

''ஆமாம்.''

''அங்கேருந்து மூன்றாம் நாள் நீ விமானத்துல லண்டன் போறதுக்கு பதில், சன்னல் டிரெய்ன்ல போறே. பாரிஸ் ஹோட்டல்ல உன் அறையில் மேஜைமேல் முதல் வகுப்பு டிக்கெட் ரெடியா இருக்கும்.''

''எதுக்கு ஸார் இந்த மாறுதல்?''

''ரெண்டு காரணம். முதலாவது லண்டன் விமான நிலையத்துல இப்ப கெடுபிடி அதிகமா இருக்கு. போதை மருந்து கடத்தல் விஷயத்துல ரொம்பத் தீவிரமா இருக்காங்க. பாரிஸ் நார்ட் ரயில் நிலையத்திலயும் லண்டன் வாட்டர்லூ ஸ்டேஷன்லயும் அப்படி இல்லே. சுலபமா பெட்டிகளைத் தள்ளிக்கிட்டுப் போயிடலாம். ரெண்டாவது காரணம், கடலுக்கு அடியில அமைஞ்சிருக்கிற சன்னல் வழியா ரயில் போறது. ஒரு புதிய அனுபவமா இருக்கும்.''

இங்கிலீஷ் சானல் என்ற கடல் பகுதியை இப்படி கடலடி சுரங்கப் பாதை வழியே கடப்பதாலேயே அந்த ரயிலுக்கு 'சன்னல் டிரெய்ன்' என்று பெயர். கேள்விப்பட்டிருந்தாள். அதனால் ஆவலும் பரபரப்பும் அடைந்தாள். தான் அரங்கேற்றிய நாடகம் வெற்றி பெற்று விட்டது என்பதாலும் கர்வமான பூரிப்பு உண்டாயிற்று.

ஆனால் ஃபோனை வைத்து விட்டு இன்பாவைத் திரும்பி நோக்கியபோது, 'ஐயோ! இவர் தம்மைத்தாமே எப்பேற்பட்ட அபாயத்துக்கு உள்ளாக்கிக் கொள்கிறார்' என்ற நினைப்பு அடிவயிற்றில் பயத்தைக் கிளறி, இதயப் படபடப்பை டெர்பி குதிரைகளின் குளம்படி சத்தமாக்கியது.

கலவரத்தை அவள் கண்களில் கண்டும் காணாததுபோல் புன்னகையுடன் கட்டை விரல் உயர்த்தி ''முதல் வெற்றி, முற்றிலும் வெற்றி''என்றான்.

"எரிமலை வாயிலே குதிக்கத் தயாராயிட்டு அருவில குளிக்கப் போற மாதிரி பேசறீங் களே''என்று அழுதாள்.

ஆறுதலாகத் தழுவினான். மெல்ல மெல்ல அவள் உடலில் ஆயிரம் பூக்களை மலரச் செய்தான்.

பிரியா விடை பெற்று அவன் தன் ஓட்டல் அறைக்குத் திரும்பிய ஓரிரு நிமிஷங் களில் ஃபோன் ஒலித்தது.

''ஹல்லோ! இன்பா! கங்கிராட்ஸ்!'' என்றான் ஜேம்ஸ் பிளாக். "அது என்ன மாஜிக்? கொஞ்சம் கற்றுக் கொடேன். இத்தனை சுல பமா ஒரு பெண்ணை கொக்கிபோட்டு இழுக் கக் காதல் கடவுளால் கூட முடியாது! சொக் கிட்டாளே!''

''உன் பைனாகுலர்லேர்ந்து எதுவுமே தப்பாதா?''

''ரொம்ப இன்டரஸ்டிங் பகுதிகளை யெல்லாம் பார்க்க முடியலை. கண்ணியம் குறுக்கிட்டது. அது சரி, ஏதோ பாரதப் பண் பாடு, அது இதுன்னு பெருமை அடிச்சுக் கிட்டே?''

''அதிலே ஒண்ணும் தப்பில்லே, என் நடத்தையிலும் பழுதில்லே. இந்த சாரதா என் மனைவிதான்.''

"என்னது!'' வியப்பை விண்டு வைத்தான்.

"சுருக்கமாய் சொல்றேன், கேட்டுக்க''என்று விளக்கி, சூர்யாசுவாமியிடம் சாயா பேசிய நாடக வசனம் விவரித்து, லண்டனில் ஸான் ரோக்கோவை சந்திக்க வாய்ப்பிருப்பதையும் கூற,

''ஒண்டர் ஃபுல்''என்று சந்தோஷத் துள் ளலை குரலில் காட்டினான் ஜேம்ஸ். "பிராங்ஃபர்ட்- லண்டன் விமான டிக்கெட் டுக்கு ஏற்பாடு செய்துடறேன். சீஃபுக்கு இப் பவே ஃபோன் பண்ணறேன். அவர் திட் டங்களை அறிந்து சொல்றேன். லண்டன் ஃபிளைட்டுக்கு முன் ஒரே ஒரு தடவை நாம் நேரில் சந்திக்க வேண்டியிருக்கும்''என்று தொடர்பு துண்டித்தான்.

பாரிஸ். லா கார்டியா ஓட்டலில் சார தாவுக்காக அறை ரிஸர்வ் செய்யப்பட்டிருந்தது. சன்னல் ரயிலுக்கு முதல் வகுப்பு டிக்கெட் தயாராக இருந்தது. எடுத்து பத்திரப்படுத்திக் கொண்டாள்.

கிடைத்த வாய்ப்பை நழுவ விடாமல் ஒன் றரை நாளில் முடிந்த மட்டில் பாரிஸைச் சுற்றிப் பார்த்தாள். குருஜி உபயத்தில் அவளி டம் பணம் தாராளமாக இருந்தது.



ஓய்வுபெற்றவர் : தயவுசெய்து யாரும் அழவேண்டாம்... கிராஜுட்டி வந்ததும் உங்கள் அனைவரின் கடனையும் சத்தியமாகத் தீர்த்து விடுகிறேன்!

-உ. ராஜாஜி

டாக்ஸியிலேயே வளைய வரலாம். ஆனால் அதைவிட 'ஸிடி ராமா'என்ற பெயரில் ஊர் சுற்றிக் காட்டிய சொகுசு பஸ்ஸை விரும்பி னாள். இதர டூரிஸ்டுகளுடன் கலந்து கொள் வதில் ஒரு பாதுகாப்பு உணர்வு இருந்தது. விளக்க உரையும் கிடைத்தது. ஹெட்ஃபோன் மாட்டிக் கொண்டு பட்டன் தட்டினால் பார்க் கிற இடங்களின் வர்ணனை எட்டு மொழி களில் செவிகளில் ஒலித்தது. விரும்பிய மொழி யைத் தேர்ந்தெடுக்கலாம். தமாஷுக்கு ஜப் பானிய வர்ணனை கேட்டாள். திரும்பவும் ஆங்கிலத்துக்குத் தாவினாள். முக்கியமான இடங்களில் பஸ் நின்றது. இறங்கி, வழிகாட் டியையொட்டி நடந்தாள்.

மாண்ட்மார்ட்ரே பகுதியில் குன்றின் உச்சி யில் பாரிஸின் மிகப் பழைய மாதா கோயில் களுள் ஒன்று, பன்னிரண்டாம் நூற்றாண்டில் அரை இருட்டுக்கும் இறையுணர்வுக்கும் தொடர்பு இருந்ததை இன்றைக்கும் பறை சாற்றிக் கொண்டு நின்றது. அதன் எதிரேயே குன்றின் உயரத்திலிருந்து பார்க்க, பாரிஸ் நகரம் நீண்டு பரந்து சூரிய ஒளியில் குளித்துக் கொண்டு ஜகஜ்ஜோதியாகக் காட்சியளித்தது. காலார நடந்தாலோ பிளாட்ஃபார ஓவியர்கள், சுற்றுலா பயணி விரும்பிக் கேட்கும் பாரிஸ் நகரின் எந்த ஒரு காட்சியையும் வண்ணத்தில் வரைந்து தந்தார்கள். அல்லது அந்த டூரிஸ்ட் டையே சில நிமிஷங்களில் படமாக்கிக் கொடுத் தார்கள். உலக நாடுகள் பலவற்றிலிருந்தும் ஓவியர்கள் ஒரு புனித யாத்திரை போல் இங்கு வருகிறார்கள் என்பதும் சில நாள் தங்கி, ஓவியங்கள் தீட்டி, கிடைத்த சன்மானம் பெற்று, திருப்தியுடன் திரும்புகிறார்கள் என் பதும் ஆச்சர்யமளித்தன. இப்படியும் ஒரு மகிமையா இந்த இடத்துக்கு!

ஒவ்வொரு இடத்திலும் 'இன்பா இப்போது என் அருகில் இருந்தால்'என்ற எண்ணத்தைத் தவிர்க்க முடியவில்லை. ஐஃபல் டவரை யொட்டி ஸீன் நதியின் படகுத் துறையில், பிரும்மாண்ட விசைப் படகு ஒரே சமயத்தில் நூறு பயணிகளை நாற்காலிகளில் வசதியாக உடக்கார வைத்து அழைத்துப் போகத் தயா

ராயிருந்தது. டிக்கெட் வாங்கி இடம் பிடித்தாள். இரண்டு நிமிஷங்களுக்கு ஒரு பாலம் என்ற கணக்கில் அவற்றின் அடியில் புகுந்து சென்றது படகு. ஒவ்வொரு பாலத்துக்கும் ஒரு சரித்திரம், அந்தக் காலத்திய நூதன கலை அம்சம், அதற்கென்று ஓர் அலாதி அழகு. தலையை வலப்புறம், இடப்புறம் திருப்பினாலோ நதிக்கரையோரமாக வரலாற்றுச் சிறப்பு மிக்க எத்தனையோ கட்டடங்கள். அதோ நாட்டர்டாம் தேவாலயம், இதோ லூவர் மியூஸியம் இருக்கும் அரண்மனை, அங்கே நீதிமன்றம், இங்கே போலீஸ் தலைமையகம்...

மூன்றாம் நாள் அதிகாலையிலேயே டாக்ஸி பிடித்து நார்ட் ரயில் நிலையம் சென்றாள். விமான நிலையம் போலவே டிக்கெட் பார்த்து, பாஸ்போர்ட் பரிசோதித்து, ஒரு நீண்டதான காத்திருக்கும் கூடத்துக்கு அனுப்பினார்கள். சூர்யாசுவாமி சொன்னது போலவே ஸெக்யூரிடி செக், கஸ்டம்ஸ் செக் இரண்டும் மிக எளிதாகக் கடக்க முடிந்தது. 'மக்களை நம்பிச் செயல்படுகிறார்கள். என்னைப்போல் நம்பிக்கைத் துரோகம் செய்பவர்கள் அதிகம் இருக்க மாட்டார்கள்.' டிராலி வைத்துத் தள்ளி வந்த பெட்டிகளை ஏற்ற போர்ட்டர் உதவினார்.

முற்றிலும் ஏஸி. வசதியாகச் சாய்ந்து அமர உயர்தர இருக்கைகள். பாரிஸை சீக்கிரமே பின்னால் விட்டுவிட்டு கிராமப்புறங்களினூடே செல்லும் போது பசுமை பாய் விரித்தது. இலவசமான காலை உணவு. ("இறைச்சி மட்டும் நீக்கி மற்றது கொடு") சூடான காப்பி கோப்பையில் சற்றும் தளும்பவில்லை! அப்படி ஆடாமல் அலுங்காமல் விரைந்தது ரயில். தண்டவாளத்தில் என்ன, வெண்ணெய் தடவி இருப்பார்களோ!

நூற்றுக்கணக்கான விஞ்ஞானிகள் திட்ட மிட்டு, பல்லாயிரக் கணக்கான ஊழியர்கள் பல்லாண்டுகள் பாடுபட்டு, பிரிட்டிஷ்– பிரெஞ்சு அரசாங்கங்களின் கூட்டுறவில், கடலின் அடிவாரத்துக்கும் கீழே, அமைக்கப் பட்ட பிரும்மாண்டமான குகைப்பாதையை ரயில் நெருங்கிக் கொண்டிருந்தது. 'கடலின் அடிவாரத்துக்கும் கீழே புகுந்து புறப்படப் போகிறோம்'என்ற எண்ணமே ஒரு திகைப்பை ஊட்டுவதாக இருந்தது சாயாவுக்கு.

லண்டனை சுற்றிப் பார்க்க வேண்டும் என்று கூடத் தோன்றவில்லை. வெளியே போயிருக்கும் போது ஃபோன் வந்து விட்டால்? இன்பா பத்தாவது மாடியில் 108வது அறையில் அடைந்து கிடந்தான். டீ.வி. பார்த்து, நாவல் படித்து, எதிலும் மனம் நிலைக்காமல் சாயாவை நினைத்துத் தவித்தான். 'நேரத்தை வீணடித்துக் கொண்டிருக்கிறோம்'என்ற குற்ற உணர்வில் நெளிந்தான். 'ஒருவேளை நம் தந்திரம் அம்பலமாகி, சூர்யாசுவாமி ஃபோன் பண்ணாமலே இருந்து விடுவானோ? 'எப்போ அழைத்து வர?'என்று வசதி அறிய ஸான் ரோக்கோவுக்கு ஃபோன் செய்தாலும் போதுமே? நம் நாடகம் புரிந்து போகுமே! அதன்பிறகும் ஸான்ரோக்கோ என்னைப் பார்க்க ஆசைப்படலாம்! யார் கண்டது? ஆபத்தான பேர்வழி என்று கருதி என்னைத் தீர்த்துக் கட்டவேனும் வரச் சொல்லலாமில்லையா?'

கிட்டத்தட்ட ஆசை நிராசையானபோது ஃபோன் ஒலித்தது. "சூர்யாசாமி பேசறேன்."

"இன்பா ஹியர். இன்பசாகரன்."

"ரிட்ஸ் ஹோட்டல், இருபதாவது மாடி, ஸ்வீட் 222. டாக்ஸி பிடித்தால் அரை மணியில் போய்ச் சேரலாம். காக்க வைத்தால் ஸான் ரோக்கோவுக்கு பிடிக்காது."

"ஓகே."ரிஸிவர் வைத்து பாய்ந்தோடி லிஃப்டில் இறங்கினான். தூங்கும் போது கூட பாண்ட் அணிந்து அழைப்புக்குத் தயாராய்க் காத்திருந்தவனாயிற்றே!

"டாக்ஸி!"

ரிட்ஸ். 222. அழைப்புமணி கிணுகிணுக்க, கதவு திறந்தவன் பென்ஜமின். உடல் தடவி துப்பாக்கி உருவிக் கொண்டு அடுத்த அறைக்குள் அனுமதித்தான்.

பெரிய கூடத்தில் நடுநாயகமாக பிரும்மாண்ட சோபாவில் ஸான் ரோக்கோ! ஜான் கார்மிக் காண்பித்த பத்திரிகை கிளிப்பிங் படத்தில் காணப்பட்ட அதே ஸான் ரோக்கோ. ஆனால் இங்கே நேரில் பார்க்க என்னமோ... ஏதோ....

"என்னப்பா, இன்பா!"

தூக்கிவாரிப் போட்டது! "ஆகா! எப்பேர்ப்பட்ட முட்டாள் நான்! இதை முன்னமேயே ஊகித்திருக்கலாமே"என்று வாய்விட்டுச் சொன்னான் இன்பா.


"வித்தை ஏதும் காட்டாதே! உனக்கு மேல் வித்தைக்காரன் நான்! உன் பெண்டாட்டி சன்னல் ரயிலில் குண்டு சுமந்து வருகிறாள்"என்றான் ஸான்ரோக்கோவாக உருமாறியிருந்த சூர்யா சுவாமி.

இன்பா சில்லிட்டான்.

(தொடரும்)

23

சென்னையில் ஸி.பி.ஐ. கவனத்தை திசை திருப்பக் குண்டுகளை வெடித்தது போல், ஐரோப்பாவிலும் இன்டர்போல் கவனத்தைத் திசை திருப்ப சூர்யாசுவாமிக்கு அவசியம் இருந்தது. ஸான் ரோக்கோவாக வேஷமணிந்து பாரிஸின் நைட் கிளப் ஒன்றில் புகுந்தான். 'கிரேஸி ஹார்ஸ் சலூன்' என்பது அதன் பெயர். அங்கு பத்திரிகை நிருபர்கள் பரபரப்பு செய்திக்காக அடிக்கடி வருவார்கள். வெய்ட்டர் ஒருவனிடம் அவன் தந்த ஐம்பது டாலர் நோட்டு, அடுத்த நிமிஷமே ஒரு நிருபரை அழைத்து வந்தது. ஸான்ரோக்கோ பேட்டியை, இரண்டு நைட் கிளப் அழகிகளுடன் அவர் சேர்ந்திருப்பது போன்ற வண்ணப்படத்துடன், 'ஸ்கூப்'பாக அந்தப் பத்திரிகை வெளியிட்டது. தொடர்ந்து, எந்த அக்கிரமம் எங்கு நடந்தாலும் அது 'ஸான்



இருட்டு அரண்மனைகள்

ரோக்கோவின் வேலையாக இருக்கக்கூடும்' என்று பத்திரிகைகள் எழுதின. ஸான் ரோக்கோவை ஃபிரெஞ்சு போலீஸும் இன்டர்போலும் தேட ஆரம்பித்தன. அவனிடம் அழைத்துப் போவான் என்று எதிர்பார்த்தே சூர்யாசாமியைப் பிடிக்காமல் உலவ விட்டன. சூர்யாசாமி தன் வியாபாரத்தைத் தங்குதடையின்றி நடத்தி, இப்போது இறுதிக் கட்டத்துக்கு வந்து விட்டிருந்தான்.

"இந்த முறை நல்ல மகசூல். சாயாவைக் கோவேறு கழுதையாகப் பயன்படுத்தி முக்கால் மில்லியன் டாலர் ஸ்விஸ் வங்கியில் போட்டிருக்கேன்" என்று கதைச் சுருக்கம் கூறிய சூர்யாசாமி, தொடர்ந்து பேசினான்:



"இப்படி நீ ஏமாறக் காரணம் என்ன தெரியுமா? அடிமை புத்தி! ஐம்பது வருஷ சுதந்திரத்துக்குப் பிறகும் 'வெள்ளைக்காரன் சொன்னால் தப்பா இருக்காது' என்று நினைக்கிறே. இல்லாவிட்டால், 'பென்ஜமினா உருமாறக்கூடிய சூர்யாசாமி, ஸான்ரோக்கோ வேஷமும் போடலாம்'னு முன்பே ஊகிச்சிருப்பே. அந்த மடையன் ஜான்கார்மிக் இருக்கானே, அவனுக்கு கர்வம் மட்டும் டன் கணக்குல தேறும். 'ஒரு இந்தியன் ஒரு மாஃபியா சாம்ராஜ்யத்தை நிர்வகிக்க முடியும்'னு நம்புவதற்குக் கூட அவன் தயாராயில்லே. அத்தனை நிறவெறி! வெள்ளைத் தோல் படைச்சவன்தான் அவன் கணக்குல புத்திசாலி! அதனாலதான் ஸான் ரோக்கோவை எங்கெங்கோ தேடி அலைஞ்சான்!"

"ரொம்ப சுலபமாத்தான் ஏமாத்திட்டே" என்றான் இன்பசாகரன். "ஆனா இப்ப என்னிடம் உண்மையை வெளியிட்டு ஆபத்தைத் தேடிக்கிறியே!"

"ஆபத்து எனக்கில்லை, உனக்குத்தான்" என்று துப்பாக்கி எடுத்தான் சூர்யாசுவாமி. "சாயா எனக்கு ஃபோன் செய்த போதே, 'நீ எழுதிய நாடக வசனத்தைத்தான் அவள் பேசுகிறாள்' என்பது எனக்குப் புரிந்து விட்டது. நீ என் பக்கம் சேர விரும்பறதா சொன்னதோட அவள் நிறுத்தியிருந்தால் ஒருவேளை நம்பியிருப்பேன். அடுத்ததா ஸான்ரோக்கோ ஃபோன் பண்ணினதாகவும் உன்னை அவன் சந்திக்க விரும்புவதாகவும் கூறிய போது புருடா விடறது தெரிஞ்சு போச்சு. ஆனா அப்பவே நான் உங்க நாடகத்துக்குத் திரை போட விரும்பலே. சாயாவுக்கு இன்னும் கொஞ்சம் வேலை இருந்தது; எனக்கு வந்து சேர வேண்டிய பணமும் பாக்கியிருந்தது. அதனால் உங்களோட சேர்ந்து நானும் நடிச்சேன். உன்னை லண்டனுக்கு வரச் செய்து, இங்கே எனக்கு முன்னால் தருவிச்சும் விட்டேன், பார்!"

"இப்ப என்ன செய்வதாக உத்தேசம்?"

"வேறென்ன, உன்னை புல்லெட்டால் துளைக்கணும், அவ்வளவுதான். என்னை ஏமாற்ற முற்பட்டதற்காக உனக்கு மரண தண்டனை. உன்னை இழந்து விதவையாகும் சாயாவுக்கு அதுவே தண்டனை!"

உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை பயத்தின் ஊடுருவலை உணர்ந்தான் இன்பா. இருதயம் திடுக் திடுக். ஆனாலும் அவற்றை மறைத்துப் புன்னகை புரிந்தான்.

"என்னைக் கொன்று விட்டு நீ வாழ முடியும்னு நிஜமாவே நினைக்கிறியா? இன்டர்போல் அதிகாரிகள் என்னை

கி. ராஜேந்திரன்

அருள்வாக்கு

தங்களுடைய 'லிமிடெட் ஸர்க்கிளை'த் தாண்டி 'நாலெட்ஜ்' (அறிவு) வெளியே பரவக் கூடாதென்ற vested interest (சுயநலக் கும்பலின் கொள்கை) தான் நம் பூர்விகர்கள் ஸயன்ஸ் உண்மைகளைக் கூறாமல், கதையிலே போர்த்தி மூடி வைத்ததற்குக் காரணம் என்றும் சிலர் குற்றம் சொல்கிறார்கள். இது ரொம்பத் தப்பாகும். மனஸ் கட்டுப்படாதவர்களுக்கு அறிவை மட்டும் கொடுப்பது அனர்த்தத்தில்தான் முடியும். பெரும்பாலான ஜனங்கள் மனஸ் கட்டுப்படாதவர்களாகத்தான் இருப்பார்கள். ஸயன்ஸ் ஸகல ஜனங்களுக்கும் பரவி முன்னேறிக் கொண்டேயிருக்கும் போது, அந்த முன்னேற்றத்துக்கு எதிர் ratio-வில் (விகிதாசாரத்தில்) லோகத்திலே தர்மம் பின்னே போய்க் கொண்டேயிருப்பதை நாம் பிரத்யக்ஷமாகப் பார்த்துக் கொண்டுதானே இருக்கிறோம்? இதை அநேக நூற்றாண்டுகளுக்கு முன்பே போஜன் "ஸமராங்கண ஸூத்ர"த்தில் சொல்லியிருக்கிறார். அதிலே 'ஏரோப்ளேனை'ப் பற்றிக் கூட 'வ்யோமயானம்' என்று சொல்லி, ஆனாலும் அதன் theory-ஐக் கொஞ்சம் மாத்திரம் கொடுத்து விட்டு, "இதைச் செய்யும் Procedureஐ இங்கே விஸ்தாரம் பண்ணாததால் அது தெரியாதாக்கும் என்று நினைக்க வேண்டாம். நன்றாகத் தெரியும். ஆனாலும் புஸ்தகத்தில் எல்லாருக்கும் தெரியும்படியாக எழுதி வைத்து விட்டால், அதனால் லோகத்துக்கு நன்மையை விடக் கெடுதியே ஜாஸ்தி உண்டாகும் என்றுதான் இங்கே சொல்லவில்லை" என்று காரணங்காட்டியிருக்கிறார். அவர் சொன்னதிலுள்ள உண்மையை நாம் கண்கூடாகப் பார்த்து விட்டோம் : ரணபூமியில் மட்டும் யுத்தம் என்றில்லாமல் நாடு நகரமெல்லாம் குண்டு போட்டு World War நடந்ததற்குக் காரணம் விமானப் படையெடுப்புத்தானே? ஹ்ருதயம் சுத்தியாவதற்கு முந்தி புத்தி மட்டும் விருத்தியானால் அனர்த்தந்தான் என்பதை ஸமயாசாரங்கள் எடுபட்டுப் போய் ஸயன்ஸ் மட்டும் அபிவிருத்தியாகிக் கொண்டிருக்கிற இக் காலத்தில் பார்க்கிறோம். இதனால்தான் சுத்தர்களான நல்ல கல்ச்சருள்ளவர்களுக்கென்று மாத்திரம் நம் பூர்விகர்கள் அநேக விஷயங்களை வைத்து விட்டனர்.



- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

சதா பின்தொடர்ந்தபடி இருக்காங்க. நான் இங்கே வந்ததும் இந்த ஹோட்டலை நாலாபுறமும் சூழ்ந்து கொண்டிருப்பாங்க. நான் இன்னும் பதினைந்து நிமிஷங்களில் உன்னைக் கைது செய்து கொண்டு வெளியே வராட்டா அவங்க உள்ளே நுழையப் போறாங்க. உன்னால தப்பவே முடியாது. வெளியேறுவதற்கான எல்லா வாசல்களும் மூடப்பட்டு காவல் நிக்கறாங்க."

சூர்யாசுவாமி அட்டகாசமாய் சிரித்தான். "நீ இந்த அறைக்குள் நுழையறபோதே சொன்னேன், 'என்னிடம் வித்தை காட்டாதே; உனக்கு மேல் பெரிய வித்தைக்காரன் நான்'னு."

"ஆமா, சாயா ஏதோ குண்டு சுமந்து வரதாக பயமுறுத்தினே. ஆர்.டி.எக்ஸா? பிளாஸ்டிக் பாம்? இல்லே வெறும் புரளியா?"

"உனக்காகப் பரிதாபப்படறேன் இன்பா. நீ என் ஆற்றலை உணரலே. குண்டு வெடிக்கும்போது புரளியா இருக்காது; பிரளயமாவே விளங்கும்! சாதாரண குண்டு இல்லே அது; சின்னதான, அழகான அணுகுண்டு! அது வெடிக்கிறப்ப சாயா மட்டுமில்லே, அவளோட அந்த ரயில்ல பிரயாணம் செய்யும் அத்தனை பேரும் பரலோகம் போவாங்க. ரயில் சின்னாபின்னமாகும். அது கடந்து வரும் டன்னல் உடைந்து தூளாகும். சமுத்திர நீர் உள்ளே நயாக்ராவாகக் கொட்டும். பல்லாயிரக் கணக்கான ஊழியர்கள், பல நூறு விஞ்ஞானிகள் சேர்ந்து, பல்லாண்டு பாடுபட்டு, கோடிக் கணக்கான டாலர் செலவில் அமைத்த டன்னல் தவிடுபொடி! கடலில் கதிரியக்கம் பரவி அந்த வட்டாரத்தில் உள்ள உயிரினங்கள் சப்ஜாடா குளோஸ்!"

பிரமிப்பை வெளிக்காட்டாமல், ஏளனக் குரலில், "என்ன பிதற்றல் இது? அணுகுண்டு நீ தயாரிக்கிறதாவது, அதை சாயா கொண்டு வருவதாவது? பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்ல வேண்டாமா?" என்றான்.

பெருமூச்சு விட்டான் சூர்யாசுவாமி. "நீ இத்தனை அசடா இருப்பேன்னு எதிர்பார்க்கலே. விஞ்ஞான முன்னேற்றங்கள் உனக்குத் தெரியலே. இன்று ஒரு அணுகுண்டை புத்திசாலியான பொறிஇயல் மாணவன் கல்லூரியின் கொல்லைப்புறம் தயாரிச்சுடுவான். அதற்கு வேண்டிய பொருள்களைக் கள்ளத்தனமாகக் கொண்டு வந்து தர என்னை மாதிரி மாஃபியா ஆசாமிகள் காத்திருக்காங்க."

"சாயா மாதிரி அப்பாவிப் பெண்களும் கைகொடுக்கிறாங்க."

"ஆமா இந்த முறை சாயாவுடைய ஸூட்கேஸ்கள் மட்டும் மாறலே, வேனிடிகேஸும்

"ஐயய்யோ! என்னங்க இது 'ஆதிராஜாராம் மிருதங்கம்'னு போட்டிருக்கு..."

"வேற ஒண்ணுமில்லே, இவர் ஆதி தாளம் நல்லா வாசிப்பாராம்! 'டாபிக்கலா' இருக்கட்டுமேன்னு இப்படி போட்டிருக்காங்க!"

— அகில்



மாறியிருக்கு. மேக்-அப் சாதனங்களுக்குக் கீழே, மறைவாக, வாமனாவதாரத்துல சக்தியையெல்லாம் உள்ளடக்கியிருக்கிற அணுகுண்டு!"

"ரயில்ல ஒரு டைம்பாம் – அது அணுகுண்டாவே இருக்கட்டும் – வெடிக்கிறதால இங்கே நீ எப்படி இன்டர்போலிடமிருந்து தப்ப முடியும்?"

"அங்கேதான் என் சாமர்த்தியம் செயல்படுது" என்று பிரீஃப்கேஸ் எடுத்துத் திறந்தான். கம்ப்யூட்டர்! போர்ட்டபிள். "டைம் பாம் இல்லே இன்பா! ரிமோட் கண்ட்ரோல்! இங்கே கீ போர்ட் தட்டினா, அங்கே டமால்!"

'டமால்' என்று குரல் உயர்த்தாமல் வேடிக்கையாகச் சொன்னான்.

"அடப்பாவி!"

"பாவிதான்! பாவத்துக்குப் பயந்தால் போதைப் பொருள் கடத்துவேனா? கோடி கோடியாய் பணம் குவிப்பேனா? இப்ப சொல்லு, இந்த பிரீஃப்கேஸ் என் உயிருக்கு உத்தரவாதமா, இல்லையா? நான் பத்திரமாக தப்பிச் செல்ல முடியுமா, முடியாதா?"

"நான் நம்பவில்லை. இங்கிருந்தபடி, சமுத்திரத்தின் அடியில் டன்னலில் வரும் ஒரு ரயிலில் உள்ள அணுகுண்டை வெடிக்கச் செய்வது சாத்தியமேயில்லை. அப்படியே அது சாத்தியமானாலும் அந்த விஞ்ஞான நுட்பம் உனக்குத் தெரிந்திருக்க முடியாது. என்னை மிரட்டி, ஏமாற்றி தப்பி ஓடப் பார்க்கிறே!"

சூர்யாசாமி சத்தம் வராமல் சிரிக்க, அவன் உடல் குலுங்கியது. "எனக்கு அந்த நுணுக்கம் தெரியுமா என்பதா பிரச்னை? என்னால் அந்த அறிவை விலை கொடுத்து வாங்க முடியுமே! எப்பேர்ப்பட்ட விஞ்ஞானியும் பணத்துக்கு அடிமை. அது என்னிடம் கொட்டிக் கிடக்கு."

"நீ சொல்ற மாதிரி ஜேம்ஸ் பாண்ட் சினிமாவுல நடக்கும்; அல்லது ஒருவேளை ஸ்டீவன் ஸீகல் படத்துல."

"கதாசிரியர்களின் நேற்றைய கற்பனை இன்றைய நிஜம். விமானம், கம்ப்யூட்டர், விண்வெளிப் பயணம் எல்லாமே. இன்னமும் சந்தேகம் இருந்தா உன்னோட மதிப்புக்குரிய ஜான் கார்மிக்கை வேணும்னா கேட்டுப் பார். வெள்ளைக்காரன் சொன்னா நம்புவே இல்லையா? உன்னோட ஃபோன்கால், நான் இங்கேயிருந்து தடங்கல் இன்றி வெளியேறிப் போக பாஸ்போர்ட்டாகவும் இருக்கும்."

நடுங்கும் கரங்களால் ரிஸீவர் எடுத்தான்.

"இன்னும் பதினைந்து நிமிஷங்களில் அந்த ரயில் டன்னலுக்குள் புகும். அதன் பிறகு அரைமணி நேரம் அந்த இருட்டு அரண்மனை வழியே சென்று கரையேறும். பிறகு மேலும் ஒரு மணி நேரம் ஓடி லண்டனை அடையும். அப்புறமும் கூட டன்னலுக்குப் பதில் வாட்டர்லூ ஸ்டேஷனுக்கு ஆபத்து நீடிக்கும். அதனால் நான் சாவகாசமாகத் தப்பிச் செல்லலாம். இந்த பிரீஃப்கேஸ் என்னிடம் இருக்கும் வரை யாருமே என்னை நெருங்கப் பயப்படுவாங்க" என்றான் சூர்யாசுவாமி.

"உன் ஊட்டி பங்களாவை விட இருட்டான அரண்மனை, நீ திருட்டுப் பணம் குவித்துள்ள ஸ்விஸ் வங்கிகள். அவற்றை விடவும் இருட்டு, உன் மனக்குகை. எத்தனை பேருக்கு போதைப் பழக்கம் ஏற்படுத்திய படுபாதகமான இருட்டு டன்னல் அது!"

டயல் செய்த அடுத்த கணம், "ஜான் கார்மிக் ஹியர். சுருக்கமாய்ச் சொல்லு. சீக்கிரம்" என்று உத்தரவிட்டான்.

"இங்கிருந்தபடியே ரிமோட்டில், டன்னலில் வந்து கொண்டிருக்கும் ரயிலில் உள்ள குண்டை வெடிக்கச் செய்ய முடியுமா?"

"சாத்தியம்தான், இன்பா. ஆனால் இதைக் கேள். உங்களுடைய உரையாடல் ஆரம்பித்ததுமே உன் கைகடிகாரத்தில் நாங்கள் பொருத்தியுள்ள மைக்ரோ டிரான்ஸ்மிட்டர் மூலம் எல்லாம் கேட்டோம். தொடர்ந்து கேட்டு வருவோம். மொழிபெயர்ப்பாளர் கூட ஏற்பாடு செய்திருந்தோம். ஆனா ஆங்கிலத்தில் பேசி உதவிட்டீங்க. அவன், சாயா குண்டு சுமந்து வருவதா சொன்னதுமே ரயிலைச் செலுத்தும் இன்ஜினீயர், டிரைவர் ஆகியோரோடு தொடர்பு கொண்டு, ரயிலை நிறுத்தி, பின்னேறி வரச் செய்து, சின்ன ஸ்டேஷன் ஒன்றில் இப்போ நிற்கிறது. லக்கேஜ் நீங்கலாக பயணிகளை மட்டும் இறங்கச் செய்து, ஸ்டேஷனை விட்டு வெளியேற்றிக் கொண்டிருக்கிறோம். குறைந்த



பட்சம் இன்னும் பதினைந்து நிமிஷமாவது தேவை. முக்கால் மைல் சுற்று வட்டாரத்தில் மனித நடமாட்டமே இல்லாமல் செய்வோம். அந்தப் பைத்தியக்காரனிடம் தொடர்ந்து பேசு; முடிந்த மட்டில் தாமதப்படுத்து...''

"என்ன இவ்வளவு நேரப் பேச்சு?'' என்று சந்தேகித்து லைன் கட் செய்தான் சூர்யாசுவாமி.

ரிஸீவர் வைத்தபடியே, "சாத்தியம் தான்; அது எப்படி சாத்தியம் என்பதை ஜான் விளக்கிக் கொண்டிருந்தான்'' என்றான் இன்பசாகரன். "கம்ப்யூட்டரில் சில சங்கேத மொழிகளை நீ தட்டியதும் அது, ஸாட்டிலைட்டுக்கு அனுப்பப்பட்டு, அங்கிருந்து ரயிலில் நீ பதுக்கியிருக்கிற சிறிய ரேடார் மூலம் அணுகுண்டை இயக்கக்கூடிய குட்டி கம்ப்யூட்டரை அடைய...''

"டமால்'' என்று சிரித்தான் சூர்யாசுவாமி. "இப்ப என்ன சொல்றே?''

சல்யூட் வைத்தான். "யு ஆர் தி கிரேட்டஸ்ட். இன்னும் கொஞ்ச காலத்தில் உலகமே உன் காலடியில்.''

"இப்போதைக்கு என் மாஃபியா ராஜ்யத்தைக் காப்பாத்திக்கிறேன். நான் சார்ட்டர் பண்ணியிருக்கிற ஸ்பெஷல் பிளேன், இதற்குள் ஹீத்ரோ விமான நிலையத்தில் இறங்கி எனக்காகக் காத்திருக்கும். நான் இந்தியாவுக்குப் பறப்பதை யாரும் தடைசெய்யாத வரை சன்னல் ரயிலுக்குச் சேதமில்லை. உன் உடலைப் பதப்படுத்தி சவப்பெட்டியில் வைத்து சென்னைக்குக் கொண்டு போய் இறுதிச் சடங்கு நடக்கும். அடுத்த குடியரசு தினத்தில் உனக்கு, 'டியூட்டியில் செத்ததற்காக' வீரப் பதக்கம். உன் பெண்டாட்டி தப்பிப் பிழைத்து வந்தால் பெற்றுக் கொள்வாள். நான் அந்த நிகழ்ச்சிக்கு அவசியம் போறேன்'' என்று மறுபடி துப்பாக்கி உயர்த்தினான்.

"நில்லு, நில்லு!'' என்றான் இன்பா. "ஒரு விஷயம் யோசி.''

"இன்னும் என்ன? அரட்டை அடித்துக் கொண்டிருக்க எனக்கு நேரமில்லை.''

"இந்தியாவுக்குப் போனாலும் சட்டம் உன்னைச் சும்மா விடுமா? நான் என்னோட பாஸ் மயில்வாகனத்துக்கு அப்பப்ப தகவல் அனுப்பிட்டுத்தான் இருக்கேன்.''

"ஆக மொத்தத்துல முட்டாள்கள் நீயும் உன் பாஸும்தான். பிழைக்கத் தெரியாதவங்க. பாஸ்போர்ட் ஆபீஸிலிருந்து ஆரம்பிச்சு, டி.ஐ.ஜி. மருதகாசி போன்ற சில அதிகாரிகள், மந்திரிகள் எல்லாருக்கும் நான் அப்பப்ப வாய்க்கரிசி போட்டுக்கிட்டிருக்கேன். எனக்கு ஒரு சங்கடமும் நேராமல் பார்த்துப்பாங்க. 'பணம்னா பிணமும் வாயைத் திறக்கும்'னு இதுக்குத்தான் சொல்றது. குட்பை!'' – குறிபார்த்தான்.

"இரு இரு ஒரு முக்கியமான விஷயம்.''

"என்ன? படிஞ்சு வரேன்றியா? இல்லே, சுட வேண்டாம், பயத்துலயே செத்துடறேன்றியா? எதுக்கும் உன்னை இனிமே நம்ப முடியாது.''

"அதில்லே...'' என்று இழுத்தான் இன்பா. 'எதைச் சொல்லி எப்படி தாமதப்படுத்தலாம்?' என்று யோசித்தவனுக்கு, பளிச்சிடும் மின்னலாக, பாரிஸில் ஜேம்ஸ் பிளாக் சொன்ன செய்தி நினைவு வந்தது! அதை வைத்து இன்னும் ஒரு ஐந்து நிமிஷமாவது ஓட்ட முடியாதா...? "ருஷ்ய மாஃபியா பற்றி யோசிச்சியா?''

சூர்யாசுவாமியின் முகம் கறுத்தது. "அவங்களைப் பற்றி என்ன?''

"கேள்விப்படலையா? ஐரோப்பா முழுக்க மாஃபியா வர்த்தகத்தை ஒன்றன் பின் ஒன்றாகக் கைப்பற்றி வராங்க. இன்றைய தலைவனைத் தீர்த்துக் கட்டிட்டு அவனோட சாம்ராஜ்யத்தை ஏஜெண்டுகள், ஊழியர்கள், நெம்பர் அகௌண்ட் உள்பட சகலத்தையும் – கபளீகரம் பண்றாங்க. அவங்களோட அடுத்த இலக்கு ஸான்ரோக்கோதான். இன்டர்போலின் உளவுத் துறைக்கு இந்தச் செய்தி கிடைச்சிருக்கு. ஸான்ரோக்கோவைச் சந்திக்கத்தான் நான் இங்கே வந்திருக்கேன்னு ருஷ்ய மாஃபியாவுக்கு நிச்சயம் தெரிஞ்சிருக்கும். அதனால இப்ப நீ வெளியே போனா ஒண்ணும் ஒண்ணும் ரெண்டுன்னு கணக்குப் போட்டு உன்னை உடனே சல்லடையா துளைச்சு எடுத்துடுவாங்க. ரயில்ல அணுகுண்டு வெடிக்குமேன்ற பயத்துல உன்னை இன்டர்போல் சும்மா விடும். ஆனா ருஷ்ய மாஃபியாவுக்கு அந்தக் கவலையோ கருணையோ இல்லே. இந்த ஹோட்டலைச் சுற்றி இன்டர்போல் போலவே அவங்களும் முற்றுகை இட்டிருக்கலாம்! சுற்றுவட்டார கட்டடங்களில் ஒளிஞ்சிருந்து டெலஸ்கோப் பொருத்திய துப்பாக்கிகளுடன் காத்திருக்கலாம்.''

ஒருகணம்தான் யோசித்தான் சூர்யாசுவாமி. அடுத்த கணம் அவன் முகத்தில் கலவரம் நீங்கி தந்திரம் பரவியது. "அப்படின்னா... பாவம், உன்னைத்தான் நான் குண்டு துளைக்கிற கவசமா பயன்படுத்தணும்'' என்றான்.

(அடுத்த இதழில் முடியும்)

● திருக்குறளில் 133 அதிகாரங்கள் இருக்கின்றன என்பது தெரிந்த செய்தி. ஆனால் 132 தலைப்புக்கள்தான் இருக்கின்றன. 'குறிப்பறிதல்' என்னும் தலைப்பு இன்பத்துப்பால், பொருட்பால் ஆகிய இரண்டிலும் இருக்கும். - ஆதாரம் : "தமிழ்ப்பாவை" தகவல் : தி. பரமேகவரி

கி. ராஜேந்திரன்

ருஷ்ய மாஃபியா பற்றி சூர்யா சுவாமியும் கேள்விப்பட்டிருக்க வேண்டும். அவன் முகத்தில் கலக்கம் தெரிந்தது; செயல்களில் அவசரம் மிகுந்தது. ஆனாலும் அவன் தன்நிலை இழக்கவில்லை.

"கிளம்பு, கிளம்பு, சீக்கிரம்!" என்றான். "எனக்கு முன்னால் நட! என் உயிர் காக்கும் கேடயம் நீதான்!"

பென்ஜமினை அழைத்து தனக்குப் பின்னால் வரச் சொன்னான். "கார் நிற்குமிடத்துக்கு வழிகாட்டு" என்றான். அணிந்திருந்த ஓவர்கோட் பாக்கெட்டில் துப்பாக்கி மறைத்து, அதனால் இன்பாவின் முதுகைக் குறிபார்த்தான். இடக்கரத்தில் பிரீஃப்கேஸ் பற்றிக் கொண்டு 'உம்' என்று அதட்டினான்.

ஒருவர் பின் ஒருவராக ரயில் விளையாட்டு போல் நடந்தார்கள்.

"எப்படி இருந்தாலும் நான் சாகத்தான் போகிறேன்" என்றான் இன்பா. "ருஷ்ய மாஃபியா குண்டு பாயும். தப்பினா நீ சுட்டுத் தள்ளப் போறே."

"ஷட் அப்" என்றான் சூர்யாசுவாமி.

இன்டர்போல் அதிகாரிகள், ஸ்காட்லாண்ட் யார்ட், லண்டன் போலீஸ் எல்லாரும் தங்கள் கண்ணெதிரே அவர்கள் நடந்து போவதைக் கைகட்டி நின்று பார்த்தார்கள்.

"என் மேல் கைவைத்தால் சென்னல் டிரெய்ன் நெம்பர் 634-ல் மினி அணுகுண்டு வெடிக்கும்; ஜாக்கிரதை" என்று எச்சரித்தான்.

பிரீஃப்கேஸை உயர்த்திக் காட்டி அவர்கள் முகங்களில் அச்சம் பரவச் செய்தான்.

ஹோட்டலின் கார் பார்க்கை நெருங்கியதும், "எங்கேடா ருஷ்ய மாஃபியா?" என்றான் பென்ஜமின், கிண்டலும் கோபமுமாக.

"இங்கே இல்லேன்னா ஏர்போர்ட்டில் காத்திருக்கலாம். அவசரப்பட்டு என்னைக் கொன்று விடாதே" என்றான் இன்பா.

"எனக்காகப் பிரத்யேக வாடகை விமானம் தயாராயிருக்கு. அது ருஷ்யர்களுக்குத் தெரியாது. பயணிகள் விமானப் பகுதியில்தான் ஒரு வேளை என்னை எதிர்பார்த்திருப்பாங்க."


"அவங்க உன்னை விடக் கெட்டிக்காரங்க" என்றான் இன்பா.

அதன் பலன், மண்டையில் துப்பாக்கியின் அடிவாரம் 'நச்'சென்று தாக்கியது. மண்டைக்குள் ஓராயிரம் மின்னல்கள் ஒரே சமயத்தில் இறங்கின.

கதவு திறந்து, "ஏறுடா" என்று வெண்டை வார்த்தையால் திட்டினான். "பென்ஜி! டிரைவ் பண்ணு!"


முன் ஸீட்டிலேயே மூன்று பேர். இன்பா மையத்தில். இடுப்பில் துப்பாக்கி முனையின் உறுத்தல். பென்ஸ் வழுக்கிப் போனது; வேகமெடுத்தது.

இன்பா விழிகளை மட்டும் திசை திருப்பி, கை கடிகாரம் பார்த்தான். ஜான் கார்மிக் பத்துப் பதினைந்து நிமிஷ அவகாசம் கேட்டிருந்தான். கூடுதலாக ஓர் ஐந்து நிமிஷம் தர முடிந்தாலும் நல்லதே. பின்நோக்கி செலுத்தப்படும் ரயில், சிறியதொரு ஸ்டேஷனை அடைய, பயணிகள் எல்லோரையும் இறக்கி, பஸ்ஸோ லாரியோ கிடைத்த வாகனத்தில் ஏற்றி அனுப்புவார்கள். அந்த வட்டாரத்து மக்களும் ஆபத்து உணர்த்தி வெளியேற்றப்படுவார்கள். ஒரு



மைல் சுற்றளவுக்கு மனித வாடையே கூடாது. யுத்த முனைப்புடன் புயல் வேகத்தில் காரியங்கள் அநேகமாக நடந்து முடிந்திருக்கும்...

காரின் டேஷ் போர்டில் சிகரெட் லைட்டர் கண்ணில் தென்பட்டது. அதை அழுத்தி விட்டால், சில வினாடிகளில் சூடேறி சிவக்கும். இருவர் கவனமும் சாலையில் இருக்க, விரல் நீட்டி லைட்டரை 'ஆன்' செய்தான். விழிகளை வலப்புறம் செலுத்தி பென்ஜமின் தன் பக்கத்துக் கதவை 'லாக்' பண்ணவில்லை என்பதையும் கவனித்துக் கொண்டான்.




சற்றுத் தொலைவில் நாற்சந்தியில் பச்சை, மஞ்சளாயிற்று. "நின்று போ! இத்தனை ஆபத்துக்களுக்கு உட்பட்டு பணம் குவித்த பிறகு, அந்தச் செல்வத்தை அனுபவிக்காமல் ஒரு சாலை விபத்தில் நான் சாக விரும்பவில்லை" என்றான் சூர்யா.

சிவப்புக்கு மரியாதை காட்டி, கார் வேகம் தணிந்து நின்றது.

அதே கணத்தில் இன்பா சிகரெட் லைட்டர் உருவி, சூர்யாசுவாமி கரத்தில் வைத்து அழுத்த, தோல் எரிந்து, புகைந்து, துர்நாற்றம் எழ, 'ஆ' என்ற அலறலுடன் சூர்யா சுவாமி வலக்கரத்தை இடக்கரத்தால் பற்றிக் கொண்டு உயர்த்த, துப்பாக்கி குறி விலகியது. இடி விழுவது போல் இன்பா பென்ஜமினை வலது தோளால் தாக்கினான்.

பென்ஜி கதவு மீது மோத, அது திறந்து கொண்டு அவனையும் கீழே இழுத்துக் கொண்டது. இமைக்கும் நேரத்தில் இன்பா சாலையில் கிடந்த பென்ஜமின் மீது பாய்ந்து விழுந்து, உருண்டு எழுந்து ஓடினான்.

அவன் கதவுக்கு வெளியே பாய்வதைப் பார்த்து, புரள்





வதைக் காணாத சூர்யாசுவாமி, வேதனையுடன் கை இறக்கி, கண்மூடித்தனமாகச் சுட்டான். குண்டுகள் பென்ஜமின் உடலைத் துளைக்க, அலறித் துடித்து அடங்கினான், அந்த விசுவாச ஊழியன்.

இதற்குள் இன்பா ஓட்டமெடுத்திருந்தான். ஸீட்டில் நகர்ந்து, டிரைவர் இடத்துக்கு மாறி, இன்பா நோக்கி குறிபார்ப்பதற்கு முன், அவன் பல வரிசைக் கார்களைக் கடந்திருந்தான். ஆவேசத்துடன் புறப்பட்ட புல்லெட்டுகள் நாலைந்து கார்களில் பட்டுத் தெறித்து, உலோகச் சத்தம் எழுப்பின. சாலையில் சிலர் பீதியுடன் திரும்பி, குழப்பக் கூச்சல்கள் எழுப்பினார்கள். இந்தக் கொலை பாதகத்தைக் கவனியாத பலரும், பார்த்தும் வம்பில் சிக்கிக் கொள்ள விரும்பாத சிலரும், சிவப்பு மறுபடி



"அந்த ஹோட்டல் மெனுவெல்லாம் புதுமையா. வித்தியாசமா இருக்குன்னு சொன்னியேன்னு போனது தப்பாப் போச்சு!"

"ஏன், பிடிக்கலையா?"

"ஊஹூம். ரொம்பப் புதுமையா, காசு இல்லாம சாப்பிட்டதுக்கு அரைச்ச மாவைக் கொடுத்து அரிசியாக்கித் தரச் சொல்றாரு!"

- பாஸு

பச்சையாக மாறியதும், முன்பக்கக் கார் நகராததால் கோபமுற்று, ஹாரன் ஒலித்து, அமர்க்களப்படுத்தினார்கள்.

"பென்ஜி! பென்ஜி!" என்று அழைத்தான் சூர்யாசுவாமி. காரிலிருந்தபடியே குனிந்து உடலை உயர்த்தினான். தலை தொய்ந்தது.

சூர்யாசாமிக்குக் கூட கண்களில் நீர்த்திரை படர்ந்தது. என்றாலும் தப்புகிற ஆர்வமே தலைதூக்க, கதவு சாத்தி, காரைச் செலுத்தினான். நாற்சந்தி கடந்து, நாலுலேன் சாலையில் ஹித்ரோ நோக்கி வேங்கை வேகத்தில் பாய்ந்தது பென்ஸ்.

விமான நிலையத்தின் கண்ட்ரோல் டவர் தொலைவில் தெரியத் தொடங்கிய சமயம், சாலையை மறித்து போலீஸ் கார்கள் நின்றன. அவற்றின் பின்னாலிருந்து ஸ்டென் கன்கள் எட்டிப் பார்த்தன. ரேடியோ செய்தி அவர்களை அங்கு தருவித்து அணி வகுத்திருக்க வேண்டும்.

சூர்யாசுவாமியின் கால், பிரேக் அழுத்த, டயர்கள் கீரிச்சிட்டன. "அரைவேக்காட்டுப் பசங்களா!" என்று ஆரம்பித்து, பன்மொழி நாமாவளிகளில் அர்ச்சனை செய்தான். துஷ்டசகஸ்ரநாமம் பிறந்தது.

காற்றை வெட்டிச் சுழலும் ஹெலிகாப்டர் விசிறியின் 'சடக், சடக்' ஒலி நெருங்கி வந்து அடங்க, ஜான் கார்மிக் இறங்கினான்.

"சூர்யா! சரணடைந்து விடு!" என்று ஒலி பெருக்கியில் பேசினான். "சன்னல் ரயிலை பின்நோக்கிச் செலுத்தி, ஒரு சின்ன ரயில் நிலையத்தில் நிறுத்தி விட்டோம். பயணிகளை இறக்கி அப்புறப்படுத்தியாகி விட்டது. சுற்று வட்டார மக்களும் வீடு வாசல் துறந்து, பாதுகாப்பான இடத்துக்குப் போய் விட்டார்கள். இனி குண்டு வெடித்தாலும் பயமில்லை. உனக்கு ஆதாயமில்லை. கடலடி டன்னலுக்குச் சேதம் உண்டாகாது."

காரை விட்டு இறங்கி, "நீ பாதி உண்மையைத்தான் சொல்கிறாய்" என்று கத்தினான் சூர்யாசுவாமி. "பிரெஞ்சு அரசாங்கம் உலகக் கண்டனத்தைப் புறக்கணித்து, பசிபிக் மகா கடலில் 'பிகினி அடால்' பகுதியில் பிரும்மாண்டமான அணுகுண்டு சோதனை நடத்தும். ஆனால் உள்நாட்டில் ஒரு மினி அணுகுண்டு வெடிப்பதைக் கூட விரும்பாது. மக்களின் கோபத்துக்கு பயப்படும். கதிரியக்கம் பரவுதலைத் தடுக்கவே முயற்சி செய்யும். இன்னும் ஒரு நிமிஷத்துக்குள் எனக்கு நீ வழி விடாவிட்டால் இப்போது அந்த ரயில் நிற்கும் ஊர் சுடுகாடாக மாறும்!"

கடைசி முயற்சியாகத் தான் நடத்திய ஒரு நாடகமும் தோற்று விட்டதை உணர்ந்தான் ஜான் கார்மிக். "ஜெயிச்சுட்டே ஸான்ரோக்கோ! நீ போகலாம்" என்றான். போலீஸ் கார்கள் உறுமின. போக்குவரத்துக்கு வழி விட்டு நகர்ந்தன.

கர்வப் புன்னகை மலர, சூர்யாசுவாமி காரைக் கிளப்பினான். "இப்ப மட்டுமில்லே, நான் எப்பவுமே ஜெயிக்கிறவன்டா,...." என்று அசிங்க வார்த்தை உதிர்த்தான்.

பென்ஸ், ஹீத்ரோவை அடைந்து, தனி நபர் விமானங்கள் போக்குவரத்துக்கான பிரத்யேகப் பகுதிக்குப் போனது. இறங்கி, கதவை அறைந்து விட்டு, பிரீஃப்கேஸ் ஒரு கரத்திலும் துப்பாக்கி, ஓவர் கோட்டின் பெரிய பாக்கெட்டில் மறைவாக ஏந்தியும் நடந்தான். யாரும் தடுக்கவில்லை. 'ஏன், எதற்கு' என்று கேட்கவில்லை. ஸ்காட்லாண்ட் யார்ட், 'ஆபத்தான மனிதன் என்று ஏற்கெனவே எச்சரிக்கை மணி அடித்திருக்கும்' என்று எண்ணி கர்வம் கொண்டான். கஸ்டம்ஸ், செக்யூரிடி எல்லாம் தாண்டிச் சென்றதும் தானியங்கு

முறையில் திறந்து கொண்டது கண்ணாடிக் கதவு. வெளியே அவன் வாடகைக்கு எடுத்திருந்த பிரத்யேக செஸ்னா விமானம், ஜெ.ஜெ. 999 என்ற எண் தாங்கி பளபளத்து நின்றது. இவன் வரக் கண்டதும் அதன் இஞ்சின் கர்ஜிக்க ஆரம்பித்தது. சீருடை தரித்து படிகளின் அருகே நின்ற ஒருவன், "ஸான்ரோக்கோ?" என்று வினவினான்.

"ஆமாம்."

"நான் ஹண்டர். ஆலன் ஹண்டர். துணை பைலட்."

"ஓ.கே. போகலாம். சீக்கிரம்" ஆலனுக்கு முதுகு காட்டி படிகளில் அவசரமாக ஏறினான், சூர்யாசுவாமி.

பின்தொடர வேண்டிய ஆலன் துப்பாக்கி எடுத்தான். "ஸான் ரோக்கோ! உன்னுடைய போதைப் பொருள் வர்த்தக சாம்ராஜ்யத்தை ருஷ்ய மாஃபியா இன்று முதல் தனதாக்கிக் கொள்கிறது" என்றான்.

சூர்யாசுவாமி சிலையானான். புல்லெட்டுகள் பாயக் காத்திருந்தான்.

பாய்ந்தன. ஒன்று, இரண்டு, மூன்று. சரிந்து விட்ட ஸான்ரோக்கோவை மிதித்துக் கடந்து, ரேஸ் குதிரை வேகத்தில் படியேறி விமானத்தினுள் புகுந்தான், ஹண்டர். கதவு சாத்தப்படும் போதே விமானம் நகரத் தொடங்கி, வேகம் எடுத்து, மேலெழும்பி விண்ணை அளந்தது.

துப்பாக்கி சத்தம் கேட்டு சில தலைகள் எட்டிப் பார்க்க, வேறு சிலர் ஓடி வந்தார்கள். கீழே விழுந்து கிடந்த சூர்யாசுவாமி வேதனை பொறுத்துத் திரும்பி, 'கிட்ட நெருங்காதே' எனும் பாவனையில் இடக்கரத்தால் துப்பாக்கி காட்டினான். வலக்கரத்தால் பிரீஃப்கேஸ் திறந்து மிகுந்த பிரயாசைப்பட்டு சங்கேத மொழி தட்டினான்.

ஃபிரெஞ்சு மண்ணில், 'லா ஷாடலேன்' ஸ்டேஷன் இருந்த இடத்தில் பிரும்மாண்ட பள்ளம் தோன்றியது. அதனுள் தவிடுபொடியான ஸ்டேஷன் இடிபாடுகளும் ரயில் பாகங்களும் சரிந்து விழுந்தன. புகை மண்டலமும் தூசு மண்டலமும் ஒருசேர எழுந்து உயர்ந்து, உயர்ந்து ஒரு கரும் பூதமாக வானில் குடை விரித்தன. நாலாபுறமும் கதிரியக்கம் பரவ ஆரம்பித்தது. சூர்யாசுவாமியின் ஆவி உடலை விட்டு வெளியேறி, கொடூரச் சிரிப்புடன் வாயு மண்டலத்தில் கும்மாளமிட்டது.


போலீஸ் காரை வாசலில் நிறுத்தி விட்டு ஓட்டமாய் ஓடி வந்த ஜான் கார்மிக், "டூ லேட், அணுகுண்டு வெடித்து விட்டது" என்றான். "பரவும் கதிரியக்கத்தைக் கட்டுப்படுத்துவது தான் இனி முதல் வேலை" என்று ரேடியோவில் தகவல் கொடுத்தான்.

இன்னொரு போலீஸ் காரில் இன்பாவையும் இழுத்துப் போட்டுக் கொண்டு புயலாக வந்து சேர்ந்த ஜேம்ஸ் பிளாக், "கடைசியில் ருஷ்ய மாஃபியா வந்து சேர்ந்தே விட்டது; அதனுடன் போராடுவதுதான் அடுத்த வேலை" என்றான்.

"இரண்டுமே உங்கள் தலைவலி. பெஸ்ட் ஆஃப் லக். நான் வந்த வேலை முடிந்தது" என்றான் இன்பசாகரன். "மனைவியை அழைத்துக் கொண்டு ஊர் போய்ச் சேருகிறேன்."

இரண்டு நாட்கள் லண்டனைச் சுற்றிப் பார்த்தார்கள்.

மேடம் டுஸாண்டில் இந்திரா காந்தி, ராஜீவ் மெழுகு பொம்மைகள் இவர்கள் பார்க்க வென்றே புதிதாக நிறுவப்பட்டன போல் தோன்றின. விக்டோரியா ஆல்பர்ட் மியூஸியத்தில் திப்புவின் பொம்மைப் புலியும் அது ஆங்கிலேய வீரனை அடிக்கும் போது எழும் கர்ஜனை ஒலியும் இவர்கள் வேடிக்கை



''சிறு சேமிப்பு'ங்கறதை அந்த ஆள் தப்பாப் புரிஞ்சுக்கிட்டிருக்கார்.''

''எப்படி?''

''முப்பது வருஷத்தில் இருபது ரூபாய்தான் சேமிச்சிருக்கார்!''

–வெ. ராஜாராமன்

பார்க்கவே இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு இன்னும் இயங்குவதாகத் தோன்றியது. நைட் கிளப்புகள் நிறைந்த ஸோஹோ பகுதியில் விலைமாதர்கள் அழைப்பதைக் காண வேடிக்கையாக மட்டுமின்றி அனுதாபத்தையும் ஏற்படுத்தியது சாயாவுக்கு. "ஹூம் தப்பித் தவறி எவனாவது அகப்பட்டுக் கொண்டால், ஊர் திரும்பக் கூட காசு விட்டு வைக்க மாட்டார்கள். 'ஐயோ பாவம்' இவர்களில்லை, இவர்களிடம் சிக்கியவர்கள்தாம்" என்றான் இன்பா. "அனுபவம் பேசுகிறதா?" என்று கேட்டுச் சிரித்தாள், உற்சாகமாக. தியேட்டர் ஒன்றில் நாற்பது வருஷங்களாகத் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கும் "மௌஸ் டிராப்" நாடகம் பார்த்துச் சிலிர்த்தார்கள். பிக்கடல்லி சதுக்கத்தின் கண் சிமிட்டும் வண்ண விளக்குகள் வாழ்த்தி வழி அனுப்பின.

மறுநாள் தேம்ஸ் நதியின் உல்லாசப் படகு பயணம், பல சரித்திர நிகழ்ச்சிகளையும் நிகழ் கால விநோதங்களையும் கண்டு ரசிக்க வைத்

தது. லண்டன் டவர் பாலம், உயர்ந்தும் தாழ்ந்தும் கப்பல்களுக்கும் சாலை வாகனங்களுக்கும் மாறி மாறி வழிவிடுவதைக் கண்டு பிரமித்தார்கள். பக்கிங்ஹாம் அரண்மனை வாசலில் சிலையாக நிற்கும் காவலர்கள் கண்ணிமைக்கிறார்களோ என்று காத்திருந்து பார்த்தார்கள். டிரஃபால்கர் சதுக்கத்தில் புறாக்களுக்குக் கடலை தூவி, நடைபாதைக் கலைஞர்களிடம் தங்கள் அரவணைப்பை வண்ண ஓவியமாக்கிக் கொண்டார்கள். லண்டன் டவரில் வைர, வைடூரியங்கள் பதிக்கப் பெற்று ஜொலிக்கும் அரச குடும்பத்தின் பரம்பரை ஆபரணங்களையும் கிரீடங்களையும் பார்த்து வாய் பிளந்தார்கள்.

"ஆளுக்கு ஒன்றாக கிரீடம் அணிந்து கொள்வோமா?" என்றாள்.

"வேண்டாம். அப்புறம் டயானா – சார்ல்ஸ் ஆகி விட நேரலாம். இன்பா – சாயாவாகவே இருப்போம்" என்றான்.

அவசர ஷாப்பிங் செய்து அளவாகச் சில பரிசுப் பொருள்கள் வாங்கிக் கொண்டு, செயிண்ட் பால்ஸ் கதீட்ரல், நெ. 10, டௌனிங் தெரு, பார்லிமெண்ட் கட்டடம், அதன் உச்சியில் பிக்பென் கடிகாரம், ஹைட்பார்க்கின் பசுமை என்று களைத்துக் கால் கெஞ்சும் வரை சுற்றி விட்டு, நிமிஷத்துக்கு ஒரு விமானம் ஏறி இறங்கும் ஹீத்ரோவில் பிரிட்டிஷ் ஏர்வேஸ் விமானம் ஏறிய போது "அப்பாடா" என்றிருந்தது.

இதற்குள் பாரிஸிலிருந்து தகவல் கிடைத்திருந்தது : ஒரே ஒரு கால் ஊனமுற்ற பயணியைக் கூட சக பயணிகளின் கருணை காப்பாற்றி விட்டது. அனைவரும் தப்பி விட்டனர். 'லா ஷாடலேன்' ஊரும் சுற்று வட்டாரமும் தனிமைப்படுத்தப்பட்டு மாற்றுப் பாதையில் ரயில்கள் போக ஏற்பாடுகள் நடக்கின்றன....

சென்னை விமான நிலையத்தில் இவர்கள் இறங்கிய போது, அமெரிக்கா செல்ல ஏர் இந்தியாவில் ஏறத் தயாராக அனுபமா காத்திருந்தாள்.

"கங்கிராட்ஸ், அனு! தைரியமாப் போயிட்டு வா. அஞ்ஞான வாழ்க்கைல ஏற்பட்ட சில ஏமாற்றங்களை விஞ்ஞான உலகம் ஈடுகட்டிடும்" என்றான் இன்பா.

"யார் கண்டது? அந்த விஞ்ஞான உலகத்துல எத்தனையோ புதிய மனிதர்களைச் சந்திக்கப் போறே. காதலின் ரசாயனம் பற்றியும் நீ ஆராய நேரிடலாம்" என்றாள் சாயா.

"சந்தேகமே வேண்டாம். நிச்சயம் அப்படித்தான் நடக்கும்" என்றாள் ரஸியா.

"இந்த மாடர்ன் கிளியோபாட்ராவைக் கேளு! காதல் சம்பந்தமா சகலமும் அத்துப்படி!" என்றான் சின்னி.

எல்லோரும் குபீரென்று சிரிக்க, அனுபமாவும் அடக்க மாட்டாமல் கலந்து கொண்டாள். அந்த நகைப்பில் அவளுடைய சில பல ஏக்கங்கள் கரைந்து மறையும் என்ற நம்பிக்கை இன்பாவுக்கு ஏற்பட்டது.

இரண்டு மாதங்கள் சென்று உதகையில் ஒரு சின்ன ஹாலிடேக்கு வந்திருந்தார்கள். சூர்யாசுவாமியின் ஆசிரமம் களையிழந்து இருண்டு கிடந்தது. அரசு கையகப்படுத்திய அரண்மனையொத்த அந்த பங்களாவில் பூமி மட்டத்தின் கீழே இருந்த போதைப் பொருள்கள் சுட்டெரிக்கப்பட்டன. டி.ஐ.ஜி. மருதகாசியையும் இன்னும் சில அதிகாரிகளையும், அமைச்சர்களையும் கூட குற்றவாளிகளாக்கும் சாட்சியங்கள் மயில்வாகனத்துக்குக் கிடைத்திருந்தன. சி.பி.ஐ. உரிய நடவடிக்கை எடுத்திருந்தது. வழக்குகள் வருஷக்கணக்கில் இழுக்கடிக்கும். ஆனால் ஸ்விஸ் வங்கிகளில் சூர்யாசுவாமி போட்டிருந்த லட்சக்கணக்கான டாலர்களோ அவன் உயிர் பிரிந்த அந்த வினாடியே ருஷ்ய மாஃபியாவின் லாபமாகி விட்டது!

ஏரிக்கரைச் சாலையில் காலாற நடந்த போது, இடையில் நின்று இன்பாவின் தோளில் சாய்ந்து, "என்னமோ மாதிரி இருக்குங்க" என்றாள் சாயா.

"ஏன்? ஏன்? என்ன? என்ன?" என்று கரிசனத்துடன் துடித்தான் இன்பா.

"போகப் போகத் தெரியும்; நாளாக ஆக உறுதிப்படும்" என்று அவன் கரத்தை அடிவயிற்றில் வைத்துப் பொத்தினாள்.

"அடி சக்கை! பெண்ணாயிருந்தால் ரைன் நதி நினைவாக ரம்யா; ஆணாக இருந்தா மைன் நதி நினைவாக மெய்யப்பன்!" என்றான்.

(முற்றும்)



"நம்ம ஏட்டையாவோட பாழாப்போன தொலைநோக்குச் சிந்தனையால பல சமயங்கள்ல நமக்கு நியாயமாச் சேர வேண்டிய மாமூல் கிடைக்காமலே போயிடுதுப்பா!"

"எப்படி?"

"நாளைக்கு எம்.எல்.ஏ.வா, வாரியமா, மந்திரியா வரப் போறவங்ககிட்ட ரொம்ப நச்சரிக்காம, கண்ணியமா நடந்துக் கோங்கிறார்!"

– நாகலை இளவல்

வட்டமேஜை

● "போக்ரானில் மீண்டும் அணுகுண்டு?..." தலையங்கம் படித்தேன். "எந்தவொரு அரசாங்கத்தின் நோக்கமும் அண்டை நாடுகளுடன் நேசமும் ஒப்புரவும் வளர்ப்பதாக அமைய வேண்டும்" என்று நீங்கள் குறிப்பிட்டிருப்பது பாகிஸ்தானுக்கு மிகவும் பொருத்தமான அறிவுரை. பாகிஸ்தான், சீனா போன்ற நாடுகளைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு நாம் கையைக் கட்டிக் கொண்டு இருந்துவிட முடியாது. சீனா, அமெரிக்கா போன்ற நாடுகள் ஹைட்ரஜன் மற்றும் நியூட்ரான் குண்டுகள் தயாரிக்கும் ஆற்றல் பெற்று விட்டன. ரஷ்யாவும் சிதறிவிட்ட சூழ்நிலையில் உலக நாடுகளை அடிமைப்படுத்த நினைக்கும் அமெரிக்காவுக்கு நாம் பணிந்து விடக் கூடாது.

தஞ்சாவூர், வெ. முருகானந்தம்.

● ராஜீவ் மேனனின் பேட்டி யதார்த்தமாகவும் வெளிப்படையாகவும் இருந்தது. அவர் குறிப்பிட்டிருந்த மாதிரி எழுத்தாளர்களுக்கும் திரையுலகினருக்குமுள்ள திரை விலகினால்தான் தமிழில் நல்ல தரமான படங்களை எதிர்பார்க்க முடியும். அதுவரை நம் தமிழ் திரைப்பட தயாரிப்பாளர்கள் லாஜிக் பற்றி கவலைப்படாது தாலி சென்டிமெண்ட், மாரியாத்தா டான்ஸ், ரத்தம் தெறிக்கும் சண்டைக் காட்சிகள் என்றுதான் படமெடுப்பர். வெல் மேனன்! நீங்களாவது ரசிகர்களைப் புரிந்து கொண்டு நல்ல திரைப்படங்களைத் தருவீர்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

சேலம் – 1, கே. பாலசுப்ரமணியம்.

● காலத்தை அனுசரித்துப் போவது புத்திசாலித்தனம் என்று மெகா தயாரிப்பாளரான சரவணன் அவர்களே சொல்லும் போது ஜுஜுபி தயாரிப்பாளர்கள் எல்லாம் எம்மாத்திரம்?

தூத்துக்குடி – 1, எஸ். ராமசுப்பிரமணியன்.

● 'வெல்வெட்டு ஆடையும் கல்வெட்டுப் பார்வையும் புல்மொட்டு நீர் போலப் புதுப் புன்னகையுமாக...' ஆகா... ஜில்லிட்டு உம்மை எழுத வைத்த கவிதை நாயகி காஜோலுக்கு ஜே!

பொன்மலை, ஆர். பிரகாஷ்.

ரூ. 10 பரிசு பெறும் கடிதங்கள்

● 'கையைக் கடிக்கும் காலணிகள்' தலைப்பே 'ஷூப்பர்!' கட்டுரை படிக்க 'ஷூ'வாரசியமாக இருந்தது!

அயன்புரம், த. சத்தியநாராயணன்.

● செருப்புத் திருடர்களிடம் இருந்து தப்பிக்க... காலணிகளைப் பூட்டி வைக்கும் வசதியோடு வந்தால் இன்னும் நன்றாக இருக்கும். உற்பத்தியாளர்கள் கவனிப்பார்களா?

திட்டக்குடி, அ. சரவணராசன்.

● "தொட்டாச் சிணுங்கி"– பட விமர்சனம் படித்தேன். "இயக்குநர் முதல் இசையமைப்பாளர் வரை பல புதியவர்கள்"– சரி, ஆஸ்திரேலியாவில் இருந்து வந்திருக்கும் பிலிப்-ஜெர்ரியின் இசைத் திறமை பற்றி ஒரு வரியாவது விமர்சனத்தில் இருக்கும் என்று பூதக் கண்ணாடி வைத்து தேடிப் பார்த்தேன். ஏமாற்றம் தான்!

வேலூர் – 7, பா.வை. சுவாமிநாதன்.

● "நேர்மை என்பது சொக்கத் தங்கம். அதில் ராஜதந்திரம் என்ற செம்பை சரியான விகிதத்தில் கலந்தால் நல்லாட்சி என்னும் உயர்ந்த நகையை உருவாக்கலாம்" என்ற தராசு பதில், 24 காரட் தங்கத்தில் உருவான 'பொன்மொழி'. ரசித்து நினைவில் வைத்துக் கொள்ளத் தூண்டியது.

சென்னை – 34, ச. நாகரத்தினம்.

● "சப்தமும் நாதமும்" சிறுகதை யதார்த்தமாக இருந்தது.

சென்னை – 90, கலாசர்மிள்டா.

● 'இருட்டுக்குள்ளே...' கவிதை, வெளிச்சத்திலே தள்ளிவிட்டது. வெளிச்சமாக்கிய கவிதையாளருக்கு நன்றி.

கொரட்டூர், நா. சுதேசி.

● 'யுத்தம்' நமக்குத் தீமை வரும்போது அதனைத் தைரியமாக எதிர்த்துப் போராட வேண்டும் என்ற நற்கருத்தை அழகுற இயம்பியது. 'ஜனனம்' பெற்றவர்களை உதாசீனப்படுத்தக் கூடாது என்பதை அறிவுறுத்தியது. அருமையான சிறுகதைகள்.

சென்னை – 39, அ.சு. கிருஷ்ணன்.

சொக்கத் தங்கத்தில் ஒரு பொன்மொழி!

தாய்மை

ஜெயந்தி வெறிபிடித்தது போல் பிழியப் பிழிய அழுதாள். சுப்ரமணியும் அழட்டும் என்று விட்டு விட்டான்.

"ஏம்ப்பா நமக்கு மட்டும் இப்படி! நாம யாருக்கு என்ன பாவம் பண்ணினோம்? கடவுள் ஏன் நம்மை இப்படி சோதிக்கிறார்? இப்ப குழந்தையை என்னப்பா பண்றது?"

"என்ன ஜெயந்தி இப்படிக் கேட்கிறே? நமக்குன்னு பிறந்த குழந்தையை, நாமதானே வளர்க்கணும்..."

"எப்படிப்பா முடியும்? ஒரு ஊனமுள்ள குழந்தையை நாம வளர்க்குறது எப்படிச் சாத்தியம்? அய்யய்யோ, இப்படி ஆயிடுச்சேன்னு அனுதாபப்படலாம். ஒருநாள் அல்லது ரெண்டு நாள் வச்சு பராமரிக்கலாம். அவ்வப்போது படிப்பு கூட சொல்லிக் குடுக்கலாம். ஆனால், வாழ்க்கை முழுக்க, ஒரு பார்வையில்லாத குழந்தை கூட எப்படிப்பா... ப்ளீஸ் நமக்கு வேண்டாம்."

"தப்பு ஜெயந்தி, நீ பேசுறது நிச்சயமா சரியில்ல. குழந்தை வேணாமின்னு அழிக்கப் போனவங்கள, நாமதான் கெஞ்சிக் கூத்தாடி நமக்காக பெத்துக்கச் சொன்னோம். இப்பக்

சுப்புராஜ்

குழந்தை ஊனமாயிருச்சு வேண்டாம்னு சொன்னா எப்படி? இந்தக் குழந்தையை பராமரிக்க, அவங்க குடும்ப நிலைமை தாங்காது. நமக்காக, நம்ம மேல உள்ள மரியாதையாலே அன்புனால... மறுபபு சொல்ல முடியாம, அவங்க இந்த ஏற்பாட்டுக்கு ஒத்துக்கிட்டாங்க... இப்ப வேண்டாம்னு சொல்றது நியாயமுமில்ல; தர்மமும் இல்ல. நீ இப்படிப் பேசறது தெரிஞ்சா சரோஜா மனசு என்ன பாடு படும்...?"

பக்கத்து போர்ஷனுக்கு, சரோஜாவும் மாரிமுத்துவும் குடிவந்த போது, ஜெயந்திக்கு ஒருசேர பொறாமையாகவும், பரிதாபமாகவும் இருந்தது - பொறாமைக்குக் காரணம், சரோஜாவின் அழகழகான இரண்டு பிள்ளைகள் - ஆறு வயதில் விம்மி என்கிற விமலா; முதல் வருஷம் முடிய ஒருசில மாதங்களே பாக்கியிருக்கும் சதீஷ்.

பரிதாபத்திற்குக் காரணம், இவ்வளவு சின்ன வயதில் - சரோஜாவிற்கு இருபத்தி இரண்டு அல்லது இருபத்தி மூன்று வயதுதான் இருக்கும். இரண்டு பிள்ளைகளுடன் போதிய வசதியின்றி அல்லாடும் அவளின் அவலம்.

மாரிமுத்து, இங்கிருந்து மூன்று கி.மீ. தூரத்திலிருந்த ரப்பர் தொழிற்சாலையில் மெஷின் ஆபரேட்டராக வேலை பார்த்தான். தினசரி கம்பெனிக்கு சைக்கிளில் போய் வந்து கொண்டிருந்தான்.

ஒரு நடுநிசியில் மாரிமுத்து நைட் ஷிஃப்டில் இருந்த போது, சரோஜா படபடப்பும் அழுகையுமாக வந்து நின்றிருந்தாள். விம்மிக்கு ஜுரம் அதிகமாகி கொதித்துக் கொண்டிருந்தது!

ஜெயந்தி குழந்தையை அள்ளிக் கொள்ள, சுப்ரமணி ஸ்கூட்டரில் ஏற்றிக் கொண்டு, டவுனுக்குப் போய், திறந்திருந்த ஒரு 24 மணி நேர ஆஸ்பத்திரியில் விம்மியைக் காட்டி சிகிச்சை முடித்து அழைத்து வந்தார்கள்.

தோளில் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த விம்மியை பாயில் படுக்க வைத்து, டாக்டர் கொடுத்த மருந்து மாத்திரைகளை சரோஜாவிடம் கொடுத்து விளக்க, அவள் அழுது விட்டாள்.

"என்ன சரோ இது குழந்தையாட்டமா..." - ஜெயந்தி அவளைத் தேற்றி விட்டு வந்தாள். அன்றிலிருந்து இரண்டு குடும்பங்களுக்குள்ளும் நேசம் சுடர் விட்டது.

விம்மியும் சதீஷும் அப்படி ஒரு அன்னியோன்யமாக ஜெயந்தியிடம் ஒட்டிக் கொண்டார்கள். ஒரு நாளின் பெரும்பாலான நேரங்களில் இவளுடனேயே இருந்தார்கள்.

தனக்கும் குழந்தை இல்லாத குறையைக் கூட ஜெயந்தி கொஞ்சம் மறக்க ஆரம்பித்தாள். இந்த நிலையில்தான் ஒரு திடீர் திருப்பம் ஏற்பட்டது.

வீட்டு வாடகையைக் கொடுத்து வருவதற்காக, ஜெயந்தி மாடிக்குப் போன போது சரோஜா வீட்டுக்காரம்மாளிடம் பேசிக் கொண்டிருந்தாள். அவளின் முகத்தில் வாட்டம்.

"ஏன் ஒரு மாதிரியா இருக்கே சரோ?" -

ஜெயந்தி கேட்க, வீட்டுக்காரம்மாள் பதில் சொன்னாள்.

"கடவுளோட விளையாட்டப் பாரும்மா! நீங்க குழந்தை வேணுமின்னு தவமோ தவம் இருக்கீங்க. உனக்கு கருவே தங்க மாட்டேங் தது. இவங்க, குழந்தை வேண்டாங்குறாங்க; ஆனா கடவுள் கொடுத்துக்கிட்டே இருக்கார். கொஞ்சம் முன்னெச்சரிக்கையா இருந்திருந்தா தவிர்த்திருக்கலாம். ஆனால் இப்பப் போய் கருவைக் கலைக்கறேன்னு அசட்டுத்தனமாச் சொல்றா..."

"இதுன்னா பத்துப் பதினைந்து நாள் வேதனையோட போயிரும்; குழந்தை பெத்துக்கிட்டா வருஷமெல்லாம் வேதனையாச்சே மாமி... ரெண்டு குழந்தைங்கள வளர்க்குறதுக்கே உயிர் போயிட்டு இருக்கு. இதுல மூணாவது குழந்தையா... நெனச்சுப் பார்க்கவே பயமா இருக்கு..." சரோஜா அழுது விடுவாள் போலிருந்தது.

"நல்லா யோசிச்சு முடிவு பண்ணிக்க..." என்று சொல்லி வீட்டுக்காரம்மாள் வீட்டிற்குள் எழுந்து போன போதுதான் ஜெயந்தியின் மனசில் அந்த யோசனை தோன்றியது. அன்றிரவே கணவனுடன் மீண்டும் சரோஜாவைப் பார்க்கப் போனாள் ஜெயந்தி. அவள் கைகளைப் பிடித்துக் கொண்டு, "எங்களுக்கு நீங்க ஒரு உதவி பண்ணணும்..." என்றாள்.

சரோஜாவும், மாரிமுத்துவும் ஒன்றும்





உனக்கு ஐம்பது நண்பர்கள் இருக்கிறார்களா?

அது போதாது.

உனக்கு ஒரே ஒரு விரோதிதான் இருக்கிறானா?

அது மிகவும் அதிகம்!

– இத்தாலியப் பழமொழி

– என். பங்கஜம்

புரியாமல் விழிக்க, ஜெயந்தியே தொடர்ந்து பேசினாள்.

"பீடிகை எதுவும் இல்லாம நேரா விஷயத்துக்கே வர்றேன். சரோ நீ இப்ப உன் வயித்துல உருவாகியிருக்கிற குழந்தையை பெத்துக்கணும். நல்லபடியா பெத்தெடுத்து எங்களுக்கு குடுத்துருங்க. நாங்க வளர்த்துக்கிறோம் எங்க பிள்ளையாக..."

திடீரென்று இவர்கள் இப்படி ஒரு தீர்மானத்தை முன்மொழியவும், சரோஜாவும் மாரிமுத்துவும் திணறினார்கள். என்ன சொல்வது என்று அவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை.

"இதுல யோசிக்கிறதுக்கு ஒண்ணுமில்ல. உங்களுக்கு வேண்டாமின்னு அழிக்க விரும்புகிற குழந்தையை, எங்களுக்கு தத்துக் கொடுத்துடச் சொல்றோம். அவ்வளவுதான். ப்ளீஸ். இந்த நிமிஷத்திலிருந்து குழந்தை பெத்தெடுத்து சரோஜா நல்லபடியா வீட்டுக்குத் திரும்பறது வரைக்கும் எல்லா செலவுகளையும் நாங்களே ஏத்துக்கறோம்..." கெஞ்சுகிற தொனியில் சுப்ரமணி பேசினான்.

கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும். சரோஜா, மாரிமுத்துவின் மனசுகள் கரைந்தன. இவர்களின் ஏற்பாட்டை முழு மனசோடு ஏற்றுக் கொண்டார்கள்.

அன்றைக்கிலிருந்து சரோஜாவை பூப்போல தாங்கினாள் ஜெயந்தி. அவளை அதிகம் வேலை செய்ய விடுவதில்லை. சாயங்காலங்களில் கடற்கரைக்கு வாக்கிங் அழைத்துப் போனாள். குங்குமப் பூவை வாங்கிக் குவித்தாள். குழந்தைகள் இரண்டிற்கும் ஜெயந்தியின் வீட்டில்தான் சாப்பாடு. சரோஜாவிற்கும் மாரிமுத்துவிற்கும் கூட பெரும்பாலான நாட்களில் இவளே சமைத்து அனுப்பினாள்.

எல்லாம் சரியாகத்தான் நடந்தது; சரோஜா கண் பார்வையற்ற ஒரு குழந்தையைப் பிரசவிக்கும் வரை...

"குழந்தையை ஏதாவது அனாதை விடுதியில நாமளே கொண்டு போய் சேர்த்துடலாமா...?" – ஜெயந்தி கேட்டாள்.

"அது இன்னும் மோசம் ஜெயந்தி. நீ ஏன் இப்படியெல்லாம் பேசுற; நீ இன்னும் ஒண்ணே ஒண்ணுதான் சொல்லலை. குழந்தையை கழுத்த நெரிச்சுக் கொன்னுடலாம்னுட்டு. அதையும் சொல்லிடு..." – ஜெயந்தி, சுப்ரமணியின் வாயை வந்து அவசரமாய்ப் பொத்தினாள்.

"நமக்கு இவ்வளவு சுயநலம் இருக்கக் கூடாது ஜெயந்தி. கடவுளோட அனுக்கிரகம் நாம ஒரு பார்வையில்லாத குழந்தையை வளர்க்குறதுன்னு இருந்தா அதையும் சந்தோஷமா ஏத்துக்குவோம். இப்படி ஒரு ஊனத்தோட நமக்கொரு குழந்தை பொறந்திருந்தா தூர எறிஞ்சுடுவமா என்ன?"


ஒருவழியாய் ஜெயந்தியை சுப்ரமணி சம்மதிக்க வைத்தான். அந்தக் குழந்தையை ஏற்க மறுத்து, தான் பேசிய பேச்சுக்களுக்காக ஜெயந்தியே வெட்கப்பட்டாள்.

ஆஸ்பத்திரி ரெஸ்ட் எல்லாம் முடிந்து சரோஜா குழந்தையைத் தூக்கிக் கொண்டு வீட்டிற்கு வரவும், ஒரு நல்ல நாளில், குழந்தையை தத்தெடுப்பதற்கான ஏற்பாடுகள் பற்றிப் பேச முற்பட்டார்கள். ஜெயந்தியும் சுப்ரமணியும் அணுகிய போது சரோஜா குழந்தையை நெஞ்சோடு இறுக்கிக் கொண்டாள்.

"என்னை மன்னிச்சுருங்க. சாதாரண குழந்தைங்களை விட இந்தக் குழந்தை எனக்கு ரொம்ப முக்கியம். இவன் வளர்ந்தப்புறம், உண்மையான தாய் நான்தான்னு தெரிஞ்சா, அவன் மனசு என்ன பாடுபடும்! 'நான் குருடாயிட்டேன்னுதானே நீ வளர்க்காம தூக்கிக் கொடுத்துட்டே'ன்னு கேட்டா, என்னால தாங்க முடியாது! எனக்கு சொல்லத் தெரியலே. ஒரு தாயையும் குழந்தையையும் பிரிச்ச பாவம் உங்களுக்கு வேணாம். உங்க வயித்துலயே சீக்கிரம் ஒரு குழந்தை உருவாக நானும் வேண்டிக்கறேன். என்னை மன்னிச்சுருங்க..."

மாரிமுத்துவும் சரோஜாவை ஆதரிப்பவனாக அமைதிகாக்க, அவள் கையெடுத்துக் கும்பிட்டாள்.

அதெல்லாம் அந்தக் காலம்



அந்தக் காலம் -

கள்ளச் சாராய வியாபாரி வேலுச்சாமிக்கு வயிற்றில் புளியைக் கரைத்தது. சுத்தமாக நம் பொழைப்பிற்கு மண் விழுந்து விடுமோ என்று கலங்கிக் கொண்டிருந்தான்...! அவன் ஆசையோடு வளர்த்த வள்ளி - அவனது ஒரே செல்ல மகள் அப்படியொரு பெரிய குண்டைத் தூக்கிப் போட்டாள்.!

தாயில்லாத பெண் என்று அவள் மீது உயிரையே வைத்திருந்தான் வேலுச்சாமி...

அவளோ அவளது காதலன் கந்தப்பன் மீது உயிரை வைத்திருந்தாள்....

"ஏம்மா குழந்தை.... என்னைப் பத்தி.. என் தொழிலப் பத்தி உனக்கே தெரியும். அப்படியிருக்க, போயும் போயும் ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டரைக் காதலிப்பதாகச் சொல்றியே... இது எப்படியம்மா முடியும்....?"

"..............................."

"ஏம்மா பேசாம இருக்கே. சொல்லுமா.. போலீஸ்காரன் சகவாசம் நமக்கு சரிப்பட்டு வருமா....?"

"அப்பா... நீங்க இந்தத் தொழிலை விட்டுடுங்க..."

"தொழிலை விட்டுடறதா? என்னை நம்பி எத்தனை ஜீவன்கள் இருக்கு... இந்தத் தொழில விடணும்னா நான் செத்தாத்தான் முடியும்...."

எந்த வாக்குவாதமும் வள்ளியிடம் எடுபடவில்லை. தனது கள்ளச்சாராயமும் அந்த காக்கிச் சட்டையும் எதிரும் புதிருமாச்சே. தன் அன்பு மகள் இப்படிச் செய்து விட்டாளே என்ற ஒரே ஏக்கம் - திகில்.. இதனை நினைத்து நினைத்து இடிந்து போன வேலுச்சாமி படுக்கையில் விழுந்தவன்தான்... மீண்டும் எழுந்திருக்கவே இல்லை!

அப்பாவின் மரணத்திற்குப் பிறகு வள்ளி தான் காலித்த அந்த இன்ஸ்பெக்டரையே மணந்து கொண்டு வேறு ஊருக்கும் சென்று விட்டாள். வேலுச்சாமியின் கள்ளச் சாராய வியாபாரத்தை அவனது சித்தப்பா மகன் பாலு எடுத்துக் கொண்டான்.

கள்ளச் சாராயம், கடத்தல் என்று தொழிலில் கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறிய பாலு சென்னைக்கு வந்து விட்டான்.

இது இந்தக் காலம்....

தன் மகள் மங்களத்திற்கு ஒரு நல்ல வரனைத் தேடிக் கொண்டிருந்தான் பாலு....

"அப்பா... எனக்கு இப்ப கல்யாணம் வேணாம்."

"என்னம்மா சினிமாவுல வர மாதிரி பேசறே...."

"சினிமாவும் சில விஷயங்களில் நடப்பதைத்தானே காட்டுகின்றது."

"சரி விடு... உனக்கு ஏன் கல்யாணம் வேணாம்?"

"அது வந்துப்பா... நான்.... நான் ஒருத்தரை விரும்பறேன்...."

"ஓ... அவ்வளவு தூரத்துக்கு வந்துட்டியா? யாரவன்...."

"அவர் பேரு குமார்...."

"குமார்னா உலகம் முழுவதும் தெரிஞ்சுடுமா....? அவன் யாரு...? என்ன பண்றான்? அவன் ஜாதி, அந்தஸ்து எல்லாவற்றையும் சொல்லித் தொலை...."

"அவர் நம்ம ஜாதி இல்லையப்பா. அவர் போலீஸ் இன்ஸ்பெக்டரா வேலை பார்க்கிறார்."

"என்ன போலீஸ் இன்ஸ்பெக்டரா....?"

"ஆமாம்ப்பா, சீக்கிரமே டெபுடி சூப்பிரண்டெண்ட்டா ஆகப் போறார்."

"சபாஷ் மங்களம். இனி நீ எதுவுமே சொல்ல வேணாம். அந்தக் குமார்தான் உன் புருஷன்."

"அப்பா நிஜமாகத்தான் சொல்றீங்களா?"

"ஆமாம்மா... என் மகளான நீ ஒரு கெட்டிக்காரப் பொண்ணு என்பதை நிரூபிச்சுட்டே. ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டரையே காதலிச்சு... நீ எனக்கு எவ்வளவு பெரிய உதவிய செய்திருக்கே தெரியுமா....? இனி ஒரு பயல் என்னிடம் வாலாட்ட மாட்டான். என் வியாபாரத்துக்கு இப்படியொரு பாதுகாப்புத் தேவைதான். இனி என் சாராயக் கோட்டைக்குள் ஒரு துரும்பு கூட நுழைய முடியாது...."

பாலு சந்தோஷத்தில் ஏதேதோ சொல்லிக் கொண்டே போனான்.

க. ஒப்பிலி அப்பன்

நரசிம்மராவ் தலைமையிலுள்ள மத்திய அரசு எப்போதாவதுதான் மாநில அரசுகளை மிரட்டும். மாநில அரசுகளும், பிரதமரின் அந்த மிரட்டல்களைக் கண்டுகொள்வதில்லை. ஆனால், "அக்டோபர் 2-க்குள் உள்ளாட்சித் தேர்தல்கள் பற்றிய அறிவிப்பு வெளியிட வேண்டும்; இல்லையேல் அரசியல் சட்டப்படி (கவிழ்ப்பு) நடவடிக்கை எடுக்கப்படும்" என்று மத்திய அரசு மிரட்டியதைக் கண்டு, 'எதற்கும் அஞ்சாத' ஜெயலலிதா அரசு குறிப்பிட்ட தேதிக்கு இரண்டு நாட்கள் முன்னரே உள்ளாட்சித் தேர்தல்களுக்கான அறிவிப்பை வெளியிட்டு விட்டது!

அவசரத்தில் – முழுமனது இல்லாமல் வெளியிட்ட அறிவிப்பு இது என்பதால் எதிர்க்கட்சிகளிடமிருந்து ஏகப்பட்ட விமர்சனங்கள்.

1988-ல் ராஜீவ் காந்தியால் கொண்டு வரப்பட்ட பஞ்சாயத்து மற்றும் நகர் பாலிகா சட்டத்தின் அடிப்படையில் நடக்கப் போகின்ற (?) தேர்தல் இது. இந்தச் சட்டப்படி உள்ள பஞ்சாயத்து அமைப்பு என்பது மூன்றடுக்குகளைக் கொண்டது. இது தமிழ்நாட்டுக்குப் பழக்கமில்லாதது. ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள் என்று இரண்டடுக்குக் கொண்டதுதான் இதுவரை தமிழ்நாட்டு அமைப்பு. இப்போது ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், மாவட்டப் பஞ்சாயத்து என்று மூன்றடுக்கு அறிமுகப்படுத்தப்பட்டு இருக்கிறது.

பஞ்சாயத்துராஜ் மசோதா அறிமுக நிலையிலேயே பாராளு மன்றத்தில் அதன் மூன்றடுக்கு முறையை தி.மு.க. எதிர்த்தது. காரணம், மாவட்டப் பஞ்சாயத்து என்பது அந்தக் கால மாவட்டக் கழகங்கள் (District Board) அமைப்பைப் பிரதிபலித்தவை.

டிஸ்ட்ரிக் போர்டு இருந்த போது நீதி, நிர்வாகம் இரண்டும் தான் கலெக்டர்கள் பொறுப்பில் இருந்தது. வளர்ச்சிப் பணிகள், மருத்துவம், கல்வி, மராமத்து ஆகியவை போர்டு பொறுப்பில் இருந்தன. ஆகையால் மாவட்டக் கழகத் தலைவர் தேர்தலில் பணபலம், ஜாதி, செல்வாக்கு ஆகியவை தாராளமாக விளையா

அ.தி.மு.க.வைப் பதற வைக்கும் பஞ்சாயத்துத் தேர்தல்!




டின. இதன் காரணமாக காமராஜர், மாவட்டக் கழக அமைப்பு களையே எடுத்து விட்டார்.

ஆனால் தி.மு.க. மாவட்டப் பஞ்சாயத்து அமைப்பை எதிர்க்கக் காரணம் இது மட்டுமல்ல; பஞ்சாயத்து ராஜ் சட்டப்படி, இனிமேல் மாவட்ட வளர்ச்சிக்கான நிதி, டெல்லியிலிருந்து நேரடியாக சம்பந்தப்பட்ட மாவட்டக் கலெக்டருக்கே ஒதுக்கப்பட்டு கலெக்டரால் மாவட்டப் பஞ்சாயத்துக்குக் கொடுக்கப்படும். அந்தப் பணத்துக்கான கணக்கையும் மத்திய அரசிடம் கலெக்டர் தான் சமர்ப்பிப்பார்.

இதுவரை மாநில அரசின் மூலமாகத்தான் நிதி பகிர்ந்தளிக்கப்பட்டு வந்தது. எனவே இந்தப் புதிய ஏற்பாடு என்பது மாநில உரிமைகளில் கை வைப்பதாகும் என்கிறது தி.மு.க.

இதில் அ.தி.மு.க.வின் நிலை என்ன? வழக்கப்படி இரட்டை வேடம்தான்! "பஞ்சாயத்து ராஜ் மசோதாவை நான் முழு மனத்துடன் ஆதரிக்கிறேன் இந்த மசோதாக்களால் மாநில அரசின் உரிமைகள் பாதிக்கப்படவில்லை" என்று 1989-ல் முழங்கினார்

அதன் பாராளுமன்றத் தலைவர் ஜி. சுவாமிநாதன். ஆனால் 1993-ம் ஆண்டு நமது சட்டமன்றத்தில் - கவர்னர் உரையில், ''மாநில அரசின் உரிமைகளைப் பாதிப்பதால் பஞ்சாயத்து ராஜ் மசோதாவை தமிழக அரசு வரவேற்கவில்லை'' என்று தமிழக அரசு கூறியுள்ளது.



இந்தப் பஞ்சாயத்து அமைப்பு முறைகள் பற்றிய சர்ச்சை ஒரு பக்கம் இருக்க, வெறும் ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்டப் பஞ்சாயத்து ஆகியவைகளுக்கு மட்டுமே தேர்தலை அறிவித்திருப்பதாய் எதிர்க்கட்சிகள் கண்டனம் தெரிவித்திருக்கின்றன. பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி, ஆகியவையும் சேர்ந்ததுதான் உள்ளாட்சி என்ற அமைப்பு. இதற்கான தேர்தலை அறிவிக்கவில்லை. ''நகரப் பகுதிகளில் அ.தி.மு.க. அரசுக்கு ஏற்பட்டிருக்கும் அவப் பெயர் காரணமாக இந்தப் பகுதிகளில் தேர்தல் நடத்த அ.தி.மு.க. அரசு அச்சப்படுகிறது'' என்று சொல்கிறார் தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் பரிதி இளம்வழுதி.

''காரணம், போதுமான ஆட்கள் இல்லை என்பதுதான்!'' என்று உள்ளாட்சித் துறை அமைச்சர் சொன்னாலும் ''அதெல்லாம் நொண்டிக் குதிரைக்குச் சறுக்கினது சாக்கு என்கிற கதைதானே தவிர, நிஜமான காரணம் அது இல்லை!'' என்கிறார் பண்ருட்டி ராமச்சந்திரன்.

அதே போல் வார்டுகளைப் பிரிக்கும் போது, ஆளும் கட்சிக்கு ஆதரவாகவே பிரித்து இருக்கிறார்கள் என்பதும் ஒரு குற்றச்சாட்டு. ''சென்ற சட்டமன்றத் தேர்தலில், அ.தி.மு.க.வுககுச் சரியான ஆதரவு காட்டாத இடங்களில் உள்ள வார்டுகளையும், தொகுதிகளையும், பெண்களுக்கும் ஆதி திராவிடர்களுக்கும் ஒதுக்கியிருக்கிறார்கள்'' என்று சொல்கிறார் வாழப்பாடி ராமமூர்த்தி.

கூடவே இன்னொரு வேலையையும் செய்தார் ஜெ. இந்தப் பஞ்சாயத்து தேர்தல் அறிவிப்புக்கு முன்னரே, தமது தொண்டர்களை மகிழ்விக்கக்கூடிய செய்தி ஒன்றை வெளியிட்டார். 'பஞ்சாயத்து, நகராட்சி ஆகிய உள்ளாட்சி நிறுவனங்கள் மக்கள் தேவைகளை அறிந்து சரியாகச் செயல்படுகிறதா என்பதைக் கண்காணிக்க அ.தி.மு.க. தொண்டர்களைக் கொண்ட கண்காணிப்புக் குழு அமைக்கப்படும்' என்று அறிவித்தார். ஏற்கெனவே பாக்கட் நிரம்பிய தொண்டர்களுக்கு ஏக குஷி. சம்பந்தப்பட்ட தொகுதிச் செயலாளர்களையும், சட்டமன்ற உறுப்பினர்களையும் பார்த்து, 'அண்ணே என்னைப் போடுங்க அண்ணே' என்று உருக ஆரம்பித்து விட்டார்கள் சில ''விவரமான'' தொகுதிச் செயலாளர்கள். கண்காணிப்புக் குழுவில் இடம்பெற்றால், உள்ளாட்சி அமைப்புகளின் தேர்தலில் சீட் சுலபமாகக் கிடைக்கும் என்பது தொண்டர்களின் எதிர்பார்ப்பு.

''ஆர்.எம்.வீயைத் தொடர்ந்து தொண்டர்கள் யாரும் கட்சியை விட்டுச் சென்றுவிடக் கூடாது என்ற பயத்தில் செய்த அறிவிப்புத்தான் இந்த கண்காணிப்புக் குழு'' என்கிறார் அ.தி.மு.க. தொகுதிச் செயலாளர் ஒருவர். ஆயினும் ஜெ. அறிவித்து விட்டாரே தவிர, பெரும்பாலான இடங்களில் இன்னமும் 'கண்காணிப்பு குழு' நியமிக்கப்படவில்லை.



அதற்குள் தேர்தல் அறிவிப்பும் வந்து விட்டது!

பெரும்பாலான எதிர்க்கட்சித் தலைவர்கள் 'தேர்தல் நடக்குமா?' என்று சந்தேகத்துடனேயே இருக்கிறார்கள். இருந்தாலும், ஒரு விஷயத்தில் அவர்கள் அனைவரிடமும் ஒற்றுமை இருக்கிறது. 'இந்தத் தேர்தல் அறிவிப்பை எதிர்த்து எந்தக் காரணம் கொண்டும் தமது கட்சிகளைச் சேர்ந்தவர்கள் வழக்குப் போடக் கூடாது' என்று எச்சரித்திருக்கிறார்கள். ஏனென்றால் அதையே காரணமாகக் கொண்டு வழக்கம் போல் அ.தி.மு.க. அரசு தேர்தலை ஒத்தி வைத்து விடுமே!

"எதிர்க்கட்சிகள் வழக்குப் போடாமல் போனால் என்ன? ஓர் ஆளைத் தயார் செய்து வழக்குப் போட வைக்க அ.தி.மு.க.வுக்குத் தெரியாதா என்ன?" என்று கேட்கிறார் வாழப்பாடி ராமமூர்த்தி. டிசம்பர் முதல் மற்றும், மூன்றாம் தேதிகளில் வாக்குப் பதிவு.

"பல்வேறு சிக்கல்களில் மாட்டியுள்ள ஜெ. அதுவரை பதவியில் இருப்பாரா?" என்ற சந்தேகங்களையும் எழுப்புகிறார்கள் எதிர்க்கட்சித் தோழர்கள்!

•

கடந்த 35 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் மூன்று முறைதான் உள்ளாட்சித் தேர்தல்கள் நடந்திருக்கின்றன. கடைசியாக 1986-ல் நடந்தது. அப்போது வார்டு உறுப்பினர், பஞ்சாயத்துத் தலைவர், ஒன்றியத் தலைவர் ஆகிய மூவரையும்தான் மக்கள் நேரடியாகத் தேர்ந்தெடுத்தார்கள். இப்போதைய புதிய முறையில் எப்படி?

கிராமப் பஞ்சாயத்துக்கான வார்டு உறுப்பினர் மற்றும் தலைவர்; ஊராட்சி ஒன்றியத்துக்கான வார்டு உறுப்பினர், மாவட்ட பஞ்சாயத்துக்கான வார்டு உறுப்பினர். ஆகிய நான்கு பேரையும் மக்களே நேரடியாகத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதால், இம்முறை மொத்தம் நான்கு வோட்டுக்கள் போட வேண்டும்.

— ப்ரியன்

"நாட்டு நடப்பு மாணவர்களை ரொம்ப பாதிச்சிருக்கு..."

"எப்படி சொல்றீங்க?"

"மும்மூர்த்திகளின் பெயர்களைச் சொல்லுன்னு கேட்டதுக்கு பாஸ்கரன், திவாகரன், சுதாகரன்னு பதில் சொல்றாங்க!"

— தஞ்சாவூர் ராஜபாரதி





"ஆயிரம் பொய் சொல்லி ஒரு கல்யாணத்தை நடத்தி வைக்கலாம். அது தப்பில்லை!"

"ஒத்துக்கறேன் தரகரே! அதுக்காக பையன் கிளின்டனோட வளர்ப்பு மகன்னு கூசாமல் ஒரு பொய்யைச் சொல்றீரே. இது நியாயமா?"

— ஞா. ஞானமுத்து

"தீபாவளியின் போது வருஷா வருஷம் உங்க அப்பாவின் மருமகன்கள் நான்கு பேரும் இங்க வந்து தங்கறது வாஸ்தவம்தான். அதுக்காக வீட்டுக்கு வெளியே "மாப்பிள்ளைகள் சரணாலயம்"னு எழுதி வைச்சிருக்கிறது கொஞ்சங் கூட நல்லா இல்லை.

- எஸ். அனந்தகுமார்





தலைவர் : ஊர்வலம் எதுவும் நடத்த காரணங்களே இல்லையே!

தொண்டன் : நரகாசுரன் இறந்த நாளை முன் விட்டு 'இரங்கல் ஊர்வலம்' ஒன்றை நடத்தி விடலாம் தலைவரே!

— எஸ். அனந்தகுமார்

அகில் கார்த்திக்



பரபரப்பாகாத தலைதீபாவளி... உஷார்!

"ஹலோ... சாந்தி நிலையமா... நான்தான் போயஸ் சம்பந்தி பேசறேன்!'

''ஹலோ, நமஸ்காரம் சம்பந்தி! மாப்பிள்ளை, பொண்ணு எல்லாம் சௌக்கியம்தானே?''

"என்னங்க நீங்க... நான் ஒரு கோடி நீங்க ஒரு கோடியிலா இருக்கோம்... நீங்க நினைச்சா ஒரு நாளைக்கு கோடி தரம் வந்து அவங்களைப் பார்க்கலாமே?''

"கோடி, கோடின்னு அடிக்கடி சொல்லாதீங்க சம்பந்தி. உங்களுக்குக் கோடி புண்ணியமுண்டு! எனக்கு பாடி முழுதும் நடுங்குது!''

"இதுக்கே பயந்தா எப்படி... தலைதீபாவளியைப் பத்தி ஒரு கோடி காட்டலாம்னுதான் போன் பண்ணினேன்..."

"ஓகோ, அதைப் பத்தி சொல்றீங்களா! தலைதீபாவளியை தடபுடலா நடத்திட்டா போச்சு! என்ன, மிஞ்சி மிஞ்சிப் போனா ரெண்டு மூணு லட்சம்..."

''கரெக்ட்! ரெண்டு மூணு லட்சம் தொண்டர்களை நானும் எதிர்பார்க்கறேன்! அதனாலே தீவுத்திடல்லே தலைதீபாவளியை வைச்சுக்கறோம்.''

''ஐயையோ! நீங்க என்ன சொல்றீங்க? ரெண்டு மூணு லட்சம் செலவாகும்னு நான் சொன்னேன்... நீங்க தொண்டர், தீவுத்திடல்னு எதை எதையோ சொல்றீங்களே.. தலைதீபாவளி வீட்டோட கொண்டாடற பண்டிகைதானே...?''

''என்ன, விளையாடறீங்களா? நாட்டோட கொண்டாடப்பட வேண்டிய தலைதீபாவளியை





''ஆனாலும் நம்ம ராப் பிச்சைக்கு இவ்வளவு குசும்பு கூடாதுங்க...''

''என்னாச்சு கமலா?''

''சாதம் குழைஞ்சு போனதை முன்கூட்டியே சொல்லியிருந்தால் கையோடு 'ஸ்ட்ரா' கொண்டு வந்திருப்பேனேன்னு கிண்டல் பண்ணிட்டுப் போறாங்க!''

- எம். அசோக்ராஜா

வீட்டோட சிம்பிளா முடிச்சுடலாம்னு பார்க்க றீங்களா? வரலாறு காணாத கல்யாணம் பண் ணிட்டு, பாலாறு காணாத தண்ணியாட் டம் தலைதீபாவளியை நடத்திடலாம்னு நினைப்பா? வீக்கத்துக்கு ஏத்த விரல் வேண் டாமா... கல்யாணத்துக்கு ஏத்த தலைதீபா வளியா இருக்க வேண்டாமா?''

''மன்னிக்கணும்.... ஏதோ தப்பா பேசிட் டேன்!''

''பரவாயில்லை... உங்க ரெண்டு மூணு லட் சத்தை வேணுமானா லேகியம் கிளற வைச்சுக்க லாம்... பணத்தைப் பத்தி அல்பமாப் பேசி இனிமே என் கோவத்தைக் கிளறாதீங்க... சொல் றதைக் கேளுங்க... தீவுத்திடல்லே தீபாவளி... இந்தத் தடவை தலைக்கு ஒரு பங்களான்னு கட்டச் சொல்லிட்டேன். எவனாவது எதையா வது பேசினா, 'வரப் போற பொருட்காட் சிக்கு அதெல்லாம் பெவிலியனா மாறப் போகுது'ன்னு அடிச்சி சொல்லிடலாம்...''

''ஆஹா...''

''நடுவிலே ஒரு குளம்.''

''ஓகோ! மாப்பிள்ளை மங்கள ஸ்நானம் செய்யத்தானே?''

''அவசரப்படாதீங்க... இது எண்ணெய்க் குளம்... எண்ணெய்க் கிண்ணம் ஷேப்பிலே கட்ட பி.டபியூள்.டி. இன்ஜினியருங்க ஆரம் பிச்சாச்சு... மாப்பிள்ளை அப்படியே தொபு கடீர்னு அதுலே விழுந்து எழுந்து வருவார்...''

''அப்புறம் தொண்டர்களெல்லாம் எண் ணெயிலே விழுவாங்களா?''

''இல்லே! தொண்டர்களுக்கெல்லாம் அரை லிட்டர் எண்ணெயும் கால் கிலோ சீயக்காயும் கொடுத்து பீச் பக்கம் அனுப்பிடறோம்!''

''ஐயையோ! கல்யாணத்தன்னிக்கே பீச் மோசமாயிடுச்சே?''

''இந்த முறை அவங்களுக்காக இருபதாயிரம் இலவச பாத்ரூம் – டாய்லெட் கட்ட கார்ப்ப ரேஷன்காரங்க ஒத்துக்கிட்டாங்க... மெரீனா கரையோரமா கட்ட ஆரம்பிச்சாச்சு...''

''அப்போ மாப்பிள்ளை குளியல்?''

''வெறும் குளியல்னு சொல்லாதீங்க... கங்கா ஸ்நானம்னு சொல்லுங்க.. தீவுத்திடல்லே 'ஹெலிபேட்' ஒண்ணு கட்டறோம்... மாப் பிள்ளை எண்ணெயும் உடம்புமா ஹெலிபேட் வந்து, தயாராய் நிக்கிற ஹெலிகாப்டர்லே ஏறி, நேரே கங்கோத்ரி போறார்... பின்னாடி பத்து ஹெலிகாப்டர்லே முக்கியப்பட்டவங்க போறோம்...''

''போற வழியிலே கட்-அவுட் வேணாம்னு சொல்லிடுங்க!''

''ஒய்... ஒய்... ஒய்?''

''ஐயோ கோவிச்சுக்கறீங்களே... உயரத்துல பறக்கற ஹெலிகாப்டர், கட்-அவுட் மேலே இடிச்சிடாம இருக்கணுமே... அதுக்குத்தான்!''

''அப்படிச் சொல்லுங்க... நாம சரியா காலை ஐந்தரை மணிக்கு கங்கோத்ரியிலே கங்கா ஸ்நா னம் பண்றோம். அதுக்காக முதல் நாளே கங்கை யிலே இந்தப் பக்கம் அந்தப்பக்கம் பத்து கிலோ மீட்டர் தூரத்துக்கு யாரும் குளிக்கக் கூடா துன்னு உத்தரவு போட்டுட்டோம்!''

''இதுலே சட்டச் சிக்கல் ஏதாவது...''

''இப்படித்தான் மந்திரிகளும் பயந்து, 'வேணும்னா சொல்லுங்க; நாங்க ஆளுக்கு ஒரு குடம் கங்கையை தலை மேலே சுமந்து இங்கேயே கொண்டு வர்றோம்'னு சொன் னாங்க... தொண்டர்கள் விடறதா இல்லே... 'வருங்காலப் பிரதமருக்கு இந்தச் சலுகை கூட இல்லேன்னா எப்படி'ன்னு தீவிரமா எறங்கிட் டாங்க... ஹரித்வார், ரிஷிகேஷ் இங்கெல்லாம் இப்பவே கட்அவுட்டும் 'கங்கை கொண்ட சோழராணி' யேன்னு பேனரும் வைக்க ஆரம் பிச்சிட்டாங்க... கங்கா ஸ்நானம் ஆன உடனே மாப்பிள்ளை நேரே கும்மிடிப்பூண்டியிலே ஹெலிகாப்டர்லே வந்து இறங்கறாரு... அங்கே ஒரு பிரத்யேகமான பங்களாவிலே அவருக்கு வைரக் கிண்ணத்திலே லேகியம் கொடுத்து வைர வேட்டி, வைரத் துண்டு கட்ட வைச்சு தீபாவளி ஊர்வலம் தொடங்கறோம்...''

''அப்படி ஒரு சம்பிரதாயம் இல்லையே?''

''ஆனா என் சம்பந்தப்பட்ட எந்த நிகழ்ச்சி யானாலும் டிராஃபிக்கை மாத்தி விடறது சம் பிரதாயமாச்சே! அதனாலே கும்மிடிப்பூண்டியி லேர்ந்து தீவுத் திடல் வரைக்கும் மாப்பிள்ளை தீபாவளி ஊர்வலமா வந்தேயாகணும்... இதிலே நார்த் மெட்ராஸ் டிராபிக் கவர் பண்ணிட லாம்...''

''அப்போ சவுத் ஸைடு...''

''இருங்க சொல்றேன்... மாப்பிள்ளை தீவுத் திடல் வந்ததும் அவருக்கு வரலாறு காணாத ஸ்வீட் தர்றோம்... அதாவது தங்க பஸ்பம் கலந்து தயாரிச்ச காஸ்ட்லியான ஸ்வீட்... காஸ்ட்லியான அல்வா... அதன் விலை என்ன தெரியுமா... ஒரு கிராம் கிட்டத்தட்ட இருப தாயிரமாக்கும்... ஸ்வீட்டை சாப்பிட்டதும் அவர் வெளியிலே வந்து பட்டாசு கொளுத்து

(தொடர்ச்சி 58 ஆம் பக்கம்....)



"தலைவர் வெளிப்படையா பேசறவரா இருக்கலாம். அதுக்காக இப்படியா!"


"ஏன், என்ன சொன்னாரு?"

"நீங்க அரசியலுக்கு வராம இருந்திருந்தா என்ன செஞ்சிருப்பீங்க'ன்னு ஒரு நிருபர் கேட்டதுக்கு, 'பிக்பாக்கெட் அடிக்கப் போயிருந் திருப்பேன்'னு சொல்றாரு."

- டி.என். பாலகிருஷ்ணன்

● ● ● ● ● ● ● ● ●

திருச்சி மாவட்டத்தில் லெப்பைக் குடிகாடு என்று ஒரு ஊர். அந்தப் பள்ளிக் கூடத்தில் ஆசிரியராக வேலைப் பார்த்தேன். பள்ளிக்கு அருகாமையில் முதலமைச்சர் வருவதாகச் சொன்னார்கள்.



நான் ஒரு மாலையோடும், பத்துப்பதினைந்து மாணவர்களுடனும் அவரைப் பார்க்கக் காத்து நின்றேன். முதலமைச்சர் என்னைப் பார்த்து விட்டார். 'நீ துரைசாமிபிள்ளை மகன்தானே?' என்று கேட்டார். 'ஆமாம்' என்றேன். 'இங்கே என்ன பண்ணிக் கொண்டிருக்கிறாய்?' என்று கேட்டார். 'பக்கத்திலே இருக்குற பள்ளிக் கூடத்துலே வேலை பார்க்குறேன்; உங்களைப் பார்த்து மாலை போட வந்தேன்' என்றேன். 'மாலை போட பள்ளிக் கூடத்தை விட்டுட்டு வந்துட்டியா? எனக்கு மாலைபோடுகிறது முக்கியமல்ல. மாணவர்கள் படிப்புத்தான் முக்கியம்' என்றார்.

அப்படிச் சொன்னவர் முதலமைச்சர் காமராஜர்.

- ஒரு பட்டிமன்றத்தில் பேராசிரியர் சொ.சத்தியசீலன்.

தகவல் : பி.கே. அகிலா



முல்லாயிஸம்

ஒருநாள் முல்லா, சந்தையில் வேறொருவருடைய ஜாடியில் உள்ள கோதுமையைத் தம்முடைய ஜாடியில் கொட்டிக் கொண்டிருந்த சமயம் பிடிபட்டு நீதிபதி முன் நிறுத்தப்பட்டார்.

நீதிபதி வழக்கை விசாரணை செய்த போது, "நீதிபதியே நான் ஒரு முட்டாள். அது வேறொருவருடைய கோதுமை என்பதை அறிந்து கொள்ளும் அறிவில்லை. அதனால் அவருடைய கோதுமையை என் ஜாடியில் கொட்டிக் கொண்டேன்" என்று சொன்னார் முல்லா.

"அப்படியானால், உங்கள் கோதுமையை வேறொருவர் ஜாடியில் கொட்டியிருக்கலாம் அல்லவா?" என்றார் நீதிபதி.

அதற்கு முல்லா, "ஐயா, நான் வேறொருவருடைய கோதுமை எது என்று அறியாத முட்டாளாக இருந்தாலும், என்னுடைய கோதுமை எது என்று அறியாத அளவு முட்டாளில்லை" என்றார்.

நன்றி : முல்லாவின் வேடிக்கை கதைகள்

தகவல் : **ஜி.ஆர். முருகேசன்**

(54 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

வார்..."

"அதுலே ஏதாவது ஸ்பெஷல்...?"

"இல்லாமலா? அண்ணா சாலை முழுக்க மின்சாரக் கம்பங்களை எடுத்துட்டு, ஒரு நாளைக்கு மட்டும் அந்த இடங்களில் கம்பி மத்தாப்பு சொருகப் போறோம்... கம்பி மத்தாப்புன்னா ஆர்டினரி சைஸ் இல்லே! ஒரு லைட் கம்பம் சைஸ்லே இருக்கும்... ஸ்பெஷலா சிவகாசியிலே ஆர்டர் கொடுத்து, செய்யச் சொல்லியாச்சு... அண்ணா சாலையிலேர்ந்து தாம்பரம் வரைக்கும் பத்தடிக்கு ஒண்ணு இந்தப் பக்கம், அந்தப் பக்கமா நிக்கும்... பக்கத்திலே ஒவ்வொண்ணையும் கொளுத்த ஒரு தீவட்டியோட..."

"யாரு, தொண்டர்கள் நிப்பாங்களோ?"

"நான்சென்ஸ்... நம்ப போலீஸ் டிபார்ட்மெண்ட் எதுக்கு இருக்கு...? ஒவ்வொரு கம்பம் கம்பி மத்தாப்பு பக்கத்திலேயும் ஒரு கான்ஸ்டபிள் நிப்பாரு... தீவுத்திடல்லே மாப்பிள்ளை பட்டாசு கொளுத்த, அது அண்ணா சாலை வழியா தாம்பரம் வரைக்கும் வெடிக்கும்!"

"எப்படிங்க...?"

"ஆயிரம் வாலா, பத்தாயிரம் வாலா மாதிரி இது கோடி கோடி வாலா! முதல் நாள் ராத்திரியே மவுண்ட்ரோடு முழுக்க மழையிலே நனையாம இருக்க, ரோடு முழுசும் கவர் பண்ணி 'ஃபைபர் ப்ரூஃப்' போட்டுடுவோம்... மாப்பிள்ளை வெடி தொடர்ந்து வெடிக்கும் போது, ரோடு சைடிலே இருக்கிற கம்பி மத்தாப்பு எரியணும்... ஒவ்வொண்ணும் ஒரு மணி நேரம் எரியற மாதிரி மருந்து வைச்சிருக்கும்..."

"ஜனங்க வயிறு எரியாதுங்களா?"

"ஜனங்க வயிறு ஏங்க எரியணும்? அவங்க பட்டாசு எதையும் வாங்க முடியாது! எல்லா சப்ளையும் நமக்குத்தான். அவங்களுக்குப் பணம் மிச்சம்தானே..."

"அடடா, ஆமாங்க...!"

"அப்புறம் இன்னொரு செலவும் மிச்சம்..."

"அது என்னங்க...?"

"தீபாவளி ரிலீஸ்னு கண்ட கண்ட 'சூப்பர்' படத்துக்குப் பணத்தை செலவழிச்சிட்டு, அவங்க போக வேண்டாம்... சிட்டியிலே இருக்கிற அத்தனை தியேட்டர்களையும் நம்ப தொண்டர்கள் தங்க ஏற்பாடு பண்ணிட்டேன்! ஒரு வாரம் எந்தப் படமும் ரிலீஸ் ஆக முடியாது... எப்படி ஒரே திரியிலே ரெண்டு பட்டாசு வெடிச்சிட்டேன் பாருங்க... சரி, இத்தனை செலவும் நானே பண்ணிடறேன்... நீங்க தலைதீபாவளி செலவா ஒண்ணே ஒண்ணு பண்ணினா போதும்!"

"எ... எ... என்னங்க?"

"குறைஞ்சது நாலைஞ்சு லட்சம் தொண்டர்களை எதிர்பார்க்கறேன்... அவங்களுக்கு கல்யாணத்திலேயே சரியா சாப்பாடு போட முடியலே... அதனாலே..."

"என்ன பிரமாதம்.. நல்லா சாப்பாடு போட்டு அனுப்பிட்டா போவுது!"

"என்ன சம்பந்தி, இந்தக் கிண்டல்தானே வேண்டாம்னு சொல்றது? தலைதீபாவளின்னா மாப்பிள்ளைக்குப் பட்டு வேட்டி, சட்டை, ஒரு வாட்ச், ஒரு மோதிரம் போட்டு ஸ்வீட் பண்றதில்லையா.. நீங்க மாப்பிள்ளைக்குத்தான் பண்ணப் போறதில்லே... தொண்டர்கள் எத்தனை விசுவாசமா உங்க வீட்டு தலை தீபாவளிக்கு வரப் போறாங்க.. தலைக்கு ஒரு வாட்ச், மோதிரம், பட்டுவேட்டி, ஸ்வீட் பாக்கெட் கொடுக்கறீங்க... அப்புறம் தீபாவளி முடிஞ்ச அடுத்த நாள் அவங்க க்யூவிலே நின்னு தலையைச் சொரிவாங்க... தீபாவளி இனாமா ஐயாயிரமோ, ஐம்பதாயிரமோ உங்களால முடிஞ்சதை ஒவ்வொருத்தருக்கும் கொடுக்க நீங்க... என்ன பேச்சையே காணோம்... ஹலோ... ஹலோ..... ஹலோ..... என்ன சத்தத்தையே காணோம்? மயங்கி விழுந்துட்டாரா என்ன?"

'வரதன் சொல்லுக்கு மறுசொல் இல்லை!'

காவல் துறையில் பணியாற்றிக் கொண்டிருந்த நான், நிர்வாகத் துறைக்கு அழைக்கப்பட்டு, மத்திய அரசின் உள்துறைச் செயலகத்தில் இணைச் செயலாளராகப் பொறுப்பேற்ற மூன்றாவது நாள் –

அப்போது உள்துறை அமைச்சராக இருந்த உமாசங்கர் தீக்ஷித்தை மரியாதை நிமித்தம் சந்திக்கச் சென்றிருந்தேன்.

அது, பார்லிமென்ட் கூட்டத் தொடர் நடந்து கொண்டிருந்த சமயம். தினசரி காலையிலேயே அமைச்சர் பார்லிமென்ட்டுக்கு சென்று கொண்டிருந்ததால் முதல் இரண்டு நாட்கள் அவரைச் சந்திக்க முடியாமல் போய் விட்டது.

அன்று எப்படியும் சந்தித்து விடுவது என்கிற எண்ணத்தில் காலை சீக்கிரமே கிளம்பி, நேரே பார்லிமென்ட்டுக்குச் சென்று விட்டேன்.

சபை கூடியிருக்கவில்லை. எனக்கு நல்லதாகப் போயிற்று. நேரே உமாசங்கர் தீக்ஷித்தின் அறைக்குச் சென்றேன்.

உள்ளே நுழைந்ததும், அமைச்சர் கூடுதல் செயலாளர் சீனிவாச வரதனுடன் மிகத் தீவிரமாகப் பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்தேன். 'சரி, சற்று காத்திருக்கலாம்' என்று அவர் அறையிலேயே சற்று தள்ளி விசிட்டர்களுக்காகப் போடப்பட்டிருந்த இருக்கையில் அமர்ந்தேன்.

சற்று நேரம் ஆயிற்று. விவாதம் முடிவதாகத் தெரியவில்லை. மாறாக இன்னும் சூடு பிடித்தது. காதில் விழுந்த வரையில்– அவர்களது விவாதம், அன்று அமைச்சர் பார்லிமென்ட்டில் பேசப்போகிற, பீகார் மாநிலம் சம்பந்தமான ஏதோ வெகு முக்கிய விஷயம் என்பது மட்டும் புரிந்தது.

சீனிவாச வரதன் திரும்பத் திரும்ப, "சார்! தயவு செய்து இவ்விஷயத்தில் நேரடியாக உங்களை 'கமிட்' செய்து கொள்ளாதீர்கள். எதுவாக இருப்பினும் மாநில அரசிலிருந்து வந்த தகவலை 'refer' செய்தே பேசுங்கள்" என்று சொல்லிக் கொண்டிருந்தார்.


பீகாரில் நடந்த ஏதோ கலவரம் பற்றிய அறிக்கை– புள்ளி விவரம் போலும்.

அவர் எத்தனை முறை சொல்லியும் அமைச்சர் ஏற்றுக் கொள்கிறதாகத் தெரியவில்லை.

ஒரு கட்டத்தில் உமாசங்கர் தீக்ஷித், மிகவும் குழப்பம் அடைந்து, பேசுவதை நிறுத்தி விட்டு, தலையிலிருந்த காந்தி குல்லாவைக் கழற்றி, வியர்வையைத் துடைத்துக் கொண்டு, ஆழ்ந்து யோசிக்க ஆரம்பித்து விட்டார்.

எதிரே இருந்த சீனிவாச வரதன் எந்தக் குழப்பமும் அடைந்ததாகத் தெரியவில்லை. மிகவும் அமைதியாக, மென்மையான குரலில், தம் கருத்தை வலியுறுத்தியபடியே இருந்தார்.

அமைச்சரின் அறைக்கு இரண்டு வழிகள் உண்டு. ஒன்று வெளி



* ஐ. கே. குஜ்ரால்

சி. வி. நரசிம்மன்



"என்னங்க இது! உங்க ஆபீஸ்ல எல்லாரும் மொட்டை போட்டிருக்காங்க; ஏதாவது கூட்டுப் பிரார்த்தனையா?"

"அதில்லைப்பா! எங்க ஆபீஸ்ல லஞ்சம் தலை விரித்தாடுதுன்னு எவனோ சொல்லிட்டானாம், அதான்!"

- வி. ரெங்கநாதன்

யில் இருந்து எல்லோரும் வரும் பொது வழி. மற்றொன்று, அறையிலிருந்து நேராக பார்லிமென்ட் ஹாலுக்குச் செல்லும் வழி.

நேரம் கடந்து கொண்டிருந்தது. சட்டென்று பார்லிமென்ட் பக்கத்திலிருந்து வழி திறக்கப் பட்டு ஒரு தலை எப்படிப் பார்த்தது...

அது –

ஐ. கே. குஜ்ரால்!

செய்தி – ஒலிபரப்புத்துறை அமைச்சர்.

"க்யா தீக்ஷித்ஜி? பலமான யோசனை... பெரும் கவலை ... என்ன விஷயம்?" என்றார் குஜ்ரால்.

"ஆமாம்! பிரச்னைதான். இன்று ஒரு விஷயம் பற்றிப் பார்லிமென்ட்டில் பேசியாக வேண்டும். வர்தன்ஜி ஒரு ஸ்டேட்மென்ட் கொண்டு வந்துள்ளார். அதன்படி விவரம் அளித்தால் சரியாக இருக்குமா என்று எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. அதான்..."

உடனே சற்றும் தயங்காமல் குஜ்ரால் தீர்மானமாகச் சொன்னார்.

"தீக்ஷித்ஜி! விஷயம் என்ன என்று எனக்குத் தெரியாது. ஆனால் ஒன்று சொல்வேன். வர்தன்ஜி சொல்கிறபடி செய்து விடுவதுதான் நமக்கு நல்லது. இல்லாவிட்டால் சிக்கல் வந்து விடும்!"

தீக்ஷித், குஜ்ராலை நிமிர்ந்து பார்த்தார்.

"உம்! எல்லோரும் இதையேதான் சொல்கிறார்கள். அதனால்தான் இவரது ஸ்டேட்மென்ட்டை ஏற்க மறுக்கவும் தயக்கமாக இருக்கிறது!"

'வர்தன்ஜி' என்று மரியாதையுடன் அழைக்கப்பட்டு, 'வரதன் சொல்லுக்கு மறு சொல் இல்லை' என்று அன்று அத்தனை அமைச்சர்களாலும் அதிகாரிகளாலும் மிகவும் மதித்துப் போற்றப்பட்டவர் சீனிவாச வரதன்!

நான் இணைச் செயலாளராகச் சேர்ந்த உள்துறையில், என்.கே. முகர்ஜியுடன் கூடுதல் செயலாளராக இருந்தவர் சீனிவாச வரதன். மத்தியப் பிரதேச கேடர் ஐ.ஏ.எஸ். ஆபீசர். தமிழர். சென்னை கிறிஸ்தவக் கல்லூரி மாணவர்.

மத்திய பிரதேசத்தில் மாவட்ட ஆட்சியாளராக இருந்தவர். உள்துறைக்கு டெபுடேஷனில் வந்தவர், முதலில் துணைச் செயலராகப் பணியாற்றி, பின் காஷ்மீரில் டிவிஷனல் கமிஷனராகக் கொஞ்ச நாள் இருந்து விட்டு மீண்டும் உள்துறையில் இணைச் செயலராகச் சேர்ந்து, '74ல் (நான் உள்துறைக்கு வந்த சமயம்) கூடுதல் செயலாளராக மிகப்பெரிய பொறுப்பில் இருந்தார்.

மிகச் சிறந்த நிர்வாகி அவர். அரசியல், சட்டம் – ஒழுங்கு, வெளி நாட்டுத் தொடர்பு, புலனாய்வுத் துறை என்று சகல விஷயங்களிலும் ஆழ்ந்த அறிவும் அனுபவமும் படைத்தவர். உள்துறையில் அவர் இருந்த வரை, அமைச்சருக்கு எந்த ஒரு சிக்கலான சூழலிலும் தேவைப்படும் ஆலோசனைகள் அவராலேயே அளிக்கப்பட்டு வந்தன!

எப்படிப்பட்ட சூழலானாலும் சரி; பிரச்னைகளை எப்படி எதிர்கொள்ள வேண்டும் – எப்படிப் பேச வேண்டும் – என்னென்ன விஷயங்களை மாநில அரசின் பொறுப்பில் விட்டு விட வேண்டும் – என்று எடுத்துரைப்பதில் சூரர்! வரதன், அமைச்சருக்கு வகுப்பில் பாடம் சொல்லித் தருவது போல பேசக் கற்றுத் தருவதைப் பார்க்கவே வியப்பாக இருக்கும்.

"சார்! இங்கே கலவரம் நடந்தது, இத்தனை பேர் இறந்தார்கள்; அதில் இத்தனை இந்து, இத்தனை முஸ்லிம் என்று நீங்களாக அறிவிக்காதீர்கள்... 'According to the information received from the state...' என்று அழுத்தமாகச் சொல்லி ஆரம்பியுங்கள். இந்து–முஸ்லிம் கலவரம் என்று நீங்கள் சொல்லாதீர்கள். மாநில அரசு சொல்லட்டும்!" என்பார்.

எதைச் சொன்னால் பிரச்னை வரும்; எப்படி பதில் சொன்னால் எதிர்க் கேள்வி எழாமல் தவிர்க்கலாம் என்பதையெல்லாம் அவர்போல் துல்லியமாக அறிந்து, வழிநடத்தியவர்கள் யாரும் இல்லை!

உள்துறை சம்பந்தப்பட்ட எந்த விஷயத்தின் மீதும் அவர் எழுதும் குறிப்புகள் வியப்புக்குரிய விவரங்கள் அடங்கியவையாக இருக்கும். ஒரு விஷயத்தைப் பல்வேறு கோணங்களில் அலசி ஆராய்ந்து, மிகத் தெளிவான, அதேசமயம் சுருக்கமான குறிப்புகள் எழுதுவார்.

தவிர்க்க முடியாத மிகப் பெரிய பிரச்னை என்று வந்து விட்டால் உள்துறை அமைச்சருக்கு அவர் அனுப்பும் ரிப்போர்ட், பிரமிப்பாக இருக்கும். அந்தப் பிரச்னைக்கு என்ன தீர்வு என்பதை விரிவாக எழுதி விட்டு, கடைசியில்

● ஊழியர்களுக்குப் பஞ்சப்படி (Dearness Allowance) கொடுக்கும் முறையை முதன் முதலாக அறிமுகப்படுத்தியது அமெரிக்காதான். 1942 - இல் இந்த முறை அமுலுக்கு வந்தது.

- 'அறிவியல் கனியமுதம்' நூலிலிருந்து - ஆர். பார்த்திபன்

"இந்தச் சிக்கலுக்கு அரசியல் ரீதியில் நீங்கள் என்ன முடிவெடுத்தாலும் சரி; நிர்வாக ரீதியில் இதுதான் சரியான தீர்வாக இருக்க முடியும்!" என்று தயங்காமல் குறிப்பிட்டு அனுப்பிவிடு வார்.

பெரும்பாலும் வரதன் குறிப்பிடும் முடி வையே அமைச்சர்களும் ஏற்பார்கள். அவரது கணிப்பில் அத்தனை நம்பிக்கை! அது ஒரு போதும் தவறியதில்லை என்பதுதான் மிக முக்கியமான விஷயம். அன்று வரதன் எழுதிய குறிப்புகளைப் பழைய ஃபைல்களிலிருந்து தேடி எடுத்துத் தொகுத்து, இன்று மேலதிகாரி களுக்குப் பயிற்சி அளிக்கும் மையங்களில் பாட மாக வைக்கலாம்!

சென்ற அத்தியாயத்தில் Foreign Contribution Regulation Act (FCRA) பற்றி விரி வாகச் சொல்லியிருந்தேன்.

அந்தச் சட்டம் அமுலுக்கு வரும் முன் நடந்த ஒரு சுவாரஸ்யமான சம்பவத்தை இங்கே குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும் என்று தோன்றுகிறது.

இந்தியாவில் சில அரசியல் கட்சிகள் வெளி நாட்டு நிதி பெற்றதைப் பற்றிச் சொல்லியிருந் தேன்.

பொதுவாக, 'நிதி பெறப்பட்டிருப்பது கண்டு பிடிக்கப்பட்டபோது' என்றுதான் உள்துறை அமைச்சர் பார்லிமென்ட்டில் அறிவித்திருந் தார்.

அது, எத்தனை ஆயிரம் – லட்சம் அல்லது கோடி, எந்த கட்சி பெற்றது என்பது போன்ற புள்ளி விவரங்களை அமைச்சர் தரவில்லை அப்போது.


அதை வெளியிட முடியாது; வெளியிடவும் கூடாது. அதற்குப் பல நிர்வாக– அரசியல் காரணங்கள் உண்டு.

ஆனால் அமைச்சரை யார் சும்மா விட் டார்கள்? 'எவ்வளவு தொகை பெறப்பட்டது' என்று சொல்லியே தீர வேண்டும் என்று எம்.பிக்கள் விடாப்பிடியாக இருந்தார்கள். 'பாதுகாப்புக் காரணங்களால் அதைச் சொல்ல முடியாது'என்று எவ்வளவு தரம் அமைச்சர் சொன்னாலும் அது எடுபடவில்லை.

அந்தச் சூழலில், சிக்கலில் இருந்த அமைச்ச ருக்கு சீனிவாச வரதன் ஆலோசனை சொன் னார்:

"எப்படியும் தொகை எவ்வளவு என்று சொல்லப் போவதில்லை; சொல்லவும் கூடாது. பேசாமல் இப்படி ஒரு பதில் சொல்லி விடுங்கள்...

"அரசியலில் புகுந்த வெளிநாட்டுப் பணம் நாம் பிரமித்து, வாய்பிளந்து, அதிர்ச்சி அடை யும் அளவுக்கு அத்தனை அதிகம் இல்லை... அதே சமயம் கண்டு கொள்ளாமல் சும்மா விட்டு விடுகிற அளவுக்கு அத்தனை சிறியதும் இல்லை... உரிய நடவடிக்கை விரைவில் எடுக்



* உமாசங்கர் தீக்ஷித்

கப்படும் என்று சொல்லி விடுங்கள்!" என்றார்.

அமைச்சர் பிரகாசமானார். வரதனைப் பாராட்டியதோடு அல்லாமல், அவர் சொல் லித்தந்தபடியே பார்லிமென்ட்டிலும் அறி வித்தார்!

இதற்கு மேல் யாரால் என்ன கேள்வி கேட்க முடியும்?

நான் டெல்லியில் இருந்தவரை அநேக மாக தினமும் வரதன்ஜியைச் சந்திக்கத் தவற மாட்டேன். அரசியல், சமூகம், நிர்வாகம், சட் டம், கேஸ்கள் என்று அத்தனை விஷயங் களைப் பற்றியும் விவாதித்துத் தீர்ப்போம்.

அவர் ஜனதா அரசில் உள்துறைச் செய லராகப் பொறுபேற்றிருந்தார். அப்போது நான் சி.பி.ஐ. இயக்குனராக இருந்தேன். ஒரு சந்தர்ப்பத்தில் சேர்ந்தாற்போல ஒரு வாரம் அவரைச் சந்திக்க இயலாதபடிக்கு ஏதோ பணி நெருக்கடி. வெளியூர் சென்றிருந்தேன்.

திரும்பியதும் முதல் காரியமாக அவரைப் பார்க்கப் போனேன்.

துல்லியமாக ஞாபகம் இருக்கிறது...

பிரும்மாண்டமான உள்துறைச் செயலகக் கட்டடம். அதில் அவரது விஸ்தாரமான அறை. பரபரப்பாக இயங்கும் பணிகள்...

தமது இருக்கையில் குனிந்தபடி சீரியஸாக ஏதோ எழுதிக் கொண்டிருந்தவர், என்னைப் பார்த்ததும், உற்சாகமாகச் சிரித்தபடி, "என் னய்யா, ஆளையே காணோம் இந்தப்பக்கம்?" என்று அந்நியோன்ய தமிழில் கேட்டார்!

எனக்கு வியப்புக் கலந்த பரவச சந்தோஷம்.

நான் சொன்னேன்: "வரதன்! இத்தனை பெரிய, அதிமுக்கிய அலுவலகத்தில் தமிழில் இப்படி ஒரு 'ஹோம்லி' வரவேற்பு எத்தனை வித்தியாசமாயிருக்கிறது தெரியுமா?"

அவர் சிரித்து விட்டார்.

பிறகு நான் தேசிய போலீஸ் கமிஷன், மறுபடி மாநில போலீஸ் என்று மாறி மாறிச் சுற்றியதில் அவரோடு அப்புறம் அதிகம் தொடர்பு கொள்ள முடியாமல் போய்விட்டது.

1981ல் வரதன் ரிடையரானார். இரண்டு, மூன்று வருடங்களுக்குள்ளாகவே மாரடைப் பால் காலமாகி விட்டார்.

அவர் போல் ஒரு 'நிர்வாக ஞானி'யைச் சந்திப்பது மிகவும் அபூர்வம்.

– அடுத்தவாரம்

ஊரெல்லாம்

புதுவை சந்திரஹரி

போட்டிக் கதை – 7

நாள் காட்டியில் தேதியைக் கிழித்தான் ராமமூர்த்தி, அது அக்டோபர் 10 என்று புதிய தேதியைக் காட்டியது. துணுக்குற்றது அவன் மனம். தீபாவளி 23-ம் தேதி. அப்படியெனில் இன்னும் பன்னிரண்டு நாட்களே எதிரில்.

கையில் கசக்கிய பழைய தேதிக் காகிதமாகக் கசங்கியது அவனது இதயம்.

சின்ன வயதுகளில் 'எப்போது வரும் தீபாவளி, எப்போது வரும் தீபாவளி' என்று ஏக்கத்தை ஏற்படுத்தி, ஆஹா! இன்னும் மூன்று நாட்கள்தான். இன்னும் இரண்டே நாட்கள்... என்று நாட்கள் நெருங்க நெருங்க நெஞ்சில் குதூகலத்தை கொட்டிக் கொடுத்த அதே தீபாவளிதான் இப்போது... ஐயோ நெருங்குகிறதே, கழுத்தை நெரிக்கிறதே என்று மிரட்சியை ஏற்படுத்தும், நிம்மதியைக் குலைத்து வேதனை தரும் தீபாவளியாக மாறிவிட்டது.

முதல் தேதி கம்பெனியில் வாங்கிய சம்பளம்... பிடித்தம், கடன், மளிகை பாக்கி, கூட்டுறவுப் பண்டகசாலை பிடித்தம், வீட்டு வாடகை என்று போக நானூறு ரூபாய் எஞ்சியிருந்தது. போனஸ் பெரிதாக வரும் என்று எதிர்பார்த்தால், கம்பெனி நிர்வாகம் ஏதேதோ கணக்கு வழக்குகளையெல்லாம் காட்டி, பவர்கட்... லாரி ஸ்டிரைக் போன்ற காரணங்களால் உற்பத்தி பாதிக்கப்பட்டது என்றெல்லாம் சால்ஜாப்பு கூறி, குறைந்த பட்ச சதவிகிதத்தையே போனஸ் என்ற பெயரில் வழங்கியது. அதையும் சேர்த்தால் கையில் முழுதாக ஆயிரத்து நூறு இருந்தது. போனஸ் பிரச்னை இருப்பதால் சில மாதங்களுக்குப் புதிய கடன்களை வழங்க இயலாது என்று நிர்வாகம் ஆணையும் பிறப்பித்திருந்தது.

ஆயிரத்து நூறில் நண்பர்களிடம் வாங்கிய சில்லறைக் கடன்களைப் பைசல் செய்து விட்டு, சற்றே பெரிய கடன்களுக்கான வட்டியையும் கொடுத்துவிட்டு, ரயில் சீசன் டிக்கெட், சைக்கிள் பராமரிப்புக் கட்டணம், அப்பாவுக்கு மருந்து மாத்திரை என்று எல்லாம் போக, வீட்டில் வந்து எண்ணிப்பார்க்கையில் எண்ணூற்று ஐம்பது ரூபாயாகக் குறைந்து பரிகசித்தது.

தீபாவளி வரப்போவதால் சற்றே பெரிய பட்ஜெட்டோடு மனைவி சரஸ்வதி காப்பி கொண்டு வந்தாள். காப்பியை அனிச்சையாக வாங்கிப் பருக ஆரம்பித்தான் ராமமூர்த்தி.

"ஏங்க, தீபாவளி நெருங்குதே, தலை தீபாவளிக்கு மீனாவையும், மாப்பிள்ளையையும் அழைக்கப் போகணும்...." நினைபடுத்தினாள்.

இரண்டாவது தங்கை மீனாவுக்கு அங்கே இங்கே என்று தலையை அடமானம் வைக்காத குறையாகக் கடன்பட்டு, ஒரு வரனைப் பார்த்து, ஆறுமாதங்களுக்கு முன்பு திருமணத்தை முடித்து வைத்திருந்தான் ராமமூர்த்தி. பேசிய சீர்வரிசையில் வாங்கித்தர இயலாமல் ஒரு பீரோ பாக்கியாக இருந்தது. தலை தீபாவளிச் சீரோடு அதையும் சேர்த்துத் தரவேண்டும் என்று மிகவும் பெரிய மனது பண்ணி பிள்ளை வீட்டார் ஒத்துக் கொண்டிருந்தார்கள்.

தவிரவும் தீபாவளிக்கு மாப்பிள்ளைக்கு ஒரு பவுன்மோதிரம் வேறு போட வேண்டும். அது இல்லாமல் புத்தாடை, இனிப்பு என்றெல்லாம் வேறு இருக்கிறது.

சரஸ்வதியை நிமிர்ந்து பார்த்தான் ராமமூர்த்தி. 'எப்படி இருந்தவள் இவள்?... என்னமாய்த் தளதளவென்று இருந்தாள். என்னைக் கட்டிக் கொண்ட பாவத்திற்கு எப்படி இளைத்து துரும்பாகிப் போயிருக்கிறாள்? இவள் என்ன சுகத்தைக்



கண்டாள்- இரண்டு பிள்ளைகளைப் பெற்ற தைத் தவிர?'- நினைத்தான்.

"என்ன பார்க்கறீங்க? காப்பியிலே சர்க் கரை போறலியா?"- கேட்டாள் சரஸ்வதி. தன் முகக் குறிப்பைக் கூட அவள் உணரவில் லையே? அதுவும் நல்லதுதான். தான் அவ ளைப் பற்றி கவலைப்படுவது தெரிந்தால் வீணாக அவளும் கவலைப்படுவாள்.

"இல்லே சரசு. எங்கே பிள்ளைகளோட சத்தத்தையே காணோம்?'' பேச்சை திசை திருப்பினான்.

''இப்பத்தான் வீட்டுப்பாடமெல்லாம் முடிச்சுட்டு சாப்பிட்டு தூங்கப் போனாங்க."

"சரி....சரி... தூங்கட்டும்."

"சுமதிக்கு தீபாவளிக்கு பாவாடை சட்டை வேணாமாம். ஏதோ மாக்ஸியாமே... அதுதான் வேணுமாம். சுரேஷுக்கு ஜீன்ஸ் வேணுமாம்... அவன் பிரண்ட்ஸ் எல்லாம் அதுதான் போட றாங்களாம்..." பிள்ளைகளைப் பற்றி கூறியதை எல்லாம் காதில் போட்டுக் கொள்ளாமல், சரஸ்வதி காதில் அணிந்திருந்த கம்மல் களையே பார்த்துக் கொண்டிருந்தான் ராம மூர்த்தி.

கொஞ்சம் நகைகளோடுதான் வாழ வந் திருந்தாள் சரஸ்வதி. பெரிய தங்கை குணா விற்குத் திருமணம் செய்து வைக்க அவளது கைவளையல்கள் தேவைப்பட்டன. இரண்டா வது தங்கை மீனாவின் திருமணத்திற்கு அவள் செயினும் மோதிரமும் அகற்றப்பட வேண்டிய தாயிற்று. இப்போது அவளின் ஒட்டி உலர்ந்த தேகத்தில் நிலைத்திருப்பது தாலிச்சரடு கோத்த மஞ்சள் கயிறும், காதில் ஒரு ஜோடிக் கம்மல் மட்டுமே.


இந்த கம்மல்களைத்தான் மலையாக நம்பி யிருக்கிறான், மாப்பிள்ளைக்கு தலை தீபா வளிக்குப் போட வேண்டிய மோதிரத்திற்கு. இரண்டு கம்மல்களையும் அழித்துச் செய்தால் முக்கால் பவுனிலாவது ஒரு மோதிரம் செய்து விடலாம்.

அறையிலிருந்து அவனது தந்தையின் 'லொக் லொக்'கென்ற இருமல் சத்தம் வெளிப் பட்டது.

"நீங்க வாங்கி வந்த மருந்து மாத்திரையை கொடுத்துட்டேங்க" என்றாள் சரஸ்வதி. அப் பாவை நினைக்கவும் ஆத்திரமாக வந்தது ராமமூர்த்திக்கு.

என்ன செய்தார் இந்த அப்பா?- படிக்க வைத்தாரா? ஒழுங்காகப் பள்ளிக்கூடம் போக விட்டாரா? ஒருநாள் வெளியில், ஒரு சினிமா என்று அழைத்துச் சென்றிருப்பாரா? அம் மாவைத்தான் நிம்மதியாக வாழ வைத்தாரா? பிள்ளைகளைப் பெற்றாரே... ஒரு பிள்ளைக்

அருள்வாக்கு



வயல், ஃபாக்டரி இவை காரியம் பண்ணும் இடம். போலீஸ், கோர்ட் மற்ற ஆபீஸ் கள் எல்லாமே ஒருவிதத்தில் ரக்ஷணை (காப்பு) தருகிற இடங்கள்தான். வயலிலும் ஃபாக்டரியிலும் காரியம் பண்ணி உண்டாக்கினது வீட்டுக்கு நிய யமாக வந்து சேரும்படி செய்வதற்குத்தான் ஆபீஸ்கள் இருக்கின்றன. ஆபீஸில் பதார்த்தங் கள் (Produce-ப்ரொட்யூஸ்) இல்லை; சாகுபடி யில்லை. மெஷின் சத்தமும், மாட்டுச் சாணியும் புழுதியும் இல்லை. நகத்தில் அழுக்குப் படாமல், பங்களா, ஃபான், நாற்காலி என்று சௌகரியங் கள் ஆபீஸில் இருக்கின்றன. உடம்பால் உழைக்க வேண்டியதில்லை. எல்லாம் பேனா வேலைதான். தேவலோகம் இப்படித்தான் இருக்கிறது. அது ஸர்வலோகங்களுக்கும் ரக்ஷணைக்கான ஆபீஸ். ஆபீஸ்காரர்கள் உழவில்லை, மிஷினைப் பிடித்துச் சுற்றவில்லை என்று நாம் குற்றம் சொல்வோமா? அவர்கள் இதைச் செய்ய ஆரம்பித்தால், நம் ரக்ஷணை போய் விடுமே! தேவர்கள் இப்படி அதி காரிகளாக இருக்கிறார்கள்.

பூலோகம்தான் வயல், ஃபாக்டரி, ஒரே சேரும் சகதியும்; இல்லாவிட்டால் கடாமுடா என்று சத்தம், எண்ணெய்ப் பிசுக்கு, தூசி, தும்பு எல்

காவது, ஒரு பெண்ணுக்காவது ஒரு தீபாவளி நாளில் ஒரு புத்தாடை வாங்கிக் கொடுத்திருப் பாரா? இவர் வீட்டிற்கு வந்த நாட்களே கொஞ் சம் தான்!- எந்நேரமும் சீட்டு, குடி என்று சீரழிந்தாரே தவிர, மனைவி குழந்தையின் சந் தோஷத்திற்கு ஒரு துரும்பை கிள்ளிப் போட் டிருப்பாரா? இவரால் ஒரு உதவி.. ஒரு சிறு உதவி குடும்பத்திற்கு... சொல்ல முடியுமா?

அம்மா... ஒரு பள்ளியில் ஆயாவேலை பார்த்துக் கொண்டு மாலை இரவு வேலை களில் தையல் இயந்திரத்தோடு இயந்திரமாக உழைத்து, பிள்ளைகளுக்கு எப்படியோ மூன்று வேளை சோறுபோட்டு, ஆடை தைத்துக் கொடுத்து, ஏதோ அவளால் முடிந்தவரை எட் டாவது வரை படிக்க வைத்தாள்.

எத்தனை தீபாவளிகள் இரு தங்கை களையும் இரு பக்கங்களில் அணைத்துக் கொண்டு, பக்கத்து வீடுகளில் சிறார்கள் கொளுத்தும் பட்டாசு மத்தாப்புகளை வேடிக்கை பார்த்திருப்பான் ராமமூர்த்தி. வெடிக்காமல் போன பட்டாசுகளையும் பாதி யில் அணைந்துபோன மத்தாப்புக் கம்பிகளை யும் பொறுக்கிக் கொளுத்தி தங்கைகளுக்கு வேடிக்கை காட்டியிருக்கிறான்? அம்மாவால்

லாம்! உடம்பு வருந்த உழைத்துக் கொட்ட வேண்டும். இப்படித்தான் நாம் எல்லோரும் கர்மானுஷ்டானம் பண்ண வேண்டும். ஹோமப் புகை, பசி, பட்டினி எல்லாவற்றோடும் வேர்த்துக் கொட்டிக் கொண்டு பண்ண வேண்டும்.

இதனால் தேவர்கள் உசத்தி, நாம் தாழ்த்தி என்று பகவான் நினைக்க வில்லை. ஆபீஸில் ஜோராக உட்கார்ந்திருப்பவனுக்கு இந்த விவசாயியும், (ஃபாக்டரி) தொழிலாளியும்தான் சாப்பாடும், மற்ற ஸாமான்களும் உற்பத்தி பண்ணிக் கொடுக்கிறார்கள். இவர்கள் இல்லாவிடில் அவன் பட்டினிதான்; அவனுக்கு ஒரு ஸாமானும் கிடைக்காது. அதே மாதிரி, அவனுடைய ரக்ஷனையால்தான் இவன் உழவு பண்ணின தானியமும் உற்பத்தி பண்ணிய சரக்கும் இவன் வீட்டுக்கு வருகிறது; சமூகத்திலும் எல்லாருக்கும் இவை கிடைக்கின்றன. ஆபீஸில் உட்கார்ந்திருக்கிற என்ஜினீயர்தான் வயலுக்கான கால்வாய் வெட்ட உத்தரவு போடுகிறார். விவசாய அதிகாரி பூச்சி மருந்து கொடுக்கிறார். ஒரு ஃபாக்டரி என்றால், லைசென்ஸ் தருவதிலிருந்து, அதற்கான மூலச் சரக்குகளை வரவழைப்பது முதலான எல்லாம் ஆபீஸ் அநுமதியால்தான் நடக்கிறது. அப்புறம் சர்க்காரும், போலீஸும், கோர்ட்டும்தான் இவை நியாயமாக எல்லாருக்கும் விநியோகமாகும்படி சகாயம் பண்ணுகின்றன. (நடைமுறையில் எப்படியிருந்தாலும், ராஜாங்கம் என்பது இதற்காக இருப்பதாகத்தான் பேர்.) இப்படி ஒருத்தரை ஒருத்தர் நம்பி, இவனால் அவனுக்கு ஸுகம், அவனால் இவனுக்கு ஸுகம் என்றிருக்கிறது.

– ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

'அல்லா' என்று முஸ்லிம்கள் யாரை வழி படுகின்றனரோ,

'ஜெஹோவா' அல்லது 'பரமண்டலத்திலிருக்கும் பரம பிதா' என்று கிறிஸ்தவர்கள் யாரை வழிபடுகின்றனரோ,

'விஷ்ணு' என்று வைணவர்கள் யாரை வழி படுகின்றனரோ,

'சம்பு' என்று சைவர்கள் யாரை வழிபடுகின்றனரோ,

அவர்களது பல்வேறு பிரார்த்தனைகளுக்குத் தக்கவாறு வரமளித்து, அவர்களுக்கு நீண்ட ஆயுள், ஆரோக்கியம், சம்பத்து, மகிழ்ச்சி இவை யனைத்தும் நல்குபவர் யாவரோ,

அவர் எல்லோருக்கும் உரிய ஒரே கடவுளா வார்

- ஸ்ரீ சத்யசாயி பாபா

வாங்கித் தரமுடிந்ததெல்லாலம் ஒரு துப்பாக்கியும் கேப்பும் தானே!–

தீபாவளியென்றால் அம்மா கேசரி செய்வாள்– பொங்கலன்று சர்க்கரைப் பொங்கல், இது தவிர வேறு தின்பண்டம் ஏது?... அப்பா... எந்த ஒரு தீபாவளிக்காவது இனிப்பு என்று ஒன்று வாங்கி வந்திருப்பாரா? ஒரு பட்டாசு கொண்டு வந்து கண்ணில் காட்டியிருப்பாரா?

அம்மாதானே ஒரு வாத்தியாரின் சிபாரிசு மூலம் ஒரு சோப்பு கம்பெனியில் அவனுக்கு ஒரு வேலையும் வாங்கிக் கொடுத்தாள். கம்பெனியில் கௌரவமான உத்தியோகத்தில் இருப்பதைக் காட்டி, ஒரு நல்ல இடத்தைப் பார்த்து சரஸ்வதியையும் மணமுடித்து வைத்தாள்.

இப்படியே உழைத்து களைத்துப் போன அம்மா, ஒரு நாள் கண்மூடிக் கொண்டு விட்டாள். அவள் இறந்தது நல்லதுதான். இல்லையென்றால் படுத்த படுக்கை ஆகிப்போன இந்த அப்பா என்கிற மனிதனுக்கு பணிவிடையும் அல்லவா அவள் செய்து கொண்டிருக்க வேண்டும்? அவளுக்கு ஓய்வு வேண்டாமா? சாவுதானே அவளுக்கு ஓய்வு.

பிறகுதான் தங்கைகளின் பாரம் அவன் தலையில் ஏறியது. பெண் பிள்ளைகளைக் கரையேற்ற வேண்டுமே என்று என்றாவது இந்த அப்பா கவலைப்பட்டிருப்பாரா?

"என்னங்க... நான் கேட்டேன். பதிலே சொல்லலே. மீனாவையும் மாப்பிள்ளையையும் அழைக்க எப்ப போறீங்க?"

"போகணும் சரஸ்வதி. போய் வந்தா போதுமா? மோதிரத்துக்கும் பீரோவுக்கும் ஏற்பாடு செய்யணுமே?"

"பீரோவை உங்க நண்பர் மூலமாக ஏதோ தவணையிலே வாங்கிக்கலாம்னு சொன்னீங்களே?"

"சொன்னேன்தான், பாதிப்பணம் முதலிலேயே கட்டிடணுமாம். மீதியைத்தான் தவணையிலே கட்டலாமாம். அதுக்கே எண்ணூறு ரூபா வேணுமே? அப்புறம் மோதிரம் வேறே இருக்கு. உன்னோட கம்மல் ரெண்டையும்..."

"அதைத்தாங்க அடகுவச்சு கோவிந்தம் மாகிட்டே பணம் கேட்கலாம்னு இருக்கேன். அறுநூறு ரூபா தர்றேன்னாங்க. உங்ககிட்ட ஒரு வார்த்தை சொல்லிட்டு வைக்கலாம் னுட்டு..."

"எதுக்கு?"

"என்னங்க... தீபாவளிக்கு மாப்பிள்ளே வர்றாங்க. கொஞ்சம் இனிப்பு செய்ய வேண்டாமா? சுமதிக்கும் சுரேஷுக்கும் போன தீபாவளிக்கே நல்ல டிரஸ் எடுக்கலே. அவங்களுக்கு கண்டிப்பா எடுக்கணும். கொஞ்சம் பட்டாசும் வாங்கித்தர வேணாமா? அப்புறம் உங்களுக்கு... மாமாவுக்கு வேட்டி சட்டை. அந்த அறுநூறு ரூபாய்க்கு செலவு இருக்குங்க. அதை மட்டும் கேட்காதீங்க."

இப்படி அவள் ஒரு பட்ஜெட் போட்டு வைத்திருக்கும்போது... அவளிடம் எப்படி கம்மலை கழற்றச் சொல்லிக் கேட்பது?'– விழித்தான் ராமமூர்த்தி. மாப்பிள்ளைக்கு தலை தீபாவளிச் சீரோடு அவர்களை அழைக்கப் போக வர வேண்டிய செலவும் வேறு இருக்கிறது.

"ஏங்க, கம்பெனியிலே கொஞ்சமாவது கடன் கேட்டுப் பாருங்களேன்."

"முடியாது சரஸ்வதி. கண்டிப்பா இல்லேன்னு சொல்லிட்டாங்க."

"நான் இருநூறு ரூபா சீட்டு ஒண்ணு கட்டிக்கிட்டு வர்றேங்க. இப்ப அவசரத்துக்கு அதிகமாத்தான் தள்ளிப்போகும். வர்றது வரட்டும்னு ஒரு நூறு ரூபாய்க்காவது கேட்டு எடுக்கலாம். அப்புறம் ஒரு எண்பது ரூபா கொஞ்சம் கொஞ்சமா சேமித்து வச்சிருக்கேன்."

"இதெல்லாம் எந்த மூலைக்கு சரசு?... சரி, விடிந்ததும் ஒரு ரவுண்டு வெளியே போயிட்டு வர்றேன். எங்காச்சும் கொஞ்சம் கடன் பொரட்ட முடியுமான்னு பார்த்துட்டு வர்றேன்."

வெளியில் புறப்பட்ட ராமமூர்த்தி எங்கெங்கோ அலைந்து பார்த்து ஒன்றும் வழியில்லாது விழி பிதுங்கி களைத்துத் திரும்பினான். அவனிடம் தயங்கியபடியே அன்று தபாலில் வந்திருந்த கடிதத்தைக் காண்பித்தாள் சரஸ்வதி.

"என்ன விஷயம்? நீயே சொல்லு?"

"நம்ம குணாவுக்கு அடுத்த வாரம் வளை காப்பு. செய்யறாங்களாம். ஒன்பதாம் மாசமில்லையா? வரச் சொல்லி அழைச்சிருக்காங்க."

தலையில் கை வைத்து உட்கார்ந்து கொண்டான் ராமமூர்த்தி. பெரிய தங்கைக்கு இப்போது இந்த சீமந்தச் சீர்வரிசைச் செலவு வேறா? பிறகு பிரசவத்திற்கு அழைத்துவர வேண்டும். பிரசவம் பார்த்து, பிள்ளைக்குக் காப்புப் போட்டு அனுப்பி வைக்க வேண்டும். எங்கே போவது? எங்காவது ஓடிப்போய் விட



இன்ஸ்பெக்டர் : 501, அங்கே என்னப்பா சத்தம்?

போலீஸ்காரர் : பிக்பாக்கெட் பக்கிரிக்கு நெஞ்சு வலிக்குதாம்... ஆஸ்பத்திரில A/C ரூம் வேணுமாம்!

– எம். பர்வதவர்த்தினி

● ● ● ● ● ● ● ● ●

லாமா என்று பட்டது ராமமூர்த்திக்கு.

சரஸ்வதியும் சோர்ந்து உட்கார்ந்து போனாள்.

"ராமு... ராமு..." படுக்கையிலிருந்து தந்தையின் குரல் கேட்டது. சரஸ்வதி சென்று பார்த்து வந்தாள்.

"ஊங்களை மாமா கூப்பிடறார்."

"ஏன்? சொத்து உயில் எழுதப்போறாராமா? இல்லே நான் உயிரோடு இருக்கேனான்னு பார்க்கக் கூப்பிடறாரா? சாப்பிட்டாரில்லே... அப்புறம் என்ன?"

மீண்டும் தொடர்ந்து அவர் அழைக்கும் குரல் வரவே, எழுந்து சென்றான்.

"என்ன?"

"உட்காரு... ப்பா."

"சொல்லுங்க?"

"உட்கார் ரா... ஜா."

அவர் கண்கள் கலங்கியிருந்ததைப் பார்த்து கொஞ்சம் நெகிழ்ந்து போனான் ராமமூர்த்தி. அவர் அருகில் அமர்ந்தான்.

"என்னப்பா? காலையிலேர்ந்து... என்னமோ கணக்கு... பார்த்துட்டிருக்கியே?"– கேட்டார்.

"இப்ப அது தெரிஞ்சுக்கிட்டு என்ன பண்ணப் போறீங்க? மீனா தலை தீபாவளிக்கு வரப்போறா. மாப்பிள்ளைக்கு மோதிரம் போடணும். பீரோ ஒண்ணு தர வேண்டிய பாக்கியிருக்கு. குணாவுக்கு வளைகாப்பு. சீர்செய்து அழைச்சு வரணும். பிரசவம் பார்த்து அனுப்பணும். பிள்ளைங்களுக்கு தீபாவளிக்கு துணிங்க எடுக்கணும். வர்ற மாப்பிள்ளைக்கு ருசியா நாலு நாளைக்கு சமைச்சுப் போடணும்."

"நீ படற கஷ்டம் தெரியுது ராசா... தண்டத்துக்கு வாழ்ந்து...நான் உனக்கு ஒரு பிரயோசனமும்.. இல்லாம போனேன். என்னால் உனக்கு... ஒரு உபகாரமும் செய்ய முடியலையே? என்னை.. மன்னிச்சுடுப்பா.." அழுதார்.

ஆயிரம் இருந்தாலும் தசை ஆடியது ராமமூர்த்திக்கு. கிழிந்த நாராகத் துவண்டு கிடந்தார் அவர்.

"மாத்திரை போட்டுக்கிட்டீங்களா?"– பரிவோடு கேட்டான். 'ஆச்சு' என தலையாட்டினார்.

"சரி... சரி... பேசாம படுங்க. ஏன் வீணா கவலைப் பட்டுக்கிட்டு...?" அவர் போர்வையைச் சரி செய்துவிட்டு வெளியேறினான்.

அடுத்தநாள் காலையில் கையில் காப்பியோடு மாமனாரை எழுப்பப்போன சரஸ்வதி... வட்டாவை கீழே போட்டுவிட்டு அலறினாள். ஓடினான் ராமமூர்த்தி. அங்கே படுக்கையில் அவர் இறந்து போயிருந்தார்.

சம்பந்தி வீட்டாருக்குத் தகவல் அனுப்பினான் ராமமூர்த்தி. தந்தையின் இறுதிச் சடங்கிற்கு ஏற்பாடுகளைச் செய்தான். அவனது கையிருப்பு அதற்கு மட்டுமே போதுமானதாக இருந்தது.

இடுகாட்டில் கொள்ளி வைப்பதற்கு முன்பு இறுதியாகத் தந்தையின் முகத்தைப் பார்த்தான் ராமமூர்த்தி.

ஏதோ சாதித்து விட்டதைப் போன்ற சிரிப்பு அவரது முகத்தில் தெரிந்தது.

"நான் உனக்கு ஒரு உதவியும் செய்ய முடியலையப்பா.. என்னை மன்னிச்சிடு." அவர் கூறிய வார்த்தைகள் எதிரொலித்தன.

"செய்துட்டீங்கப்பா. பெரிய உதவி செய்துட்டீங்க. இந்த வருஷம் நான் தீபாவளி கொண்டாடக் கூடாதில்லையா? எனக்கு எந்தச் செலவும் இல்லேப்பா. என்னோட பிரச்னைகளை இப்போதைக்குத் தீர்த்து வச்சுட்டீங்கப்பா..."

குலுங்கி அழுதான் ராமமூர்த்தி.



"சார் பி–2 ஸ்டேஷன்லேருந்து பேசறாங்க... அங்கே ஒரு திருடன் ரெடியா இருக்கானாம். நம்மகிட்டே கேஸ் ஏதாவது இருக்கான்னு கேட்கறாங்க!"

– வடுவூர் சிவ. முரளி

ஓர் இளம் பெண் கடத்தப்படுகிறாள்...

என்ன பதில் சொல்வது என்று எனக்குத் தெரியவில்லை. டி.எஸ்.பி. முன் தலை குனிந்து நின்றிருந்தேன்.

"நல்லா யோசிங்க மிஸ்டர்.... நடந்திருக்கிறது கிட்நாப்... ஏழு வருஷம் உள்ளே இருக்க வேண்டிய அபன்ஸ்.... தெரியுதா...?" என்றார் கொஞ்சம் அதட்டலாகவே.

புரிந்தது. அவரைவிட எனக்குத் தெரிவாகப் புரிந்தது. சாதாரண தவறு இல்லை. கடத்தல். கடத்தலோடு முடிந்து விடப்போகிறதா, இல்லை... இளம்பெண் கடத்திக் கற்பழிப்பு... குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க, தனி போலீஸ் படை என்பது வரை போகப் போகிறதா...?

எனக்குப் பயமாக இருந்தது.

"எவ்வளவோ கவனிச்சிருக்கான் மிஸ்டர்... திடீர்னு வந்து ஒரு பெண்ணைக் கடத்திக்கிட்டுப் போக முடியாது... முன்னாடியே உங்க கம்பெனிக்கு வந்து உளவு பார்த்திருக்கணும்... நல்லா யோசிச்சி பதில் சொல்லுங்க... ரெண்டு மூணு நாளைக்கு முந்தி யாராவது வந்தாங்களா...? ரோட்டுல அடிக்கடி ஒங்க பார்வையில பட்டாங்களா...? உங்ககிட்ட பேச்சுக் கொடுத்துக்கிட்டே சுற்றுப்புறத்தை ஆராய்ஞ்சாங்களா...? எல்லாத்தையும் யோசிங்க... நீங்க சொல்றதை வச்சித்தான் கேஸை நகர்த்த முடியும்... ஃபர்தரா ஏதும் நடக்கிறதுக்குள்ள பொண்ணை டிரேஸ் அவுட் பண்ணியாகணும்... ஏன் மிஸ்டர்... உங்களை நம்பித்தானே துணி வெட்ட பேரண்ட்ஸ் அனுப்பினாங்க... யாரோ ஒருத்தன் வந்து, வீட்டுல கூப்பிடறதாச் சொன்னா, உடனே பொண்ணை வெளியே விட்டுர்றதா...? என்ன ஏதுன்னு... வந்தது யாருன்னு விசாரிக்க வேணாமா..?"

அவர் கேள்வியில் இருந்த நியாயம் சடாரென்று எனக்கு உறைத்தது. உடன் இயலாமை துக்கமாய் மாறித் தொண்டையை அடைத்தது. எவ்வளவு சுலபமாக ஏமாந்திருக்கிறேன்

திருவாரூர் பாபு

எத்தனை சுலபமாக ஏமாற்றப் பட்டு இருக்கிறேன்... இந்தப் பழி போகுமா...? சுகந்திக்கு ஏதாவது ஆனால்...

மனசு பதறியது.

"போங்க... நல்லா யோசிங்க... ஏதும் வித்தியாசமாத் தோணுனா எஸ்.ஐ. கிட்ட சொல்லுங்க... என்ன...?" என்றார் அதட்டலாய். நான் தலைகுனிந்தபடி அறையைவிட்டு வெளியே வந்து, பொங்கிய வியர்வையைத் துடைத்தபடி ஓரமாகக் கிடந்த பெஞ்சில் அமர்ந்தேன்.

"அஷ்டமத்துல சனி... ஆறு மாசம் ஜாக்கிரதையா இருக்கணும்... ரத்தக் காயம் ஏற்படலாம்..."

போன வாரம் என் ஜாதகத்தை ஆராய்ந்த ஜோசியர் சொன்னபோது ஏனோ எனக்கு நம்பிக்கை இல்லை. ஆனால் இப்போது எனக்கு ஏதாவது ஆகியிருந்தால் கூடத் தேவலாம் என்றுதான் தோன்றியது. எங்காவது விழுந்து, எதிலாவது மோதி, கைகால் உடைந்திருந்தால் கூட என்னோடு போயிருக்கும். இப்படிப் பழி சுமக்க வேண்டி இருக்காது...

"இவரு கடையிலேந்துதாண்டா அந்தப் பொண்ணைக் கடத்திக்கிட்டுப் போனானுவோ... வந்து கூப்பிடறவன்கிட்டே மனுஷன் யாரு என்னன்னு விசாரிக்க வேணாம்...? வெளியே வந்த பொண்ணை அலாக்காத் தூக்கி, காருல போட்டுக் கொண்டு போயிட்டானுவோ..."

கைநீட்டிப் பேசுவார்களோ...? முதுகுக்குப் பின்னால் சிரிப்பார்களோ?

எனக்குத் தொழில் வியாபாரமில்லை. அப்படி இருந்தால் நா...



திருக்கும் சம்பவத்திற்கு இந்நேரம் பூட்டிக் கொண்டு போக வேண்டியிருந்திருக்கும்.

ஆடைகள் தயாரிப்பது. விதம் விதமாக, ஸ்டைலாக ஸ்கர்ட்... மேக்ஸி... சூரிதார்... பாபா சூட், மிடி என்று பெண்களுக்கும் குழந்தைகளுக்குமான உடைகள் தைப்பது, தைத்த ஆடைகளை என்னோடு ஒப்பந்தம் செய்திருக்கும் சென்னையில் உள்ள நிறுவனத்திற்குக் கொடுப்பது...

அமைதியான எல்லையம்மன் கீழவீதியில் துணிவெட்டும் மற்றும் தைக்குமிடம்.

இப்படி ஐந்து தையல் மெஷின்கள்... அப்படி மூன்று மெஷின்கள். இடது ஓரத்தில் வெட்டுவதற்கு வசதியாக இரண்டு மேஜைகள். பெரிய மேஜையில் எப்போதும் பிஸியாய் சுகந்தி.

சுகந்தி சிவப்பு. நல்ல அழகு.

நான் கொடுத்த பேப்பர் விளம்பரத்தைப் பார்த்து, உள்ளூரிலிருந்தே அவள் இண்டர்வியூவுக்கு வந்தபோது எனக்கு யோசனையாகத்தான் இருந்தது. இவ்வளவு நாகரிகமாக இருக்கிறாளே, என்னத்தை வெட்டப் போகிறாள் என்ற எனது நினைப்பை அடுத்த ஐந்தாவது நிமிடத்தில் பொய்யாக்கினாள். அலட்சியமாகக் கத்திரிக்கோல் பிடித்து, நான் கொடுத்த துணியில் அற்புதமான டிஸைனில் ஒரு மிடி வெட்டி என்னைக் கட்டிப் போட்டாள்.

அவள்தான் தைக்கின்ற எட்டுப் பேருக்கும் லீடர். அவள் சொற்படிதான் கேட்க வேண்டும்.

எனக்குத் தையல் தெரியாது. துணி தெரியும். ஏற்றுமதி விவகாரங்கள் தெரியும். இந்தத் தொழிலுக்குத் தையல் தெரிய வேண்டாம். முதலீடும் கொஞ்சம் மூளையும் இருந்தால் போதும். என்னிடம் மூளை மட்டும் இருந்தது. முதலீடு வங்கி கொடுத்தது.

கொடுத்த முதலீட்டைச் சரியான முறையில் பயன்படுத்தி, சுகந்தியின் உதவியோடு கற்பனையில் தோன்றும் புதுப்புது வடிவங்களை அவளிடம் சொல்லி... உடன் அவள் அதற்குத் தையல் வடிவம் கொடுத்து... கொஞ்சம் கொஞ்சமாக நான் ஏற்றுமதியாளனாக ஆகிக் கொண்டிருக்



கும் நேரத்தில்தான்... அழகான சுகந்தியை நைச்சியமாகக் கடையிலிருந்து வெளியே வரவழைத்து காருக்குள் தள்ளிக் கடத்திப் போனார்கள்.

அவளின் அதீத அழகுதான் அவளுக்கு ஆபத்தாயிற்றோ?... அப்படி இருந்தாலும் அந்த ஆபத்து உருவானதற்குக் காரணம் நானாக இருந்ததுதான் எனக்கு வேதனையாய் இருந்தது.

அன்று மதியம் மூன்று மணிக்கு நான் கொஞ்சம் சோகத்தில் இருந்தேன். அப்போதைய சோகம் அல்ல. ஆறு மாத கால சோகம்.

நான்கு வருடங்கள் காதலித்து... "கட்டிக்கிட்டா ஒங்களத்தான் மாமா கட்டிப்பேன்... இல்லாட்டி தூக்குத்தான் மாமா..." என்று குழைந்து குழைந்து... பேசிய மாமா மகள் அல்வா கொடுத்துவிட்டுப் போன அதிர்ச்சியிலிருந்து மீள முடியாத ஆத்திரத்தில் இருந்தேன்.

ஃபோட்டோ கொடுத்தாள். பரிமாறிய கதைப் புத்தகங்களுக்குள் ரகசியமாகப் பென்சிலால் வாக்கியங்கள் எழுதி வைத்தாள். வீட்டுக்குச் செல்லும் போதெல்லாம் கண்களால் காதல் சொன்னாள். எல்லாவற்றையும் அவளே காலில் போட்டு மிதித்துவிட்டு, பக்கத்து மாநிலத்தில் வேலை பார்க்கும் வசதியுள்ள ஒருவனுக்குக் கழுத்தை நீட்டவும் சம்மதித்தாள்.

எப்படி...? நான் குழம்பிப் போனேன்.

காதல்... மனசு சம்பந்தப்பட்டது இல்லையோ...? பணம் சம்பந்தப்பட்டதோ...?

"அவதான் ஒன் மேல இஷ்டம் இல்லேங்கிறாள்ல...., அப்புறம் எப்படி கட்டறது... பேசாம போ... வம்பு பண்ணாத..."

மாமா ஒரு நிமிடத்தில் விரோதியாகிப் போனார்.

"எங்க ஆபீஸ் ஊழியர்கள் 23 பேரும் பணம் போட்டு ஹோல்சேலில் பட்டாசு வாங்கினதைப் பங்கு போட்டுப் பிரிச்சதுலே ஒரே ஒரு ஊசி வெடி மீந்து போச்சு. அதை யார் எடுத்துக் கொள்வது என்பதில் சண்டை, ரகளை..."



அவள் எழுதிய கடிதங்களையும், கொடுத்த ஃபோட்டோக்களையும் வைத்துக் காதலை நிரூபிக்க எனக்கு மனசு வரவில்லை. அவள் சம்மதத்தோடுதான் எல்லாம் நடக்கிறது என்று தெரிந்தபோது அவளுடனான என்னுடைய காதலை நிரூபித்து, காதலுக்குத் துரோகம் செய்ய நான் தயாராக இல்லை.

உயிர்தாங்கியாக இருப்பாள் என்று நினைத்தேன். உயிர்வாங்கியாகப் போய்விட்டாள்.

ஆனால் அவளுடன் பழகிய அந்த தினங்களையும், சந்தித்தபோது பரிமாறிக் கொண்ட வார்த்தைகளையும் என்னால் மறக்க முடியவில்லை. என்னதான் தலையை உதறிக் கலைத்தாலும் நினைவுகள் தொடர்ந்து படுத்திக் கொண்டுதான் இருந்தன.

கலைந்து போன மனத்தோடு ஏதோ யோசனையில் இருந்தபோதுதான்... கொஞ்சமாய்த் திறந்திருந்த கதவு வழியே தலையை நீட்டி அவன் —

"நான் சுகந்தியோட ரிலேஷன்... சுகந்தி இங்கதானே கட்டிங் பண்றாங்க?"

"ஆமாம்."

"அவுங்களை உடனே வீட்டுல அழைச்சுக்கிட்டு வரச் சொன்னாங்க..."

"சுகந்தி யாரோ ஒங்களைத் தேடிக்கிட்டு வந்திருக்காங்க பாரும்மா..." என்று சொல்லிவிட்டு, நான் திரும்பிக் கண்களை மூடிக் காதல் நினைவுகளில் மூழ்க... வெளியே படார் எனக் கார் கதவு அறைந்து சாத்தப்படும் சத்தம் கூட என்னைக் கலைக்கவில்லை.

"ஸார்... என்ன ஸார்... ஒங்க கடையிலே கட்டிங் பண்ற பொண்ணை யாரோ நாலு பேர் பலவந்தமா கார்ல ஏத்திக்கிட்டுப் போறாங்க... அந்தப் பொண்ணு சத்தம் போட்டுக்கிட்டுத் திமிருது... யாரு ஸார்...?" என்று தெருமுனையில் டீக்கடை வைத்திருப்பவர் கடைக்கு ஓடிவந்து வேகமாகச் சொன்ன போதுதான் எனக்கு விபரீதம் உறைத்தது.

அடுத்த நிமிடமே துள்ளி எழுந்து மொபட்டை எடுத்துக் கொண்டு கார் போனதாகச் சொன்ன திசையில் பறந்து...

ம்ஹூம், கண்டுபிடிக்க முடியவில்லை. வீட்டுக்குச் செய்தி போய் பெற்றோர் பதறிக்கொண்டு வந்து என்னைப் பிடித்து, உலுக்கோ உலுலுக்கென்று உலுக்கி... போலீஸுக்குத் தகவல் போய்... அவர்கள் விரைந்து வந்து... நாலுபுறமும் தகவல் பறந்து...

சுகந்தியின் அரசியல் அண்ணன் அடியாட்களோடு பறந்து...

நான்கு நாட்களாயிற்று. எதுவும் தகவல் தெரியவில்லை. காரைப் பார்த்த டீக்கடைக்காரனை ஸ்டேஷனுக்கு அழைத்துப் போய் விசாரித்தாயிற்று. இரண்டு நாள் முழுவதும் என்னை ஸ்டேஷனிலேயே வைத்திருந்து

விசாரணை என்ற பெயரில் கேட்ட கேள்வி களையே திரும்பத் திரும்பக் கேட்டு மிரட்டி...

'இளம்பெண் துணிகர கடத்தல்' என்று பேப்பரில் வேறு கட்டம் கட்டிப் போட்டு விட்டார்கள். போலீஸார் என்னைத் துருவித் துருவி விசாரித்து வருவதாகச் செய்தியை முடித்திருந்தார்கள்.

சோகத்துக்கு மேல் சோகம். காதல் சோகத் தைக் கூட முழுதாக அனுபவிக்க முடிய வில்லை. ஆனால், அந்த சோகத்தைவிட இந்த சோகம் பெரிதாய் இருந்தது.

சுகந்தி எப்போதும் பாதுகாப்புடன் வரு வாள். அம்மா, அண்ணன், அப்பா யாராவது கொண்டுவந்து விடுவார்கள். அதேபோல் மாலையில்காத்திருந்து திரும்ப அழைத்துப் போவார்கள். இதையெல்லாம் தெரிந்து வைத் துக் கொண்டுதான்... என் அலட்சியத்தைப் பயன்படுத்தி, அழகாக அள்ளிக் கொண்டு போய்விட்டார்களோ...?

கடவுளே... சுகந்தி அகப்படுவாளா...? அகப் பட்டாலும் அப்படியே இருப்பாளா...? நான்கு நாட்களாகப் போலீஸ் தேடுகிறதே...? இதுவரை அகப்படவில்லையே...?

உலகத்தில் உள்ள கடவுள்கள் அத்தனை யையும் வேண்டினேன். சுகந்தி முழுதாகக் கிடைக்க கவலைப்பட்டு பத்து கிலோ இளைத்தேன்.

"இப்ப எதுக்கு மெட்ராஸ் போறீங்க...?" சப்-இன்ஸ்பெக்டர் கடுமையாய்க் கேட் டார்.

"பிஸினஸ் தொடர்பாகப் போயாக வேண் டிய கட்டாயம் ஸார்..."

''முடியாது ஸார்...அவுங்க கம்ப்ளெ யிண்ட்ல ஒங்க பேரையும் மென்ஷன் பண்ணி யிருக்காங்க... நாங்க நேரடியா ஒங்க மேல ஒண்ணும் நடவடிக்கை எடுக்கலேன்னாலும் ஒங்களைச் சந்தேக லிஸ்ட்லேந்து முழுசுமா விலக்கிடல... ஏன்னா சம்பவம் நடந்ததுக்குத் தெரிஞ்சோ தெரியாமலோ நீங்களும் ஒரு கார ணமா இருந்திருக்கீங்க... நீங்க கொஞ்சம் ஜாக்கிரதையா இருந்திருந்தா இதைத் தவிர்த் திருக்கலாம்... ஒங்ககிட்ட வேலை பார்த்துக் கிட்டு இருந்த பொண்ணை - அதாவது ஒங்க கஸ்டடியில இருந்த பொண்ணை வலுக்கட் டாயமாகக் கடத்திக்கிட்டுப் போயிருக்காங்க... சட்டப்படி இப்ப நீங்க டவுன் லிமிட்ட தாண்டக் கூடாதே ஸார்..."

அமைதியாக நின்றிருந்தேன். முதன் முறை யாகச் சுகந்தியின் பெற்றோர் மீது கோபம் வந்தது.

"நாளைக்கு மாஜிஸ்திரேட் பர்மிஷனோட ஜாமீன்ல வேணா போங்க..." என்றார்.

''சரி ஸார்...'' என்று தொய்வாக ஸ்டேஷனை விட்டு வெளியே வந்தேன்.

வாழ்க்கையில் ஏறவே கூடாது என்று நினைத்திருந்த இடம். முகத்திலேயே முழிக்கக் கூடாது என்று நினைத்திருந்தவர்கள். ஐந்து நாட்களாக நாலு முறை போலீஸ் ஸ்டேஷன் வந்தாயிற்று. அவர்கள் முகத்தையே மணிக் கணக்காய்ப் பார்த்துக் கொண்டு இருந்தா யிற்று.

சப்-இன்ஸ்பெக்டர் சொன்ன மாதிரியே அடுத்த நாள் ஜாமீன் பெற்றுச் சென்னை புறப்பட்டேன். கட்டாயம். பயணத்தைத் தள்ளிப் போட்டால் சில பல ஆயிரங்கள் நஷ்டமாகலாம். இப்போது அதையும் தாங்க முடியாது. ஏற்கெனவே இரண்டு காயங்கள். மூன்றாவது காயம் வேண்டாம்.

கம்பனிலிருந்து இறங்கி... வேகமாக மாடிப்படி ஏறி எலக்ட்ரிக் டிரெயினைப் பிடிக்க அவசரமாய் விரைந்த போது...

"ஸார்..."

யாரோ என்னை அழைப்பது மாதிரி இருந் தாலும் அந்தக் குரல்தான் என்னைத் திரும்ப வைத்தது.

சுகந்தியின் குரல்.

படாரெனத் திரும்பினேன். எதிரே மொட்டை அடித்திருந்த அந்தப் பெண் சுகந்தியேதான். பக்கத்தில் அவன், தயக்கமான முகத்தோடு.



"சாமி... தகராறு பண்ணாம பத்து ரூபா தீபாவளி இனாம் கொடுத்திடுங்க..."

"கொடுக்காட்டா என்னப்பா செய்வே?"

"புரசைவாக்கத்திலே உங்களுக்கு ஒரு சின்ன வீடு இருக்குதுன்னு அம்மா கிட்டே சொல்லிடுவேன்."

• • •

''என்ன மாமா, தீபாவளி டிரஸ்லே 'நரி மார்க் சீயக்காய்த் தூள்' 'குருவி மார்க் சேமியா' அப்படின்னெல்லாம் எழுதி யிருக்கு?''

''வேறொண்ணுமில்லே மாப்பிள்ளை. இந்த வருசம் உங்க டிரஸ்ஸை நம்ம மளி கைக் கடை அண்ணாச்சி ஸ்பான்சர் பண்ணி யிருக்காரு. அதான்.''



"கட்டிய புடைவையுடன் என்னோடு ஓடிவர நீ தயாரா இரு!"

"அவசரப்படாதீங்க! தீபாவளிக்குப் புதுப்புடைவை கிடைக்கும். அதைக் கட்டிக்கிட்டு ஓடி வந்துடறேன்!"

- ஞா. ஞானமுத்து

● சீனாவில் ஆயிரம் வகையான பட்டாசுகள் தயாரிக்கப்படுகின்றன. இந்தியாவில் 100 வகையான பட்டாசுகளே தயாரிக்கப்படுகின்றன.

● தீபாவளிப் பண்டிகையைச் சிறப்பித்துத் தபால்தலை வெளியிட்ட ஒரே நாடு சிங்கப்பூர்தான்.

● நியூசிலாந்து, இத்தாலி, பிரான்ஸ், பெல்ஜியம் போன்ற நாடுகளில் வயது வந்தவர்களிடம் மட்டுமே பட்டாசுகள் விற்பனை செய்யப்படுகின்றன.

● சீனர்கள்தான் வெடிமருந்தைக் கண்டுபிடித்தவர்கள்.

- பள்ளிச்சேரி பி.சி. ரகு

அவன் நின்றிருந்த விதத்தை உணர்ந்த அடுத்த விநாடி... சுகந்தியின் கழுத்தைத்தான் என் கண்கள் பார்த்தன. எதிர்பார்த்த மாதிரியே புத்தம் புது மஞ்சள் சரடு என்னைப் பார்த்துச் சிரித்தது.

"மன்னிச்சிடுங்க ஸார்... இது என் அத்த பையன்... நாங்க ரெண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர் விரும்பினோம் ஸார்... எங்க குடும்பத்துக்கும் இவங்க குடும்பத்துக்கும் அஞ்சு வருஷமாப் பகை... போக்குவரத்து கிடையாது... நிச்சயம் எங்களைச் சேரவிட மாட்டாங்க... ஓடிப் போகவும் என்னால முடியல... வீட்டை விட்டு வெளியே வந்தாக் கூட யாராச்சும்... என்னால என்ன பண்ண முடியும்? கல்யாண ஏற்பாடு வேற நடக்குது... இவரோடதான் போயிருக்கேன்னு தெரிஞ்சா நிச்சயம் எங்களைப் புடிச்சிடுவாங்க ஸார்... என் அண்ணன் ரெண்டு பேரையும் சேர விடாது... அதனாலதான் இவரு ஃபிரெண்ட்ஸோட சேர்ந்து திட்டம் போட்டுக் கடத்திக்கிட்டுப் போற மாதிரி சத்தம் போட்டு நடிச்சி... கல்யாணம் நடக்கிற வரைக்கும் போலீஸ் என்னை அடையாளம் கண்டுக்கக் கூடாதேங்கறதுக்காகத்தான் ஸார் இந்த மொட்டையே. நேத்திக்குத் திருப்பதியில கல்யாணம் பண்ணிக்கிட்டோம் ஸார்... பேப்பர்ல எல்லாத்தையும் படிச்சேன்... என்னை மன்னிச்சிடுங்க ஸார்... இனிமே எங்களை யாராலயும் பிரிக்க முடியாது... என் வீட்டுல என்னைக் கொன்னு போட்டாலும் கவலை இல்லை..."

கட்டிக் கொண்ட தொண்டையில் பேசினாள். சரக்கென்று கண்களில் இருந்து பொங்கிய கண்ணீரைக் கைக்குட்டையால் துடைத்துக் கொண்டு, என்னைப் பார்த்துச் சிரிக்க முயன்று தோற்றாள்.

நான் ஆச்சரியமாய் நின்றேன்.

மனத்தில் நினைத்த மாமனைக் கணவனாக்கிக் கொள்ள எவ்வளவு தூரம் துணிந்திருக்கிறாள்? கூர்மையாகத் திட்டம் தீட்டி... துணிச்சலாக அதைச் செயல்படுத்தி... அவ்வளவு பேரையும் ஏமாற்றி... எந்த இளம் பெண்ணுமே செய்யாத காரியத்தைச் செய்து...

சட்டென்று கையை நீட்டினேன். அவன் கையைப் பிடித்துக் குலுக்கினேன். சுகந்தியைப் பார்த்துச் சிரித்து, "வாழ்த்துக்கள்..." என்றேன்.

இருவரும் என்னைப் பார்த்துப் புன்னகை செய்ய...

அவசரமாய் அந்த இடத்தை விட்டு நகர்ந்த என் கண்களில் இருந்து சூடாய் இறங்கிய கண்ணீர் கன்னத்தை நனைத்தது. ஆனந்தக் கண்ணீர்!

பரதன் அச்சகத்தில் அச்சிட்டவர் : வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் : கி. ராஜேந்திரன்.
ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; மானேஜிங் டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 525/-.

வயசு

கிளாசுக்குப் போகப் பிடிக்கவில்லை. காலேஜ் லைப்ரரிக்கு வந்து பேருக்கு ஒரு புத்தகம் எடுத்து விரித்துக் கொண்டேன். கண்கள் கலங்கி எழுத்துக்கள் அசைந்தன.

அம்மா, என்னை நீ புரிந்து கொண்டது இவ்வளவுதானா? பத்தொன்பது வருடங்களாகக் கூடவே இருந்து வளர்த்தும் உனக்கு என் மனசு மட்டும் எப்படித் தெரியாமல் போனது?

வேறு யாராவது சொல்லியிருந்தால் தாங்கிக் கொள்ளலாம். அலட்சியப்படுத்தலாம். நீயா அம்மா அப்படிச் சொன்னாய்? உன் பையன் மேல் அத்தனை அவநம்பிக்கையா? உன் மனத்தில் எனக்கு மரியாதை அவ்வளவுதானா? எத்தனைக் கேவலமாக என்னை எடை போட்டு வைத் திருக்கிறாய்!

தினம் கட் அடித்து விட்டு ஒரு கும்பல் மோசமான படங்களாகத் தேடித் தேடிப் போய்ப் பார்க்கும். நான் போயிருக்கிறேனா? சைட் அடிப்பதற்காகவே சாயங்காலத்தில் கடைத் தெருவில் ஸ்டைலாக அலைவார்கள். கூப்பிட்டிருக்கிறார்கள். நான் போயிருக்கிறேனா? வரது வீட்டில் நடந்ததைப் போல நம் வீட்டுக்கு வந்து, ‘சார், உங்க பையன் என் பொண்ணுக்கு லவ் லெட்டர் கொடுத்திருக்கான்’ என்று எந்த அப்பனாவது கத்தியிருக்கிறானா?

அப்படிப்பட்ட என்னைப் போய் சந்தேகப்பட்டு ஒரு வார்த்தை சொல்லி விட்டாயே அம்மா! சாட்டையால் விளாசின மாதிரி இருக்கிறதே! நினைக்க நினைக்க வலிக்கிறதே!

ராத்திரி தண்ணீர் குடிப்பதற்காக எழுந்து வந்தவன், அறைக்குள் நீயும் அப்பாவும் பேசுவதைக் கேட்டு நின்றிருக்க மாட்டேன் - பேச்சில் என் பெயர் அடிபடாமல் இருந்திருந்தால்.

“சிவா குழந்தைடி” என்றார் அப்பா.

“வாஸ்தவம்தான். ஆனா வயசுன்னு ஒண்ணு இருக்கில்லே? பஞ்சையும் நெருப்பையும் தெரிஞ்சே பக்கத்தில வைக்கிறது சரியில்லைங்க” என்றாய் நீ.

பஞ்சு? நெருப்பு? என்ன சொல்கிறாய் என்றே புரியவில்லை.

“என்ன செய்யலாம்னு சொல்றே?”

“சுமதியோட அப்பா தபால் போட்டுருக்கான். சும்மா பார்த்துட்டுப் போறதுக்காக அடுத்த வாரம் வர்றானாம். வந்ததும் அவனோட அனுப்பி வெச்சிட வேண்டியதுதான்.”

“இனிமே இவ உங்கப் பொண்ணு சார்னு சொல்லி ஒப்படைச்சுட்டுப் போனான் மங்களம். அவன்கிட்ட என்னன்னு சொல்லச் சொல்றே?”

“அவன் ஒரு பேச்சுக்கு சொன்னா அதுக்காக அவளை காலம் பூரா வெச்சிருக்க முடியுமா? ஒம்போது வயசுல கொண்டாந்து விட்டப்ப அப்படிச் சொன்னான். இப்ப வயசு பதிமூணாச்சு. வயசுக்கு வந்து ஒரு மாசமாச்சி. நல்ல வளர்த்தி வேற. நாளைக்கு ஒண்ணு கிடக்க ஒண்ணு நடந்திடுச்சின்னு வைங்க, அவன் எல்லாம் கிராமத்து ஆளு. மானஸ்தன். பெரிய விவகார மாய்டும்.”

“அப்ப நமக்கெல்லாம் மானம் இல்லங்கறியா?”

“மழுப்பாம ஒரு முடிவுக்கு வாங்க!”

“வயசுக்கு வந்துட்டாளே ஒழிய, என்ன தெரியும் அவளுக்கு? உன்னை அம்மான்னு தான் கூப்புடறா. என்னை அப்பான்னுதான் கூப்புடறா. அவனை சிவாண்ணான்னுதான் கூப்புடறா. குடும்பத்தில ஒருத்தியா பழகிட்டு இருந்தா, ஏன் நீ இப்படி விகல்பமாய் பார்க்கறே?”

“அய்யோ! நான் சொல்றது உங்களுக்குப் புரியவே மாட்டேங்குது. இன்னைக்கு விகல்பமா எதுவும் இல்லை. நாளைக்கு விகல்பமா எதுவும் நடந்துடக் கூடாதுன்றதுதான் என் கவலை!”

“அளவுக்கு மீறி கற்பனை பண்ணிக்கிட்டு கவலைப்படறியோன்னு எனக்குப் படுது.”

“நீங்க எதுலயும் அலட்சியம்! எல்லாமே மேம்போக்குதான் உங்களுக்கு. காலம் அப்படி

பட்டுக்கோட்டை பிரபாகர்

இருக்குங்க. சின்னஞ்சிறுசுங்க. அவங்க சும்மா இருந்தாலும் வயசு சும்மா இருக்க விடாது!"

"சரி சரி. சுமதியை அனுப்பிச்சிரலாம். ரெண்டு செட் பாவாடை, தாவணி வாங்கி, ரெண்டாயிரம் பணம் வைச்சிக் கொடுத்து அனுப்பிச்சிரலாம்."

"ரெண்டாயிரம் என்ன, மூவாயிரம் வேணாலும் கொடுங்க. அதெல்லாம் நான் வேணாம்னு சொல்லவே இல்லை. சம்மதிச் சிங்களே, இப்பதான் எனக்கு நிம்மதியா இருக்கு" என்றாயே, அந்த நிமிடத்திலிருந்து எனக்கு நிம்மதி போய் விட்டது அம்மா!

அப்பா என்னைப் புரிந்து வைத்துள்ள



அளவுக்கு நீ என்னைப் புரிந்து வைத்துக் கொள்ளவில்லையே...

சுமதி யார்? இத்தனூண்டு குட்டி. 'சிவாண்ணா, சிவாண்ணா' என்று பேசும் போது இன்னும் கூட மழலை இருக்கிறது. அவளைப் போய்... நான்?

என்னால் நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை. நீ எப்படியம்மா நினைத்துப் பார்த்தாய்?

இது ஒரு பெரிய அவமானம் எனக்கு! யோக்யன் என்று ஊரிலும், உறவினரிடமும் நண்பர்களிடமும் பெயர் வாங்கி என்ன பிரயோஜனம்? பெற்ற தாய் - நீ என்னை சந்தேகப்பட்டு விட்டாயே...

லைப்ரரியை மூடப் போகிற நேரத்தில் புறப்பட்டு, பஸ் ஸ்டாப் போகாமல் பக்கத்துப் பூங்கா போய் இருட்டிப் போன கறுப்பு ஆகாயத்தை ரொம்ப நேரம் பார்த்துக் கொண்டிருந்து விட்டு மிகத் தாமதமாக வீட்டுக்குத் திரும்பின போது மணி எட்டரையோ, ஒம்போதோ ஆகி விட்டது.

"என்னடா இவ்வளவு லேட்டு?" என்றார் டீ.வி.யிலிருந்து திரும்பிய அப்பா.

"ஆமாம். லேட்டாயிடுச்சி" என்று விட்டு என் அறைக்கு வந்தேன்.

உடனே அம்மா உள்ளே வந்து, "என்ன சிவா, என்ன பதில் இது? காலேஜ் விட்டு எங்க போயிருந்தே?" என்றாள்.

திரும்பி அம்மாவை லேசாக முறைத்து, "ம்? ஊர் மேயப் போயிருந்தேன்" என்றேன்.

அம்மா அதிர்ந்து போய், "சிவா, நீதானா பேசறது?"

பதில் பேசாமல் ஷூ கழற்றிப் போட்டு, லுங்கிக்கு மாறினேன்.

"காலேஜ்ல புரொபசர் எதுவும் திட்டிட்டாரா?"

"யாரும் திட்டலை. எல்லாரும் என்னை நல்லாத்தான் புரிஞ்சி வெச்சிருக்காங்க. போதுமா?" என்று வெடித்தேன்.

"இப்படி எல்லாம் பேச மாட்டியே, என்னடா ஆச்சு உனக்கு?"

"யார் யார் எப்போ எப்படிப் பேசுவாங்கன்னு யாருக்குத் தெரியும்?" என்று கட்டிலில் விழுந்தேன்.

அம்மா நெற்றியில் தொட்டுப் பார்த்து, "உடம்பு சரியில்லையா? சுடற மாதிரி இருக்கே. ஜுரம் வருதா? என்னடா சிவா? சொல்லேன். கஷ்டமா இருக்கில்லே? ஃப்ரண்ஸோட எதாச்சும் தகராறா? யாராச்சும் உன்னைத் தப்பாப் புரிஞ்சுகிட்டு கோவிச்சுக்கிட்டாங்களா?"

"ஃப்ரண்ட்ஸ் தப்பாப் புரிஞ்சுக்கிட்டா போய்ட்டுப் போகுதுன்னு விட்டுடலாம்!"

"பின்னே யாரு உன்னை என்ன சொன்னாங்க?"

என்னால் அதற்கு மேல் அடக்கி வைக்க முடியாமல் பொங்கி விட்டேன்.

"நேத்து தண்ணி குடிக்க எழுந்து வந்தப்போ நீயும், அப்பாவும் பேசிட்டிருந்ததை யதேச்சையாக் கேட்டுட்டேன்மா!"

"என்ன பேசினோம்? என்ன கேட்டே நீ?"

"அந்த சுமதியை நீ ஊருக்கு அனுப்பி வை, அனுப்பாமப் போ. எனக்குக் கவலை இல்லை. ஆனா ஊருக்கு அனுப்பறதுக்குக் காரணம்னு ஒண்ணு சொன்னியே... நொந்துட்டேம்மா,

ச்சே! என்னம்மா என்னைப் புரிஞ்சிட்டிருக்கே நீ? எத்தனை கேவலமா நினைச்சுட்டே? கூசிப் போய்ட்டேம்மா!''

அம்மா ஆடிப் போய் நின்றாள்.

"சொல்லும்மா. எப்படிம்மா நீ என்னை மோசமா நினைக்கலாம்? என்னைப் பத்தி ஏதாச்சும் ஒரு சின்ன புகார் உண்டா? எதை வெச்சு என்னை அப்படி எடை போட்டே? பளார்னு அறை வாங்கின மாதிரி இருக்கும்மா. என் மனசு கிடந்து துடிக்கிதும்மா."

அம்மாவால் பதில் எதுவும் பேச முடிய வில்லை.

அறை வாசலில் நின்று அத்தனையும் கேட்டுக் கொண்டிருந்த அப்பா, மெதுவாக உள்ளே வந்தார்.

"மங்களம், உலகத்தில எங்கயோ யார் வீட்லயோ ஒரு தப்பு நடந்தா, அந்த மோசமான விஷயத்தை முன்னுதாரணமா எடுத்து வச்சிக்கிறது ரொம்பத் தப்பு. புருஷன் பொண்டாட்டிக்குள்ளே சண்டை வந்து சில பேர் டைவர்ஸ் வரைக்கும் போயிடறாங்க. அந்த சில பேரை உதாரணமா எடுத்துக்கிட்டு கல்யாணம்னு செஞ்சாலே டைவர்ஸ் வரும்னு நம்பறது சரியா? அவனோட குமுறல் ரொம்ப நியாயமானது. பதில் சொல்லு அவனுக்கு'' என்றார்.

கிட்டே வந்த அம்மா என் கையைப் பிடித்துக் கொண்டு, "உன் வேதனை புரியுதுப்பா. நான் உன்னை இப்பவும் தப்பா நினைக்கலைடா. சின்ன வயசாச்சேங்கிறதால முன் ஜாக்கிரதை பண்றதா நினைச்சுக்கிட்டு ஏதோ சொல்லிட்டேன். வருத்தப்பட்டுக்காதே. இதை இத்தோட விட்டுட்டு எப்பவும் மாதிரி இருடா. ஏங்க, சுமதி இங்கேயே இருக்கட்டுங்க'' என்றாள்.

ஆனாலும் நான் அன்று முழுக்க கொஞ்சம் பிகுவிலேயே இருந்தேன். இரண்டு நாளில் எல்லாம் சரியாகிப் போய் அன்று காலேஜில் முத்தமிழ் மன்றத்திற்காக மேடையேறி புல்லாங்குழல் வாசித்து ஏராளமான பாராட்டுக்களுடன் வீட்டுக்குத் திரும்பிய போது இருட்டி மணி ஏழரையாகி விட்டது.

கதவு திறந்த சுமதியின் முகத்தில் சோகம் பார்த்து, "என்ன? என்ன ஒரு மாதிரியா இருக்கே?'' என்றேன்.

"விழுப்புரம் மாமா இல்லே? அவருக்கு ஆக்ஸிடெண்ட் ஆய்டுச்சாம். தந்தி வந்துச்சி சிவாண்ணா. அம்மாவும் அப்பாவும் உடனே புறப்பட்டுப் போனாங்க!"

"அடப்பாவமே! முப்பது வயசுதான் ஆகுது அவருக்கு. பெரிய அளவுல காயமாமா?"

"அதெல்லாம் தெரியலை!"

"அப்பா என்ன சொல்லிட்டுப் போனார்? நானும் இப்ப புறப்பட்டுப் போகணுமா?"

"வேணாம்னு சொல்லிட்டாரு. காலைல வந்துடுவோம்னு சொன்னாரு."

"சரி, முகம் கழுவிட்டு வர்றேன். தட்டெடுத்து வை. செமப் பசி."

முகம் கழுவி, உடை மாற்றி வந்து திவ்யமாக சாப்பிட்டேன். சுமதியும் சாப்பிட்டு எல்லாவற்றையும் எடுத்து வைத்து விட்டு வந்து, "சொல்லவே இல்லையே? இன்னைக்கு காலேஜ்ல புல்லாங்குழல் வாசிக்கப் போறதாச் சொன்னீங்களே, வாசிச்சீங்களா சிவாண்ணா?'' என்றாள்.

"அட்டகாசம் பண்ணிட்டேன் சுமதி. என்ன கைத்தட்டல் தெரியுமா? 'ஆயர்பாடி மாளிகையில் தாய் மடியில் கன்றினைப் போல் மாயக்கண்ணன் தூங்குகின்றான் தாலேலோ'ன்னு உருக்கோ உருக்குன்னு உருக்கிட்டேன்!''

"எங்கே, எங்கே எனக்காக ஒரு தடவை வாசிச்சுக் காட்டுங்களேன். ப்ளீஸ்... சிவாண்ணா!"

நான் புல்லாங்குழல் எடுத்து வந்து தரையில் சப்பணங்கால் போட்டு அமர்ந்து காலேஜில் வாசித்த மாதிரியே வாசித்தேன்.

"அய்யோ! ரொம்ப நல்லா வாசிக்கிறீங்கண்ணா. நான் வாசிச்சுப் பார்க்கட்டுமா?''

"ம். பாரேன்?"

அவள் புல்லாங்குழலைத் தப்பாகப் பிடித்து அடுப்பூதுவது போல உஸ்ஸ், உஸ்ஸ் என்று ஊதியது சிரிப்பை வரவழைத்தது.

"மண்டு. அப்படியில்லை. கத்துக்கணும்னு ஆசையா இருக்கா சொல்லு. கத்துத் தர்றேன்!''

"ஆசையாத்தான் இருக்கு!"

"இப்படி வந்து உக்காரு."

அருகில் வந்து உட்கார்ந்த அவள் கைகளைப் பிடித்து புல்லாங்குழலின் ஓட்டைகளில் விரல்களை அமைத்து உயர்த்தி அவள் உதட்டில் வைத்து, "ம். வாசி" என்ற போது, அவளிடமிருந்து சோப்பு வாசனை வந்தது.

என்னுள் ஏதோ ஜிலீரென்று உணர்ந்தேன். என் முழங்கை ரொம்ப யதார்த்தமாக அவள் மார்பில் உரசிக் கொண்டிருப்பதை இப்போதுதான் உணர்ந்து... ஆனால் கையை நான் ஏன் விலக்கிக் கொள்ளவில்லை?

"என்ன சிவாண்ணா அப்படிப் பார்க்கறீங்க?'' என்றாள் சிரித்து.

சரேலென்று விலகி, "அப்புறம் கத்துத் தர்றேன். தூக்கம் வருது'' என்று அவசரமாக அறைக்கு வந்து படுத்துக் கொண்ட நான் பதட்டமாக இருந்தேன். எவ்வளவு நல்ல பையன் நான்? திடீரென்று என்ன ஆயிற்று எனக்கு?




* வைர மோதிரத் தோற்றம்

பூரணசூரிய கிரகணம் 19-ஆம் நூற்றாண்டில் ஒரு முறை மட்டுமே இந்தியாவில் காணப் பட்டது. அதே போல் 21 - ஆம் நூற்றாண்டிலும் ஒரு முறைதான் காணப்படும். ஆனால் இந்த நூற்றாண்டிலோ 1980 - ஆம் ஆண்டு ஒரு முறை நிகழ்ந்து, சமீபத்தில் தீபாவளிக்கு மறுநாள் இரண்டாவது முறையாக நிகழ்ந் துள்ளது. மீண்டும் 1999-ல் இந்தி யாவில் காணப்படும் என எதிர் பார்க்கப்படுகிறது.

சூரியனைப் பூமியும், பூமியை அதன் துணைக்கோளான சந்திர னும் சுற்றி வருகின்றன என்பது தெரிந்ததே. இவற்றின் சுற்றுத்தளங்கள் (planes of revolution) ஒன்றாக இருப்பதில்லை. ஆனால் சில நேரத்தில் மட்டும் ஒரே தளப் பாதையில் பூமிக்கும் சூரியனுக்கும் இடையே சந்திரன் வந்து சூரியனை மறைக்கிறது. இந்நிகழ்ச்சியே சூரியகிரகணம். அத்தகைய நிலை அமாவாசையன்று மட்டுமே வர சாத்தியமாதலால் சூரிய கிரகணம் அமாவாசையன்றுதான் நிகழ முடியும்.

சந்திரன், பூமிக்கும் சூரிய னுக்கும் இடையே ஒரே தளப் பாதையில் (planar axis) இருக் கையில், சந்திரனிலிருந்து கூம்பு வடிவ நிழல் (கரிய பகுதி) பூமி யில் விழுகிறது. இதை 'அம்ப்ரா' (umbra) என்பர். இதைச் சுற்றி 'பெனம்ப்ரா' (penumbra) எனப்படும் 'சார்ந்த நிழல்' பகுதியும் உள்ளது. அம்ப்ரா பகுதிதான் முழு சூரிய கிரகணம் காணப்படும் பகுதி யாகும். பெனம்ப்ரா, நிழல் விழும் இடங்களில் 'பார்சுவ' அல்லது 'குறைக் கிரகணம்' தென்படும்.

24 அக்டோபரன்று காணப்பட்ட பூரண சூரிய



1. சூரியன், 2. சந்திரன், 3. பூமி.

■ அம்ப்ரா எனப்படும் பூரண கிரகணப் பகுதி

□ பெனம்ப்ரா அல்லது சார்ந்த நிழல் பகுதி (குறைக் கிரகணம்)

கிரகணப்பகுதி, இந்தியாவில் சில இடங்களில்தான் தெரிந்தது. சென்னையில் அன்று சுமார் 65 சதவீத குறைக்கிரகணம் நிகழ்ந்தது.

சூரிய மற்றும் சந்திர ஈர்ப்புச் சக்தியை வைத்துக் கணக்கிட்டுப் பார்த்தால், ஒருமுறை சூரிய கிரகணம் நடந்தால் அதற்கு பதினெட்டு வருடம், 11.3 நாட்கள் கழித்து பூமி, சூரியன் மற்றும் சந்திரன் ஆகியவை கிட்டத்தட்ட மீண்டும் அதே நிலைக்கு வரும். எனவே மீண்டும் ஒரு கிரகணம் அன்று வரும் என எதிர்பார்க்கலாம். இதையே வான் இயலாளர்கள் 'சுரோஸ் சுற்று' (Saros cycle) என்பர். ஆக சூரிய கிரகணம் நிகழ்தலை முன்னறிவிக்க இம்முறை பயன்படுகிறது. இந்த காலகட்டத்திற்கு இடையே வேறு கிரகணங்களும் நிகழ வாய்ப்புண்டு.

கிரகணத்தை அனேகம் பேர் பார்த்திருக்க மாட்டார்கள். வெற்றுக் கண்களால் பார்க்கக் கூடாது என்ற நியாயமான எச்சரிக்கை தவிர, பலவிதமான தோஷங்கள் குறித்த ஆதாரமில்லாத பயமும் இதற்குக் காரணம். ஆனால் முறையாக, பாதுகாப்புடன் பூரணகிரக ணத்தைக் காண்பதே ஒரு சுவைமிகு அனுபவம். சிறிது சிறிதாக சூரியன் மறைக்கப்பட்டு, பூரணமாய் மறைவதற்கு முன் ஓர் ஒளி விடும் மணி மாலையைப் போன்ற வட்டம் காணப்படும். சந்திரனின் மேற்பரப்பில் உள்ள மேடுபள்ளங்களே இதற்குக் காரணம். அதன் ஊடே வெளிவரும் ஒளியை நாம் காண, அது மணி மாலை போல ஒரு தோற்றத்தை உண்டு பண்ணுகிறது. இதை 'பெய்லி மணிகள்' (Bailey Beads) என்பர். அது சில மணித்துளி நேரத்தில் மறைந்து ஒரு வைர மோதிரம் போன்ற காட்சியைத் தோற்றுவிக்கும். சந்திரன் சூரியனைப் பூரணமாய் மறைக்கும் நிகழ்ச்சியின் இறுதிக் கட்டம் இது. இது கண்ட சில நொடிகளில் சூரியனின் ஒளிக்கற்றை முழுதும் மறைக்கப்படும். அப்பொழுது இருள் சூழும். நட்சத்திரங்களையும், சுக்கிரன், சனி முதலிய கிரகங்களையும் முன்னிரவில் காண்பது போல காணலாம். சூரியன் முழுவதும் மறைக்கப்பட்டிருக்கும் நேரம் அதிகபட்சம் எட்டு நிமிடங்களே இருக்கும்.

சூரிய கிரகண காலம் பல அறிவியல் ஆய்வுகளுக்கு ஏற்ற காலமாகும். சூரியனின் அண்டவெளி ஒளிப்பகுதி (photosphere), குரோமோப் பகுதி (chromosphere), கரோனா (Carona) என மூவகைப்படும். கரோனா பற்றிய ஆய்வுகள் நடத்த பூரண சூரிய கிரகணம் ஓர் அரிய வாய்ப்பு. மற்றும் புதன், சுக்கிரன் முதலிய கோள்கள் சூரியனுக்கு அருகே உள்ளன. இவைகட்கும் சூரியனுக்கும் இடையே துணைக்கோள்கள் அல்லது வான்பொருள்கள் உள்ளனவா, இருப்பின் அவற்றின் நிலை என்ன என்பதை அறிய முடியும். கிரகண காலத்தில் சூரிய ஓசையில் (Solar noise) ஏற்படும் மாற்றங்கள் மின்காந்த அலையியல் ஆராய்ச்சியில் உதவும். இது தவிர, சூரிய ஒளிக்கற்றையில் ஏற்படும் வீழ்ச்சி, அதனால் வானிலையியல் அலகுகளில் ஏற்படும் மாற்றங்கள் ஆகியவை பற்றிய ஆராய்ச்சிகளும் கிரகண காலத்தில் நடத்தப்பெறும். பறவை, மிருகங்கள் போன்ற உயிரினங்களின் செய்கை, போக்குகளில் மாறுதல்கள் உள்ளனவா எனவும் கிரகண காலத்தில் ஆய்வு செய்யப்படுகிறது.

- டாக்டர் டி. ஆர். சிவராமகிருஷ்ணன்

(இயக்குனர், இந்திய வானவியல் துறை)

சரியான தலைவலி!

"அந்த மாநாட்டிற்குப் போய் வந்தேன். ஒரே தலைவலி, போர் அடித்துவிட்டார்கள்!" - இப்படி எவரேனும் உங்களிடம் கூறி இருப்பார்கள். ஆனால் தலைவலிக்காகவே ஒரு மாநாடு கனடாவில் அண்மையில் நடந்து முடிந்திருக்கிறது! அகில உலக ஏழாவது தலைவலி மாநாடு!

இந்த மாநாடு இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடந்து வருகிறது. தலைவலி மனிதனுக்கு ஏன் வருகிறது? அது எத்தனை வகைப்படும்? விளக்குவது எப்படி என்பதை ஆராய்வதே இந்த மாநாட்டின் நோக்கம்.

தகவல் : வீ.எஸ். ராஜகோபால்



இல்லாதது

ஆபீஸ் விஷயமாக ஒரு வாரம் டெல்லி சென்றிருந்த சமயம், அப்ரண்டிஸ் இண்டர் வியூ முடிந்திருந்தது.

"பாலச்சந்தர்..." ரங்காச்சாரி அழைத்தார்.

"மூணு கேன்டிடேட் செலக்ட் பண்ணி இருக்கோம். ரெண்டு பேர் ஜென்ட்ஸ்!"

"எங்கள் செக்ஷனுக்கு அந்த மூன்றாவது கேன்டிடேட்ட அனுப்பிடுங்க..." என்றேன்.

"நிச்சயமா... உங்களுக்கும் பேச்சுத் துணைக்கு ஒரு பொண்ணு வேணும் இல்லையா...?" சாரி சிரித்துக் கொண்டே சொன்னார்.

வாஸ்தவம்தான். இதுவரை– கல்யாணத் தைத் தள்ளிப் போட்டாயிற்று. முப்பத்தெட்டு வயது வரை! கிராமத்தில் விவசாயத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும் அப்பாவும் சலித் துப் போய் தம்பிக்குக் கல்யாணம் பண்ணி வைத்து விட்டார்.

மனசுக்குப் பிடித்தவள் அமையவில்லை. உடன் வேலை பார்த்து, எட்டாண்டுகள் நட் பாகப் பழகிய நண்பனின் மனைவி தற் கொலை செய்து கொண்ட பின், பெண்களைப் புரிந்து கொள்ள முயற்சி செய்யவே பயமாகத் தான் இருக்கிறது.

இத்தனை வருட உழைப்பில் ஊருக்கு நடுவே வீடு, வந்து போக பைக், கணிசமான பேங்க் பேலன்ஸ், காசுக்குக் கவலை இல்லாத வாழ்க்கை. வேறு என்ன வேண்டும்?

கடவுள் எல்லாமே நிறையத் தந்திருப்பது போல திருப்தி–

உஷாவை சந்திக்கும் வரை.

பத்து பத்துக்கு அலுவலகத்துக்குள் நுழை யும் அவள்–

குற்றவாளி மாதிரி நடுங்கிக் கொண்டிருந் தாள்.

"சாரி சார்... பத்து நிமிஷம் லேட்..." என் றாள், இமைகள் படபடக்க.

"நீ....?"

"உஷா."

"உஷான்னா?"

"புது அப்ரண்டிஸ். முதல் நாளே லேட்டு..."

"ஓக்கே... சீட்டுக்குப் போ... சரவணன்னு ஒரு கிளார்க்குக்கு அஸிஸ்ட் பண்ணு. நான் சில சமயம் கூப்பிடறப்போ வந்து லட்டர்ஸ் எடுத்துக்கோ."

சாரி இன்டர் காமில் வந்தார்.

"என்ன பாலச்சந்தர் சார். கேன்டிடேட் ஓகேயா?"

"டபுள் ஓகே..." என்றேன் ஜாலியாக.

அதிக மேக்-அப் இல்லை. கைகளில் வெறும் சங்கு வளையல்கள். கழுத்தில் ஓர் ஆபரணம்.

திருத்தமான முகம். ஒரு பரு இல்லாமல். எல்லாவற்றையும் கொஞ்சம் அதிசயத்தோடு பார்க்கிற குழந்தைப் பார்வை... பளிச்சென்ற சிரிப்பு. ஒருவாரத்தில் வேலை முழுக்க கற்றுக் கொண்டாள்.

மற்றவர்கள் கேன்டீனில் அரட்டை அடிக் கும் பொழுது இவள் மட்டும் வராந்தாவில் காப்பி குடித்துவிட்டு ஏதாவது ஃபைலைப் புரட்டிக் கொண்டிருப்பாள். லஞ்ச் டயம் முடிந்து, ஆங்கிலப் பத்திரிகையின் கட்டுரை களை கவனமாகப் படித்துக் கொண்டிருப் பாள்.

ஒருநாள் மதிய இடைவேளையில் வலியச் சென்று பேசினேன்.

"உஷா..."

திடுக்கிட்டுத் திரும்பினாள்.

"சார்...."

"என்ன படிக்கறே?"

"எம்.எஃப். உசேன் ஓவியம் பற்றி ஒரு கட்டுரை..."

"உனக்குப் பிடிக்குமா?"

"ரொம்ப...." என்ற போது விழிகள் விரிந் ததை ரசித்தேன்.

"வேறென்ன பிடிக்கும்?"

"கவிதைகள்..."

சரஸ்வதி பூஜையின் போது கலர் பொடி கொண்டு அழகாகக் கோலமிட்டாள்.

பழைமை, புதுமை இரண்டையும் அவள் சமமாகத் தெரிந்து வைத்திருப்பது ஆச்சரிய மாக இருந்தது.

பூஜை முடிந்து பைக்கில் பிரசாத பையை மாட்டி, உதைத்துக் கிளம்பும் பொழுது உஷா வருவது தெரிந்தது. 'ஒரு நிமிஷம் நிறுத்தி அவளை அவள் ரூமிலோ, வீட்டிலோ ட்ராப் பண்ணி விடலாம்' என்று நினைத்தேன். அப் பொழுதுதான் அவள் மற்றொரு அப்ரண்டிஸ் பையனுடன் சிரித்தபடி வருவது தெரிந்தது.

'யார் இவன்...?' சாரியிடம் விசாரிக்க வேண்டும். 'எத்தனை நாள் பழக்கம்?' நாளை உஷாவிடம் கேட்க வேண்டும். மிஞ்சி மிஞ்சிப் போனால் ஒரு வருடம் [illegible]

இல்லாத வேலையை வைத்துக் கொண்டு காதலா!

அந்தப் பையன் ஒல்லியாக இருந்தான். உயரம் கூட உஷாவை விட கம்மிதான். கண்ணாடி அணிந்திருந்தான். அவன் பேசிய எல்லாவற்றுக்கும் அவள் சிரித்தபடி வந்தாள்.

என்னுள் என்னவோ பற்றிக் கொண்டது. என்ன இருக்கிறது இவனிடம்?

அவர்கள் கேடிசி பஸ்ஸிற்கு எதிர்த் திசையில் திரும்பி நடந்ததால் என்னைக் கவனிக்கவில்லை.

வீட்டுக்குப் போனதும் முதல் தடவையாக போரடித்தது. யாரிடமாவது பேச வேண்டும் போல் இருந்தது. அப்பாவிடம் கல்யாணத்தை நடத்திவிடச் சொன்னால் என்ன – உஷாவுடன்?



வரதட்சணை வாங்காமல்...

நாமே நகை போட்டு...

கல்யாணச் செலவையும் ஏற்று...

உஷாவின் பெற்றோருக்குக் கசக்கவா செய்யும்?

என்ன இல்லை என்னிடம்...?

அடுத்த நாள் கிளம்பும் பொழுது மற்ற நாட்களை விட இன்னும் கொஞ்சம் அக்கறை எடுத்து ட்ரெஸ் செய்து கொண்டேன்.

அவளிடம் நளினமாகக் கேட்க வேண்டும். பெற்றோரின் விலாசத்தை விசாரிக்க வேண்டும்.

உடுப்பி ஹோட்டலில் டிபனை விரைவாக முடித்து விட்டு, பத்து நிமிஷம் முன்னாலேயே அலுவலகம் வந்தாயிற்று.

லிஃப்டைத் தவிர்த்து விறுவிறுவென்று படியேறினேன். வேகம், துடிப்பு.

கடைசிப் படியில் கால் வைத்தபோது கால் சுளுக்கிக் கொண்டது.

மூட்டு மடங்கி, அப்படியே உட்கார்ந்து விட்டேன். வலி உயிர் போனது. காலை நீட்ட முடியவில்லை.

“சார்...” தூரத்தில் பார்த்துவிட்ட உஷா, அவசரமாக வந்தாள்.

‘சீனு’ என்று அவள் நண்பனையும் கூப்பிட்டு, கைக்கு ஒருவராக பிடித்துக் கொண்டு, “மெதுவாக, எழுந்திருங்க சார்... உங்க ரூமுக்குப் போயிடலாம்...” என்றாள். அவர்கள் ஓடி வந்தபோது என் இயலாமை புரிந்தது.

காலைத் தூக்கி வைக்க முடியவில்லை.

சீனு என் ஷூவைக் கழற்ற, அவள் தன் ஹேண்ட் பேகில் இருந்த அமிர்தாஞ்சனை எடுத்துக் காலில் அழுந்தத் தேய்த்தாள்.

நிமிடத்தில் செய்தி பரவி, ஒவ்வொருவராக நேராக என் ரூமிற்கே வந்து விட்டனர்.

“ஐம் ஓகே...”– போலியாகச் சொல்லி அவர்களை அனுப்பி வைத்தேன்.

உஷாவும் சீனுவும் இன்னும் என் பக்கத்திலேயே நின்று கொண்டிருந்தனர்– உண்மை புரிந்த மாதிரி.

பஸ்ஸரைத் தட்டி ப்யூனை அழைத்து மூன்று காப்பி– அவனுக்கும் சேர்த்து ஆர்டர் செய்தபோது ஆச்சரியமாகப் பார்த்தான்.

“சார்... இது... சீனு... சீனிவாசன் எம்.காம். என்னை மாதிரியே கவிதைப் பித்தன்.

“ஹலோ... உஷா சொன்னது கொஞ்சம் அதிகம். நமக்குக் கவிதை படைக்க வராது! படிக்க வரும்!”

“எனக்குக் கவிதை படிக்கக் கூட பொறுமை கிடையாது சீனு...”என்றேன். அவன் மையமாகச் சிரித்தான்.

“யு ஆர் லக்கி” என்றேன் அவனைப் பார்த்து. விரட்ட முயன்ற வருத்தம் என் குரலில் கொஞ்சமாகத் தலைகாட்டியதை அந்த கவிதைப் பித்தர்கள் இருவருமே கவனிக்கவில்லை....

நா. நாசராஜன்

கொட்டும் மழை சீசன். சூடான டீ குடித்தபடி ஜன்னல் வழியே தெரியும் மழைக் கம்பிகளை ரசிக்கலாம்... எல்லாம் தலைக்கு மேலொரு கூரை இருக்கும் தைரியத்தில்தான். அதில்லாத பிளாட்பாரவாசிகளின் நிலை என்ன...? விசாரிக்கக் கிளம்பினோம் - மழை பெய்யாத ஒரு நாளில்...

"**கா**த்து, வெயில், மழை - எல்லாமே பழகிப் போச்சு... இரண்டு தலைமுறையா பிளாட்பாரம்தான் சார். "இங்கேதான் நான் பொறந்து, வளர்ந்து, கல்யாணம் கட்டிக்கிட்டது எல்லாம்."

சர்வசாதாரணமாய் பிளாட்பாரக் கல்லில் உட்கார்ந்து கொண்டு பேசத் தொடங்கினார் சங்கர். சென்னை, ஐஸ்ஹவுஸ் பஸ் ஸ்டாண்டை ஒட்டி உள்ள பிளாட்பாரம்தான் இவரது வசந்த மாளிகை!

வளர்ப்பு மக
செலவழிச்ச ப
கட்டித் தரல

இந்தப் பக்கம் கூவ மணம் வீசும் சாக்கடை. அந்தப் பக்கம் வாகனப் பேரிரைச்சல். கார்ப்பரேஷன் சுவரை ஒட்டி, சங்கரின் ஆஸ்திகள். நாலைந்து பாத்திரம். இரண்டு மூன்று டப்பாக்கள். பிதுங்கித் தெரியும் அழுக்குத் துணிகள்.

"மொதல்ல எல்டாம்ஸ் ரோட்ல இருந்தோம். அப்புறம் இங்க வந்துட்டோம். அந்தக் காலத்துல எங்கப்பா கைவண்டி இழுத்தாரு. இப்ப நான் டிரை சைக்கிள் ஓட்டறேன்.

"வண்டிக்குப் பதினைஞ்சு ரூபா வாடகை. சவாரி கெடைச்சாலும் கெடைக்காட்டாலும் குடுத்துடணும். சில நாள் அம்பது - அறுபது ரூபா வரும். சில நாள் ஒண்ணுமே வராது..."

படிப்பு கிடையாது. அனுபவம் மட்டுமே அறிவு தந்தது. சங்கருக்கு வயது 26.

"படிக்கணும்னுதான் ஆசை. எங்கப்பா பத்து வயசுலேயே வண்டியோட்டச் சொல்லிட்டாரு. அண்ணன் எட்டாவது வரைக்கு



பலவேசம் பிள்ளை வீட்டு வாசல் திண்ணையில் அமர்ந்திருந்தார். வாட்டசாட்டமான உடல். நல்ல கறுப்பு. இடுப்பில் வேட்டி. மேல் துண்டை அருகே வைத்துக் கொண்டிருந்தார். பனைவிசிறியால் வீசிக் கொண்டிருந்தார். அதையும் மீறி வேர்வை.

உட்புறமாகத் திரும்பி 'ஏளா' என்று குரல் கொடுத்தார். கையில் சொம்பில் மோருடன் வந்தாள் கோமதி.

"எங்கே போயிட்டானுவ பயலுவ? ராவுத்தர் வூட்டுக்குப் போயிட்டானுவளா? காலையிலே கூழோ, கஞ்சியோ குடிச்ச உடனே அவர் வூட்டுக்குப் போயிடறது. வெட்டிப் பயலுவ!"

– உரத்த குரலில் அலுத்துக் கொண்டார் பெரியவர்.

அவர் அலுத்துக் கொள்வதிலும் நியாயம் இருந்தது. இரண்டு மூன்று வருடங்கள் வரை அவரே சொந்த நிலத்தில் விவசாயம் செய்து வந்தார். கடற்கரைக்கு உள்ளே தள்ளி ஐந்து ஏக்கர். இன்னும் உள்ளே தள்ளி மூன்று ஏக்கர்கள். பூர்வீக ஆஸ்தி. வானம் பார்த்த பூமி. அவர் விவசாயம் பார்த்து, கஷ்டப்பட்டு மகன்களைப் படிக்க வைத்தார்.

மூத்தவன் பெரியசாமி தட்டுத் தடுமாறி பி.ஏ. முடித்தான். சிறியவன் காளிமுத்து ரெஃப்ரிஜெரேஷன் அண்ட் ஏர்கண்டிஷனிங்கில் டிப்ளமா வாங்கினான். இருவரும் வேலை தேடிக் கொண்டிருந்தார்கள். விவசாயம் செய்ய இஷ்டமில்லை. விவசாயம் செய்வது கௌரவக் குறைவு என்ற எண்ணம் அவர்களுக்கு.

பலவேசம் பிள்ளைக்கு இப்போது பார்வை சற்று மங்கல். உடல் என்னவோ வலுவாகத்தானிருந்தது. விவசாயம் செய்ய இயலவில்லை. 'மகன்களை நம்பிப் பிரயோஜனமில்லை' என்று குத்தகைக்கு விட்டிருந்தார் நிலங்களை.

'காலையிலே எழுந்தவுடனே ராவுத்தர் வீட்டுக்கு ஓடிட்டானுவளே, ராவுத்தரும் நாமும் ஒண்ணாயிட முடியுமா?'

– தனக்குத் தானே உரக்கப் பேசி அங்கலாய்த்துக் கொண்டார் பெரியவர்.

உண்மை. ராவுத்தரும் பிள்ளையும் ஒன்றாகிவிட முடியாதுதான். ஊரிலிருந்த ஒரே பெரிய கடை ராவுத்தருடையது. அது தவிர ஏராளமான நிலபுலன்கள். மனிதர் நல்லவர். பெரியசாமியும் காளிமுத்துவும் சிறு வயதில் ராவுத்தர் மகன்களுடன் ஒன்றாகப் படித்தவர்கள். ராவுத்தர் வீட்டில் 'டிஷ் ஆன்டெனா' இருந்தது. பெரியசாமியும் காளிமுத்துவும் கிரிக்கெட்



தாய்நிலம்

ாட்ச் அது இது என்று பார்த்துக் கொண்டிருப்பார்கள், ராவுத் நர் மகன்களுடன்.

யாரோ வருவது தெரிய, கண்களை இடுக்கிப் பார்த்தார். ரியாகத் தெரியவில்லை. செருப்புச் சத்தத்தில் தெரிந்து கொண் டார். கோடி வீட்டு பாராங்குசத்தின் மகன் வேணுகோபால். அவர் மகன் காளிமுத்துவின் வயது.

"யாரு வேணுகோபாலா?"

"ஆமாம் பெரியவரே!"

"என்னடா அது சத்தம்? ஏதோ லாரி டிரக் போற மாதிரி? கண்டிப்பா இது டவுன் பஸ்ஸில்லே. பஸ்ஸானா நின்னு நின்னு மெள்ளப் போறச் சத்தம் கேக்குமே?"

'கிழவர் எமகாதகப் பேர்வழி' என்று சிலாகித்துக் கொண் டான் வேணுகோபால். 'இவர் படித்திருந்தால் எல்லோரையும் விழுங்கி ஏப்பம் விட்டிருப்பார்.'

"நமக்கெல்லாம் நல்ல காலம் தாத்தா! கொஞ்ச நாள்ல நம்ம கிராமம் ரொம்ப முன்னேறிடும். இறால் பண்ணை அமைக்க நம்ம ஊர் தோதா இருக்காம். பெரிய பெரிய மல்டிநேஷனல் கம்பெனிகள், பல தேசங்களிலே இருக்கிற பெரிய கம்பெனிகள் இந்த ஊரிலே இறால் பணணை வெக்கப் போறாங்க. இதனாலே ஊர்ல தார் ரோடுங்க வரும். கடை கண்ணின்னு ஊரு பெரிசா பிடும். வியாபாரம் பெருகும். ஊர் ஜனங்களுக்கு வேலை கிடைக் கும். பெரிய பெரிய மின்விசைப் படகு வெச்சு மீன், இறால் எல்லாம் பிடிக்கப் போறாங்க. சின்னச் சின்ன மீனவங்க இப்போ போல மீன் விக்க 'லோ-லோ'ன்னு அலைய வேணாம். மொத்தமா ஜனங்க பணத்தை அரிச்சுக் கொட்டலாம். நம்ம ஊர் சொர்க்க பூமியா மாறிடப் போகுது!"

"போடா போக்கத்தவனே! வேற ஊர்க்காரன் இந்த ஊரை உத்தாரணம் பண்ண வரானா? அவன் காசு பண்ண வரான். காரியம் ஆனதும் போயிடுவான். நீ விரலை வாயில வெச்சுக் கிட்டு நிப்பே. பரம்பரை பரம்பரையா செய்யற விவசாயத்தைப் பண்ணுவியா? அதை விட்டுட்டு இறால் பண்ணை வெக்கறாங் களாம். அதை இந்தப் போக்கத்த பயலுவ 'ஈ'ன்னு பார்த்துட்டு நிக்கறானுங்களாம். சே!"

"நான் அப்புறம் வர்றேன் பெரியவரே!"

கிழவரை மனதுக்குள் திட்டியபடியே கிளம்பினான் வேணு கோபால். 'கிழத்துக்கு வேற வேலையில்லே. புதுசா எது வந்தாலும் எதிர்க்க வேண்டியது.'

ஆயிற்று ஒரு மாதம். இறால் பண்ணை அமைக்க ஜரூராக வேலைகள் தொடங்கி விட்டன. ஊர் பெரிதாகித்தான் போனது. பஸ் ஸ்டாண்ட் அருகே நிறைய பெட்டிக் கடைகள் உருவாகின. கோலி சோடா இடத்தில் பெப்ஸி கோலா. ராட்சத இயந்திரங்கள் வந்தன. எஸ்கலேட்டர்கள் பண்ணை அள்ளின. புல்டோசர்கள் நிலத்தைச் சீர்படுத்தின. செயற்கைக் குளங்கள் வெட்டப்பட்டன. குளத்தில் கடல் நீரை நிரப்ப ராட்சத பம்புகள், ஜெனரேட்டர்கள் உபயோகிக்கப்பட்டன. பலதரப்பட்ட மக்கள் வரத் தொடங்கி னார்கள். ஊரில் பணப்புழக்கம் அதிகரித்தது.

மூன்றே மாதங்கள். ஊர் முழுமையாக மாறி விட்டது. ஊரெங்கும் முக்கிய வீதிகளில் தார் போடப்பட்டது. தெருக்கள் அகலப்படுத்தப்பட்டன. ரோட்டோரம் நிழல் தந்த மரங்கள் ரோட்டை அகலப்படுத்த அடியோடு பிடுங்கப்பட்டன. சினிமா பார்க்கப் பத்து கிலோ மீட்டர் நடந்தவர்கள், இன்று ஊரிலேயே செமி பர்மனெண்ட் தியேட்டரில் பார்த்தார்கள்.

ஊரைச் சுற்றியிருந்த தென்னந்தோப்புகள், மாந்தோப்புகள் அழிந்து இறால் பண்ணைகளாக மாறின. பத்தாயிரம் விற்ற ஏக்கரா எழுபதாயிரம் ஆயிற்று.

செல்வச் செழிப்பு ஊரில் தெரியத்தான் செய்தது. வானம் பார்க்கச் சும்மா இருந்த பூமியை விற்றதில் காசு புரண்டது. சோத்துக்கு லாட்டரி அடித்தவனெல்லாம் இன்று ஷூவுடன் மோட்டார் சைக்கிளில் போகத் தொடங்கினார்கள்.

ஊர் விடலைப் பையன்கள் பலவேசம் பிள்ளையைக் கிண்டுவார்கள்.

"என்ன பெரியவரே! அப்படியே பொடி நடையாத் தார் ரோடிலே போய் சினிமா பார்த்துட்டு வரலாம்!"

கிழவர் கோபத்தில் தாறுமாறாகக் கத்துவார்.

''போடா, கம்மனாட்டிப் பயலுவளா? கோமணம் கட்டாத பயலெல்லாம் இன்னைக்கி பாண்ட் போட ஆரம்பிச்சுட்டான். அடிச்சுப் போட்டா பாக்கெட்ல பத்து ரூபா கெடையாது. ஆயிரம் ரூபா 'ஷூ' போடறானுவ!"

விடலைப் பையன்கள் போன பின்பும் புலம்பிக் கொண்டிருப்பார் வெகு நேரம்.

இறால் பண்ணையில் பெரியசாமிக்கும் சரி, காளிமுத்துவுக்கும் சரி வேலை கிடைக்கவில்லை. பண்ணைகளில், தற்குறிகளுக்குத்தான் கூலி வேலை கிடைத்தது. பெரிய வேலைகள் ஃபிஷரி பயாலஜி, மரைன், மைக்ரோ பயாலஜி படித்தவர்களுக்கே கிடைத்தது. அனைவரும் வெளி ஆட்கள்.

''என்ன சார், உங்க மனைவியை ஆத்தங்கரைல நிறுத்தி வெச்சு 'டேப்புல' அளந்து பார்க்கிறீங்க?''

''ஆத்துல போட்டாலும் அளந்து போடுன்னு, பெரியவங்க சொல்லியிருக்காங்களே, அதான்!''

— யோகானந்தம்



பெரியசாமி இறால் பண்ணைகளுக்குத் தீனி சப்ளை செய்ய 'ஷிரிம்ப் ஃபீட் மில்' ஒன்று வைக்க ஆசைப்பட்டான். தேவை பணம். தம்பி காளிமுத்து துபாய்க்குப் போக முயற்சித்தான். தேவை – குறைந்தபட்சம் ஐம்பதாயிரம் ரூபாய்.

சில நாட்களாகவே வீட்டில் வாக்குவாதம். எட்டு ஏக்கரா நிலத்தை விற்றால் நல்ல பணம் கிடைக்கும். பெரியசாமி ஃபீட் மில் வைக்கவும் காளி துபாய் போகவும் உதவும். வியாபாரம் சூடு பிடித்தால் மாதம் பத்தாயிரம் அரித்துக் கொட்டலாம் என்று பெரியசாமி திட்டமிட்டான்.

பலவேசம் பிள்ளைக்கு நிலத்தை விற்க இஷ்டமில்லை. இத்தனை நாள் சோறு போட்ட அன்னலட்சுமியைப் பிடிவாதமாக விற்க மறுத்தார்.

"ஏண்டாலே! வீட்டிலே இருக்கிற லட்சுமியை வரப் போற மூதேவிக்காக விற்க முடியுமா? சோறு போடற லட்சுமிடா அது!"

பூர்வீகச் சொத்து. குத்தகையின் சொற்ப வரும்படி. மனைவி–மக்களின் கசமுசா. வேண்டாவெறுப்பாக நிலத்தை விற்கச் சம்மதித்தார். பத்திரங்களை விற்கக் கைநாட்டு வைத்த போது அவரது உடலிலிருந்து உயிரே போவது போன்ற உணர்வு. சோர்வு.

மூன்று மாதங்கள். இப்போது பெரியசாமி இறால் ஃபீட் மில்லுக்குச் சொந்தக்காரன். ஓரளவு வீட்டுச் செலவுக்குப் பணம் வந்தது. இன்னும் சில காலம் சென்றால் நிறைய பணம் வரும் என்று நம்பினான். காளிமுத்து பம்பாய் போனான், துபாய் போகும் உத்தேசத்தில்.

''அப்பன் பேச்சைக் கேட்டிருந்தால் இப்போ இவ்வளவு காசு வந்திருக்குமா? குத்தகைக்காரன்கிட்டே இல்லே மாரடிச்சிருக்கணும்?"

பெரியசாமி தன்னைப் பார்க்க வந்திருந்த வேணுகோபாலிடம் பீற்றிக் கொண்டான்.

இப்போது பெரியசாமி விற்ற நிலம் ஏக்கர் ஒன்று இரண்டு லட்சம். காசு கொடுத்தாலும் நிலம் கிடைக்காத சூழ்நிலை. வாயில் வெற்றிலை, தலையில் நிறைய பூ. கண்களில் அதிகப்படியான மை – இவற்றுடன் பெண்கள் பஸ் ஸ்டாண்டைச் சுற்றித் திரியத் தொடங்கினார்கள். நாற்சந்தியில் கொட்டிக் கிடந்தாலும் திருட்டுப் போகாத ஊரில் அவ்வப்போது சிறிய, பெரிய திருட்டுக்கள் ஏற்படத் துவங்கின.

சிறிய மீனவர்கள் பெரிய விசைப் படகுகள் முன்னே போட்டி போட முடியவில்லை. கிலோ மீட்டர் கணக்கில் உள்ள ராட்சத வலைகளை மீறிச் சிறிய மீனவர்களுக்கு எதுவுமே கிடைக்கவில்லை. ஆரம்பத்திலாவது அவர்கள் பிடித்த இறால் மீனுக்கு நல்ல விலை



''என்னய்யா இது... நிதி நிறுவனம்னு சொல்லிகிட்டு வீடு புகுந்து கத்தி முனைல பணம் பிடுங்குறீங்க?''

''டெபாசிட் சேகரிப்பு டீம்ல நாங்க கொஞ்சம் தீவிர பிரிவு!''

— அம்பை தேவா

கிடைத்தது. இப்போது முதலே மோசம் போன கதை.

அன்று காலை வழக்கம் போல் பலவேசம் பிள்ளை திண்ணையில் உட்கார்ந்து கொண்டிருந்தார். அருகே வந்ததும்தான் தெரிந்தது அது ராமசாமிக் கௌண்டர் என்று. அவர் ஒத்த வயது. சிறு வயது நட்பு.

"அடேடே! ராமசாமியா? வா வா! என்ன இவ்வளவு தூரம்?" – திண்ணையில் அமர இடம் கொடுத்தார்.

"ஏளா! வந்திருக்கிறது யார் பார்! குடிக்க மோர் கொண்டா!"

உள்ளே குரல் கொடுத்தார் பிள்ளை.

ஊரிலிருந்த அனைவரும் தங்கள் தங்கள் நிலங்களை இறால் பண்ணைக்கு விற்ற போது ராமசாமிக் கௌண்டர் பிடிவாதமாக விற்க மறுத்து விட்டிருந்தார். பேச்சு விவசாயத்திற்குத் திரும்பியது.

''இல்லே பலவேசம்! இப்போ இறால் பண்ணையாலே ஊரே கெட்டுப் போச்சு. கடல் நீரை உள்ளே கொண்டு வந்து எல்லா விளைச்சல் நிலங்களும் உப்பு சேர்ந்து போய் எது போட்டாலும் வெளைய மாட்டேங்குது. எதுவும் பிரயோஜனமில்லே!''

– விசனப்பட்டார் கவுண்டர். தன் கடைசி மகன் திருமண அழைப்பிதழைக் கொடுத்து விட்டுப் போனார்.

ஆந்திரக் கடற்கரையோரம் இறாலைப் பிடித்த ஒரு வைரஸ் நோய், தமிழ்நாட்டுக் கடற்கரையோரக் கிராமங்களிலும் வெகுவேகமாகப் பரவியது. இறால் பல்லாயிரக்கணக்கில் மடிந்தன. அனைத்து கம்பெனிகளுக்கும் பெரு நஷ்டம். சிறு சிறு பண்ணைகள் தலைநிமிர முடியாமல் நஷ்டம். மல்டிநேஷனல் கம்பெனிகள் சுதாரித்துக் கொண்டன. தற்காலிகமாக இறால் பண்ணைகளை நிறுத்தின – அந்த நோய்க்கு மருந்து கண்டுபிடிக்கும் வரை.

பெரியசாமிக்குப் பெரிய நஷ்டம். இறால் செத்த பிறகு அதன் உணவு எப்படி விலை போகும்? முன்பு கடனுக்குக் கொடுத்த இறால் உணவுக்கான காசே கையில் வரவில்லை. வேலை சுத்தமாக நின்று போனது. பெரு நஷ்டம். நாட்கள் போய் மாதங்களாயின. பண்ணைகள் திறந்தபாடில்லை.

விளைநிலங்கள் அதீத உப்பு காரணமாக உப்பளங்களாகிப் போயின. ஒன்றும் விளையாத நிலை. பெரியசாமி வீட்டிலிருந் தான். பலவேசம் ஆவேசப்பட்டார்.

"ஏண்டாலே! நிலத்தை வித்துப் போட்டா இம்மாம் பணம் கெடைக்கும், அம்மாம் பணம் கெடைக்குமின்னியே... இப்போ ஒருவேளை கஞ்சிக்கே வழியில்லே. பெரிய பெரிய கம்பெனி வந்திச்சே. எவனுக்குப் பலன் வந்தது? லாபம் வந்தப்போ சம்பாதிச்சான். நஷ்டம் வந்தப்போ இழுத்து மூடிட்டான். ஊர் ஜனங்க விரல் சூப்பிட்டு உட்கார்ந்திருக்கானுவ. காடு கழனியெல்லாம் உப்பாப் போச்சு. ஒண்ணுக்கும் உதவாமே போயிடிச்சு. கிணறு வெட்டினா சர்க்கரையா இருந்த தண்ணி இப்போ வாயிலே வைக்க முடியாதபடி உப்பு. அதுவும் நூறு, இரு நூறு அடி ஆழத்திலே!"

மூச்சு வாங்கத் தொடர்ந்தார் பெரியவர்.

"ஏண்டா! பெத்த அம்மா அழகாயில்லேன்னு பக்கத்து வூட்டுப் பொம்பளைய அம்மான்னு கூப்பிடுவியா? பணக்காரியா இருந்தா அம்மான்னுவியா? நிலத்தில பாடு பட்டா பலன் கண்டிப்பாகக் கிடைக்கும். நாங்க காடு கழனியிலே செருப்புக் காலோட நடக்கவே மாட்டோம்டா. நிலம் தாய்டா. காசுக்காகத் தாயை வித்துட முடியுமா?

தொடர்ந்தார் பெரியவர்.

"உங்ககிட்டே சொல்லிப் பிரயோஜனமில்லே. கூடக் காசு கொடுத்தாங்கன்னா பெத்த அம்மாவையே வித்துடுவீங்க. தார் ரோடு வந்துச்சு, சினிமாக் கொட்டகை வந்ததுன்னு பெருமைப்பட்டீங்க. காலி வயித்தோட போய் தார் ரோட்லே உருளுங்க, போங்க!"

எதிர்காலம் பற்றிய கவலையில் கனமான மௌனம் நிலவியது அங்கே.

பிரபலங்கள் நடத்தும் பயிற்சிப் பள்ளிகள்!



பரதன் அச்சகத்தில் அச்சிட்டவர் : வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் : கி. ராஜேந்திரன்.
ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; மானேஜிங் டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
அரை மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 525/-.

SANMAC
Moving into the future. With you.

இனி வரவிருக்கும் ஆண்டில் எதிர்கொள்ள வேண்டிய மாபெரும் சவால்களை எல்லாம் சந்திக்க முற்றிலும் தயாராக உள்ளது இந்த நிறுவனம். இந்த செல்வச் செழிப்பிலும் வளர்ச்சியிலும் நீங்கள் நிச்சயம் பங்கு பெற வேண்டும்.

இதற்கு நல்ல நாள் பார்க்க வேண்டிய அவசியமே இல்லை. இதில் நீங்கள் சேரும் நாளே, வளமான வருங்காலத்திற்கு நல்லதொரு `தொடக்கம் ஆகும்.

இன்றே சான்மேக் சீட்டில் சேர்ந்திடுவீர்!

குரூப் குறியீடு	சீட்டுச் சந்தா ரூ	மாதங்கள்	சீட்டு மதிப்பு ரூ	நிர்வாகக் கட்டணங்கள் ரூ	அன்பளிப்புகள்
B	500	X 20	10,000	40.00	பிக்னிக் பேக்
F	500	X 30	15,000	75.00	மூடியுடன் கூடிய ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரம்
HF	750	X 20	15,000		
JF	1,000	X 15	15,000		
J	1,000	X 25	25,000	85.00	டிராவல் பேக்
G	1,500	X 20	30,000	105.00	லஞ்ச் செட்
RK	2,000	X 15	30,000		
S	2,500	X 20	50,000	135.00	சூட்கேஸ்
R	2,000	X 25	50,000		
LH	2,500	X 40	1,00,000	280.00	டீலக்ஸ் சூட்கேஸ்
LK	4,000	X 25	1,00,000		
LS	5,000	X 20	1,00,000		
LG	5,000	X 30	1,50,000	400.00	வெள்ளிப் பொருள்
TL	5,000	X 40	2,00,000	500.00	
CL	10,000	X 30	3,00,000	600.00	
PL	12,500	X 40	5,00,000	800.00	தங்க நாணயம்

குறிப்பு : எல்லா சீட்டு குரூப்புகளுக்கும் ஏலத் தொகைக்கு 30% உச்ச வரம்பு.

முன் அனுமதி பெற்றது.

சான்மேக் சிட்ஸ் லிமிடெட்

நிர்வாக அலுவலகம்: "லஷ்மி டவர்ஸ்", 27, டாக்டர் ராதாகிருட்டிணன் சாலை, மயிலாப்பூர், சென்னை 600 004. தொலைபேசி : 8258637, 8240051.


கிளைகள் : சென்னை: அண்ணா நகர் ✆ 6214454. அசோக் நகர் ✆ 4824757. அண்ணா சாலை ✆ 8520921. மயிலாப்பூர் ✆ 4992488, 4990027. புரசைவாக்கம் ✆ 6425036. தி. நகர். ✆ 8278515. மேற்கு தாம்பரம் ✆ 2366327. கடலூர் ✆ 22728. கோயம்புத்தூர் ✆ 446375, 471403. கும்பகோணம் ✆ 24844. மதுரை ✆ 540849. நெய்வேலி ✆ 22984. சேலம் ✆ 446607. திருச்சி ✆ 25324. திருவண்ணாமலை ✆ 22922, 23333. திருநெல்வேலி ✆ 322032. பெங்களூர் ✆ 368331. திருப்பதி ✆ 24376. ஐதராபாத் ✆ 397879. விசாகப்பட்டினம் ✆ 545854.

BID FOR A BETTER LIFE

SRICHAKRA COMS. 748/95.

அந்தச் சிறிய குடிசையின் முன்புறமும், சற்றுத் தள்ளியிருந்த வேப்ப மரத்தின் நிழலிலும் கும்பல் கும்பலாகக் கூட்டம் நின்று கொண்டிருந்தது.

குடிசையை ஒட்டியிருந்த திண்ணையில் உட்கார்ந்திருந்த பெண்களின் நடுவில் இசக்கியின் தாய் முத்தம்மாவும், அண்ணிக்காரி நாக லட்சுமியும் தலைவிரிகோலமாக உட்கார்ந்திருந்தார்கள். குனிந்து எச்சரிக்கையுடன் போக வேண்டிய அளவில் சிறியதாக இருந்த குடிசையின் உள்புறம் பார்த்தால் ஒன்றும் கண்டு கொள்ள முடியாதபடி இருண்டிருந்தது. சற்றுக் கூர்ந்து பார்த்தால் உள்ளே சுவரோரமாகக்



சாய்ந்தபடி உட்கார்ந்திருந்த தங்கம்மா - இசக்கியின் மனைவி, கைக்குழந்தை படுத்திருந்த தொட்டிலை அனிச்சையாக ஆட்டியவாறு உட்கார்ந்த நிலையிலேயே உறைந்து போயிருப்பது புலப்படும்.

இன்னும் சற்று தூரம் தள்ளி சாலையை ஒட்டினாற்போல், வெள்ளையும் சொள்ளையுமாக கரைவேட்டி கட்டியிருந்த கூட்டமும், கிராமத்துப் பெரிய மனிதர்களுமாக தங்களுக்குள் விவாதித்துக் கொண்டு ஒரு முடிவுக்கும் வராதவர்களாக ரோட்டையே பார்த்துக் கொண் டிருந்தார்கள். குறிப்பாக, தங்கையாவும், கோபாலுவும் தங்களுக்கென்று இருக்கக்கூடிய விசுவாசி கள் என்று கருதிய கூட்டத்துடன் தனித்தனியான விவாதத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந் தார்கள்.

"ஏண்ணே! எம்.எல்.ஏ., டி.பி.க்கு வந்தவுடனேயே தகவல் சொல்லி அனுப்பச் சொல்லி யிருந்தோமே? ஒருத்தனையும் காணோம்?"

"இன்னும் வந்திருக்க மாட்டாரு. அதான், இன்னிக்கு எம்.எல்.ஏ. இங்க வரப் போறதா எல்லோருக்குமே தெரியும். வழிலே எத்தினி இடைஞ்சலோ? அவனவன் பாட்டுக்கு ஆளுக்கொரு மனுவை எழுதிக்கிட்டு காரை மறிச்சா அவர் என்னடா பண்ணுவாரு?"

"அது சரி. இங்கே பத்து மணிக்கே வரதா சொன்னாங்க. இப்பவும் அந்தா இந்தான்னு மணி பன்னிரண்டைத் தாண்டிடுச்சு..."

"ஏன்? துரைக்கு ரொம்ப அவசரமோ? வர்றபோது வரட்டும்டா. இந்தப் பக்கம் மேலேயிருந்து யாரு வந்தாலும், சுக்காம்பட்டி நாயக்கர் வீட்டுக்குப் போகாம வர முடியுமா? அவருதான் இன்னேரத்துக்கு சாப்பிடாம விட்டுடுவாரா? அங்கே இன்னேரம் ஆடும் கோழியுமா எப்பிடி அமர்க்களமாயிருக்கோ?"

"அது சரிண்ணே! நான் போயி உங்களுக்கு டீயாவது வாங்கிட்டு வரட்டா?"

"போ போ! வாங்கிட்டு வா. நான் எங்கியும் அசைய முடியாது. ஏற்கெனவே, இந்த கோபாலுப் பய நாலு ஆளுங்களை கோஷ்டி சேர்த்துக்கிட்டுப் பண்ற அட்டூழியம் தாங்க முடியலே. நாம இங்கிட்டு போன நேரமாகப் பார்த்து எம்.எல்.ஏ. வந்துட்டா இவன் போயி முன்னுக்கு நிப்பான். போயிட்டு சீக்கிரமா வா."

"சரிங்கண்ணே!" - புயல் வேகத்தில் ஓடின அவன் கால்கள்.

"டேய்! சால்வையை மறக்காம எடுத்துட்டு வந்துட்டீல்ல. அதை அந்தப் பயக கண்ணுல படாம வையி."

"ஆகட்டுமண்ணே!"


போட்டிக் கதை - 9

இ. ஜான்பாரதி

இன்னொரு பக்கத்தில் கட்சிக் கூட்டத்தில் ஒரு பகுதி நின்று கொண்டு தங்களின் முக்கி யத்துவத்தை எம்.எல்.ஏக்கு உணர்த்தக்கூடிய வகையில் எப்படி நடந்து கொள்ளலாம் என்று தங்களுக்குள் கிசுகிசுத்துக் கொண்டார்கள்.

"டேய்! நம்ம ஆளு ஏதாவது தகவல் கொண்டு வந்தா ரகசியமா வச்சுக்கங்கடா! எம்.எல்.ஏ. புறப்பட்டவுடனே ஓடி வாடா நாயின்னு சொல்லியனுப்பிச்சும் இன்னும் ஒரு தகவலும் இல்லி யேடா..."

கையில் பிடித்திருந்த சிகரெட்டை எரிச்சலுடன் தூக்கி எறிந்த கோபாலு முன்னும் பின்னு



ஆசிரியர் : அமைச்சர் பையனுக்கு ஒண்ணு, ரெண்டு, மூணு கூட சொல்லவே தெரியலீங்க!

மற்றோர் ஆசிரியர் : ஒரு கோடி, ரெண்டு கோடி, மூணு கோடின்னு சொல்லிக் கொடுங்க. கணக்கு தன்னால வரும்!

- கே. விக்ரம்

மாக நடந்தான்.

"அண்ணே! எப்பிடியிருந்தாலும் செத்துப் போன இசக்கி நம்ம இனத்துக்காரன். இசக்கி பொண்டாட்டி தங்கம்மா உங்களுக்கு தங்கச்சி முறை. நம்ம கட்சியிலே ஒரு பிரச்னைங்கறதுக் காக நம்ம இனத்துலே, அதுவும் உங்களுக்கு மச்சான் முறைக்காரன் உயிரைக் கொடுத்து தியாகம் பண்ணியிருக்கான்னா அது உங்களுக் குத்தானே பெருமை. எம்.எல்.ஏகிட்டே நல்ல படியா எடுத்துச் சொல்லுங்கண்ணே. நம்ம இனத்துக்காரன் நம்ம இயக்கத்துக்காக உயி ரைக் கொடுக்கிறதுக்குத் தயாராயிருக்கான்னா அதை மேலிடம் ஏனோதானோன்னு விட்டுட முடியுமா? அடுத்தாப்பலே நம்ம மாவட்டத் தலைவர் பதவி உங்களுக்குத்தான். இந்தத் தங்கையா எம்மாத்திரம்? இப்பிடி ஒரு தியாகத்தைச் செஞ்ச நம்ம இனத்துக்குத் தான் முன்னுரிமை கொடுக்கணும்னு சொல் லுங்க."

– உசுப்பி விட்டான் ஒருவன்.

"அண்ணே! நம்ம கட்சியிலேருந்து கொடுக் கற உதவிப் பணத்துலே நமக்கு எதும் கிடைக் குமா?"

"பிறகு? இந்த அநாதிச் சிறுக்கி புருஷன் – அவன் ஒரு லூசுப் பய வெறி பிடிச்சு மண் ணெண்ணையை ஊத்திக்கிட்டு மாண்டு போனான். இதையெல்லாம் மேலிடத்துக்குத் தெரியப்படுத்தி, இவனை பெரிய தியாகியா காண்பிச்சு இன்னிக்கு அம்பதாயிரம் ரூபா இவளுக்குக் கிடைக்க ஏற்பாடு பண்ணியிருந் துட்டு கையை வீசிட்டு போகவா? இவளும் அந்தப் பைத்தியக்காரனும் இன்னும் ஏழு ஜென்மம் எடுத்தாலும், இந்தப் பணத்தைப் பார்க்க முடியுமா? இந்தக் கொட்டடிக்கு வந்து துக்கம் விசாரிப்பு வேற. இன்னிக்கு வர்ற எம்.எல்.ஏ.வை என் மகனோட வேலை விஷ யத்துக்காகப் பார்க்கிறதுக்கு மெட்ராசுக்குப் போயி மூணு நாள் காத்துக் கிடந்ததுதான் மிச்சம். அம்புட்டு ஜோலி. ஆளைப் பார்க்கவே முடியலே. இன்னிக்கெல்லாம் கூலி வேலைக் குப் போயி இடுப்பொடிஞ்சா பத்து ரூபா கூலிக் காசோட திரும்புவா. இவளைப் பார்த்து பணத்தையும் கொடுத்து... நேரம்டா நேரம்..." அடிக்குரலில் பொருமினான்.

உச்சிவெயிலில் காத்துக் கிடக்கிற எரிச்சல் அவனை வேகப்படுத்தியது.

திண்ணையில் உட்கார்ந்திருந்த கூட்டம் தங்களின் இருப்பையும் இசக்கி இறந்து போன துக்கத்தையும் வெளிப்படுத்திக் கொள்வது போல் அவ்வப்போது விசும்பிக் கொண் டிருந்தது. இடையிடையே நாகலட்சுமியின் தேற்றுதல் வேறு. அவர்களின் பக்கமாகச் சென்ற ஒரு பெரிசு,

"ஏம்மா! அந்தப் பிள்ளை தங்கம்மா மூணு நாளா எந்திரிக்கவே இல்லியே! ஒரு சுடு தண்ணியாவது குடிக்கச் சொல்லப் புடாதா?"

"க்கும்..." கூட்டத்தின் நடுநாயகமாக இருந்த முத்தம்மா வெடுக்கென்று தலையைத் திருப்பிக் கொண்டாள். அவளுக்குப் பக்கத்திலிருந்த நாகலட்சுமி, "யார்தான் தண்ணியைக் கண் ணிலே பார்த்தது? சேதியைக் கேட்டதுமே அடிச்சுப் புரண்டு வந்ததுதான். இந்தக் கொடு மையைக் கண்ணுல பார்க்க முடியாம என் புருசன் இன்னமும் ஆஸ்பத்திரியிலே கிடக் காரு!" என்று பதில் சொன்னாள்.

"அடேயப்பா! இவளுகளுக்கு வாய்க்கு ஒண்ணும் குறைச்சல் இல்லே!"

'போனவன் போய்ச் சேர்ந்து போனான். இருக்கிற வரையிலுந்தான் என்ன சொகத்தைக் கண்டா பொண்டாட்டி. வெட்டிப் பயலு களோட வீண் பேச்சுப் பேசவும், போராட் டம்னும் கூட்டமின்னும் ஊர் சுத்தியே பொழுதைக் கழிச்சான். எவனாவது தூண்டி விட்டு ஒரு பாட்டில் சாராயத்தை வாங்கி ஊத்துனா, சலம்பல் பண்ணிக்கிட்டு ஊரைக் கெடுத்துக்கிட்டிருந்தான். உண்மையிலேயே இவன் போனதுலே அவன் பெண்டாட்டிக்கு விடுதலைதான்!' – பெரிசு நினைத்துக் கொண்டே அந்த இடத்தை விட்டுப் போனது. 'ஏதோ அவன் செத்ததுனால கிடைக்கிற பணத்தை வச்சுக்கிட்டு கைப்பிள்ளையோட இருக்கிறவ பொழைச்சுக்கட்டும். ஆனால் கூடி யிருப்பது கழுகுக் கூட்டமாகவல்லவா இருக் கிறது?'

புழுதியைக் கிளப்பிக் கொண்டு வண்டி கள் ஊருக்குள் நுழைந்தன. புது இரத்தம் பாய்ந்த சுறுசுறுப்புடன் கூட்டம் சிலிர்த்துக்

'சுருக் நறுக்'கென்று ஒரு சொல்லோவியம் - 4

சட்டம் என்பது....

'சட்டம் என்பது ஒரு கழுதை; முன்னால் சென்றால் கடிக்கும்; பின்னால் சென்றால் உதைக்கும்' என்றார் பெர்னார்ட் ஷா. 'சட்டம் ஓர் இருட்டறை; அதில் வக்கீலின் வாதம்தான் விளக்கு' என்றார் அண்ணா.

இதுபோன்ற விளக்கங்களைச் 'சுருக் நறுக்'கென்று இன்றைய சூழ்நிலையை ஒட்டி நீங்களும் எழுத முடியாதா என்ன? நிச்சயம் முடியும்.

உங்களின் விளக்கத்தைக் கீழுள்ள கூப்பனில் எழுதி 13.11.95 க்குள் எங்களுக்கு எழுதியனுப்புங்கள். உறையின்மேல் 'சுருக் நறுக் போட்டி - 4' என்று மறக்காமல் குறிப்பிடுங்கள்.

பிரசுரத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படும் ஒவ்வொரு 'சுருக் நறுக்' விளக்கமும் ரூ. 50 பரிசு பெறும். தவிர இன்னும் 22 வாரங்களுக்குத் தொடரப் போகும் இப்போட்டியில் பரிசு பெறும் ஓர் அதிர்ஷ்டசாலிக்கு ஒரு மெகா பரிசும் காத்திருக்கிறது.

போட்டி முடிவுகளில் ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

- ஆர்.

சட்டம் என்பது ....

....

....

....

....

பெயர் : ....

முகவரி : ....

....

....

....

கொண்டு தயாரானது.

முத்தம்மாவிற்கும், நாகலட்சுமிக்கும் யார் குரலை எடுப்பாகக் காட்டுவது என்பதில் ஒரு போட்டியே நடந்தது.

கட்சி கோஷ்டிகள் ஒருபக்கம் முண்டியடித்துக் கொண்டும், பொதுவான பெரிய மனிதர்கள் மரியாதை நிமித்தமாக ஓர் ஓரத்திலும் நின்று கொண்டிருந்தார்கள்.

காரை விட்டு இறங்கிய எம்.எல்.ஏ. எல்லா சம்பிரதாய வரவேற்புகளையும் கையமர்த்தித் தடுத்தார்.

"யோவ்!" குரலில் தீப்பொறி பறந்தது.

கோபாலும் தங்கையாவும் முன்னுக்கு ஓடினார்கள்.

"எழவு விசாரிக்க வந்துருக்கற இடத்துலே உங்க பெருமையைக் காண்பிச்சுக்கிட்டு என்னா வேலை பண்றீங்க? பேசாம இருந்து தொலைங்கய்யா. நீங்க பண்ற கூத்துலே விழுகிற வோட்டுக் கூட இல்லாம போயிடும். எதுவாயிருந்தாலும் டி.பிலே போயி பார்த்துக்கலாம்" - அடித் தொண்டையில் கடுகடுத்தார் எம்.எல்.ஏ.

"சரிங்கண்ணே!" பவ்யமாகப் பின்வாங்கியது இரண்டு தலையும்.

"தங்கச்சி அன்னிலேர்ந்து பச்சைத் தண்ணிய கண்ணுல பார்க்கல" - கோபாலு கூறிக் கொண்டே பின்தொடர்ந்தார்.

தங்கையா விட்டு விடுவாரா?

"ஏதானும் நல்லது பொல்லாததுன்னா எங்கிட்டேதான் ஓடி வருவான். நம்ம கட்சிக் காரங்கிறதனால அவன் என்ன உதவின்னு வந்தாலும் உடனே செஞ்சுடுவேன்."

எம்.எல்.ஏ.வைத் தொடர்ந்து கரை வேட்டிகள் அணிவகுத்து நடக்க, குடிசையை சமீபித்தனர்.

"அட விடுங்கம்மா! ஏதோ ஆனது ஆகிப் போச்சு. ஏதோ நம்ம கட்சிக்காரன்னு விட்டுக் கொடுத்திராம வந்து ஆறுதலைச் சொல்லி, உதவியும் செய்ய ஐயா வந்திருக்காக. எந்திரிங்க முதல்லே."

- ஒரு பெரிசு நடுநிலையாளரானது.

முத்தம்மாவும், நாகலட்சுமியும் ஓடிவந்து எம்.எல்.ஏ.யின் கால்களில் விழுந்தனர்.

"ஏ முத்தம்மா, உன் மருமக தங்கம்மாவைக் கூப்பிடு. ஐயா வர்றாகன்னு தெரியுமில்ல. எத்தினி நாளைக்குக் கிடந்தாலும் போனவன் வரவா போறான்?"

எம்.எல்.ஏ. கேள்விக்குறியுடன் திரும்ப, காலில் விழுந்தவர்கள் செத்துப் போன இசக்கியின் தாயும் அண்ணியும் என்று விளக்கம் தெரிவிக்கப்பட்டது.

"ஐயா! உட்காருங்க" என்று அங்கு ஏற்பாடு செய்து வைத்திருந்த நாற்காலியைக் காட்டி உபசாரம் செய்யப்பட்டது.

“அந்தக் கூட்டத்திலே ஏங்க சிலர் கண்ணீர்ப் புகை விட்டெறிஞ்சாங்க?”

“அதுவா...? தலைவர் எவ்வளவோ உருக்கமாய்ப் பேசியும் யாரும் அழலை யாம், அதான்...”

- பெ. சௌ. ராஜன்



“இளநீர் சாப்பிடுங்க”

எம்.எல்.ஏ., பி.ஏ.வைத் திரும்பிப் பார்க்கவும், குறிப்பறிந்து அருகில் ஓடினான்.

“யோவ்... இவனுங்க எழவை நிறுத்தச் சொல்லு. செத்தவன் பொண்டாட்டியக் கூப்பிடச் சொல்லு. இந்நேரம் வரைக்கும் அந்தப் பொம்பளையைக் கூப்பிட்டு தயாரா இருக்கச் சொல்லாம என்னத்தை கிழிச்சானுங்க?”

நடக்கக் கூட சக்தியற்றுப் போயிருந்த தங்கம்மாவை கைத்தாங்கலாகப் பிடித்துக் கொண்டு வந்து எம்.எல்.ஏ.யின் முன்னால் நிறுத்த வைத்தார்கள். எதற்கும் அசையாத எம்.எல்.ஏ.வின் இதயம் கூட ஒரு வினாடி அதிர்ந்தது. தன்னையுமறியாமல் எழுந்து நின்ற எம்.எல்.ஏ. அவளைப் பார்த்துச் சொன்னார்:

“இதோ பாருங்கம்மா, உங்க வீட்டுக்காரரு நம்ம கட்சியிலே இருக்கிற அபிமானத்துல அவரு உயிரையே தியாகம் பண்ணியிருக்காரு. இப்படி ஒரு தீவிரமான தொண்டரை, கொள்கைக்காக உயிரையே விடத் துணிஞ்சதுக்கு கட்சியோட சார்பிலே அனுதாபத்தைத் தெரிவிக்க தலைவர் உத்தரவு போட்டிருக்காரு. இந்தத் தொண்டரோட குடும்பத்துக்கு நாம செய்யற உதவிதான் உண்மையான அஞ்சலியா இருக்கமுடியும்னு மேலிடம் தீர்மானிச்சு, உங்களுக்காக அம்பதாயிரம் நிதியுதவி கொடுத்திருக்காங்க. அதை நீங்க வாங்கிக்கணும். அடுத்த மாதம், வீரத் தியாகி இசக்கியோட நினைவுக் கம்பம் நடும் விழாவுக்கு தலைவர் வரதா முடிவு பண்ணியிருக்காரு. அப்போ நீங்க அவரை நேரில சந்திச்சு உங்களுக்கு ஏதும் பிரச்னை இருந்தா சொல்லலாம்.”

உணர்ச்சிவசப்பட்ட கூட்டம் ‘வாழ்க’ கோஷம் போடத் துடித்தது. பி.ஏ.வின் கண் முறைப்பில் கட்டுண்டு அமைதி காத்தது.

“இந்தாங்கம்மா! இதிலே ஐம்பதாயிரம் ரூபாய் இருக்கு!” என்று சொன்ன எம்.எல்.ஏ. கவரை நீட்டினார்.

அந்தக் கவரைப் பெற்றுக் கொள்ள வேண்டிய தங்கம்மாவின் கரங்களைத் தவிர்த்து அத்தனை கைகளும் துறுதுறுத்தன.

முத்தம்மா மருமகளை நிமிண்டினாள்.

“ஐயா காலிலே விழுந்து பணத்தை வாங்கிக்க...” என்று சொன்னவள், “அட நான் பெத்த மவனே!” என்று உரத்த குரலில் அரற்றிக் கொண்டாள்.

தன்னைச் சுதாரித்துக் கொண்ட தங்கம்மா, தன் முன்னே நீட்டப்பட்ட கவரை வெறித்து நோக்கினாள். மிக மெதுவாக நீண்ட அவளின் கரங்களில் விழுந்த கவரை எவ்வித உணர்ச்சியுமின்றி அவள் விரல்கள் பற்றின.

எம்.எல்.ஏ.வை நிமிர்ந்து நோக்கிய தங்கம்மா,

“ஐயா, என்னை மன்னிக்கணும். நான் படிக்காதவதான். இருந்தாலும் இந்தச் சமயத்துல நான் ஒரு விஷயத்தைச் சொல்லணுங்க... நீங்க, பெரியவங்க பேசறதையெல்லாம் உண்மைன்னு நம்பினதுக்காக, உங்க கட்சியே கதின்னு அலைஞ்சதுக்காக, நீங்க கொடுக்கற இந்த விலை உங்களுக்கு நியாயமாத் தோணலாம். ஆனா, என்னைப் பொறுத்தவரைக்கும் இது எனக்குச் செய்யிற உதவிங்கறதை விட எத்தனையோ உலகம் தெரியாத என் புருஷன் மாதிரியான அப்பாவிங்க மனசுலே நம்ம உயிருக்கும் இத்தினி ஆயிரம் விலை இருக்கு அப்பிடின்னு ஆசையைத் தூண்டி, அவங்களை காவு வாங்கறதுக்காக விரிக்கற வலை என்று நான் நினைக்கிறேன்.

“நாம செத்துப் போனா, நம்மளையே நம்பியிருக்கற குடும்பம் சீரழிஞ்சு போகும்னு உணராம, செத்துப் போன ஆம்பளையோட உயிருக்கு விலையாத் தர்ற பணம் எனக்கு வேண்டாம். எப்பவுமே நான் உழைச்சுத் திங்கற பிறவிதாங்க. நான், என் புருஷன் செத்துப் போன துக்கத்துலே இத்தினி நாளும் முடங்கிக் கிடக்கலே. ஏதோ கட்சி, கூட்டம்னு சுத்தினாலும் என்னிக்காவது நம்ம அருமையை அவரு உணருவாருன்னு நம்பியிருந்தேன். அந்த நம்பிக்கை செத்துப் போன கொடுமையைத் தாங்க என்னால முடியலே...” என்றவள் தன் கையிலிருந்த கவரை எம்.எல்.ஏ.வின் காலடியில் வைத்தாள்.

தளர்ந்த நடையோடு வந்தவள், நிமிர்ந்து, உறுதியுடன் வாழ்வை எதிர்நோக்கும் துணிவைப் பிரகடனப்படுத்தி விட்ட நிம்மதியுடன் குடிசையை நோக்கி நடந்தாள்.

அந்தமானில் நடந்த காண்ட்ராக்ட் ஊழல்!

சி.வி. நரசிம்மன்

அது, காமராஜர் ஆட்சியில் இருந்த சமயம். சி.பி.ஐ.க்கு, தகுந்த போலீஸ் ஆபீசர்களைத் தேர்வு செய்ய, சுற்றுப் பயணம் செய்து கொண்டிருந்த கோலி (Kohli) தமிழ்நாடு வந்தார். பிற இடங்கள் முழுக்கச் சுற்றி விட்டு, ராமேஸ்வரம் வந்தவரை வரவேற்க, நான் போயிருந்தேன். அப்போது நான் ராமநாதபுரம் மாவட்ட எஸ்.பி.யாக இருந்தேன்.

ராமேஸ்வரத்தில் தரிசனம் முடித்து, கிளம்பிய கோலியுடன் ரயிலில் நானும் மதுரை வந்தேன். வழி முழுக்க அவர் என் பணிக்கால நடவடிக்கைகள், சந்தித்த சம்பவங்கள், அவைகளை நான் கையாண்ட விதம், புலனாய்வில் எனக்கிருந்த குறிப்பான ஈடுபாடு இவைகளைப் பற்றியெல்லாம் கேட்டுத் தெரிந்து கொண்டார்.

அப்போதே என்னை சி.பி.ஐ.க்கு எடுத்துக் கொள்ள விரும்பியிருப்பார் போலும்.

சி.பி.ஐ.யின் சென்னைப் பிரிவுக்கு என்னை எஸ்.பி.ஆக்க விரும்பி, அன்றைய தமிழ்நாடு ஐ.ஜி. ராஜரத்தினத்திற்குக் கடிதம் எழுதினார் கோலி. (இந்த விவரமும் இதைத் தொடர்ந்து வரும் விவரங்களும் எனக்கு அப்போது தெரிந்தவை அல்ல; நான் சி.பி.ஐ.யில் எஸ்.பி.யாகச் சேர்ந்து படிப்படியாக உயர்ந்து இயக்குநரான பின் சி.பி.ஐ.யின் தலைமைச் செயலகத்திலிருந்த fileகளிலிருந்து தற்செயலாகத் தெரிந்து கொண்டவை தான்!)

ராஜரத்தினம், முதல்வர் காமராஜிடம் கோலியின் கடிதத்தைப் பற்றி பேசியிருப்பார் என்று நினைக்கிறேன். காமராஜ் என்ன சொன்னாரோ, தெரியாது. கோலிக்குச் சாதகமான பதில் ஏதும் போகவில்லை!

அவரும் விடுவதாக இல்லை. அடுத்த முயற்சியாக, மத்திய அரசின் உள்துறைச் செயலாளர் மூலம், மாநில தலைமைச் செயலாளருக்கு ஒரு நேர்முகக் கடிதம் அனுப்பினார். அதற்கும் பதில் இல்லை.

இறுதி முயற்சியாக, அன்றைய உள்துறை அமைச்சர் கோவிந்த வல்லப பந்த்தை அணுகி, காமராஜுக்கு பர்சனலாக ஒரு கடிதம் எழுத வைத்தார்!

பந்த் கடிதம் கண்டதும் தான் காமராஜ் என்னைக் கூப்பிட்டார். "என்ன நரசிம்மன், உங்களை சி.பி.ஐ.க்கு வரச்சொல்லிக் கேக்கறாங்களே, போக விருப்பமா உங்களுக்கு?"

நான் அமைதியாகச் சொன்னேன்:

"ஐயா, சி.பி.ஐ. ஒரு புதிய அமைப்பு. மத்திய அரசுக் கட்டுப்பாட்டில் இயங்குவது... பல புதிய அனுபவங்கள் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. உங்களுக்கும் சம்மதமென்றால் எனக்கு விருப்பம் தான்...."

"அப்படியா? சரி."

நான், காமராஜுடன் பேசிவிட்டுத் திரும்பிய பத்து நாட்களில் 'ஆர்டர்' வந்து விட்டது!

பின்னால் சி.பி.ஐ.க்கும் மாநில போலிஸ் பிரிவுக்கும் மாறி மாறி, பல கட்டங்களில், பல நிலைகளில் பணியாற்றி இருப்பினும், முதன் முறையாக அன்று சி.பி.ஐ.யின் சென்னைப் பிரிவுக்கு சூப்பரின்டென்டன்ட்டாகப் பொறுப்பேற்றது சிலிர்ப்பு நிறைந்ததாகத்தான் என் நினைவில் இன்றும் நிற்கிறது. அது 1957ல் நடந்தது!

ஆறு வருடங்கள் அங்கு எஸ்.பி.ஆக இருந்து, (1963 வரை) கோலி வகுத்தளித்த வழியில் பல கேஸ்களை வெற்றிகரமாக நடத்தி, அவரது பாராட்டுகளைப் பெற்றேன். நான் முதலில் குறிப்பிட விரும்புவது அந்தமான் கேஸ்!

அந்தமான் காடுகளில் உள்ள மரங்களை வெட்டி, ஏற்றுமதி செய்யும் அரசு கான்ட்ராக்ட், அப்போது 'CANUSA' என்கிற ஒரு பிரெஞ்ச் நிறுவனத்திற்கு அளிக்கப்பட்டிருந்தது.

ஆனால் அந்த கான்ட்ராக்ட், நேர்மையான வழியில் தரப்படவில்லை. டெண்டர் வழங்கியதில் மோசடி நடந்திருக்கிறது; குறைவான ரேட்டுக்கு விட்டு விட்டார்கள் என்று புகார் எழுந்தது.

விஷயம் பெரிதாக, வழக்கு சி.பி.ஐ. வசம் வந்தது.

அந்தமான் தீவுகள்-நடைமுறையில்-சி.பி.ஐ.யின் கல்கத்தா பிராஞ்ச் லிமிட்டில் வருவதுதான். நியாயமாக அந்தக் கேஸை சி.பி.ஐ.யின் கல்கத்தா பிராஞ்ச்தான்

விசாரிக்க வேண்டும்.

ஆனால், ஊழல் குற்றம் நடந்ததாகச் சொல்லப்பட்ட காலகட்டத்தில் அந்தமானில் வனத்துறை அதிகாரியாக இருந்த பானர்ஜி என்பவர், வங்காளத்தில் மிகுந்த செல்வாக்கு உடையவராகத் தென்பட்டார்.

ஆகவே 'இந்தக் கேஸை கல்கத்தா பிரான்ச் விசாரித்தால், விசாரணையின் போது முறையற்ற குறுக்கீடுகள் இருக்கலாம் என்பதைக் கருத்தில் கொண்டு, இந்த கேஸை, குற்றம் சாட்டப்பட்ட பானர்ஜிக்கு ஒருவித சம்பந்தமும் இல்லாத சென்னை பிரான்ச் விசாரிக்கட்டும் என்று கோலி சொல்லி விடவே, கேஸ் என் கைக்கு வந்தது!

முழு கேஸையும் வரிவிடாமல் படித்தேன். ஊழல் நடந்தது; அல்லது நடக்கவில்லை என்பதை, சென்னையிலிருந்தபடி நிரூபிக்க முடியாது...

அப்பொழுது என் கீழ் டெபுடி சூப்பரின்டென்டென்டாக இருந்தவர் ஹாரீஸ் என்பவர். நேர்மையானவர். திறமையானர். அவரை அந்தமானுக்கு விவரம் சொல்லி அனுப்பினேன். கூடவே அவருக்கு உதவியாக ஓய்வுபெற்ற (IFS) ஆபீசரையும் (இந்திய வனத்துறை அதிகாரி) அனுப்பினேன். 'ஸ்பெஷல் ட்யூட்டி' எனக் குறிப்பிட்டு, சில மாதங்களுக்கு- அவர் ரிடையர் ஆன போது வாங்கிய அதே சம்பளத்துடன்! இந்த ஏற்பாட்டுக்கு மத்திய அரசும் ஒப்புதல் அளித்தது.

இரண்டு பேரும் கிட்டத்தட்ட இரண்டு மாதங்கள் அந்தமானில் தங்கி, புலனாய்ந்து, குற்றம் நடந்தது உண்மைதான் என்பதற்கு முதல் தரமான ஆதாரங்களைக் கொண்டு வந்தார்கள்.

அதாவது, சம்பந்தப்பட்ட வனத் துறை அலுவலர் பானர்ஜி, CANUSA என்ற பிரெஞ்ச் கம்பெனிக்கு காண்ட்ராக்டுடன் பல உபரி சலுகைகளையும் சேர்த்தே வழங்கியிருக்கிறார்!

முறைகேடுகள் நடந்திருப்பது தெளிவாயிற்று. இதனால் CANUSAவுக்கு லாபம். அதனால் பானர்ஜிக்கு என்ன பதில் லாபம் கிடைத்தது? இது தெரிந்தால்தான் ஊழல் குற்றச்சாட்டு நிற்கும்.

அந்த link கிடைக்கவில்லை! அது கிடைக்காத பட்சத்தில் கேஸை வெல்வது சிரமம்.

விதி என்பதா? அதிர்ஷ்டம் என்பதா? நினைத்துப் பார்க்க முடியாத அற்புதமான link தற்செயலாகக் கிடைத்தது!

அந்த பானர்ஜியின் மகன் ஒருவன் பிரான்ஸில் ஏதோ ஒரு பல்கலைக் கழகத்தில் படித்துக் கொண்டிருந்திருக்கிறான். அவனது படிப்புச் செலவை அந்த CANUSA நிறுவனம் ஏற்றுக் கொள்வதாக அவர்களுக்குள் ஒரு 'ஏற்பாடு' போலும்!

தன் மகனின் காலேஜ் ஃபீஸ் கட்டியதற்காக CANUSAவுக்கு நன்றி தெரிவித்து பானர்ஜி எழுதிய கடிதத்தின் டூப்ளிகேட் பிரதி, அவரது அலுவலக ஃபைல்களைக் குடைந்தபோது கிடைத்து விட்டது! போதாதா?

கேஸ் விவரம் எழுதி, மேலிடத்துக்கு துப்புரவாக அனுப்பி விட்டேன்.


குறைந்தபட்சம் அந்த வனத்துறை அதிகாரியை உடனடியாக சஸ்பெண்டு செய்து, அவர் மீது தீவிர ஒழுங்கு நடவடிக்கை எடுப்பார்கள் என எதிர்பார்த்தேன். பதவி இறக்கம் அல்லது பதவி நீக்கத்துக்குக் கூட வாய்ப்பு இருந்ததாகத்தான் நான் நினைத்தேன்.

ஆனால் நடந்தது வேறு!

அவர் விரைவில் ஓய்வுபெறப் போகிறார் என்பதையும், இதற்குமுன் பணியில் கரும்புள்ளி ஏதும் அவர் மேல் குத்தப்படவில்லை என்பதையும் இவ்விஷயத்தில் வெளிநாட்டுத் தொடர்பை முழுமையாக நிரூபிக்கப் போதிய ஆதாரங்கள் இல்லை என்றும்- இதுபோல் இன்னும் சில காரணங்கள் காட்டி, பெரிய தண்டனை ஏதுமின்றி, 'சென்ஷர்' என்ற சிறிய தண்டனையுடன் அவர் அரசால் விடுவிக்கப் பட்டார் என்று எனக்குத் தெரிய வந்தது.

எனக்குப் பெரிய ஏமாற்றம்! எத்தனை

*** அன்றைய உள்துறை அமைச்சர் கோவிந்த் வல்லப பந்த்: காமராஜருக்கு பர்சனலாக ஒரு கடிதம் எழுதினார்...**





"கஷ்டப்பட்டு டிரைவிங் லைசென்ஸ் வாங்கியாச்சு. இனிமேல் கல்யாணத்திற்கு பெண் பார்க்க வேண்டியது தான்."
"ஏன்?"
"அந்த லைசென்ஸைப் பயன்படுத்த ஒரு ஸ்கூட்டர் வேணுமே!"
- ஞா. ஞானமுத்து

சிரமப்பட்டு, எவ்வளவு ஆதாரங்கள் தேடி, மாதக்கணக்கில் உழைத்து, அசைக்க முடியாத சாட்சியங்களுடன் அறிக்கை அனுப்பியும் இப்படி ஆகிவிட்டது என்றால்...

என் குழப்பத்தை, ஐ.ஜி. கோலியிடமிருந்து வந்த கடிதம் நீக்கியது!

''...இந்த முடிவு உள்துறை அமைச்சர் கோவிந்த வல்லப பந்தால் எடுக்கப்பட்ட ஒன்று'' என்று குறிப்பிட்டு, மேற்சொன்ன விளக்கங்களுடன் இருந்தது அக்கடிதம்.

சாதாரணமாக இது போன்ற விஷயங்களை ஐ.ஜி., ஒரு எஸ்.பிக்கு விளக்கி எழுதிக் கொண்டிருக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆனாலும் எனக்கு அத்தனை விவரமாக, உடனே ஒரு கடிதம் ஐ.ஜி.யிடமிருந்து வருகிறதென்றால்...

நான் புரிந்து கொண்டது இந்த கேஸைப் பொருத்த வரை சி.பி.ஐ.இன் மேலிடமும் என்னுடைய அறிக்கையை முழுமையாக ஒப்புக் கொண்டது. தீவிரமான மேல் நடவடிக்கையையும் சிபாரிசு செய்தது. ஆனால் அரசு நிலையில் அமைச்சரின் அணுகு முறையும், கணிப்பும் வேறாக இருந்ததால் அவர் எடுத்த முடிவு நாம் எதிர்பார்த்தபடி இல்லை. அதைப் பற்றி நாம் கவலை கொண்டு விமர்சிக்க வேண்டியதில்லை. நம்முடைய கடமையை நாம் தொடர்ந்து செய்வோம். இந்த கருத்தை அடிக்கோடிட்டு சி.பி.ஐ.யின் உள்ளேயே பல்வேறு வெவ்வேறு அணுகு முறைகள் உள்ளன என்று நான் தப்பாக அர்த்தம் கொள்ளக் கூடாது என்பதை வலியுறுத்துவதாக இருந்தது கோலியின் கடிதம்.

அந்தக் கண்ணியம் என்னைப் பெரிதும் கவர்ந்தது.

இந்த கேஸ், இது போன்ற இன்னும் சில கேஸ்களில் நான் முடிவெடுத்து, செயலாற்றிய விதத்தை கோலி வெளிப்படையாகவே பாராட்டி என்னை ஊக்குவித்தார். அவருடன் சற்று நெருங்கிப் பழகும் வாய்ப்பும் அதற்குப் பின் தான் கிடைத்தது.

அப்படி ஒரு சந்தர்ப்பத்தில்தான், சென்னை வந்திருந்த கோலி, 'திருப்பதி போக வேண்டும்' என்று என்னிடம் சொன்னார். சரி என்று காரில் நானும் அவருடன் புறப்பட்டேன்.

சென்ற வழி முழுதும் பல்வேறு விஷயங்கள் பற்றிப் பேசிக் கொண்டே சென்றோம்.

ஒரு வழியாக மனத்தை திடப்படுத்திக் கொண்டு, அதுவரை அவரிடம் கேட்க வேண்டும்' என்று துடித்துக் கொண்டிருந்த விஷயத்தைக் கேட்டு விட்டேன்.


"சார்! என்னுடைய ஆபீஸர்கள் அனைவரும் மிகக் கடுமையாக உழைத்து மிக ஆழமாகப் புலனாய்வு செய்கிறார்கள். சென்னை பிரான்ச்சை நீங்கள் எதிர்பார்க்கும் மிக உயர்ந்த தரத்தில் வைக்க நான் இடைவிடாமல் உழைக்கிறேன். நீங்களும் எனக்குக் கடுமையான இன்ஸ்பெக்ஷன்கள் வைக்கிறீர்கள். அதற்கு நான் ஈடுகொடுக்கிறேன். ஆனால், சென்ற சி.பி.ஐ. கான்பரன்ஸ் போது நான் தில்லி பிராஞ்சின் செயல் முறையைப் பார்த்தேன். அது பல வகைகளில் நீங்கள் எங்களுக்கு நிர்ணயித்திருக்கும் தரத்துக்கு வரவில்லை. ஆனாலும் அதைப் பற்றி நீங்கள் எங்கும் குறிப்பிட்டதாகத் தெரியவில்லை. இந்த இரு மாறுபட்ட அணுகு முறைகள் ஏன் என்று எனக்குக் குழப்பமாக உள்ளது. நீங்கள் என்னைத் தப்பாக எடுத்துக் கொள்ளக் கூடாது. என் மனத்தின் குழப்பத்தை உங்களுக்குத் தெரிவிக்க வேண்டியது என் கடமை என்று சொல்லி விட்டேன்" என்று மூச்சு விடாமல் பேசி நிறுத்தினேன்.

கோலி சிரித்தார்.

''உன் குழப்பம் நியாயமானது தான்! ஆனால் என்னுடைய பார்வையில் நீ பெரிய படிப்புப் படித்து, அகில இந்திய தேர்வில் முன்னணியில் வந்து நேரடியாக மேல் நிலைப் பணியில் நியமிக்கப்பட்ட ஐ.பி.எஸ். ஆபீசர். உன்னிடம் நான் எதிர்பார்க்கும் மிக உயர்ந்த தரத்தை, ப்ரொமோஷனில் வந்திருக்கும் தில்லி எஸ்.பி.யிடம் எப்படி நான் எதிர்பார்க்க முடியும்? நிர்வாகத்திறமை போதாது. அவ்வளவுதான். ஆனால் அவர் செய்யும் விசாரணைகளின் தரம் குறையவில்லை. அவரவர் தரத்திற்கு ஏற்ப நான் ஒவ்வொருவரின் பணியை எடை போடுகிறேன். உன்னுடைய தரத்தை நான் தில்லி பிராஞ்சில் எதிர் பார்ப்பது சரியல்ல. அதே சமயம் தில்லி பிராஞ்சின் தரத்துக்கு உன்னுடைய பிராஞ்ச் குறைந்து போவதை நான் அனுமதிக்க மாட்டேன். நீ புரிந்து கொள்வாய் என நம்புகிறேன்" என்றார்.

அதுதான் கோலி!

–அடுத்த வாரம்


ஐயய்ய,
கட்சியெல்லாம்
நமக்கு இப்ப
வேணாம்பா!
கலெக்ஷன்
ஆச்சுன்னா போதும்!

அதிகார மாற்றம்

அம்மாவின் அலறல் சப்தம் கேட்டு கண் விழித்தேன். "இப்படி என்ன தவிக்க விட்டுட்டுப் போயிட்டீங்களே..." படக்கென்று எழுந்தேன். என்னைப் போலவே தம்பியும், தங்கையும் – அம்மாவின் அலறல் சப்தம் கேட்டு விழித்து இருக்க வேண்டும் போலும்..

அப்பா பெரும்பாலும் அந்த ஈஸிசேரில் தான் சாய்ந்து கிடப்பார். தூங்கும் நேரம் போக எல்லா நேரமும் அதில்தான் அவர் ஜாகை... அதிகாலையில் விழித்தார் என்றால் – ஈஸி சேரை விரித்து உட்கார்ந்து விடுவார். இப்போதும் கூட...

அம்மா நான் விழித்து விட்டதைப் பார்த்து – "ராசு... அப்பா நம்மள விட்டுட்டுப் போயிட்டாருடா..." என்றாள் அழும் குரலில்.... தங்கைகளும் எழுந்து விட்டனர். அம்மா – அவர்களைக் கட்டிக் கொண்டு அழ ஆரம்பித்தாள்.

"பால் வாங்கி வர அவரை எழுப்பலாம்னு எழுப்பினேன். பேசல. முழிக்கல... சரி தூங்கட்டும்னு பால் வாங்கிட்டு வந்து எழுப்பினேன். அப்பவும் அப்படியே..." அம்மா மேற்கொண்டு பேச முடியாமல் தடுமாறினாள்.

அப்பாவைப் பார்த்தேன். சாய்ந்து தூங்குவது போலவே... ரொம்பவும் பரிதாபத்துக்குரிய ஜீவனாய்த்தான் இந்த இரண்டு வருஷங்களாய் அப்பா இருக்கிறார்.

விவரம் தெரிந்த நாளில் இருந்து – அப்பாவை அம்மா மரியாதையாகத்தான் பேசுவாள். ஆனால் இந்த இரண்டு வருஷங்களாய் அது கிடையாது. "வந்து சாப்பிடச் சொல்லு... குளிக்கச் சொல்லு... அப்படி எங்கதான் போய்ச் சுத்துமோ தெரியல... காலகாலத்துல தின்னுட்டுத் தூங்கறதை விட்டுட்டு..."

சம்பாதிக்க முடியாத காரணத்தால் – சம்பாதிக்க வக்கு இல்லாத காரணத்தால் – அப்பா அஃறிணையாகி விட்டதுதான் சோகம்.

காலையில் கூட பால் வாங்க அம்மா அப்படித்தான் எழுப்பி இருப்பாள். "ஆறாச்சு... இன்னும் என்ன தூக்கம் வேண்டிக் கிடக்கு... போய் பால் வாங்கி வர வேண்டியதுதானே... ஊரைச் சுத்தறது... அப்புறம் அடிச்சுப் போட்ட மாதிரி தூங்க வேண்டியது. இதத் தவிர வேற என்ன தெரியும்?"

அதற்குள் அப்பா அசைந்து கொடுக்க வேண்டும். இல்லையேல், "சம்பாதிக்க துப்பு இல்ல... வெட்டிப் போது போக்கிக்கிட்டு" என்று ஆரம்பிப்பாள்.

அப்பா பதில் பேச மாட்டார். கம்பீரமான அப்பா – இந்த இரண்டு வருஷத்தில் தம் கம்பீரத்தைத் தொலைத்து விட்டார். நொடித்துப் போய் கடையை மூடியதில் இருந்தே அப்பாவின் கம்பீரம் தொலைந்து போனது.

முன்பு எல்லாம் நான் "ப்ராக்ரஸ் ரிப்போர்ட்டில்' கையெழுத்து வாங்க நடுநடுங்குவேன். எல்லா பாடத்திலும் பாஸ் மார்க் வாங்கினாலும் நல்ல மார்க் வாங்க வேண்டும். இல்லையேல் அடி பின்னி விடுவார். இப்போதெல்லாம் தம்பி, தங்கைகள் கார்டை நீட்டினால் அப்பா எதுவும் பேசாமல் கையெழுத்துப் போடுகிறார். கண்களை மூடிக் கொண்டு போடுகிறாரோ என்று தோன்றும். தம்பி படிப்பில் எத்தனை வீக். அவர் எதையும் கண்டு கொள்வது இல்லை. எதிலும் கலந்து கொள்வதும் இல்லை.

அம்மா, "தம்பி... பெரிய மாமாகிட்ட சொல்லுப்பா. அவர் வந்துதான் எல்லாம் பார்க்கணும். எனக்கு தெற்கு தெரியுமா... வடக்கு தெரியுமா... இந்த மனுஷனை நம்பி வந்தவ..." திரும்ப மூக்கைச் சிந்தினாள். தங்கைகள் கண்ணீரைச் சிந்தினர்.

யோகி

அம்மாவின் பேச்சைக் கேட்டு, தம்பி, தங்கைகளும் 'அப்பாவை மதிப்பதில்லை. அம்மாவின் மீது கோபம் கோபமாய் வரும். இப்படி வெறுப்பைச் சிந்த அப்பா செய்த தவறுதான் என்ன? சம்பாதிக்காத ஒரே காரணமா?

கிடையாது. இது பழிவாங்கும் படலம். அம்மாவரல் அப்பா பழிவாங்கப்படுகிறார். நெடுநாளைய வஞ்சம் நிறைவேறுகிறது. அப்பா நன்றாக இருந்த நாளில் அம்மாவை நிறைய‌த்தான் சித்திரவதை செய்து இருக்கிறார். நன்றாக ஞாபகம் இருக்கிறது. அம்மா வீட்டு மனி

தர்களை அப்பா இளக்காரமாய்ப் பேசுவார். இம்சிப்பார். சமையலில் இருந்து சகலத்திலும் அப்பா அம்மாவைக் குறைசொல்லுவார். அப் போதெல்லாம் அம்மா - அப்பாவைப் பார்த் தாலே நடுநடுங்குவாள். வியர்த்துக் கொட்டும். அப்படி இருந்த அம்மா - எப்போது இப்படி நிமிர்ந்தாள்.

'சம்பாதிக்கிறேன் என்றுதானே இத்தனை நாளும் ஆர்ப்பாட்டம் செய்தாய்.. இப்போது...' அம்மா பழிவாங்குகிறாள்.

மாமா வீட்டிற்குக் கிளம்பினேன். அதற்குள் பக்கத்து வீட்டுப் பெண்மணிகள் சப்தம் கேட்டு வந்து விட்டார்கள். மாமாவின் வீடு இரண்டு தெரு தள்ளித்தான்... நடந் தேன்.

அப்பாவுக்கு முன்பு என்னென்ன மரியாதை இருந்ததோ - அவை அனைத்தும் இப்போது எனக்குக் கை மாறி விட்டது... 'பிள்ளை சம்பாதிக்க ஆரம்பித்து விட்டானே...'

முன்பு ஒரு சின்ன விஷயம் என் றாலும் அப்பாவிடம் கேட்கும் அம்மா – இப்போது என்னிடம் கேட்க ஆரம் பித்து விட்டாள். கல்யாணத்திற்குப் போவதாகட்டும், ஒரு புதுத் துணி எடுப்பதாகட்டும்.. இப்போது எனக்குத் தான் முதல் மரியாதை..

ஹாலில் அப்பா இருப்பார். அம் மாவின் வேடிக்கைகளைப் பார்த்து கொண்டே இருப்பார். என்ன நினைத்துக் கொள்வாரோ... தெரியாது. அது ஒரு இம்சை அவருக்கு என்று மட்டும் தெரியும்.

அப்பா கடையை எடுத்த ஒரே மாதத்தில் – எனக்கு பாங்கில் வேலை கிடைத்தது. முன்ன தாக பாங்க் எக்ஸாம் எழுதித் தேர்வானேன். நேர்முகத் தேர்விலும் தேர்வாகி, பணிக்குச் சேர்ந்தேன்.

அப்பா கடையை மூடின முதல் மாதம் வாழ்க்கையே பயமாய் இருந்தது. அம்மா பேசவே இல்லை. எனக்கு வேலை கிடைத்த தும் பேச ஆரம்பித்தாள். பேச்சா அது. சாட் டையடி...



வேலை கிடைத்ததும் முதல் மாத சம்பளத்தை – யாரிடம் கொடுப்பது என்று தெரியவில்லை. வீட்டில் பிரதமர் ஆட்சியா, ஜனாதிபதி ஆட்சியா என்று தெரியவில்லை. அம்மாவிடம் கொடுத்தால் அப்பா 'இவனும் நம்மை ஒதுக்குறானே' என்று எண்ணலாம். அம்மாவிடம் கொடுத்தால் "இத்தனை நாளும் காசை தொலைச்சது போதாதுன்னு இன்னும் தொலைக்கட்டும்னு அந்த மனுஷன்கிட்ட கொடுக்கிறியா?'' என்று கேட்பாள்.

நான் அப்பாவிடம் கொடுத்தேன். அம்மா நான் நினைத்தவாறே பேசினாள். அப்பா பணத்தைத் திரும்பக் கொடுத்து, "உன் அம்மா கிட்ட கொடுத்துடு" என்றார்.

அப்பாவும் அம்மாவும் பேசிக் கொள்வது நின்றே போயிற்று. எப்படி இவர்கள் இருபத்தி ஐந்து வருஷம் தாம்பத்யம் நடத்தினார்கள் என்று ஆச்சரியமாய் இருக்கும். எப்படியோ வாழ்ந்து விட்டார்கள். இருபத்தி ஐந்து வருஷங்களாய்ச் சேர்ந்து இருந்தார்கள்... அவ்வளவோ... மற்றபடி வாழவில்லை.

பெரும்பாலான குடும்பங்களில் இப்படித் தான் நடக்கிறது. சம்பாத்தியம் உள்ளவரை ஆணின் கை ஓங்குகிறது. பிள்ளைகள் தலையெடுத்தபின் தாயின் ஆதிக்கம். நேற்று வரை புருஷனின் பிடியில் சிக்கித் தவித்து, சித்திர வதைப்பட்டதற்கு இப்போது பழிவாங்குகிறாள்.

அம்மாவைக் குற்றம் சொல்ல முடியாது. அப்பாவையும் குற்றம் சொல்ல முடியாது. குற்றம் – அவர்கள் வாழ்ந்த முறையில் உள்ளது.

நான் அம்மா கையில் சம்பளம் கொடுத்த இரண்டாம் நாள் அப்பா சொன்னார். அப்போது வீட்டில் யாரும் இல்லை. அப்பாவும் நானும் மட்டுமே... "ராசு... நா குடிச்சோ இல்ல எவளோடும் கும்மாளம் அடிச்சோ காசைத் தொலைக்கல... நொடிச்சுப் போச்சு தொழில்... ஏதோ தலைவிதி இப்படியாயிடுச்சு... அத புரிஞ்சுக்காம இவ இப்படி பேசுறாளே..." புலம்பினார்.

"நேற்று வரை அம்மாவை நீங்கள் இம்சித்த காரணத்தால் கிடைத்த பரிசுதான் இது. நேற்று நீங்கள் அம்மாவை மனுஷியாக மதித்து இருந்தால் இன்று அம்மாவுக்கு உங்கள் அருமை புரிந்து இருக்கும். உங்களுக்கு நேசிக்கத் தெரியாத காரணத்தினால் அம்மாவுக்கும் நேசிக்கத் தெரியவில்லை'' என்று கூற எண்ணினேன் ஆனால் சொல்லவில்லை. அவர் மனசை மேலும் கொண்டும் புண்படுத்த விரும்பவில்லை.

மாமா வீட்டிற்கு வந்தேன். ஈஸ்வரி கண்ணில் பட்டாள். மாமா மகள்... அம்மா ஈஸ்வரியை எனக்கு முடித்து விட நினைத்து

இருந்தாள். மாமாவிடம் விஷயத்தைச் சொன்னேன். மாமா பத்துப் பதினைந்து பேரின் முகவரியைக் கொடுத்து எல்லோரிடமும் போய் சொல்லி விடு" என்றார்.

கிளம்பினேன். "நா ஆக வேண்டிய காரியத்தைப் பார்க்கிறேன். நீ கிளம்பு" என்றார்.

பஸ் ஸ்டாப்பிற்கு வர டவுன் பஸ்ஸில் ஏறினேன். ஒரு சீட் கிடைத்தது. உட்கார்ந்தேன்.

ஏனோ சின்ன வயசில் இருந்தே தகப்பன் என்பவன் கொம்பு முளைத்தவன் என்பது போல் சித்திரித்து விட்டார்கள். அதனால் அன்பு, சினேகம் எதுவும் இல்லாமல் போய் பயம் ஒன்றே மேலோங்கி விட்டது. ஆனால் இந்த ரெண்டு வருஷங்களாய் அப்பா என்னோடு நிறைய நெருங்கி விட்டதாய்த் தோன்றும்.

அவரைத் தேற்றுவதற்காக நானும் அவரிடம் நெருங்கினேன்.

நேற்று இரவு கூட தங்கையின் பிறந்த நாளுக்காக புதுரக சுடிதார் செட் ஒன்றை அம்மா எடுத்து இருந்தாள். தம்பிகளும், தங்கைகளும் அதை வாங்கி ஆள் மாறி, ஆள் பார்த்துக் கொண்டு இருந்தார்கள். அப்பா ஹாலில் தான் இருந்தார். ஆனால் யாரும் அவரைக் கண்டுகொள்ளவில்லை.

எனக்குத்தான் அதைப் பார்க்க இக்கட்டாய் இருந்தது. அவர் அக்கறை காட்டாவிட்டாலும் நானாகவே எடுத்துக் கொண்டு போய்க் காட்டி விட்டு வந்தேன்.

பஸ் நின்றது. இறங்கிக் கொண்டேன். அப்பாவின் தம்பி வீட்டிற்குப் போகிறேன். அவர்கள் நன்றாக, வசதியாக இருக்கிறார்கள்.

சித்தப்பாக்களிடம் சொல்லி விட்டு, சொல்ல வேண்டிய வேறு நபர்களிடமும் சொல்லி விட்டு வீட்டுக்கு வந்த போது பன்னிரெண்டு ஆகி இருந்தது. பாடை செய்து கொண்டு இருந்தார்கள். பந்தல் போட்டு இருந்தார்கள்....

அப்பா காரியமெல்லாம் ஒருவழியாக முடிந்தது. அம்மா ஒடுங்கிப் போனாள். அவளுடைய கம்பீரம், அதிகார தோரணை எல்லாமே இருந்த இடம் தெரியவில்லை. 'கொஞ்ச நாளாவது துக்கம் காப்பது போல நடிக்க வேண்டாமா? திரும்ப வரும் அதட்டல் உருட்டல் மிரட்டல் எல்லாம்' என்று எதிர்பார்த்துக் காத்திருந்தேன். ஒரு மாறுதலும் இல்லை. ஒரு மாதம் சென்று கேட்டே விட்டேன் : "ஏம்மா ஒரு மாதிரி ஆயிட்டே? என்ன ஆச்சு உன்னோட அதிகாரமெல்லாம்? மகாராணி மாதிரி இருந்தியே?"


"என்னோட அதிகாரமெல்லாம் அவர்கிட்டேருந்து தாண்டா வந்துது. இப்ப அவரு இல்லே; அதிகாரம் எப்படி இருக்கும்?" என்றாள் அமைதியாக.

நான் கண்கலங்கி அவளைப் பார்த்தேன். அதிகார தோரணையை ஓர் அவசியம் கருதி அவள் எடுத்துக் கொண்டிருக்கிறாள். அவள் அப்பாவிடம் கொண்டிருந்த அன்பின் ஆழத்தை அது மறைத்து விட்டது.

தம்பி தங்கைகள் ஏதோ அற்ப விஷயத்துக்குப் பெரிதாகக் குரல் எடுத்து சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள்.

நான் அம்மாவிடமிருந்து அதிகாரத்தை ஏற்றுக் கொள்ளத் தயாரானேன்.

நடுவானில் திருட்டு!



'இந்தியன் ஏர்லைன்சில்' பயணம் செய்யும் பயணிகளில் சிலர் – பயணத்தின் போது பாதுகாப்புக்காக இருக்கைகளுக்கு அடியில் வைக்கப்பட்டுள்ள Life Jacketகளை இறங்கிச் செல்லும் போது தங்கள் சூட்கேஸ்களில் போட்டு எடுத்துச் சென்று விடுகின்றனராம்.

இந்தச் செய்கையால் ஏர்லைன்ஸ் நிறுவனம் ஒவ்வொரு 'ஜாக்கெட்'டிலும் 5,000 ரூபாய் இழக்கிறது.

– பார்கவி



ஜெ.நடத்திய இன்னொரு மெ

வைக்
இடம் பிடிப்பதி
அமைச்சர்களுக்கு
புவனகிரி எம்.எல்.ஏ. மல்லிகாவு
கும் மோதல்! "நான் சுயமா சம்பாதி
ததை அம்மாவின் புகழ்பாடச் செலவழி
கிறேன். ஆனா நீங்க...?" என்று ஒ
போடாகப் போட்டு அமைச்சர்களை
மடக்கினாராம் மல்லிகா!

●● மேடையின் இருபுறமும் கைக
முளைத்த மாதிரி நீளவாக்கில் பந்தல்க
கிரிக்கெட் மேட்ச் பார்க்கிற காலரிக
மாதிரி அமைப்புகள். ஒவ்வொன்றுக்கு
ஒவ்வோர் அமைச்சர் பொறுப்பு. 24 பகு
களாகப் பிரித்திருந்தார்கள். அவற்றி
தான் 1100 ஜோடிகளும் அமர்த்
வைக்கப்பட்டிருந்தனர். எல்லாமே கி

அம்மா நடத்தும் கல்யாணம் என்றால் சும்மாவா? தருமமிகு சென்னையே கதிகலங்கிப் போன நிலையில், சிதம்பரம் எந்த மூலைக்கு? ரயிலை விட்டு இறங்கியதும் ஒரு வாய் காப்பி குடிக்கலாமே என்று ரயில்வே காண்டீன் சென்ற போது, "மூன்றரை மணிக்கே வர வேண்டிய பால் அஞ்சு மணியாகியும் வரலையே சார்!" என்று கைவிரித்து விட்டார்கள்.

காலைக் கடன்களை முடிப்பதற்காவது ஒரு ஹோட்டலில் ரூம் கிடைக்காதா? அலைந்ததுதான் மிச்சம்! சின்னச் சின்ன லாட்ஜ்களிலிருந்து நட்சத்திர ஹோட்டல் வரை அத்தனை இடங்களிலும் கிடைத்த ஒரே பதில் : "சாரி சார் ரூம் ஏதும் காலி இல்லை!"

மீனாட்சி – சுந்தரேஸ்வரர் கல்யாணத்துக்கு தேவலோகமே காலியாகி மதுரைக்கு வந்த மாதிரி, இந்தக் கல்யாணங்களுக்கு சென்னை தலைமைச் செயலகமே இடம்பெயர்ந்து சிதம்பரத்துக்கு வந்து விட்ட நெரிசலில்தான் நாமும் செய்தி சேகரிக்க வேண்டியதாயிற்று.

●● அண்ணாமலைப் பல்கலை கழக வளாகத்தில்தான் மணவிழா ஏற்பாடுகள். வளர்ப்பு மகன் திருமணமும் செட்டிநாட்டுக் குடும்பத்துக்குச் சொந்தமான இடத்தில்தான் சென்னையில் நடந்தது! சிதம்பரத்திலும் அப்படியே என்பதில் சென்டிமென்ட்தான் காரணம் என்று பேச்சு.


●● ஜெ. வருகிறார் என்பதால் நகரெங்கும் கட்-அவுட்களும் தோரணங்களும்தான். கட்–அவுட்



இதுதான் இந்தியா!

● பிரதமர் அலுவலகத்தில் அவர் ஒப்புதலுக்காகக் காத்திருக்கும் கோப்புகளின் எண்ணிக்கை 850-ஐத் தாண்டி விட்டது!

● அஸ்ஸாம் தூர்தர்ஷனுக்கு H H Darshan என்று செல்லப் பெயர். முதல்வர் ஹிடேஸ்வர் சைக்யா, அவர் மனைவி ஹேமபிரபா (இவர்தான் கௌஹாத்தி மேயர்) ஆகிய இருவரையும் தினம்தோறும் டீ.வி.யில் காட்டுகிறார்கள் என்பதால்!



* ராவ்

● ரிசர்வ் வங்கி கவர்னர் ரங்கராஜனின் பதவிக்காலம் நவம்பர் மாதத்தோடு முடிகிறது. அவருக்கு மேலும் ஓராண்டு எக்ஸ்டன்ஷன் தர ம.மோ.சிங் முடிவெடுத்திருப்ப தாகச் சொல்லப்படு கிறது. கவர்னர் பதவிக்கு ஆசைப் பட்டு போட்டி போடும் இதர அதிகாரிகள் ஓராண்டு ஓய்வு எடுத்துக் கொள்ளலாம்...?



* ரங்கராஜன்

● தமது ஐம்பதாவது பிறந்தநாளையொட்டி ஐம்பது பேரைத் தம் தொகுதிக்கு அனுப்பி, தொகுதி மக்களைத் தம் வீட்டுக்கு அழைத்து வரச் செய்து, புடைவை, துணிமணிகள் வினியோகித்திருக் கிறார் மத்திய அமைச்சர் ஜகதீஷ் டைட்லர். தேர்தல் வரப் போகிறதே!



* ஜகதீஷ்

● மேற்கு வங்கத்தில் அஜித் பாஞ்சாவுக்கு எதிராக இந்தி நடிகர் மிதுன் சக்ர வர்த்தி தேர்தலில் நிற்கப் போகிறாராம் - மார்க்ஸிஸ்ட் கட்சி சார்பாக! காலத்துக் கேற்ப கட்சிகளும் மாற வேண்டியதுதானே...!

— மௌஷ்மி

'சுருக் நறுக்' என்று ஒரு சொல்லோவியம் – 5

ஊழல் என்பது---

ரொம்பப் பிரபலமான விஷயம். புராதனமானதும் கூட. இதுவரை இதற்கு யாரும் தனியாக ஒரு சொல்லோவியம் தீட்டி யிருப்பதாகத் தெரியவில்லை. நீங்கள் முய லுங்களேன்! உங்கள் கற்பனையில், 'ஊழல்' என்பதற்கு ஒரு, ஒரு வரி விளக்கம் எழுதி 20.11.95-க்குள் அனுப்பி வையுங்கள்.

பிரசுரத்துக்குத் தேர்வாகும் ஒவ்வொரு 'சுருக் நறுக்' விளக்கமும் ரூ. 50 பரிசாகப் பெறும். தவிர இன்னும் 21 வாரங்களுக்குத் தொடரப் போகும் இப் போட்டியில் கலந்து கொண்டு, மிக அதிக முறை பரிசு பெறும் ஒரு திறமைசாலிக்கு ஒரு மெகா பரிசு உண்டு!

போட்டி முடிவுகளில் ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

– ஆர்.

ஊழல் என்பது ....

....

....


....

பெயர் : ....

முகவரி : ....

....

....



சந்தர்ப்பங்

அன்புள்ள கலா
வுக்கு,

நலம். நலமறிய அவா.

உனக்குக் கடிதம் எழுத வேண்டும், வேண்டும் என்று மனசு அடித்துக் கொள்கிறது. என்னென்னவோ சொல்ல வேண்டும், கொட்ட வேண்டும் என்று வரி வரியாய் மனசுக்குள் வார்த்தைகள். கூடவே என்னவோ தடை. என்னவென்று தெரியவில்லை. இந்த அறைக்கு வந்து பத்து நாட்களாகி விட்டன. ஒவ்வொரு இரவும் எழுத வேண்டும் என்று நினைத்துக் கொள்வேன். அப்படியே தூங்கியும் போய் விடுவேன்.

மறுநாள் காலை எப்போதும் போல் வெப்பம். பயங்கர வெப்பம். இது நடுவே குளித்து, மூன்று பிரெட் துண்டுகளைத் தின்று விட்டு, காத்திருக்கும் பஸ்ஸுக்கு ஓட்டம். கூடவே ஒரு நூற்றியிருபது பேர். எல்லாரும் சொந்த மண்ணை விட்டு இந்த ரியாத் புழுதியில் குப்பை கொட்ட வந்தவர்கள்.

பணம். அது மட்டும்தான் குறிக்கோள். உன்னுடையதும் அதுதானே? அதற்கான உன் மௌனப் போராட்டம்தான், என்னை இங்கே கொண்டு வந்து தள்ளியிருக்கிறது.

நான் சாதாரணமானவன். கனவுகளில்லாதவன். படித்த காலத்தில், முதல் ராங்க் வாங்கினவனை தூரே நின்று ரசித்திருக்கிறேன். பொறாமைப்பட்டதில்லை.

அலைச்சலில்லை. பரபரப்பில்லை. ஒரே சீரான ஓட்டம். வேலை கிடைத்தது. சம்பளம் வந்தது. அது போதும். மிச்சம் பிடிக்க முடிந்த போது மிச்சம். கடன் வாங்கியதில்லை. ஒழுங்காய் சாதம் போட்ட அம்மா. தேவைப்பட்ட விஷயம் மட்டும் கேட்ட அப்பா.

உன்னைப் பார்த்து விட்டு அம்மா ஓஹோ என்று சொன்ன போதும் ஏதும் சலனமில்லை. பார்த்த போதும் ஒன்றுமில்லை. பிடித்திருந்தது. கல்யாணமும் ஆயிற்று. என்னைப் போல் நீயும் ஒருத்தி. அப்படித்தான் நினைத்திருக்கிறேன்.

உன் எண்ணங்கள் எனக்குத் தெரியவில்லை. நாலு வரி சேர்ந்து பேசினது, கல்யாணமான மூன்று மாதம் கழித்துத்தான். உன்னைப் பற்றித் தெரியாமலே இருந்திருக்கிறேன்.

தெரிந்த போது... என்ன சொல்வது?

அந்தப் பேச்சு இன்னும் ஞாபகமிருக்கிறது. அப்போது முதல் முறையாய் கம்பெனி லாக்-அவுட் ஆனது. திறந்து விடும் என்ற நம்பிக்கையில் சாப்பிட்டுத் தூங்கி எழுந்த நாட்களவை.

நல்ல மத்தியானம். தூங்கி எழுந்து புதுக்

கைதிகள்

ஆர். வெங்கடேஷ்

காப்பியோடு முற்றத்துத் தூணில் சாய்ந்திருந் தேன்.

"பேக்டரி எப்போ திறப்பா?"

"திறந்துடுவா. பத்து, பதினஞ்சு நாளாகும். யூனியன்ல போய்ப் பேசிண்டிருக்கா."

"இந்த லாக்-அவுட் ஆன நாளுக்கெல்லாம் சம்பளம் தருவாளா?"

"தெரியலை. அரைச் சம்பளம் தரலாம். அதான் திறந்துடப் போறாளே. அப்புறம் என்ன?"

"அப்போ, இது மாதிரிதான் லைஃப் புல்லா இருக்குமா?"

"இது மாதிரின்னா?"

"பேக்டரிய மூடிண்டு, திறந்துண்டு...."

என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் விழித்தேன். கம்பெனியில் சேர்ந்த முதல் ஐந்து வருடங்களிலேயே இரண்டு முறை லாக்-அவுட் ஆகியிருந்தது.

"அப்படின்னு இல்ல. நன்னாதான் போயிண்டிருக்கு கம்பெனி. ஒரு சில பேர் தகராறு பண்றாங்க. அதனால லாக்அவுட் ஆகிடறது."

"சரி. அதுக்காக, இந்தக் கம்பெனிய நம்பிண்டே இருக்க முடியுமா?"

அதுவரை யோசித்திராத விஷயம். இப்படியே போய்க் கொண்டிருப்போம் என்றுதான் நினைத்திருக்கிறேன். லாக்அவுட்டானால் கொஞ்சம் சிரமம். திருப்பியும் அடித்துப் பிடித்து திறந்து விடுவார்கள். நாலாயிரம் தொழிலாளிகள் வயிற்றில் அடிக்க யாருக்கு மனசு வரும்? தைரியம்தான். நம்பிக்கைதான்.

இரண்டாவது முறை லாக்அவுட் ஆன போது, உனக்கு எட்டு மாதம். செலவுக்குப் பணமில்லாத போது, பெரியண்ணா உதவினார். பிரகாஷ் பிறந்தான். சந்தோஷமான அந்த நேரத்தில் மீண்டும் உத்யோகம் பற்றிப் பேச்சு வந்தது. இப்போது புதுக் காரணம். புது வேகம்.

"இவன வளக்க வேண்டாமா? படிக்க வெக்க வேண்டாமா? இதுமாதிரி லாக்அவுட் ஆயிண்டிருந்தா, எதிர்காலத்துல என்ன பண்ணப் போறோம்?"

பிரகாஷை மடியில் போட்டுக் கொண்டு கேட்டாய். நியாயமான கேள்வியாகத்தான் தோன்றியது. ஆனால் என்ன மாற்றத்தைக் கொண்டு வந்து விட முடியும்? படிப்பு குறைவு. ஒவ்வொருவரிடமும் சொல்லி, சொல்லி வைத்து, பெறப்பட்ட உத்தியோகம். எந்த உறுதியில் வேலையை மாற்றிக் கொள்ள முடியும்? தெரியவில்லை. நிலைமை சரியாகி விடும் என்ற நம்பிக்கையில் வாழ்வதுதான் சரியென்று தோன்றியது. சாப்பாட்டுக்குக் கஷ்டமில்லை. எதிர்காலம், அது நம் கைகளிலில்லை. எப்படி நடக்க வேண்டுமோ, அப்படியே நடக்கும்.

அப்புறம் ரேவதி பிறந்தாள். உன் கோபம் அதிகமானது. இப்போதே அவள் கல்யாணம் பற்றி யோசிக்க ஆரம்பித்து விட்டாய். விளையாட்டாய் நான் சொன்னவைகளை விபரீதமாக்கிக் கொண்டாய்.

"ரேவதிக்கு நாம பாக்கணுமான்ன? அவளே பாத்துக்கறா!"

"ஏன், நீங்களே ஓடச் சொல்வேள் போலயிருக்கு?"

"ஓடினா என்ன பண்ண முடியும்?"

"என்னால, நாண்டுண்டு சாக முடியும்!"

நான் அதிர்ந்து போனேன். உள்ளடங்கினேன். எல்லாவற்றுக்கும் அடிப்படை பணம் தான் என்ற உன் எண்ணம் புரிபட்டது. இந்த வெளிச்சத்தில் உன் பிற செயல்களும் புரிபட்டன. நல்ல புடைவை, நல்ல நகை, சொந்த வீடு, சொல்லிக் கொள்ளும்படியான உத்தியோகம், வாழ்வு என்ற லட்சியங்கள் தெளிவாயின.

நான் லட்சியங்களற்று வளர்ந்தவன். உன் லட்சியங்கள் மலைப்பு தந்தன. பயமுறுத்தின. அதைவிட, அவையெல்லாம் தேவையா என்றும் யோசித்தேன். எனக்குத் தேவையில்லை என்று தோன்றியது.

இதன் பிறகு, நான் ஒரு பெரிய தப்பு செய்தேன். என் லட்சியமின்மையைச் சொல்லியிருக்கக் கூடாது. சொல்லி விட்டேன். உன் மௌனப் போராட்டத்தின் தொடக்கம் இங்குதான்.

அப்புறம் உன் பேச்சில், செயலில், உணர்வில் உத்வேகம் இல்லை. கடனுக்கு மாரடிக்கத் தொடங்கினாய். என்னை எவ்வளவு கஷ்டப்படுத்தியது தெரியுமா, உனது புழுக்கம்? உனது வரட்டுத்தனம் என்னை வாட்டியது.

நான் வேகமற்றவன்தான். லட்சியமற்றவன்தான். ஆனால் நான் உணர்வற்றனில்லை. எல்லோரும் சந்தோஷிப்பது எனக்குப் பிடிக்கும். குழந்தைகள் புத்தாடை பூண்டு பண்டிகைகளில் குதூகலிப்பது பிடிக்கும். நாலு பேரோடு சத்தமாய்ப் பேசிக் கொண்டு சாப்பிடுவது பிடிக்கும்.

அடுத்த நகரம்-திருநெல்வேலி!

நெல்லை வாசிகளே! இது உங்கள் முறை. பம்பாய்க்காரர்களை அடுத்து சிறப்புப் பக்கங்களை ஆக்கிரமிக்கப் போவது நீங்கள்தான்! உங்கள் துணுக்குகளை, ஜோக்குகளை, கதைகளை, கவிதைகளை, கட்டுரைகளைப் போஸ்ட் கார்டில் (மட்டும்!) எழுதி உடனே அனுப்புங்கள். முகவரிப் பகுதியில் நெல்லைத் துணுக்குகள் என்று மறக்காமல் குறிப்பிடுங்கள். அதிக பட்சம் நான்கு வாரங்கள் புகுந்து விளையாடக் களம் தயார்! உங்கள் படைப்புகளின் சுவை, அல்வாவைத் தூக்கிச் சாப்பிட்டுவிடும் என்பதில் எங்களுக்கு மிகுந்த நம்பிக்கை உண்டு. ஆல் தி பெஸ்ட்!

— ஆசிரியர்.

ஆனால், எல்லாவற்றிலும் சந்தோஷம் அருகியது. மந்தத்தனம் புகுந்து கொண்டது. மௌனமாய் உன்னை நீ வாட்டிக் கொள்வது வீடு முழுவதும் வியாபித்தது. வீட்டுக்கு வரவே பிடிக்கவில்லை. சில சமயம், அப்படியே எங்காவது நடந்து போய் விடலாமா என்று தோன்றியதுண்டு. உன்னை எப்படி சந்தோஷப்படுத்துவது என்று தெரியவில்லை.

பணம்தான் இன்றைய உலகின் மகிழ்ச்சிக்கான அடிப்படை என்பதை என்னால் ஏற்க முடியவில்லை. உன்னிடம் பேசுவது கூட இயல்பில்லாமல் போனது. யாரோ நான்காவது நபரிடம் காட்டும் முகம். ஒரு நிலைக்குப் பின் லேசான பயம் கூட தலையெடுக்கத் தொடங்கியது.

சொல்லி வைத்தாற்போல், கம்பெனியை ஒரு பன்னாட்டு நிறுவனம் வாங்கிக் கொண்டது. டைரக்டர்கள் மாறினார்கள். கருணையெல்லாம் உதவாது என்றார்கள். உற்பத்தி வேண்டும், காசு வேண்டும். மனிதர்களை விட இயந்திரங்கள் வாய்பேசா சேவகர்கள். நாலாயிரத்தை இரண்டாயிரம் பேராக்கு. 'வி.ஆர்.எஸ்.ஸில் வீட்டுக்குப் போ' என்றார்கள். அப்போதுதான் கம்பெனியை மீண்டும் லாப மடையச் செய்ய முடியும் என்றார்கள்.

எவ்வளவோ சண்டை போட்ட போதும், 'பதினைந்து வருடம் குப்பை கொட்டியது போதும், போடா' என்று விட்டார்கள். வீட்டுக்கு வந்து உட்கார்ந்த போது, வயது நாற்பத்திரண்டு. உடம்பு, ஒரு சுகத்துக்குப் பழகி விட்டிருந்தது. நிமிர்ந்து பார்த்த போது, பயமாக இருந்தது.

வேலை இல்லை. ஜீவனத்துக்கு, செட்டில் மெண்ட் பண்ணி அனுப்பிய பணத்தின் வட்டி தான். சிறியவர்களாகவும் இல்லாமல், பெரியவர்களாகவும் இல்லாமல் இரண்டு குழந்தைகள். கூடவே புழுக்கத்தில் இறுகிப் போன நீ.

எப்படியிருக்கும் என்று யோசித்துப் பார்.

அப்போதும் உனக்குக் கருணையில்லை. உன் பார்வை, என்னைக் குத்தம் சொல்லியது. உன் செயல்கள், என்னை இகழ்ந்து பேசின. நான் துவண்டேன்.

நடந்தவைகளுக்கெல்லாம் நானா பொறுப்பு? உலகம் இழுத்த இழுப்புக்கு நான் ஆடியிருக்கிறேன். வேறென்ன செய்ய முடியும்? உனக்கேன் இது புரியவில்லை? எனக்குப் புரிய வைக்கவும் தெரியவில்லை.

விளைவு, ஒதுங்குதல். உனக்குத் தேவையானதை உனக்கும், எனக்குத் தேவையானதை எனக்கும் அருள இறைவனிடம் வேண்டினேன். யார் யாரிடமோ சொல்லி, ஹெவி வெஹிகல் டிரைவராக ரியாத் வந்து விழுந்தேன்.

சம்பளம் ரியாலில். இன்னும் இரண்டு வருடங்களில் உன் லட்சியங்கள் பூர்த்தியாகி விடலாம். அப்புறம், உன் வார்த்தைகளில் 'உட்கார்ந்து சாப்பிடலாம்.'

ஆனால், இதனாலெல்லாம் என்ன பயன்?

அல்ப பணத்துக்காக அந்நிய தேச வாசம். தேவையில்லாப் பிரிவு. குழந்தைகளற்ற தனிமை. ஏன் என்று கேட்கவும் ஆளில்லை. கேரியர் சாதம். கண்ணில் விஷம் கொண்டு காத்திருக்கும் மேலாளர். பேசினால், வீட்டுக்குத் துரத்தி விடுவார்கள். அடிமை வாழ்வு.

சந்தோஷமில்லை. வாழ்க்கைக்கு எது முக்கியமோ, அது இல்லை. அப்புறம் என்னத்துக்கு வாழ்க்கை?

யார் மேல் கோபப்படுவது என்று தெரியவில்லை. என்னை வியாபித்திருப்பது மொத்தமும் நீதான். என்னை இயக்குவதும் நீதான்.

ஏன் என்னை இப்படிக் கொல்லாமல் கொல்கிறாய்?

வருத்தத்துடன்,
எம். ஆர். கண்ணன்.

மறுநாள் தூங்கியெழுந்த கண்ணன், அவசரமாய் கடிதமெழுதிய போது, மேற்கண்ட கடிதத்தின் முதல் இரண்டு வரிகள் மட்டுமே இருந்தன. அப்புறம், குழந்தைகளின் நலம் விசாரித்து, படிப்பு விசாரித்து, வங்கி மூலம் அனுப்பியிருக்கும் பணத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு கூறி, கலாவுக்குத் தன் பூரண அன்பைத் தெரிவித்திருந்தான்.

இரு வேறு உலகம் இது என்றால்

எம்.ஏ.சுசீலா

அன்று விடிந்த அந்தப் பொழுது, ஏதோ ஓர் அசாதாரணத் தன்மையை உள்ளடக்கிக் கொண்டிருப்பது போல அவளுக்குப் பட்டது. அறையின் மூலையிலுள்ள நார்க்கட்டிலில், மரக்கட்டையைப் போல அசைவற்றுப் படுத்துக் கிடந்தான் கலைப்பிரியன். இயற்கை உபாதைகளுக்காகவும் கூட நேற்றிரவு அவன் தன்னை எழுப்பியிராதது, ரத்னாவின் மனத்துக்குள் நெருட, அவன் முகத்தருகே கைவைத்துப் பார்த்தாள். திக்கித்திக்கிப் பாடம் ஒப்புவிக்கிற மாணவனாய் சுவாசம் தயங்கித் தயங்கி வெளிப்பட்டுக் கொண்டிருந்தது. அடங்கிக் கொண்டிருந்த அவனுடைய மூச்சுக் காற்றைப் போலவே... வாழ்க்கையின் சவாலான சந்தர்ப்பங்களிலும்கூட, அணைந்துவிடாமல் அவன் பாதுகாத்து வந்த ஆர்வங்களும் வேகங்களும் கொஞ்சம் கொஞ்சமாய் அடங்கிக் கொண்டு வருவதை அவளால் உணர முடிந்தது.

"அக்கா!" - கதவைத் தட்டியது கலாதான். அந்த எட்டடிக் குச்சுக்குள் சுழன்று கொண்டிருந்த குடலைப் புரட்டும் நோய் வாடையும் புழுக்கமும் ஏதோ தனக்கு மட்டுமே உரிய அந்தரங்கச் சொத்தென்று பாதுகாத்துக் கொள்பவளைப் போலக் கதவை அரைகுறையாகத் திறந்தாள் ரத்னா. கதவு, முழுவதுமாகவே திறந்திருந்தாலும், உள்ளே வருகிற உத்தேசம் இல்லாதவளாய்க் காணப்பட்ட கலா, உல்லாச மனநிலையில் படபடத்தாள்.

"என்னக்கா... இன்னும் குளிக்கப் போகலியா? ஒரு மணிக்கெல்லாம் வண்டி வந்திடும்! நினைவிருக்கு இல்லே! இன்னிக்கு ஏவி.எம்மிலே ஷூட்டிங்! அண்ணனைக் கவனிக்கிறதிலே மறந்திடாதீங்க!"

கலாவின் நினைவூட்டலால் தன்னிலை பெற்ற ரத்னாவின் கண்களில் அந்தச் சுற்றுப்புறமே புதியதாய்த் தென்பட்டது. கூரைக் குடிசைகளுக்குச் சற்றே மேலான அந்த சிமெண்ட் லைன் வீடுகள்... எத்தனையோ மாத இடைவெளிக்குப் பிறகு... முற்றம் தெளிக்கப்பட்டு, வண்ணக் கோலங்களை அணிந்து கொண்டு... ம்! உள்ளும் புறமும் வேறானவை என்று எப்படிச் சொல்லி விட முடியும்? இங்கே 'உள்'தானே புறத்தை நிர்ணயித்துக் கொண்டிருக்கிறது? இந்த வீடுகளுக்கு... இவற்றில் வசிக்கிற மனிதர்களுக்கு... இன்றைய 'ஷூட்டிங்' ஒரு செயற்கை சுவாசத்தையல்லவா உட்செலுத்தியிருக்கிறது?

"என்ன ரத்னா, இங்கே நின்னுக்கிட்டிருக்கே? குழாய்லே அதிசயமாய்த் தண்ணி வருது? நமக்கு நல்ல காலம் வந்தாப்பிலே! சீக்கிரமாப் பிடிச்சு வச்சுச் சோறு பொங்கிட்டுக் கிளம்பற வழியைப் பாரு!"

"கிளம்பணுங்க்கா!"

"இதோ பாரு ரத்னா! தம்பி உடம்பையே நெனச்சு மறுகிக்கிட்டிருக்காதே! ஏதோ... பணம் பெருத்தவங்க அடிச்சுக்கிட்டாங்க! மூணு மாசம் ஸ்டிரைக்குன்னு நம்ம வயத்திலே ஈரத்துணியைப் போட்டு வச்சிட்டாங்க! இப்பத்தான் விடிவுகாலம் வந்திருக்கு! நாம என்ன லட்சக்கணக்கிலே கறுப்புப்பணமா சேர்த்து வச்சிருக்கோம்? இந்த மூணு நாள் 'ஷூட்டிங்'கை நம்பி எத்தனை இடத்திலே கடன் வாங்கியிருக்கேன் தெரியுமா? நீயும் கிடைக்கிற காசிலே தம்பிக்கு நல்ல வைத்தியமாய்ப் பார்க்கலாம், கிளம்பும்மா!"

- ஒரு மூத்த சகோதரியைப் போன்ற கரிசனத்தோடு பேசிவிட்டுப் பார்வதி அக்கா சென்ற பிறகு, கதவைத் தாழிட்டுவிட்டு உள்ளே வந்தாள் ரத்னா. அவன் படும் வேதனையைக் காண மனம் சகிக்காத நிலையிலும், கால்கள் அனிச்சையாக அவனருகிலேயே அவளை அழைத்துச் சென்றன.

ஆறடி உயரமும் அதற்கேற்ற கம்பீரத் தோற்றமுமாய்த் திரைப்படக் கல்லூரி மாணவனாக அவள் சந்தித்த அந்த சதீஷ்...! உலக சினிமாவையே உள்ளங்கை விரல்களில் அடக்கி வைத்திருந்த ஆழ்ந்த ஞானமும் கர்மயோகியைப் போல சதாகாலமும்

இலட்சியமே குறியென நிலைத்திருக்கும் தீட்சண்யம் வாய்ந்த காந்தக் கண்களும் ரத்னாவை அவனருகிலேயே கட்டிப் போட்டன. ஆசையோடு தான் தேர்ந்து கொண்ட துறையைத் தான் விடுகிற சுவாசமாகவே ஆக்கிக் கொண்டு, உலகத்தையும் வாழ்க்கையையும் கலைக்கண்களால் மட்டுமே பார்த்துக் கொண்டிருந்த அவனுக்குக் கலைப் பிரியன் என்ற பெயரைச் செல்லமாகச் சூட்டியவளே அவள்தான்!

"இத பரு ரத்னா!... 'எ ஃபிலிம் பை கலைப்பிரியன்'னு போட்டுக்கிட்டுப் பேரு வாங்கிட்டுப் போயிடறது என் னோட லட்சியமில்லை! தாய், தங்கச்சி, தாலி, தாரம்ங்கிற செண்ட்டிமெண்ட்டுகளுக்குள்ளேயே குதிரை ஓட்டிக்கிட் டிருக்கிற நம்ம தமிழ்ப் படங்கள்... உலக மேடையிலே பேசப் படற அளவுக்கு உயர்ந்தா... அதுதான் எனக்குச் சந்தோ ஷம்..."

- உண்மையான தாகமும் வெறியுமாய்ப் பேசும் அவனது கலைத்தவம், பணம், புகழ், விருது என்ற எல்லைகளையெல்லாம் கடந்த தொலைதூர இலக்கொன்றில் மையங்கொண் டிருந்தது.


ரத்னாவும் அவனுமாய் வாழ்க்கைப் பயணத் தில் இணைசேர்ந்த பிறகும் கூட காதல் பேசா மல் விதம் விதமாகத் திரைக்கதைகளையே பேசி, விவாதித்து, ஒவ்வொரு 'ஷாட்'டாக எழுதிப் பார்த்துத் தங்கள் கற்பனைப் படத்தை எந்த 'ஃபைனான்சியரி'ன் துணையுமின்றி மனத்திரை யில் ஓட்டிப் பார்த்து... ஓ... எத்தனை இனிமை யான காலங்கள் அவை...!

தன்னுடைய இலட்சியக் கனவுக்கும் நடை முறை யதார்த்தத்துக்கும் இடையே... தூர்க்கவே முடியாத அகழிகள் கிடப்பது, கலைப்பிரிய னுக்கு நன்றாகவே தெரிந்திருந்தாலும் கூடத் தன் மனத்தின் அழைப்பை மீறி, அன்றாட வாழ்க்கையை ஓட்டுவதற்காகவென்றுகூட, எத னோடும் யாரோடும் சமரசம் செய்து கொள் வது, அவனுக்குத் துளியும் சம்மதமில்லாமல் போயிற்று. அந்தக் காரணத்தினாலேயே ரத்னா, ஒரு துணை நடிகையாகிற நிர்ப்பந்தம் நேர்ந்த பொழுது, அவன் அதை ஏற்க முடியாமல் துடித் துப் போனான்.

"உன்னைச் சம்பாதிக்க விட்டுட்டு நான் உட் கார்ந்து சாப்பிட வேண்டியிருக்கேங்கிற பாமரத் தனமான காரணத்துக்காக இதை நான் எதிர்க் கலை ரத்னா! நம்ம ரெண்டு பேர்ல யாருடைய திறமை ஏற்கப்பட்டாலும், அது ரெண்டு பேருக் குமே வெற்றிதான்! ஆனால்... இந்தத் துறை யிலே... உன்னோட 'டெக்னிகல்' அறிவுக்கும், கதை சொல்ற திறமைக்கும் பக்கத்திலே கூட வர முடியாதவங்களுக்குக் கீழே.... நீ... பத்தோட பத்னொண்ணா அவமதிக்கப்படற கொடு மையை என்னாலே தாங்கிக்க முடியாதும்மா!"

ஆனாலும்... தினந்தோறும் அவர்களின் அரைவயிறு நிரம்புவதற்காகவாவது... அவன் அதைத் தாங்கித்தான் ஆகவேண்டுமென்ற

நிலை ஏற்பட்டபோது, இடிந்
போனான் அவன். ஆனால்,
அவன் நோய்ப்படுக்கையி
விழுந்துவிட்ட அந்த நாட்கள
லுங்கூட... அவனது கதையை
கலைப்படம் எடுக்கப் போ
தாய்ச் சத்தியம் செய்து வாங்கி
கொண்டு போன ஒருவர்
அதனை அழகுபடுத்துவதா
நல்லெண்ணத்தில், அசிங்கப
படுத்திக் குலைத்தபோது..
'மூலக்கதை'க்குச் சன்மானமாக
தன் முன்பு நீட்டப்பட்ட காசோ
லையை வாங்க மறுத்து, அதை
மூர்க்கமாய்க் கிழித்தெறிந்தான்



அவன்.

சலனமின்றிப் படுத்திருந்த கலைப்பிரியனிடமிருந்து விக்கல் ஒலி ஒன்று வெளிப்பட, நினைவு கலைந்தாள் ரத்னா. இனிமேல் தாமதிப்பதில் பொருளில்லை. அவனைச் சுத்தம் செய்து ஆகாரம் ஊட்டிவிட்டு அவளும் கிளம்பியாக வேண்டும்! நீண்ட நாள் முடக்கத்திற்குப் பிறகு, சோம்பல் முறித்துக் கொண்டு இன்று எழுந்திருக்கும் கனவுத் தொழிற்சாலை தரப்போகிற வருமானத்தில், அவள் அவனுக்கு மருந்து வாங்கியாக வேண்டும்!


தண்ணீர் பிடிக்கும் இடத்தில், கேலியும் சீண்டலுமாகக் கூடியிருந்த பெண்களின் முகங்களில்... திருவிழா பூரிப்பு!

"நீ என்னதான் சொல்லு! காமிரா முன்னாடி நிக்கிறதே ஒரு தனி ஜோருதான்... இல்லே!"

"ஆமாம்! இவ பெரிய சரோசாதேவி! இவளைத்தான் காமிரா 'டைட் குளோசப்'பிலே காட்டப் போகுதாக்கும்."

"முகம் தெரியுதோ... மூக்குநுனி தெரியுதோ... அதைப் பத்தி நமக்கென்ன? ஷூட்டிங்கை நடத்தறது பெரிய கம்பெனி! வழக்கமா நமக்குக் கிடைக்கிற வருமானத்துக்கு மேலேயே கொடுக்கிறதோட, மூணு நாள் நல்லா... வாய்க்கு ருசியாய்ச் சாப்பாடும் கிடைக்கும்..."

"ஏங்கா! பொதுவாய்ப் பாட்டு... டான்ஸ் காட்சின்னா... பத்து, இருபது துணை நடிகைகளைத்தானே கேட்பாங்க? இவங்க... ஒரே சமயத்திலே நூறு பேருக்குமேலே வேணும்னு கேட்டிருக்காங்க!"



"இல்லேடி... இது... ஏதோ பூசைக்காட்சியாம்! மஞ்சப் புடைவை, ரவிக்கையோட ஹீரோயின் கூடச் சேர்ந்து..."

"வேப்பிலை அடிக்கணுமாக்கும்...?"

- இவர்கள் இத்தனை பேருமாய்ச் சேர்ந்து பேசிச் சிரித்துத்தான் எத்தனை நாளாயிற்று? பொருள்தான் அத்தனைக்கும் ஆதாரம் என்று சொல்லிவிட்டுப் போன மார்க்ஸ், ஒரு பொய்யனா என்ன?

ரத்னாவின் வருகை... அவர்களது பேச்சில் சிறியதொரு இடைவெளியை ஏற்படுத்திவிட்டுத் தொடர்ந்தது.

"ரத்னாக்கா! நீங்களும் வர்றீங்கதானே?"

"ம்...! அக்காவுடைய அழகுக்கும், நடிப்புக்கும் அதிர்ஷ்டம் மட்டும் இருந்திருந்தா, ஒரு சுகாசினியாகியிருக்கலாம்!"

"அண்ணன் மட்டும் என்னவாம்...? நல்ல காலம் வந்திருந்தா... மணிரத்னத்துக்கும் மேலெயே போயிருப்பார்...!"

- பணத்தின் பாதை அடைபட்டுப் போனாலும், அன்பின் ஊற்று வற்றிப் போகாத அற்புதமான பெண்கள்! நடிகையர் திலகங்களாய்... நாட்டியப் பேரொளிகளாய் மின்னுவதற்கு ஆசைப்பட்டு வந்துவிட்டு, வெள்ளித்திரையில் மின்மினிப் பூச்சிகளாய் மட்டுமே தலையை நீட்டிவிட்டுப் போனாலும்... அடுத்தவர்களின் வாய்ப்பைக் கண்டு பொறாமைப்படாதவர்கள் அவர்கள்!

வாழ்க்கை நெருக்கடிகளால் தங்கள் கூட்டத்தோடு இணைந்திருந்தாலும்... ரத்னாவும், கலைப்பிரியனும் திறமைகளில் தங்களைவிட மேலானவர்கள் என்ற உணர்வும், அவர்கள் இருவரின் வித்தையும் ஞானமும் வீணாய்ப் போகிறதே என்ற ஆதங்கமும் அந்தப் பெண்களுக்கு நிறையவே இருந்தது.

"ரத்னாக்கா! உங்களுக்குத்தான் இந்தி நல்லாத் தெரியுமே! இன்னிக்கு நம்ம கூட நடிக்கிற ஹீரோயினுக்கு அதுதான் தாய்மொழியாம்! கொஞ்சம் அவங்க கூட நைசாப் பேசி... ஒரு அக்கா வேஷத்துக்காவது சான்ஸ் வாங்கிடுங்



"அடுத்த தடவை வேற தொகுதியில் நிற்கப் போறேன்!"

"ஏன், இந்தத் தொகுதியில் எல்லாக் குறைகளையும் நிவர்த்தி செஞ்சாச்சா?"

"ஊஹூம். எல்லாப் புறம்போக்கையும் ஆக்கிரமிச்சாச்சு!"

- வேதபுரி எஸ். ரமேஷ்

களேன்!"

"என்ன இது... இன்னும் கிளம்பாமே சளசளன்னு பேசிக்கிட்டு...? இன்னும் ஒரு மணி நேரத்திலே ஸ்டூடியோவிலேயிருந்து பஸ் வந்திடும்! போய்ப் புறப்படற வழியைப் பாருங்கம்மா!"

- விரட்டிக் கொண்டே வந்த அவர்களின் ஏஜெண்ட்டான மணியண்ணன், அங்கே நின்றிருந்த ரத்னாவைக் கண்டதும், குரலைத் தணித்துக் கொண்டான்.

"தங்கச்சி! நீயும்... கவலைப்படாமே இவங்க கூடப் போயிட்டு வாம்மா! நீ திரும்பி வர்ற வரைக்கும்... 'கலைத்தம்பி'யை நான் பார்த்துக்கறேன்!"

- கோடம்பாக்கம் வட்டாரத்திலேயே முரடனென்று பெயரெடுத்திருந்த மணியண்ணன், திரைக்கல்லூரி வாழ்க்கையில், அவர்கள் இருவருக்கும் சீனியர்! கலைப்பிரியனின் ஆற்றல்களையும் பரிமாணங்களையும் முழுவதுமாய் அறிந்திருந்த அவனது தீவிர அபிமானி!

"இந்தா பாரு பார்வதி! இன்னிக்கு என்னாலே உங்ககூட வர முடியாது! எல்லோருக்கும் கம்பெனியிலே சாப்பாடு வாங்கித் தர்றது... சம்பளம் வாங்கிக் கொடுக்கிறது... இதையெல்லாம் இன்னிக்கு நீ பார்த்துக்க" என்று பார்வதியை அழைத்துக் கூறியவன், மீண்டும் ரத்னாவிடம்,

"எல்லாரையும் பஸ்ஸிலே ஏத்திவிட்ட பிறகு, நான் உங்க வீட்டுக்கு வந்து தம்பியை 'சார்ஜ்' எடுத்துக்கறேம்மா! அப்பாலே கடைசியா நீ வந்து இவங்க கூட 'ஜாயின்' பண்ணிக்கலாம்" என்றபடி அங்கிருந்து அகன்றான்.

அந்தக் குறுகிய சந்தை முற்றாக அடைத்தபடி, விஸ்தாரமான சுற்றுலாப் பேருந்து ஒன்று நின்று கொண்டிருக்க, தங்களின் தனி அடையாளங்களையே துறந்தவர்களாய்... மஞ்சளுடை அணிந்த பெண்கள், அதன் இருக்கைகளை நிறைத்திருந்தார்கள்...

"என்ன... எல்லாரும் வந்தாச்சா? ஒழுங்காப் போய்ச் சொன்னபடி வேலை செஞ்சிட்டுச் சண்டை போடாம பணத்தை வாங்கிக்கிட்டு வந்து சேருங்க! நான் போய் ரத்னா தங்கச்சியை அனுப்பறேன்! அது வந்தப்புறம் பஸ் கிளம்பலாம்!"

மணியண்ணன் மூன்று முறைக்கும் மேலாகத் தட்டிய பிறகு கதவைத் திறந்த ரத்னா, மஞ்சள் புடைவை உடுத்திக் கொண்டு கிளம்புவதற்குத் தயார் நிலையிலிருந்த போதும், அவள் விழிகள் நீர்க்குளங்களாக மாறியிருந்தன.

"என்னம்மா இது...? புறப்படற நேரத்திலே இப்படிக் கண்கலங்கிட்டு...?"

"முதல்லே உள்ளே வாங்கண்ணே!"

- ஒன்றும் புரியாதவனாய் அவன் உள்ளே நுழைய... கதவை அழுத்தித் தாழிட்ட ரத்னா, அவனுக்கு மட்டுமே கேட்கும் அடங்கிய குரலில் அதனை அறிவித்தாள்.

"அவர் போய்ச் சேர்ந்துட்டார் அண்ணே!"

- கலைப்பிரியன் இருந்த திசையில் அப்போதுதான் கண்களைச் செலுத்திய மணியண்ணன், போர்வை போர்த்தப்பட்டுச் சடலமாய்க் கிடந்த அந்தக் கலைஞனின் சன்னதியில் பொடிப்பொடியாய் நொறுங்கிப் போவனாய்த் "தங்கச்சீ..." என்று அழுவதற்கு உரத்த குரலெடுத்தான்.

அதற்குள் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, தன்னைச் சுதாரித்துக் கொண்டாள் அவள்.

"அண்ணே! வேண்டாண்ணே! குருவிக் கூட்டைப் பிரிச்சுப் போட்ற மாதிரி... இந்த வீடுகளோட சந்தோஷத்தை என் புருஷனோட சாவு கெடுத்திட வேண்டாண்ணே! நம்மளை மாதிரி ஏழைங்க எல்லாம் காக்கா ஜாதி! இப்ப இங்கே ஒரு சாவு விழுந்திட்டது தெரிஞ்சா... இங்கே உள்ள எந்தக் காக்காயும் இரைதேடப் போகாது! இன்னிக்குத் தொழில் இருக்குங்கிறதைச் சொல்லிச் சொல்லி வாங்கின கடன்லே எத்தனை நாளா இங்கே உள்ள அடுப்பெல்லாம் எரிஞ்சுக்கிட்டிருந்ததுன்னு எனக்கு நல்லாவே தெரியுண்ணே! கலைஞர்கள் வயத்திலே பணக்காரங்கதான் அடிக்கிறாங்கன்னா... என்னோட கலைப்பிரியனும் அடிச்சிடக் கூடாதுண்ணே...! இப்ப... நான் அவங்க கூடப் போகாட்டியும் கூட அவங்களுக்குச் சந்தேகம் வந்திடும்! அதனாலே நான் போறேன்."

- இந்தக் கட்டத்தில் பொறுத்துக் கொள்ளவே முடியாதவளாய்த் தேம்பி வெடித்தாள் அவள்.

"கடைசியா... எனக்கு ஒரே ஒரு உதவி மட்டும் செஞ்சிடுங்கண்ணே.... நான் வர்ற வரைக்கும் இவரை... என்னோட 'கலை'யைப் பத்திரமாய்ப் பார்த்துக்கங்க! நான் கொண்டு வர்ற காசு... இவரோட கலைப்பயணத்தைக் கடனில்லாம முடிக்கிறதுக்காச்சும் உதவட்டும்!"

நெடுஞ்செழியன் அறிவுரை கூறியிருக் கிறாரே?

! மக்களுக்கு உபதேசம் செய்ய மட்டும் அமைச்சருக்குத் தைரியம் வந்து விடுகிறது என் பதுதான் பெரிய தமாஷ்; அதைவிட பெரிய தமாஷ், உலக சிக்கன நாள் குறித்து முதல்வர் செய்தித்தாளில் கொடுத்திருக்கும் முழுப் பக்க விளம்பர அறிவுரை...!

● **ச. பழனி, பட்டுக்கோட்டை.**


? 'இனிமே ஜெயலலிதாவுக்கு வோட்டுப் போட மாட்டோம்; எம்.ஜி.யாரோட இரட்டை இலைக்குத்தான் போடுவோம்...' – இது சில பெண்மணிகள் சொன்னது. அப்புறம் தமிழகம் எப்படி உருப்படும்?



...ளி முத்திரை



* விளம்பர அறிவுரை



* சரித்திர சோகம்



* இன்னமும் சலாம்

! இந்த ஒரு சிலரைப் போல் ஏராளமான அப்பாவிகள் இருக்கிறார்கள். எதிர்க்கட்சிகள்தான் திட்டமிட்ட, தெளிவான பிரசாரப் பாதை வகுத்துக் கொண்டு மக் களைத் தெளிவிக்க வேண்டும்.

● **இரா. திலீப், திருச்சி - 14.**

? கருமிகளால் கட்சி தொடங்க முடியாது என நெடுஞ்செழியன் கூறுகிறாரே?

! கட்சி தொடங்கப் பணம் தேவைதான்; ஆனால் பணம் மட்டுமே போதாது! அது ஒன் றையே நம்பி கட்சி நடத்துவோர் இப்படித் தான் பேசுவார்கள்.

● **ச. ஜான்ரவி, கோவில்பட்டி.**

? தற்போது இந்திய ரயில்வேயின் நிர்வாகம் எப்படி உள்ளது?

! முன்னாள் ரயில்வே அமைச்சருக்கு இன் னமும் சலாம் போட்டுக் கொண்டிருக்கிறது! இல்லாவிட்டால், ஜாஃபர் ஷரீஃப் தம் குடும் பத்துடன் நாகூர் சென்று வருவதற்கான ஸ்பெ ஷல் ஏ.சி. கோச்சுகளை வழக்கமான ரயிலில் இணைக்க ஒரு லட்ச ரூபாய் வரை செலவு செய்யுமா!

● **நெல்லை வி. சிவா, மதுரை - 16.** ❑

? வாழப்பாடி – சு. சுவாமி – இருவருள் 'ஜெ'க்கு எதிரான வில்லத்தனம் செய்வதில் யார் திறமையானவர்?

! இருவருமே வாய்ச் சொல் வீரர்கள். ஆனால் வழக்கறிஞர் சு. சுவாமிக்கு சட்டப் பாயின் டுகள் விரல் நுனியில் இருப்பதோடு மாறு வேடம் போடும் கலையும் கைவந்தது... நீங்களே மதிப்பெண் கொடுத்துப் பாருங்களேன்.

● **ஏ. சுகுமார், காட்டுக்கானூர்.**

? பா.ஜ.க. வென்றால் வாஜ்பாயிதான் பிரத மராமே...?

! ம்ஹூம்... அதைத்தான் அத்வானி மறுத்து விட்டாரே! ஆனால், ஹிந்து தீவிரவாத கட்சி யாக முத்திரை பெற்று விட்ட பி.ஜே.பி., சிறு பான்மையினர் வோட்டுக்களைப் பெற விரும்பினால், மிதவாதி யான வாஜ்பாயியை முன் னிறுத்தி மட்டுமே பெற முடியும்.

● **கி. மனோகரன், நெற்குப்பை.**

? இஸ்ரேல் பிரதமர் சுட் டுக் கொல்லப்பட்டது பற்றி...?

! இஸ்ரேல் பிரதமர் ராபி னின் படுகொலை காந்திஜியின் மரணத்தை நினைவூட்டியது. அமைதிக்காகப் போராடும் துணிவுடையவர்கள் தங்கள் சொந்த சகோதரர் களால் வெறுக்கப்படுவதும் இப்படி உயிரைத் தியாகம் செய்வதும் சரித்திரத்தில் மீண்டும் மீண்டும் இடம்பெறும் சோகம்.

● **கே. அனிதா, கோவை.**

? ஜெயலலிதாவின் சொத்துக்கள் யாருக்குப் போய்ச் சேரும்...?

> ❑ ரூ. 25 பரிசு பெறுபவர் :
> நெல்லை வி. சிவா,
> விவி உணவகம்,
> அரசரடி,
> மதுரை - 16.

! எல்லாம் முறைப்படி நடந்தால் அமுலாக்கப் பிரிவினர் மூலம், அரசுக்கு...

● **குமாரி, வேலூர்.**

? இங்கிலாந்து அரசி கூட ஏமாந்து விட் டாரே?

! கனடா நாட்டுப் பிரதமர் போல் குரல் மாற் றிப் பேசிய ஒரு வானொலி நிகழ்ச்சி இணைப் புரையாளரிடம் அரசி பதினேழு நிமிடங்கள் தொலைபேசியில் உரையாடியிருக்கிறார். குரல் மாற்றிப் பேசி ஏமாற்றுவதில் மன்னரான அவ ரிடம் அரசி ஏமாந்தது பெரிதல்ல, அவரைச் சுற்றியுள்ள பாதுகாப்பு வளையமும் ஏமாந்தது தான் விந்தை!

வண்ணக் கனவுகள்

சுப்ரமணியன் ரவிச்சந்திரன்

அப்புவிற்கு எதிலும் சந்தோஷமே தென்பட்டது. இல்லாவிட்டால் அந்த ரிடையர்டு ஃபண்டாபீஸ் கிழம், 'தாழை, தழைகீரை என்று ஏதேதோ புல் வகைகளைப் பிடுங்கி வா' என்று ரயில்வே லைன் பக்கம் துரத்தி விடும் போது சூம்புவான்.

பத்து நாளாய் இல்லை...

அவனுக்குத் தெரியாமல் ஏதேதோ வீட்டில் நடக்கின்றன. அதாவது அப்படி அம்மா நினைத்துக் கொண்டிருக்கிறாள். பூந்தோட்டம் பக்கத்தில் அவனுக்காகப் பெண் பார்த்திருக்கிறார்கள். அவனிடம் சொல்லவில்லை. கேட்டால் அழகு காட்டுகிறாள்... அவன் அசடாம்...

அப்பு தினமும் ஆற்றங்கரையையொட்டிய மடத்தில் உடம்பைத் தேற்றி வருகிறான். வெய்ட் லிப்டிங், தண்டால் என்று காலையின் பெரும் பகுதி போய் விடுகிறது. சுந்தர வாத்தியார் மேற்பார்வையிடுவார் தினமும். அவருக்கு நாற்பது ஐம்பது சிஷ்யர்கள். வாத்தியார் அப்புவிடம் காசு வாங்குவதில்லை. அதற்குப் பதிலாக கான்வென்ட் தெருவில் மாதாந்தர நெல்லை அரைத்துத் தரவேண்டும். வாத்தியார் இன்னும் கொஞ்சம் நாளில் கழி சொல்லித் தரேன் என்கிறார். அதுவும் தெரிந்தால்... அம்மாடி... சிலிர்த்தது அப்புவிற்கு. தாய்க்குப் பின் தாரம் எம்ஜியார்தான். 'ஆகா நம் ஆசை நிறைவேறுமா...' பாடினான்...

பாடல் சட்டென்று நின்றது. நமக்குப் பார்த்த பெண் பானுமதி போல் இருக்குமா...பூந்தோட்டத்தில் மாட்டு வண்டி உண்டோ...

அம்மா தினமும் வைது கொண்டிருக்கிறாள். குடும்பத்துக்கு ஒவ்வாத கர்லாக் கட்டை சகவாசம் என்பது அவள் வைவதன் காரணச் சுருக்கம். செத்துப் போன கணவனின் துர்க்குணங்கள் இந்தக் கடன்காரனுக்கும் இருக்கிறதாம்... அப்பு அப்பாவை நினைத்துப் பரிதாபப்பட்டான். மேலே போனாலும் அம்மா விடமாட்டாள்.

ஆறு மணி வண்டி வருவதற்கான அடையாளங்கள். கைகாட்டியின் கம்பிகள் கல்லைப் புரட்டி விட்டு நகர்ந்தன.

தெற்கிருந்துதான் வருகிறது.

ஸ்டேஷனுக்குப் பக்கத்தில் அடிபம்பு இருக்கிறது. தழையைக் கழுவினால்தான் ஃபண்டாபீஸ் கிழம் சும்மாயிருக்கும். இல்லாவிட்டால் நேஸ்டி, ஸ்டுப்பிட் என்று தொடங்கி வாய் பூராவும் இங்கிலீஷ்தான். அர்த்தம் புரியாவிட்டாலும் குரலும் பாவமும் குலை நடுங்க வைக்கும்.

'அட போய்யா' என்று சொல்ல ஆசைதான். இன்று வரை தைரியம் வரவில்லை. யாருக்கு இளப்பம்... கல்யாணம் ஆகட்டும்...

ஒரு கையால் பம்பையும் மற்றொரு கையால் கீரையைக் குளிப்பாட்டுவதையும் சிரமமாகவே செய்ய வேண்டியிருந்தது. அவ்வாறு செய்கையில் தடதடவென்று ஆறுமணி வண்டி நுழைந்தது. ப்ளாட்பாரத்திற்குள் மட்டும் வேகமாக ஓடுகிறதோ?

"லேய் திருவாழத்தான்...."

யாரையோ யாரோ அழைப்பதாகப் படவில்லை. இது சந்தேகத்துக்கிடமின்றி தன்னை அழைக்கத்தான்... யாரது?

வேங்கடம் தெரிந்தார்... அப்புவிற்குத் தூக்கி வாரிப் போட்டது. 'வேங்கடமோ சங்கடமோ' என்பார்கள் ஊரில். பார்க்காதது மாதிரி போய் விடலாம். மனிதன் எப்போதும் வம்புக்கு அலைபவன். எல்லார் வீட்டு சேதியும் அவருக்குத் தெரிந்தாக வேண்டும். எடுறா ஓட்டம்.

"லேய்... ஒன்னத்தான்டா... மாப்ள..." வேங்கடம் கையைத் தட்டினார்.

சூடமிட்டாயைக் கடித்த மாதிரி விறுவிறுப் பானது அப்புவிற்கு. என்னது மாப்ளயா...

கால்கள் நின்றது நின்றது தான்...

"திருட்டுப் படவாடா நீ... மோட்டா குடியில் பொண்ணு பாத்துட்டா பெரிய ஆளாடா நீ? எனக்குத் தெரிஞ்சு..." கெட்ட பாஷையில் உபமானம் வந்தது. வேங்கடத்திடம் இது ஒரு துன்பமான இன்பம்... அடுத்தவரைச் சொல்லும் போது ருசியாக இருக்கும்... தன்னைத் தாக்கும் போது தான் வல்லடியே...

"மோட்டா குடியா..." அப்புவுக்கு நிஜமான ஆச்சரியமே வந்தது... குபுக்கென்று உடம்பின் நாலு பக்கமும் ஏதோ பொத்துக் கொண்டு ஓடியது...

"மாமா... ஒங்களுக்குத் தெரியுமா?" என்றான் அப்பு கீரைக் கட்டை உதறியபடி.

வேங்கடம் மாமா இதற்குப் பதில் சொல்லவில்லை. அவர் கண்கள் அங்குமிங்குமாய் அலைந்தன. மீண்டும் இடமிருந்து வலம். வலமிருந்து இடம்.

"யாரு மாமா... யாரத் தேடறேள்?"- மாமா தேடும் நபர் வந்தால் பரவாயில்லை... அப்பு தவித்துப் போனான். பெண் மோட்டாகுடியாமே?

"ம்... இன்னிக்குன்னு ஒத்தனும் ஆப்பட மாட்டான். பண்டிகை, எழவுன்னு தலையச் சொறிஞ்சுண்டு நிக்கட்டும் கழட்டிண்டு அடிக்கறேன் மாமா துப்பினார்.

"யாரு மாமா?"

"ஒண்ணுமில்லடா... பேரளத்துல ரொம்ப நாளா கூட்டாளி ஒத்தன் பைசா தராம பெப்பே காட்டிண்டிருந்தான். எப்ப கேட்டாலும் வேட்டிய ஒதறிக் காட்டி இருந்தா எடுத்துக்கோம்பான். அவனுக்கு மோட்டாகுடில நெலம். பய அறுப்பு வெச்சிருக்கான்னு காதுல விழுந்தது. நேர களத்துக்கே போய்ட்டேன்... என்னவோ சால்ஜாப்பு சொன்னான். நான் யாரு.. ரெண்டு மூட்டை உளுந்த அள்ளிண்டு வந்துட்டேன்..."

அப்பு எக்கிப் பார்த்த போது வேங்கடத்தின் முதுகுக்குப் பின்னால் இரண்டு மூட்டைகள் தெரிந்தன... ஒன்றோடொன்று யுத்தம் செய்வது போல் சாய்ந்திருந்தன. கண் திட்டத்தில் எண்பது கிலோவுக்குப் பழுதிருக்காது.

"ஏன் மாமா... அங்கதான் சேதி சொன்னாளா?" மாமாவுக்கு மறந்து விடக் கூடாது என்று வேண்டிக் கொண்டே அப்பு எடுத்துக் கொடுத்தான்.

"என்ன சேதி? நீ ஸ்டேஷனுக்கு வருவேன்னா?"


"அதில்ல மாமா... எனக்குப் பொண்ணு" அப்புவால் முழுமையாகச் சொல்ல முடியவில்லை.

"அட... வெக்கமா.. இதுக்கே வெக்கப்பட்டா முதலிரவுக்கெல்லாம்"...

வேங்கடம் மாமா தன் குணத்தைக் காட்டி விட்டார். அப்புவுக்கு அவர் பேசுவது முழுமையாகப் புரியாவிட்டாலும் அவரது பேச்சு சுத்தமானதாயில்லை என்பது வெளிச்சமானது.

"போங்கோ மாமா... ஒங்களுக்கு எப்பவும் பரிவாசம்தான். யாரை மாமா பாத்தேள்?"

"எனக்கு இதான் வேலை.. போடா போ... நானே மூட்டையக் கொண்டு போகணும். சந்தி



பண்ணணும்னு தவிப்பா தவிக்கறேன்... வந்துட்டான்..."

"நான் எடுத்துக்கறேன் மாமா!" என்றான் அப்பு தன்னை மறந்து... மூட்டைகளை விட மோட்டாகுடிப்பெண் பற்றிய வராத தகவல் கனமாக அழுத்தியது...

"நீயா... நீயே அறியாப் பையன்... ஒனக்கு என்ன தெரியும்? மூட்டையை எசகுபிசகா தூக்கினா கழுத்து பொரண்டுடும். கல்யாணம் வேற பண்ணணும்."

"ப்பூ... வாத்தியார் வீட்டு மூட்டைக்கு இது எந்த மூலை? இந்தக் கீரையப் புடிங்கோ... அது மட்டும் போறும்... ரெண்டே நடை..." அப்பு வேட்டியை இறுக்கிக் கொண்டு உள்ளங் கையை மண்ணில் பதித்தான்... இனி வழுக் காது...

"எஸ்.எம்கிட்ட சொல்லிடறேன்.... அப் புறமா இன்னொரு மூட்டைய எடுத்துண்டு டலாம்... ரைட்..... கௌம்புடா மாப்ள."

மூட்டை எதிர்பார்த்த அளவு எளிதாய் இல்லை. மூச்சு முட்டியது. வேங்கடம் பூசாரியைப் போல வழியெங்கும் கீரையை விசிறிக் கொண்டே வந்தார்.

வேங்கடம் மாமா நடுவிலிருந்து ஆரம் பித்தார்.

"பையன் எப்படின்னு பொண்ணோட மாமாக்காரன் கேட்டான்... அசட்டுப் பையன்னு சொல்ல முடியுமா... கெட்டிக் காரன்னு சொல்லிட்டேன். கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளு..."

சாதாரண சமயத்தில் அப்பு இவ்வாறு மட்டம் தட்டும் எவரையும் ஒரு தட்டு தட்டி விடுவான்... அம்மாவும் இப்படித்தான் செய் கிறாள்...

"ஏம் மாமா... பொண்ணு..." அப்புவின் கேள்வியை அற்ப ஆயுளுக்குத் தள்ளுவது போல் எதிரில் வந்தவரைப் பிடித்துக் கொண் டார் வேங்கடம்...

"என்னய்யா சடகோபன்... நேத்து ராத்திரி தொள்ளாயிரத்து நாலுல கைக்காசு பூராவும் போச்சாமே.. இன்னிக்குக் காலைல டாக் ஆஃப்த டவுனே இதான்...."

"அதெல்லாம் ஒண்ணுமில்ல... விட்டதைப் புடிச்சுடுவேன்" என்றார் சடகோபனாகப் பட்டவர் சற்றே ரோஷத்துடன்...

"கிழிச்சீர்... விட்டதைப் பிடிக்கணும்னா அதுக்குப் பொட்டிப் பணம் வேணுய்யா..." வேங்கடத்தின் சிரிப்புக்கு முன் தாள முடியாமல் சடகோபன் அகல, அப்புவுக்கும் நடக்க ஏதுவானது.

"ஏம் மாமா... பொண்ணு..."

"பொண்ணா... காவேரி ஜலம்டா.. பளிச் சுன்னு பழுக்கா சம்புடம் மாதிரி இருப்போ.. இங்க இருக்கற மாதிரி இலுப்பச் சட்டின்னு நெனச்சியா..."

"நல்ல கலரா மாமா..."

'சாரசம் வசீகர கண்கள் சீர்தரும் முகம் சந்த்ர பிம்பம்.'

அப்புவை வெறுப்பேற்றுவதைப் போல மாமா சம்பந்தம் இல்லாமல் அவர் நாளைய சினிமா பாடலைப் பாடினார். தெருவில் அனைவரும் வேடிக்கை பார்த்தனர்.

அய்யய்யோ... அம்மா பார்த்து விட் டாள். அம்மாவிற்கு வேங்கடம் மாமா எதிரி இல்லை. ஆனாலும் மாமாவின் மனைவி மாமாவுக்குத் தெரியாமல் அம்மாவுடன் செய்த சில வியாபாரங்களில் மன வருத்தம். போக்கு வரத்து ரத்து.

அம்மாவுக்கு அவனை மொத்தவென்றே புழக்கத்திலிருக்கும் வெண்கல உருளியின் நினைவு வந்தது அப்புவிற்கு...

"சரி... இன்னொரு மூட்டையையும் போட் டுட்டுப் போ... நான் அதுக்குள்ள ஒரு ரவுண்டு அடிச்சுட்டு வந்துடறேன்."

அப்பு தயங்கி நின்றான்.

'போய்ட்டு வாடா... விலாவாரியாப் பேச லாம்." அப்புவை லட்சியம் செய்யாமல் வேங் கடம் கிளம்பினார்.

இரண்டாம் மூட்டைக்கு முதல் மூட்டை இலகு... பழுக்கா சம்புடம் மாதிரி இருப் பாளாமே... அம்மா இந்த ஒன்றிலாவது நல்லது செய்திருக்கிறாள்.

அப்பு நெடுநேரம் காத்திருந்த பின் வேங் கடம் வந்தார். அவனைக் கவனியாதவர் போல் திண்ணையில் அமர்ந்தார்.

"மாமா..."

"அடடே...திருவாழத்தான்... வாடா!"

"வந்து"– ஒரு நிமிடம் தயங்கிய அப்பு வரு வது வரட்டும் என்ற நோக்கத்துடன் கிடுகிடு வென்று பேசினான்.

"அந்த மோட்டாகுடி பொண்ணைப் பார்த்தது பத்தி விவரம் சொல்லுங்கோ..."

"எந்த மோட்டாகுடி... ஓ... அதுவா... நான் பொண்ணையும் பாக்கலே, கிண்ணயும் பாக்கலே.. யாரோ ஒருத்தன் வழில நிறுத்திப் பேசிண்டிருந்தான். நான் இன்ன ஊர்னதும் உன்ன விசாரிச்சான். தட்ஸ் ஆல்..."

"அப்ப நீங்க பொண்ண...?" அப்புவுக்கு அழுகை வந்தது.

"எங்கடா போயிடப் போறா? இன்னிய பாஞ்சாம் நாள் என் கூட்டாளி மல்லாக் கொட்டை அறுக்கறான். ரெண்டு மூட்டை எப்படியும் பீச்சிடுவேன்.. இதே ஆறு மணி வண்டிக்கு வா... ஜமாய்ச்சுடுவோம்..."

மாமா எழுந்து உள்ளே போனார்.

அப்புவுக்குத் தோள் வலித்தது.

ஒத்திகை

பா. ராகவன்

தொலைபேசி கூப்பிட்டது. தமிழரசன் எழுந்து போய் எடுத்து, வெற்றிலையைத் துப்ப மாட்டாமல், "யாழ்லா அமு?" என்றார்.

அது அந்தரங்கத் தொலைபேசி. நெருங்கியவர்களுக்கு மட்டுமே தெரிந்த எண். வேறு தொலைபேசி எனில் முதலில் 'தமிழ் வாழ்க' என்றுதான் தொடங்கியிருப்பார். அமைச்சரான பிற்பாடு பழகிக் கொண்ட சங்கதி.

"ஐயா, கன்னியப்பன் பேசறனுங்க. ஒரு முக்ய சமாசாரம். ஐயா தயாராயிருக்கணும். வீட்டுல சோதனை போட வாராங்கன்றது அநேகமா உறுதி ஆயிடுச்சிங்க."

"குறிப்பா சொல்லுய்யா. அமலாக்க ஆளுங்களா, சிபிஐயா இல்லை..."

"சிபிஐ தானுங்க. விடிஞ்சதும் வந்துருவாங் கய்யா."

"வந்துட்டுப் போவட்டும். நீ வச்சிரு."

தமிழரசன், மனைவியைக் கூப்பிட்டார்.

"பரமேசுவரி! காலைல பால் கொஞ்சம் கூடுதலா தேவைப்படும். சொல்லி வெச்சிரு!"

"விருந்தாளிங்க யாரும்?"

"சிபிஐன்னா புரியுமா? காக்கி போடாத போலீஸ்காரங்க."

"ஐயோ!"

"என்ன ஐயோ? புருசன் செயிலுக்குப் போயிருவான்னு பயப்படறியா? பைத்தியம்! நாப்பது வருசத்து அரசியல்வாதிடீ நான்! நான் பாக்காத போலீசா! நான் பாக்காத ரெயிடா! நான் பாக்காத... சரிவிடு."



"பயமா இருக்குங்க. தினசரி, பத்திரிகைகள்ல வர்ற செய்திகளைப் பார்த்தே பயந்தேன்... சம்பாதிச்சது போதாதா? விட்ருங்களேன்னு தலை தலையா அடிச்சிக்கிட்டேன்... கோர்ட்டு, கேஸுன்னு போனா மானம், மரியாதை..."

விசும்ப ஆரம்பித்தாள்.

"பொது வாழ்க்கைல இதெல்லாம் சகஜம்டி. தவிர கொள்ளை அடிக்கறது கௌரவப் பிரச்னை ஆயிட்டுது இப்ப. நேத்து வந்தவனெல்லாம் இருவது கோடி, முப்பது கோடிங்கறான். என் சர்வீஸுக்கு, இந்நேரத்துக்கு அந்தமான் தீவுகள்ல ஒண்ணு விலைக்குக் கிடைக்குமான்னு கேட்டிருக்கணும்... ப்ச்!"

"எப்படியோ போங்க. என்னவும் பண்ணுங்க. நான் திருப்பதிக்கு வேண்டிக்கறேன். உங்களைக் கூட்டி வந்து மொட்டை போடறதா."

"தலைக்கு வந்தது தலை முடியோட போயிருச்சின்னாவா? அப்படித்தானே?"

அட்டகாசமாகச் சிரித்தார். படுக்கப் போனார்.

நாற்பது வருடங்கள். எத்தனை கட்சி மாற்றம்! எத்தனை ஊர்வலம்! எத்தனை செருப்படி! கொஞ்ச நஞ்ச சம்பாத்தியமா!

'சி.பி.ஐ. ரொம்ப தாமதம்' என்று நினைத்துக் கொண்டார்.

'அந்த திருப்பதி ரூட் லாரி பர்மிட் சமாசாரத்திலேயே சிக்கியிருக்க வேண்டியது.'

இப்போது கேஸ், அது இது என்று கொஞ்சநாள் செய்திகளில் இருக்கலாம். பதவி போகும்? அது பரவாயில்லை. தேர்தல் வருகிறது. அரசியல் ஃபார்முலா மாறிவிடும். அப்புறம் பழைய படி...

அதெல்லாம் அடுத்தக் கட்டம். முதலில் நாளைய சமாசாரம். சி.பி.ஐ.காரர்கள் நிச்சயம் கைது செய்வார்கள். கைதானதும் நெஞ்சுவலி... அதெப்படி... மார்பைப் பிடித்துக் கொண்டு... தடாலென்று விழுவதா... மெல்லச் சரிந்து... கால் தடுமாறி... வியர்த்துக் கொட்ட வேண்டும்... அதற்கு ஏதாவது செய்து விட வேண்டும்... ஏதாவது இன்ஜெக்ஷன்...

திட்டம் ஒர்க் அவுட் ஆகி விட்டால் தலைப்புச் செய்திகளில் தமிழரசன்... யாராவது செய்தி கேட்டு தீக்குளித்தால் நிரம்ப விசேஷம்... கன்னியப்பனிடம் ஏற்பாடு செய்யச் சொல்ல... சே, என்ன இது!

ஏஸியில் போய் வியர்க்கிறது! ரொம்ப வேகமாக யோசிக்கிறேன். அதான் படபடப்பாக... தலை சுற்றுவது போல்...

நாக்கு ஏன் வரள்கிறது? ஒரு... ஒரு கிளாஸ் தண்.... பரமேசுவரி... பர... பரமே... நெஞ்... வலிக்....



போட்டிக்கதை - 11

தெய்வம் துணை

கடைசியாக திருமலையைக் காளத்தி கல்யாணத்தில் பார்த்தது. அஞ்சாறு வருஷமிருக்கும். அந்தச் சந்திப்பு கூட அவ்வளவாக ஞாபகம் இல்லை. எடுத்த எடுப்பிலேயே, "உன்னோட படம் ஒண்ணை எங்க ஊரு டூரிங்ல பார்த்தேன். என்ன டைரக்ட் பண்றே நீ? ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் வில்லன் ஒருத்தனைத் துரத்தித் துரத்தி தன் துப்பாக்கியிலிருந்த ஆறு ரவையும் தீர சுடறாரு. ஒண்ணுகூட அவனை வீழ்த்தல. ட்ரெயினிங் பீரியட்ல அந்த இன்ஸ்பெக்டர் எந்தக் காட்டிலயாவது விறகு வெட்டிக்கிட்டிருந்தாரா என்ன?'' என்றதும் எனக்கு லஜ்ஜையாய்ப் போய்விட்டது. அதுக்கப்புறம் அவருகிட்ட பேச்சு கொடுக்கவே தயக்கமாயிட்டுது.

எதிலும் யதார்த்தத்தை எதிர்பார்க்கிற அப்பழுக்கில்லாத கிராமவாசி அவர். என் வியாபார நோக்கத்தை விளக்கிச் சொல்லப் போய், அவர் நினைப்பையும் எண்ணத்தையும் கொச்சைப்படுத்திவிடுவேனோன்னு அப்போதைக்கு கம்முன்னு இருந்துட்டேன். அப்படிப்பட்டவரை இன்னைக்கு என் அக்கறைக்காகவும் அவசியத்தை முன்னிட்டும் தேடிப் போகிற நிர்ப்பந்தமேற்பட்டுப் போச்சு.

கிட்டத்தட்ட 400 கெஜம் நடந்திருப்பேன். பிரம்மாண்டமான வேப்ப மரமும், அதன் கீழிருந்த கோவிலும்... ராத்திரி பொழுதானதனால் திருமலையின் வீட்டை அனுமானிப்பதில் சிரமம் இருந்தது. பக்கத்திலேயே ஊர் கூட்டம் போல் கொஞ்சம் பேர் கூடியிருந்தனர். அவர்களில் ஒருவரை அணுகி அவர் பெயரைச் சொல்லி விசாரித்தேன். உடனேயே வீட்டைக் காட்ட என்னோடு ஒரு பெரியவர் எழுந்து வந்தார்.

வாசலில் என்னையும் குழந்தையையும் பார்த்ததும், "நினைக்கவே இல்லே. வருஷம் எத்தனை ஆச்சு... வா... வா... உள்ளே வா...'' என்று மிகவும் அனுசரணையோடு அழைத்துப் போய் கைகால் அலம்பிக் கொள்ள சொம்பில் நீர் கொடுத்து, அத்தனை ராத்திரிக்கு மேல் தோட்டத்துக்குப் போய் நுனி வாழை இலை பறித்து உப்புமா கிளறிப் போட்டு, குழந்தை பவித்ராவுக்குப் பாலைக் காய்ச்சிக் கொடுத்து, மொட்டைத் தளத்தில் தண்ணீர் தெளித்து, கட்டிலைப் பிரித்துப் போட்டுப் படுக்கை விரிப்பை விரித்து, அவரும் அவர் வீட்டிலும் முகம் சுளிக்காமல் செய்த உபசாரம் எனக்குள் பெரிய இடத்தை அவர்களுக்கு ஒதுக்கும்படி செய்தது.

திருமலை வெற்றிலையைக் குதப்பிக் கொண்டே கேட்டார். "வண்டி மக்கர்

சி. எம். நாராயணன்

ஆகலைன்னா எங்களையெல்லாம் இந்த ஜென்மத்திலே நினைச்சுப் பார்த்திருக்க மாட்டே...?"

"சொல்லப் போனா உண்மையே அது தான். ஏதோ ஒரு நல்லது கெட்டதுன்னாதான் நாம ஒருத்தரை ஒருத்தர் ஃபார்மாலிடிக்கு நினைச்சுப் பார்க்கிறோம். மத்தபடிக்கு இந்த கம்ப்யூட்டர் யுகத்திலே காணும்போதுதானே காட்சி?"

"ரொம்ப கரெக்டா சொன்னே. போகட்டும். இருந்தாற்போலிருந்து கும்பகோணத்துக்கு என்ன அவசரம்?"

"வேறொண்ணுமில்லே. இதோ இருக்காளே இந்த பவித்ரா, என் பேத்தி... லீவுக்கு மெட்ராஸிலே இருக்கேன்னு சொல்லவே இவள் அம்மாவும் அப்பாவும் எங்கிட்டே விட்டுட்டு ஊருக்குப் போயிட்டா. ஒரு வாரம் வரைக்கும் ஒண்ணும் பிராப்ளம் இல்லே. எண்ணி எட்டாம் நாள் ஹோம் சிக் வந்துட்டாப்ல 'எங்கம்மாகிட்ட போகணும். அப்பாவைப் பார்க்கணும்'னு அடம்பிடிக்க ஆரம்பிச்சுட்டா. யாரோட அனுப்பி வைக்கிறதுன்னு புரியாம, கடைசியில் நானே கூட்டிக்கிட்டு கிளம்பிட்டேன். வழியில பிரேக் டவுன்."

"அலுத்துக்காதே. நடந்த வரைக்கும் நல்லதுக்குன்னு நினைச்சுக்க."

"அதுகிடக்கட்டும். தொடக்கத்திலேயே கேட்கணும்னு இருந்தேன். முன்னைக்கு இப்போ நீ கூட சுரத்தா இல்லையே. என்ன தகவல்?"

திருமலை பதில் சொல்லவில்லை.

"சொல்லக் கூடாதுன்னா வேணாம்..."

"அப்படியெல்லாம் ஒண்ணுமில்லே. ஊர் விவகாரத்தினால மனசு கொஞ்சம் பேதலிச்சுப் போயிருக்கு. வருவோர் போவோரோட ஆயிரம்தான் மூடி மறைச்சுக்கிட்டு மேலுக்கு முகம் கொடுத்துப் பேசினாலும், உள்ளுக்குள் ஏதோ நெருஞ்சி உறுத்தற மாதிரி ஒரு நெருடல் இருந்துக்கிட்டே இருக்கு."

"இதோபார் திருமலை. பூவுன்னு இருந்தா பூச்சின்னு ஒண்ணு இருக்கிறது சகஜம். இதுக்காக நாம் மனசு வியாகூலப்பட்டு என்ன ஆகப் போகுது? பிரச்னை என்னன்னு சொல்லு..."

"நீயும்கூட வரும்போது பார்த்திருப்பே. கோவிலும் அதன் பக்கத்திலேயே விசாலமான வேப்பமரமும்..."

"ஆமாம்... ஆல விருக்ஷம் போல பிரம்மாண்டமாய்..."

"அது, இன்று நேற்று மரமல்ல. எந்தக் காலத்ததோ. கோவில் அந்த இடத்தில் குதிர்வதற்கு முன்னாடியிருந்தே சின்னச் செடியாக வேர் பிடித்து, மரமாகி இன்று பெரிய விருக்ஷமாகக் கிளைபரப்பி விசாலமாய் வளர்ந்திருக்கிறது. அதன் வயசு மூணு நாலு தலைமுறைக்கு மேலேயே கூட இருக்கும்னு..."

அருள்வாக்கு

குருடன் ஒருவன் கையில் லாந்தருடன் போய்க் கொண்டிருந்தானாம். எதிரில் வந்த ஒருவன், "உனக்குத்தான் கண் தெரியவில்லையே, லாந்தர் ஏன் எடுத்து வருகிறாய்?" என்று கேட்டான். அதற்குக் குருடன், "எனக்குக் கண் இல்லாவிட்டாலும் உனக்குக் கண் இருக்கிறது அல்லவா? அதற்காகத்தான் இதை எடுத்து வருகிறேன். இல்லாவிட்டால் இந்த இருட்டில் நீயே என் மேல் தடுக்கி விழுந்திருப்பாயே" என்றானாம். அதுபோலவே பழைய சாஸ்திரங்கள் நமக்குப் புரியாவிட்டாலும், எதிர்காலத்தில் யாருக்காவது புரியலாம், பயனாகலாம் என்பதனாலாவது அவற்றை நாம் ரட்சித்தாக வேண்டும். "வசதியே இல்லாத காலங்களில் யுகாந்தரமாக ரட்சிக்கப்பட்ட சாஸ்திரங்களை நமக்கு முதல் தலைமுறையினர் எல்லா வசதியிருந்தும் காப்பாற்றாமல் அழித்து நம்மை வஞ்சித்து விட்டார்கள்" என்று வருங்கால்த் தலை

"இருக்கட்டும். விஷயத்துக்கு வா!"


"எங்க ஊர் நாட்டாண்மை நல்லசிவம், அதை வெட்டணுங்கிறாரு!"

"ஏன்?"

"போன மாசி மாசம் அமோகமா திருவிழா எடுத்ததிலே கிட்டத்தட்ட ரெண்டாயிர ரூபாய்க்குத் துண்டு விழுந்திருச்சி. பத்துநாள் உற்சவமும்... நீ பார்த்திருந்தியானா அப்படியே அசந்து போயிருப்பே. ஏக தடபுடலா செய்த திலே கடன் வந்தாச்சு. இப்போ அது அடைய ணுமானா ஊர்ல இருக்கிற ஐம்பது குடும்பமும் தலா நாற்பது ரூபான்னு தர்மமாக் கொடுத் தாலே போதும்னு சொன்ன என் அபிப்பிரா யத்தைத் தூக்கி ஒடப்பிலே எறியற மாதிரி நல்ல சிவம் குறுக்கிட்டு, "ஊர்ல மழை இல்லாம பயிர் பச்சையெல்லாம் காஞ்சி கிடக்குது. மகசூல் கெட்டுக் கிடக்கிற இந்த சமயத்திலே வரிவம்புன்னு ஜனங்களைப் பிழியறது அவ்வளவு சரியில்லே. வேணுமானா அர்த்தமில் லாம இருக்கிற அந்த வேப்பமரத்தை விலை யாடிட்டா நம்ம பிரச்னை விட்டுடும். அந்த ஆத்தாளுக்காக பட்ட கடனை அடைக்க இதைச் செய்யறதிலே ஒண்ணும் தப்பு இல்லே அவள் பெயரைச் சொல்லி அதை வெட்டி ஏலம் போட்டா இரண்டாயிரம் இல்லே, அதுக்கு மேலேயும்கூட கிடைக்கும்"னு சொன் னப்போ, என் அபிப்பிராயம் ஜனங்க மத்தி யிலே சப்புவிட்டுப் போச்சு."

"அவர் சொல்றதும் சரியாத்தானே படுது..."

"நானும் தப்பு சொல்ல வரலே. ஊரிலேயே அவர் மிகுந்த பசையுள்ள பேர்வழி. அவர் நினைச்சா அந்த ஆத்தாளுக்குப் பட்ட கட னைத் தாற்காலிகமாக ஏத்துக்கிட்டு, மகசூல்



முறையினர் நம்மைக் குற்றம் சொல்ல இடம் வைக்கலாமா?

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

வானில் எவ்வளவோ நட்சத்திரங்களை
வில் காண்கிறீர்கள்; ஆனால் சூரியன் உதய
தும் போது அவை ஒன்றையும் காண்பதில்லை.
கையால் பகற்பொழுதில் வானில் நட்சத்திரங்
ள இல்லை என்று சொல்வீர்களா? அதுபோல,
ிதா! உன் அறியாமையின் போது கடவுளைக்
ணவில்லையென்றால், கடவுளே இல்லை
யன்று கூறாதே.

— ஸ்ரீ ராமகிருஷ்ணர்

கூடுதலான சமயத்திலே ஜனங்ககிட்டே நாறப துங்கிறதை ஐம்பதாக் கூட வட்டியும் முதலுமா வசூல் பண்ணி எடுத்துக்கலாம். அதை விட்டுட்டு மூணு நாலு தலைமுறையா இருக்கிற வேப்ப மரத்தை இப்போ போய் அர்த்தமில்லாம வெட்ட வேண்டாம்னு தான்...''

''யோசனை நல்லாதான் இருக்கு. இருந்தும் உன் அபிப்பிராயத்தை ஏன் இந்த ஜனங்க ஏத்துக்கலே?''

''ஜனங்க சட்டி சுட்டுதா கையை விட்டு தான்னுதானே பார்ப்பாங்க. அவங்கதான் இப்படின்னா... அவர் எரியற வீட்ல உருவறது லாபம்னு நினைக்கிறாரு...''

''எப்படி?''

'' 'ஆத்தாளுக்குப் பட்ட கடனை நான் ஏத்துக்கிறேன். அதுக்குப் பதிலா வேப்ப மரத்தை வெட்டி எடுத்துக்குவேன். இஷ்டமா'ன்னு கேட்டப்போ ஜனங்களுக்கு அவர் நோக்கம் புரியலே. எருமை மாட்டு முதுகிலே மழை விழுந்தாப்பலே என்னையில்லேன்னு இருந்தாங்க... ஆனா என்னால அப்படி முடியலே. மனசு பதைச்சுது...''

''ஏன்...?''

''ஏன்னா... நல்லசிவம் டவுன் பக்கம் நவீன மோஸ்தரில் வீடுகட்ட பிரம்மாண்டமான அடிப்படை போட்டிருக்கார். சூளை கூடப் போட்டு வேகமாய் வேலை நடந்துக்கிட்டிருக்கு. கட்டடத்திற்கு வேண்டிய வாசக்கால், ஜன்னல் கப்போர்டு இதுக்கெல்லாம் மரப் பலகை சேகரம் பண்ணிக்கிட்டிருக்கார். மெட்றாஸ்ல எங்கேயோ மரம் பேசி முடிச்சி, அது இங்க வந்துசேர இரட்டிப்பு லாரி வாடகைக் குக் கொடுத்துக் கட்டுப்படியாகாததால...''

''கம்புக்குக் களை எடுக்கப் போயி தம்பிக்கும் பொண்ணு பார்க்கிறார்னு சொல்லு.''

''அப்படியிருந்துட்டாக் கூடப் பரவாயில்லையே. மனுஷன் ஒட்டுமொத்தமா இல்ல சுருட்டப் பார்க்கிறார்.''

''எப்படி?''

''சில விவரம் தெரிஞ்ச அனுபவஸ்தர்களைக் கூட்டி வந்து காட்டினேன். 'வைரம் பாய்ந்த, தேறின மரம். எப்படியும் அறுபது சதுரத்துக்கு மேலேயே கிட்டும். ஏலத்திலே விட்டா முப்பதினாயிரத்திலிருந்து முப்பத்தைந்தாயிரம் வரை போகும். வேண்டியதைத் துண்டாடி வீட்டு வேலைக்கு வச்சிக்கிட்டு, மிச்சமிருக்கிற முண்டு முடிச்சு கம்பு கிளைகளையெல்லாம் சூளைக்கு உபயோகப்படுத்திக்கலாம்னு...''

''நான் என்னமோன்னு நினைச்சேன். சரியான நல்ல பாம்பா இருப்பார் போலிருக்கே... அப்பப்பா... பயங்கர சுயநலம்.''

''அவரோட சில்லுண்டித்தனம் உனக்குப் புரிஞ்சுட்டுது. ஜனங்களுக்குப் புரியலியே.''

''அவ்வளவுதான் இந்த ஜனங்க...''

''இப்போ சொல்லு... இவரோட வஞ்சகம் அந்த ஆத்தாளுக்கே அடுக்குமா?''

வருத்தத்தின் பாதிப்பில் இரவு மல்லாந்தவாக்கில் வெகுநேரம் வரை தூக்கம் பிடிக்காமல் விழித்துக் கிடக்க வேண்டியதாயிற்று.

மறுநாள் கிழக்கு வெளுக்குமுன்பே கோவிலில் கூட்டம் சேர்ந்திருந்தது. முண்டாசு கட்டிய முதியவர்களின் எண்ணிக்கை மிகுதியாகக் காண, அதில் பளிச்சென்று முக்கால் கையில் சட்டை போட்டு, முறுக்கி விட்ட கனத்த மீசையோடு நடுநாயகமாய் உட்கார்ந்திருப்பவர்தான் நாட்டாண்மை நல்லசிவம் போலிருந்தது. நல்ல ஆஜானுபாகுவான தோற்றத்தில் எத்தனை அல்பத்தனமான எண்ணங்கள்!

அப்பொழுது ஒரு முதியவர் சொல்லிக் கொண்டிருந்தார்.

''அந்த ஆத்தாளுக்குப் பட்ட கடனுக்காக அதை அடைக்கணுமேன்னு அக்கம்பக்கத்திலே கடன் கேட்டுச் சமாளிக்கிறது ஆகாத விஷயம். அது பின்னாடி நமக்குத்தான் தலை மூட்டை. நம்ப நல்லசிவம் சொல்றாப்பல வெளியில கடனும் படாம, ஜனங்களையும் வரிவம்புன்னு வதைக்காம, மரத்தை நல்ல சிவத்துகிட்ட ஏலம் விடறதுதான் உத்தமம்னு படுது...''

''பெரியவங்க காலத்து மரமாச்சே. அதை வெட்டலாமா விற்கலாமான்னு பார்த்தா விவகாரம் முடியாது. நாம அதை ஏலம் விட்டு நம்ப வீட்டுக்கு ஒண்ணும் கஞ்சிக்கு இல்லே, கருவாட்டுக்கு இல்லேன்னு கொண்டு போயி

டலே. ஒட்டுமொத்தமா அந்த ஆத்தாளுக்குப் பட்ட கடனைத்தான் அடைக்கப் போறோம். இதிலே ஒண்ணும் தப்பு இல்லே. அது நம்ப அவசரத்துக்கு உதவாம போறதுதான் தப்பு...”

பெரியவர் திறமையாகவே சப்பை கட்டு கட்டினார். இவர் இவ்வளவு நேர்த்தியாய் பூமுடிக்க நல்லசிவம் இவருக்கு மகிழ்ந்து கொடுத்த இனாம் எவ்வளவோ. அது அந்த ஆங்காளிக்கே வெளிச்சம்.

- அப்பொழுது...

“அதோ பாருங்க. அந்தப் பசங்களைக் கொஞ்சம் சத்தம் போடாம இருக்க அதட்டி வையுங்க” - நல்லசிவத்தின் பக்கத்திலிருந்த யாரோ ஒரு பெரியவர் குரலெழுப்பினார்.

அதட்டல் விழுந்த பக்கம் நான் பார்வையை விட்டெறிந்தேன். வேப்ப மரத்தின் கீழே ஏழெட்டுப் பிள்ளைகள் ஓடிப்பிடித்து கராமுரா என்று சத்தம் போட்டுக் கொண்டிருந்தன. அதில் என் பேத்தி பவித்ராவும் ஒருத்தியாய்க் கலந்திருந்தாள். போகிற இடமெல்லாம் கூடிக் குலவ இந்தக் குழந்தைகளால் மட்டும் எப்படித்தான் இயலுகிறதோ - என்று எண்ணி வியந்த சமயம், முன்னதாகப் பேசிய பெரியவர் மறுபடியும் திருவாய் மலர்ந்தார்.

“இதோ பாருங்க நாட்டாண்மை, நீங்க இப்போ தரப் போற தெர்கைக்கு இந்த வேப்ப மரம் பெறுமானாலும் பெறாது போனாலும் தயவு செய்து பெரிசுபடுத்தாதீங்க. ஏதோ பெரிய மனசு வச்சு மரத்தை எடுத்துக்கிட்டு அந்த ஆத்தாளுக்குப் பட்ட கடனைத் தீர்த்திடுங்க.”

அவ்வளவுதான். மூலைக்கு மூலை அவர் வார்த்தைக்கு வரவேற்பும் ஆமோதிப்பும் அதிகமாயிருந்ததால் இரண்டொரு கனத்த எதிர்ப்புகள் முனை மழுங்கி சுரத்துவிட்ட சமயம் —

குழந்தைகளின் மத்தியிலிருந்து திடுமென விசித்திரக் குரல் எழ, அத்தனை பேரும் பார்வையை அந்தப் பக்கம் பாய்ச்சிய பொழுது, ஆகா ஊஹூ என்று கூச்சலிட்டபடி தலைவிரிகோலமாய் துள்ளித் துள்ளி ஆடிய பவித்ராவின் கைகளில் கொத்துக் கொத்தாய் வேப்பிலைக் கோப்புகள்.

நினைக்கும்பொழுதே எனக்குப் புல்லரித்தது.

அரக்கப்பரக்க எழுந்து கொண்ட ஏகப்பட்ட பேர் ஆத்தாளுக்கு என்ன குறையோ என்று பயபக்தியோடு சூழ்ந்தனர். இதற்குள் உடுக்கை பம்பை சகிதம் பூசாரிகள் வந்து சாமி பிடித்து ஆடிய குழந்தை பவித்ராவைக் குற்றம் குறை வினவினர்.

சற்றுத் தள்ளி உட்கார்ந்திருந்த திருமலை சடாரென்று என்னை அணுகி, “இதென்ன சங்கடம். வந்த இடத்திலே குழந்தை இப்படி சாமி பிடித்து ஆடுதே. இப்போ என்ன பண்றது?” என்று தவிக்கவே நான் கூட்டத்தை விலக்கிக் கொண்டு உள்ளே நுழைந்தேன். பயங்கரமான ஆட்டம். தெய்வமே அவள் திருப்பாதத்திற்குத் தெம்பு கொடுத்து ஆடச் செய்வது போலிருந்தது.

“அம்மா தாயே, நீ யாரம்மா?” பூசாரி ஒருவர் கேட்டார்.

“என்னையாடா யாருன்னு கேட்கிறே? பெற்ற தாயைப் பிள்ளைகள் மறந்தாலும், பெற்றெடுத்த பிள்ளைகளை இந்த ஆங்காளி என்னைக்குமே மறந்ததில்லேடா.”

“தெண்டனிடறோம் தாயே. இத்தனை காலமும் இல்லாம இன்னைக்கு என்ன குறை வந்ததுன்னு உன் திருச்சபையிலே எழுந்தருளி இப்படிக் கோர தாண்டவமாடறே தாயே? உனக்கு நாங்க என்னதான் குறை வச்சோம், சொல்லு தாயே?”

“பிள்ளைகள் செய்கிற குறையைத் தாய் பெரிசா மதிக்கிறதில்லேடா. இருந்தாலும் இப்போ செய்யப் போற குறையை என்னால பொறுக்க முடியலேடா. இப்பவே எனக்கு உடம்பெல்லாம் அனலா தகிக்குதடா. இன்னும் இந்த விருக்ஷத்தையும் வேர் பறிச்சா, அப்புறம் நான் எந்த நிழலிலேடா குடியிருப்பேன்?

“கிணறு தோண்டுகிற காண்ட்ராக்டுகளை எடுத்துச் செய்த பிறகு... நம்ம ராமசாமியோட நிலைமை எப்படி இருக்கு? பரவாயில்லையா?”

“ஓ! HE IS WELL-OFF!”

– பெ. கலாசாமி





டேக் இட் ஈஸி

கிச்சு கிச்சு மூட்டும் நாடகங்களில் கதை இருக்காது. கதை இருக்கிற நாடகங்களில் ஊறுகாயாகக் கூட ஹ்யூமர் இருக்காது. இது பொதுவாகத் தமிழ் நாடகங்களின் இன்றைய நிலை.

மாற்றியிருக்கிறார் (பாரதிராஜாவின் 'வேதம் புதிது' படத்தின் கதை - வசன சொந்தக்காரர்) கண்ணன். ஒரு சீரியஸான கதைக்குத் தமாஷ் முலாம் பூசுகிற முயற்சியில் நிச்சய வெற்றி பெற்றிருக்கிறார்.

ரொம்ப சாதுவான, நேர்மையான வங்கி கேஷியர், ஒரு கண நேர சபலத்தில், கல்லாப் பெட்டியில் கை வைத்து விடுகிறார். (சகோதரி திருமணம், வேலையில்லாத தம்பி என்று மிடில் கிளாஸ் அவலப் பின்னணி) வீட்டில் ஒளித்து வைத்திருக்கிற அந்தப் பணம் சஸ்பென்ஸாகக் காணாமல் போய்விட, பயமும் திகிலும் மனசாட்சி உறுத்தலுமாக இரண்டு மணி நேர அட்டகாச ரகளை.

ஹீரோ நியூஸ் வரதராஜனுக்கு அசட்டுத்தனம் கலந்த நடிப்பு வெகு லாகவமாக வருகிறது. நொடிக்கொரு வெடிச்சிரிப்பு. சிரித்து முடிந்ததும் யோசித்தால் உறைய வைக்கிற யதார்த்தம்.

நாடகத்தின் பெரிய பலம், அடுத்தடுத்து மொட்டவிழ்கிற சம்பவங்களின் வேகம். ஒரு சினிமாவுக்குரிய திரைக்கதை இறுக்கம்.

கதையைச் சுபமாக முடிக்க வேண்டும் என்பதற்காக, கிளைமேக்ஸில் கொஞ்சம் கூடைகள் பூவைக் காதில் சுற்றியிருக்கிறார்கள். ஆயினும் அபத்தமில்லாத ஆரோக்கியமான நாடகங்கள் வரத் தொடங்கியிருப்பது நல்லதுக்கே.

நடிகர்கள் அத்தனை பேரும் நியூஸ் ரீடர்கள் போல முழுக்க முழுக்க ஆடியன்ஸைப் பார்த்தே பேசுகிறார்கள்.

இந்த ஒரு அமெச்சூர்த்தனத்தை விலக்கிப் பார்த்தால் டபுள் ஓகே!

— **ஆர்.பி.ஆர்.**

ஊரை ரெண்டுபடுத்தற உங்க உளுத்துப் போன அன்பிலே இல்லேடா. இந்த விருட்சம் பரம்பரை பரம்பரையா இருக்கேன்னுதாண்டா இங்கே தங்கியிருக்கேன். அடேய் நல்லசிவம்..."

"தாயே!"

"பைத்தியக்காரா... இந்த ஆங்காளிக்கு ஏதடா கடன்? என்னைத் திருப்திப்படுத்த நீ செய்த தொண்டை எனக்குப் பட்ட கடனாவா நினைக்கிறே? என் நிழலை அழித்து நீ பூர்த்தி செய்து கொள்ளப் போற ஆசைக்கு உனக்குப் போதாத காலம் வந்துட்டுதடா."

"தாயே... தாயே.... நான் ஏதோ கண்மூடித்தனமா இறுமாப்பிலே செய்யத் துணிஞ்ச பிசகுக்கு ஏதும் என்னை சபிச்சிடாதே தாயே. உன் பிள்ளை வாழவேண்டியவன். வளர வேண்டியவன். உன்னை திருப்திப்படுத்துறதுக்காகச் செய்த திருத்தொண்டின் செலவை நானே ஏத்துக்கறேன் தாயே. எனக்கு நல்ல வாக்கு சொல்லு தாயே?"

"உன் வார்த்தையிலே எனக்கு நம்பிக்கை இல்லேடா."

"இந்த ஊரார் மத்தியிலே நான் கையடிச்சு சத்தியம் பண்ணித் தரேன் தாயே. உனக்கு நிழல் தார்ற இந்த மரத்தை இனிப் போற்றி வளர்ப்பேனே தவிர, கேடு நினைக்க மாட்டேன் தாயே. இது சத்தியம். என்னை நம்பு தாயே."

"நான் மலையேறறேண்டா..."

வேப்பிலையை மறமற என்று மென்று குதப்பியவள் அப்படியே களைத்து சோர்ந்து போகவே, நான் பளிச்சென்று தூக்கித் தோள் மேல் போட்டுக் கொண்டு வேகவேகமாய் வீட்டுக்கு விரைந்தேன். பின்னாலேயே திருமலையும் ஓடிவந்தார்.

அப்பொழுது தோளில் கிடந்த பவித்ரா, "நீங்க சொல்லிக் கொடுத்த டயலாக்லே ஏகப்பட்ட டிஃபரன்ஸ் தாத்தா. அதனால நானே ஓனா கொஞ்சம் சேர்த்துக்கிட்டேன். வாய் தொண்டையெல்லாம் ஒரே கசப்பு. எனக்கு ஏதாவது ஒரு ஜூஸ் வேணும் தாத்தா" என்று முனகவே -

"உஸ், மெதுவாப் பேசு. யார் காதிலயாவது விழப் போகுது" என்றேன். அந்தச் சமயம் பின்னாலேயே ஓடிவந்த திருமலை சொல்லிக் கொண்டார் : "ஒரு நல்லதை ஆமோதிக்க ஐம்பது பேர் தேவையில்லே. ஒரு தெய்வம் துணையிருந்தால் போதும்னு தெரிஞ்சு போச்சு."

சினிமாவை முன்பு குறை கூறியவரிடம் சினிமா டயலாக் பயனளித்ததை நான் சொல்லவில்லை!

நெல்லை பெனிபிட் பண்ட் லிமிடெட்

26, ரங்கநாதன் தெரு, முதல் மாடி, தி.நகர், சென்னை-17.
4345178


பரிசு! பரிசு! பரிசு!
14 கிராம் தங்க செயின்

1. பிக்சட் டெபாசிட் — 21% + 3% போனஸ்
2. பென்ஷனர் டெபாசிட் — 22% + 3% போனஸ்
3. கல்வி உதவி டெபாசிட் — 24% + 3% போனஸ்

4. சுரேகா டெபாசிட் :

செலுத்தும் தொகை ஒரு தரம் மட்டும்	காலம்	முதிர்வு தொகை
ரூ. 1000	23 வருடம்	ரூ. 1,00,000

5. பிறந்த நாள் டெபாசிட் :



செலுத்தும் தொகை ஒரு முறை மட்டும்	வருடம் தோறும் பிறந்த நாள் அன்று	திருமணத்தின் போது கிடைக்கும் தொகை
ரூ. 4250	ரூ. 1000	ரூ. 5000

6. வாரிசுதாரர் டெபாசிட் :

ஒருமுறை செலுத்தும் டெபாசிட்	காலம்	மாதாமாதம் பெறும் தொகை
ரூ. 10,000	150 மாதம்	ரூ. 7,500
	300 மாதம்	ரூ. 15,000

வீடு நிலம் தங்க நகைபேரில் கடன் வழங்கப்படும்

எதிலும் வெற்றி, எப்போதும் மகிழ்ச்சி தரும்

NUMERO GEM STONES

நியுமரோ ரத்தினக்கற்கள்

இப்போது . . . வெளிநாட்டினருக்கு மற்றுமின்றி, உங்களுக்கும்

'NUMERO GEM STONES' நியுமரோ ரத்தினக்கற்கள்

வழங்க உள்ளோம். ரூ. 250/- M.O. செலுத்தி எங்கள் ஆலோசனையுடன் நியுமரோ ரத்தினக்கல்லையும் பெறலாம். நீங்கள் விரும்பினால் எங்கள் ஏஜெண்ட் ஆகவும் இயங்கலாம்.

எங்கள் ஆலோசனை பெற்ற எவரும் எங்களது ஏஜெண்ட் ஆகலாம். ஏஜெண்ட் ஆக வேறு முதலீடுகள் தேவையில்லை. பகுதி நேர முழு நேர தொழிலாகவும் மேற்கொள்ளலாம். எங்களது ஏஜெண்ட்டாக இயங்கும்போது தங்கள் திறமைக்கேற்ப மாதம் பல ஆயிரம் ரூபாய்வரை கமிஷனாக பெறலாம்.

N.B. : வெளிநாட்டு அன்பர்கள் இதுவரை செலுத்தி வந்த $ 25 (U.S. Dollars) செலுத்தினால் போதும் – கட்டணத்தில் மாறுதல் இல்லை.

JAYA GAYATHRI NUMERO GEMS

Post Box No. : 23, SATHY-638 401. COIMBATORE, S.INDIA.

விரைவில் கோவை, சென்னை, பம்பாய் மற்றும் முக்கிய நகரங்களில் எமது கண்காட்சி நடைபெறவுள்ளது.

ANUSHAM GRAPHICS - 638 401

வரும் சட்டமன்றத் தேர்தலில் ஒரு வெற்றி கூட்டணியை உருவாக் பாடுபட்டுக் கொண்டிருக் ஆர்.எம்.வீக்கு இப்போது பல விஷயங்களை வெளி சொல்ல முடியாத நிலை இருந்தாலும் கல்கியின் வேண்டுகோளைத் தட்ட முடியாமல் பேட்டியளித்தார்....

“உங்களுக்குள்ள அரசியல் அனுபவத்துக்கும் சீனியாரிட்டிக்கும், நீங்கள் பல அவமானங்களைத் தாங்கிக் கொண்டு ஜெயலலிதாவின் அமைச்சரவையில் இருந்தது ஏன்?”


“1984-ல், புரட்சித் தலைவர் இந்தியாவில் இல்லாத சூழநிலையில், கட்சி வெற்றி பெற பாடுபட்டேன். 1988-ல் கட்சியைப் பிளக்க நான்தான் காரணம் என்றார்கள். இப்போது ஒன்று சொல்கிறேன்... அப்போது நான் முதல் நிலைக்கு வரக்கூடாது என்று விரும்பிய கூட்டம்தான் ஜானகி அம்மையாரை முதல்வராகக் கொண்டு வந்தது. நான் அந்த அம்மையாரை முதல்வராகக் கொண்டு வரவில்லை! எனக்குச் சம்பந்தமில்லாமலேயே ஜானகி அணி என்ற அ.தி.மு.க. பிளவு நடந்து முடிந்து, பின்னர் ஜெயலலிதாவோடு இணைந்து கொண்டது. அப்போது கூட இணைவதில் அவசரம் காட்ட வேண்டாம் என்றவன் நான்.

“இணைந்த பிறகு எனக்குக் கட்சிப் பதவி கொடுப்பதில் கூட அவமானப்படுத்தினார்கள். என்னை இணைச் செயலாளர் என்று போட்டு, எனக்கு மேல் எஸ்.டி.எஸ்ஸை மூத்த இணைப் பொதுச் செயலாளராகப் போட்டார்கள் இருப்பினும் பொறுமை காத்தேன். ஏன்? ஒரு கட்சியோடு கமிட் ஆயிட்டோங்கற நிலைதான் காரணம். இது தவிர என்னை நம்பி, என் ஆதரவாளர்கள் ஏகப்பட்ட பேர் இருக்கிறார்கள். நான் அமைச்சராக இருப்பதால் அவர்களுக்கும் ஒரு மரியாதை. இதுதான் எனது பொறுமைக்குக் காரணமாக இருந்தது.”

“சமீபத்தில் அமைச்சர் பதவியில் இருந்து நீக்கப்பட்டபின் நீங்கள் நினைத்தது போல்தான் அரசியல் நடப்பு செல்கிறதா?”

“ரஜினி அவர்களின் வெடிகுண்டு கலாசாரம் பற்றிய பேச்சால், நான் மீண்டும் முன்னணிக்குத் தள்ளப்பட்டிருக்கிறேன். ரஜினி என்னைச் சந்தித்ததைக் கூட பொறுக்க முடியாமல் அமைச்சர் பதவியிலிருந்து நீக்கினார் ஜெயலலிதா. Infact இவ்வளவு long innings க்கு பிறகு நான் ஓய்வு பெறும் மூடில்தான் இருந்தேன். ஆனால் அந்தம்மா என்னிடம் ராஜினாமாக் கடிதம் வாங்கி வைத்துக் கொண்டு டிஸ்மிஸ் செய்தது என்னை வழக்கத்துக்கு மாறாகச் செயல்பட வைத்தது; என் பணி தேவைப்படுகிறது என்பது புரிந்தது. இருப்பினும் தனிக் கட்சி துவங்குவதில் எனக்கு உடன்பாடில்லை. இனி துவங்கவும் மாட்டேன்.

“ரஜினிகாந்த் என்ற தனிப்பட்ட மனிதருக்குள் நாட்டுச் சூழ்நிலை ஏற்படுத்திய பாதிப்புகள் எனக்குத் தெரியும். ஆனால் அவர் professional அரசியல்வாதியல்ல. அவர் அப்படி மாற நினைத்தவருமல்ல! இருந்தாலும் ஜெயலலிதா அரசை வீட்டுக்கு அனுப்பும் மாபெரும் சக்தியாக அவரை மாற்றும் முயற்சியில் நான் ஈடுபட்டிருந்தேன். அதன் முதல் கட்ட வெற்றிதான் இந்த அரசைப்



ரஜினி-காங்கிரஸ் துணையோடு இந்த அராஜக சக்தியை வீழ்த்திக் காட்டுவேன்!

பற்றிய தமது கடுமையான கருத்தை அவர் சொன்னது. பின்னர், பிரதமர் சந்திப்பு என்று நிகழ்ச்சிகள் தொடர்கின்றன. நாடு முழுவதும் எதிர்பார்க்கும் ஒரு சக்தி அப்படியே மக்களுக்குக் கிடைத்து, ஒரு அராஜக சக்தி வீழ்த்தப்பட்டு, நல்லாட்சியைக் கொண்டு வர வேண்டும் என்ற நினைப்பில்தான் நான் செயல்படுகிறேனே தவிர, கல்கியின் கூற்றுப்படி (பார்க்க சென்ற இதழ் கேள்வி – பதில் பகுதி) ஆர்.எம்.வீ. அண்ட் கோவுக்கு லாப–நஷ்ட கணக்குப் பார்த்து நான் செயல்படவில்லை."

"அமலாக்கப் பிரிவு, சி.பி.ஐ. மற்றும் வருமான வரித் துறை அதிகாரிகள் ஜெயலலிதா, மற்றும் சசிகலா குடும்பத்தாரின் மீது எடுத்து வரும் நடவடிக்கைகள் பற்றி என்ன சொல்கிறீர்கள்?"

"இந்த நடவடிக்கைகளின் துவக்க கட்டத்தில், ஜெயலலிதாவை அழுத்தி, கூட்டணிக்குக் கொண்டு வரவே இந்த நடவடிக்கைகள் என்ற பேச்சு இருந்தது. ஆனால் இப்போது நிலைமை மாறி விட்டது. எடுத்த நடவடிக்கைகளை, முற்றுப் பெற வைத்து, தவறு செய்தவர்களுக்குத் தண்டனை பெற்றுத் தந்தே ஆக வேண்டும் என்ற அளவில் நிலைமைகள் இருக்கின்றன."

"உங்கள் பக்கம் வந்து விடப் போகிறார்களே என்ற கவலையில், பழைய விசுவாசிகளுக்கு கட்சிப் பதவிகள், கட்சிக்காரர்களுக்கு அரசியல் பதவிகள் என்று வாரி வழங்கிக் கொண்டிருக்கும் ஜெயலலிதாவால், கட்சியைக் காப்பாற்ற முடியுமா?"

"பதவி, மரியாதைகளைக் கொடுப்பதன் மூலம், கட்சிக்காரர்கள் தம்முடன் இருப்பார்கள் என்று ஜெயலலிதா கருதுவாரானால் அவரது மமதை வீழ்ச்சியடையும். நியாயமான காரணங்களுக்காக அல்லாமல், சந்தர்ப்ப வசத்தால், ஒரு பேரம் போல் பதவி கொடுக்கப்படுகிறது என்பது பெற்றுக் கொள்பவருக்கும் தெரியும். ஜெயலலிதாவின் இந்தச் செய்கைகள் தலைவலிக்குத் தைலம் தடவுவது போலத்தானே தவிர உண்மையான காரணத்தைக் கண்டு, சிகிச்சை தருவது போலல்ல."

"இப்போதுள்ள அரசியல் சூழ்நிலைகளின்படி நோக்கினால், பொதுத் தேர்தலில் நான்கு முனைப் போட்டி என்பது தவிர்க்க முடியாததாகி விடும் போலிருக்கிறதே! இது ஆளும் கட்சிக்கு (அ.தி.மு.க.) சாதகமாக இருக்கும் என்று சொல்லப்படுகிறதே!"

"நீங்கள் சொல்வது சரிதான். இன்றைய சூழலில் நான்கு முனைப் போட்டி தவிர்க்க முடியாததாகி விடும் என்று கருதுகிறேன். ஆனால் எம்.ஜி.ஆர். சக்திகளும், காங்கிரஸும் இணைந்த கூட்டணிக்கு ரஜினி என்ற சக்தி பின்னணியில் இருக்கிறது. அதைக் கணக்கிலெடுத்துக் கொண்டு பார்த்தீர்களானால், 'ஆளும் கட்சிக்கு வெற்றி வாய்ப்புக் கிடைக்காது' என்ற பதில் சுலபமாகக் கிடைத்து விடும்."

"ஒரு பக்கம் எம்.ஜி.ஆர். மன்றங்களும் ரஜினி மன்றங்களும் ரஜினிதான் முதல்வராக வர வேண்டும் என்று விரும்புவதாகவும் காங்கிரஸ் தரப்பில் எந்தத் தலைவரையும் முன்னிலைப்படுத்தி பிரசாரம் செய்யக் கூடாது என்றும் சொல்வதாக சில பத்திரிகைகளில் செய்திகள் வருகின்றன. எம்.ஜி.ஆர். மன்றங்கள் – ரஜினி ரசிகர்கள், காங்கிரஸ் என்று மூன்று தரப்பையும் சங்கடப்படுத்தும் செய்திகளும் வரத் துவங்கியிருக்கின்றனவே?"

"தொகுதி உடன்பாடு, சின்னங்கள் தகராறு, முதல்வர் பிரச்னை என்று எத்தனை ஆயிரம் பிரச்னைகள் வந்தாலும், அவற்றையெல்லாம் சமாளித்து, ரஜினி என்ற சக்தியும் எம்.ஜி.ஆர். மன்றங்களும் காங்கிரஸோடு கூட்டணி அமைத்து இந்த ஆட்சியை வீழ்த்திக் காட்டும். இதில் எந்த மாற்றமும் இல்லை, இருக்காது என்பதை சகல மானவர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்."

சந்திப்பு : **ப்ரியன்**

படம் : **யோகா**

மோகனரங்கன் அவசரமாய் உள்ளே நுழைய –

"லேட்டோ?" என்றார் பாபுஜி வாசனைப் புகையிலை மணக்க.

"இன்னிக்கி 'எடிட்டோரியல் மீட்டிங்' தெரி மோல்லியோ?" என்றார், மறுபடி. "யார் இந்த வாரம் 'கவர் ஸ்டோரி' பண்ணப் போறது?"

"நான்தான்" என்றான் மோகனரங்கன்.

"சொல்லு..." என்றபடி சிறிது வாசனைப் புகையிலையைக் கசக்கி நெல்லிக்காய் அள வாய் கடைவாயில் திணித்துக் கொண்டார்.

"மயிலாப்பூர்ல ராமலிங்கம்னு ஒருத்தர். 'ரிடையர்' ஆன ஆசிரியர். எட்டு வருஷமா பென்ஷன் கிடைக்காம போராடிக்கிட்டிருக் கார். காரணம் என்ன? அரசாங்கத்தோட மெத் தனப் போக்கு, பின்னணி என்னங்கிறதைப் பத்தி விரிவா விசாரிச்சு எழுதியிருக்கேன். அட் டையில அவர் 'ஃபோட்டோ' போட்டு..."

"இதானா?"

"ஆமாம்..." என்றான் தயக்கமாய்.

"மசால்வடை மடிக்கவா பத்திரிகை நடத்த றோம்?" என்று உரக்கச் சொல்லி விட்டு அனை வரையும் நிதானமாய்ப் பார்த்தார். லேசாய் ஒரு நமுட்டுச் சிரிப்பு அனைவரிடமிருந்தும் கிளம்பி அடங்கியது. பின் இறுக்கமாய் ஒரு மௌனம்.

"எத்தனை நாளைக்கு 'பென்ஷன்' வாங் காதவன், ரேஷன் கிடைக்காதவன்'னு எழுதிக் கிட்டு இருக்கப் போறோம்.. இதை எழுதத்தான் நிறைய பேரு இருக்கானே இப்ப... ஏதாவது வித்தியாசமா... அட்டையில சுண்டி இழுக் கணும்.. அத மாதிரி 'மேட்டர்' வேணும் எனக்கு. இந்த சீர்கெட்ட சமுதாயத்தைப் பிரதி பலிக்கணும். அது இங்க மயிலாப்பூர்லயும், மவுண்ட்ரோடுலயும் சுத்திட்டிருந்தா கிடைக் காது. மோகனரங்கன்... ஒண்ணு செய்யி.. இன் னிக்கே தஞ்சாவூர் புறப்படு. அங்கயிருந்து 22 கி.மீ.. கள்ளப் பெரம்பூர்... சின்ன வளமையான கிராமம். அங்க 'காசிலிங்கம்'னு ஒரு மிராசுதார். ஊரையே வளைச்சுப் போட்டுக்கிட்டு அடிதடி பண்றானாம்.... அவன் ஜாதகத்தோட், ஆனா எல்லாத்துக்கும் ஆதாரத்தோட வா... இன் னிக்கு திங்கள். மூணு நாள் 'டைம்' உனக்கு.. வெள்ளிக்கிழமை ரிப்போர்ட் என் 'டேபிள்'ல இருக்கணும்..."

எழுந்து போய் விட்டார்.

மோகனரங்கனுக்கு மூச்சை அடைத்தது. பாபுஜி அப்படித்தான். இருபத்தைந்து வருட மாய் பத்திரிகைத் துறையில் ஊறியவர். நிறைய அடிபட்டவர். 'செந்தாமரை' என செந்தமிழ்ப் பெயரில் பத்திரிகை ஆரம்பித்து, 'இலக்கிய வளர்ச்சி'யில் பெரும் பங்கு வகித்தார். பெருத்த நஷ்டம் வந்தது. பின் தற்போதைய நிலவரம் புரிந்து கொண்டு 'க்ரைம் ரிப்போர்ட்டர்' என 'தமிழில்' இதழ் துவங்கி நாட்டில் நிலவும் அநி யாயங்களை, அக்கிரமங்களை துகிலுரித்தார். அரசியல்வாதிகளுக்கு சிம்ம சொப்பனம். எல்லாவற்றிலும் வேகம் எதிர்பார்ப்பார். புயல் வேகம்.

கள்ளப் பெரம்பூரில் இறங்கும் போது மோகனரங்கன் லேசாய் சாயம் போன அழுக்கு லுங்கியும், 'ரஜினி' படம் போட்ட பச்சை பனியனும் அணிந்து கொண்டு பீடி பிடித்துக் கொண்டிருந்தான்.

மக்களோடு மக்களாய்க் கலந்தான். வயல் காட்டில் நடந்தான். நிறைய பேரோடு பேசி னான். எந்தச் சூழ்நிலையிலும் தன்னை அடை யாளம் காட்டிக் கொள்ளவில்லை. முதலில் ஒரு பட்டியல் தயாரித்துக் கொண்டான். காசி லிங்கத்தால் பாதிக்கப்பட்டவர்களின் பட்டியல். மிக மோசமாக பாதிக்கப்பட்டது யாரென்று ஆராய்ந்ததில் 'ராஜாத்தி அம்மாள்' எனத் தெரிந்தது. வயதான விதவை.

ராஜாத்தி அம்மாள் மரக்கலரில் கதர்ப் புடைவை கட்டிக் கொண்டு பொட்டில்லாமல் கண்களில் நிறைய சோகங்களை தாங்கிக் கொண்டிருந்தாள். அவளிடம் மட்டும் உண்மை யைச் சொன்னான். பேசவே மறுத்தாள். காசி லிங்கத்தின் விதி விரைவில் தீர்மானிக்கப்பட்டு விடும் என நிதானமாய் எடுத்துச் சொன்னான்.


"எம்பையனும் காசிலிங்கத்தோட பொண் ணும் ரொம்ப நாளாவே ஒருத்தரையொருத்தர் விரும்பியிருக்காங்க. யாருக்கும் தெரியாது. காசி லிங்கம் காதுக்கு விஷயம் போனது, விடு வானா? அவன் மலைன்னா நாங்க மடுவு. போன குறுவை அறுப்பு நேரம். அறுப்புக்குப் போயிட்டு வந்து சாயந்திரம் 'காப்பி போடு'ம் மான்னு சொல்லிட்டு... ஆறு மணி இருக்கும்... புள்ள சித்த அப்படியே திண்ணையிலே படுத் திருந்தான். காசிலிங்கம் கூப்பிடறாருன்னு ரெண்டு பேரு வந்தானுங்க. அப்ப போனவன் தான்யா... இன்ன வரைக்கும் அவன் மூஞ்சியக் கூட பாக்க முடியலய்யா..." உடைந்து போய் கேவல் வெளிப்பட்டது. புடைவைத் தலைப் பால் வாயைப் பொத்திக் கொண்டாள். 'இனிமே கேக்காத' என்பதாய் சைகை செய்யத் தான் முடிந்தது அவளால்.

உள்ளேயிருந்து ராஜாத்தி அம்மாளின் பெண் – அதே முகவார்ப்பு வந்தது. ஆனால் நிதானமாய் பேசியது.

"மம்பட்டிக் கழியால அடிச்சிருக் காங்க. ரெண்டே அடிதானாம் மண்

எஸ். பாலகுமார்

க்ரைம்



டையில. உயிர் ம்பாயிடுச்சாம. அய்யனார் தோப்பிலதான் புதைச்சிருக்காங்க. புதைச்ச இடம் வேணா காட்டறேன் வாங்க...”

“இவ்வளவு நடந்தும் ஏன் போலீஸுக்குப் போகலை??”

“என்னை ஏதாச்சும் பண்ணிடுவேன்னு மிரட்டினாங்க. அம்மாதான் வேணான்னுடுச்சு. ஆனா ஊருக்கே தெரியும்...”

“ஊால யாரும 'ஸ்டெப்' எடுக்கலயா?”

“எப்படி? எல்லாரும் அவர் நிலத்தில வேலை செய்யறவங்கதான்... சுத்து வட்டார இடமும் வளைச்சுப் புடிச்சிட்டாரு...

மோகனரங்கன் எழுதக் கூட மறந்து உணர்ச்சிவசப்பட்டுப் போனான்.

“ 'நாங்க சொன்னோம்'னு தெரிய வேணாம் சார்... எங்க பேரெல்லாம் போட்றாதீங்க...

ஆனா நல்லா எழுதுங்க...”

“அந்தப் பொண்ணு... அதான் காசிலிங்கம் பொண்ணு...”

“புவனாவா? அண்ணனைக் கொன்ன மறு நாளே அரளி விதை அரைச்சுக் குடிச்சுட்டு செத்துப் போயிட்டா...”

“காசிலிங்கம் ‘போட்டோ’ ஏதாவது கிடைக்குமா?”

எங்கோ யார் வீட்டுக்கோ ஓடி ஒரு தூசி படிந்த ஃபோட்டோ கொண்டு வந்தது.

“கோயில் திருவிழாவில எடுத்தது. அவர் தான் கோயில் தர்மகர்த்தா...”

கறுப்பு வெள்ளையில் தலையில் பூக்கிரீடம் அணிந்து மையத்தில் சிரித்துக் கொண்டு காசிலிங்கம்... கிராமத்து அரக்கன். ராஜாத்தி அம்மாள் மகன் புதைத்த இடம் புகைப்படம் எடுத்துக் கொண்டான். காசிலிங்கத்தின் 'பினாமி நிலங்கள் வைத்திருப்போர் விவரம் சேகரித்துக் கொண்டான். அவன் ஆக்கிரமிப்பு செய்துள்ள இடங்கள், அதனால் பாதிக்கப்பட்டோர் விவரம்.. வேண்டிய புகைப்படங்கள், பேட்டிகள்.

கிளம்பும் போது ராஜாத்தி அம்மாள் கையெடுத்துக் கும்பிட்டாள்.

“எங்களைக் காட்டிக் குடுத்திறாதய்யா...”

பாபுஜி “பர்ஃபக்ட்” என்றார்.

தோளில் தட்டிக் கொடுத்தார். “இதான் ஸ்பீடு!”

‘ஒரு வாரம் லீவ், “என்ஜாய்!”

பெரிய விடுதலை!

ஞாயிறு.

அறை ஜன்னல் வழியே ‘ஹிண்டு’வும் ‘க்ரைம் ரிப்போர்ட்டரும்’ விசிறியடிக்கப் பட்டன. அவசரமாய் ‘க்ரைம் ரிப்போர்ட்டரை’ புரட்ட அட்டையில்... ‘எட்டு வருடமாய் பென்சனுக்காகப் போராடும் ஆசிரியர்... ‘என்னாயிற்று? மூன்று நாள் உழைப்பு. அசுர உழைப்பு. உள்ளுக்குள் கோபம் குமைந்தது. ஒரு வேளை அடுத்த வாரமோ?’

பாபுஜி தோளில் தட்டினார். “அமைதியா இரு...”

“எல்லாரையும் முட்டாளாக்கிட்டீங்களே சார்...”

“நம்ம பத்திரிகையோட வார வருமானம் எவ்வளவு தெரியுமா? ஒன்றரை லட்சம் ரூபா.. காசிலிங்கத்தோட பேசினேன். எல்லா ஆதாரமும் சொன்னேன். நாலு லட்சம் தர்றேன்னான்.”

“அப்ப நான் எழுதிக் கொடுத்த ரிப்போர்ட்?”


“அப்பவே கிழிச்சுப் போட்டுட்டனே...”

“உயிரைக் கையில புடிச்சிக்கிட்டு உண்மையைச் சொன்ன அந்த ஜனங்க, என் உழைப்பு...”

“இத பாரு மோகனரங்கன்! நான் ‘பிராக்டிகலா’ பேசற ஆளு... எவ்வளவு வேணுமோ சம்பளமா வாங்கிக்க. யங் பிளட்! அப்படித் தான் இருக்கும். தவிரவும் ‘இன்வெஸ்டிகேடிவ் ஜர்னலிசத்தோட’ இன்னொரு பக்கமும் உனக்குத் தெரியணும். இல்லையா...?”

‘எங்களைக் காட்டிக் குடுத்திறாதய்யா...’

மோகனரங்கனுக்குக் கொஞ்ச நேரம் சுவாசம் தடைப்பட்டு வந்தது.



காதலன் ஹிட்லர்!

ஹிட்லர் மீது பல பெண்கள் காதல் கொண்டு கடிதங்கள் எழுதியதுண்டு. இவற்றில் சுமார் 10,000 கடிதங்களை ஜெர்மனியில் பிறந்த அமெரிக்கரான வில்லி எம் கெக் காப்பாற்றி வைத்திருக்கிறார். இவற்றை வெளிப்படுத்தினால் எழுதியவர்களுக்கோ, அவர்கள் குடும்பத்தினருக்கோ தர்ம சங்கடம் ஏற்படக் கூடும் என்று இவை மறைத்து வைக்கப்பட்டிருந்தன. இரண்டாவது உலக மகாயுத்தம் முடிந்து ஐம்பது ஆண்டுகள் முடிந்ததை நினைவுகூரும் வகையில் இந்தக் கடிதங்களில் சில மட்டும் இப்போது புத்தகமாக வெளியிடப் படுகிறது.

நன்றி : ஃபெமினா

தகவல் : கிருஷ்ணவேணி ரங்கநாதன்

●● கேரளாவில் எங்கண்டியூர் என்னும் இடத்தில் ஒரு விஷயத்தில் பெண்கள் தங்கள் ‘சமஉரிமையை’ நிலைநாட்டியுள்ளனர். இது வரை கட்டட வேலைகளில் சித்தாள்களாக இருந்த பல பெண்கள் இப்பொழுது கட்டடம் கட்டும் மேஸன்களாக ஆகியுள்ளனர். சித்தாள் வேலையில் ரூ. 30, 40 சம்பாதித்தவர்கள் இன்று மேஸனாக ரூ. 100 முதல் ரூ. 150 வரை தினமும் கூலியாகப் பெறுகின்றனர்.

ஆரம்பத்தில் இவர்களைப் பார்த்துக் கிண்டல் செய்த ஆண்கள் இவர்களது வேலையின் சிறப்பைப் பார்த்து வாயடைத்துப் போய் உள்ளனர்!

ஆதாரம் : ‘த வீக்’

தகவல் : எஸ். ஆலன்

'சுருக் நறுக்'என்றொரு சொல்லோவியம் — 7

தேர்தல் என்பது...

'எல்லா தேர்தல்களிலும் 'அரசியல்வாதிகள் ஜெயித்துவிடுகிறார்கள்; தோற்றுப் போவதெல்லாம் வாக்காளர்கள்தான்' என்று யாரோ சொல்லியிருக்கிறார்கள்.

நிஜத்தில் அப்படித்தான் நடக்கிறதா? தேர்தல் என்பது எப்படி இருக்கிறது அல்லது எப்படி இருக்க வேண்டும்? உங்களது 'சுருக் நறுக்' விளக்கத்தைக் கீழுள்ள கூப்பனில் எழுதி 4.12.95க்குள் எங்களுக்கு அனுப்பி வையுங்கள்.

பிரசுரத்துக்குத் தேர்வாகும் ஒவ்வொரு விளக்கமும் ரூ.50 பரிசு பெறும். தவிர, இன்னும் 19 வாரங்களுக்குத் தொடரப் போகும் இப் போட்டியில் கலந்து கொண்டு, மிக அதிகமான முறையில் பரிசு பெறும் ஒரு திறமைசாலிக்கு ஒரு மெகா பரிசும் காத்திருக்கிறது!

போட்டி முடிவுகளில் ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

–ஆர்.

தேர்தல் என்பது..

....

....

....

....

பெயர் : ....

முகவரி : ....

....

....

....

வீடு திரும்பும்போது இரவு ஒன்பதரை மணியாகி விட்டது.

"அப்பா தூங்கிட்டாரா?" என்றேன் சுகுணா விடம்.

இருமல் சப்தம் கேட்டது. அப்பா இன்னும் தூங்கவில்லை. அருகில் போனேன்.

"என்னப்பா.. வென்னீர் வேணுமா?"

"பக்கத்துலயே வச்சிருக்கேன். அவர் உங் களுக்காகத்தான் காத்திருக்கார்," என்றாள்.

எனக்குள் பெருமூச்சு.

"அவசியம் போகணுமா?" என்றேன்.

சொன்ன பிறகுதான் உறைத்தது. அப்பா வின் முகம் சுணங்கியது பார்த்தேன்.

"சரிப்பா... வாங்க..."

குனிந்து குழந்தையை அள்ளுவது போலக் கைகளில் ஏந்திக் கொண்டு நிமிர்ந்தேன். சுகுணா விலகி வழி விட்டாள்.

ஹால்.. வராந்தா... என்று கடந்து வாசலுக்கு வந்தேன். சாய்வு நாற்காலி போடப்பட்டிருந் தது. படுக்க விட்டேன். அப்பா முகம் குழந்தை போல் விகசித்தது.

ஒரு வருடமாய் இதே பழக்கம்.

கொஞ்சங் கொஞ்சமாய் கை கால்கள் சரி வர சுவாதீனமின்றித் தள்ளாடின.

முதலில் என்னைப் பற்றி நடந்தவர், பிறகு எனக்குக் குழந்தை போலானார்.

மாலையில் அவர் பொழுது போக்கே இது தான். வாசலில் கொண்டு போய் அமர வைத் தால் இரண்டு மணி நேரம் வேடிக்கை பார்த் துக் கொண்டு அமர்ந்திருப்பார்.

"இதுல என்னப்பா உங்களுக்குச் சந் தோஷம்' என்று நானும் கேட்டதில்லை; அவ ரும் சொன்னதில்லை.

"விஜி சாப்பிட்டாச்சா?" என்றேன் உள்ளே வந்து.

"ம்..."

"சரவணன்?"

"வர லேட்டாகும். முடிஞ்சா வருவேன். இல்லே ஃப்ரெண்ட்ஸ் வீட்டுலதான்னு சொல் லிட்டுப் போனான்..."

பாபு தூங்கிவிட்டான். ஒன்றரை வயசு மழலையை இன்று கேட்க முடியாது. லேட் டாய் வருவதின் சாபம்.

தட்டில் கை அளைந்தபோது சுகுணாவின் அதட்டல் கேட்டது.

"சாப்பிடும்போது... என்ன யோசனை?"

"ப்ச்..."

"என்ன சொன்னாங்க... பையன் வீட்டுல?"

"அதேதான்... கொஞ்சங்கூட குறையாது...

ரிஷபன்



அளவுகோல்

விஜி என்ன சொல்றா? இந்த பையனைத் தான் பிடிச்சிருக்காமா..." என்றேன்.

என் இயலாமை எனக்கே உறுத்தியது.

"அவ என்ன சொல்றது... நம்மால என்ன முடியுமோ... அதான்..."

"சரி. மோரை விடு. சாதம் வேணாம்..."

"தினசரி.. வெறும் மோரைக் குடிச்சால் எங்கேர்ந்து தெம்பு வரும்..."

"சரவணனுக்கு எதுவும் போஸ்ட் உண்டா?" என்றேன் மெல்லிய குரலில் எதிர்பார்ப்பு தொனிக்க.

"இ...ல்லை." சுகுணா உள்ளே போக தட்டிலேயே கைகழுவிக் கொண்டேன்.

வேலை தேடும் தம்பி... திருமண வயதில் தங்கை... நான் மட்டும் ஏன் அவசரப்பட்டு கல்யாணம் செய்து கொண்டேன்... இத்தனை கடமைகளை வைத்துக் கொண்டு. இனம் புரியாத எரிச்சல் என்மீதே எனக்கு. இதில் குழந்தை வேறு.

வாசலுக்குச் சென்றேன்.

அப்பாவின் கவனம் என் மீது திரும்பியது.

"என்னடா... உள்ளே போகணுமா..."

"மணி பத்தாயிருச்சு.. பரவாயில்லே... இன்னும் அரை மணி இருக்கலாம்..."

"என்ன சொன்னாங்க?"

சொன்னேன் உணர்ச்சியற்ற குரலில்.

"வேற எடம் பார்க்கலாமா..." என்றார்.

"இதுக்கே ஆறு மாசமா அலைச்சல்... இனி அடுத்தது அமையணும்..." என்றேன்.

"சரி.. வா.. உள்ளே போகலாம்..."

எழுந்து அருகில் சென்று குனிந்தேன். கைகள் நடுங்கி பிறகு சரியாகப் பற்றின.

உள்ளே படுக்கையில விட்டபோது அப்பாவின் தளர்ந்த கை என்னைப் பிடித்துக் கொண்டது.

"ராஜா... மனசுத் தைரியத்தை விட்டுராதேடா... உன்னால முடியும்..."

"அ...ப்பா.."

"கிழவனை வாசல்ல கொண்டு போய் விடறதுலயும்... திரும்பக் கொண்டு வரதிலயும் என்ன அவசியம்னு பார்க்கிறியா... நீ திடமா இருக்கியா... இல்லியான்னு வேற எப்படிடா நான் புரிஞ்சுப்பேன்... மனசு விட்டுப் பேசற ஸ்டேஜை நாம தாண்டிப் போயிட்டோமே. அப்பாகிட்டே எதுக்குச் சொல்லணும்னு நீ மறைச்சாக்கூட உடம்பு காட்டிக் கொடுத்துரும்டா. புரியுதா.. திடத்தை விடாதே... எதையும் சமாளிக்கலாம்..."

"அ...ப்பா.."

கால் மடங்கி அவர் மடியில் முகம் புதைத்தேன்.

17 ஒரு தலம், ஒரு பாடல், ஒரு நயம்

‘‘காவிரிக் கரையி

அவர் ஒரு கடன்காரர். கொடாக்கண்டர். கடன் கொடுத்தவரோ விடாக் கண்டர். கெடுபிடி வசூலுக்காக வீட்டுக்கே வந்து நின்று விட்டார்.

கடன் வாங்கியவர் கலங்கவில்லை. ‘‘வீட்டில் அப்பா இல்லை’’ என்று பொய் சொல்லும்படி புத்திரனை அனுப்பினார்.

‘‘அப்பா இல்லை என்று சொல்லச் சொன்னார்’’ என்று அசடு வழிந்தது அருமை மகன்.

‘‘அதனால் என்ன. வருகிறவரை இருந்து பார்க்கிறேன்’’ என்று திண்ணையில் தூசுதட்டி உட்கார்ந்து விட்டார் விடாக் கண்டர்.

எவ்வளவு நேரம் இப்படி உட்கார முடியும். எப்படியும் எழுந்து போகத்தானே போகிறார் என்று கொடாக்கண்டர் வீட்டுக்குள்ளேயே ஒளிந்து கொண்டார்.

கடன் வசூல் மன்னரோ நேரம் ஆனாலும் மசிவதாக இல்லை. கொஞ்ச நாளானாலும் இருந்து கடன் வசூலை முடிக்கும் நினைப்பில் துண்டை விரித்து ஹாய்யாகத் திண்ணையில் படுத்தே விட்டார். ஒரேயடியாகத் தூங்கினால் கடன்காரப்பயல் தப்பி ஓடுவானே என்று ஒரு கையைத் தூக்கித் தலைக்கு அண்டை வைத்தபடி ஒருக்களித்தபடி, பாதிக் கண்ணை மூடியபடி கிடந்தார். உண்மையில் தூங்காமல் தூங்குவது போல் கிடந்தால், பயல் வெளியே வருகிறபோது லபக் என்று ஒரு அமுக்கு அமுக்கி விடும் நினைப்பில் படுத்துக் கிடந்தார்.

நாம்தான் கடன்காரப் பயல். திருவரங்கத்துப் பாம்பணையில் பாதி விழி திறந்து படுத்துக்கிடக்கும் பரம் பொருளுக்கு நிறையவே கடன் பட்டு விட்டோம். பல ஜன்மத்துப் பாவ புண்ணியக் கடன் கணக்கில் இருந்து நழுவியோடும் நம்மை வசூல் பண்ண வந்த விடாக் கண்டரே திருவரங்கத் திருமால்!

இராமனுக்குப் பெருமாள் என்று பெயர். அந்தப் பெருமாளே பூஜித்து வந்ததால் பெரிய பெருமாள் எனப் பெயர் பெற்றவர் ஸ்ரீரங்கநாதர். விபீடணன் விரும்பிய காரணத்தால் இலங்கைக்கு எடுத்துப் போக இந்த அரங்கநாதனைத் தானம் தந்தார் இராமபிரான். ஆனால் வழியில் இந்த அரங்க மண்ணில் வைத்து இளைப்பாறி, வழிபாடு செய்து விட்டு இலங்கைக்கு எடுத்துப் போக விபீடணன் விரும்பிய போது நகர மறுத்தார் நாராயணர். கடல் கடந்து சிலைகள் போவது கடவுளுக்கே இஷ்டம் இல்லை போலும். காவிரியாறு வெள்ளம் பெருகும் போது கொள்ளிடமாகிப் பிரிந்து பாயும். இந்த இரு பிரிவுக்கும் இடையில் விளங்கும் திருவரங்கமே வைணவர்களின் கோயில்! திருமாலின் ராஜதானி.

கங்கைக்கும் காவிரிக்கும் கடும் கருத்து மோதல்! யார் புனிதர் என்று! எப்போதோ உலகளந்த திருவடியை நனைத்ததால் கங்கை புனிதம் என்று எல்லோரும் தீர்ப்பளிக்க, காவிரி கடும் தவம் புரிந்தாள். எப்போதும் திருவடி நனைக்கும் பேறு பெற்று - அரங்கநாதராம் திருமாலின் திருமுடி முதல் திருவடி வரை ஒரு நீர்மாலையாகிக் கிடக்கும் பேறு பெற்றாள். திருமாலைச் சுற்றி, ஒரு திருமாலையாகக் காவிரி கிடக்கும் காரணம் பற்றி, தமது திருமாலை என்ற பாசுரத்தில், ‘கங்கையிற் புனிதமாய காவிரி நடுவுபட்டு’’ என்று தொண்டரடிப் பொடியாழ்வார் கொண்டாடி மகிழ்ந்தார்.

இங்கு அரங்கநாதர் பள்ளி கொண்டிருக்கும் அழகே தனி. தென் திசைக்குத் திருமுகம். வட திசைக்கு முதுகு. மேற்கே தலை. கிழக்கே பாதம் என்று படுத்திருக்கிறார். விபீடணன் வேண்டியதால் தென் திசை இலங்கை நோக்கிப்படுத்தார் என்பதால் -

> ‘குடதிசை முடியை வைத்து
> குணதிசை பாதம் நீட்டி
> வட திசை பின்பு காட்டி
> தென்திசை இலங்கை நோக்கி’’

என்று அருளினார் ஆண்டவனில் ஆழ்ந்த ஆழ்வார்.

ஆனால் ஆழ்வாரில் ஆழ்ந்த உரையாசிரியர்களோ, தென்திசை நோக்கிய திருக்கோலத்துக்கு வேறு காரணம் கண்டார்கள். முரட்டுச் சமஸ்கிருதம் வழங்கும் வடதிசைக்கு முதுகு காட்டி, ஆழ்வார்களின் ஈரத்தமிழ் நடை போடும் தென்திசைக்கு முகம் காட்டினார் என்று அநுபவித்தார்கள். முதுகு காட்டுவதை விட முகம் காட்டுவதே மரியாதை என்பதால், தமிழுக்குத் தலை வணங்கும் பெருமாளாக இதனை உணர்ந்தனர். மதுர கவி ஆழ்வார் நீங்கலாக மற்றைய பதினோரு ஆழ்வார்களும் பாடிப் பரிசளித்த பதி இந்தத் திருவரங்கம். கடல் நிறக் கடவுள், எந்தை காவிரிக் கரையில் கைவைத்துப் படுத்ததே இந்தத் தமிழ்த் தாகம் தணிவதற்குத்தான்...

கவிச்சக்கரவர்த்தி கம்பனின் ராம காதையையும் அரங்கேறச் செய்து, அங்கீகரித்து மகிழ்ந்தவன் அரங்கன் என்பதும் பிரசித்தம்.

செல்லுலர் வாங்கலையோ செல்லுலர்!




ஏதோவோர் ஏகாந்தமான இடத்தில் வாக்கிங்கோ ஜாகிங்கோ செய்து கொண்டிருக்கும் ஒரு நபருக்கு ஓர் அவசரச் செய்தி ஒன்று சொல்ல வேண்டுமானால் என்ன செய்வது? அதற்கு வசதியாக வந்தது தான் பேஜர். அது வெறுமனே செய்தியை மட்டும்தான் ஓரிரு வரிகளில் சொல்லும்; உடனடியாக அந்த நபரிடமிருந்து பதிலைப் பெற்றுத்தர பேஜரால் முடியாது. சம்பந்தப்பட்ட நபர் நேரிலோ அல்லது டெலிபோனிலோ தொடர்பு கொண்டால்தான் உண்டு!

இனி அப்படியில்லை; வந்து விட்டது செல்லுலர் போன். ஏகாந்தமான இடத்தில் உள்ள வருடனோ அல்லது காரில் பயணம் செய்து கொண்டிருப்ப வருடனோ டெலிபோனிலேயே டயல் செய்து பேசலாம். சம்பந்தப்பட்ட அந்த நபரும் யாருடன் வேண்டுமானாலும் எஸ்.டி.டி., ஐ.எஸ்.டி. உள்பட டயல் செய்து பேசலாம். தேவையானதெல்லாம் செல்லுலர் போன்தான்!

கார்ட்லெஸ் போனை விடவும் கையடக்கமாக உள்ள செல்லுலர் போன் 20,000 ரூபாயிலிருந்து 43,000 ரூபாய் வரை விலைக்குக் கிடைக்கிறது. உங்களுக்குப் பிடித்தமான மாடல் ஒன்றை விலைக்கு வாங்கிய இருபத்து நான்கு மணி நேரத்துக்குள் உங்கள் செல்லுலர் போனை இயங்க வைத்து விடுகிறார்கள் ஆர்.பி.ஜி. செல்லுலர் போன் நிறுவனத்தினர்.

"விலை தவிர செக்யூரிடி டெபாசிட் மூவாயிரம் ரூபாய்.



நிறுவித் தருவதற்கு 1200 ரூபாய். மாத வாடகை 156 ரூபாய். பிறகு உபயோகிப்பதைப் பொறுத்து 'ஏர் டைம்' சார்ஜ், பத்து விநாடிகளுக்கு ரூ. 1.40 என்கிற அளவில். செல்லுலர் போன் வாங்குவதற்கு ஏற்கெனவே டெலிபோன் கனெக்ஷன் வைத்திருக்க வேண்டிய அவசியமும் இல்லை. "இது இயங்கும் விதமே தனி!" என்கிறார் ஆர்.பி.ஜி. செல்லுலர் போன் நிறுவன அதிகாரி சாஸ்திரி.

நகரம் பல்'செல்'களாகப் பிரிக்கப்பட்டு base stationகள் இருப்பதால் செல்லுலர் என்று பெயர் வந்தது. சென்னை நகரில் மட்டும் 26 பேஸ் ஸ்டேஷன்கள் இருக்கின்றன. அனைத்தும் மைக்ரோ வேவ் மூலம் இணைக்கப்பட்டிருக்கின்றன.

உதாரணத்திற்கு மகாபலிபுரம் சாலையில் காரில் சென்று கொண்டிருக்கும் நீங்கள் எஸ்.டி.டி. போட்டுப் பேச விரும்புகிறீர்கள் என்றால் உங்கள் செல்லுலர் போன் எப்படி வேலை செய்யும் என்பதைத்தான் முன் பக்கத்திலுள்ள படம் காட்டுகிறது.

காரிலுள்ள நீங்கள் டயல் செய்யும் போது, உங்கள் கார் எந்த பேஸ் ஸ்டேஷனுக்கு (B1) அருகில் சென்று கொண்டிருக்கிறதோ அந்த பேஸ் ஸ்டேஷன் உங்களது பேச்சை வாங்கி உடனடியாக MSC என்கிற மொபைல் ஸ்விட்சிங் சென்டருக்கு (C2) அனுப்புகிறது. MSC, தான் பெற்றதை பொது டெலிபோன் எக்சேஞ்சுக்கு (B2) அனுப்ப, அங்கிருந்து உள்ளூரிலோ வெளியூருக்கோ அல்லது வெளிநாட்டுக்கோ உங்களுடைய செல்லுலர் போனுக்குத் தொடர்பு கிடைக்கச் செய்யப்படுகிறது.

இதே போல் உங்களுடைய அழகான செகரட்டரி உங்கள் அலுவலகத்திலிருக்கும் டெலிபோன் மூலம், காரில் செல்லும் உங்களோடு தொடர்பு கொள்ளலாம். அவருடைய போன் கால், எக்சேஞ்ச் மூலமாக MSC யை அடைந்து பின் உங்கள் கார் எந்த பேஸ் ஸ்டேஷனுக்கு அருகில் செல்லுகிறதோ, அந்த பேஸ் ஸ்டேஷனை எட்டும்.

செல்லுலர் போனில் லோகல் கால் பேசினாலே அது சாதாரண போனில் எஸ்.டி.டி. பேசுகிற மாதிரியான கட்டணம் என்பதால் மிக முக்கியமான விஷயத்துக்காக மட்டும்தான் செல்லுலரை உபயோகிக்க வேண்டும். செகரட்டரியிடம் அசடு வழிய உபயோகித்தால் பில் கட்டி மாளாது!

— எஸ்.வி.என்.

போட்டிக் கதை - 12

மதி தன்னை மிக தெளிவு செய்து...

"ஏம்பா இப்படி செஞ்சீங்க. உங்க வறட்டு கவுரவத்துக்காக என் வாழ்க்கையோட ஏம்பா விளையாடினீங்க...'' உள்ளுக்குள் குமுறினான் வெங்கி என்கிற வெங்கடரமணன்.

ஆறடிக்கு ஒரு இன்ச் குறைவு- மாநிறத்துக்கும் சற்று அதிகம். ஓவல் ஷேப் கண்ணாடி- மீசை மிஸ்ஸிங்- விளம்பரங்களில் வரும் கல்லூரி மாணவ லட்சணங்கள் அப்படியே பொருந்தியிருந்தான்.

பெங்களூர்-கப்பன் பார்க்- விக்டோரியா ராணி சிலையருகே தனது யமாஹாவின் வேகத்தைக் குறைத்து, நிறுத்தி, ஸ்டாண்ட் போட்டான். விநாடிகளில் அவனது உதடுகளுக்கு ஒரு சிகரெட் வந்து புகையத் துவங்கியது.

போன வாரம், வருந்தல் கடிதம் வந்தபோதுகூட அவன் இவ்வளவு நொந்து போகவில்லை. ஆனால், இன்று காலை.... சே! அப்பாவின் மேல் எக்கச்சக்கமாக கோபம் வந்தது.

பிள்ளைகளின் எதிர்காலத்தை மனத்தில் வைத்து இந்தக் கால பெற்றோர் என்னென்ன செய்கிறார்கள்? மடத்தனம். வெட்டி வீறாப்பு! என் ஒரு வருட உழைப்பு வீணாப் போச்சே...!

காமன் அட்மிஷன் டெஸ்ட் (CAT) என்பது இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் மானேஜ்மெண்டின் நுழைவுத் தேர்வு. இந்தியாவில் நான்கு கல்லூரிகள் உள்ளன. இன்றைய மாணவர்களால் ஐ.ஏ.எஸ். தேர்வைவிட அதிகமாக விரும்பப்படுகிறது இந்த தேர்வு!

அதை எழுதி, நான்கு கல்லூரியில் ஒன்றான பெங்களூர் ஐ.ஐ.எம்-இலிருந்து நேர்முக-கலந்துரையாடல் தேர்வுக்காக அழைப்பு வந்தது. நன்றாகத்தான் செய்தான். கிடைத்துவிடும் என்றுதான் இன்று காலை வரை நினைத்திருந்தான்.

வெங்கி, முழு தம் இழுத்து, விரக்தியாய் ஊதினான். சிகரெட்டின் பிழம்பை முகத்துக்கு நேராகக் கொண்டு வந்து வெறித்துப் பார்த்தான்.

வெங்கிக்கு சில நாட்களாகத்தான் ஐ.ஐ.எம். பெங்களூரில் பணிபுரியும் ரங்காச்சாரியை டென்னிஸ் கோர்ட்டில் பழக்கம். அவரிடம் தனக்கு சீட் கிடைக்கவில்லை என்று கூறினான் வெங்கி.

"எது தவறாகப் போனதுன்னு தெரியல சார்"... என்றான் ஆங்கிலத்தில்.

"நீ நல்லாத்தான் செஞ்சே! பட், கம்பேரடிவ்லி மத்தவங்க உன்னை விட நல்லா செஞ்சிருந்தாங்க. ஓபன் காம்படீஷனாச்சே! இதே நீ ஒரு எஸ்.சி.ஆகவோ எஸ்.டி.யாகவோ பொறந்திருந்தா, உன்னுடைய ஸ்கோருக்கும் பெர்ஃபாமன்ஸுக்கும் அந்த பிரிவுலயே டாப்பா வந்திருப்பே! என்ன செய்யறது... மேல் ஜாதியில் பொறந்ததுதான் நாம செஞ்ச பெரிய பாவம்! என்னிக்கோ நம்மவா செஞ்ச பாவத்துக்கு இப்போ நாம தண்டனை அனுபவிக்கிறோம்..."

வெங்கி உறைந்துப்போய், "நான் தாழ்ந்த சாதியா இருந்திருந்தா எனக்கு கெடச்சிருக்குமா, சார்!" குரல் கிணற்றில் இருந்து வருவதுபோல் இருந்தது.

"நோ டவுட்! கண்டிப்பா கெடச்சிருக்கும். பட், புளி சாதமும் தயிர் சாதமும் சாப்பிடற ஜாதியில பொறந்துட்டு... நீ ஐயரா... ஐயங்காரா...?"

"ரெண்டும் இல்லை! செருப்பு தைக்கறவங்க! எங்கப்பாதான் 'பாரதியம்'னு சாதிப் பேரைக் கொடுத்து ஓபன் காம்படீஷனில் விட்டுட்டாரு!"

ரங்காச்சாரி நூறு சதவிகிதம் அதிர்ந்தார். "உன் எதிர் காலத்தைப் பற்றி யோசிக்காம உங்கப்பா உன்னோட வாழ்க்கையில் விளையாடிட்டாரு," என்று மட்டும் சொல்லிவிட்டு அந்த இடத்தை விட்டு அகன்றார் ரங்காச்சாரி.

கையைச் சுட்ட சிகரெட்டை பட்டென்று உதறினான். தனது எம்.பி.ஏ. கனவு சிதைந்ததற்கு அப்பாதான் முழுகாரணம் என்று அவர் மேல் வெறுப்பாக இருந்தது. கண்களில் நீர் வழிந்தது. மூக்கு குழைந்து போனது.

சோகமும் கோபமும் அலைந்து அலைந்து வந்தது. அதற்கு மேல் பொறுக்க முடியாமல், கிளம்பினான். வீட்டுக்குப் போக மனம் வர



வில்லை. அப்பாவின் முகத்தில் விழிக்கவே வெறுப்பாக இருந்தது. வழியில் பெட்ரோல் நிரப்பிக் கொண்டு, மனம் போன போக்கில் சுற்றினான்.

இரவு பதினொரு மணி.

வெங்கியின் வீட்டில் அவனது அம்மா, 'ஏங்க" புலம்பலாய் ஆரம்பித்தாள். தங்க பிரேம் கண்ணாடி. அதிக மேக்கப்பில் நகரம் தெரிந்தாலும் பின் கொசுவத்தில் கிராமம் தெரிந்தது.

"ஹும்" என்று மட்டும் ஒலி எழுப்பினார். ஆழ்ந்திருந்த 'பிஸினஸ் டுடே'வில் இருந்து ழவில்லை. சுடலைராஜன்- அரசு நிறுவனத் ல் பெரும்பதவி வகிக்கும்- முண்டா பனியன், ங்கி சகிதமாய் கட்டிலில் சாய்ந்திருந்த- றுப்பு நிறம்- பருமனான உடல் வாகு- பாலீஸ் மீசை- முகத்தில் அம்மைத் தழும்பு பான்ற புள்ளிகள் இருந்த சுடலைராஜன் னைவியின் அடுத்த வார்த்தைகளுக்குப் ந்தகத்தைப் புறம் தள்ள வேண்டி இருந்தது.

"என்னிக்கும் வெங்கி வர இவ்வளவு லட்டானதில்லிங்க."

"எல்லாம் வந்துடுவான்" என்று விளக்கை ணைத்தார்.

காலை-ஒரு கண்ணை மட்டும் தூக்கம் அழுத்த- காப்பி கொடுக்க வந்த மனைவியிடம் கேட்டார். "செண்பகா! பய வந்துட்டானா?"

செண்பகாம்பாள் விளிம்பில் அழுகையை வைத்துக் கொண்டு, "இன்னும் இல்லை... எனக்கு பயமா இருக்கு... ஒரு வேளை, காலேஜ் சீட் கிடைக்கலைன்னு..."

"சீச்சீ... அசடாட்டம் பேசாதே! ரிசல்ட் வந்து ஒரு வாரமாகுது!" தூக்கம் சுத்தமாகப் போய்விட்டது. "அவனென்ன கொழந்தையா..." என்று சமாதானம் கூறினாலும்...

மனசு ரெண்டுபட்டுத்தான் போனது. ஒன்று என்ன ஆச்சோ ஏதாச்சோ என்று கிடந்து அடித்துக் கொள்ள, மற்றது அசம்பாவிதமாக எதுவும் ஆகியிருக்காது என்று சமாதானம் சொன்னது.

மதியம் மூன்று மணிக்குத் திரும்பி விட்டார் சுடலைராஜன். வெங்கியின் மாடி அறையில் இருந்து 'பிட்டில்ஸ்' கேட்காதா? என்று ஏங்கிய படிதான் நுழைந்தார்.

அழுது வீங்கிய கண்களுடன் செண்ப காம்பாள்!

துரை. சரவணன்

“மெதுவா போகமாட்டானே! மொதல்ல அந்த எழவு வண்டியை அவங்கிட்ட இருந்து புடுங்கணும்....” புலம்பினாள்.

வெங்கி அங்கே இங்கே சுற்றி என்.ஹெச் 7 பிடித்து கிருஷ்ணகிரிக்கு அருகில் உள்ள ஒரு கிராமம் வந்துவிட்டிருந்தான். ரோட்டோர சர்தார்ஜி கடைக்குள் கட்டிலில் தூங்கிக் கொண்டிருந்தான்.

யாரோ எழுப்ப திடுக்கிட்டு எழுந்தான். பரட்டைத் தலையுடன் ஒரு பெண் தலையைக் கிளறியபடி நின்றிருந்தாள். இடுப்பில் கைக்குழந்தை. “ஸார்...” பிரத்யேகமான குரலில் பிச்சை கேட்டாள்.

‘‘போபோ!’’ என்று விரட்டியவனுக்கு அம்மா நினைவு ஒட்டிக் கொண்டது. ‘அப்பா செய்த தப்புக்கு அம்மா என்ன செய்யும்?’ வெளியே வந்தான்.

சூரியன் சிவப்பாய் மண்ணுக்குள் ‘டைவ்’ அடித்துக் கொண்டிருந்தான். உடனே, கிளம்பியது யமாஹா!

மதுரை நகருக்குள் உள்ள ஆல்பர்ட் விக்டர் பாலம் 108 ஆண்டுகளைக் கடந்து 109வது வயதில் இன்னும் கம்பீரமாக நாளொன்றுக்கு 20 ஆயிரம் டன் வாகனங்களைத் தாங்குகிறது! இப்பாலத்தைக் கட்டி முடித்தபோது 12டன் எடையுள்ள ரோடு ரோலர் செல்லலாம் என தாங்கும் சக்திக்கு வரம்பு அமைத்தனர். 670அடி நீளமும் 30 அடி அகலமும் கொண்ட இப்பாலம் 15 கண்களைக் கொண்டது. அஸ்திவாரம் மட்டுமே உடைகல். மற்ற அனைத்தும் செங்கல்லும் சுண்ணாம்புக்கலவையும்தான்! இன்று தமிழகத்திலேயே செங்கல்லால் கட்டப்பட்ட மிகப் பழைய மேம்பாலம் இதுவே!

–இரா. கல்யாணசுந்தரம்

அவன் வீட்டை அடையும்போது மணி ஒன்பது! வண்டி சத்தம் கேட்டதும் ஓடி வந்தது அவனது அம்மாதான்.

வாரி அணைத்துக் கொண்டாள். “என்னடா இப்படி பண்ணிட்டே! எங்கடா போய்த் தொலைஞ்சே... நாங்க எல்லாம் தவிச்சுப் போய்ட்டோம். எங்களைப்பத்தி உனக்கு கொஞ்சமாவது அக்கறை இருக்கா...”

‘‘என்னைப்பத்தி உங்களுக்கு அக்கறை இருக்கு? அப்பாவுக்குக் கூடவா...”

சட்டென்று முகம் மாறினார். “என்னடா பேசற?’’

“என் வருங்காலத்தைப் பத்திக் கவலை இருந்திருந்தா, நம்ம ஜாதிப் பேரை கொடுக்காம இருந்திருப்பாரா... நம்ம ஜாதிப் பேரை சொல்லறதுல அப்படி என்ன கேவலம்?’’ சீறினான் வெங்கி.

தனது நண்பரான போலீஸ் உயர் அதிகாரிக்கு போன் சுழற்றிக் கொண்டிருந்த சுடலைராஜன் விரல்கள் சுழற்றலை நிறுத்தின.

‘‘முற்போக்கு எண்ணம்டா அவருக்கு...’’ வக்காலத்து வாங்கினாள் அம்மா.

‘‘மண்ணாங்கட்டி! ஜெனரல் மானேஜர் பைனான்ஸ்! இந்த வேலை அவருக்கு எப்படி கிடைத்தது. சாதி பேரச் சொல்லித்தானே! தனக்கொரு சட்டம். மத்தவங்களுக்கு ஒரு சட்டம். புல்ஷீட்! எல்லாம் வேஷம். தான் கீழ்ச்சாதின்னு தெரியக் கூடாதுண்ணுட்டு....’’ கத்தியபடியே மாடிப்படியேறி தன் அறையின் கதவை, டமார் என அறைந்து மூடிக் கொண்டான்.

எம்.சி.ஹேமரின் பாட்டு சுத்தியில் அடிப்பதுபோல் கேட்கத் துவங்கியது. அது இரவு வெகு நேரம் வரை தொடர்ந்தது.

காலை மாடிக்குப் போய் கதவைத் தட்ட எத்தனிக்க, திறந்துதான் இருந்தது. உள்ளே நுழைந்த சுடலைராஜனின் நாசியை சிகரெட் நெடிதான் தாக்கியது. குப்புற அடித்து, ஒரு காலை மடக்கித் தூங்கிக் கொண்டிருந்தான் வெங்கி.

ஆனால், யாரோ மாடிப்படி ஏறி வருவது தெரிந்து, இப்படி தூங்குவது போல் நடித்தான். சற்று நேர அமைதி.

உச்சந்தலை முடியைக் கோதியதும், ‘கோல்ட் ஃப்ளேக் வாசம். அப்பா!’ என்று வெங்கிக்கு அடையாளம் காட்டியது.

கார் கிளம்பும் ஓசை கேட்கும் வரை அப்படியே இருந்துவிட்டு, எழுந்தவன் கண்களில் அந்த துண்டு சீட்டு பட்டது.

‘இன்று மாலை ஐந்து மணிக்கு அல்சூர் ஏரியில் உன்னை சந்திக்க விருப்பம். அதிகம் புகைக்காதே! அக்கறையில்லா அப்பா...’

என்று கிறுக்கலாய் எழுதி இருந்தது. ஏனோ அப்பாவுடன் சிறுவயதில் போட்டிங் போனது ஞாபகம் வந்தது.

போகக்கூடாது என்று நினைத்துக் கொண்டே, ஏரிக்கரைக்குப் போய் விட்டான். திட்டில் அமர்ந்தான்.... எதிரே இருந்த தமிழ்ச் சங்கக் கட்டடத்தை கவனித்தபடி, சற்று தூரத்தில் மூடி வைத்திருந்த திருவள்ளுவர் சிலையைப் பார்த்தபடி, கரையோரத்தில் இருந்து வரும் நாற்றத்தைப் புறக்கணித்தபடி...

அப்பாவே காரை ஓட்டி வருவது தெரிந்தது. ஏரிப்பக்கம் முகத்தைத் திருப்பிக் கொண்டான். படபடப்பு.

தோளைத் தொட்டார். சற்று நேரத்திற்குப் பிறகு–

“மார்ச் மாசத்திலேயே வெயில் ஆரம்பிச் சுடுது பார்த்தியா?’’ என்று பொதுவாய் ஆரம்பித்து, ஜனத்தொகையிலும் காங்கிரீட் கட்டடங்களினாலும் பெங்களூர் உஷ்ணமாகி வருவதைக் கூறிக் கொண்டே, படகுக்கு அழைத்துச்

அசுரவேகம்

"அடேடே ராம்மா தல்லீ! எக்கட அல்லுடு ராலேனா?"

(அடேடே வாம்மா தாயீ! எங்க மாப்பிள்ளை வர்லியா?) அன்பாக வரவேற்றுக் கொண்டே கேட்டார் வெங்கட்ராஜுலு நாயுடு.

உள்ளே வந்த மகள் வகுளாவைக் கட்டிக் கொண்டாள் அம்மா கஸ்தூரி.

அப்பாவின் கேள்வியால் வகுளாவின் கண்கள் கலங்கின.

மூக்கு சிவந்து விடைத்தது, உள்ளே இருந்து சீறிய கோபத்தைப் பல்லைக் கடித்து முழுங்கினாள்.

'வந்ததும் வராததுமா அழ வேணாமே' - தீர்மானித்தாள்.

"தாத்தா, பாட்டிக்கு நமஸ்காரம் பண்றோம்!"

தோளிலிருந்த டிராவலிங் பையையும், வாட்டர் பாட்டிலையும் களைந்த பேரக் குழந்தைகள் இருவர் காலிலும் விழுந்து நமஸ்கரித்தனர்.

"அமோகமா இருக்கணும்!"

"எழுந்திரும்மா பிரியதர்ஷினி. எழுந்திருப்பா சஞ்சய்!" எழுப்பித் தாத்தா அணைத்துக் கொண்டார்.

"நீ வாம்மா வகுளா!" அழைத்துப் போன அம்மா ஆதரவாக, வகுளாவின் வலது கையை ஆதரவாக அழுத்திப் பிடித்துக் கொண்டாள்.

"ம்மாடி என்னாச்சிம்மா?" அம்மாவின் குரல் கேட்டதும் வெடித்தாள் வகுளா.

'அழுது முடிக்கட்டும்!' அமைதி காத்தாள்.

மெல்ல விம்மல் குறைந்து தலையுயர்த்தினாள் வகுளா.

"ம்மா... அந்த மனுஷன் ரெண்டு மூணு லட்சம் ரூபா ரொக்கம், இல்லன்னா நூறு சவரன் நகையோடதான் வரணும்னு தொரத்திட்டார்மா..." கேவினாள் வகுளா.

"அட பெருமாளே! என்னம்மா இது சோதனை? நல்லா உம் புருஷன் ஏ.சி.ட்டீ ஓ ஆனாலும் ஆனாப்பலே! இப்படியா கலியாணம் பண்ணி பதினாலு வருஷங் கழிச்சும் சீர், பணம் வாங்கியான்னு ஒரு மனுஷன் அலைவான், கஷ்டம்டா..."

தலையிலடித்துக் கொண்டு புலம்பினாள் கஸ்தூரி. வகுளா மனசு ரணமாகி ரத்தங் கசிந்தது.

"முந்தா நா கலியாணத்துக்காகக் கரூர் போயிருந்தோம். அவர் கூட வேலை செய்யற சக ஏ.சி.ட்டீ.ஓக்கு பொண்ணு குடுத்தது கரூர்லேய பெரிய புள்ளி... ஒரே பொண்ணு.. அசத்திட்டாங்க."

"திருச்சி தில்லைநகர்ல மூணு க்ரவுண்ட்ல பங்களா, மாப்பிள்ளை போயிட்டு வரதுக்கு மாருதி 800சிசி ஏ.சி. கார், கைல லட்சத்திப் பத்தாயிரத்தியொரு ரூபா பொட்டிப் பணம். பொண்ணுக்கு ஒரு கிலோ தங்கம், பத்துக் கிலோ வெள்ளிப் பாத்ரம்னு பாக்கப் பார்க்க எங்காளுக்கு ரேங்கிக்கிச்சு."

"ஏற்கெனவே கொரங்கு வேற! இதுல கள்ளையுங் குடிச்சி தேளும் கொட்டிட்டா மாதிரித்தாம் போ!'' எந்தவிதமான உணர்ச்சியும் காட்டாமல் அம்மா திட்டினாள்.

"கலியாண வீட்டில சோறு கூடத் திங்க விடாம விரட்டு விரட்டுன்னு புடுங்கிக்கிட்டு வந்து ஆபீஸ்ல வேலைன்னு பஸ் ஸ்டாண்ட்லயே எறங்கிக்கிட்டாப்பலே..."

வீட்டுக்கு வந்து சாதம் வச்சி ரசம் பண்ணி, அப்பளம் பொரிச்சி சாப்பிட்டுட்டுப் படுத்திருந்தப்ப எழுப்பினார்...

"எந்திரிடி! குடும்பத்துப் பொம்பளைக்கு என்னடி மத்தியானந் தூக்கம்?" இடுப்பில் கிள்ளினான்.

"ம்ச்ச! என்னங்க? இது பட்டப் பகல்லேயே? பசங்க எழுந்துக்குவாங்க...?"

"அடிங்க... மடில போட்டு சரசம் பண்ண எழுப்பலை! எந்திரிடீ நாயே!"

இடுப்பில் ஒரு எத்து எத்தினான் சீனிவாச மூர்த்தி. மழையில் ஊறிப் போன நியூஸ் பேப்பரைப் போல சொத்தென்று விழுந்தாள்.

"தபார்றீ! உன்னியப் போயிக்

இந்த்ராணிராம்

கட்டிக்கிட்டேனே! அதுக்கே நீ உங்க பரம்பரைல எல்லாருமே எனக்குப் பாதபூஜையே பண்ணணும். நான் பெரிய மனுஷன் அதுல்லாம் வேணாம்...''

''என்னிய விட அறிவில, அழகில கொறஞ்ச தடிப் பசங்கள்லாம், காரு, பங்களா, ரொக்கம், கிலோக்கணக்கிலே நகைன்னு பொண்ணு கட்டறான்! நீயும் பாத்தே இல்லை!''

"ம்ம்... ஒரே பொண்ணுக்கு செஞ்சிருக்காங்க! எங்க நைனாதான் இன்னும் ரெண்டு பொண்ணுங்களும் ஒரு பையனும் பெத்து வச்சிருக்காப்பலே.... அவர் அவங்களையும் கரையேத்தணும் பாவா! (மாமா) பெரிய மனசு பண்ணி விட்டுருங்க...'' கைகூப்பி கெஞ்சினாள்.

"சும்மா ஏண்டி... வளவளன்னுப் பேசிக்கிட்டு... நாஞ் சொன்ன நகை பணத்தோட வந்தா எங்கூட பொண்டாட்டியாப் பொழைக்கலாம்... இல்லன்னா... வாழாவெட்டியா... ஒப்பன் வீட்லயே இருக்கலாம் ஜாக்ரதை!''

விரல் நீட்டி எச்சரித்தான் சீனிவாசமூர்த்தி கோபமாய்.

"நானும் ஒண்ணுஞ் சும்மா வரலீங்க...? முப்பது பவுன் நகையோட, பாத்திரப் பண்டம்... இருபதாயிர ரூவா ரொக்கம்னு வந்தவ! மறந்துட்டீங்களா! பத்தாததுக்கு ரண்டு லட்ச ரூபாவுக்கு வட்டி மாதிரி சொளையா மாசம் மூவாயிரம் ரூபா சம்பளத்தோட வந்திருக்கேன்... யோசனை பண்ணிப் பாருங்க!'' - அவிழ்ந்த கூந்தலை அள்ளி முடிந்து கொண்டாள்.

ரப்பென்று சீனிவாச மூர்த்தியின் இடது புறங்க்க அவளின் கன்னத்தில் விளை



யாடிற்று.

"நாயே! சொல்லியாக் காட்டற! எதுத்துக் கிதுத்துப் பேசின? மவனே! ஏறி மெதிச்சிரு வேன். போடி...! போயி காசோட இல்ல நகையோட வந்து சேரு! தெரியுதா! பிளடி பிட்ச்!"

தரையில் எட்டி உதைத்து கோபம் வெளிப்படுத்தினான்.

"இப்பத்தான் தங்கச்சிங்க கலி யாணத்துக்கோசரமும், பாலாஜிப்ரபு மேல் படிப்புக்கோசரமும் பணத்துக் காக... சேலம் வீட்டை விலை பேசிட் டிருக்காங்க. இப்பப் போயி..."

புருஷன் கால்களை கண்ணீரால் நனைத்து வேண்டினாள்.

"சென்டிமெண்ட் காட்ட நீங்களோ! போடீ, இல்லன்னா சேலம் வீட்டை உம் பேருக்கு எழுதி வாங் கிட்டு வாடி! எம் பொண்டாட்டி" தலைமுடியைக் கொத்தாகப் பிடித்துத் தூக்கினான்.

"நீங்க என்னைக் கொன்னாலும் நான் போயி கேக்க மாட்டேன். இப்ப நம்ம சேலம் வித்யா நகர் வீடே எங்க நைனா குடுத்த சீதனங்க! ரெண்டு வருஷம் நம்ம குடும்பத் தையே பராமரிச்சி... நம்ம சம்பளத்தை மிச்சம் வச்சி அந்தப் பணத்தோட... அவரும் பி.எஃப். லோன்லாம் போட்டுக் கட் டிக் குடுத்ததை மறந்துட்டீங்களா?"

"ஆமா பெரிசா செஞ்சிட்டாப்பலே?"

"நம்ம வீட்டுக் கிரகப் பிரவேசத்துல நாயனா கால்ல விழுந்து நமஸ்காரம் பண் ணினப்ப நீங்க சொன்னதை மறந்துட்



டீங்களா?"

"அப்படி என்னாடீ சொல்லிட்டேன்?"

"மாமா என்னோட அம்மா அப்பாவை ஒரே ரூபமா உங்கள்ல பாக்கறேன். நீங்க எனக்கு ஃபாதர்-இன்-லாவா அமைஞ்சது என்னோட பூர்வபுண்ணியம்னீங்களே!"

பழசை ஞாபகப்படுத்தினாள் வகுளா. கையசைத்து அதனை அலட்சியப்படுத் தினான் சீனிவாச மூர்த்தி.

"ஹ! இதுல்லாஞ் சபை மரியாதைக்கு சொல்றது! இதப் போயீ... அது சரி என் னான்றே இப்ப...?"

"உங்க நைனா எத விப்பானோ? அது வீடோ? இல்ல தோட்டமோ இல்ல அக்காத் தங்கச்சிங்களையோ? ஐ டோண்ட் மைண்ட் எனக்கு துட்டு வேணும். ஆமா சொல்லிட் டேன். கெட் லாஸ்ட்!"

தோள் பிடித்துக் கீழே தள்ளி விட்டான். மல்லாக்க கால் பரப்பி வாசலில் சரிந்தாள் வகுளா.

"பொண்ணுங்களை வித்தாவது பணந் தர்றதா? அவனை... அவனை... அனா தைப் பயல் இவ்வளவு ஆடறானா? அனா தைப் பையன்னு சொந்தக்காரங்களே ஒதுக் கினதை மறந்துட்டாப்பலேயா?"

"ஏதோ புத்திசாலி... தட்டிக் குடுத்தா மேல வந்திடுவா. சந்தர்ப்பத்தை உருவாக்கு வோம்னு மாசம் ஆயிரத்தி சொச்சம் சம் பாரிச்சப் பொண்ணைக் குடுத்தா... அடி மடியிலேயே கை வைக்கிறானா? படவா!" பொரிந்து தள்ளினாள்.

"எனக்கு ஒண்ணுமே புரியலைம்மா!"

மடியில் தலை புதைத்து அழத் துவங்கினாள் வகுளா.

"நைனாட்ட நான் பேசறேன்! நீ போய்க் குளிம்மா" மகளின் தோளைத் தட்டி சமா தானம் பண்ணினாள்.

சேலம் வேளாண்மைத் துறை இணை இயக்குனராக இருந்த வெங்கட்ராஜுலு காண்ட்டீனில் செக்கச் செவேல் என்று ஒற் றைத் திருமண்ணுடன் இருந்த சீனிவாச மூர்த்தியை சந்தித்தார்.

ஒருவேளை தென்கலை அய்யங்காரோ? - மனசு கேள்வி கேட்டது. எதிர் வீட்டு வாசு தேவன் கமர்ஷியல் டாக்ஸ் ஆஃபீஸ் சூப்ரண் டண்ட் அவரை மெல்ல விசாரித்தார்.

"நல்ல பையன் சுவாமி... ஒரு கெட்ட பழக்கங் கெடையாது. பீடி வெத்தலை பாக்கு, சிகரெட்டு, குடிப் பழக்கம், பொம்பளை சகவாசம் ஏதுங் கெடையாது..."

"சரியா்ன ஐ.எஸ்.ஐ. மாப்பிள்ளை! கூடப் பொறந்தவங்க இல்லை! அப்பன் ஆத்தா



கேரட்டிலுள்ள சத்து முழுவதும் அதன் தோலுக்கு அடியில்தான் இருக் கிறது. அதனால் எப்போதும் தோலைச் சீவாதீர்கள்.

- கலா

இல்லே! சொந்த சித்தப்பாவோட ஆதரவில வளர்ந்தவன். உம்ம பொண்ணு குடுத்து வெச் சது. மாமனா, மாமியா, நாத்தி, கொழுந்தன் பிராப்ளமே நஹி! நஹி!" தொடை தட்டிச் சிரித்தார் வாசு.

"எந்த ஊர்க்காரரு?"

"விழுப்புரம் பக்கத்தில கிராமம். நா வேண்ணா ஜாதகம் வாங்கித் தர்றேன்."

அருமையான மாப்பிள்ளைடி விட்ரு வனா?ன்னு முயற்சி செய்து சுபயோக சுப தினத்தில் மகளைக் கட்டிக் கொடுத்தார். பி.ஏ. பி.எட்.டான வகுளா வெறும் பி.ஏ. அஞ்சல் வழிக் கல்வி படித்துக் கொண்டிருந்த சீனிவாசமூர்த்திக்கு மனைவியானாள்.

நினைக்க நினைக்க நாயுடுவுக்கு மனசு கனத்துப் போனது. மொட்டை மாடியிலிருந்த இரும்பு ஊஞ்சலை ஆட்டிக் கொண்டிருந்தார் வெங்கட்ராஜுலு. அருகே வெற்றிலை மடித்த மனைவியை அழைத்தார்.

"கச்சும்மா! இப்ப என்னம்மா பண்றது?"

"வர்ற சனி ஞாயிறுல நடுவிலவளும், சின் னவளும் வர்றாங்க... அதோட பையனையும் வரச் சொல்லித் தகவல் அனுப்பிச்சிருவோம்! எல்லாரையும் கலந்து ஒரு முடிவெடுப்போம். போய்த் தூங்குங்க. யோசிப்போம்."

தாம்பூலத்தை நீட்டினாள். அவர் வாங்கிக் கொண்டார்.

"ரண்ட ரண்ட" (வாங்க... வாங்க) சேவித்த படி வரவேற்ற வெங்கட் ராஜுலு உள்ளே பார்த்து அழைத்தார்.

"அம்மாடீ! கச்சும்மா! ஒரு ஒச்சி உண்டேரு சூடு! சீக்கிரம் ராம்மா! மன கோவிந்தபாஷ்யங் காரு ஒச்சி உன்னாரு!"

தலைப்பைப் போர்த்திக் கொண்டு உள்ளேயிருந்து தாயும் மகளும் வந்து வணங் கினர்.

"கோவிந்த காரு! இதி நா டாட்டர் வகுளா. ட்ரிச்சி கவர்மெண்ட் ஹையர் செகண்ட்ரி ஸ்கூல்லோ பி.ஜி. அசிஸ்

டெண்டுகா உந்தி! பி.ஏ. இங்கிலீஷ் லிட்ரேச்சர். பி.எட். கூட."

அறிமுகம் முடிந்ததும் வகுளா கைகுவித்தாள்.

"நம்ம கோதா லெக்ஷ்மிக்கு ஆம்பிளைப் பையன் பொறந்து இருக்கு. வர்ற வெள்ளிக்கிழமை தாசுலு கல்யாண மகாலில் தொட்டி லிடறோம். எல்லோரும் வந்து விருந்து சாப்பிட்டுட்டு வரணும்" என்றார்.

"திருமதி... வகுளா.. எம்.ஏ., எம்.எட்.," என்ற கோவிந்த பாஷ்யம் வெங்கட்ராஜுலுவைப் பார்க்கவும்... அவர் தொடர்ந்தார்.

"ஒய்ஃப் ஆஃப் எம். சீனிவாசமூர்த்தி. ஏ.சி.ட்டி.ஓ. (ரூரல்) திருச்சி செகண்ட் திருச்சி" என்று சொல்லச் சொல்ல எழுதிக் கொண்டார்.

வெள்ளித் தட்டில் மஞ்சள் குங்குமம் வைத்து சின்ன வெள்ளிக் கப்பில் டைமண்ட் கல்கண்டு நிறைத்து மேலே அழைப்பிதழை வைத்து நீட்டினார்.

"அவசியம் கொழந்தைங்களையும் அழச்சிட்டு வந்திடும்மா."

பரஸ்பர வணக்கங்களைத் தொடர்ந்து வந்தவர்கள் கிளம்பிப் போனார்கள். அழைப்பிதழைப் பிரித்து படித்த வகுளா கத்தினாள்.

"என்னம்மா இது புருஷன் பேரு வேறயாயிருக்கு! கோதாலக்ஷ்மிய டாக்டர் ரெங்கராஜன்றவருக்கில்ல கலியாணம் பண்ணித் தந்தாங்க. சேலம் அம்மாப்பேட்டை செங்குந்தர் கலியாண மண்டபத்துல நடந்த கல்யாணத்துக்கு நாங்க வந்திருந்தோமே?" அலறினாள் வகுளா.

"இப்ப என்னடான்னா மோகன கண்ணன் எம்.கே. டெக்ஸ்டைல்ஸ் மதுரைன்னு போட்ருக்கு? என்னம்மா ஒரேயடியா தலை சுத்துது!"

"மோகன கண்ணன் கோதாலெக்ஷ்மியோட ரெண்டாவது புருஷன்! அவங் கொழந்தைதான் இது!" அம்மா அழைப்பிதழை உள்ளங்கையில் தட்டிக் காட்டினாள்.

"டாக்டர் ரெங்கராஜனை கோதாலெக்ஷ்மியோட வீட்லதான், மேல் படிப்புக்கு லண்டன் அனுப்பிச்சாங்க! ரெங்கராஜுலு லண்டன் லந்து வந்ததும், தனியா நர்சிங்ஹோம் வச்சிக்க மாமனார்ட்ட பத்து லட்சம் கேட்டாப்பலே!"

"அடப்பாவி.... அப்புறம்?"

"பணந்தராததாலே அடிச்சி ஒதச்சி, கோதா லெக்ஷ்மியோட இடுப்புல, மார்ல, தொடைல சிகரெட்டால சூடு வெச்சி, டாக்டர் சித்ர வதை பண்ணினான். கஷ்டம் பொறுக்காத கோதை ஆன்ட்டி டவுரி கேஸ் போட்டு டாக்டருக்கு கவர்மெண்ட் வேலை போச்சி! கடைசியா டைவர்ஸ் வாங்கிட்டாங்க..."

நிறுத்தி நிதானமாக பெருமூச்செறிந்த அம்மா வெளியே வெறித்தாள்.

இப்பக் கோதாலெக்ஷ்மிய மதுரைல ஒரு நூல் மில் ஓனருக்குக் கொடுத்தாங்க. அந்தக் கொழந்தைக்குதான் தொட்டில் விழா. அழைப்பு. பாத்தியா காலம் எவ்வளவு மாறிடிச்சி!"

"அம்மா!" அம்மாவின் தோளில் சரிந்து சாய்ந்து அழுதாள்.

"ம்ம் பாப்பாத்தி... உனக்கு எத்தினிப் பசங்க?"

"நாலு புள்ளைங்க தாயீ! பெரியவ ஜெய இந்திரா, அடுத்தவன் ராமச்சந்திரன் மூணாவது கவிதா, கடைசியான் ராஜீவ்காந்தி. இதுங்க ஏழாவது, அஞ்சாவது, மூணாவது எல்.கே.ஜி. படிக்குது வகுளாம்மா!"

"உம் புருஷன் என்ன பண்ணறான்?"

"அவன் பஞ்சாயத்துல தண்ணி எடுத்து உடறவன். எப்பப் பாத்தாலும், தண்ணீ, மூணு சீட்டு, பொம்பளை தொடுப்புன்னு அலையறவன்மா! தெனம் நான் வேகாத வெயில்ல களைவெட்டி சம்பாரிக்கற காசையும் புடுங்கிக்குவான்மா... பரதேசிப் பய..."

"அதான்மா அவனை விட்டுட்டு அப்பன்



நான் கோகுலாஷ்டமிக்கு வெல்லச் சீடை செய்த போது சிறிது நீர்த்து உருட்ட முடியாமல் இருந்தது. என்ன செய்வது மாவும் இல்லையே என மனதிற்குள்ளே நினைத்து மிகவும் அப்செட் ஆகி என்ன செய்யலாம் என யோசித்தேன். ஜாமூன் மிக்ஸ் ஒரு பாக்கெட் இருந்தது. அதை அந்த மாவுடன் கலந்து சீடை போட்டேன். மிக மிருதுவான, கலரான வெல்லச் சீடை மிகப் பிரமாதமாக இருந்தது. டேஸ்ட் ஆளை அசத்தி விட்டது.

- திருமதி. வாசன்





மிருதுவாக மெத்தென்று வெல்லச் சீடை வேண்டுமா? மாவை சிவக்க வறுத்து ஆற வையுங்கள். நன்றாக ஆறிய மாவில் சிறிது சிறிதாக தண்ணீர் தெளித்து ஈரப்படுத்துங்கள். பிறகு பாகை எடுத்து மாவில் சேர்த்துப் பதமாய் எடுத்து வைத்து மறுநாள் செய்யுங்கள். பல்லில்லாதவர்கள் கூட சாப்பிடலாம். அடுத்த ஸ்ரீ ஜெயந்தி வரை காக்க வேண்டாம். டிபனுக்கு ஒரு நாள் செய்து பாருங்களேன்.

- ஜி. இந்திரா

வூட்டுக்கே வந்துட்டேன். நானா சம்பாரிச்சு எம் பசங்களை, வளத்திக்கறேனிட்டு வந்துட்டேன்..."

"அப்ப உம் புருஷன் உங்கூட இல்லியா?"

"இல்லை. நான் போடா ஜாட்டன்ட்டு வந்துட்டேன். உடம்பில வலுவிருக்கற மட்டும், ஒழச்சாத்தாம்மா சோறு! என் ஒழைப்பிலேயே தின்னிட்டுத் தெனமும் திட்டு அடி ஒதைன்னா, அந்தப் பொழப்பே வேணாம்னிட்டு வந்திட்டேன்..."

"நானே ஒழச்சி பொங்கித் திங்க... இந்த ஆம்பிள்ளை வேண்டாமே! அறுத்துக் கட்டினா இன்னொருத்திக்குத் தாலி கட்டி கூட்டிட்டு வந்து ராவடி பண்ணுவான். இந்தத் துன்பந் தேவையா?"

"பாப்பாத்தி... நான் என்ன சொல்றன்னா..." இழுத்தாள்.

"ம்மா நான் ஏழை, படிக்காதவ, என்னால கோர்ட்டு பஞ்சாயத்துன்னு மானத்தைக் கூறு போட முடியாது. காலுக்கு ஒத்து வர்லியா.. கழட்டி எறிஞ்சாச்சு செருப்பை."

பாப்பாத்தியின் வார்த்தைகள் வகுளாவின் இருட்டான மனசில் நம்பிக்கை வெளிச்சம் ஏற்றியது.


"அம்மா! நைனா! எம் பிரச்னைக்கு முடிவு எடுத்துட்டேம்ப்பா!"

"என்னம்மா சொல்றே நீ?" பெற்றோர்கள் அதிர்ந்து போயினர்.

"கோதாலெக்ஷ்மி மாதிரி நாம் பணக்காரங்க இல்ல. அதே நேரம் சமூகத்தோட கீழ்த்தட்டிலருக்கற பாப்பாத்தியோட மெறாட்டு நாயமும் பேசல!"

"சீர்ப்பணம் வேணும் நகை வேணும்னு, டவுரிப் பணம் வேணும்னு மிஸ்டர் சீனிவாச மூர்த்தி எழுதின லெட்டர்ஸ் எல்லாத்தையும் வச்சி ஆன்ட்டி டவுரி செல்லுல கம்ப்ளயிண்ட் பண்ணப் போறேன்! அந்தாளோட வேலையப் புடுங்கி... தெருத் தெருவா அலைய விடப் போறேன்..."

"முடிஞ்சா ஒரு கை கொடுங்க! இல்லன்னா நானே பாத்துக்கறேன்! விட்ருங்க!"



சென்ற இதழில்...

ராமுவும் அவர் மனைவி ஜெயாவும் புடைவை வாங்கக் கடைக்குப் போகிறார்கள். அங்கே ராமுவின் பால்ய சிநேகிதி காயத்ரியைச் சந்திக்கின்றனர். காயத்ரி செல்வத்தின் உச்சியில் இருப்பவள். கணவர் பெரிய பதவியில் இருப்பவர். ராமுவையும், ஜெயாவையும் ஒரு நாள் சாப்பிட அழைக்கிறாள். அதை யேற்று ஒருநாள் இருவரும் காயத்ரி வீட்டிற்குப் போகிறார்கள். ஜெயாவிடம் காயத்ரி சின்ன வயதில்தான் ராமுவைப் பார்த்து மோகமாகிப் போனதைத் தன்னை மறந்து பேசுகிறாள். ராமு திகைக்கிறார்...

என் மனைவியின் முகத்தை நோக்கக் கூசினேன்.

''பாரேன், ஜெயா! ஒருநாள் சாயந்திரம் இவன் வீட்டுக்குப் போயிருந்தேன். ஒரு

''அம்மா வந்தால் சொல்லி அனுப்பு. வந்து பார்க்கறேன். நமஸ்காரம் பண்ணி, ஆசீர்வாதம் வாங்கிக்கணும். அப்புறம் கேளு, ஜெயா! இவன் அம்மா என்னைப் பார்த்து, 'ஒரு அடை சாப்பிடேண்டீ, காயத்திரி!'ன்னார். சரி, மாமினு சொல்லிட்டு உட்கார்ந்தேன். அப்ப இவன் தங்கை லக்ஷ்மி என்கிட்ட, 'எங்க அண்ணாவுக்கு அடைன்னா ரொம்பப் பிடிக்கும்'னாள். 'எனக்கும்தான்'னு நான் சொன்னேன். 'அப்புறம் என்ன பிடிக்கும்?'னு லக்ஷ்மி கேட்டாள். நான் திரும்பி ராமிடம், 'உனக்கு என்னென்ன பிடிக்கும்?'னு கேட்டேன். இவன், 'கதை கேட்கப் பிடிக்கும், கதை படிக்கப் பிடிக்கும், கதை சொல்லப் பிடிக்கும்'னான். 'எனக்கும் அதெல்லாம் பிடிக்கும்'னு நான் சொன்னேன். அப்புறம்னு கேட்டாள் லக்ஷ்மி. 'அப்புறம் ராமையும் பிடிக்கும்'னேன். லக்ஷ்மியும் அவள் அம்மாவும் சிரியோ சிரின்னு சிரிச்சாங்க. எதுக்கு சிரிக்கறாங்கன்னு எனக்குப் புரியல்லே. ராம் பாட்டுக்கு அடை தின்னிட்டு இருந்தான். இல்லையா, ராம்? உனக்கு ஞாபகம் இருக்கோ?''

தலையை அசைத்து வைத்தேன்.

இளைப் பருவத்திலே...


நாள் என்ன, தினமும் சாயந்திரம் ஆச்சுன்னா, இவன் வீட்டுலே இவன் கூடத்தான் இருப்பேன். அன்னிக்கு இவனோட அம்மா சமையல் அறையிலே உட்கார்ந்து அடை வார்த்திட்டு இருந்தார். அது எப்படி அடை வார்த்திட்டு இருந்தார்னு அத்தனை ஞாபகம் வச்சிட்டுச் சொல்றேன்னு கேட்கறியா? ஞாபகம் நல்லா வச்சிட்டுத்தான் சொல்றேன். கேளு'' திரும்பி என்னைப் பார்த்தாள். ''ராம், அப்பா, அம்மாவை விசாரிக்க மறந்துட்டேனே?'' என்றாள்.

''அப்பா இல்லை, காலமாயிட்டார். அம்மா, லக்ஷ்மி கூட பம்பாயில் இருக்கார்.'' என் குரலில் சுருதி இறங்கி பிசிறு தட்டுவது எனக்குத் தெரிகிறது.

கையிலிருந்த பத்திரிகையை டீப்பாய் மீது வைத்து விட்டு, கெஞ்சலாகப் போதுமே என்பது போல காயத்திரியைப் பார்த்தேன். அவள் ஜெயாவை அணைத்தபடி சாய்ந்து உட்கார்ந்திருந்தாள். பழைய சின்னப் பெண்ணாகவே மாறி இருந்தாள். அந்தஸ்து, ஆடம்பரம், பெரிய இடத்துத் தோரணை ஆகியவை எல்லாம் சென்ற இடம் தெரியவில்லை. பழைய காயத்திரியாகவே ஆகி விட்டிருந்தாள்.

தொடர்ந்து சொல்லத் தொடங்கினாள். ''அப்ப இவனோட அம்மா கேட்டார், 'ஏண்டி காயத்திரி, எங்க ராம்மைக் கல்யாணம் பண்ணிக்கிறியா?'னு. நான், 'சரி, மாமி'னு உரக்கவே வாயில் அடை விள்ளலோடு சொன்னேன்.'' காயத்திரி நகைத்

குறுநாவல்



தாள். சற்று நாணம் கலந்து இருந்தது நகைப்பில்.

காயத்திரியின் அணைப்பை இதமாக அனுபவித்தபடி ஜெயா என்னைப் பார்த்துச் சிரித்தாள். அச் சிரிப்பில் கபடு இல்லை. காயத்திரியோடு சேர்ந்து இவளும் சிறுமி ஆகி விட்டாளோ என்று தோன்றியது எனக்கு.

"இதெல்லாம் இப்ப இவனைப் பார்த்ததும் ஞாபகத்துக்கு வருது. இப்படிப் பழைய சந்தோஷ நிகழ்ச்சிகளை நினைச்சுப் பார்த்து திரும்பவும் ஆனந்தப்படறது தான் வாழ்க்கைன்னு கூட தோணுது."

ஜெயா கேட்டாள் : "ஏன்? உங்க சந்தோஷத்துக்கு என்ன குறைச்சல்? அரண்மனை மாதிரி பங்களா. வீட்டுக்காரருக்குப் பெரிய உத்தியோகம். கைகொள்ளாத வருமானம். தங்கமான ரெண்டு குழந்தைகள்; ஆஸ்திக்கு ஒண்ணு, ஆசைக்கு ஒண்ணு. கூப்பிட்ட குரலுக்கு வந்து எதிரே நிற்க ஆள், அம்பு, எடுபிடி. சந்தோஷமாகத்தானே இருக்கணும்?"

"உம்? அதெல்லாம் சந்தோஷம்னா சொல்றே? இல்லே, ஜெயா! தேவையானது இருக்கறதுலே சந்தோஷம் கிடையாது. நிம்மதி இருக்கும். நிம்மதி, அமைதி இதெல்லாமே சந்தோஷம் இல்லே. சந்தோஷங்

- ம.நா.ராமசாமி

கிறது எட்டிப் பிடிக்கிறதுலே இருக்கு. முயற்சிலே இருக்கு. முயற்சி செய்து அடைஞ்சிட்டோம்னா, சந்தோஷம் போயிடறது. நம்மை தேடிட்டு சந்தோஷம் வரக் கூடாது. நாம் அதைத் தேடணும். என் வீட்டுக்காரர் என் மேலே ரொம்பப் பிரியமாத்தான் இருக்கார். என்னைத் தவிர வேறு ஒருத்தியை அவர் நினைச்சுப் பார்க்கறது இல்லேன்னு எனக்குத் தெரியும். இத்தனைக்கும் ஊர் ஊராப் பறக்கறவர். நாடு விட்டு நாடு போறவர். ஒட்டல், லாட்ஜ்னு தங்கறவர். வழி தவறிப் போறதுக்கு நிறைய வாய்ப்பு இருக்கு. ஆனால் அவர் அப்படி தவர்றது இல்லே. கட்டுப்பாடு இருக்கு. கட்டுப்பாடு இல்லாமல், தளர்ந்த வாழ்க்கை வாழறது உபயோகமில்லேங்கறது அவர் எண்ணம். ரெண்டு புத்தகம் அவர் பெட்டிலே எப்போதும் இருக்கும். ஒண்ணு கீதை, இன்னொண்ணு திருக்குறள். என்னாலும் அவரை விட்டு இன்னொரு ஆணை நினைச்சுப் பார்க்க முடியாது. ஏன் இதைச் சொல்றேன்னா, நான் ராம்மை உன்கிட்ட இருந்து பிரிச்சுடுவேனோன்னு நீ பயப்படத் தேவையில்லைனு சொல்றதுக்காகத்தான்.''

''ஐயையோ! என்ன வார்த்தை சொல்றீங்க, அக்கா! அப்படி நான் நினைக்கவே இல்லே.''

காயத்திரியின் அணைப்பில் ஜெயா நன்கு ஆழ்ந்திருப்பது புரிந்தது. ஒரு பெரிய மனுஷியின் அணைப்பு அது. விடுபட்டால் திரும்பக் கிடைக்குமோ என்பதான அணைப்பு. மனதுக்கும், உடலுக்கும் இதம் தரும் அணைப்பு.

இந்த அணைப்பு, பிணைப்பு நல்லதுக்குத்தானா? என் மனம் எண்ணமிட்டது.

''அப்புறம் கேளு, ஜெயா! உன்கிட்டச் சொல்லாமல் வேறு யார்கிட்டச் சொல்லி ஆனந்தப்படறது? பள்ளிக்கூடத்துலேருந்து திரும்பி வீட்டுக்குப் போய் புத்தகப் பையை எறிஞ்சுட்டு, யூனிஃபார்ம், ஷூ இதையெல்லாம் கழட்டிப் போட்டுட்டு, ஸ்கர்ட்டை மாட்டிட்டு, அம்மா தர ஹார்லிக்ஸை ருசி பார்க்காமல் மடக், மடக்குனு குடிச்சுட்டு இவனைப் பார்க்க இவன் வீட்டுக்கு ஓடி வருவேன். இவன் ஸ்கூல்லேருந்து வந்திருக்க மாட்டான். தவிச்சிட்டு காத்திட்டிருப்பேன். வாடி, விளையாடலாம்பாள் லக்ஷ்மி. போடி, நான் வரல்லேம்பேன் எரிச்சலோடு. லக்ஷ்மிக்குக் கூட சித்தே பொறாமையாக இருக்கும். பின்னே இருக்காதா? சொந்த அண்ணன். அவள் கூட சிரிச்சு, பேசி, விளையாடாமல் எங்கிருந்தோ வந்த என்கூட அவன் ஆடி, ஓடி, பாடறான்னா, ஒரு சின்னப் பொண்ணுக்குப் பொறாமையா இருக்காதா? 'எங்க அண்ணாவுக்காகத்தானே காத்திட்டு இருக்கே?'னு அடிக்கடி கேட்பாள். 'ஆம்பளைப் பசங்க கூட விளையாடக் கூடாதடீ!' என்பாள்.

''இவன் ஸ்கூல் ஆத்தங்கரைக்கு அந்தப் பக்கம் இருந்தது. ஆறு மணி சுமாருக்கு மத்தப் பசங்களோட பேசிச் சிரிச்சிட்டு, ஆடி அசைஞ்சு வருவான். இவனைக் கண்டதும் எனக்கு நிலை கொள்ளாது. ஓடிப் போய் நடுத் தெருவுலே இவனைக் கட்டிக்குவேன். வீதி, வாசல், தெருமுனைலே நிற்கறவங்க, செல்றவங்க நின்னு கன காரியமா இதை வேடிக்கை பார்ப்பாங்க. பார்த்துச் சிரிப்பாங்க. எதுக்குச் சிரிக்கிறாங்கங்கறது எனக்குப் புரியாது. வாயைத் திறந்து, அண்ணாந்து இவன் முகத்தைப் பார்ப்பேன். கடுகடுன்னு இருக்கும். நான் என்ன தப்பு செய்தேன்னு தோணும். கையைப் பிடிச்சிட்டு வீட்டுக்கு வருவான். தனியா ரகசியமா ஒருநாள் சொன்னான். 'காயத்திரி, நடு வீதிலே அப்படி ஓடி வந்து நீ என்னைக் கட்டிக்காதே. என் ஃப்ரெண்ட்ஸ் எல்லாரும் நான் உன்னை காதல் பண்ணறேன்னு சொல்லி கேலி பண்ணறாங்க'ன்னு சொன்னான். என்னதான் இவன் சொல்லட்டுமே, எல்லாத்தையும் மறந்துடுவேன். மறுநாளும் ஓடிப் போய் நடுவீதிலே இவனைக் கட்டிப்பேன்.''

ஜெயா என்னைப் பார்த்தாள். காயத்திரியும் அவளும் ஒரு கட்சி போலவும், நான்

பூண்டுப் பொடி 3

10 பல் பூண்டு, 1 கரண்டி வேர்க்கடலை, 2 பச்சை மிளகாய், ஒரு துண்டு இஞ்சி வைத்து அரைத்து எடுத்த விழுதை ஒரு ஸ்பூன் எண்ணெய் விட்டு வாணலியில் வதக்கி எடுங்கள்.

– கீதா

எதிர்கட்சி என்பதாகவும் நினைக்கத் தோன்றியது.

"அப்பாவும் அம்மாவும் எப்பவாவது சினிமாவுக்குப் போவாங்க. சினிமாக் கொட்டகை ஆற்றுக்கு அக்கரையில் இருந்தது. மாட்டு வண்டிலே போவாங்க. என்னையும் அழைச்சிட்டுப் போறோம்னு சொல்லுவாங்க. வரல்லேன்னு சொல்வேன். லக்ஷ்மி வீட்டுலே இருக்கேன், சினிமா விட்டதும் வந்து கூட்டிட்டுப் போங்கம்பேன். ராத்திரி பத்து மணிக்கு அப்பாவும் அம்மாவும் வண்டிலே வந்து, என்னை இவன் வீட்டுலேருந்து அழைச்சிட்டுப் போவாங்க. ஆனா, ராம், லக்ஷ்மி வீட்டுலே சினிமாவுக்குப் போனாங்கன்னா, அவங்க கூடப் போவேன். தரை டிக்கெட் வாங்கிட்டு உட்காருவோம். அந்த சந்தோஷம் திரும்பி வராது."

"காயத்திரி, உன்... உங்க..."

"சொல்லு, ராம்!"

"உன் அப்பா, அம்மாவைப் பத்தி விசாரிக்கவே நான் மறந்துட்டேன்."

"அப்பா அம்மா இல்லே. ஒரு ஆக்ஸிடெண்ட்லே போயிட்டாங்க. இன்ஷ்யூரன்ஸ், காம்பன்சேஷன், கிராஜுவிடி, பிராவிடண்ட் ஃபண்டுனு நிறைய பணம் வந்தது. அதை வச்சுத்தான் இந்த வீட்டைக் கட்டினோம். ஒரே நாள்லே நான் அநாதை ஆயிட்ட மாதிரி தோணித்து. இவர்தான் தேறுதல் ரொம்பச் சொன்னார்."

மௌனம் நிலவியது. எதிரே சுவர் கடியாரம் மணி பதினொன்று என்றது.

"அது இருக்கட்டும். இதைக் கேளு" காயத்திரி கணநேர கவலை மூட்டத்திலிருந்து மீண்டு உற்சாகம் அடைந்ததாகக் காணப்பட்டாள். கரும்பச்சை சேலை, சோளி தாமரை இலைகளாகவும், அவளுடைய முகம் தாமரை மலராகவும் தோன்றின. தங்க ஃப்ரேம் மூக்குக் கண்ணாடிக்குப் பின்னே அடர்த்தியாக பூசிய மையுடன் கருவண்டுக் கண்கள்.

"ஒருநாள் என் அப்பாவுக்கு ரொம்பக் கோவம் வந்துடுத்து. அப்படி ஒரு கோபம் வந்து நான் பார்த்தது இல்லே. அந்த கோவத்துலே அப்பா கத்தினார். 'அது என்ன அந்த பையனோட அப்படி குலாவல்? வீட்டுலே இருக்கறதே இல்லே. பாடம் படிக்கிறது இல்லே. இனிமே அவன் வீட்டுக்கு நீ போகக் கூடாது'ன்னு தடுத்தார். வாசல் கதவைத் தாழ்ப்பாள் போட்டுட்டார். இருக்காதா பின்னே? ஒரே பெண். கொஞ்சணும்னு ஆசை இருக்கும். இப்படி வீட்டுலே தங்காமல் இவன் வீட்டுலேயே பழியாக் கிடந்தேன்னா, எந்த அப்பாவுக்குத்தான் கோவம் வராது?

"போகத்தான் போவேன்னு அடம் பிடிச்சேன். அழுது ஆகாத்தியம் பண்ணினேன். ரெண்டு நாள் பள்ளிக்கூடத்துக்குப் போகல்லே. அப்பா ஆபீஸ் போற போது அம்மாகிட்ட கதவைத் தாள் போட்டுக்கச் சொல்லிட்டுப் போனார். நடுவுலே ராம் வந்து கதவைத் தட்டி இருக்கான். என்னை அவன் பார்க்க வேண்டாம்னு சொல்லி அம்மா அனுப்பிச்சுட்டாள். சாப்பிட மாட்டேன்னேன். அப்பா மசியல்லே. எனக்கு ஜுரம் வந்துடுத்து. நூத்தி மூணு, நூத்தினாலு டிகிரி ஏறிடிச்சாம். ஸ்மரணை தப்பி, 'ராம், ராம்'னு அனுமார் மாதிரி ராமஜெபம் பண்ண ஆரம்பிச்சிட்டேனாம். டாக்டர் வந்து பார்த்திருக்கார். மருந்து கொடுத்திருக்கார். ஜுரம் இறங்கல்லே. இறங்கினாலும் திரும்பவும் ஏறிடுத்தாம்..."

"பாக்கியை நான் சொல்றேன்" என்றேன். மகளிர் இருவரும் என் பக்கம் திரும்பினர்.

"அன்னிக்கு ராத்திரி ஒம்பது, ஒம்பதரை மணிக்கு இவள் அப்பாவே எங்க வீட்டுக்கு வந்தார். வந்து, அப்பா கூட ஏதோ பேசினார். நான் உள்ளே படிச்சிட்டு இருந்தேன். அப்பா என்னைக் கூப்பிட்டார். போனேன். இவளோட அப்பாவும் கூட நின்னுட்டு இருந்தார். அப்பா சொன்னார், 'காயத்திரிக்கு உடம்பு சௌகரியமில்லையாம். போய்ப் பார்த்து அவளுக்குத் தேறுதல் சொல்லிட்டு வா''ன்னார். உள்ளே போய் ஒரு காகிதத்துலே விபூதியை வச்சு மடிச்சுக்

கொண்டு வந்து கொடுத்து, 'இதை அந்தக் குழந்தை நெத்தியில் இட்டு, வாயிலேயும் கொஞ்சம் போடு'ன்னார். அந்த பொட்டலத்தை வாங்கிட்டு இவள் அப்பா கூடப் போனேன். அவர் என் கூடப் பேசல்லே. எனக்கும் கோவம். நானும் பேசல்லே. காயத்திரியை என்னிடமிருந்து பிரிச்சவங்களோட எனக்கு என்ன பேச்சுன்னு நான் நடந்தேன். வழி எல்லாம், 'சுவாமி, என் காயத்திரியைக் காப்பாத்து, காப்பாத்து'ன்னு ஜெபம் பண்ணிட்டே போனேன்.

''இவள் கண்ணைத் திறக்காமல் கிழிச்சுப் போட்ட வாழை நாரா கட்டில்லே படுத்திட்டு இருந்தாள். எனக்கு துக்கம் தொண்டையை அடைச்சது. இவளோட அம்மா பக்கத்துலே நின்னு, 'காயத்திரி, யாரு வந்திருக்கான், பாரு'ன்னார். இவள் கண்ணைத் திறக்கல்லே. நான் சொன்னேன்,'காயத்திரி, இதோ பாரு. நான் ராம் வந்திருக்கேன். கண்ணைத் திற'ன்னேன். அசஞ்சு கொடுத்தாள். மெள்ள கண்ணிரண்டையும் திறந்தாள். கையை உசத்தப் பார்த்தாள். முடியல்லே. கண் ரெண்டுலேயும் தண்ணி வந்தது. அப்படியே குனிஞ்சு அவளைக் கட்டிணுட்டேன்.''

ஒருவித ஒலி வந்தது. காயத்திரியை நோக்கினேன். சேலைத் தலைப்பால் முகத்தை மூடி இருந்தாள். விம்மல். உடல் குலுங்கியது.

''என்ன, அக்கா, இது? இப்படி உணர்ச்சிவசப்படலாமா? சந்தோஷமா பேசிச் சிரிச்சு இருந்துட்டுப் போகலாம்னு வந்திருக்கோம், நீங்க இப்படி அழுதா என்ன பண்ணறது?''

''அழணும், ஜெயா! நான் அழணும். இது துக்கத்துனாலேயோ துன்பத்துனாலேயோ அழற அழுகை இல்லே. ஒருத்தர்கிட்ட நாம் பிரியம் காட்டினால் கூட நம்ம அப்பா அம்மா அந்தப் பிரியத்தை எப்படித் தடுக்கப் பார்க்கறாங்கிறதை எண்ணிப் பார்க்கற போது அழுகை வரது. அன்பு, பிரியம், நட்பு இதெல்லாம் எதுக்கு இருக்கு?''

''நீங்க என்னன்னா, பழசையெல்லாம் கிளறி விட்டுட்டு'' ஜெயா என்னிடம் சொன்னாள்.

''சரி. நான் ஏதும் சொல்லல்லே.''

''ராம்மை நீ ஏன் கோவிச்சுக்கிறே, ஜெயா! அவன் சொல்லட்டும், நீ சொல்லு, ராம்! அழுகை உணர்வும் சந்தோஷம் போல இன்னொரு உணர்ச்சிதான். அதையும் கொட்டித் தீர்த்திட்டால்தான் மனசுக்கு நிம்மதி கிடைக்கும். நீ சொல்லு, ராம்!''

ஜெயாவை நோக்கினேன்.

''சொல்லுங்க'' என்றாள் அவள் புன்னகையுடன். கைகள் காயத்திரியைத் தழுவி இருந்தன.

தொடர்ந்தேன். ''கொஞ்ச நேரம் இவளைக் கட்டிப் பிடிச்சிண்டு இருந்துட்டு நிமிர முயன்றேன். இவள் உடலானா கொதிக்கிறது. என்னால தாங்க முடியல்லே. என் கழுத்தைக் கட்டிட்டு இவள் விட மாட்டேங்கிறாள். 'காயத்திரி, விபூதி கொண்டு வந்திருக்கேன். நெத்திலே இடறேன், விடு'ன்னேன். கையைத் தளர்த்தினாள். நிமிர்ந்து காகிதப் பொட்டலத்தைப் பிரிச்சு, சுவாமி பேரைச் சொல்லி, 'என் செல்வத்தைக் காப்பாத்து'னு நெத்திலே விபூதியை இட்டேன். வாயைத் திறக்கச் சொல்லி சிமிட்டா விபூதியை வாயில் போட்டேன். பாக்கியை இவள் தலையில் தூவினேன்.

''இவள் அம்மா ஹார்லிக்ஸ் கலந்து கொண்டு வந்து கொடுத்தார். டம்ளரை வாங்கி நானே கொஞ்சம் கொஞ்சமா இவளோட வாயிலே விட்டேன். சாப்பிட்டாள். வாயைத் துடைச்சு விட்டேன். என்னைப் பார்த்து லேசாச் சிரிச்சாள். ரெண்டு கையையும் உசத்தி நீட்டினாள். அந்த கைகளுக்குள்ளே அடங்கி அப்படியே படுத்தேன். இவள் உடம்பானா கொதிக்குது. பொறுத்திட்டு படுத்திருந்தேன். என் காயத்திரிக்காக எதையும் தாங்கிப்பேன், இவள் பிழைச்சு எந்திருக்கணும்னு எனக்குள்ளே சொல்லிக்

புதுத்திரி பட்டென்று பிடித்துக் கொள்ள...



திரைப்பட விழா போன்ற எத்தனையோ திறப்பு விழாக்களில் மேடையில் உள்ள ஆள் உயர பெரிய குத்துவிளக்கை ஏற்றும்போது வி. ஐ. பி. கையில் மெழுகுவர்த்திக்குப் பதில் எண்ணெய்த் திரியுடன் கூடிய அழகிய வேலைப்பாடமைந்த பூஜைக்குப் பயன்படுத்தும் தீபக்கால் ஒன்றைப் பயன்படுத்தி ஏற்றச் செய்யலாமே! மெழுகு வர்த்தி உருகிக் கையில் வழியாமல் தடுக்கலாம். பார்க்கவும் அழகாக இருக்கும். மேலும் புதுத் திரியின் ஏற்றும் நுனியில் சிறிது கற்பூரத்தைப் பொடித்துத் தூவி வைத்திருந்தால் புதுத் திரியும் சட்டென்று பற்றிக் கொள்ளும். வீட்டிலும் பூஜை மற்றும் விசேஷ நாட்களில் புதுத் திரிக்கு இந்த முறையைப் பின்பற்றலாமே!

– விஜயா சுப்ரமணியம்

கிட்டேன். அப்படியே தூங்கிப் போயிட்டேன்.

''காலைலே எழுந்திரிச்சுப் பார்த்தால், இவள் ஜுரம் டக்குனு இறங்கி இருந்தது.''

ஜெயா கேட்டாள் : ''அந்த ஜுரத்தை நீங்க வாங்கிட்டேளாக்கும்!''

''இல்லே. இதென்ன ராஜகுமாரன், ராஜகுமாரி கதையா? இல்லே, சினிமாவா? எனக்கு ஜுரம் வரல்லே. ஆனா உடம்பு அசதியா இருந்தது. அடிச்சுப் போட்ட மாதிரி இருந்தது. ராத்திரி இவளோட அத்தனை சூட்டைத் தாங்கி இருக்கேனே! இவளோட அப்பா, அம்மா, டாக்டர் எல்லாருக்கும் ரொம்ப சந்தோஷம். இவள் எதுவுமே நடக்கலேங்கிறதைப் போல, படுக்கையிலேருந்து எழுந்து, குதிச்சு, நடமாட ஆரம்பிச்சுட்டாள்.

''அப்புறம் ஒருநாள் திடுதிப்புனு இவள் அப்பா டிரான்ஸ்ஃபர்னு வீட்டைக் காலி பண்ணி, வேறே ஊருக்குப் போயிட்டார்.''

காயத்திரி தொடர்ந்தாள். ''ஆமா. நான் அழுதேன். ஊருக்கு வர மாட்டேன்னேன். 'இங்கேயே ராம் வீட்டுலே இருப்பியா?'ன்னு அம்மா அதட்டிக் கேட்டாள். இருப்பேன்னு சொன்னேன். அசடு, அசடுன்னு சொல்லி கார்லே குண்டுக் கட்டாக் கட்டித் தூக்கிப் போட்டுட்டு போயிட்டாங்க. ராம்மிடம் சொல்லிட்டு வந்துடறேன்னு சொன்னேன். அவன் பள்ளிக்கூடம் போயிருப்பான், பார்க்க முடியாதுன்னு சொல்லி கூட்டிட்டு போயிட்டாங்க. அப்புறம்தான் தெரிஞ்சது, அப்பா டிரான்ஸ்ஃபர் வாங்கிட்டதே என்னாலேதான்னு. அம்மா சொன்னாள். அப்படி நான் ராம் பைத்தியமா இருந்தேனாம்.''

நான் சொன்னேன், ''இவளைக் காணோமேன்னு தேடிட்டு இவளோட வீட்டுக்குப் போனேன். வீடு பூட்டி இருந்தது. என்ன ஆச்சுனு எனக்குத் தெரியல்லே. லக்ஷ்மிகிட்டே கேட்டேன். 'ஆமா, அண்ணா! காயத்திரியோட அப்பாவுக்கு டிரான்ஸ்ஃபர் ஆயிடுத்தாம். எனக்கே தெரியாது. இன்னிக்கு அவள் பள்ளிக்கூடத்துக்கு வரல்லே. ஒரு பொண்ணு சொல்லித்து, சாமான் எல்லாம் லாரிலே போட்டு அனுப்பிச்சுட்டு, இவா காருலே போயிட்டாளாம், எனக்கு உலகமே ஒரே சூனியமா போயிடுத்து. பைத்தியம் பிடிச்சவன் மாதிரி இருந்தேன். வெளியே என் தாபத்தைக் காட்டிக்காமல் இருக்க ரொம்ப கஷ்டப்பட்டேன்.''

காயத்திரி, ''நானும் கொஞ்ச நாள் அப்படித்தான் இருந்தேன். கொஞ்ச நாள் என்ன, ரொம்ப நாள். புது இடம், புது மனுஷங்க, புதிய தோழின்னு ஆகி பழகினப்புறம் கொஞ்சம் கொஞ்சமா ராம்மை மறக்க ஆரம்பிச்சேன்.''

''என்னாலே அப்படி மறக்க முடியல்லே, காயத்திரி. உனக்கு புது இடம், புது மனுஷாள், புதிய தோழிகள் கிடைச்சாங்க, மறக்க முடிஞ்சது. எனக்கு என் ஊர் பழைய, பழகிய இடம். நீ நின்ன இடம், உட்கார்ந்த இடம், வேடிக்கை பார்த்த இடம் இதெல்லாம் உன் ஞாபகத்தைத் திரும்பத் திரும்ப என் மனசுலே எழுப்பித்து.''

ஜெயா கேட்டாள், ''இதை எல்லாம் எங்கிட்ட நீங்க சொல்லவே இல்லையே!''

''சொல்லல்லே. சொல்றதுனா என் மனசைத் திறந்து அருவியாக் கொட்டணும். மறந்தது எல்லாம் திரும்ப நினைவுக்கு வரும். வேணாம்னுதான் சொல்லல்லே. என்னதான் ஒருத்தி மனைவியாக இருந்தாலும், ஒவ்வொருவன் வாழ்க்கையிலும் இப்படி ஏதானும் ஒண்ணு நடந்து, அதை எவர்கிட்டேயும் சொல்ல முடியாமல் இறுக்கி மனசுலே பூட்டி வச்சிருக்கிறதாத்தான் இருக்கும். இப்படி நினைச்சுப் பாரேன். கல்யாணத்துக்கு முன்னாலே உன்னை ஒருத்தன் தொட்டு இழுத்து, நீ கூச்சல் போட்டு, ஊரைக் கூட்ட, அது ரசாபாசமாகி, அந்த நிகழ்ச்சியை நீ என்னிடம் சொல்லி இருக்க முடியுமோ?''

''போறதே மூளை!'' என்றாள் ஜெயா.



திடீர் சேவை

திடீர் சேவை என்றதும் கடையில் விற்கும் 'ரெடி மிக்ஸ்' என்று நினைத்துவிடாதீர்கள். இதை நாமே வீட்டில் தயார் செய்யலாம். திடீரென விருந்தினர் வந்துவிட்டால் அரை மணியில் சேவை தயார். 4 ஆழாக்கு பச்சரிசிக்கு, ஓர் ஆழாக்கு ஜவ்வரிசி, என்ற விகிதத்தில் கலந்து மிஷினில் கொடுத்து நைஸாக (மாவு) அரைத்து வைத்துக் கொள்ளவும். அதில் 2 ஆழாக்கு மாவை எடுத்துக் கொண்டு, மாவில் கொஞ்சம் பெருங்காயத் தூள், உப்பு கொஞ்சம் தேங்காய் எண்ணெய் போட்டு, தண்ணீர் விட்டு முறுக்கு மாவு பதத்தில் பிசைந்து கொள்ளவும். மாவை சேவை நாழியில் போட்டு, சேவை தட்டு இருந்தால் சேவை தட்டில் பிழிந்து குக்கரில் வைத்து 'வெயிட்' போடாமல் 5 நிமிடம் கழித்து ஸ்டவ்வை நிறுத்தவும். ஆறியவுடன் எடுத்துக் கொட்டவும். சேவை தயார். பிறகு அவரவர் ருசிக்கேற்றபடி தேங்காய் சேவை, எள்ளு சேவை எனக் கலந்து கொள்ளலாம்.

– சி. மாலா

அத்தை வந்து நின்று சாப்பாடு தயார் என்றார். எழுந்தோம்.

4

மேஜை மீது இருந்த டெலிஃபோன் மணி அடித்தது. ரிஸீவரை எடுத்தேன்.

''ராம்தானே பேசறது?''

''ஆமா.''

''நான் காயத்திரி பேசறேன்.''

''காயத்திரியா? என்ன சமாச்சாரம், காயத்திரி!''

''சும்மாத்தான். உன் கூடப் பேசணும்னு தோணித்து. ரொம்ப பிஸியா இருக்கியா?''

மனுஷி, பணக்காரி, இருந்தாலும் எப்படி இழைஞ்சு பழகறான்னு.''

ரிஸீவரில் காயத்திரி சிரித்தாள்.

''அப்புறம் என்ன?''

''நீதான் சொல்லணும்.''

''முடிஞ்ச போது வாயேன்.''



''அப்படி ஒண்ணும் பிஸின்னு இல்லே. ரொட்டீன் வேலையைப் பார்த்திட்டு இருக்கறேன்.''

''நீ நேற்று வந்துட்டுப் போனதுலே எனக்கு ரொம்ப சந்தோஷம்.''

''ஜெயா கூட உன்னைப் பத்தி ரொம்ப சிலாகிச்சுச் சொன்னாள். எவ்வளவு பெரிய

''வரேன்'' ரிஸீவரை அதன் இடத்தில் வைத்தேன்.

இப்போது எதுக்காக ஃபோன் செய்தாள் என்று இருந்தது. பழைய நட்பை புதுப்பித்துக் கொள்ள எண்ணுகிறாளோ?

ஜெயாவுக்குத் தெரிந்தால் என்ன நினைப்பாள்? சொல்வதா வேண்டாமா?

வீடு திரும்பியதும், காப்பி அருந்திய படி சொன்னேன். சொன்னதும் அதை ஜெயா மிகச் சாதாரணத் தகவலாக ஏற்றுக் கொண்டது எனக்கு வியப்பு ஊட்டுவதாக இருந்தது.

''எதுக்காக ஃபோன் பண்ணினார், அக்கா?'' அவள் கேட்டாள்.

''சும்மாத்தான். நேத்து பேசிக் கொண்டிருந்தோமோல்லியோ? அதை அசை போட்டுட்டு இருந்திருப்பாள். பேசணும்னு தோணியிருக்கும். பேசி இருக்காள்.''

''நம்ம வீட்டிலும் ஒரு ஃபோன் இருந்தால், நானும் அக்கா கூட பேசுவேனோல்லியோ?''

''சொல்லாதே. காயத்திரி காதுலே பட்டதுனா, தன் செலவுலே இங்கே ஒரு ஃபோனை வச்சுடுவாள்.''

ஜெயா நகைத்து விட்டு, காலி டம்ளரை வாங்கிச் சென்றாள்.

மறுநாள் மாலை மணி மூணரை இருக்கும். அலுவலகச் சேவகர் வந்து எதிரே நின்று, ''சார், உங்களைப் பார்க்க ஒரு அம்மா வந்திருக்காங்க.''

''யாரு?''

''நான் பேர் கேட்கல்லே. ரிசப்ஷன் அறையிலே உட்காரச் சொல்லிட்டு வந்தேன்.''

முன் அனுமதியின்றி பார்வையாளர்களை அலுவலகத்துள் அனுமதிப்பதில்லை என்பது விதி. அவர்களைக் கூடிய மட்டும் ரிசப்ஷன் அறையில் அமர்த்தி, பேசி, விரைவில் அனுப்பி விட்டு, இருப்பிடத்துக்குத் திரும்பி அலுவலைக் கவனிக்க வேண்டும். அலுவல் காரணமாக வந்திருப்பவர்களை மட்டுமே உட்புறம் கூட்டிக் கொண்டு வந்து, அலுவல் பற்றிப் பேசி விட்டு அனுப்பலாம்.

வந்தது காயத்திரியாகத்தான் இருக்க வேண்டும். அவளுடைய அந்தஸ்தையும், தோரணையையும் கண்டு விட்டு, சேவகர் பேரைக் கேட்காமல் வந்திருக்கிறார். புரிகிறது.

ரிசப்ஷன் அறை நோக்கிச் சென்றேன். மின்விசிறி உயரே சுற்ற, பிரம்பு நாற்காலியில் சாய்ந்து காயத்திரி உட்கார்ந்திருந்தாள். தங்க ஃப்ரேம் மூக்குக் கண்ணாடிக்குப் பின்னே வண்டுக் கண்கள் இமைகளாகிய சிறகடித்துச் சிரித்தன. நீல வர்ண பட்டுச் சேலை கட்டி இருந்தாள். தலைமுடிகளில் அலை அலையான நெளிகள்.

எதிரே அமர்ந்தேன். ''காப்பி சாப்பிடறயா, காயத்திரி?''

''வரவழையேன்.''

எழுந்து சென்று சேவகரிடம் இரண்டு காப்பி வாங்கி வரச் சொல்லி, பணத்தையும் கொடுத்து விட்டு வந்து மீண்டும் அவள் எதிரே உட்கார்ந்தேன்.

''என்ன விசேஷம், சொல்.''

''உன்னைப் பார்க்க வேணும்னு இருந்தது, வந்தேன். சும்மா வீட்டுலே உட்கார்ந்திட்டு என்ன பண்ணறது, சொல்லு. நான் வந்தது உன் வேலைக்கு இடைஞ்சல் இல்லையே?''

இடைஞ்சல்தான். அதை சொல்லவா முடியும்? அதுவும் காயத்திரியிடம். ''அதெல்லாம் இல்லை. ஒரு பத்து நிமிஷம் உன்னோட இருக்கறதுனாலே வேலை முழுகிப் போயிடாது.''

அவள் என்னை அளப்பது போலப் பார்த்தாள். ''நீ ரொம்ப மாறிட்டே, ராம்!''

''எப்படிச் சொல்றே?''


''அந்த சின்னப் பையன் ராம் இல்லை நீ!''

''முப்பது, முப்பத்தஞ்சு வருஷத்துக்கு அப்புறம் பார்க்கிறே, இல்லையா? அதான் அப்படிப் படறது.''

''இல்லே. உன்னிடம் ஏதோ பயம் இருக்கு. என்னைக் கண்டு எதுக்காகவோ பயப்படறே. என்னை விட்டு ஒதுங்கி இருக்கணும்னு நினைக்கிறே. இல்லையா, ராம்? நான் சொல்றது சரிதானே?''

எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. நான் மிகச் சாதாரணமானவன். நடுத்தர வர்க்கத்தினன். இந்த மாதம் வேலை செய்தால், அடுத்த மாதம் வீட்டில் உலை எரியும் என்பதான வாழ்க்கை அமைப்பில் இருப்பவன். எவருடனும் தகராறு இல்லாமல், அமைதி

10 புள்ளி 10 வரிசை



– விஜயலட்சுமி சுப்பிரமணியம்

யாக குடும்பம் நடத்திச் செல்ல வேண்டும் என்று நினைப்பவன். முக்கியமாக மனைவியுடன் பிணக்கு நேர்ந்து விடக் கூடாது என்பதில் எச்சரிக்கையுடன் இருப்பவன்.

நாற்காலியில் சாய்ந்தபடி சிரித்தேன். ''அதெல்லாம் ஒண்ணும் இல்லே, காயத்திரி!''

''இல்லைன்னா, சந்தோஷம். என்னைப் பாரு. உன்னை ஜவுளிக் கடையிலே பார்த்தப்புறம் நான் திடீர்னு ரொம்ப சின்னவளா ஆயிட்ட மாதிரி தெரியறது. உன்னோட சுத்தித் திரிஞ்ச ஆறு மாச காலம் நினைவுலே பளிச்சுனு படமா ஓடறது. நீயும் அப்படி இரு, ராம்! நாம் சிநேகிதாளா இருப்போம். ஒரு ஆணும், ஒரு பெண்ணும் சிநேகிதாளா இருக்கக் கூடாதா? இருபதாவது நூற்றாண்டு முடிஞ்சு, இருபத்தொண்ணாவது நூற்றாண்டு தொடங்க இருக்கு. இப்பவும் நாம் பழைய பஞ்சாங்கமா, ஆண், பெண் வித்தியாசம் பார்த்திட்டு இருக்கலாமா? உனக்கும் கல்யாணம் ஆயிடுத்து, எனக்கும் ஆயிடுத்து. நம்ம ரெண்டு பேருக்குள்ளே செக்ஸ் எண்ணம் எழறதுக்கு இல்லே. நான் என் வீட்டுக்காரருக்கு துரோகம் பண்ண மாட்டேன். நீயும் ஜெயாகிட்ட எத்தனை பிரியமா இருக்கேங்கிறது எனக்குப் புரியறது. அப்படி இருக்க, நாம் சிநேகிதாளா நல்லாவே இருக்கலாம்.''

அடேயப்பா! சொற்பொழிவு அல்லவா ஆற்றுகிறாள்! அவளைப் பார்த்தபடி ஏதும் பேசத் தோன்றாமல் இருந்தேன்.

''என்ன பேசாமல் இருக்கறே?''

''உம்? இத்தனை பேச எங்கே கத்துக்கிட்டேனு யோசிக்கிறேன்.''

''இதுலே கத்துக்கிடறதுக்கு என்ன இருக்கு? உள்ளத்துலே உண்மை ஒளி உண்டாயின் வாக்கினிலே அது பிரதிபலிக்கும்னு பாரதி சொல்லியிருக்கார். நான் நினைக்கிறதைச் சொல்றேன்.''

''நீ சொல்றது ரொம்பச் சரி, காயத்திரி! நாம் சிநேகிதாளா நிச்சயமாக இருக்கலாம். ஆனால் இதை நானும் நீயும் மட்டும் தீர்மானிக்க முடியுமா?''

சேவகர் காப்பி கொண்டு வந்து வைத்து விட்டுச் சென்றான்.

''சொல்லு, ராம்!'' காப்பி டம்ளரைக் கையில் எடுத்துக் கொண்டாள் காயத்ரி.

''உன் வீட்டுக்காரர் இருக்கார். அவர் ஏத்துக்கணும். அவர் பேர் என்ன? நான் கேட்கவே இல்லையே!''

''பூமிநாதன். பங்களா வாசல்லே பேரைப் பார்க்கலியா, நீ?''

''கவனிக்கல்லே. அவர் நம்ம சிநேகத்தை ஒத்துக்கிடணும். அவர் நம்ம நட்பை வித்தியாசமா எண்ணி விடக் கூடாது. அவர் அடிக்கடி ஊர் ஊராப் போறவர்னு சொல்றே. திரும்பி வர போது, நாம் அடிக்கடி சந்திக்கிறதைக் கண்டால், தப்பாப் புரிஞ்சுக்கலாம். அதே போல ஜெயாவும் என்னைத் தப்பா புரிஞ்சுக்கக் கூடாது.''

''ஜெயா நல்ல பொண்ணு. சேச்சே! அவள் அப்படியெல்லாம் நினைக்க மாட்டாள்.''

''காயத்திரி, என்ன இது? உனக்கு சாதகமாகவே உலகம் இருக்கும்னு நீ நினைக்கிறே போலிருக்கே! பாம்பும் நல்ல பாம்புதான்; கடிக்காத வரைக்கும். எந்தப் பெண்ணும் தன் புருஷனை எந்தவொரு காரணத்துக்காகவும் இன்னொரு பெண்கிட்ட எந்தவிதமான உறவும் வச்சுக்க சம்மதிக்க மாட்டாள். அது சகோதர உறவு ஆகட்டும், மகன் உறவு ஆகட்டும், நட்பாகட்டும். மாமியார் - மருமகள் தகராறு, நாத்தனார் - அண்ணி தகராறு இதெல்லாம் ஏன் ஏற்படறதுன்னு நினைக்கிறே? மனைவி என்பவள் கணவன் முழுக்க முழுக்க தன் ஆதிக்கத்தில் மட்டுமே இருக்கணும்னு நினைக்கிறாள்.'' காப்பி டம்ளரைக் கையில் எடுத்துக் கொண்டேன்.

''அப்படியா?'' ஏமாற்றம் மிதக்கும் கண்களோடு காயத்திரி நோக்கினாள். பரிதாபமாக இருந்தது எனக்கு. என் நட்புக்

8 புள்ளி 8 வரிசை



- எஸ். உமா நந்தினி

காக ஏங்குகிறாள். என்ன வயதினளாக இருக்க வேண்டும் என்பதான விருப்பம்.

அவ்விதமான ஓர் உணர்வு தப்ப அல்ல. ஆனால் அந்த நட்பை விகல்பம் இல்லாமல், கோணப் பார்வை இல்லாமல் சமூகம் ஏற்க வேண்டுமே! இவளுடைய கணவரும் என் மனைவியும் ஏற்க வேண்டுமே!

''காயத்ரி, நீ சொன்னியே, ஒரு நாணயத்துக்கு ரெண்டு பக்கம் உண்டுன்னு. அந்த உதாரணம் இதுக்கும் பொருந்தும்.''

என்னை அவள் ஊடுருவிப் பார்த்தாள். எதைக் குறித்துச் சொல்ல வருகிறேன் என்பதான பார்வை.

''நட்புங்கிறதும் ஒருவித உறவுதான். ஏற்கெனவே நம்மிடையே இருந்த அந்த உறவை நாம் புதுப்பிச்சுக்கிற போது, புதுப்பிச்சிட்டு சந்தோஷம் அடையற போது, இன்னொரு பக்கம் உன் வீட்டுக்காரரிடமிருந்தும், என் வீட்டுக்காரியிடமிருந்தும் எதிர்ப்பு கிளம்பும். இந்த எதிர்ப்பு நம்ம ரெண்டு பேரோட குடும்ப வாழ்க்கையைப் பாதிக்கும். உன் வீட்டுக்காரருக்குக் கோபம் வரும். ஜெயாவுக்கு எரிச்சல் வரும். அதனாலே நம் ரெண்டு பேருக்கும் துயரம் தான். ஒரு பக்கம் நட்புனாலே சந்தோஷம் ஏற்பட அதே சமயத்துலே வீடுகளிலே குழப்பம் ஏற்பட்டு துயரமும் உண்டாகும். இந்த நிலைமை அவசியம்தானா?''

''உம்...?'' காயத்ரியின் கண்களில் நீர் துளித்து, ஒளி நட்சத்திரமாகப் பிரதிபலித்தது.

''யோசிச்சுப் பாரு, காயத்ரி.''

''என்னாலே உன்னைப் போல அப்படி எல்லாம் யோசிக்க முடியல்லே. நான் சந்தோஷத்தைத் தேடி அலையறேன். என் கிட்ட இருக்கிற பணம் மட்டும் சந்தோஷம் தர்றது இல்லே. பணத்தைத் தவிர சந்தோஷம் தர பலதும் இருக்கு. அப்படி சந்தோஷத்தை அடைய தடைகள் இருக்குன்னு நீ சொல்றதுலேருந்து புரியறது, ராம்!''

மௌனமாக அவளைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

எழுந்தாள். ''சரி, ராம்! உனக்கு வேலை இருக்கும். நான் வரேன்'' நடந்தாள்.

கார் வரை சென்று அவளை விட்டு விட்டுத் திரும்பினேன்.

போனஸாகக் கொஞ்சம் வெண்ணெய்

பால் காய்ச்சி வைத்தால் ஆடை புடைக்கிறது. காப்பியில் ஆடை இருந்தால் பல பேருக்குப் பிடிக்காது. தயிரில் ஆடை இருந்தாலும் யாரும் சாப்பிடுவதில்லை. (கொழுப்பு, கொலஸ்ட்ரால் என்ற காரணத்தினால்). ஒரு லிட்டர் பால் வாங்கினாலும் கொஞ்சம் ஆடை இருக்கத்தான் செய்யும். இவ்வளவு குறைந்த ஆடையை எடுத்து எப்படி வெண்ணெய் எடுப்பது? நாலு நாட்கள் எடுத்து வைத்தாலும் நிறைய சேராது. அதற்கு மேல் இன்னும் நிறைய நாட்கள் சேர்க்கலாம் என்றாலும் பழைய வாசனை வந்து விடும்.

என்ன பண்ணலாம்?



ஒரு லிட்டர் பிடிக்கும்படியான ஒரு எவர்சில்வர் டப்பாவை ஃப்ரீசரில் வைத்துக் கொண்டு, தினமும் ஆடையை எடுத்து அதில் போட்டு வைக்கவும். 20-30 நாட்களில் டப்பா நிறைய சேர்ந்தபின், ஃப்ரீசரில் இருந்து எடுத்து வெளியே வைத்து சுமார் நாலு மணி நேரம் கழித்து, இரண்டு தடவையாக மிக்ஸியில் போட்டுக் கடைந்தால் வெகு சுலபமாக வெண்ணெய் வந்து விடும். ஆடையுடன் சிறிது நீர் சேர்த்துக் கொள்ளவும். இரண்டாவது பாதியை கடையும் பொழுது முதலில் கடைந்ததிலிருந்து வெண்ணெயை எடுத்த மோரையே விடலாம்.

நன்றாக $\frac{1}{2}$ கிலோ, $\frac{3}{4}$ கிலோ வெண்ணெய் வரும். வெண்ணெய் எடுத்த மோரும் சாப்பிட நன்றாக இருக்கும்.

வெண்ணெய் எடுப்பது, நெய் காய்ச்சுவது மிக்ஸி பாத்திரங்களை அலம்புவது எல்லாமே மாதம் ஒருமுறை செய்தால் போதும்.

வேலைக்குப் போகிறவர்கள், காலை ஒரு லிட்டர், மாலை ஒரு லிட்டர் என்று வாங்காமல் காலையிலேயே இரண்டு லிட்டர் பால் வாங்கிக் காய்ச்சி ஃப்ரிட்ஜில் வைத்து விட்டால் நன்றாக ஆடை புடைக்கும். இரு முறை பால் காய்ச்சும் வேலையும் மிச்சம். பக்கத்து வீட்டுக்காரர்களையும் தொந்தரவு செய்ய வேண்டாம்.

– ஜெயா

"அழகான கூந்தல் எனக்கு
ரொம்ப ஈஸியா கெடச்சுடல.
அப்புறமாதான் தெரிஞ்சது...



இரவு ஜெயாவிடம் காயத்திரி என் அலுவலகம் வந்து பார்த்து விட்டுப் போன விவரத்தைத் தெரிவித்தேன்.

''பாவம், அவர். உங்க நட்புக்காக, பழைய நட்பைத் தொடர்ந்து வச்சுக்கிறதுக் காக ஏங்கித் தவிக்கிறார்.''

''அது சரி, ஜெயா! அவள் குடும்ப நிலை மையையும், நம்ம குடும்ப நிலைமையை யும் நீ கவனிக்கணும். அவளோட வீட்டுக் காரர் இந்த நட்பை, சிநேகத்தை எப்படி எடுத்துக் கொள்வார்ன்னு நினைச்சுப் பார்க் கணும். நானும் ஜாக்கிரதையா இருக்க வேண்டி இருக்கு. நீ என்னைத் தப்பா புரிஞ்சுக்கக் கூடாது.''

''உங்களைத் தப்பா புரிஞ்சுக்கிறதுக்கு இதுலே என்ன இருக்கு?''

''அப்படியா கேட்கிறே?'' நான் கட்டி லில் படுத்திருந்த நிலையில் என் அருகில் உட்கார்ந்திருந்த அவளிடம் வினவினேன். ''நானும் ஜெயாவும் சிநேகமாக இருக் கறதை நீ தப்பா எடுத்துக்க மாட்டியா?''

''உங்க மனசுலே கள்ளம் இருக்கு. அத னாலே நீங்க இப்படி பேசறீங்க'' சட்டென்று யோசிக்காமல் கூட ஜெயா சொன்னாள். என் மனதுள் அவளுடைய சொற்கள் 'ணங்' என இடித்தன. ''அடுத்தாப்பலே அக்கா மன சுலே அப்படி ஒரு கள்ளம் இல்லே. வெளுத் தது எல்லாம் பால்ன்னு நினைக்கிற மனம்.''

நான் பேசவில்லை. இவளால் எப்படி இவ்வாறு சிந்திக்க முடிகிறது? பார்த்த வுடன் மனிதர்களை எப்படி எடை போட முடிகிறது? நானாவது வீட்டை விட்டு வெளியே செல்கிறேன். நான்கு மனிதர் களுடன் நாள்தோறும் பழகுகிறேன். அப் படியான வாய்ப்பு வீட்டுக்குள்ளேயே கிடக் கும் இவளுக்கு இல்லை. பின் எவ்விதம் இவளுக்கு மற்றவர்களை இனம்காணும் அனுபவம் வாய்த்திருக்கிறது?

என் மனத்தில் கள்ளமாமே! என்னைப் பற்றிய இவளுடைய கணிப்பு சரிதானா? எண்ணிப் பார்க்கிறேன். காயத்திரியை நான் எவ்வாறு கருதுகிறேன்? தக்காளிப் பழம் போல இருக்கிறாள். படுக்கையில் அவ ளுடன் சரசமாட நான் விரும்புகிறேனா? இல்லையே! அன்று அவளுடைய பங்களா வில் அவளுடன் எதிரே அமர்ந்து உரை யாடிக் கொண்டிருந்த போது, அவளுடைய மார்புச் சேலைப் பகுதி விலகி இருக்க, அதை சரிசெய்யத்தானே என் கை துடித்தது? அவளை நான் அந்தச் சின்னப் பெண் காயத்திரியாகத்தான் கருதுகிறேன். அவ ளுக்கு ஊறு எதுவும் நேர்ந்து விடக் கூடாது, அவள் தூய்மை கெட்டு விடக் கூடாது என்ப தில் நான் ஆர்வமாக இருக்கிறேன். செக்ஸ் பற்றி எண்ணம் அறவே இல்லை. என் கவலை எல்லாம் எங்கள் நட்பு இரு குடும் பத்தாரிடமும் கலகத்தையும், கலக்கத்தை யும் விளைவித்து விடக் கூடாது என்பது தான்.

பின் எப்படி இவள், ஜெயா, என் உள் ளத்தில் கள்ளம் இருக்கிறது என்று சொல் கிறாள்?

''இதோ பார், ஜெயா! என் மனசில் கள்ளம் இருக்குன்னு எதை வச்சுச் சொல்றே?''

''இல்லையா?''

''இல்லை.''

''இல்லைன்னா ரொம்ப நல்லது. அக்கா மனசு எனக்கு நல்லாவே புரியறது.''

''அப்ப நான் உன் அக்கா கூட நட்புரி மையோட பழகினால் அதை நீ தப்பா எடுத் துக்க மாட்டியே?''


''மாட்டேன். அந்த நல்ல மனுஷிக்கு என்னால ஆன உதவி பண்ணணும்னுதான் எனக்கு இருக்கே ஒழிய, அவங்க தப்புப் பண்ணுவாங்கன்னு நான் நினைக்கவே மாட்டேன்.''

ஒவ்வோர் ஊரிலும் ஒவ்வொரு வழக்கம்!

என் கணவருக்கு அடிக்கடி மாற்றல் ஆகும் வேலை என்றபடியால் நாங்கள் பல மாநிலங்களில் இருக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. அந்தச் சமயங்களில் நான் கவனித்த சுவாரஸ்யமான விஷயம் ஒன்று உண்டு —

காலைவேளைகளில் கணவன்மார்களை அலுவலகத்திற்கு அனுப்பிவிட்டு எஞ்சிய வீட்டுக் காரியங்களை முடித்துவிட்டு வெளி வராந்தாவிற்கு வந்தால், பக்கத்து வீட்டுப் பெண்மணிகளுடன் ஏதாவது பேச நேர்ந்தால் கேட்கும் முதல் வார்த்தை, ''என்ன மாமி! சாப்பாடு ஆயிற்றா?'' என்பதாகத்தான் இருக்கும்.

வங்காளத்தில் வங்காளிகளோ, ஒருவரை ஒருவர் பார்க்க நேர்ந்தால் காலை வேளைகளில் ''கீ ஸ்நான் ஹோயே கேச்சே?'' (என்ன, குளியல் முடிந்து விட்டதா?) என்பதாகத்தான் இருக்கும். வங்காளிகள் குளிப்பதற்குக் கொடுக் கும் முக்கியத்துவமே அலாதி. ஞாயிற்றுக்கிழமைகளில் வீட்டில் இருக்கும் ஆண்கள் கடுகெண்ணெயைத் தடவிக் கொண்டு வெயிலில் ஆற, அமர உட்கார்ந்து கொண்டு குளிப்பார்கள். பிறந்த குழந்தையைக் கூட அவர்கள் நன்றாகக் கடுகெண்ணெயை 'மாலிஷ்' செய்துவிட்டு ஏதோ வற்றல் வடாம் காயப் போடுவது போல ஒரு மணி நேரம் வெயிலில் போட்டு விட்டுத்தான் நன்றாகக் குளிப் பாட்டுவார்கள்.



தற்போது நாங்கள் நம் தலைநகரத்தில் இருக்கிறோம். இங்கு பஞ்சாபிகள் துணி துவைப்பதற்குத்தான் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். வாசலில் எப்போதாவது வந்தாலே, 'கபடா தோ லியா? (துணி துவைத்தாயிற்றா?) என்றுதான் அருமையாக விசாரிக்கிறார்கள். எந்த ராஜா எந்தப் பட்டணம் போனாலென்ன? காலை வேளை களில் எல்லோர் வீட்டுத் தோட்டப் பக்கம் பார்த்தால் ஏதோ சோப்பு விளம்பரத்திற்குத் தான் துவைத்துப் போட்டிருக்கிறார்களோ என்று அத்தனை அழகாக இருக்கும். அதேபோல வீட்டிற்கு வரும் பால்காரன் கூட இஸ்திரி மடிப்பு இல்லாத சட்டை போடு வதில்லை.

– ஜெயந்தி

15 புள்ளி 8 இல் முடிவு — ஊடுபுள்ளி



- எஸ். உமா நந்தினி

''ஜெயா!''

''என்ன?''

''நீ கோடியிலே ஒருத்தி.''

''உம்?''

எனக்கே என் சொற்களில் ஏதோ அபஸ்வரம் தட்டியது. கோடியில் ஒருத்தி என்றால், ஒரு கோடிப் பெண்களில் நீயும் ஒருத்தி என்று ஆகலாம். அல்லது அந்த ஓரத்தில் ஒருத்தி என்பதாகவும் பொருள் கொள்ளலாம். சிரிப்பு வந்தது எனக்கு.

''ஒரு கோடிப் பெண்களில் நீ ஒருத்தி மட்டுமே ஞானின்னு சொல்ல வந்தேன்.''

''போதும் புகழ்ச்சி.''

''இப்படி வாயேன்!''

''எதுக்கு?''

''உன்னைக் கட்டி அணைத்துத் தழுவறேன்.''

''என்னதான் பேசறதுன்னு விவஸ்தை கிடையாதா?'' விளக்கை அணைத்து விட்டு வந்தாள் ஜெயா.

அடுத்த நாள் காலையில் அலுவலகம் வந்ததும் நானே காயத்திரிக்கு ஃபோன் செய்தேன். ஜெயாவுடன் பேசியதைக் குறித்து விவரமாகச் சொன்னேன்.

காயத்திரி, ''எனக்குத் தெரியும், ராம்! ஜெயா ரொம்ப நல்லவள். அவளை நீ புரிஞ்சுக்கல்லே. நான் புரிஞ்சுக்கிட்டேன். சரி, இன்னிக்கு சாயந்திரம் நான் வரேன். உனக்கு எப்ப ஆபீஸ் மூடறாங்க?''

''அஞ்சு மணிக்கு.''

''சரி. அஞ்சு மணிக்கு நான் வரேன். பீச், பார்க்னு எங்கேயாவது போகலாம்.''

''உம்.....?''

''ஏன், ராம்? உனக்கு இஷ்டமில்லையா?''

''இல்லே, இப்படி எல்லாம் சேர்ந்து சுத்தணுமான்னு இருக்கு.''

''பின்னே என்ன பண்ணறது? உன்னை என் வீட்டுக்கு அழைக்கலாம். இங்கேயே நாம் பேசிட்டு இருக்கலாம். அதைவிட வெளியே எங்கேயாவது போய் உட்கார்ந்து பேசுவோமே?''

''சரி.''

''அரை மனசோட சொல்றியா?''

''இல்லே, காயத்திரி! உனக்கு இருக்கற தைரியம் எனக்கு இல்லே. அதான் தயங்கறேன்.''

''எதனாலே ஆண் பிள்ளையாயிருந்திட்டு உனக்குத் தைரியம் இல்லேங்கிறே?''

''பொருளாதாரம்தான் காரணம். உன் கிட்ட ஏராளமா பணம் இருக்கு. அந்தத் தைரியம் உனக்கு. நான் மாதாந்திரங் காய்ச்சி. கோழைத்தனம் இயல்பா வந்துடறது.''

''அதுவும் உண்மைதான். ராம், உனக்கு பணம் வேணும்னா கேளு. நான் தரேன்.''

''வேணுங்கற போது கேட்கறேன்.''

''சரி. அஞ்சு மணிக்கு வரேன். முன்னே பின்னே பத்து நிமிஷம் ஆனாலும் காத்திட்டு இரு. வந்திடறேன். மறந்துட்டு பஸ் ஏறிப் போயிடாதே.''

''இல்லே'' ரிஸீவரை வைத்தேன்.

காயத்திரி சொன்னது சரிதான். அலுவல் ஆக்ரமிப்பில் அவளுடைய ஃபோன் பேச்சை மறந்தே விட்டேன். மாலையில் மேஜை இழுவையை அடித்துச் செலுத்திப் பூட்டி, சாவியை சட்டைப் பையில் போட்டுக் கொள்ளும் போதுதான் அவளுடைய பேச்சு கவனத்துக்கு வந்தது. அலுவலகப் படிகளில் இறங்கி, காயத்திரியின் கார் வருகைக்காகக் காத்திருந்தேன். அவளே கார்

ஓட்டுகிறாள். பங்களாவில் டிரைவரும் இருக்கிறார். ஆனால் என்னை சந்திக்க வரும் நேரங்களில் டிரைவரோடு வராது இருப்பது நல்லது என்று அவள் கருதி இருக்கலாம். அநாவசியமான வதந்திகளுக்கு இடம் அளிப்பானேன் என்ற எண்ணமாக இருக்கலாம்.

கார் வந்தது. வெண்ணிற ஃபியட். அவள்தான் ஓட்டி வந்தாள். நான் புகுந்து அருகில் அமரவும், காரைத் திருப்பிச் செலுத்தலானாள்.

அவள் கார் ஓட்டும் லாகவம் எனக்குப் புரிந்தது. என் நண்பர் ஒருவர் தன் காரில் என்னை அழைத்துச் செல்லும் போது எனக்கு மனதுள் புரியாத அச்சம் எழும். எதிரே வரும் வாகனங்கள் எதன் மீதாவது மோதி விடுவாரோ, கார் ப்ளாட்ஃபாரம் மீது ஏறி விடுமோ, மரத்தில், விளக்குக் கம்பம் ஒன்றில் இடித்து விடுமோ என்பதான பயம். பயப்பட்ட மாதிரியே, பெரிய விபத்து ஏதாவது நேராவிடினும், காரின் சக்கரம் குழி, மேடு ஒன்றில் இறங்கி தடால், தடால் என்று எகிறும்.

காயத்திரி ஓட்டும் போது அத்தகைய அச்சம் எதுவும் மனத்தில் எழவில்லை.

''எங்கே போகலாம், ராம்?''

''பீச்சுக்குப் போகலாம்னு சொன்னியே?''

''நீ ஏதும் சாப்பிட வேணாமா? வீட்டுக்குப் போனதும் என்ன சாப்பிடுவே?''

''காப்பி.''

''அப்ப ஏதாவது ஓட்டல்லே நாம் காப்பி சாப்பிடலாம்.''

காரைச் செலுத்தினாள். ட்ரைவ் இன்னில் கார் நுழைந்தது. ஓரமாக நிறுத்தி விட்டு, உள்ளே சென்று அமர்ந்தோம். உயர் மட்டத்தினர் வந்து கொண்டும், சென்று கொண்டும் இருந்தனர். இடம் சுறுசுறுப்பாக இருந்தது.

''என்ன சாப்பிடுகிறாய், ராம்?''

''காப்பி போதும்.''

''காப்பி போதும்னா ட்ரைவ் இன்னுக்கு வர வேணாமே! அங்கேயே எங்காவது நிறுத்தி சாப்பிட்டிருக்கலாமே!''

''ஏன்? பசியா இருக்கா?''

''பசி ஏது? பணம் இருக்கறவங்களுக்கு பசினா என்னன்னு தெரியாது. நேரத்துக்கு சாப்பிடணுங்கிறது நியதியாப் போனா விட்டு, பசிங்கிற உணர்வே போச்சு.''

சர்வர் வந்தார். இரண்டு ஸ்பெஷல் தோசை, காப்பிக்குச் சொல்லி விட்டுக் காத்திருந்தோம்.

''காயத்திரி, மிஸ்டர் பூமிநாதன் எப்ப ஸூரிச்சிலிருந்து திரும்பி வரார்?''

''நாளன்னிக்கு வரார். இன்னிக்கு ஃபோன் வந்தது.''

''இப்படி நீ என் கூட சுத்தறதைப் பத்தி அவர் என்ன நினைப்பார்னு நீ எண்ணறே?''

''அவர் பெரிய மனுஷர். என்னைப் புரிஞ்சுப்பார்.''

''எனக்கு என்ன பயம்னா, என்னாலே உனக்கு ஏதும் நேர்ந்துடக் கூடாதுங்கிறது தான்.''

இப்பொழுதே சேர்க்க ஆரம்பிக்கலாமே!

எங்கள் ஊரில் அடிக்கடி 'கரண்ட் கட்' ஆகும். மெழுகுவர்த்தி நிறைய வாங்குவேன். மெழுகுவர்த்தி எரிந்து ஓர் அங்குலம் வந்தவுடன் அணைத்து விடுவேன். இப்படிப் பண்ணி என்னிடம் ஒரு அங்குலம் மெழுகுவர்த்திகள் 30 சேர்ந்து விட்டன. ஒரு டப்பாவில் அவ்வப்பொழுது போட்டு வந்தேன். பழைய சின்னச் சின்ன அகல் சட்டிகளில்



மெழுகுவர்த்தியை ஒட்டி வைத்தேன். வேண்டும். (திரியைப் பற்ற வைத்து அகலின் நடுவில் பிடித்தால் உருகி சொட்டும். இரண்டு சொட்டு விழுந்ததும் ஒரு அங்குல மெழுகுவர்த்தியை உடனே ஒட்டிவிட வேண்டும். கிச்சென்று ஒட்டிக் கொண்டுவிடும்.) கார்த்திகை தீபத்தன்று காம்பவுண்டின் மேல் ஒரே மாதிரியாக வரிசையாக வைத்து எரியவிட்டால் பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருக்கும். எண்ணெய் செலவும் மிச்சம். சுவர்களும் எண்ணெய்ப் பிசுக்காகாது. இப்பொழுதே நீங்களும் செய்து பார்த்துச் சேர்க்க ஆரம்பிக்கலாமே!

- சுபா நாபன்

பள்ளிக் குழந்தைகள் போடும் 'சாக்ஸ்' வெகு சீக்கிரத்திலேயே உறுதித் தன்மையை இழந்து லூஸாகி விடுகிறது. மற்றபடி சாக்ஸ் கிழியாமல் இருக்கும் பட்சத்தில் சாக்ஸ் ஓரத்தில் அதன் சுற்றளவுக்கு ஏற்றபடி நல்ல ரப்பர் பேண்டை வைத்து உருட்டித் தைத்துவிடவும். இதனால் சாக்ஸ் ஓரம் தொய்ந்து போகாமல் காலை அழுத்தமாய்ப் பிடித்துக் கொண்டு இருக்கும். இம்முறை மிகப் பயனுள்ளதாய் இருந்ததால் பழைய தூக்கி எறிந்த சாக்ஸ்களை எடுத்து அதில் ரப்பர் பேண்டை ஓரத்தில் வைத்து உருட்டித் தைத்தேன். இதை எல்லோரும் பயன்படுத்தி, அடிக்கடி சாக்ஸ் வாங்கும் செலவைக் கட்டுப்படுத்தலாம். - வி. தனுசு



''என்ன நேரும்னு நினைக்கிறே?''

''பிணக்குதான். அந்தப் பிணக்கும் பெரிசாயிடக் கூடாது.''

''பெரிசாயிடக் கூடாதுன்னா...?''

''சொல்லச் சொல்றியா?''

''சொல்லேன். நெருப்புன்னா வாய் வெந்துடாது.''

''என்ன இருந்தாலும் உனக்குத் தைரியம் ஜாஸ்திதான்.''

காயத்திரி நகைத்தாள். தள்ளி இருந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தவர்களில் சிலர் திரும்பிப் பார்த்தனர்.

''டைவர்ஸ் வரை போயிடுமோன்னு பயப்படுறியா?''

தலையசைத்தேன்.

''போகாது. பயப்படாதே.''

திரும்பவும் பழைய நாட்களை கவனப்படுத்திக் கொண்டு பேசினோம். அவளுடைய பெற்றோரின் விபத்து குறித்து விசாரித்து அறிந்து கொண்டேன். சாப்பிட்டு விட்டு நாங்கள் எழுந்த போது மாலை மணி ஆறு ஆகியது.

''ஜெயா காத்திட்டு இருப்பாளா, ராம்?''

''ஆமா. நேரத்துக்கு வீட்டுக்குப் போகாவிட்டால், எனக்கு ஏதோ ஆக்ஸிடெண்ட் ஆயிடுத்துன்னு நினைச்சு பதைச்சுப் போயிட்டு இருப்பாள்.''

''கொடுத்து வச்சவன்.''

''ஏன் அப்படிச் சொல்றே?'' காரை நோக்கி நடந்தோம்.

''உனக்காக ஒருத்தி காத்திட்டு இருக்காளே! நான் என்னிக்குமே இவருக்காகக் காத்திட்டு இருந்தது இல்லே. இன்னிக்கு ஒரு ஊரு, நாளைக்கு லண்டன், பாரிஸ்னு பறக்கறார். உன்னை விட அவருக்கு விபத்துக்கான சான்ஸ் ஜாஸ்தி. இருந்தாலும் நான் கவலைப்பட்டிட்டு இருக்கேனா?''

''அதான் வித்தியாசம், காயத்திரி!''

''எது?''

காரில் ஏறி அமர்ந்தோம். ஸ்டார்ட் செய்தாள் காயத்திரி.

''நான் நடுத்தரவர்க்கம். பயந்து பயந்து வாழுற ஜென்மம். இந்தப் பயம் ஏன்னா, பெரிசா பாசம், அது, இதுங்கறதை நான் நம்பல்லே. பொருளாதாரம்தான் காரணம். எனக்கு ஏதாவது ஆச்சுன்னா, என் குடும்பம் நடுத் தெருவுலே நிற்கும். இந்தப் பயம்தான் மனசுக்குள் இருந்திட்டு, இயக்கு சக்தியா என்னைப் போன்ற நடுத்தரவர்க்கத்தினரை ஆட்டி வைக்குது.''

கார் சென்று திரும்பி மௌன்ட்ரோடில் ஓடியது.

''எனக்கு ஏன் அப்படிப்பட்ட பயம் இல்லே?'' காயத்திரி கவனமாகக் காரை செலுத்தியபடி கேட்டாள். தேர்ந்த ஓட்டுனரி!

''முதலாவது உன் வீட்டுக்காரர் இந்த நேரத்துக்குத்தான் வீடு திரும்பறதுங்கிற நியதி கிடையாது. மற்றது உன்னிடம் பணம் இருக்கு. உன் வீட்டுக்காரருக்கு ஏதாவது ஆனாலும், அப்படி ஏதும் ஆகாது கடவுள் காப்பாராக - உன் வாழ்க்கை அதிகமா பாதிக்கப்படாது. துயரம் இருக்கும்.''

''உன் வீட்டுலே உன்னைக் கொண்டு போய் விட்டுட்டுப் போகவா?''

''வேணாம். நான் இப்படி இறங்கிக்கறேன். பாண்டி பஜாரில் பஸ் பிடிச்சுப் போறேன்.''

''ஜெயாவை நான் பார்க்க வேணாமா?''

''உன் இஷ்டம்.''

சிக்னலுக்காகக் காத்திருந்து விட்டு, கார் பாண்டிபஜார் பக்கம் திரும்பியது.

''டிராஃபிக் ரொம்பத்தான் அதிகமாயிடுத்து'' என்றாள் காயத்திரி, ஸ்டியரிங் பிடித்தபடி.

மேற்கு மாம்பலம் போய் வீட்டின் முன் காரை காயத்திரி நிறுத்தினாள். வீட்டு வாயிலில் ஜெயா காத்திருந்தாள்.

''நீ சொன்னது சரிதான், ராம்!''

''என்ன?''

''ஜெயா, நீ வரக் காணோமேன்னு கவலையோட காத்திட்டு இருக்கிறாள் பார். உன்னைக் கண்டதும்தான் அவள் கவலை முகத்தை விட்டு மறையறது தெரியறது.''

''நீ ரொம்ப ஜனங்களை உணர்ந்து பார்க்கிறே!''

ஜெயா ஓட்டமும் நடையுமாகக் கார் அருகில் வந்தாள். ''வாங்க, அக்கா!'' என்றாள் முகத்தில் பூரிப்புடன், வாய் நிறையப் பல்லாக.

''உன் வீட்டுக்காரரைக் கொண்டு வந்து விட்டுட்டேன். என்னைத் திட்டாதே!''

''உள்ளே வாங்க, அக்கா!''

''வரேன்'' காரைப் பூட்டி, சாவியை எடுத்துக் கொண்டு காயத்திரி ஜெயாவின் பின்னே வீட்டினுள் நுழைந்தாள்.

என் மக்களுடன் பேசினாள்; சிரித்தாள். சாப்பிட்டு விட்டுப் போகலாம் என்று சொன்ன போது, ஒரு நாள் சிறப்பாக ஏதாவது பண்ணி வை, சாப்பிடுகிறேன் என்றாள் ஜெயாவிடம். அரை மணி நேரம் இருந்து விட்டுச் சென்றாள்.

அன்றைய நிகழ்ச்சிகளை இரவு ஜெயாவிடம் ஒப்பித்தேன்.

அதற்கு அடுத்த நாள் பீச்சுக்குச் சென்றோம். அதிகமாகப் பேசவில்லை. அருகருகில் இருப்பதே இருவருக்கும் மகிழ்ச்சி அளிப்பதாக இருந்தது.

அப்புறம் மகாபலிபுரம் சென்று வந்தோம். பூமிநாதன் ஸூரிச்சிலிருந்து திரும்பி வந்து விட்டதாக காயத்திரி சொன்னாள்.

''நாளை சினிமாவுக்குப் போகலாமா?'' என்று கேட்டாள்.

''சினிமாவுக்கா?''

''ஏன்?''

''இல்லே....'' இழுத்தேன்.

''மார்னிங் ஷோ, நைட் ஷோ எல்லாம் போக முடியாது. ஆஃபீஸுக்கு அரை நாள் லீவு போடு. மாட்னி ஷோ போகலாம்.''

''சரி.''

சென்றோம். அருகருகே அமர்ந்து படம் பார்த்துக் கொண்ட நேரத்தில் காயத்திரி தன் இடது கையால் என் வலது கையைப் பற்றிக் கொண்டாள். இடைவேளைக்காகப் பிடிப்பை விட்டவள், மீண்டும் பற்றிக் கொண்டாள்.

அடுத்த நாள் ஃபோன் மணி அடித்தது. ரிஸீவரை எடுத்தேன். ''ஹலோ, ராம் பேசறேன்.''

''நான் பூமிநாதன் பேசறேன்.''

''சார்....!''

''உம்... காயத்திரி எல்லாம் சொன்னாள்.''

''குட்மார்னிங், சார்!''

''வெரிகுட்மார்னிங். மிஸ்டர் ராம், நீங்க கொஞ்சம் சாயந்திரம் என் பங்களாவுக்கு வர முடியுமா?''

''வரேன், சார்!''

''உங்க கூட பேசணும்.''

''சரி, சார்!''

''கார் அனுப்பறேன்.''

''வரேன், சார்!''

ரிஸீவர் அந்தப் பக்கம் வைக்கப் பட்டது.

எதுக்காக காயத்திரியின் கணவர் வரச் சொல்கிறார் என்பது புரியவில்லை. காயத்திரி என்ன சொல்லி இருக்கப் போகிறாள்? அன்று முழுதும் அலுவலகத்தில் எனக்கு வேலையே ஓடவில்லை. கீதை படிப்பவர், திருக்குறள் படிப்பவர். எதையும் சிந்தித்துத்

கவனக் குறைவால் விளையும் சிக்கல்கள்


என் உறவினர் வீட்டில் நடந்த பயங்கரம் இது...

என் உறவினர் வீட்டுக் குழந்தைக்குத் தட்டில் சோறு போட்டுக் கொடுத்துவிட்டு உள்ளே சமையலறையில் வேலையாக இருந்தனர். திடீரென குழந்தை தரையில் துடித்துக் கொண்டு இருக்கவே, என் உறவினர் பதறி விட்டார்.



என்ன செய்வதென்றே தெரியவில்லை. ஏன் இப்படி என்றும் புரியவில்லை. அவசரம் அவசரமாய்க் குழந்தையை டாக்டரிடம் கொண்டு போய் டெஸ்ட் பண்ணியதில் குழந்தையின் தொண்டையில் சிக்கியிருந்த தங்க மோதிரம் கிடைத்தது. நல்லவேளை. உரிய நேரத்தில் டாக்டரிடம் போனதால் உயிர் பிழைத்தது. எனவே, குழந்தைகளுக்கு வலது கரத்தில் மோதிரம் போடாதீர்கள்.

- ரோஸ்லின் ராஜ்குமார்



ஃபிரேம் போட்ட படங்கள் தவிர, சிறுசிறு படங்கள் 'மேக்னட்' வசதியுடன் பீரோவில் ஒட்ட விற்பார்கள். அது அதிகம் இருந்தால் சுவாமி அறையில் வைத்து மாட்ட முடியவில்லையே என கவலை வேண்டாம். பின்னால் இரண்டு இஞ்ச் அளவிற்கு செல்லோடேப் ஒட்டி அதை வெளிப் புறமாய் மடித்துப் பூஜை அறைச் சுவரில் ஒட்டிவிடலாம். ஒட்டியது போல் தெரியாது. அதுபோல் அட்டைப் படங்களையும் செய்யலாம்.

- கி. மஞ்சுளா

தான் செய்வார் என்று என்னுள் சமாதானப் படுத்திக் கொண்டேன்.

மாலையில் காரில் சென்றேன். அது கேட்டினுள் நுழைந்து போர்ட்டிகோவில் நின்றது. டிரைவர் இறங்கி, சுற்றி வந்து கதவைத் திறந்து விடும் வரைக் காத்திராமல் நானே திறந்து கொண்டு இறங்கினேன். எனக்காக காயத்திரியோ, பூமிநாதனோ வாயிலில் காத்திராதது ஏமாற்றம் அளிப்பதாக இருந்தது.

பங்களாவினுள் சென்றேன்.

இருவரும் ஹாலில் உட்கார்ந்திருந்தனர். என்னைக் கண்டதும் காயத்திரி புன்னகை காட்டினாள். அவளுடைய முகத்திலிருந்து எந்தவித அசம்பாவிதத்தையும் என்னால் உணர முடியவில்லை. சாதாரணமாக இருந்தாள்.

''வா, ராம்!'' என்றாள். ''இவர்தான் என் வீட்டுக்காரர். உன்னைப் பார்க்கணும்னார். ஃபோன் நம்பர் கொடுத்தேன்.''

''உட்காருங்கள்'' என்றார் அவர் ஆங்கிலத்தில்.

அமர்ந்தேன்.

''உங்கள் இருவருடைய இளவயது நட்பைப் பற்றி காயத்திரி விஸ்தாரமாக விவரித்தாள். மிஸ்டர் ராம்! கேட்க மகிழ்ச்சியாக இருந்தது. பாருங்கள், இத்தனை ஆண்டுகள் கழித்து சந்தித்துக் கொண்டிருக்கிறீர்களே, அதுதான் விசேஷம்! ஏதோ ஒரு சக்தி நம்மைப் பகடைக் காய்களாக ஆட்டுவிக்கிறது. நாம் வெறும் பொம்மைகள். இல்லையா, ராம்! என்ன நினைக்கிறீர்கள்?'' பூமிநாதன் கேட்டார்.

''இருக்கலாம், சார்!''

காயத்திரி எழுந்தாள். ''உங்கள் ரெண்டு பேருக்கும் நான் காப்பி கொண்டு வரேன். நீங்க பேசிட்டு இருங்க'' என்று கூறி நகர்ந்தாள்.

அவள் செல்வதை பூமிநாதன் பார்த்துக் கொண்டிருந்தார். மறைந்தவுடன் அவசரமாக, முகத்தை கடுப்பாக்கிக் கொண்டு, ''மிஸ்டர் ராம், நான் இதை விரும்பவில்லை. எந்தவொரு கணவனும் தன் மனைவி இன்னொருவருடன் பழகுவதை விரும்ப மாட்டான். காயத்திரி சொல்லுவாள், 'என் கணவர் பெரிய மனிதர், நம் நட்பை பெருந்தன்மையோடு ஏற்றுக் கொள்வார்' என்று. இல்லை. என்னால் அப்படி ஒரு நட்பை ஏற்றுக் கொள்ள முடியாது. ராம், தயவுசெய்து அமைதியான என் குடும்ப வாழ்க்கையைக் கெடுத்து விடாதீர்கள். உங்களை சந்தித்ததிலிருந்து காயத்திரி வெகுவாக மாறி இருக்கிறாள். எனக்குப் புரிகிறது. அது மகிழ்ச்சிதான். வேண்டாம், மிஸ்டர் ராம்! நீங்கள் என்ன செய்வீர்கள் என்பது எனக்குத் தெரியாது. உங்கள் நட்பை முறித்துக் கொள்ள வேண்டும். நான் காயத்திரியிடம் இதைச் சொல்ல முடியாது. என்னைப் பற்றிக் கேவலமாக எண்ணுவாள் என நான் அச்சமடைகிறேன். நீங்கள்தான் உதவ வேண்டும். இந்த நட்பை முறித்துக் கொள்ளுங்கள். நீங்கள் அறிவாளி என்று நம்புகிறேன். ஒரு நல்ல குடும்பத்தை நாசமாக்கிய பாவம் உங்களைச் சேரக் கூடாது.''

நான் சற்று திடுக்கிட்டுக் கேட்டுக் கொண்டிருந்தேன்.

சாத்தியம்தானா? காயத்திரியுடன் நான் கொண்ட நட்பு முறித்துக் கொள்ளக்கூடியதுதானா? இவ்வளவு பெரிய மனிதர் என்னிடம் கெஞ்சாத குறையாகக் கேட்டுக் கொள்கிறார்.

உண்மைதான். அழகான இக் குடும்பத்தை நான் கலைத்து விடக் கூடாதுதான். காயத்திரியின் நன்மைக்காகவே நான் அப்படி எதையும் செய்து விடக் கூடாது.

காயத்திரி என் மீது எந்த அளவு பிரியம், அன்பு, நட்பு பாராட்டுகிறாளோ, அந்த அளவுக்கு அவள் பேரிலும் எனக்குப் பிரியம், அன்பு, நட்பு இருக்கிறது. நான் சிறுவன் ராம் ஆகி இருக்கிறேன். கைகோர்த்து அவளுடன் ஓடி ஆடிப் பாடிய நாட்கள் என்னுள் பசுமையாக மீண்டும் பரந்து விரிந்து எழுந்திருக்கின்றன. இந்த அனுபவம் மனித இனத்தில் அனைவருக்கும் கிடைக்க வாய்ப்பு இல்லை. மனத்தில் இனம்புரியாத அளவு கடந்த மகிழ்ச்சி ஊற்றுப் பெருக்காக எழுந்து வழிகிறது. இந்த உணர்வை அழித்துக் கொள்வது என்றால்... முடியுமா?

முடிந்தாக வேண்டும். காயத்திரியின் நலத்தில் எனக்கு ஆர்வம் உண்டு என்றால் நான் இதைச் செய்தாக வேண்டும். அவளுடன் நான் கொண்ட நட்பை முறித்துக் கொள்ள வேண்டும். முறித்துக் கொள்வது என்றால் எப்படி? யோசித்துச் செயலாற்ற வேண்டும்.

''என்ன, மிஸ்டர் ராம்?''

''எனக்கு நீங்கள் சிறிது அவகாசம் தர வேண்டும்.''

''எதுக்கு?''

''நான் யோசிக்க வேண்டும். நீங்கள் சொல்வது எனக்குப் புரிகிறது. உங்களுக்கு நான் உதவுகிறேன். காயத்திரியின் நலன்களைக் கருதியும் நான் அவளுடன் கொண்டுள்ள நட்பை முறித்துக் கொள்ளத்தான் வேண்டும் என்பதை உணர்கிறேன். உங்கள் குடும்பம், தாம்பத்திய வாழ்க்கை சிதறி விட நான் காரணமாக இருந்து விடக் கூடாது.''

பூமிநாதன் என்னைக் கூர்ந்து பார்த்தார். அவருடைய முகத்தில் புன்னகை கண்டது. இவர் அப்படி ஒன்றும் நான் கற்பனை செய்திருந்தபடி காயத்திரியின் அழகுக்கு ஏற்றவாறு அழகானவராக இல்லை. நிறம் மட்டுதான். ஆனால் நல்ல உடல்வாகு. மூளை உள்ளவர். பேச்சின் மூலம் எவரையும் கவரக்கூடியவர். ஆங்கிலம் சரளமாகப் பேச வருகிறது.

''மிஸ்டர் ராம், நீங்கள் புத்திசாலி. புத்திசாலி மட்டும்ல்லாமல் மனிதாபிமானம் மிக்கவர். உங்களைப் போற்றுகிறேன். விவரங்களை விரைவாகப் புரிந்து கொள்கிறீர்கள். உங்களை என் கவனத்தில் எப்போதும் வைத்திருப்பேன். சிந்தித்து, முடிவு எடுங்கள்.''

காயத்திரி ஒரு ட்ரேயில் மூன்று கோப்பைகள் காப்பியுடன் வந்தாள். உடன் ஒரு தட்டில் உயர்வகை பிஸ்கட்களும் இருந்தன. ஸூரிச்சிலிருந்து பூமிநாதன் கொண்டு வந்தவைகளாக இருக்க வேண்டும்.

வந்தவள் எங்கள் முகங்களைப் பார்த்தாள். ட்ரேயை டீப்பாய் மீது வைத்து விட்டு, ''என்ன, நட்பு முறையில்தானே பேசிக் கொண்டிருக்கிறீர்கள்?'' என்று கேட்டாள்.

பூமிநாதன் சிரித்தபடி, ''ஏன்?''

''கேட்டேன்'' உட்கார்ந்து கொண்டாள்.

காயத்திரியின் முகத்தை நோக்கினேன். பழைய சின்ன காயத்திரியாகத்தான் அவள் தெரிந்தாள். இவளுடன் நட்பை முறித்துக் கொள்ள வேண்டுமாமே? இறைவா!

அன்றைய இரவில் ஜெயாவிடம் விவரித்தேன்.

''ஐயோ! என்னது இது? பிள்ளையார் பிடிக்க குரங்காய் முடிந்த விவகாரம் மாதிரி இருக்கே!''

''குரங்காய் முடிவதற்குள் நான் தீவிரமாக ஏதானும் செய்யணும்.''

''என்ன செய்யப் போறீங்க?''


''யோசிக்கணும்.''


''ஏதாவது செய்து, அக்காவின் மனசை நோக அடிச்சுடாதீங்க.''

''யோசிக்கணும்.''

அடிக்கடி ஆட்டோவிலோ, அல்லது ஸ்கூட்டரின் பின்னாலோ அமர்ந்து பயணம் செய்பவர்கள் பயணத்தின் போது வலது காதில் பஞ்சை வைத்துக் கொண்டு பயணம் செய்தால், ஜலதோஷம் பிடிக்காது. தொண்டை கரகரப்பு ஆகாது. காது, கண், கழுத்து வலிகள் நம்மைத் தாக்காது.

- எச். கௌசல்யா





வெல்வெட் ஹங்காமா
5 வெல்வெட் ஷாம்பூ சேஷே வாங்கினால்
1 சேஷே இலவசம்
New Velvette
CONDITIONER SHAMPOO
JASMINE
1 வெல்வெட் ஷாம்பூ 100ml பாட்டில் வாங்கினால்
5 சேஷே இலவசம்
இந்தியாவில் முதல் முறையாக ஷாம்பூவை சேஷேயில் அறிமுகப்படுத்திய வெல்வெட், இப்போது உங்களுக்கு அளிக்கிறது இரட்டிப்பு மகிழ்ச்சி...
மகத்தான ஹங்காமா சலுகை... காலி சேஷேக்களை சேமிக்க தேவையில்லை. வெல்வெட் ஷாம்பு வாங்கினால் கைமேல் பலன் — உடனடி சலுகை.
ஒப்பற்ற கூந்தல்... வெல்வெட்டின் பிளாக், எக், ரோஸ், ஜாஸ்மின், சாண்டல் மற்றும் பல்வேறு நறுமணங்களிலிருந்து உங்களுக்கு விருப்பமானதை வாங்குங்கள். உங்கள் கூந்தலில் மென்மை, பொலிவு, அழகைக் கூட்டிடுங்கள்.
New Velvette
CONDITIONER SHAMPOO
ROSE
PLUS
இச்சலுகை தென்னிந்தியாவில் மார்ச் 31, 1994 வரை மட்டுமே.

முகப்பருவைப் போக்கச்
சிறிதளவு ஜாதிக்காயை
இழைத்து தினமும் பருக்களின் மீது
தடவி வர, பருக்கள் இருந்த இடம்
தெரியாமல் மறைந்துவிடும்.
இது என் மாமியார் சொல்லி
நான் அனுபவத்தில்
கண்ட உண்மை.
- அகிலா

''யோசிங்க. உங்க யோசனை நல்ல படியா இருக்கட்டும்'' ஜெயா போர்வையை இழுத்துக் கொண்டு உடனேயே தூங்கி விட்டாள்.

கவனத்துக்கு வந்தது. அது என்ன பாடல்? பாரதியாரின் பாடல்... 'பிள்ளைப் பிராயத்திலே...' உடனேயே அந்த இரவுப் பொழுதில் அப்பாடலைப் படித்துப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் உள்ளத்துள் வெள்ளமாக எழுந்தது. எழுந்தேன். வாசல் அறைக்குச் சென்று, அலமாரியில் 'பாரதியின் கவிதைகள்' நூலைத் தேடினேன். கிடைத்தது. பிரித்தேன்.

'சரஸ்வதி காதல்'

'பிள்ளைப் பிராயத்திலே - அவள்
பெண்மையைக் கண்டு
மயங்கி விட்டேன் அங்கு
பள்ளிப் படிப்பினிலே - மதி
பற்றிட வில்லை என்னிலும்
தனிப்பட
வெள்ளை மலர் அணை மேல் -
அவள்
வீணையும் கையும் விரிந்த முகமலர்
விள்ளும் பொருள் அமுதும்
- கண்டு என்
வெள்ளை மனம் பறிகொடுத்தேன்,
அம்மா!'

ஓ, படிக்கப் படிக்க என் உள்ளம் கரைகிறது. நெஞ்சு அடைத்தது. அழுதேன். அழுது தீர்த்துக் கொண்டேன்.

காலையில் அலுவலகம் சென்றதும் காயத்திரிக்கு ஃபோன் செய்தேன்.

பூமிநாதன் எடுத்தார்.

''குட்மார்னிங், சார்! நான் காயத்திரியுடன் பேச முடியுமா?''

''பேசுங்கள், மிஸ்டர் ராம்!'' அவர் வேறு எதுவும் கேட்கவில்லை. பெரிய மனிதன்.

காயத்திரி லைனில் வந்தாள்.

''ஹலோ!''

''நான் ராம் பேசறேன், காயத்திரி!''

''சொல்லு, ராம்!''

''இன்னிக்கு சாயந்திரம் என் ஆஃபீஸுக்கு வாயேன். சௌகரியப்படுமா?''

''சௌகரியப்படுமா, என்ன? நிச்சயம் வரேன்''

''ஃபோனை வச்சுடறேன்.''

''சரி.''

என் திட்டம் இதுதான். அவளை லாட்ஜுக்கு அழைப்பது. 'எதுக்கு?' என்று சற்று திடுக்கிட்டுக் கேட்பாள். 'வேறே எதுக்கு, காயத்திரி! உன்னோட படுக்கணும்னுதான்!' வெகுண்டு போய் என்னைப் பார்ப்பாள். 'ராம், உன்னை என்னவோ நினைச்சிட்டு இருந்தேன். இத்தனை மோசமானவனா நீ? என்னால் நம்பவே முடியலியே! இது ஜெயாவுக்கு நீ செய்யற துரோகம்னு நினைச்சுப் பார்த்தாயா?' என்று கூறுவாள். 'நமக்குள்ளே என்ன, காயத்திரி? இது யாருக்குத் தெரியப் போறது?' என்று நான் சொல்வேன். அவள் விருட்டென்று எழுவாள். கைப் பையுடன் கோபத்துடன் ரிஸப்ஷன் அறையை விட்டு விரைந்து செல்வாள். எங்கள் நட்புறவு முறியும்.

காத்திருந்தேன். இதயம் மார்புக் கூட்டினுள் குருவிக் குஞ்சாக இறக்கைகளைச் சிலிர்த்து அடித்துக் கொண்டது.

மாலை மணி நாலரை சுமாருக்கு காயத்திரி வந்தாள். சேவகர் வந்து சொல்லி விட்டுச் சென்றார். ரிஸப்ஷன் அறையை நோக்கி நடந்தேன்.

காயத்திரி அமர்ந்திருந்தாள். என்னைக் கண்டதும் வழக்கமான புன்னகையை வாரி வீசினாள்.

''காப்பி சாப்பிடறியா, காயத்திரி?''

''வேணாம்.''

எதிரே உட்கார்ந்து கொண்டேன். ''இன்னிக்கு எங்கே போகலாம் சொல்லு.''

''உம்? நீயே சொல். நீதானே என்னை வரச் சொன்னே? எங்கே போகலாங்கிறதை தீர்மானிக்காமலா வரச் சொல்லியிருப்பே?''

பெருமூச்சு விட்டேன். மார்பு அடித்துக் கொண்டது. ''நான் ஒரு இடம் சொன்னால் கோவிச்சுக்க மாட்டியே?''

''கோவமா? உன் பேரிலா? அப்படி எனக்குக் கோவம் வரும்படியா தப்புப் பண்ணறவன் இல்லை நீ, ராம்!''

''உம்...? அப்படியா நீ நினைக்கிறே?''

''ஏன்?''

''இன்னிக்கு உன்னை லாட்ஜ் எதுக்காவது அழைச்சிட்டுப் போகலாம்னு இருக்கேன்.''

''லாட்ஜுக்கா?''

''ஆமாம். லாட்ஜ்லே அறை எடுத்துத் தங்கலாம்.''

அவள் என்னைக் கூர்ந்து நோக்கினாள். ''அப்படி ஒரு ஆசை உனக்கு இருக்கா, ராம்!''

''ஏன்? இருக்கக் கூடாதா? - நான் ஒரு ஆண். நீ பெண்.''

''சரி. அந்த ஒரு ஆசை உனக்கு இருந்தால், நான் மாட்டேன்னா சொல்வேன்?''

ஓ! இந்த அவளுடைய பதிலை நான் எதிர்பார்க்கவில்லை. நட்புக்காக எதையெல்லாம் தியாகம் செய்ய இருக்கிறா இந்த மங்கை!

''காயத்திரி!'' என் குரல் தழுதழுத்தது.

''என்ன, ராம்?''

''என்னை மன்னிச்சுடு.''

''எதுக்கு? நான்தான் சம்மதம்னு சொல்றேனே!''

''வேணாம், காயத்திரி! உன் பெருமையை நான் இன்னும் முழுசாக அறியல்லே.''

''என்ன சொல்றே நீ?''

முந்தைய தினம் மாலை அவளுடைய கணவருக்கும் எனக்கும் இடையே நடந்த உரையாடலை விரிவாக அவளிடம் தெரிவித்தேன். ''காயத்திரி, உன் குடும்ப நன்மைக்காக நாம் நமது சினேகத்தை துறக்கத்தான் வேணும்'' என்றேன்.

''அவர் உன்கிட்ட அப்படியா சொன்னார்?''

''ஆமா. ஆனால் அவர் பேரில் தப்பு இல்லை, காயத்திரி! உண்மையிலேயே உன் வீட்டுக்காரர் பெரிய மனிதர். எனக்கு உன் சந்தோஷத்தை விட, உன் குடும்ப அமைதி ரொம்ப முக்கியம். உன் குடும்பம் அமைதியா இருந்தால்தான், நீ சந்தோஷமாக இருக்க முடியும்.''

''இதுக்குத்தானா லாட்ஜ், அறை, அது, இதுனு நாடகம் ஆடினே?''

''நீ கோவிச்சுக்கிட்டு நம்ம நட்பை முறிச்சுப்பேன்னு நினைச்சேன். உன் நட்புணர்வை நான் தப்பா எடை போட்டுட்டேன், காயத்திரி! என்னை மன்னிச்சுடு. என்னை மன்னிச்சேன்னு நீ சொன்னால்தான் என் மனப் புண் ஆறும். உன்னைப் புரிஞ்சுக்காமல் பேசிட்டேன்.''

''உம்... இனிமே நீயும் நானும் சந்திக்க வேணாம், பேச வேணாம், ஃபோன்லே கூடப் பேச வேணாம். அப்படித்தானே?''

''வேணாம், காயத்திரி!''

''எப்படி உன்னாலே முடியறது, ராம்?''

''முடிஞ்சாகணுமே! உன் நன்மைக்காக நான் விட்டுக் கொடுத்துத்தானே ஆகணும்? நேத்து ராத்திரி அழுது தீர்த்துட்டேன்.''

''நான் பங்களாவுக்குப் போய் அழப் போறேன்.''

''வேணாம், காயத்திரி.''

''பின்னே சிநேகத்தை எப்படித்தான் முறிச்சுக்கிறது?''

என்னால் பதில் சொல்ல முடியவில்லை.

''ராம்!''

''உம்?''


''கையைக் கொடு.''

நீட்டினேன். பற்றி முத்தம் அளித்தாள். மூக்குக் கண்ணாடிக்குப் பின்னே மை பூசிய கண்களில் நீர் துளித்தது.

''நான் வரேன், ராம்!'' சென்றாள்.

மரமாகி நின்றேன்.

(முற்றும்)



பழைய ஷேவிங் பிரஷ் வீட்டில் இருந்தால் தூர எறிந்து விடாதீர்கள். ஃபேன், ரெகுலேட்டர், கதவு, ஜன்னல் க்ரில், டீ. வி. போன்றவற்றின் இடுக்குகளில் படியும் தூசியைச் சுத்தம் செய்யலாம்.

- அகிலா

சாதனை புரிந்த மகன்;

செ‌ன்னை திருவான்மியூரைச் சேர்ந்த 12 வயது சிறுவன் கிரி 6 மணி நேரத்திற்கு மேல் நீரில் மிதந்து சாதனை புரிந்துள்ளான். இது கின்னஸில் இடம்பெறக்கூடிய சாதனை. இந்தச் செய்தி எல்லா தினத்தாள்களிலும் வந்து எல்லோரையுமே வியக்க வைத்தது உண்மையே.

எந்த ஒரு தாயுமே தன் குழந்தையை 'மழையிலே நனையாதே. தண்ணிகிட்டே போகாதே' எனத் தொண தொணவென சொல்லிக் கொண்டிருக்கும் தாய்மார்களிடையே தன் ஒரே மகனை - அதுவும் 12 வயதே ஆன சிறுவனை நீரில் 6 மணி நேரம் மிதக்க எப்படி அனுமதித்தார் என்ற வியப்புடன் கிரியின் தாயார் திருமதி. உஷா முத்து கிருஷ்ணன் அவர்களைச் சந்தித்தோம்.



சந்தோஷிக்கும் தாய்!

இவர் ஒரு புகழ்பெற்ற மருத்துவர்.

''எனக்கு நீந்தத் தெரியாது. சிறிய வயதில் கற்றுக் கொள்ள முடியவில்லையே என்ற ஆதங்கம் எனக்கு நிரம்ப உண்டு. அவசியமாகத் தெரிந்து கொள்ள வேண்டிய கலைகளில் மிகவும் முக்கியமானது நீச்சல் என்பது என் எண்ணம். கலை, கல்வி, மொழிப் பயிற்சி - இப்படி எதுவானாலும் அதை இளம் வயதிலேயே கற்றுக் கொண்டு விட வேண்டும். வயது கூடிய பின்பு எத்தனையோ வேலைகள் - கவலைகள். இவைகளைக் கற்க நேரமேது? என்னால் இளம் வயதில் கற்றுக் கொள்ள முடியாத நீச்சல் பயிற்சியை என் குழந்தைகளுக்குத் (ஒரு மகன், ஒரு மகள்) தர வேண்டும் என எப்போதோ தீர்மானம் செய்து விட்டேன்.



கடந்த ஏப்ரல் மாதம் விடுமுறையின் போதுதான் கிரியை நீச்சல் பயிற்சியில் சேர்த்தோம். அவனுக்கு இதில் அதிக விருப்பமும், திறமையும் இருந்தது தெரியவந்தது. இவனுக்குப் பயிற்சி தரும் 'கோச்' திரு. வீர முத்துவை கடலிலேயே பிறந்து வளர்ந்தவர் என்றே சொல்லலாம். ஆம்! அவர் ஒரு மீனவ குடும்பத்தைச் சேர்ந்தவர். சென்ற மார்ச் மாதம் கோல்டன் பீச்சிலிருந்து கண்ணகி சிலை வரை 25 கிலோ மீட்டர் தூரத்தை நீந்திக் கடந்தவர். இதே போல நீரில் மிதக்கும் கலையிலும் வல்லவர். இடைவிடாமல் நீரில் 10 மணி நேரம் நீரில் மிதந்து சாதனை செய்தவர். கிரி நீச்சல் பயில ஆரம்பித்த கொஞ்ச காலத்திலேயே அவனுக்கு மிதப்பது வெகு எளிதாக வருகிறது என்று சொல்லி அதிலும் பயிற்சி தர ஆரம்பித்தார். தன் மகனைப் போல எண்ணி என் மகனுக்குப் பயிற்சி தரும் 'கோச்'சின் மீது உள்ள வெகுவான நம்பிக்கையும் - பகவான் பாபா விடம் உள்ள பக்தியும் நம்பிக்கையுமே எனக்கு உறுதியையும், துணிவையும் தந்தது. என் வாழ்க்கையில் பகவானின் அருள் ஒவ்வொரு கட்டத்திலுமே உண்டு. இன்று என் மகன் தன் 'கோச்'சைப் போலவே சாதனைகள் பல செய்ய வேண்டுமென எண்ணுகிறான்.

நீச்சல் உடலுக்கு மிகவும் சிறந்த பயிற்சி என்பது நம் அனைவருக்குமே தெரிந்தது தானே? இதைப் பயில ஆரம்பிக்கு முன்பு என் மகன் சரியாகச் சாப்பிட மாட்டான் - சாப்பிட ரொம்பவுமே அடம்பிடிப்பான். ஆனால் இது துவங்கிய பின்பு நன்கு பசி எடுப்பதால் தொல்லைப்படுத்தாமல் சாப்பிடுகிறான். அவன் படிப்பிலும் கெட்டிக்காரன்தான். அவன் நன்கு படிப்பான் என்ற நம்பிக்கை எப்போதுமே உண்டு. அதனால் அவனை நான் ரொம்பவும் 'படிபடி' என வற்புறுத்துவதில்லை.

வாழ்க்கை நன்கு அமைய கல்வி மிகவும் அவசியமான தேவைதான். ஆனால் எல்லா குழந்தைகளுமே, எப்போதுமே முதல் ரேங்க் வாங்க முடியுமா? யார் யாருக்கு எதில் திறமை இருக்கிறதோ அதில் முன்னணியில் வரட்டுமே? 'எக்ஸ்ட்ரா கரிகுலர்' - பற்றிய எண்ணமே ஏன் பெற்றோர்களில் பலருக்கு நினைவில் வருவதில்லை? குழந்தையின் விருப்பமும், திறமையும் அறிந்து அத் துறையில் தேவையான பயிற்சிகளைத் தர வேண்டியது பெற்றோர்களின் கடமையில்லையா? இதை ஒரு தாயாக மட்டுமல்லாமல் ஒரு மருத்துவராகவும் இருந்து சொல்கிறேன். நீச்சல் பயில ஆரம்பிக்கு முன்பு கிரிக்கு சளித் தொல்லை அடிக்கடி வரும். ஆனால் இப்போது அது அறவே இல்லை. என் கணவரின் பெரும் ஒத்துழைப்பும், ஆலோசனையும் கிரியின் இந்தச் சாதனைக்கு முக்கிய காரணம். கிரி படிக்கும் 'இந்து சீனியர் செகண்டரி' பள்ளியின் முதல்வர் திரு. வெங்கடாசலம் அவர்கள் கிரியின் பயிற்சிக்குத் தேவையான அளவு விடுமுறை தந்து ஊக்குவிக்கிறார். தேர்வுகள் எழுதுவதிலிருந்து கூட விலக்களித்திருக்கிறார். குழந்தைகளின் திறமைகளைக் கண்டறிந்து அதில் சிறப்புப் பயிற்சி தருவதை தங்களின் புத்தாண்டு தீர்மானமாக பெற்றோர்கள் ஏன் கொள்ளக் கூடாது?

நீச்சல் தெரியாத எனக்கு இன்று தண்ணீரில் ஏதாவது விபத்து நேர்ந்தாலும் கூட என் மகன் நிச்சயம் என்னைக் காப்பாற்றுவான் என்ற நம்பிக்கை உள்ளது'' என்று புன்முறுவல் பூத்தார் அந்தத் தாய். அதில்தான் எத்தனை உறுதி, பெருமை?!

- வைதேகி தேசிகன்

நாகி பாகியின் தேச சேவை

நன்கு அயர்ந்த தூக்கத்தி லிருந்த பாகியைத் தொலை பேசி அழைத்தது. கண் திறந்த பாகி ராமதாஸை நோக்கினாள். 'சே, என்ன மனுஷன், டெலி போன் அடிப்பது கூடத் தெரியா மல்' என அலுத்த வண்ணம் சின்ன விளக்கின் ஒளியில் மணி யைப் பார்த்தாள்.

''யார் இந்த நேரத்தில் உயிரை எடுப்பது'' என சலித்த வாறே 'ஹலோ' எனக் கூற மறு முனையிலிருந்து, ''ஹாய் பாகி, நான்தான் நாகி பேசறேன். எப்படி இருக்கே தூக்கத்தை கெடுத்து விட்டேனா?'' பாகியின் உடல் தெம்பில் நிமிர்ந்தது. ''ஹலோ' நாகி, நீயா, நூறு ஆயுசு. நீ எப்படி இருக்கே. நான் ஏதோ இருக்கேன். நான் எங்க அதுக்குள்ள தூங்கு வது. அது கிடக்கட்டும். என்ன விஷயம் சொல்லு.''

''எப்படி சொல்றதுன்னு தெரியலை பாகி, மனசே ரொம்ப சரியில்லை. அதான் போன் பண்ணினேன், உனக்கு அந்த ரிபெர் காவை ஞாபமிருக்கா?''

''ரிபெர்கா! ஆம்... அந்த ஆறடி அமெ ரிக்க பொம்பளை. அவளுக்கென்ன இப்போ?''

''அவ என்னை பத்து பேர் முன்னாடி அவமானமா பேசிட்டா.''

''என்ன சொன்னா?''

''அவ சமீபத்தில இந்தியா வந்தா இல் லையா. அவ போகறதுக்கு முன்னாடி நாம் நம்ம இந்திய கலாச்சாரம் புகழ்பெற்ற இடங்கள், உணவு வகைகள் இதையெல் லாம் சொல்லி அனுப்பினேன்.''

''அதற்கென்ன?''

''அவளுக்கு இந்தியாவின் சுகாதாரக் குறைவு பேரதிர்ச்சியை தந்ததாம். உடன் வந்தவர்களுக்கு உடம்புக்கு வந்து விட்ட தாம். இவளும் சீக்கிரமே அமெரிக்கா திரும்பி விட்டாளாம். வந்தவள் சும்மா இருக்கக் கூடாதா? எல்லோர் முன்னாலும் இந்தியாவிற்கு சுகாதாரம் தெரிய வேண் டும். அதற்குப் படித்தவர்கள் கொஞ்சம் சமூக சேவை செய்யலாமே என நம் தாய் நாட்டை இவள் குறைகூறுகிறாள்'' என்ற நாகிக்கு வருத்தத்தில் தொண்டை கம்மியது. சற்று தண்ணீர் குடித்துத் தொடர்ந்தாள்.

''நீ அதுக்காக அப்செட் ஆகாதே. நான் நல்லா திருப்பிக் கேட்டு விட்டேன். உலகி லேயே ஆண்கள் திருமணம் செய்து கொள்ள விரும்புவது ஜப்பானிய பெண்களையும், இந்தியப் பெண்களையும்தான். ஏனெனில் அவர்கள் பண்புகள் கூடியவர்கள். சகிப்புத் தன்மை கொண்டவர்கள். வாழ்க்கைக்கு நல்ல குணங்கள் முக்கியம். ஆகவே, எங்க ளுக்கு அகச் சுத்தம் அதிகம் என்று சொல்லி விட்டேன். இருந்தாலும் ஊர் வாய் நம் நாட் டின் சுகாதாரத்தைக் குறைகூறும் பொழுது என் நெஞ்சு பொறுப்பதில்லை. நான் அங்கு இருந்தாலாவது ஏதாவது என்னால் ஆன முயற்சிகளைச் செய்வேன். இப்பொழுது அதற்கும் வழியில்லை'' என உருக, பாகிக்கு சுரீர் என உரைத்தது.


நாமெல்லாம் இங்கு இருந்து கொண்டு நம் தாய் நாட்டிற்காக உடன்பிறந்த சகோதர சகோதரிகளுக்காக என்ன செய்தோம், இப் படி வாழ்நாட்களை வீணாக்கி விட்டேனே. இனியாவது நம் நாட்டிற்காக நாம் ஏதாவது செய்ய வேண்டும் என்ற எண்ணம் உள்ளத் தில் கொப்பளிக்க,

''நீ எதுக்காக நான் இருக்கும் பொழுது இப்படிப் பேசறே. நீ செய்வதை நான் செய்ய மாட்டேனா. நீ வேற நான் வேறயா. நாளை யிலிருந்து நான் நம் வீட்டுக்கு அருகாமை யில் இருக்கும் குடிசைவாழ் பகுதிக்குச் சென்று என் சமூக சேவையை உன் சார்பில் செய்வேன். அடுத்த முறை ரிபெர்க்கா வரு வதற்குள் நம் நாட்டையே மாற்றி விடு வேன். ஜெய் பாரதமாதா'' என உணர்ச்சி வசத்தில் சூளுரைக்க தூக்கத்தில் ஒட்டு


டாக்டர் கமலி ஸ்ரீபால்



கேட்டுக் கொண்டிருந்த ராமதாஸின் காது களில் அபாயச் சங்கு ஒலித்தது.



மறுநாள் மாலை நான்கு மணி அளவில் அவசர கூட்டமாக மாதர் சங்க அங்கத்தினர் கள் பாகியின் வீட்டில் கூடினர். மிக்ஸர், ஸ்வீட், ஜூஸ், காப்பி உபசாரங்களுக்குப் பிறகு நாட்டு மக்க ளின் பெரும் பகுதி யினர் வறுமைக்கோட் டின் கீழ் இருப்ப தனைப் பற்றியும், அத னால் அவர்கள் சுகா தாரக் குறைவும், ஆரோக்கியக் குறைவு மாய்க் காணப்படுவதைப் பற்றியும் காரசார விவாதங்கள் நடந்தன. மாதர் சங்க செக ரட்டரி பேசினார், ''அப்ப நீங்க என்ன செய் யணும்கறீங்க, நம்ம சங்கத்திலிருந்தும் அவ் வப்போது உணவு அளித்தல், புடைவை வழங்குதல் போன்றவற்றைச் செய் வோமே.''



பாகி இடைமறித்தாள். ''அது நூறோடு நூற்றி ஒன்று என்றாகி விடும். நாகியும், பாகியும் ஈடுபடும் செயல் என்றால் அது சாதாரணமாக இருக்கலாமா. வித்தியாசம் தெரிய வேண்டாமா. ஆகவே, வரும் பொங் கலுக்குள் அருகில் இருக்கும் குடிசைவாழ் பகுதி மக்களின் வீடுகளுக்கு வெள்ளை அடிப்போம். முடிந்தவர்கள் ஆளுக்கு ஒரு பெண்ணையோ, பிள்ளையையோ வீட்டில் கொண்டு வந்து வளர்ப்போம். வீட்டுக்கு ஒரு தென்னை மரம், தேக்கு மரக் கன்றுகள் கொடுப்போம். நோயாளிகளுடன் அமர்ந்து ஆறுதலாகப் பேசுவோம். பாவாடை, கைக் குட்டை தைக்க கற்றுக் கொடுத்து அதன் மூலம் வருமானம் பெறச் செய்வோம்'' என திட்டங்களை நீட்டினாள். சமூக சேவைத் திலகங்கள் ப்ளாரன்ஸ் நைட்டிங்கேலை யும், அன்னை தெரசாவையும் அங்கத்தினர் கள் பாகியின் பேச்சில் கண்டனர்.

இரண்டு பர்லாங் தள்ளியிருந்த குப்பம் பாகி குழு சமூக சேவை செய்யும் இட மாக தேர்ந்தெடுக்கப்பட்டது. ராமதாஸு டன் அவ்விடத்தை தொலைவிலிருந்து காணச் சென்ற பாகி சற்றே அஞ்சினாள். சுற்றும் முற்றுமாக குப்பைகளும், சுகாதார வசதி இன்மையும், அதிக கொசுத் தொல் லையும் பாகியை அச்சுறுத்தின. ரிபெர்க்கா சொன்னது சரியே என உள் மனம் கூறியது. பேசத் தெரியாமல் பேசி சங்க அங்கத்தி



னர்களிடம் மாட்டிக் கொண்டு விட்டோமே எனக் கூடத் தோன்றியது. அருகிலிருந்த ராம தாஸைப் பார்த்து,

''ஏங்க இதெல்லாம் சரிபடும்னு எனக்குத் தோணலை. போய் விடுவோமே'' எனக் கூறினாள்.

ராமதாஸின் உள்மனதிலோ கொள்ளை மகிழ்ச்சி. 'வீட்டில் ஒரு வேலை செய்ய என்ன ஆட்டம். எங்கம்மாவை என்ன பேச்சு பேசியிருப்பாய். அதற்கெல்லாம் பட வேண்டிய காலம் வந்து விட்டது. பெண்ணே!' என நினைத்தவாறே, ''இதெல்லாம் ஒரு பயமா, நாலு பெண்கள் வந்து தினமும் அவர்களே சுத்தம் செய்ய முற்பட்டால் இவர்களெல்லாம் ஒருசில நாட்களில் தானே மாறி விட மாட்டார்களா. அதற்கு முன் மாதிரியாக நாளையிலிருந்து நீ கூட வந்து ஆரம்பிக்கலாமே'' என் விவரிக்க பாகிக்கு தான் பழிவாங்கப்படுகிறோம் எனப் புரிந்தது. இருப்பினும் அதனை

இப்பொழுது காட்டிக் கொண்டால் வழியேது. எனவே, கெஞ்சிய குரலில்,

''என்னங்க நான் யார் பொண்டாட்டி, திரு. ராமதாஸ் மனைவி. நான் செய்யும் சேவை என்றா வெளியில் பேசுவார்கள். உங்கள் பெயரைத்தானே பேசுவார்கள். அப்படியிருக்க இந்த சேவை சிறப்புற நடைபெற உங்களை விட்டால் எனக்கு யாரிருக்கிறார்கள்'' என கண்ணை கசக்க ராமதாஸ் ஐஸாய் உருகினார். 'எப்படி இதனை சுத்தம் ஆக்குவது' என யோசனையில் ஆழ யோசனை பிறந்தது.

''பாகி, உன் மாதர் சங்க அங்கத்தினர்களில் ஒரு இருபது பேராவது கார் வைத்திருப்பாங்களா?''

''மேலவே இருக்கும் ஏன்?''

''இல்லை, ஒரு நாலு நாட்கள் உங்க அங்கத்தினர்கள் காலை, மாலை வேலைகளில் வண்டிகளில் வந்து இங்கு ஒரு ஐந்து, ஐந்து நிமிடங்கள் நின்று போகட்டும், மற்ற விவரங்களை பிறகு சொல்கிறேன்'' என்றார்.

பாகிக்கு எதுவும் புரியவில்லை. இருப்பினும் வாழ்க்கையில் முதல் முறையாக கணவனின் சொல்படி நடக்க முற்பட்டாள். அதன்படி மாதர் சங்க அங்கத்தினர்களில் அநேகர் நேரம் கிடைத்தபொழுதெல்லாம் காரில் சென்று குப்பத்தின் அருகே நின்று திரும்பினர்.

நான்கு நாட்களில் குப்பமே பரபரத்தது. 'யாரு இவுங்க?' 'தேர்தல் வருதா? யாராவது செத்துட்டாங்களா?'. 'புயல், மழைக்கு ஏதாவது உதவி வருமோ என்ற பேச்சுகளிடையே திடீரென ஒரு புரளி கிளம்பியது. சுகாதாரமற்ற நிலையில் உள்ள இந்தக் குப்பத்தை அப்புறப்படுத்தப் போகின்றார்கள் என்ற வதந்தி காட்டுத் தீயாக பரவியது. அவ்வளவுதான். இரண்டே நாட்களில் குப்பம் பளிச்சிட்டது. திடீரென தோன்றிய சுகாதாரம் யாரோ ஓர் முக்கிய பிரமுகரின் வருகைக்காக என கருதப்பட்டதால் ப்ளீச்சிங் பவுடர் தூவப்பட்டு, கொசு மருந்துகள் அடிக்கப்பட்டு கூடுதல் சிறப்பு பெற்றது. பொது மக்களும், மற்றோரும் யார் காரணம் என அறியும் ஆவல் கூடிக் கொண்டே செல்ல ராமதாஸ் குப்பத்திற்குச் சென்றார். மக்களை திரட்டினார்.

''நீங்கள் நல்வாழ்வு காண வேண்டுமென ஒரு மனம் உறுதி கொண்டதன் காரணமே இக்குப்பம் ஆரோக்யமடைந்தது. யார், யார் என நீங்கள் அறிய ஆவலாய் இருக்கும் அப் பெண்மணி, சமூக சேவகி இன்று மாலை உங்களை வந்து நேரில் சந்தித்துப் பேசுவார். உங்கள் குறைகளை நீக்கி வைப்பார்'' என முன்னறிவிப்பு செய்தார்.

மாலை ஐந்து மணி, குப்பம் வண்ண காகிதக் கொடிகளாலும், கோலங்களாலும் அழகு செய்யப்பட்டது. மைக் செட்டுகளும் காதைப் பிளக்கும் பாட்டுச் சத்தங்களும் அமர்க்களப்பட்டன. வேகமாய் வந்த பல கார்களில் நடு காரிலிருந்து இறங்கிய பாகி சுற்றுமுற்றும் பார்த்து சற்று ஏமாற்றமடைந்தாள். ஒரு போட்டோகிராபர் இருந்திருக்கலாமே 'வாராயென் தோழி, வாராயோ' என்ற பாடல் கால சம்பந்தமின்றி ஒலிக்க பாகி குப்பத்தினுள் நுழைந்தாள். சோடா, கலர் போன்ற பானக வகைகளால் உபசரிக்கப்பட்டாள். மனத்தில் விரைவில் சமூக சேவைக்கான ஜனாதிபதி பரிசு பெறும் காட்சி கண்முன்னால் ஓடியது.

ராமதாஸ் மக்களுக்கு விவரித்தார். ''ரோபோ புகழ், விண்வெளி புகழ் திருமதி. பாகி அவர்கள் இப்பொழுது தன்னை சமூக சேவைக்காக அர்பணித்துக் கொள்கிறார்கள். உங்களுக்கு பல செயல் திட்டங்களைச் செய்ய முன்வந்துள்ளார்கள். ஆக நாம் அனைவரும் ஒன்றுகூடி திருமதி. பாகி அவர்களின் கைகளை வலுப்படுத்துவோம்'' என சொற்பொழிவாற்றினார்.

பாகி மக்களோடு மக்களாகக் கலந்தாள். மாதர் சங்கமும் மகிழ்ச்சியில் திளைத்தது. தன் முதல் கட்ட அறிவிப்பாக ''எங்கள் சங்க அங்கத்தினர்களின் வீடுகளில் உதவிக்காக பணிபுரிய முன்வருபவர்களை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். உங்களை அன்போடும், பாசத்தோடும் நடத்தும்படி பார்த்துக் கொள்வேன். மூன்று வேளை உணவும், கணிசமான மாதச் சம்பளமும் கிடைக்கும்.

உங்கள் எதிரிகளைத் தாராளமாக மன்னியுங்கள். உண்மையில் உங்கள் மன்னிப்பை விட அவர்களை உறுத்தக் கூடியது வேறு எதுவும் இல்லை. மிகத் தாராளத்துடன், அன்புடன் மன்னிக்கப்பட்ட எதிரிகள் உங்களுக்கே உண்மையான நண்பர்களாக மாறி விடுகிறார்கள்.

- சுவாமி சின்மயானந்தர்

தகவல் : ஆர். பி.





'டேட் எக்ஸ்பயரி' ஆன
மாத்திரைகள் நிறைய சேர்ந்து
விட்டால் அவற்றைத்
தூக்கி எறிந்துவிட வேண்டாம்.
அம்மாத்திரைகளை எல்லாம்
நன்றாகப் பொடி செய்து தண்ணீரில்
கலந்து செடி கொடிகளுக்குத் தெளித்து
விடலாம். இதனால் செடிகளுக்குப்
பூச்சி, புழு வராமல் செடிகள்
செழித்து வளரும்.
- அனுபல்லவி



இச் செயலின் மூலம் குப்பத்தின் வேலையில்லாத் திண்டாட்டத்தை குறைக்க முற்படுவேன்'' என அறிவித்தாள்.

இதனைத் தொடர்ந்து மக்களிடமிருந்து சரமாரியான கேள்விகள் கேட்கப்பட்டன. நாங்க வேலை செய்யும் வீட்டில் கலர் டீ.வி. இருக்குமா? 'மாவாட்டும் மிஷின் அரைக்கும் மிஷின் வேண்டும். நான்கு பேருக்கு மேல் உள்ள குடும்பத்தில் இரண்டு ஆட்களை வேலைக்குச் சேர்த்துக் கொள்ள வேண்டும். வாரத்தில் இரண்டு நாட்கள் லீவு வேண்டும். 'தீபாவளி பொங்கலுக்குத் துணியும் சிறு சிறு பண்டிகைகளுக்கு ரூ. 50 வேண்டும்' என்ற பல உரிமைக் குரல்கள் ஒலிக்க மக்களின் விழிப்புணர்வும், பொது அறிவும் பளிச்சிட்டது.

மாதர் சங்க அங்கத்தினர்களிடையே எதிர்ப்பு கிளம்பியது. ''என்ன தைரியத்தில் இப்படி பாகி உறுதிகளை அள்ளி வீசுகிறாள். விலைவாசி பற்றி ஏதாவது ஞாபகம் இவளுக்கு இருக்கா, இல்லையா, நம் வீட்டுச் செலவை இவளா கொடுக்கப் போகிறாள். சமூக சேவை என்ற பெயரில் நம்மைத் திண்டாட வைத்து விடுவாளோ'' என குரல்கள் எழும்பின. இதனிடையே மாதர் சங்க செகரட்டரி பாகியை நோக்கி ''என்னதான் குப்பத்தை பளிச்சிட செய்தாலும்'' உங்க கையால இரண்டொரு செயல்களைச் செய்தால்தான் மக்களுக்கு பார்க்க திருப்தியாக இருக்கும். உங்க பேரிலும் நம்பிக்கை பிறக்கும்'' என்றாள். ''அதுக்கு என்ன செய்யணும்? மனத்தில் இடம்பிடிக்கிற மாதிரி டக்குனு செய்யணும் ஹாம்... ஒரு ஐடியா. அதோ அந்தக் குழந்தை பாருங்க ஒரே அழுக்கா இருக்கு. நீங்க அதை செல்லமா பேசி சோப்புப் போட்டு குளிக்க வைச்சு, அப்படியே அந்தக் குழந்தை சட்டையை துவைச்சுப் போடுங்க. அப்புறம் பாருங்க இந்த ஜனங்க எல்லாம் உங்க பக்கம்தான். யாரும் அசைக்க முடியாது.''

பாகிக்கு இவையெல்லாம் செயற்கையாகவும், மிகையாகவும் தோன்றியது. சற்று சங்கடத்தில் நெளிந்தாள். இருப்பினும், வேறு வழியில்லை எனத் தோன்றியது. எனவே, அக்குழந்தையை அன்போடு அழைத்தாள். குழந்தையும் மிரள மிரள அருகே வந்தது. பாகி குழந்தையை ஆதரவாகப் பற்றியவாறு, ''நீ எவ்வளவு அழகா இருக்கே. ஆனா சுத்தமா இருக்க வேண்டாமா? அதனால ஆன்ட்டி உன்னை இப்போ குளிப்பாட்டிவிடப் போறேன்'' என்றவாறு அழைத்துச் செல்ல உடன் வந்த மற்ற அங்கத்தினர்களில் சிலர் வயதான மூதாட்டிகளுக்குத் தலைக்கு எண்ணெய் தடவி, பூச்சி நீக்கி, தலைவாரி முடித்தனர்.

ஒரு வழியாகக் குப்பத்தைவிட்டு விடைபெற்றபோது அங்கிருந்த பெண்கள் பாகியை நோக்கி, ''ஏம்மா, நாளைக்கு எத்தனை மணிக்கு வந்து பிள்ளைங்களைக் குளிப்பாட்டுவீங்க, வெயிலுக்கா வாங்க. இல்லாட்டி தண்ணி சிலுப்புல பிள்ளைங்களுக்கு சளி பிடிச்சுக்குமே'' என்றனர்.

பாகிக்குத் திக்கென்றது. தினமும் பகலில் வந்து இப்படிக் குளிக்க வைக்க வேண்டுமா? ஆபீஸுக்கு யார் செல்வது? பிள்ளையார் பிடிக்கக் குரங்கான கதையாகி விடுமோ?' என அஞ்சினாள். வீடு திரும்பிய பாகியைப் பார்த்து அவரின் மாமியார் தோள்பட்டையில் இடித்துக் கொண்டார். 'மூணு நாள் முன்னாடி முழங்காலில் கொஞ்சம் வலி, எண்ணெய் தடவி வெந்நீர் ஊத்தி விடம்மான்னு கேட்டேன். அதற்கு நேரமில்லை. இப்படி அலையறதுக்கு பார்க்க மட்டும் நிறைய நேரம் இருக்காக்கும்!. எல்லாம் கலியுகத்தில தலைகீழாத்தான் நடக்கிறது' என காதில் தெளிவாய் விழும்படி முணுமுணுத்தார்.

சற்று நேரத்தில் தொலைபேசி அழைத்தது. ''ஹலோ, பாகி அம்மாங்களா? வணக்கம் அம்மா, நான் ஒரு பொதுநலத் தொண்டன். என்னைப் பத்திக் குப்பத்துல கேட்டுப் பாருங்க, பெருமையாப் பேசுவாங்க. உங்களுக்குத் தேவைப்படும்போது கல் எறிய

ணும், அடிக்கணும், பஸ்ஸை நொறுக்கணும், மறியல் செய்யணும்னா சொல்லுங்க. எல்லாத்துக்கும் என்கிட்ட ஆளு இருக்கு. மத்த யாரையும் நம்பாதீங்க. எல்லாம் திருட்டுப் பசங்க. நான் உங்களை கூடிய விரைவில் சந்திக்கிறேன்' போன் துண்டிக்கப்பட்டது.

விஷயம் அறிந்த ராமதாஸ் பாகியை அனுதாபத்துடன் நோக்கினார். ''ஒண்ணும் பதற்றப்படாதே பாகி. உலகம்னா நாலும் இருக்கத்தான் செய்யும். கொஞ்சம் பிரபலமாகி விட்டாலே இப்படித்தான். நீ அமைதியா இரு!'' என ஆசுவாசப்படுத்தினார். மறுநாள் காலையில் வீட்டு முன் ஒரு பெரிய கூட்டமே கூடி இருக்கவே பாகி வெளியே வந்தாள்.

'பாகி அம்மா வாழ்க' எனக் கூவிய கூட்டம் ஒன்றன் பின் ஒன்றாக பாகியை அணுகியது. கோழி திருடு நிகழ்ச்சியிலிருந்து, பலவித சண்டை பூசல்களைக் கேட்டுத் தீர்த்து முடிக்க மணி பதினொன்று ஆகியது. 'நம்மை விட்டால் எங்கு செல்வார்கள். அன்போடு நம்மை நம்பி வருகிறார்கள்' எனத் தேற்றிக் கொண்டாள். விரைவில் மாதர் சங்க அங்கத்தினர்களின் உதவியோடு முதியோர் கல்வி, தையல் கலை போன்ற நல வகுப்புகள் எப்படியோ நடக்க ஆரம்பித்தன. குப்பத்தின் முன்னேற்றத்திற்கே பாகியின் முழுநேர உழைப்பும் செலவாகியது. பாகி நாகிக்குக் கடிதம் எழுதினாள். 'நாகி, இப்பொழுதெல்லாம் நான் ரொம்ப டயர்டாக ஆகிவிடுகிறேன். சமைக்க, வீட்டைக் கவனிக்க எங்கே நேரம் இருக்கு? வீட்டு உதவிக்கு ஆள் தேடறேன். கிடைப்பது குதிரைக் கொம்பாய் இருக்கு. அப்படியே வந்தாலும் அவர்களின் சம்பளமும், தேவைகளும் நமக்குக் கட்டுப்படி ஆவதில்லை. இதற்காக நான் என் கடமைகளில் எந்தவிதக் குறைபாடும் வைப்பதில்லை. வீடு சுத்தம் செய்யும் மிஷின், துணி துவைக்கும் மிஷின் என எல்லாவற்றையும் மாமியாருக்கு வாங்கிக் கொடுத்துவிட்டேன். தேவைப்படும்பொழுது காசு செலவழிவதைப் பொருட்படுத்தாது ஹோட்டலில் வாங்கிக் கொள்கிறேன். நாட்டு முன்னேற்றத்திற்காக கஸ்தூரிபா அன்னை எத்தனையோ தியாகங்களைச் செய்யவில்லையா? அதனால்தான் எந்த ஒரு தொல்லையையும் பெரிதாய்ப் பொருட்படுத்துவதில்லை' என கடிதம் விவரித்தது. பாகியின் தேசப்பற்றினைக் கண்ட நாகி பெருமிதம் கொண்டாள்.

பாகிக்குப் பதில் கடிதம் எழுதினாள். 'நீ செய்யும் சேவைகளை நேரில் காணத்தான் எனக்குக் கொடுத்து வைக்கவில்லை. ஆகவே, ஏதேனும் ஒரு விழாவினைக் குப்பத்தில் நடத்தி அதனை வீடியோ கேசட் மூலம் இங்கு அனுப்பினால் நானும் பார்த்து மகிழ்வேன். ரிபெர்க்காவிற்கும் காண்பிப்பேன். இது என் கௌரவப் பிரச்னை. எனவே, அதிக கவனத்தோடு சிறப்பாய் நிகழ்த்தவும். விரைவில் உன் கேசட்டை ஆவலுடன் எதிர்பார்க்கும் அன்பு நாகி.'

கடிதத்தைக் கண்ட பாகி யோசனையில் ஆழ்ந்தாள். விழா என்றால் சாதாரணமா? நிதி திரட்ட வேண்டாமா? பல பெரிய மனிதர்களைக் கூப்பிட வேண்டாமா? நிகழ்ச்சிகள் நடத்த வேண்டாமா? பாகியின் பங்கு அதில் பளிச்சிட வேண்டாமா? மாதர் சங்க அங்கத்தினர்கள் கூடி விவாதித்தனர். இறுதியில் பொங்கல் தினம் விழா நாளாகக் குறிக்கப்பட்டது. மாதர் சங்க அங்கத்தினர்களும், குப்ப மக்களும் காலை முதல் மாலை வரை ஒன்றுகூடி இருந்து பொங்கலிட்டு விழாக்கள் நடத்துவது என முடிவாயிற்று. விழா நிகழ்ச்சிகளாக சர்வமத பிரார்த்தனை. முதியோர் கல்விக்கான வினாடி வினா போட்டிகள் நிகழ்த்துதல், என நிகழ்ச்சிகளின் பட்டியல் நீண்டு கொண்டே சென்றது.

பாகிக்கு இப்போது அவ்வளவு கடினமாகத் தெரியவில்லை. ஏனெனில் மல்லிகா என்ற நடுத்தர வயதுப் பெண்மணி வீட்டோடு இருந்து பாகிக்கு வீட்டின் கவலையே தெரியாமல் பார்த்துக் கொண்டாள். கிட்டத்தட்ட குடும்ப அங்கத்தினராகவே மாறிவிட்டாள். ஆயிற்று, கடந்த பதினைந்து நாட்களாய் பாகியும் ராமதாஸும் விழாவிற்காக அலையாய் அலைந்தாயிற்று.

பால் (BALL) ஐஸ்கிரீம் வாங்கும்போது, அந்த பந்துகளை எல்லாம் குழந்தைகளுக்கு விளையாட்டுச் சாமானாய்ப் போடாமல் அவற்றில் உ. பருப்பு, க.



பருப்பு என்று போட்டு வைக்கலாம். டிரான்ஸ்பெரண்டாக இருப்பதால் சுலபமாகக் கண்டுபிடிக்கவும் முடியும். (வேறு யாராவது உபயோகப்படுத்தும் போது) மேலும் அவற்றில் உப்பு, ஊறுகாய் என்று போட்டு வைத்து டைனிங் டேபிளில் வைத்தாலும் அழகாய் இருக்கும்.

- அனுபல்லவி

குறிப்பிட்ட நாளும் வந்தது. குப்பம் கல்யாண கோலம் பூண்டது. வீட்டில் பொங்கல் பானை வைக்கக் கூட நேரம் இல்லை பாகிக்கு. நாடு என்ற பரந்த மனப்பான்மை கொண்ட பிறகு வீடு என்ற குறுகிய வட்டத்தில் பொருந்த முடியுமா என மனதினைத் தேற்றிக் கொண்டாள். பல பத்திரிகை நிருபர்களும், சிறப்பு விருந்தினர்களும் பொது மக்களும் கூட, ராமதாஸே பாகியின் திறமையைக் கண்டு மகிழ்ந்து போனார்.

முதல் நிகழ்ச்சியாக சர்வமதப் பிரார்த்தனை ஆரம்பிக்க வேண்டி அதற்கான பாடல் பயிற்சி பெற்ற குப்பத்தைச் சேர்ந்த சிறுவன் ஆறுமுகத்தினை பலமுறை மேடைக்கு வருமாறு மைக்கில் அழைத்தனர். ஆறுமுகத்தினைக் காணவில்லை. பாகியின் அருகில் ஓடோடி வந்தாள் மாதர் சங்க அங்கத்தினர் கௌரி. ''பாகி, அந்தப் பையன் மேடைக்கு வர ரொம்ப பயந்து போய் அழறான். ஸ்டேஜ்-பியர். இதோ இன்னொரு பையன் நான் பாட்டுப் பாடறேன் என அவனாகவே முன்னுக்கு வந்துள்ளான், அவனைக் கூப்பிடவா?''

பாகிக்குக் கோபம். 'இதையெல்லாம் இவர்கள் முதலிலேயே கவனிக்க வேண்டாமா? எல்லாம் என் தலையில்தானா?' என மனத்தினுள் சலித்தவாறே, ''சரி, சரி, சீக்கிரமா வரச் சொல்லு'' என்றாள். மேடைக்குத் தைரியமாய் வந்த அந்தச் சிறுவன் திடீரென கை, கால்களை உதறியவாறு, 'சிக்கு, புக்கு, சிக்குபுக்கு ரயிலே என பாட ஆரம்பிக்க அவனைத் தொடர்ந்து பல சிறுவர்களும், இளைஞர்களும் மேடையை ஆக்கிரமிக்க விசில் சப்தங்கள் காதைப் பிளக்க பாகி செய்வதறியாது திகைத்தாள். ஒரு வழியாய் அவர்களைக் கட்டுப்படுத்திய பிறகு அடுத்த நிகழ்ச்சியாக முதியோர்க்கான பொது அறிவு வினாடி வினா நிகழச்சி துவங்கியது. ஓய்வுபெற்ற ஆசிரியர் ஒருவர் கேள்விகளைக் கேட்கத் துவங்கினார்.

''உங்களுக்குத் தெரிந்த இந்தியப் பிரதமரின் பெயரைச் சொல்லவும்.''

'காந்தி மகான்,'' ''எம். ஜி. ஆர்.''

ஆசிரியர் கெட்டிக்காரர். சமாளித்தார். ''பரவாயில்லை. நாட்டில் பிரபலமானவங்க பேரைச் சொல்லிட்டீங்க. கொஞ்சம் சரி செய்யணும் அவ்வளவுதான். இனி அடுத்த கேள்வி.

''நீங்க அடிக்கடி திருக்குறள், திருக்குறள் என்ற சொல்லைக் கேள்விப்பட்டிருப்பீங்க. அந்தத் திருக்குறளை எழுதியவர் யார்?

''உங்களுக்குத் தெரியும். தலையில் நீண்ட முடி. தாடியெல்லாம் இருக்கும். படத்தில பார்த்திருப்பீங்க, ஆம் தெரியும் சொல்லுங்க!'' என்று எடுத்துக் கொடுத்தார்.

''பாரதியார்'' என்றார் ஒரு முதியவர்.

பாகி ஆசிரியரை நோக்கி ஓடினாள். ''சார், நீங்க கடினமான கேள்விகளா கேட்டா எப்படி?'' என வாதிட்டாள்.

இதனை அடுத்து சிறுவர்களுக்காகப் பேசிய தலைவர் 'மழைநீர் சேமிப்பு நாட்டின் பொருளாதாரம் போன்ற சிறிய தலைப்புகளில் நீண்ட உரை ஆற்ற சிறுவர்கள் மாயமாயினர். எப்படியோ ஒவ்வொரு நிகழ்ச்சியும் இவ்வாறு இனிதே நிறைவுற்றது. சிறப்பு விருந்தினரோ தனது உரையில் காந்தியையும், பாரதியையும் இவர்கள் உச்சரிக்கும் வண்ணம் செய்ததே பாகியின் முயற்சிக்கு வெற்றி எனவும், அனைத்து மக்களும் ஒன்றுகூடி ஆடிப் பாடியதே சர்வமத ஒற்றுமை எனவும் புகழ்ந்து கூறினார்.

எப்படியோ சாதித்த பெருமையுடன் வீடு திரும்பிய பாகிக்குப் பேரதிர்ச்சி காத்திருந்தது. மல்லிகா வீட்டில் உள்ள பொருட்களோடு மாயமாய் மறைந்துவிட, பாகியின் மாமியார் வருவோர் போவோரிடம் பாகியின் வீட்டுச் சேவையை இகழ் பாடிக் கொண்டிருந்தார். பாகிக்கும், நாகிக்கும் ஒன்று புரிந்தது. சமூக சேவை செய்ய முன்வருவோருக்குச் சமூகமும் உண்மையான சேவை செய்ய வேண்டும். மேலும், சமூக சேவை குடும்பத்திலேதான் துவங்குகிறது என்று!

தோசை மாவு குறைவாக
இருக்கிறதே என்று மேல் மாவு
சேர்க்கும்போது தோசை வெள்ளையாக
இருக்கும். மேல் மாவுடன் சிறிது கடலை
மாவும் சேர்த்துக் கொண்டு தோசை
சுட்டால் தோசை நல்ல சிவப்பாக,
முறுகலாக இருக்கும்!
- வி. பி. மகராசி

‘கண்’ணை ‘கண்’போல பாதுகாக்கவேணும்!

நமக்கு ஒரு விஷயம் மிக முக்கியமானது என்றால் ‘அதை ‘கண்’ போல பாதுகாக்கணும்’ என்போம். ரொம்பப் பிரியமானவர்களை அழைக்கும் விளிகளிலே ‘கண்ணே!’ என்பது முதன்மையானது. இப்படி நம் உறுப்புகளிலே ‘கண்’ என்பது எத்தனை முக்கியமானது என்பதை இவற்றின் மூலமே தெரிந்து கொள்ள முடியும். ஆனால் கண்ணைப் பாதுகாக்க வேண்டும் என்பதிலே அவ்வளவு விழிப்புணர்வு




இல்லை (பாருங்கள் அதிலும் ‘விழிப்பு’ எனும் கண் சம்பந்தப்பட்டதுதான் வருகிறது) நமக்கு.

சேலத்தில் டி.எம்.எஸ். கண் மருத்துவமனை நடத்தி வரும் டாக்டர் சித்தார்த்தன் இங்கு கண்களைப் பற்றி, அதைப் பாதுகாக்கும் முறைகள் பற்றி மிகவும் அழகாக விவரிக்கிறார்:-

மனிதனின் ஒவ்வொரு அங்கமும் அதன் செயலுக்கு ஏற்ப, அமைப்பு, இயக்க நிலை, வலிமை பொருந்தி உருவாக்கப்பட்டுள்ளது. கண்கள் மிகவும் நுட்பமான வடிவமைப்பும் இலகுவான தன்மையும் கொண்டவை. கை, கால் களைப் போல திடமாகவோ அல்லது தினசரி சாதாரணமாக உடலுக்கு ஏற்படும் சிறு மோதல்கள் காயங்களை எளிதாகச் சமாளிக்கக் கூடிய நிலையிலோ இல்லை. எனவே இத்தகைய மென்மையான தன்மைக்கேற்ப கண்கள் இயற்கையாவே மிகவும் பாதுகாப்புடன் அமைக்கப்பட்டுள்ளன.

உறுதியான எலும்புக் குழிவுக்குள் நம் விழிகள் அமைந்துள்ளன. மூக்கு மற்றும் முகத்தின் எலும்புக்கூட்டின் பகுதிகள் கண்களைச் சுற்றி அரணாக பாதுகாக்கின்றன. நேர்முகமின்றி பக்கவாட்டில் இருந்து வருகின்ற தாக்குதல் களில் இருந்து இவை காக்கின்றன.

காற்றில் பறந்து வரும் தூசு, பிற சிறு பொருட்கள் ஆகியன கண்களில் விழுந்து தொல்லை தரா வண்ணம், கண்களின் மேலும் கீழும் அமைந்துள்ள இமைகள் காக்கின்றன; நாம் கண்களை இறுக மூடிக் கொள்ளும் போது, இமைகள் சுமார் அரை அங்குலம் அளவிற்கு மொத்தமானதாகி, கேடயமாகக் கண்களைப் பாதுகாக்கின் றன; பலத்த காற்று, கூசுகின்ற ஒளி இவற்றி லிருந்தும் காக்கின்றன.



* டாக்டர் சித்தார்த்தன்

தொடர்ந்து மிகச் சிறிய அளவில் சுரந்து கொண்டே இருக்கும் கண்ணீர், கண்களை ...ப் போதும் சுத்தமாக வைத்திருக்க உதவுகிறது. கண்ணீ

'லைசோசோம்' எனப்படும் திரவம் கண்களைத் தாக்கும் நோய்க் கிருமிகளுடன் போராடுகிறது. கண்களில் பிசிறுகள் விழுந்து உறுத்தும்போது கண்ணீர் பெருக்கெடுத்து அவற்றை நீக்குகின்றன.

கண்களில் தூசு விழக்கூடிய அல்லது அடிபடக்கூடிய ஆபத்தை எதிர்நோக்கும் தருணங்களில் நமது தலை தானாகவே சட்டென்று திரும்பிக் கொள்வதன் மூலம் ஆபத்தைத் தவிர்க்கிறது.

இப்படி இயற்கை 'கண்'ணைப் பாதுகாக்கிறது சரி. ஒரு மனிதனுக்கு மிக அத்தியாவசியமான கண்ணை நாம் எப்படிப் பாதுகாக்க வேண்டும்?

முதலில் குழந்தைகள்...

குழந்தைகளை நமது கண்களைப் போலப் பாதுகாத்து வளர்க்க வேண்டும் என்றால், குழந்தைகளின் கண்களுக்கு நாம் எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்?

'கண்'ணில்லாமல் இந்த உலகில் எதை ரசிக்க முடியும்? குழந்தைக்கு உடல் ஆரோக்கியமும், கண் பாதுகாப்பும் அளிப்பதே அதன் வாழ்விற்கு நாம் அமைக்கும் அஸ்திவாரமாகும். சிறந்த கண்ணொளியே நாம் குழந்தைக்குக் கொடுக்கும் மகத்தான பரிசு.

குழந்தையின் வயது

குழந்தைகளுக்கு நாம் தரும் முதல் பரிசு விளையாட்டுப் பொருட்கள்தான். ஆனால் அவை குழந்தைகளின் வயதுக்கேற்றவையாக இருக்க வேண்டும்.

- சில பொருட்கள் மிகவும் தரம் குறைந்தவையாகத் தயாரிக்கப்படுகின்றன. அவை எளிதில் உடைந்து, ஆபத்தை விளைவிக்கக் கூடிய கூர்மையான முனைகள் உடையவையாக இருக்கும். இவை குழந்தை களின் கண்களைப் பாதிக்கும்.
- சிறு வயதிலேயே குழந்தைகளுக்கு கத்திரிக்கோல், கண்ணாடித்துண்டுகள், குச்சிகள், பென்சில் போன்ற கூர்மையான அல்லது நீளமான பொருட்களை விளையாட கொடுக்கக் கூடாது.
- இராமாயணம் நாடகத் தொடர் தொலைக்காட்சியில் காண்பிக்க ஆரம்பமானதிலிருந்து சிறுவர் களிடையே அம்பு-வில் மிகவும் பிரபலமாகிவிட்டது. இந்த விளையாட்டுப் பொருள்களினால் ஏற்படும் கண் விபத்தின் எண்ணிக்கையும் அதிகரித்து விட்டது. கில்லிதாண்டு, அம்பு-வில் போன்ற விளையாட்டுக்கள் தடை செய்யப்பட



வேண்டும். இந்த விளையாட்டுக்களினால் கண் விபத் துக்கள் அதிகம் ஏற்படுகின்றன.

♦ வெளிநாடுகளில் குழந்தைகள் பட்டாசுகள் வெடிக்கவோ, மத்தாப்புகள் கொளுத்தவோ அனுமதிக்கப்படுவதில்லை. பட்டாசுகள் தயாரித்துக் கடைகளில் விற்பனைக்கும் வைப்பதில்லை. விழாக்களின் போது பட்டாசு நிபுணர்களைக் கொண்டு வாணவேடிக்கை, வெடிகள் முதலிய ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. அவற்றைக் கண்டு குழந்தைகள் ஆனந்தம் அடைகின்றன. நமது நாட்டில் இந்த அளவுக்குச் செய்ய முடியா விட்டாலும், குறைந்த பட்சம் குழந்தைகள் பட்டாசு வெடிக்கும்போது பெரி யோர் கண்காணிப்பு எப் போதும் இருக்கும்படி பார்த்துக் கொள்வது அவசியம்.

♦ குழந்தைகளுக்குக் கண்நோய் இருந்தாலோ, அல்லது கண்பார்வையில் ஏதேனும் கோளாறுகள் இருந்தாலோ அதைத் தெளிவாக அவர்களால் விளக்கிக் கூறமுடியாது. அவர்களது பழக்க வழக்கங்கள், அவர்கள் கூறும் குறைபாடுகள், அவர்களது தோற்றம் போன்றவைகளைக் கொண்டு அவர்கள் கண்ணின் குறைகளை நாம் உணர வேண்டும்.

குழந்தைகளிடம் தோன்றும் குறைபாடுகள்

1. மிக அருகில் உட்கார்ந்தாலொழிய கரும்பலகையில் எழுதப்பட்டுள்ளவற்றை நன்றாக பார்க்க முடியாது இருத்தல்.

2. பள்ளிப்படிப்பில் கவனம் இல்லாதிருத்தல், சரியாக படிக்காதிருத்தல்.

3. வகுப்புப் பாடங்கள் கவனிக்கும் போது தலைவலி அல்லது களைப்பு தோன்றுதல்.

4. பார்வை கலங்கி காணப்படுதல்.

5. இரண்டு கண்களின் பார்வையும் சீராக இல்லாதிருத்தல்.

இதற்கான அறிகுறி

1. கடைக்கண் இமைகள் சிவந்திருத்தல் அல்லது வீங்கி இருத்தல்.

2. கண்கட்டி அடிக்கடி வருதல்.

3. தொடர்ந்தாற் போல் அல்லது அடிக்கடி, கண்களிரண்டும் குறுக்கும் நெடுக்குமாகவோ, வெளிப்புறமாகவோ, உட்புறமாகவோ பார்க்கும் நிலை.

4. முகத்தின் அழகை கெடுக்கும் வகையில் கண்கள் ஏற இறங்க இருத்தல்.

5. சாதாரணமாக இருக்கும்போது அல்லது படிக்கும் போது கண்களில் நீர் வடிதல்.



6. குழந்தைகள் படிக்கும்போது சிரமப்பட்டு சாய்த்தோ, கண்கள் சிமிட்டியோ படித்தல்.

மேற்கண்ட அறிகுறிகள் தென்பட்டால் கண் மருத்துவரிடம் அவசியம் ஆலோசனை பெற வேண்டும்.

கர்ப்பத்தில் இருந்தே கவனிப்பை ஆரம்பிக்க வேண்டும்.

♦ குழந்தையின் கண்களைப் பாதுகாக்கும் பொறுப்பு ஒரு பெண் கர்ப்பமானதிலிருந்தே ஆரம்பமாகி குழந்தை பிறந்து வளர்ந்து, படித்து முன்னேறும் வரை தொடர்கிறது. கருவுற்றிருக்கும்போது உண்ணும் உணவில் கவனம் கொள்ளாதிருத்தல், தானாகவோ அல்லது மிகுந்த

ஆர்வத்தினாலோ மருந்துகள், மூலிகைகள், குங்குமப்பூ போன்றவை உட்கொள்ளுதல் சிசுவின் கண் வளர்ச்சியைப் பாதிக்கும்.

- பழங்கள், பச்சை காய்கறிகள், தானிய வகைகள், பால், முட்டை, மீன் போன்ற நல்ல சத்தான வைட்டமின் நிறைந்த உணவு, கண்கள் வளர்ச்சிக்கும், பார்வை சிறந்து விளங்குவதற்கும் அவசிய மானவை.

- கருவுற்ற முதல் மூன்று மாதங்களின் போது எக்ஸ்ரே படம் எடுப்பது, ஜெர்மன் மீசில்ஸ் (German Measles) எனப்படும் காய்ச்சல் உண்டாவது போன்றவை குழந்தையின் கண்களில் புரை (Cataract) உண்டாகக் காரணமாகின்றன.



பிரசவமும் கண்களின் நிலைக்குக் காரணம்

தகுதி பெற்ற மருத்துவர் மூலம், சுகாதாரமான சூழ்நிலையில் குழந்தைப் பேறு நடைபெற வேண்டும். மருத்து வச்சிகள் அல்லது வயதான பெண்கள் உதவியுடன் வீடுகளில் குழந்தைகளைப் பெற்றுக் கொள்வதனால் தாய், சேய் ஆகி யோரின் உடலுக்கு மட்டுமின்றி அவர் களின் கண்களுக்கும் நோய்கள் வரக் கூடும். பிரசவக் கோளாறுகளினால் குழந் தைக்குப் புரை (Cataract), மாறுகண் (Squint) இமைகள் திறக்க இயலாமை (Ptosis) போன்றவை உண்டாகக் கூடும்.

பிறந்த பின் குழந்தையைச் சுத்தமான தண்ணீரில் குளிப்பாட்ட வேண்டும். அவ் வாறு குளிப்பாட்டும் போது கழுவிய நீர் கண்களில் விழாமல் பாதுகாக்க வேண் டும். கண்களைச் சுற்றி உள்ள பகுதிகளை பிறகு கழுவ வேண்டும். சில மருத்துவர்கள் கண்களுக்குச் சொட்டு மருந்து விடச் சொல்வார்கள். அதற்குப் புத்தம் புதிய மருந்து பாட்டிலையே உபயோகப்படுத்த வேண்டும். ஒரு குழந்தைக்கு உபயோகித்த மருந்தை, வீணாகிறதே என்று மற்ற குழந்தைகளுக்கு உபயோகிக்கக் கூடாது. இவ்விதிகளைக் கடை பிடிப்பதன் மூலம் சில கண் வியாதிகளைத் தவிர்க்கலாம். குழந்தை பிறந்தபின் கண் மருத்துவர் ஒருவர் குழந்தையின் கண்களைப் பரி சோதிப்பது நல்லது.

கண்ணீர்

பொதுவாக, பிறந்த குழந்தைகளுக்கு முதல் சுமார் ஓரிரு வாரங்களுக்குக் கண்ணீர் சுரக்காது. முதல் வாரங்களில் குழந்தைக்குக் கண்ணீர் வந்தால் கண் மருத்துவரிடம் அவசியம் கலந்தாலோசிக்க வேண்டும். சில சமயங்களில் ஒரு கண் சாதாரணமாக இருக்கும். மற்ற கண்ணில் கண்ணீர் அல்லது ஊளை உண்டாகும். தூங்கும்போது கண் இமைகள் ஒட்டிக் கொள்ளும். இவ்வாறு இருப்பினும் கண் மருத்துவரிடம் காட்ட வேண்டும். மற்றபடி பெற்றோர் குழந்தையின் கண்களை கவனிக்க வேண்டும். எந்த ஒரு சந்தேகம் இருந்தாலும் மருத்துவரிடம் காட்டி தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும். கண்நோய்களை விரைவில் கண்டுபிடிப் பதால் பாதிக்கப்படும் கண்ணை குண மாக்குவது எளிதாகும்.

கைக்குழந்தை

தாய்ப்பால் குழந்தைக்கு மிகவும் சிறந்தது. பாலூட்டும் தாய்மார்கள் உணவில் வைட்டமின், புரதச் சத்து மிகுந்து இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். தாய் உண்ணும் உணவைப் பொறுத்தே குழந்தையின் ஆரோக்கியமும் இருக்கும்.

குழந்தை உட்கொள்ளும் உணவில்

வைட்டமின் ஏ சத்து குறைந்தால் கண் பார்வை மங்கிவிடும். கண்ணில் அல்சர் எனப்படும் புண் உண்டாகும். பச்சைக் காய்கறிகள், பழரசம், பால் இவற்றில் வைட்டமின் 'ஏ' நிறைந்து இருக்கிறது. இவற்றை குழந்தைகளுக்குக் கொடுப்பதன் மூலம் கண்பார்வை மங்குவதைத் தடுக்கலாம்.

டிப்தீரியா தடுப்பு ஊசி போடுவதன் மூலம் குழந்தைகளுக்கு டிப்தீரியாவினால் ஏற்படும் கண்வியாதிகளைத் தவிர்க்கலாம். சின்னம்மை, மீசில்ஸ் ஆகியவை குழந்தைகளுக்கு வரும்போது அவை கண்களை பாதிக்கின்றனவா எனக் கவனமாக இருக்க வேண்டும்.

கண் சுகாதாரம்

டிரக்கோமா(TRACOMA)எனப்படும் கண்பார்வையைப் பறிக் கும் தொற்று நோய் பரவுவதற்கு முக்கிய காரணம் சுகாதாரக் குறைவே. கண் நோய்களுக்குத் தகுந்த மருத்துவம் அளிப்பது கண் மருத்துவரு டைய பங்கு. கண் நோய்கள் வராமல் தடுப்பது நமது பங்கு.



♦ இரவில் படுக்கைக்குப் போவதற்கு முன்பு கண்களையும், முகத்தையும் சுத்தமான தண்ணீரும், சோப்பும் கொண்டு கழுவ வேண்டும். நாள் முழுவதும் காற்றில் மிதக்கும் தூசிகள், அவற்றுடன் கலந் திருக்கும் வியாதிக்கிருமிகள் முதலியவை விழிகளின் மேல் படிந்த வண்ணம் இருக்கும். இயற்கையாகவே சிறிய அளவில் கண்களில் சுரந்து கொண்டே இருக்கும் கண்ணீர் இவற்றையெல்லாம் அவ்வப் பொழுதே அப்புறப்படுத்தி வருகின்றது. ஆனாலும், நாமும் ஒவ்வொரு நாளும் படுப்பதற்கு முன்னால் ஒரு முறையும், காலையில் படுக்கையிலிருந்து எழுந்ததும் ஒருமுறையும் கண்களைச் சுத்தமான நீரால் கழுவி விடுவது அவசியம்.

♦ எக்காரணத்திற்காகவும் அழுக்குத் துணி அல்லது பிறருடைய கண்களைத் துடைக்கப் பயன்படுத்திய துணி ஆகியவற்றைக் கொண்டு நம்முடைய கண்களைத் துடைக்கவே கூடாது. கண் நோய் எளிதாகப் பரவும் தொற்றுநோய்.

♦ எப்போதும் ஒவ்வொருவரும் தனியாக சுத்தமாக துணியை வைத்துக் கண்களையும் முகத்தையும் துடைக்க வேண்டும்.

♦ கண்நோய் அல்லது கண் வலி, தூசி, பிசிறு போன்றவை இருந்தால் பச்சிலைச் சாறு, தாய்ப்பால் அல்லது மற்றவர் சொல்லும் கண்ட கண்ட மருந்துகள் போன்றவற்றைக் கண்களில் போடவே கூடாது. இவை அனைத்தும் கண்களைக் கெடுத்து விடும். காலதாமதம் செய்யாமல் கண் மருத்துவரிடம் காட்டி வைத்தியம் செய்து கொள்ள வேண்டும்.

♦ கண்களை, பென்சில், கறைபடிந்த கைகள் போன்ற எந்த அசுத்தமான பொருளைக் கொண்டும் தொடக் கூடாது.

♦ ஒருவர் உபயோகித்த கண்மை, மற்றும் இதர அலங்காரப் பொருட்களை (EYE SHADOW, EYE LINER) மற்றொருவர் உபயோகிக்கக் கூடாது.

♦ படிக்கும்போதும்,

எழுதும்போதும் விளக் கின் வெளிச்சம் இடது புறமாகவும், சிறிது பின்புறமாகவும் இருந்து புத்தகத்தின் மேல் படியும்படி அமர்ந்து கொண்டு படிக்க வேண்டும். நமது நிழல் புத்தகத்தின் மேல் விழாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும்.

♦ கண்களைக் கூசுகின்ற அளவு வெளிச்சத்தில் (GLARE) படிப்பதையோ, வேறு வேலை செய்வதையோ தவிர்க்க வேண்டும்.

♦ ஓடும் ஊர்தி, இரயில் முதலியவற்றில் பிரயாணம் செய்யும்போது படிக்கக் கூடாது. ஊர்திகள் ஓடும்போது அவை ஆடி அசைவதால், புத்தகத்தில் உள்ள வரிகளை சரளமாக படிக்க முடியாமல் மேலும் கீழும் ஆடியவாறே படிப்பதனால் கண்கள் மிகவும் சோர்வு அடைகின்றன. தலைவலி, கண்வலி, கண்கட்டி போன்றவை உண்டாகும் வாய்ப்புகள் அதிகம்.

♦ வெகுநேரம் படிக்கும்போதும் நுணுக்கமான வேலைகள் செய்யும்போதும் இடையிடையே தலையை உயர்த்தி தூரத்தில் உள்ள பொருட்களை குறிப்பாக பசுமையானவற்றைச் சில நிமிடங்கள் பார்த்த பின்னர் படிப்பையோ, வேலையையோ தொடர்வது நல்லது.



சில கண் விபத்துக்களுக்கான முதலுதவி முறைகள்

1) கண்களில் அமிலம் போன்ற இரசாயனங்கள் விழுந்தால்:

இரசாயனம் விழுந்த கண்ணை அல்லது கண்களை உடனடியாக தண்ணீரால் கழுவ வேண்டும். விபத்துக்குள்ளான நபரை படுக்க வைத்தபின் கண்ணின் இமைகள் இரண்டையும் நன்றாகப் பிரித்து பிடித்துக் கொண்டு சுமார் ஐந்து நிமிடத் திற்குத் தொடர்ந்து கண்ணில் தண்ணீர் விட்டுக் கழுவ வேண்டும். அதன் பின்னர் கட்டு போடாமல் கண் மருத்துவரிடம் விரைந்து அழைத்துச் செல்ல வேண்டும். அப்பொழுது கண்களுக்கு முதலுதவி செய்வதில் தேர்ச்சி பெற்றோர் உடன் இருந்தால் கண் கழுவுவதைத் தொடர்ந்து செய்து கொண்டே வர வேண்டும். அவ்வாறு கழுவும் போது, ஒரு கண்ணைக் கழுவிய தண்ணீர் மறுகண்ணில் படாத படி தலையை ஒருபுறம் சிறிது சாய்த்த வாறு மூக்குப்புறமிருந்து காதுப்புறம் தண்ணீர் ஓடும்படி கழுவவேண்டும். உ-ம். வலது கண்ணில் அமிலம் பட்டிருந்தால் தலையை சிறிது வலது பக்கமாகச் சாய்த்து மூக்கின் வலது புறத்திலிருந்து கழுவ வேண்டும்.

கண் இமைகளைப் பிரித்துப் பிடித்திருக்கும்போது கண்ணின் மேல் அழுத்தாமல் இருக்க வேண்டும்.

2) தீப்புண்கள்

கண்களில், இமைகளில் தீப்புண்கள் ஏற்பட்டால் சூடு

பட்ட இடத்தை சுத்தமான தண்ணீரில் நனைத்து கட்டுப் போடும் துணியினால் மூடி மருத்துவரிடம் விரைந்து அழைத்துச் செல்ல வேண்டும்.

3) கண்ணில் தூசி, பிசிறு போன்றவை விழுந்தால்

கண்ணைக் கசக்கக்கூடாது. கண்ணில் கண்ட மருந்துகளை போடக்கூடாது. பச்சிலைச்சாறு, தாய்ப்பால் போன்ற வற்றையும் விடக்கூடாது. கண்களை நன்றாகச் சிமிட்ட வேண்டும். பல கோணங்களில் கண்களை உருட்டிப் பார்க்க வேண்டும். இதன் மூலம் கண்ணீர் பெருக்கெடுத்து பிசிறைக் கழுவி வெளிக் கொணர வாய்ப்பு உள்ளது. பின்னர் கண்களை மூடி வைத்து, சுத்தமான துணியினால் லேசாகக் கட்டுப் போட்டு கண் மருத்துவரிடம் உடனடியாக அழைத்துச் செல்ல வேண்டும்.

4) கண்ணாடி, மரத்துண்டு போன்றவை கண்ணில் விழுந்தால் அல்லது கண்ணில் குத்தியிருந்தால்

கண்ணில் விழுந்துள்ள அல்லது குத்தியுள்ள பொருளை எடுக்கவோ, தண்ணீர் விட்டுக் கழுவவோ கூடாது. கண்களை அழுத்தாமல், கசக்காமல் இருக்கும் படி பார்த்துக் கொள்ள வேண்டும். லேசாக, கட்டுப் போடும் துணி (Gauze) கொண்டு கண்ணை மூடலாம். பின்னர் கண் மருத்துவரிடம் அழைத்துச் செல்ல வேண்டும். முடிந்தால் கண்ணுக்கு விபத்து உண்டாக்கிய பொருளின் மாதிரி துண்டுகளை நோயாளியுடன் அனுப்பி வைக்க வேண்டும். கண் மருத்துவர் பரிசோதிக்கும் வரை உட்கொள்ள ஆகாரம் ஏதும் கொடுக்க வேண்டாம்.



சர்க்கரை வியாதியும் கண் நோய்களும்

கண்பார்வை பாதிப்புக் குக் காரணமான நோய்களில் முதன்மையாக விளங்கு கிறது டயாபெடீஸ். பொதுவாக எல்லோருக்கும் கண்களில் ஏற்படும் நோய்கள் மட்டுமின்றி சர்க்கரை வியாதியினால் ஏற்படக்கூடிய கண் நோய்களும் உண்டாகின்றன.

சர்க்கரை வியாதினால் ஏற்படும் கண் பாதிப்பிற்கான அறிகுறிகள்:

கரும்புள்ளிகள் காணுதல், கண் முன்னே பலவகையான தூள்கள் போன்ற பொருட்கள் மிதந்துகொண்டு இருப்பது போல காணுதல் மற்றும் கண்ணுக்குள்ளே மின்னல் போன்று ஒளி தோன்றுதல் ஆகியவை ஏற்பட்டால் உடனடியாகக் கண் பரிசோதனை செய்து கொள்வது அவசியம்.

சர்க்கரை வியாதியினால் கண்கள் எவ்வாறு பாதிக்கப் படுகின்றன?

கண்ணில் 'ரெடினா' (RETINA) எனப் படும் விழித்திரை சர்க்கரை வியாதியி னால் பாதிக்கப்படுகிறது. விழித்திரையில் உள்ள ரத்தக் குழாய்களில் இருந்து சில பொருட்கள் வெளியேற்றப்பட்டு விழித் திரைகளில் படிகின்றன. இந்தக் கசிவி னால் விழித்திரையில் உருவாகும் புதிய ஆனால் குறைபாடுள்ள ரத்தக்குழாய்களில் இருந்து ரத்தக் கசிவு ஏற்படுகிறது. இவ் வாறு வெளிப்படும் இரத்தம் விழித்திரை மீது படிவதனாலும் கண்ணில் உள்ள 'விட்ரியஸ்' (VITREOUS) எனப்படும் ஜவ்வி லும் இந்த இரத்தம் கலந்து விடுவதாலும் பார்வைக் குறைவு ஏற்படுகிறது.

கண்கட்டி போன்ற கண்ணின் வெளிப் புற நோய்களும் சர்க்கரை வியாதியால் ஏற்படுகின்றன.

சர்க்கரை வியாதி உள்ளவர் கள் புரை ஆபரே ஷன் செய்து கொள் ளலாமா?

தாராளமாக, தற் போது உள்ள சீரிய மருத் துவ சிகிச்சையா லும், மிகவும் நுட்பமான அறுவை சிகிச்சை கருவி களாலும், முறைகளாலும், எவ்வித அபாயமும் இன்றி சர்க்கரை வியாதி உள்ளவர்கள் புரை ஆப ரேஷன் செய்து கொள்ள லாம்.

சர்க்கரை வியாதி உள்ளவர் கள் கண்களை பாதுகாத்துக் கொள்வது எப்படி?

மிகவும் முக்கிய மானது-கண் பார்வை நன்றாக இருப்பினும், கண் நோய்க்கான அறிகுறி ஏதும் தென் படாவிட்டாலும் கூட (ரெகுலராக) கண் பரி சோதனை செய்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். இவ்வாறு பரிசோதனை செய்து கொள்வ தன் மூலம் கண்களில் ஏற்படும் மாற்றங் களை உடனுக்குடனே கண்டுபிடித்து விடமுடியும். எவ்வளவு விரைவில் இந்த மாற்றங்களை தெரிந்து கொண்டு மருத்துவம் செய்து கொள் கிறோமோ அந்த அளவிற்குப் பார் வையைக் காப்பாற்றிக் கொள்ள வாய்ப்பு கள் அதிகமாகிறது.

பரம்பரை கண் நோய்கள்

விபத்துக்கள், சர்க்கரை நோய், ஆரோக்கிய உணவு பற்றாக்குறை போன்ற வற்றால் மட்டும் இன்றி, கண் நோய்கள் குறைபாடுகள் உள்ள 'ஜீன்ஸ்'களாலும் (GENES) உண்டாகின்றன.

பெற்றோர்களின் ஜீன்ஸ் அமைப்பைப் பொருத்தே குழந்தைகளின் அணுக்கள் உருவாக்கப்படுகின்றன. அதுபோலவே பரம்பரை பரம்பரையாகத் தோன்றும் சில கண் நோய்களும் இந்த ஜீன்ஸ் அணுக்கள்





மூலமாகவே பரவுகின்றன.

குழந்தைகளுக்குக் கண்ணில் ஏற்படும் சிலவகையான 'கேட்டராக்ட்', 'குலோகோமா' எனப்படும் நீர் அழுத்த நோய், மாலைக்கண் நோய் கண்ணில் தோன்றும் சில புற்றுநோய்கள் கருடப்பார்வை மற்றும் இளம் வயதில் மிகவும் மொத்தமான கண்ணாடி அணிய வேண்டிய நிலை போன்ற பரம்பரைக் கண்நோய்கள் பெற்றோர்களுடைய 'ஜீன்ஸ்' அணுக்களின் அமைப்பைப் பொறுத்து ஏற்படு பவை ஆகும்.

பரம்பரை கண்நோய்களால் குழந்தைகள் பாதிக்கப்படுவதைத் தவிர்க்க:



1) பரம்பரைக் கண்நோய் உடைய ஆணோ பெண்ணோ திருமணத்திற்கு முன் கண் மருத்துவரிடம் ஆலோசனை பெற்றுக் கொள்வது அவசியம். அவர், கண்களை முழுமையாக பரிசோதித்து, கண் நோயின் தன்மையை அறிந்து, அது பரவும் தன்மையை ஆராய்ந்து, சந்ததிகள் பாதிக்கப்படாமல் இருக்க ஆலோசனைகளைக் கூறுவார்.

2) 35 அல்லது அதற்கும் மேற்பட்ட வயதுள்ள பெண்கள் குழந்தை பெறுவதைத் தவிர்க்க வேண்டும். 'ஜீன்ஸ்' குறைபாடுகள் ஏற்படும் வாய்ப்புகள் 35 வயதுக்கு மேல் அதிகரிப்பதினால், அதனால் உண்டாகும் பரம்பரைக் கண்நோய்கள் ஏற்படும் வாய்ப்புகளும் அதிகரிக்கின்றன.

கண் மருத்துவப் பரிசோதனை

இப்போதெல்லாம் நாற்பது வயதிற்கு மேல் மருத்துவமனை சென்று 'மாஸ்டர் செக் அப்' செய்து கொள்ள வேண்டும் என்கிறார்கள். அதாவது உடல்நிலை நன்றாக இருந்தால் கூட பரிசோதனை அவசியம் என்கிறார்கள். ஏனென்றால் நமக்கே தெரியாமல் பல நோய்கள் இருக்கலாம். அதேபோல ரொடீனாக கண் பரிசோதனையும் அவசியம்.

கண் பரிசோதனை ஏன் செய்து கொள்ள வேண்டும்?

கண் பார்வைக் குறைவு, கண்கட்டி, கண்வலி போன்றவை இருந்தால் கண் மருத்துவரைப் பார்க்க வேண்டும் என்று நீங்களே முடிவு செய்துவிடுகிறீர்கள். ஆனால் நமக்குத் தெரியாமல் உள்ளுக்குள்ளேயே பல கண்நோய்கள் இருக்கலாம். அவை மிகவும் வளர்ந்து கண்களை வெகுவாகப் பாதித்த பின்னே நமக்குத் தெரிய வரும். இத்தகைய கண் நோய்களை முதலிலேயே, ஏற்பட்ட உடனேயே கண்டு பிடித்து மருத் துவம் தொடங்கினால் முழுமையாகக் குணப்படுத்தக் கூடிய வாய்ப்புகள் அதிகம்.

குழந்தைகள்

பிறந்த முதல் மாதத்திற்குள் ஒருமுறை




கண் மருத்துவரிடம் காண்பித்து கண்களில் எவ்வித பிறவிக் கோளாறுகளும் இல்லை என ஊர்ஜிதப்படுத்திக் கொள்ள வேண்டும். ஏனெனில் பிறவிக் கோளா றுகள் இருந்தால் அவை எவ்வளவுக்கெவ்வளவு விரைவில் குணப்படுத்தப்படுகிறதோ அந்த அளவிற்குப் பார்வையைக் காப்பாற்றும் வாய்ப்பு உள்ளது. பிறவியிலேயே கண்ணில் புரை இருந்தால் முதல் 4 மாதங்களுக்குள் சிகிச்சை செய்யப் படாவிடில் முழுமையான பார்வை பெற முடியாது.

சிறுவர்/சிறுமிகள்

அதன்பின்னர் பள்ளி செல்லும் முன் அதாவது 3 வயதில் ஒரு முறையும் 6 வயதில் ஒரு முறையும் பரிசோதனை செய்யப்படுவது நல்லது. 6 வயதில் பார்வை முழுமையான வளர்ச்சி அடைந்து விடுகிறது. அதில் ஏதேனும் குறை இருப்பின் உடனடியாக மருத்துவம் செய்யலாம். இதன்பின்னர் இரண்டு வருடத்திற்கு ஒருமுறை கண்பரிசோதனை செய்து கொள்வது நல்லது.

உங்கள் கவனத்திற்கு

கடைகளில் செய்யப்படும் கண்ணாடிக்கான பரிசோதனை மட்டும் முழுமையான கண் பரிசோதனை ஆகிவிடாது. பார்வை பரிசோதனை கண் பரிசோதனையின் ஒரு பகுதியே.



இளைஞர்கள்

திருமணத்திற்கு முன்னர் அவசியம் ஒருமுறை கண்பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். பரம்பரைக் கண் நோய்களுக்கான வாய்ப்புகளைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும்.

40 வயதிற்கு மேல்

40 வயதிற்கு மேற்பட்டவர்கள் வருடம் ஒருமுறை தவறாமல் முழுமையான கண் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். இவ்வயதில் டயாபெடீஸ் (நீரிழிவு நோய்), ரத்தக்கொதிப்பு போன்ற வியாதிகளினால் பார்வை பாதிக்கப்பட வாய்ப்புகள் அதிகம். டயாபெடீஸ், ரத்தக் கொதிப்பு, பிறவிப் பார்வை கோளாறுகள், High Myopia (மிகவும் கிட்டப்பார்வை), குடும்பத்தில் யாருக் கேனும் விழித்திரை கோளாறுகள் (Retinal detachment and other retinal problems) போன்றவை இருப்பின், கண் மருத்துவர் ஆலோசனைப்படி பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.



கண் பரிசோதனை: ABCD போர்டு எதற்காக?

கண் டாக்டரிடம் போகும்போது இந்த ABCD போர்டு எல்லாம் இருக்கிறதே, அது என்ன?

பார்ப்போம். பார்வையை எப்படி அளப்பது? பார்வையின் அளவுகோல் என்ன? ஒரு சராசரி மனிதன் 60, 36,24,18,12, 9,6 ஆகிய மீட்டர் தூரங்களில் இருந்து ஒரு குறிப்பிட்ட வெளிச்சத்தில் எவ்வளவு சிறிய எழுத்துக்களை படிக்க முடி கிறது என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதை அளவு கோலாகக் கொண்டு பார்வை பரிசோதனைக்கான எழுத்துக்களை அல்லது எண்களைக் கொண்ட அட்டைகள் கருவிகள் (Vision Test Charts) தயாரிக்கப் பட்டுள்ளன. பரிசோதனை செய்யப் படுபவரை சௌகரியமாக அமரச் செய்தபின் அவர் முன்னே 6 மீட்டர் தொலைவில் இந்த எழுத்துக்கள் காண்பிக்கப்படும். அதில் எந்த அளவு அவர் படிக்கிறார் என்பதனைக் கொண்டு அவரது பார்வையின்


அளவு கணிக்கப்படுகிறது.

கிட்டப்பார்வை

இதைப் போலவே கிட்டப்பார்வையை அளப்பதற்கும், சராசரி மனிதனின் பார்வையையே அளவுகோலாக வைத்து பரிசோதனை அட்டைகள் தயாரிக்கப் பட்டுள்ளன.

கண்ணின் உட்புறத்தோற் றம்

இந்தப் பரி சோதனை மிக வும் முக்கிய மானது. கண்ணின் உட்புறத்தைப் பார்க்கக் கண்களுக்கு மருந்துவிட்டு சுமார் அரைமணி நேரம் கழித்து அல்லது கண் உட்பகுதி நன்றாக திறந்த பிறகு ஆப்தால்மாஸ்கோப் எனப்படும் கருவி மூலம் பார்க்கப்படுகிறது. கண்களின் விழித்திரை, நரம்பு மண்டலம், ரத்த ஓட்டம் போன்றவை பரிசோதிக்கப் படுகிறது.



கண்ணாடிக் கான பரி சோதனை

முதலில் கண் பார்வை அளவிடப் படுகிறது. அதன் பின்னர் சிலருக்குக் கண்களில் மருந்து போட்டு உட்பகுதி நன்றாக திறந்த பிறகே மேற்கொண்டு பரிசோதனை செய்ய முடியும். பலருக்குக் கண்களில் மருந்திடாமலேயே கண்ணாடிக்கான பரிசோதனை செய்ய முடியும். பரிசோதனை அறை முழுதாக இருட்டாக்கியபின் ரெட்டினோஸ்கோப் எனப்படும் கருவி மூலம் கண்களில் ஒளி செலுத்தி கண்களுக்கு முன்னால் கண்ணாடிகளை மாறி மாறி வைத்து உண்டாகும் நிழலைக் கொண்டு கண்ணாடி தேர்ந்தெடுக்கப் படுகிறது. இரண்டொரு நாட்கள் கழித்து





கண்ணிலிட்ட மருந்தின் சக்தி குறைந்த பிறகு மறுபடியும் கண்ணாடி அணிவித்து (Vision Test Chart) எழுத்துக்கள் உள்ள அட்டையில் எல்லா எழுத்துக்களும் சரியாகத் தெரிகின்றனவா என உறுதி செய்த பின்னர், வாங்கி அணிய வேண்டிய கண்ணாடிக்கான நெம்பர்கள் குறிப்பிட்ட சீட்டு வழங்கப்படுகிறது.

இந்தப் பரிசோதனை இப்பொழுது நவீன கம்ப்யூட்டர் உதவியுடன் செய்யப் படுகிறது. இதனால் வெகுவிரைவில் அதாவது 3 நிமிடங்களுக்குள் பரிசோதனை முடிந்து கண்ணாடிக்கான சீட்டை அப்பொழுதே பெற்றுக் கொள்ளலாம். மிகவும் நுண்ணியமாக பரிசோதனை செய்யப் படுவதால் கொஞ்சமும் தவறில்லாமல் மிகவும் சரியாக கண்ணாடி நம்பர்களை நிர்ணயிக்க முடிகிறது.

Colour Vision Test

வர்ணங்களை அடையாளம் கண்டு கொள்ள முடிகிறதா என்று சோதிக்கும் பரீட்சை இது. புகைவண்டி ஓட்டுனர் மற்றும், வாகன ஓட்டுனர், விமான ஓட்டுனர் ஆகியோருக்கு இந்தப் பரீட்சை அத்தியாவசியமானது. சிவப்பு, பச்சை மற்றும் வர்ணங்களை சரியாக அடையாளம் கண்டு கொள்ள வேண்டியது இவர்கள் பணிக்கு மிகவும் அவசியமானதாகும்.



மேலும் இப்பணிகளில் இல்லாதோர்க்கும் இந்தப் பரீட்சை செய்யப்படுகிறது. ஏனெனில் நரம்பு சம்பந்தப்பட்ட சில கண் நோய்களில் வர்ணங்களை அடையாளம் காட்டும் திறன் குறைந்து விடுகிறது. எனவே இந்த பரீட்சையின் மூலம் ஒருவரது கண் நரம்புகள் சரியாக இயங்குகின்றனவா என்று தெரிந்து கொள்ள முடியும்.

Field of Vision (கண்பார்வையின் பரப்பளவு)

GLAUCOMA 'க்ளோகோமா' எனப்படும் கண் அழுத்த நோய் மற்றும் RETINA 'ரெடினா' எனப்படும் விழித்திரையை பாதிக்கும் நோய்கள் கண் பார்வையின் பரப்பளவைக் குறைக்கக் கூடியவை.

பொதுவாக, நாம் நேராகப் பார்த்துக் கொண்டிருக்கும்போது சுமார் 160 டிகிரி அளவிற்குக் கண்களை எப்பக்கமும் திரும்பாமல் பார்க்க முடிகிறது. ஆனால் கண் அழுத்த நோய் கண் நரம்புகளை பாதிக்கும் பட்சத்தில் இந்த அளவு குறைந்து விடும். ஒரு சிறிய குழாயின் வழியாகப் பார்க்கும் போது நமக்கு எந்த அளவிற்கு சுற்று முற்றும் தெரிகிறதோ (சுமார் 10 டிகிரி) அந்த அளவிற்குக் கூட குறைந்துவிட நேரும்.

Contact Lens (ஒட்டுக் கண்ணாடிக்கான பரிசோதனைகள்)

காண்டாக்ட் லென்ஸ் பொருத்துவதற்காக KERATOMETER 'கெரடோமீட்டர்' எனப்படும் கருவி மூலம் கண்ணின் வடிவத்தை (CURVATURE) அளவிடப்படுகிறது. அதன் பின்னர் ஒவ்வொரு கண்ணின் வடிவமைப்புக்கேற்ப காண்டாக்ட் லென்ஸ் தேர்வு செய்து கண்ணில் பொருத்தி FLUORESCEIN எனப்படும் சொட்டு மருந்து கண்களில் விட்டு, காண்டாக்ட் லென்ஸ் பொருந்துகிறதா என்று சரிபார்க்கப்படுகிறது. ஒவ்வொரு கண்ணுக்கும் பொருத்தமான காண்டாக்ட் லென்ஸ் பிறகு தேர்ந்தெடுக்கப் படுகிறது.

நம்மைச் சுற்றியுள்ள ஒளி நம் கண்களை எப்படி பாதிக்கிறது?


* சூரிய கிரகணத்தைப் பார்க்கலாமா?
* கறுப்புக் கண்ணாடியை (கூலிங் கிளாஸ்) தேர்ந்தெடுப்பது எப்படி?
* டி.வி-யினால் கண்கள் பாதிக்கப் படுமா?
* டி.வி-யை எவ்வளவு தூரத்திலிருந்து பார்க்க வேண்டும்?

நமது வாழ்விற்குக் காரணமாக விளங்கும் சூரிய ஒளி கண்களைப் பாதிக்கும் (ULTRA VIOLET, INFRA RED) அல்ட்ரா வயலட் இன்ஃப்ரா ரெட் போன்ற ஒளிக் கதிர்களையும் கொண்டுதான் இருக்கிறது. இதுபோன்ற ஒளிக்கதிர்களின் பாதிப்பிலிருந்து கண்களைப் பாதுகாத்துக் கொள்வது நமது கடமை.

கண்களைப் பாதிக்கும் ஒளிக் கதிர்கள்:

அல்ட்ரா வயலட் எனப்படும் ஒளிக் கதிர் வீச்சு மலைப்பிரதேசம், கடற்பகுதி, பனிப்பிரதேசம் போன்ற இடங்களிலும். சில தொழிற்கூடங்களிலும் அதிகமாக உள்ளது.

இன்ஃப்ரா ரெட் (INFRA RED)எனப் படும் ஒளிக்கதிர் வீச்சு TROPICAL



REGIONS பகுதிகளிலும் சூளைகள் கொண்ட தொழிற்கூடங்களிலும் அதிக மாக உள்ளது.

சூரிய ஒளி: கண்கள் கூசுகின்ற அளவிற்கு சூரிய ஒளி எங்கு இருப்பினும் அது கண்களைப் பாதிக்க வாய்ப்புகள் உள்ளன.

சூரிய ஒளி மட்டுமின்றி, புகைப்பட ஒளிவிளக்கும், பூச்சுக்கொல்லி விளக்குகள், மெர்க்குரி ஆர்க் விளக்குகள் மற்றும் டியூப் லைட்டுகள் போன்றவற்றிலிருந்தும் இவ்வித ஒளிக்கதிர்கள் வெளிப்படுகின்றன.

சாதாரணமாக நமது வீடுகளில் உபயோகிக்கும் மின் விளக்குகளிலிருந்து வெளிப்படும் அல்ட்ரா வயலட் போன்ற ஒளிக்கதிர்கள் மிக மிகக் குறைந்த அளவிலே இருப்பதால் நமது வாழ்நாளில் அவை கண்களைப் பாதிக்காது.

சூரிய கிரகணத்தைப் பார்க்கலாமா?

பொதுவாக, நாம் சூரியனை நேருக்கு நேர் பார்க்க முடியாது. அப்படி பார்க்க முயலும் போது கண்கள் கூசி, இமைகள் இறுக மூடிக் கொள்ளும். இது இயற்கை நம் கண்களுக்கு அளிக்கும் பாதுகாப்பு.

சூரிய கிரகணத்தின்போது சூரியனின் பெரும்பகுதி மறைக்கப்படுவதால் இருளாகிவிடுகிறது. அந்த ஒளி குறைந்த நிலையில் கண்களை நாம் முழுமையாகத் திறந்து, சூரியனை நேருக்கு நேர் பார்க்க முடியும். இந்தச் சமயங்களில் நம் கண்களுக்கும் புலப்படாத சூரியனிலிருந்து வெளிப்படும் INFRA RED ஒளிக் கதிர்கள் நம் கண்களுக்குள் செல்வதனால் கண்களின் விழித்திரைகள் பாதிக்கப்பட்டுப் பார்வையை இழக்க நேரிடுகிறது.

எனவே சூரிய கிரகணத்தைப் பார்ப்பதற்கென்று பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்ட INFRA RED FILTER கண்ணாடிகளை அணியாமல் சூரிய கிரகணத்தைப் பார்க்கவே கூடாது.

ஒளிக்கதிர் வீச்சிலிருந்து கண்களைப் பாதுகாத்துக் கொள்ளும் வழிகள்

சில முன்னெச்சரிக்கை முறைகளாலும் பாதுகாப்புக் கண்ணாடிகளை அணிவதன் மூலமாகவும் ஒளிக்கதிர் வீச்சுக்களிலிருந்து கண்களை நாம் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

1) சூரியனை எந்தக் காரணத்தைக் கொண்டும் நேருக்கு நேர் பார்க்கக் கூடாது. கறுப்புக் கண்ணாடி அணிந்திருந்தாலும் அல்லது புகைப்பட பிலிம் போன்றவற்றை கண்முன்னே வைத்திருந்தாலும் கூட சூரியனை நேருக்கு நேர் பார்க்க முயற்சி செய்யக்கூடாது.

2) சூரிய கிரகணம்:

சூரிய கிரகணத்தைப் பார்ப்பதைத் தவிர்க்க வேண்டும். அதற்காகப் பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்ட கண்ணாடிகளை அணியாமல் சூரிய கிரகணத்தைப் பார்க்கக் கூடாது.

3) தொழிலாளர்கள்:

கண்ணாடி தொழிற்சாலை, வெல்டிங் மற்றும் வெப்பமான சூழ்நிலை உள்ள சூளைகளில் வேலை செய்வோர் அந்தந்த தொழிலுக்கேற்ற பாதுகாப்புக் கண்ணாடி களை அணிந்து கொண்டு வேலை செய்வது அவசியம். வெல்டிங் செய்யும்போது பாதுகாப்புக் கண்ணாடி அணிந்த நபரைத் தவிர




அடக்கமாக அழகாக ஒரு ஃபிளாட் வேணுமே!
சொந்த வீடு வேணும்னு ஆசைதான். ஆனால், மொத்த பணமும் கொடுக்க முடியாதே...
எங்க குடும்பம் பெரிசு... கொஞ்சம் பெரிய ஃபிளாட்டா வேணுமே...?
ஃபிளாட்தான் என்றாலும் அழகாக இருக்க வேண்டாமா?
நேரத்தோட எந்த பில்டர்ஸ் முடித்துத் தராங்க.....?
தரமான கட்டமைப்புன்னு நம்பி வாங்க முடியுமா?

அங்கு உள்ள மற்ற யாவரும் வெல்டிங் வெளிச்சத்தைத் தொடர்ந்து கூர்ந்து பார்க்கக் கூடாது.

4) கறுப்புக் கண்ணாடி (கூலிங் கிளாஸ்):

சூரிய ஒளி மிகுந்த நேரங்களில் கடற்பகுதிகளில், பனிப் பிரதேசங்களில் இருக்கும்போது மற்றும் புரை அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்கள் எல்லா நேரங்களிலும், கறுப்புக் கண்ணாடி அணிந்து கொள்வது மிகவும் உபயோகமாக இருக்கும்.

கவனிக்கவும். உங்கள் கண்களைப் பார்க்க முடிந்தால் அந்த கறுப்புக் கண்ணாடி போதுமான அளவு கறுப்பாக இல்லை என்று பொருள்.

கண்ணாடிகளில் குறைபாடுகள் உள்ளனவா என்றும் கவனிக்க வேண்டும். கண்ணாடி அணிந்து கொண்டு பார்க்கும் போது தெளிவாகத் தெரிகிறதா, கலங்கிய வாறு தெரிகிறதா என்று பரிசீலிக்க வேண்டும். கண்ணாடி வாங்கும் போது கண்ணாடியின் மேற்பகுதி சமமாக உள்ளதா என்று அறிய இந்த எளிய முறையைக் கையாளலாம்.

கடையில் உள்ள டியூப்லைட்டின் பிம்பம் கண்ணாடியில் படும்படி கண்



ணாடியை திருப்பிப் பிடித்துக் கொள்ள வேண்டும். பின்னர் கண்ணாடி யைச் சிறிது வலது இடதுமாக ஆட்டிப் பார்த்தால் கண்ணாடி மேற்பகுதியில் குறைபாடுகள் ஏதும் இருந்தால் டியூப்லைட்டின் பிம்பம் வளைந்து நெளிவதை காணலாம்.

கறுப்புக் கண்ணாடி தேர்ந்தெடுப்பதில் கவனிக்கப்பட வேண்டியவை:

15 முதல் 35 சதவிகித சூரிய ஒளியை மட்டும் அனுமதிக்கின்ற கறுப்புக் கண்ணாடியே தேவையான பாதுகாப்பை அளிக்கும். ஒரு கறுப்புக் கண்ணாடி எந்த அளவிற்கு ஒளியை அனுமதிக்கின்றது என்று தெரிந்து கொள்ள ஒரு எளிய வழி உள்ளது. கறுப்புக் கண்ணாடியை அணிந்து கொண்டு எதிரில் உள்ள முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்க்க வேண்டும். அப்படிப் பார்க்கும் போது உங்களது கண்களைப் பார்க்க முடிகிறதா என்று

டி.வி.யினால் கண்கள் பாதிக்கப்படுமா?

கம்யூட்டர் மானிட்டர்கள், தொலைக் காட்சி பெட்டிகள் ஆகியவற்றில் இருந்து கண்களைப் பாதிக்கும் படியான ஒளிக் கதிர்கள் ஏதும் வெளிப்படுவதில்லை. முறையாகத் தொலைக்காட்சி பார்ப்

பதினால் கண்களுக்கு எந்தவித குறை பாடுகளும் ஏற்படாது.

டி.வி. பார்க்கும் முறை:

தொலைக்காட்சி பெட்டிக்கு மிக அருகாமையில் இருந்து பார்க்கும் போது கண் அசைவுகள் அதிக அளவில்



ஏற்படுகின்றன. கண் சோர்வு, தலைவலி போன்றவை உண்டாகின்றன. எனவே தொலைக்காட்சியைப் பார்க்கும்போது (20-22 அங்குல திரை உள்ள தொலைக்காட்சி பெட்டியை) 10 அடி தூரத்திலிருந்து காண்பது நல்லது.

தொலைக்காட்சி பெட்டி மிகவும் உயரமான இடத்தில் இல்லாமல், கண்ணுக்கு நேராகவோ சிறிது தாழ்வாகவோ இருத்தல் நல்லது.

தொலைக்காட்சி பார்க்கும்போது அறையை இருட்டாக்கி விடக்கூடாது. எப்போதும் அறையில் உள்ள மின்விளக்குகள் எரிந்து கொண்டு இருக்கலாம். மின் விளக்குகள் வலது அல்லது இடது புறமிருப்பது அவசியம். நம் கண்ணுக்கு எதிர்ப்புறமோ அல்லது மின்விளக்கின் பிம்பம் தொலைக்காட்சி பெட்டியின் திரையில் படும்படி பின்புறமோ இருக்கக் கூடாது.

கண்ணாடியும் ஒரு அணி கலனே:

மூக்குக் கண்ணாடியைத் தேர்ந்தெடுக்கும் போது என்னென்ன விபரங்களை கவனிக்க வேண்டும் என்று பார்ப்போம்.

முதலாவதாக: வெகு நேரம் அணிந்திருப்பதற்கு சௌகரியமாக இருக்குமா என்று பார்க்க வேண்டும். மூக்குக் கண்ணாடியின் பளுவை வெகுவாகத் தாங்குவது மூக்கின் மேல்பாகம் ஆகும். எனவே இப்பகுதியில் மூக்குக் கண்ணாடி இறுக்கப் பிடிக்காமல் சரியாக பொருந்துகிறதா என்பது முக்கியம். அது போலவே காதுகளின் பின்னால் பொருந்தும் பாகமும் மிகவும் தளர்ந்தில்லாமலும் இறுக்கப் பிடிக்காமலும் இருக்க வேண்டும்.

அடுத்தது:

சரியான அளவிலான மூக்குக் கண்ணாடியைத் தேர்தெடுக்க வேண்டும். மூக்குக் கண்ணாடியின் அளவை சரி பார்க்க இரண்டு முறைகள் உள்ளன. முதலில் உயரத்தை சரி பார்க்கவும். பொதுவாக மூக்குக் கண்ணாடி பிரேமின் உயரம் புருவங்களின் உயரத்திற்கும் மேலாக இருக்கக் கூடாது. மூக்குக் கண்ணாடியின் அகலத்தைச் சரி பார்க்க நமது ஆள்காட்டி விரலை முகத்திற்கும் கண்ணாடி பிரேமின் விளிம்பிற்கும் இடையே செலுத்த வேண்டும் (முகபாகமும் காதுபாகமும் இணையும் இடத்தில்) அவ்வாறு செலுத்தும்போது விரல் தாராளமாகச் செல்வது மட்டு மின்றி, மேலும் கொஞ்சம்

இடைவெளியும் இருக்க வேண்டும். அப்படி இல்லையெனில் கண்ணாடி மிகவும் சிறியது என்று முடிவு செய்ய வேண்டும்.

மூன்றாவதாக மனதில் கொள்ள வேண்டியது, அணியும் மூக்குக் கண்ணாடி உங்கள் முகவடிவுக்கு ஏற்றதா, உங்கள் தோற்றத்தையும் அழகையும் அதிகரிக்கக் கூடியதா என்பதாகும். இதைத் தீர்மானிப்பது நீங்கள் தான். இந்த வகையான முகத்திற்கு இந்த வடிவான கண்ணாடி தான் அணிய வேண்டும் என்ற கட்டாய விதிமுறைகள் ஏதும் இல்லை. உங்களுக்குப் பிடித்தமான, அழகாகத் தோன்றும் கண்ணாடி பிரேம்களைத் தாராளமாகத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். கண்ணாடி தேர்ந்தெடுப்பதற்கு உதவியாக சில யோசனைகளை இங்கு தெரிவிக்கின்றேன்.

முதலில் நீங்கள் என்ன முகவெட்டு உடையவர்கள் என்று நிர்ணயிக்க வேண்டும். சிலர் வட்டமான முக அமைப்பும், சிலர் நீட்டமான முகவெட்டும், வேறு சிலர் சதுரமான அல்லது முக்கோண முக வெட்டு கொண்டவர்களாக இருக்கலாம். இதைத் தெரிந்து கொள்ள உங்கள் முகத்தின் நெற்றி, தாடை ஆகிய பகுதிகளை மானசீகமாக இணைத்துப் பார்த்தல் வேண்டும்.

➢ முக்கோண முகவெட்டு உடையவர்கள் குறுகிய கனச் சதுர வடிவுள்ள (RECTANGULAR) கண்ணாடிகளை அணிந்தால் நேர்த்தியாக இருக்கும்.

➢ நீட்டமான முகவெட்டு உடையவர்களுக்கு அகலமான கண்ணாடிகள் பொருத்தமாக இருக்கும்.

➢ உருண்டையான, வட்ட வடிவமைப்புக் கொண்ட முகங்களுக்கு (SHARP ANGLES) செங்கோண விளிம்பு களைக் கொண்ட பிரேம்கள் ஏற்றவை.

➢ சதுர வடிவ முகவெட்டு உள்ளவர்களுக்கு வளைவான FRAMES WITH CURVED LENS அமைப்புள்ள கண்ணாடிகள் அழகூட்டும்.

➢ முட்டை வடிவமைப்பு (OVAL) கொண்ட முகங்களுக்கு எந்த மாதிரியான கண்ணாடிகளும் பொருந்தும்.

➢ மிக நீட்டமான மூக்கு உடையவர்கள் மிகவும் கீழாக அமைந்துள்ள மூக்குப் பகுதியைக் கொண்ட கண்ணாடிகளை உபயோகப்படுத்தலாம்.

➢ மிகவும் சிறிய மூக்கு உடையவர்கள் மிக மெல்லிய மூக்குப் பகுதியை கொண்ட கண்ணாடிகளை அணியலாம்.

➢ மாநிறம், சிவந்த நிறம் கொண்டவர்களுக்குப் பளிச்சென்ற (BRIGHT COLOURED) வண்ண மூக்குக் கண்ணாடிகள் எடுப்பாக இருக்கும்.

➢ கறுப்பாக இருப்பவர்கள் (DARKLY COLOURED) கறுப்பு அல்லது இதர கெட்டியான வண்ண மூக்குக் கண்ணாடிகளைத் தேர்ந்தெடுக்கலாம்.



மூக்குக் கண்ணாடிகளைத் தேர்ந்தெடுக்கும் போது, நிதானமாக, வெட்கப்படாமல் நன்கு யோசித்து முடிவு செய்ய வேண்டும். தினந்தோறும் 14 மணி நேரங்கள் அணிந்து கொண்டிருக்க வேண்டியவை. எனவே அவற்றைத் தேர்ந்தெடுப்பதில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

மூக்குக் கண்ணாடி பராமரிப்பு

நன்கு பராமரிக்கப்பட்ட மூக்குக்

கண்ணாடி வெகு நாட்கள் உழைக்கும். பார்வைக்கு எந்த அசௌகரியமும் தராமல் உபயோகமாக இருக்கும். விலைவாசி மலை போல் உயர்ந்திருக்கும் இந்நாளில் நம்மிடம் உள்ள மூக்குக் கண்ணாடிகளை நெடு நாட்கள் பயன்பட வைப்பது அவசியம்.

1) மூக்குக் கண்ணாடிகளை உபயோகப்படுத்தாத நேரங்களில் அதன் உறையில் போட்டு வைத்திருக்க வேண் டும். அது முடியாவிடில் கண்ணாடி பாகம் மேசை மீது படாதவாறு வைக்க வேண்டும்.

2) மூக்குக் கண்ணாடிகளை கழற்றும் போது, இரண்டு கைகளாலும் கண்ணாடியின் விளிம்பில், இணையும் (Joint) இடத்தில் பிடித்து கழற்ற வேண்டும். ஒரு கையால் கழற்றும்போது கண்ணாடி பிரேம்கள் வளைந்து போகவும், உடைந்து போகவும் வாய்ப்புகள் உள்ளன.

3) மூக்குக் கண்ணாடியை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். உபயோகப் படுத்துமுன் ஒவ்வொரு முறையும் மென்மையான துணியால் நன்கு துடைக்க வேண்டும்.

4) மூக்குக் கண்ணாடிகளை அவ்வப் போது சரி பார்த்துக் கொள்ள வேண்டும். இணைப்புகள் தளர்ந்துவிடாமல், முகத்தில் சரியாக பொருந்தும்படி செய்து உபயோகித்துக் கொள்ள வேண்டும்.

5) ஒருவரது மூக்குக் கண்ணாடியை மற்றவர் உபயோகப்படுத்தக் கூடாது. இதனால் அளவுகள் மாறி, உரியவர் அணியும் போது பொருந்தாமல் அசௌ கரியம் ஏற்படுத்தும்.


கண் தானம்

'ஏன் கண்தானம் செய்ய வேண்டும்?

* கண்தானம் செய்வது எப்படி?
* யார் கண்தானம் செய்யலாம்?
* பார்வை இழந்தோர், கண்மாற்று ஆபரேஷன் மூலம் மீண்டும் கண்பார்வை பெறுவது எப்படி?

தானத்தில் சிறந்தது கண் தானம். ஒருவர் மறைவிற்குப் பிறகு கண்களைத் தானம் செய்வதன் மூலம், இருவர் கண் பார்வை பெறலாம். மனித உறுப்புகளுக்கு உதிரி பாகங்கள் (SPARE PARTS) கிடைப்பதில்லை. நம்முடைய உடல் உறுப்பு ஏதேனும் பழுதடைந்து விட்டால் அதே போன்ற வேறு உறுப்பு வாங்கி பொருத்திக் கொள்ள முடியாது. ஒருவர் மறைந்த பின்னர் அவரது காது, மூக்கு, கை, கால், மூளை எதையும் வேறு யாரும் உபயோகிக்க முடியாது. ஆனால் ஒருவரது கண்களை மட்டும் அவர் மறைவிற்குப் பிறகு மற்ற இருவருக்கு உபயோகப்படுத்த முடியும்.

கண்ணொளியின் அத்தியாவசியத்தை ஏற்படுத்திய இறைவன், அதை நாம் இழந்து விட்டால் அதை மாண்டவர்



மூலம் மீண்டும் பெற வழியையும் வைத்திருக்கிறான். இந்த அற்புத வசதியை நாம் உபயோகித்துக் கொள்ளாவிடில் இழப்பு மனித சமுதாயத்திற்கே. இந்த இயற்கைப் படைப்பின் அதிசயத்தை அறிந்து, மனித சமுதாய மேம்பாட்டிற்கு அதை உபயோகித்துக் கொள்ள முன் வர வேண்டுமென உங்களை அழைக்கிறேன்.

கண்தானம் செய்வது மிகவும் எளிது. ஒருவர் தன் மறைவிற்குப் பின்னர் கண்

தானம் செய்ய விரும்பினால், அருகாமையில் உள்ள கண் வங்கியில் கண்தான விண்ணப்பத்தைப் பெற்று, அதை பூர்த்தி செய்து கொடுக்க வேண்டும். அதன் பின்னர், அவரது பதிவு எண், கண் வங்கியின் விலாசம், தொலைபேசி எண், கண்தான விளக்க கையேடு, ஆகியவை அவருக்கு அனுப்பப்படும். அவற்றைப் பெற்றுக் கொண்ட பின்னர் கண்தானம் செய்யும் தனது விருப்பத்தை நெருங்கிய உறவினரிடமும், நண்பர்களிடமும் தெரிவிக்க வேண்டும். கண் வங்கியின் விலாசம், தொலைபேசி எண். கொண்ட அட்டையை எல்லோருக்கும் தெரியும் படி



மாட்டி வைக்க வேண்டும். அவர் இறந்த பின்னர் உடனடியாக கண் வங்கிக்குத் தகவல் தெரிவிக்க வேண்டும். ஒருவர் இறந்த 6 மணி நேரத்திற்குள் கண்களைத் தானம் செய்தால்தான் அதை பிறருக்குப் பயன்படுத்த முடியும். 6 மணி நேரம் இருக்கிறதே என சில மணிநேரம் கழித்துத் தகவல் அனுப்ப வேண்டாம். ஏனெனில் தகவல் அனுப்புவதற்கோ, அல்லது கண் மருத்துவர் வந்து கண்களை பெறுவதற்கோ 6 மணி நேரத்திற்கு மேல் தாமதம் ஏற்பட்டால் அவை பயனற்றுப் போய் விடும்.

நீங்கள் இருக்கும் ஊரில் கண் வங்கி இல்லையென்றால், கண் மருத்துவரிடம் உங்களது விருப்பத்தை தெரிவித்தால் கண்தானத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வார். மேலும் ஒருவரது உயிலின் மூலம் கண்தானம் செய்வதானால், கண்களைப் பெறுவதற்கு மிகவும் தாமதம் ஏற்படுகிறது. எனவே கண் வங்கிகள் மூலம் கண்தானம் செய்வதே உபயோகமாக இருக்கும்.


நாம் நமது இறந்துபோன நெருங்கிய உறவினர்களது கண்களை தானம் செய் விரும்பினால், கண் வங்கிக்கு உடனடியாக தகவல் அனுப்பினால் போதுமானது. இறந்தவர் முன்கூட்டியே கண்வங்கியில் பதிவு செய்திருக்க வேண்டும் என்று அவசியமில்லை.

5 வயதிற்கு மேலும் 65 வயதிற்கும் குறைவாகவும் உள்ளோர் கண் தானம் செய்யலாம். ஆண் பெண் ஜாதி மத பாகுபாடின்றி கண் தானம் செய்யலாம். ஒருவர் தனது வாழ்நாளில் கண்ணாடி அணிபவராக இருந்தாலும், கண்களில் புரை (Cataract) இருந்தாலும் கண் தானம் செய்யலாம். ரத்தத் தொற்றுநோய், எயிட்ஸ், கல்லீரல் தொற்றுநோய், இரத்தப் புற்றநோய் ஆகியவற்றால் இறக்க நேரிட்டவர்களின் கண்களை மட்டுமே பயன்படுத்த முடியாது. மேலும் கண்களில் தொற்றுநோய் க்ளாகோமா என்னும் கண் அழுத்தநோய், கண்களில் புற்றுநோய், அறுவைசிகிச்சை செய்யப்பட்ட கண்கள் போன்றவைகளையும் பயன்படுத்த முடியாது.

கண் மாற்று அறுவைச் சிகிச்சை என்பது ஒருவரது பழுது அடைந்த கண்ணை முழுமையாக அப்படியே எடுத்து விட்டு இறந்தவரது கண்ணை அந்த இடத்தில் பொருத்துவது அன்று. அவ்வாறு செய்யவும் முடியாது. கண்ணில் கார்னியா (CORENA) எனப்படும் கண் ணாடி போன்று தெளிவாக உள்ள பகுதி பழுதடைந்து இருந்தால் அந்தப் பகுதியை மட்டுமே மாற்றி பார்வை பெற செய்ய முடியும். கண் நரம்பு நோயினால் பார்வை இழந்தவர்கள், விழித்திரை கோளாறுகளினால் பார்வை இழந்தர்வகள், மற்றும் விபத்தினால் கண்கள் சீர்குலைந்து போனவர்கள். போன்றோர் கண்மாற்று அறுவை சிகிச்சையினால் பயன்பெற முடியாது.

எளிமையான ஒரு உதாரணம் மூலம் இதனை இங்கே விளக்குகிறேன். நமது கண்ணில் உள்ள (CORNEA) "கார்னியா"

எனப்படும் பாகம், கைக்கடிகாரத்தின் மேல் கண்ணாடி போன்றதாகும். கைக் கடிகாரத்தின் உட்புற இயந்திர பகுதிகள் நன்றாக வேலை செய்து கொண் டிருக்கும்போது, மேல் கண்ணாடி மட்டும் புகை படிந்தாற்போல் ஆகிவிட்டால் நம் மால் மணி பார்க்க முடியாது அல்லவா! அப்பொழுது அந்த கைக்கடிகாரத்தின் கண்ணாடி மட்டும் மாற்றிவிட்டால் நன்கு மணி பார்க்க முடியும் என்பது உங்களுக் குப் புரியும். அதைப்போலவே நமது கண்ணின் பழுதடைந்த "கார்னி யாவை" மாற்றி இறந்தவரது கண்ணின் கார்னி யாவை பொருத்தினால் நம்மால் முன் போன்று பார்க்க முடியும். அதுசமயம் நமது கண்ணின் இதர பாகங்கள் தத்தம் வேலையை ஒழுங்காகச் செய்து கொண் டிருக்க வேண்டும். எனவே "கார்னியா"



எனப்படும் கண்களின் கண்ணாடி போன்ற பாகம் பாதிக்கப்பட்டிருக்கும் நபர்களே இந்த கண்மாற்று அறுவை சிகிச்சை மூலம் பயனடைவர்.

இதனை கண்மாற்று அறுவை சிகிச்சை என்று சொல்வதை விட "கார்னியா மாற்று அறுவை சிகிச்சை" என்று சொல் வதே முறையாகும்.

இறந்தவர்களின் கண்களை அகற்று வதினால் அவர்கள் முகம் விகாரமடை யாது. தழும்புகள் ஏற்படாது. கண்களை எடுத்த பின்னர், கண்கள் இருந்த குழிவு களை நன்கு நிரப்பி உறங்குவதைப் போலவே தோற்றுமளிக்கும் வகையில் கண் அறுவை சிகிச்சை நிபுணர்கள் செய்து விடுவார்கள். இறந்தவரின் உட லுக்கு இதனால் யாதொரு கெடுதலும் நேராது. காண்போருக்குக் கண்கள் தானம் செய்யப்பட்டுள்ளனவா என்பது தெரி யாது. மேலும் கண்தானத்திற்காக இரு கண்களையும் அகற்றத் தேவைப்படும் நேரம் சுமார் 15 நிமிடங்களே.

எனவே-

கண் எனும் உறுப்பு நமக்கு இறைவன் தந்த மிகப் பெரிய வரப்பிரசாதம். அதன் மூலமாகத்தான் இயற்கையை, நம் குடும்பத்தவரை, அன்பானவர்களைப் பார்க்கிறோம். தெரிந்து கொள்கிறோம். இத்தனை முக்கியமான உறுப்பை பத்திர மாகப் பார்த்துக் கொள்ள வேண்டும் அல்லவா?

இனிமேலாவது நம் கண்களை நன்கு பராமரிப்போம். இறந்த பிறகு உடலில் பயன்படக்கூடிய ஒரே உறுப்பான கண்ணை தானம் கொடுத்து மற்றவருக்கும் உதவியாக இருப்போம்.

— டாக்டர். சித்தார்த்தன்,
(8, எல்.ஆர்.என்.காலனி,
சாரதா கல்லூரி ரோடு,
சேலம்- 636 001.
போன்:416955)

✷ துவரம் பருப்பு வேக வைக்கும்போது பருப்புடன் ஒரு டீஸ்பூன் வெந்தயத்தையும் கலந்து வேக வைத்தால் சாம்பார் இரவு வரை ஊசிப் போகாமல் இருப்பதுடன் உடம்புக்கும் நல்லது.

✷ உங்கள் கணவரின் அழகும், வலிமையும், ஈட்டும் பொருளும் மட்டுமே உங்களுடைய சொத்து என எண்ணி விடாதீர்கள். அவருடைய நல்ல குணங்களும் உங்களுடைய சொத்தாகும். அவற்றை மேம்படுத்தவும் உங்களால் இயன்றதைச் செய்யத் தவறி விடாதீர்கள்.



✷ காய்கறி உசிலி செய்பவர்கள் காய்கறியைத் தனியே வேகவைத்து, பருப்பைத் தனியே வேகவைத்து பின் இரண்டையும் வதக்கிக் கலந்து என்று ஏகமாய் அவஸ்தைப்படுவார்கள். இது தேவையில்லை. பருப்பு அரைத்தவுடன் கடைசியில் பொடியாக நறுக்கிய துருவிய காய்கறி துருவல்களை (கோஸ், கேரட், உருளைக்கிழங்கு) சேர்த்து மிக்ஸியில் ஒரு திருப்புத் திருப்பி தேவையான உப்பு சேர்த்து, கடுகு தாளித்துக் கொட்டி மாவை இட்லித் தட்டில் கொஞ்சமாக வைத்து ஆவியில் வேகவைத்து உதிர்த்தால் பிரமாதமாக உசிலி செய்து விடலாம். எண்ணை கொஞ்சம் போதும்.

✷ எங்கள் வீட்டில் காலாவதியாகி விட்ட ஆயின்ட்மென்ட் டியூப்களைச் சேர்த்து வைத்திருக்கிறேன். என் கணவரின் ஷூக்களுக்குத் தினமும் இவற்றிலிருந்து சிறிது ஆயின்ட்மென்டை வெளியில் எடுத்துப் பாலிஷ் போல உபயோகிக்கிறேன். மெழுகுக் கலவை இருப்பதால், அசல் ஷூ பாலிஷ் போட்டது போல இருக்கிறது. என் கணவரின் அலுவலகத்தில் "இந்த பாலிஷ் எங்கே சார் போட்டீர்கள்? கல்யாண ஷூ போல பளபளக்கிறதே!" என்று வியப்புடன் கேட்டார்களாம். வீட்டுக்கு வந்த என் கணவர் எனக்குப் புகழாரம் சூட்டியது மட்டுமல்ல. வித்தியாசமான முறையில் ஷூ பாலிஷ் போட்டதற்குப் பரிசாக ஒரு முத்து மாலையையும் தந்தார்.

✷ பச்சரிசி 5 ஆழாக்கு, பயத்தம் பருப்பு ஒரு ஆழாக்கு போட்டுச் சாதாரணமாக முறுக்கு செய்யலாம். அதிலேயே பச்சரிசி 5 ஆழாக்கும், கடலைப் பருப்பு அரை ஆழாக்கும், பயத்தம் பருப்பு அரை ஆழாக்கும் கலந்து மாவு செய்து நெய் 100 கிராம்(அ) வெண்ணெய் போட்டு பிசைந்து செய்தால் மிகவும் ருசியாக பொன் நிறத்தில் முறுக்கு இருக்கும். இதே போல பச்சரிசி மாவு 4 ஆழாக்கு, உடைத்த கடலை மாவு ஒரு ஆழாக்கும் போட்டு முறுக்கு செய்யலாம்.

48 ஆண்டுகளாக

உங்கள் பத்திரங்களைப் பாதுகாக்க எங்கள் சேவல் மார்க் ஃபைல்கள் பயன்பட்டு வருவதுபோல உங்கள் சேமிப்புகளை பாதுகாக்க எங்கள் டெபாசிட் திட்டம்...

கணக்கிடப்படும்
வட்டி விகிதம் — ஓராண்டுக்கு

24%

மாதங்கள்	ரூ.1000க்கு முதிர்வுத் தொகை	வருடாந்திர வட்டி விகிதம்
12	ரூ. 1260	26%
24	ரூ. 1587	29.35%
36	ரூ. 2000	33.33%
48	ரூ. 2520	38%
60	ரூ. 3175	43.5%

குறைந்தபட்ச டெபாசிட் ரூ.1000

COCK BRAND FILE

TRADE MUTHUVEL MARK

MUTHUVEL INDUSTRIES

Mfrs. of COCK BRAND OFFICE FILES
Angappa Chettiar Industrial Complex,
20-A, Round Road, Post Box No. 32,
DINDIGUL - 624 001. TAMILNADU.

Ph: Off: (0451) 25260 & 27637. Res: 25643 & 23726
Grams: COCKFILE

உங்கள் முன்னேற்றமே எங்கள் வளர்ச்சி

ADWAVE/MI/5016

✷ கல்யாணம், கிரஹப் பிரவேசம் போன்ற வீசேஷங்களுக்குப் பரிசுகள் வழங்கும் போது பணமாக வழங்குவதற்குப் பதில், ஆன்மீகக் கேசட்டுகளைப் பரிசாக வழங்கலாம். உதாரணமாக ஸ்கந்த சஷ்டி கவசம், சுப்ரபாதம் போன்ற ஆடியோ கேசட்டுகளை வழங்கினால் பயனுள்ளதாக இருக்கும். அவர்களும் மகிழ்ச்சி யடைவார்கள்.

✷ சர்க்கஸில், நெஞ்சின் மீது பலகை ஒன்றைப் போட்டுக் கொண்டு அதன் மீது யானையை ஏற்றிக் கொள்ளும் வலிமை படைத்தவனும் குழந்தையாக இருந்த போது யானையைக் கண்டு பயந்துதான் இருப்பான். வளர்க்கும் முறை ஒவ்வொரு மனிதனையும் வெவ்வேறு நிலைக்கு உயர்த்துகிறது. அந்த வளர்க்கும் கலையைத் திறமையுடன் கைக்கொள்வது தாய்க்குலத்தின் தனித்த கடமை.

32 வயதான திருமதி. கீதா தேவி ஆலப்புழையில் செயிண்ட் ஜோசப் பெண்கள் கல்லூரியில் லெக்சரராகப் பணிபுரிந்து வந்தார். இவர் சமையலறையில் சமையல் செய்து கொண்டிருந்த பொழுது, குக்கர் வெடித்து, மூடி முகத்தில் அறைந்து பரிதாபமான நிலையில் மரணத்தைத் தழுவினார். குக்கரில் உள்ள 'சேப்டி வால்வு' சரியாக வேலை செய்யாததால் இந்தக் கோர முடிவு ஏற்பட்டது. குக்கரின் பழுதடைந்த பாகங்களை உடனுக்குடன் மாற்றினால் இம்மாதிரி அசம்பாவிதங்களைத் தடுக்கலாம்.

✷ சில நாட்களில் நாம் ''அடை''க்கு அரைத்து வைத்திருக்கும் சமயம் எதிர்பாராத விருந்தாளிகள் வந்து, "அடை போதுமா?" எனச் சந்தேகம் வரும் சமயம் தயங்காது ஒரு தம்ளர் ஜவ்வரிசியைக் களைந்து மாவுடன் சேர்க்கவும். 15 நிமிடம் கழித்து வார்க்கவும். வாழைப்பூ, தேங்காய், கோஸ், வெங்காயம் போட்டு வார்ப்பது போல் இதுவும் மிருதுவாகவும் பார்க்க முத்து முத்தாக அழகாகவும் இருக்கும்.

✷ நமது உடல் மிக விசித்திரமானது. சில சமயங்களில் நாம் மிக ஆவலுடன் ஒரு பழம் அல்லது உணவுப் பண்டம் எதையாவது உண்ண விரும்பினால் நம் உடலுக்கு அதிலுள்ள சத்து இன்றியமையாதது என்றே பொருள் (சபலத்திற்காகச் சாப்பிடுவதைக் கணக்கில் சேர்க்காதீர்கள்) கர்ப்பிணிகள் சில பொருள்களை அதிக ஆவலுடன் சாப்பிடுவதும் இதனால்தான் என்று மருத்துவ விஞ்ஞானம் சுட்டிக் காட்டுகிறது!



* வீட்டில் பருப்புப் பொடி திரித்து வைத்திருப்பவர்கள் அதை வற்றல் குழம்பு, வெந்தயக் குழம்பு வைக்கும் போது இரண்டு சிட்டிகை போட்டால், நல்ல மணமாக இருப்பதோடு மட்டுமில்லாது, பருப்பு தனியாக இடும்போது அடியிலேயே கடைசியில் தங்கும் சிரமமும் இருக்காது. முழுவதும் கரைந்து விடுவதால் எல்லாச் சத்துக்களையும் பெற முடிகிறது.

சதை மடிப்பா?

* வாழைத் தண்டு, வெள்ளை முள்ளங்கி இவைகளைப் பொடியாக நறுக்கி எலுமிச்சைச் சாறு, உப்பு இவை சேர்த்துப் பச்சையாக வெறும் வயிற்றில் தொடர்ந்து சாப்பிட்டு வர, அங்கங்கே விழும் சதை மடிப்புகள் மறையும்.


* பாகற்காய் வதக்கல் கறி செய்யும்பொழுது மிளகாய்த்தூள், உப்பு, இவற்றோடு ஆம்சூர் (மாங்காய்ப்பொடி- கடைகளில் கிடைக்கும்) பொடியையும் கொஞ்சம் சேர்த்துப் பாருங்கள்... கசப்பில்லாத பாகற்காய் கறியைக் குழந்தைகள் கூட விரும்பிச் சாப்பிடுவார்கள்.

* எல்லா வடாம்களையும் உப்பும், காரமுமாகவே செய்வதைவிட்டுக் குழந்தைகளுக்கென கொஞ்சம் மாவில் சர்க்கரை கலந்து கிளறி, ஏதாவது ஒரு பழ எசன்சையும், கலரையும் சேர்த்து வடாம் பிழிந்தால் பொரித்த பின் தித்திப்பாகவும் வாசனையாகவும், கலராகவும் இருக்க, விரும்பிச் சாப்பிடுவார்கள்.



* உடலில் புண், குடலில் புண் - எதுவாக இருந்தாலும், டாக்டரிடம் ஓடாமல், தேன் பாட்டிலைத் தேடி எடுங்கள். தேனை உள்ளுக்கு ஒரு டேபிள் ஸ்பூன் குடித்து, சருமத்தின் மேல் உள்ள புண்ணின் மேலும் தேனைத் தடவி வாருங்கள். அதிசயத்தக்க முறையில் புண் குணமாகும்.

* அடிக்கடி டிபன் செய்பவர்கள் வீட்டில், தயிர் வீணாவதற்கு வழியிருக்கிறது. அவர்கள் மிளகாய்ப் பொடியுடன் தயிரைக் குழைத்து, இட்லி அல்லது தோசைக்குத் தொட்டுச் சாப்பிட்டால், சுவையும் அபாரமாக இருக்கும். எண்ணெய் செலவும் மிச்சம்!



* நீங்கள் எவர்சில்வர் குங்குமச் சிமிழ் வாங்கிப் பலருக்கு வெற்றிலை, பாக்கில் வைத்துக் கொடுக்கிறீர்கள் அல்லவா! உபயோகமில்லாமல் அது இறைந்து கிடக்கிறது பலர் வீட்டில். ஊறுகாய் வைத்துக் கொண்டு போகும்படி உள்ள சிறிய எவச்சிலவர் குட்டி டப்பாக்கள் வாங்கி, அதில் குங்குமம் போட்டுக் கொடுங்கள். அவர்களுக்கும் உபயோக மாக இருக்கும்.

* ஆரஞ்சுப் பழத்தின் தோலியையும், பச்சை மிளகாயையும் பொடியாய் நறுக்கிச் சிறிது கூட எண்ணெய் ஊற்றி வதக்கி, வற்றல் குழம்பாகச் செய்தால் கமகமவென்று வாசனையுடன் சாதம் இன்னும் இரண்டு பிடி அதிகமாகச் சாப்பிடத் தோன்றும். பித்தம், ஜீரணத்திற்கு மிகவும் நல்லது.

* பால் திரிந்து விட்டால் நன்கு நீரை வடிகட்டி சர்க்கரை சேருங்கள். பிறகு லேசாகக் கிளறிக் கொண்டு மிக்ஸியில் போட்டு உதிர் உதிராக எடுங்கள். அருமையான பால்கோவா ரெடி.

* அரிசி, பருப்பில் வண்டு வந்து விட்டால், வெயிலில் போட்டால் வெப்பத்தில் சுருண்டு விடும் என்றாலும் அரிசி பருப்பை விட்டு சுலபத்தில் அகற்ற முடியாது. சரி! வேறு என்ன வழி?

பாதி வெயிலும், பாதி நிழலும் இருப்பது போல அரிசியைப் பரப்ப வேண்டும். வெயில் பட்டு, வண்டுகள் நிழல் பகுதிக்கு வந்து, அங்குள்ள சுவர் வழியாக, சாரை சாரையாக ஏறி விடும். அப்படியே துடப்பத்தால் முறத்தில் தள்ளி வெளியே கொட்டி விடலாம்.

✵ அப்பளம்
வடாம்
எல்லாம்
தீர்ந்தவுடன்
டப்பாவின்
அடியில் பொடியாக
மீதி இருக்கும்.
அதை எண்ணெயில்
பொரிக்க முடியாது.
அதனால் அதை
கொதிக்கும் தண்ணீரில்
கொட்டி, உடனே எடுத்து
வடிகட்டி ஆறிய பிறகு
சேமியா உப்புமாவிற்குத்
தாளிப்பது போல் தாளித்து
இதையும் கொட்டி, மேலே
தேங்காய் துருவலைப் போட்டு மூடி,
எலுமிச்சம்பழம் பிழிந்து கலந்து
சாப்பிட சுவையாக இருக்கும்.

✵ சாதாரணமாக முந்திரிப்
பருப்புக்கள் எங்கே
இருக்கிறதோ அங்கே
எறும்புகளுக்குக்
கொண்டாட்டம்தான். இந்த
முந்திரிப் பருப்புக்களை
எறும்புகள் அரித்துத் தின்று
விடாமல் இருக்க இத்துடன்
சிறிதளவு பச்சைக்
கற்பூரத்தைப் போட்டு
வைத்து விட வேண்டும்.



✵ சமையல் சோடாவும்
சலவைச் சோடாவும்
தோற்றத்தில் ஒரே மாதிரியாக
இருப்பதால், கவனக்
குறைவாக மாற்றிச்
சமையலில் உபயோகித்து
விட்டுச் சங்கடப்படுகிறவர்
களுக்கு: சலவைச்
சோடா - ஈரக்கையால்
தொட்டால் சூடாக இருக்கும்
சமையல் சோடா - ஈரம்
பட்டால் பழுப்பு அல்லது
வெளிர் மஞ்சள் நிறமாக
மாறிவிடும்.

✵ ‘சுட்ட எண்ணெயைத்
தொடாதே. வறுத்த பயிறை
விடாதே’ என்று ஒரு பழமொழி
உண்டு. சுட்ட எண்ணெய்
உடம்புக்குக் கெடுதல். ஜீரண
சக்தி குறையும். வயிற்றுப்
பொருமல் ஏற்படும்.
ஆதலால் சுட்ட
எண்ணெயை
உபயோகிக்கக்
கூடாது. எண்ணெய்
மீந்து போகாதபடி
பலகாரம் செய்யலாம்.
வறுத்த பயிறு உடல்
வளர்ச்சிக்குச் சிறந்தது.
எத்தனை நாட்கள் ஆனாலும்
கெடுதி இல்லை.
குழந்தைகளுக்கு வறுத்த பயிறு
கொடுத்தால் நல்லது.



✵ தீபாவளி, பொங்கல்,
பிறந்தநாள், புதுவருடப் பிறப்பு
ஆகிய தினங்களில் கடைகளில்
விற்கும் கிரீட்டிங்ஸ் கார்டுக்குப்
பதிலாக நம் வீட்டுக் குழந்தை
களிடம் போஸ்ட் கார்டை
வாங்கிக் கொடுத்து
அவர்கள் இஷ்டப்படி
டிராயிங் வரையச்
சொல்லி அனுப்பி
னால் செலவும்
கம்மி, குழந்தை
களுக்கும் குதூ
கலம், பெறுப
வர்களுக்கும்
சந்தோஷம்!

* ப்ளவுசுக்கு லைனிங் துணியாக, பயன்படுத்தாத அங்கவஸ்திரங்களைப் பயன்படுத்தலாம் அல்லது பைகளாகத் தைத்து வைத்துக் கொண்டால் திரிந்த பாலை வடிகட்ட, பனீரைத் தயாரிக்க, தானியங்களை முளை கட்ட இந்தப் பைகளைப் பயன்படுத்தலாமே!

* வீட்டில் அலாரம் டைம்பீஸ் கடிகாரம் வைக்கும்போது, அலாரம் அடிப்பது நமக்குச் சரியாகக் கேட்கவில்லையென்றால் ஒரு அலாரம் டைம்பீஸை ஒரு அலுமினியத் தட்டின்மேல் வைத்தால் அலாரம் அடிக்கும் போது மிகவும் சப்தமாக ஒலிக்கும். நாம் உடனே எழுந்து விடலாம்.

* ஐஸ் டிரேயில் தண்ணீருக்குப் பதிலாக ஜூஸை ப்ரீஸ் செய்து இந்த ஃப்ரூட் ஐஸ்களை ஜூஸில் போட்டுப் பரிமாறவும். அட்டகாசமாக இருக்கும். லைம் ஜூஸை அழகான ஆரஞ்சு ஐஸுடன் பரிமாறினால் அது நாவுக்கும் கண்ணுக்கும் விருந்தாக இருக்கும்.

வெங்காய பஜ்ஜி

* வெங்காய பஜ்ஜி எல்லோருக்கும் தெரிந்ததுதானே என்கிறீர்களா? சிலருக்குப் போடும்போது சுருள் பிரிந்து கொண்டு சரியாக வராது. அப்படி வராதிருக்க சிறிய வெங்காயத்தை உரித்துக் கொண்டு 2 டீஸ்பூன் அளவு எண்ணெய் விட்டுக் கொஞ்சம் வதக்கிக் கொண்டு பிறகு பஜ்ஜி மாவில் போட்டு எடுக்க மணமும் சுவையுமாக இருக்கும். நிறையவும் குழந்தைகளுக்குக் கொடுத்தது போலவும் இருக்குமே! பார்க்கவும் வித்தியாசமாக இருக்கும்.


* கல்யாண சீசன் போது முறுக்குகளை வைத்துக் கொடுத்து விட்டார்கள். யாரும் சாப்பிட வில்லையா? அம்மியில் வைத்து ஒன்றிரண்டாகப் பொடிக்கவும். பின் 'மிக்ஸி'யில் இட்டு நைஸாகப் பொடி செய்து கூட்டு, பொரியல் செய்யும் பொழுது தூவினால் நல்ல ருசியாக இருக்கும். நிறைய 'முறுக்குகள்' இருந்தால் உப்புமாவே செய்யலாம்.



✷ குழந்தை பிறந்தவுடன் உங்கள் பாலைக் கொடுங்கள். ஏனென்றால், தாய்ப்பாலில் குழந்தையின் கண் பார்வைக்கு வேண்டிய வைட்டமின் 'ஏ' அபரிமிதமாக இருக்கிறது.

✷ கர்ப்பமாக இருக்கும் போது, நீங்கள் கறும் பச்சை நிறமான கீரை வகைகளையும், (காரட் போன்ற) மஞ்சள் நிறமான காய்கறிகளையும், பழங்களையும் உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

✷ கோதுமையை மாவாக அரைத்ததும் நன்றாகச் சலித்துக் கொஞ்சம் தூள் உப்பைக் கலந்து வைத்தால் வண்டுத் தொல்லை வரவேவராது.



✷ எத்தனை சிரமப்பட்டுப் பண்ணினாலும் தக்காளி சாதம் 'சப்'பென்று தான் இருக்கும். ஆனால் கொஞ்சம் மசாலாப் பொடியைத் தூவிப் பாருங்கள். இது தக்காளி சாதமா(அ) அமிர்தமா என்று கேட்க வைக்கும்.

✷ இன்லண்ட் லெட்டர் எழுதுவதற்கு முன்பாக நன்றாக மடித்துவிட்டு எழுதினால் கிழிக்கும் போது எழுத்துக்கள் மறைவதையும் தவிர்க்கலாம். நன்றாகக் கிழிக்கவும் முடியும்.

* உண்டு
மகிழ்வதற்கும், மகிழ்ச்சியாக
இருப்பதற்கு உண்பதற்கும் உள்ள
வேறுபாட்டைக் குழந்தைப் பருவத்திலேயே
நம் செல்வங்களுக்குக் கற்றுத் தந்து விடுங்கள்.
சாக்லெட் மிட்டாய் உண்டு மகிழ்வதற்காக. வேப்பம்
பூ, வேப்பங் கொழுந்து, பாகற்காய் வாழ்க்கையில் நோயற்று
மகிழ்ச்சியாக இருப்பதற்கு. சத்துணவான தக்காளி அளவோடு
உண்பதற்கு. (அதிகமானால் சிறு நீரகக் கற்களைத் தோற்றுவிக்கக்
கூடும்.)

* வெயில் அதிகமாக இருப்பதால் குழந்தை[...]
வெளியில் அழைத்துச் செல்லும் பொழு[...]
கலர் டிரஸ் அணிவித்து அழைத்[...]
கள், அதிகமாக வெயில் [...]
தெரியாது.

* கை விரலில் சிறு முள் குத்தி, எடுக்க
வராவிட்டால் அதை எடுக்க ஒரு உபாயம்
இருக்கிறது. முள் குத்திய இடத்தில் சிறிது
பெவிகாலைத் தடவி விடவும். பெவிகால் நன்றாக
உலர்ந்து விட்ட பின்னர், அதை உரித்து எடுத்தால்
குத்திய முள் பெவிகாலுடன் சேர்ந்து வந்து விடும்.

* கதவு, ஜன்னல் [...]
வெயில் காலத்[...]
எவ்வளவு து[...]
படிந்துவிடுகின்[...]
கதவு, ஜன்ன[...]
துடைத்த[...]
அதே ச[...]

* வெளியூர் செல்லும்பொழுது தக்காளி சாதம்,
புளியஞ்சாதம், லெமன் ரைஸ், தேங்காய் சாதம்
போன்றவற்றில் பார்சல் கட்டும்பொழுது, சுட்ட
(அ) பொரித்த அப்பளத்தைப் பொடித்து சாதத்தில்
கலந்து பொட்டலம் கட்டி விடுங்கள். சாப்பிடும்
பொழுது தொட்டுக் கொள்ள எதுவும் வேண்டி
இருக்காது. சாதமும் ஜோராக இருக்கும்.

* இ[...]
பே[...]
செ[...]

* தனி பீட்ரூட் பொரியல்
செய்வதைவிட, காரட்,
உருளைக்கிழங்கு -
மூன்றையும் சேர்த்து
வதக்கினால் 'ட்ரை கவர்',
ருசி மிகுந்து இருக்கும்.
குழந்தைகள் விரும்பிச்
சாப்பிடுவார்கள்.



* தேங்காய்த் து[...]
சாமான்களைத் தா[...]
தனியாவையும் [...]
துவையல் மண[...]

...லுங்
...ளுக்குத்

...கள் தூசு படிந்து விட்டால் இந்த ...ம் சிரமம். வெறும் துணியால் ...லும் மறுநாளே தூசுகள் வந்து ...ரியுடன் சிறிது கெரசின் கொண்டு ... வீட்டில் உள்ள மரச் சாமான்களைத் ...க்கும் துணியில் ஒட்டிக் கொள்ளும். ...மரச் சாமான்கள் பளபளப்பாவதுடன், ...கள் ஆகியவையும் நெருங்காது.

...யில் காலமாதலால் எங்கு ...லும் ஈக்கள் மொய்த்துக் ...ருக்கும். உங்கள் வீட்டிலும் ஈ ...ல்லையா? வீட்டைக் கழுவும் ...போது நீரில் சிறிது உப்பைச் சேர்த்துப் பின்பு கழுவுங்கள். ...ய்ந்தபின் அறையில் ஈக்கள் வந்து அமராது.



✲ பிரெட்டை நமக்குப் பிடித்தமான வடிவங்களில், சிறுசிறு துண்டுகளாகக் கட்செய்து, குலோப் ஜாமூன் மாவை பொரிப்பது போல நெய்யிலோ அல்லது டால்டாவிலோ பொன்னிறமாக பொரித்து எடுத்து, குலோப் ஜாமூனுக்கு செய்வது போல, சர்க்கரை ஜீராவில் சிறிது நேரம் ஊறவைத்து சாப்பிட்டால் குலோப் ஜாமூனை விட அதிக ருசியாக ப்ரெட் ஜாமூன் கிடைக்கிறது.

...தத் தேவையான ...க்கும் போது சிறிது ... வறுத்து அரைத்தால் ...க்கும்.

✲ சின்ன நெல்லிக்காயை கேரட் துருவலில் சின்னதாகத் துருவிக் கொண்டு, மாங்காய் சாதத்திற்குத் தாளிப்பது போல் தாளித்து, நெல்லிக்காய் சாதம் தயாரிக்கலாம். இந்த சாதத்திற்குத் தேங்காய் சட்னி தொட்டுக் கொள்ள மிகவும் நன்றாக ...ருக்கும்.

✷ செலவாகாத ஜாமை மிக்ஸியில் வைப்பரில் போட்டு அடித்து எடுத்துக் கொள்ளுங்கள். குளிர்ந்த தண்ணீரை விட்டுப் பழரசமாக அனைவருக்கும் பரிமாறுங்கள். சூப்பராக இருக்கும்.

✷ புடைவை கிழிந்து விட்டாலும் முந்தானை கிழிவதில்லை. இரண்டு, மூன்று முந்தானைகளை இணைத்துக் கர்ட்டன் போட்டால் அழகாக இருக்கும்.

✷ டூத் பிரஷ்ஷை வாரம் ஒருமுறை வெந்நீரில் ஊறப் போட்டு வைத்துப் பிறகு அலம்பி உபயோகிக்க வேண்டும். ஆரோக்கியத்திற்கு உகந்தது.

✷ சப்பாத்திகளைச் சூடாக எடுத்து வைக்க வடிகட்டி தட்டை உபயோகப்படுத்தினால், அடியில் வைத்த சப்பாத்திகள் ஆவியினால் சொத சொதவென்று ஆவதைத் தவிர்க்கலாம்.



✷ குழந்தைகளுக்கு இரவு பேரீச்சம்பழம் 4,5 கொடுத்து பால் (அ) தண்ணீர் கொடுத்தால் மனோபலம் கூடும். மூளை பலப்படும்.

✤ ஸ்கூட்டர், பைக் போன்ற டூ வீலர்கள், மற்றும் கார் இவற்றில் இன்ஷூரன்ஸ் பேப்பர் வைத்து மாட்டும் வட்டத் தட்டு (பிளாஸ்டிக் டிஸ்க்) பயன்படுத் தாமல் இருந்தால் தூர எறிந்து விடாமல் அதில் ஓம் என்று எழுதி குண்டுசியில் (உங்களுக்கு விருப்பமான நிறத்தில் சிறிய சம்கியைக் கோர்த்து அத்துடன் சிறிய மணி ஒன்றையும் கோர்த்து ஓம் என்ற எழுத்து மீது குத்தி விடுங்கள். இதை உங்கள் வீட்டுப் பூஜை அறை வாசலில் மாட்டி விடுங்கள். பளபளவென ஓம் என்ற எழுத்து உங்கள் வீட்டுப் பூஜை அறையை அலங் கரித்து வரவேற்கும்.

✤ பிரண்டையை மட்ட மாக எடை போட வேண் டாம். தலை யிலிருந்து கால் வரை (உள்ளுறுப் புகள்) உள்ள எல்லா வியாதிகளையும் குண மாக்கும் உயர்ந்த பொருள் பிரண்டை. வாரம் ஒருமுறையாவது பிரண்டையைச் சமையல் செய்து சாப்பிட்டால் உடல் ஆரோக்கியம் பெறும். அஜீரணம் நெருங்காது.

✤ பச்சைக் கீரைகள் முக்கியமான தாதுக்கள் மற்றும் வைட்டமின்களின் உறைவிடமாகத் திகழ்வதால், உடல் நலக் காப்பு உணவுப் பொருட்கள் என வகைப்படுத் தப்பட்டுள்ளன. கீரைகளில் இரும்பு, கால்சியம், வைட்டமின் ஏ (கரோட்டீனாக) வைட்டமின் சி மற்றும் குறிப்பாக ரைபோஃப்ளோவின் மற்றும் ஃபோலிக் அமிலத்துடனான பி-காம்ப்ளெக்ஸ் வைட்டமின்கள் ஆகியவை பெருமளவில் உள்ளன. இவற்றில் புரோட்டீ னும் உள்ளது. இந்தப் பசுந்தழைக் காய்கறிகளை தானிய - பயறுக் கலவையுடன் சேர்க்கும் போது இது உணவிலுள்ள புரோட்டீன் தரத்தை உயர்த்துகிறது. பச்சைக் கீரைகள் வலுவான எலும்புகளையும், ஆரோக்கியமான பல் மற்றும் ஈறுகளையும் உருவாக்க உதவுகின்றன.

✤ நீங்கள் எந்தப் பணி யைச் செய்தாலும் அதை அன்புடனும் ஆர்வத்து டனும் செய்யப் பழகிக் கொள்ளுங்கள். எதிர் காலத்தில் கடினமான பணிகள் எதிர்ப்படும் போது உங்களிடம் இருக் கும் இந்தக் குணம் இயல்பாக அந்தப் பணி யையும் செம்மையாக முடித்துத் தரும்.

- நார்மன் வின்சென்ட்

✤ பச்சரிசியை மிஷினிலோ அல்லது மிக்ஸி யிலோ பெரிய ரவையாக உடைத்து வைத்துக் கொள்ளவும். ஒரு பங்கு அரிசி ரவைக்கு ஒரு பங்கு உளுந்தை ஒரு மணி நேரம் ஊறவைத்து நறநறவென்று அரைக்கவும். பச்சரிசி ரவையை நன்கு புளித்த தயிரில் ஊறவைக்கவும். அதில் அரைத்த உளுந்தைப் போடவும். ஒரு பிடி மிளகை ஒன்றிரண்டாகத் தட்டி மாவில் போட வும். அடுப்பில் நெய்யை நன்கு காய்ச்சி மாவில் விடவும். பிறகு கறிவேப்பிலையை உருவிப் போடவும். அளவாக உப்பு சேர்த்து மாவைக் கலந்து கிண்ணங்களில் ஊற்றிக் குக்கரில் இட்டிலிக்கு வைப்பது போல் வேகவைத்து எடுக்கவும். நன்கு புளித்த தயிர் இருந்தால் உடனடியாக நீங்கள் இந்த காஞ்சீபுரம் இட்டிலி யைத் தயாரிக்கலாம்.



✤ புது பாட்டிலுள்ள கெட்சப், தேன், டால்டா, நெய், எதுவானாலும் சரி, தங்குதடையின்றி வெளிவர, ஒரு 'ஸ்ட்ரா'வை பாட்டிலில் செலுத்துங்கள். இதன் வழியாக வரும் காற்று, பாட்டிலுள்ள பொருளைச் சுலபத்தில் வெளிக் கொணரும்.

✤ ஒருவன் எத்தகைய துன்பம் அனுபவித்தாலும் அவனை நேசிக்கும் குழந்தை ஒன்று இருந்து விட்டால் போதும், அவனைத் துரதிர்ஷ்டசாலி என்று கூற முடியாது.
- சாமுவேல் டெய்லர்

✤ வெள்ளை உளுத்தம் பருப்பை (எண்ணெய் விடாமல்) வாசனை வர வறுத்து நைசாக அரைத்து ஒரு ஹார்லிக்ஸ் பாட்டிலில் போட்டு மூடி வைத்துக் கொள்ளவும்.

புளித்த மோர் ஒரு தம்ளர் எடுத்து, அதில் ஒரு ஸ்பூன் உளுத்த மாவைப் போட்டு உப்புப் போட்டுக் கரைக்கவும். சீரகம், கொத்துமல்லித் தழை, கடுகு போட்டுத் தாளிக்கவும். இதுவே டாங்கர் மாவுப் பச்சடி. குழம்பு சாதத்திற்குத் தொட்டுக் கொண்டு சாப்பிட மிகவும் அருமையாக இருக்கும். திடீர் விருந்தாளிகள் வந்தால் உடனே பண்ண மிக எளிதான சுவைமிக்க பச்சடி.

✤ விக்கலை நிறுத்த ஒரு 'இனிமையான' வழி, ஒரு டீஸ்பூன் சர்க்கரையை வாயில் போட்டு, அது கரையும் முன்பே விழுங்கவும், மணலாகத் தொண்டைக்குள் இறங்கும் சர்க்கரை அங்குள்ள நுண்ணிய நரம்பு முனைகளை வருடி, முக்கியமாக விக்கல் தொடரக் காரணமான ஃப்ரீனிக் என்னும் நரம்பை அமைதிப்படுத்துவதால், விக்கல் விரைவில் நின்று விடும்.

இருபதில் பத்தொன்பது பேருக்கு இது பலனளிக்கிறது.



✤ வாடல், உப்புத் தண்ணீர், வேகவைக்க நேரமின்மை ஆகிய காரணங்களால் குழம்பில் போடும் கறிகாய்கள் வேகாது. இவற்றைத் தூக்கி எறியாமல் மிக்ஸியில் அடித்துக் குழம்பில் கொட்டிக் கொதிக்க வைத்தால் மிகவும் ருசிக்கும். தயிரில் கலக்கி, கடுகு தாளித்துப் பச்சடியாகவும் உபயோகிக்கலாம்.

* கொத்தவரங்காயை அதிகம் உணவில் சேர்க்காமல் இருப்பதே நல்லது.

* காய்கறி, பருப்பு, தானிய, பழ வகைகள் அடங்கிய சைவ உணவே சிறந்த உணவு என ஆராய்ச்சிகள் கூறுகின்றன.

* உடல் எடை குறைய விரும்புபவர்கள் ஒரேயடியாய் பட்டினி கிடந்தால் உடல் நோய்வாய்ப்படச் செய்யும். மனத்திலும் உறுதி தளரும். மாறாக, ஒவ்வொரு வேளையும் கொழுப்புச் சத்து நீக்கி மக்காச் சோளம், காய்கறி, கீரை போன்றவற்றை உட்கொண்டால் எடையும் குறையும். சருமமும் பளபளப்பாகும்.

* காலை உணவிற்குக் 'கார்ன் பிளேக்' எனக் கடையில் விற்கப்படும் சோள உணவைப் பாலுடன் அருந்த அவசர ஆபீஸ் உத்தியோகக்காரர்களுக்குச் சிறந்தது. அது மிகச் சிறந்த சத்து நிறைந்த 'டயட்' உணவும் கூட.

* உலர்ந்த ஆரஞ்சுத் தோலின் புகை கொசுக்களை விரட்டும். போகிற போக்கில் பழத்தை விட ஆரஞ்சுத் தோலுக்கு டிமாண்ட் அதிகமாகலாம், அதிலிருந்து கொசுவத்திச் சுருள் தயாரிக்க ஆரம்பித்தால்!



* சென்ட் தீர்ந்தவுடன், அந்த பாட்டிலை அலம்பி ஊற்றிய தண்ணீரில் துணி அலசினால், வாசனையாக இருக்கும்.

✣ அடுப்பிலிருந்து நெய்யை இறக்கியதும், கறிவேப்பிலையை மோரில் நனைத்து, நெய்யில் போட்டால், கறிவேப்பிலையும் மோரும் முறுகி, நெய் நல்ல மணத்துடன் இருக்கும்.



✣ ஒரு சிறுநீரகம், ஒரு நுரையீரலுடன் வாழலாம். ஆனால் இருக்கும் ஒரு கல்லீரல் பழுதுபட்டால் ஆபத்தே. ஆனால் குடி முழுக்க முழுக்க கல்லீரலைப் பாழ்படுத்துகிறது.

ஆரோக்கிய மனத்திற்கு ஆரோக்கியமான உடல் அவசியம்.

உடலில் எடை கூடுதல் சதை பருமன் எனின் கர்வம் தலையின் பருமன் ஆகும்.

✣ சேனைக் கிழங்கு வறுவல் செய்ய, தயாரித்த வில்லைகளை லேசாக ஒரு ஆவி வேகவிட்டு பின்னர் வடிய வைத்து, அதன் பின்னர் எண்ணெயில் பொரித்தெடுத்தால் அதன் கரகரப்பே தனி!

✣ எப்பொழுதும் குழந்தைகளை ரப்பர் ஷீட்டிலோ, நைலான் பாயிலோ படுக்க வைத்தால் உஷ்ணம் அதிகம் ஆகி, கண் பொங்கும். கோரைப் பாய்தான் எந்தச் சீதோஷ்ணத் துக்கும் ஏற்றது.

✣ உடல் எடை குறைய விரும்புபவர்கள் உணவு உண்பதற்கு முன்பாக ஒரு தம்ளர் வெதுவெதுப்பான நீரை அருந்த வேண்டும். எலுமிச்சை பழச் சாறை தினம் அருந்த உடல் மெலிந்து ஆரோக்கியம் கூடும்.

ஆப்பிளைத் தோலுடன் சாப்பிடுவதே நல்லது.

☆ பழநியம்மாள் என்ற எண்பது வயதுப் பெண்மணி சொல்கிறார் - என் கணவருக்கு வெகு காலம் முன்பு இராஜ பிளவை முதுகிலே வந்தது. குணப்படுத்தவே முடியாது என்று வைத்தியர்கள் கைவிட்டு விட்டார்கள். ஆனைமலை மூலிகை வைத்தியர், தேன், சுண்ணாம்பு, வேப்பிலைக் கொழுந்து, குப்பை மேனி இலை இவற்றைக் குழைத்துப் போட்டார். ஒரே மாதத்தில் ரணம் ஆறி விட்டது. ஒரு ஆழாக்கு அரிசி கொட்டலாம் போலப் பள்ளம் ஆறி, அதற்குப் பின் பத்து வருடம் உயிரோடு இருந்தார்.



☆ ஓட்டலில் மட்டும் பூரி எவ்வளவு உப்பலாக இருக்கிறது என்று மனத்திற்குள் நினைக்காதவர்கள் இருப்பது அபூர்வம். நம் வீட்டுப் பூரியும் அதை மிஞ்ச, நாம் செய்ய வேண்டியது, ஒவ்வொரு கப் ஆட்டாவிற்கும் ஒரு ஸ்பூன் ரவையைக் கலக்க வேண்டும். கடைசி வரை, டீ.வி. சிறுவன் உருட்டித் தள்ளும் பூரியாக, தட்டில் கண்சிமிட்டும்.

☆ பாகற்காய் வயிற்றுப் பூச்சிகளை நீக்கும்.

பயறு வகைகளில் பச்சைப் பயறு வகை சிறந்தது.


வளரும் பருவத்தினருக்கு வேகவைத்த உருளைக் கிழங்கு சிறந்த உணவு.

☆ முளைக் கீரை பசியை உண்டு செய்வதன் மூலம் சீரான சக்தியை அதிகரிக்கச் செய்யும்.

முருங்கைக் கீரை, வாரம் ஒரு முறை ஒரு கைப்பிடி உணவில் சேர்த்து வர கண்களுக்கு நல்லது.

கொத்துமல்லி இரத்த சுத்தி செய்வது.

☆ 'பவர்கட்'டின் கைங்கர்யம் ஜன்னலில், டேபிளில் தரையில் என்று மெழுகுவர்த்தியின் பொட்டுக் கோலங்கள். அழியாத கோலங்கள். காலி டப்பாக்களில் மணலை நிரப்பி, பின் வத்தியை அதில் செருகி வையுங்கள். இஷ்டப்பட்ட இடங்களுக்குத் தூக்கிச் செல்லலாம்.



இந்த சலுகை தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரிக்கு மட்டுமே.

☆ ஆமவடை, அடை போன்ற பலகாரங்களுக்கு ஊறவைத்த பருப்பு அரிசி வகைகளை சற்று கரகரப்பாக அரைக்க வேண்டும். மிக்ஸியில் காய்கறிகளைத் துண்டாக்கவும் தேங்காய் பத்தைகளைத் துண்டிக்கவும் இரண்டு கைகள் மட்டுமே உள்ள பிளேடு இருக்கும். இந்த பிளேடைப் போட்டு அரைக்கும் போது பருப்பு, மற்றும் அரிசி (ஊறியவை) கரகரப்பாக அரைபடும். எவ்வளவு நேரம் அரைத்தாலும் மை போல் மசியாது.

☆ முட்டைக் கோஸ் அல்சர் நோய்க்குச் சிறந்த உணவு.

வெண்டைக்காயில் உள்ள பாஸ்பரஸ் சத்து புத்தியைக் கூர்மையாக்குகின்றது.

தினமும் ஒரிரு துண்டுகள் நெல்லிக்காய் உண்ணுபவர் அனைவரும் செயலாற்றல் திறமையில் ஔவையாரே.

☆ மஞ்சள் தேய்த்துக் குளிக்கும் வழக்கம் உள்ளவர்களின் ஆடைகளும், துண்டுகளும் மஞ்சள் நிறமாகி விட்டால், அந்தத் துணிகளை வெயிலில் சிறிது நேரம் போட்டுப் பாருங்கள். மஞ்சள் மாயமாக மறைந்து விடும்.

☆ திருவிழா மற்றும் நம் உறவினர் திருமணம் (அ) சுற்றுலா போய் விட்டு வந்தவுடன் நம் ஸூட்கேசிலுள்ள துணிகளை பீரோ துணிகளோடு கலக்காமல், வெய்யிலிலோ (அ) சுத்தம் செய்தோ உள்ளே வைக்கவும். அதுவரை துணிகளைத் தனியே வைக்க வேண்டும். ஏனெனில் பல இடங்கள் சென்று வந்ததால் நோய் பரவ ஏதுவாகும்.

☆ காஸ்கெட் சரியில்லாமலோ, வேறு காரணத்திலோ குக்கரில் சாதம் வழிந்து விடும். அந்த சாதத்தை வீணாக்காமல் அத்துடன் உப்பு, மிளகாய்த்தூள், பொடியாக நறுக்கிய வெங்காயம் சேர்த்து நன்றாகப் பிசைந்து உருட்டி சிறு சிறு உருண்டைகளாக வெய்யிலில் காயவைத்து எண்ணெயில் பொறித்துச் சாப்பிட்டால் வாயில் கரைந்து ருசியான மாலை நேர நொறுக்குத் தீனியாக பயன்படும்.



✳ பச்சரிசி உணவை விட புழுங்கலரிசி உணவே சிறந்தது.

அகத்திக் கீரை உடல் உஷ்ணத்தைச் சீராக்கும். மனம் உறுதியும், சாந்தமும் பெறும்.

புதினா ஜீரண சக்தியும், இரத்த சுத்தியும் செய்யவல்லது. ஓரிரு இலைகளை முகத்தில் தேய்க்க முகம் பளிச்சிடும்.

பசலைக் கீரை உணவில் வாரமிருமுறை அவசியம் சேர்க்கப்படல் வேண்டும்.

வெந்தயக் கீரை சர்க்கரை நோயை நன்கு கட்டுப்படுத்தும்.

✳ அவசரமாக வேலை செய்யும் போது நமது உடையில் எண்ணெய் கொட்டிவிடலாம். அந்த எண்ணெய்க் கறையைப் போக்க உடனடியாக எண்ணெய் கொட்டியிருக்கும் இடத்தில் விபூதியைப் பூசி ஒரு மணி நேரம் வைத்து விடுங்கள். அதன் பின் சோப் போட்டு அலசினால் எண்ணெய் இருந்த இடம் தெரியாது போய் விடும்.

✳ சுற்றுப்புறச் சூழல் சுத்தமாக இருக்க வேண்டுமானால் மரம் வளர்க்க வேண்டும். ஆகவே கிரகப்பிரவேசத்திற்கு செல்வோர் பரிசுப் பொருளாக மரக்கன்றுகளையோ அல்லது பூச்செடிகளையோ பரிசாகக் கொடுக்கலாம். ஃப்ளாட் ஆக இருந்தால் பூந்தொட்டிகளையும் இன்டோர் செடிகளையும் பரிசாக அளிக்கலாம்.

✳ தயிரிலிருந்து வெண்ணையைப் பிரித்து எடுக்கும் போது, உடனே அதைப் பழைய வெண்ணைய்க் குவியலுடன் சேர்க்கக் கூடாது. மாறாக அரித்தெடுத்த வெண்ணெயை சாதாரணத் தண்ணீரில் கொஞ்ச நேரம் போட்டு வைத்திருந்து பிறகுதான் மற்ற சேகரித்த வெண்ணெயுடன் சேர்க்க வேண்டும். இதனால் இப்படிச் சேகரித்த வெண்ணெயில் காணப்படும் துர்வாசனையை அகற்றி விடலாம்!



✳ முட்டைக்கோஸ் கறிக்கு, அரிவாள் மணையிலோ, கத்தியாலோ நறுக்குவதை விட காரட் சீவியில் சீவுவது எளிது. பார்க்க 'யூனிபார்மாகவும்' பொரியல் ருசியாகவும் இருக்கும். வேகும் நேரம் குறைவு.

✳ குளிர்சாதனப் பெட்டியின் கதவை அரை நிமிடத்திற்கு மேல் திறந்து வைக்கக் கூடாது! அடிக்கடி கதவைத் திறந்து மூடுவதால் உள்ளேயுள்ள குளிர் சீதோஷ்ண நிலை மாறி வெளி வெப்பநிலை உள்ளே சென்று குளிர்சாதனப் பெட்டியின் சீரான வெப்ப நிலையை மாற்றி விடும். அத்துடன் உள்ளே வைக்கப் பட்டுள்ள பொருட்கள் வாடவும் அழுகவும் கெட்டுப் போகவும் கூடும்.

✳ Fixed Blade உள்ள மிக்ஸி ஜாரில் சில சமயங்களில் பிளேடு நகராமல் இறுகிக் கொண்டு விடும். மிக்ஸி வைத்தால் புஷ் தான் எரியும். அதற்காகக் கடைக்கு தூக்கிக் கொண்டு ஓட வேண்டாம். பிளேடு முழுகும் அளவுக்கு ஜாரில் வெந்நீர் ஊற்றி ஐந்து நிமிடம் வைத்து விட்டுப் பின்பு நீரைக் கொட்டி விட்டு, பிளேடைக் கையால் சுழற்றவும். பிளேடு நன்றாகச் சுற்றும்.

✳ 'வெஜிடபிள்' சாலட் செய்யும் போது அதிகமாக நீர் விட்டுக் கொள்ளும். சில 'பிரட்' துண்டுகளைப் போடவும். நீர் உறிஞ்சிக் கொள்வதுடன், தனி ருசியும் கிடைக்கும்.

✳ புதிதாக டிகாக்ஷன் போட்டுக் காப்பி கலந்த மாதிரி எப்போதும் இருக்க வேண்டுமா? அடுப்பில் டிகாக்ஷனை ஒருபோதும் நேரடியாகச் சூடுபடுத்தக் கூடாது. பாலை நன்கு சுடவைத்து நுரை வரும் வரை ஆற்றி டிகாக்ஷனை விட்டுச் சர்க்கரையைப் போடுங்கள். பேஷ்... பேஷ், ரொம்ப நன்னா இருக்கு என்று சொல்ல வைக்கும்.

✳ ஆரோக்கியம் தேவையா - சற்றுப் பசியுடனே உணவை முடித்து விடுங்கள்.

மதியம் உண்டபின் சற்று காலாற நடக்க வேண்டும்.



❖ தலையணையின்றிக் கைகளை மடித்துக் கொண்டு தலைக்கு வைத்துச் சமதரையில் படுத்து ஓய்வு எடுப்பதால் இடுப்பு வலி, முதுகுவலி மாறி விடுகின்றன. இந்தப் பயிற்சியினால் உடல்வலி மாறிச் சுறு சுறுப்பும் ஏற்படுகிறது.

❖ ஹாட் பேக்கில் (ஈரம் இல்லாமல்) கறிவேப்பிலையை உருவிப் போட்டு மூடி வைத்தால் (இறுக்கமாக) வாடாமல் இரண்டு நாட்கள் ஆனாலும் அப்போது பறித்தது போலவே இருக்கும்.

❖ வயிற்றுப்போக்கு உடனடியாக நிற்க, வயிற்றுப் போக்கினால் அவதிப்படுகிறவர்கள், ஒரு ஸ்பூன் டீத்தூளை அரை டம்ளர் தண்ணீரில் போட்டு நன்கு கொதிக்க வைக்க வேண்டும். பின்பு வடிகட்டி கிடைக்கும் டிகாஷனுடன் சிறிதளவு எலுமிச்சைப் பழச்சாறைக் கலந்து குடிக்க அதிசயத்தக்க வகையில் வயிற்றுப் போக்கு உடனடியாக நிற்கும்.

❖ தானியங்களை முளை கட்டி உண்பது மிகவும் புரதச் சத்து நிறைந்தது. இதோ முளை கட்டுதலுக்கு ஓர் எளிய வழி. முளை கட்ட வேண்டிய பயிறு வகைகளை எட்டு மணி நேரம் நீரில் ஊற வைத்து, பின்னர் தண்ணீர் வடிய விட்டு, ஹாட்பேக்கில் போட்டு மூடி வைத்து அடுத்த நாள் திறந்து பார்த்தால் அழகிய முளை கட்டிய தானியம் ரெடி.

❖ வெளியூர்களுக்குப் பஸ்ஸில் செல்லும் போது கைவசம் இரண்டு மூன்று ஸ்டிராக்களை எடுத்துச் சென்றால் தண்ணீர் தாகம் எடுக்கும் போது பாட்டிலில் இருந்து தண் ணீர் குடிக்கச் சௌகரியமாய் இருக்கும்.

❖ தோசை மாவு குறைவாக இருந்தால் அந்த அளவிற்கு அரிசி மாவு சேர்த்துத் தேங்காயைப் பூ போல் துருவிக் கொட்டுங்கள். ஒரு ஸ்பூன் சர்க்கரை சேருங்கள். கொஞ்சம் தண்ணீ ராகக் கரைத்து ஆப்பம் ஊற்றுங்கள். பூப் போன்ற ஆப்பம் ரெடி.

❖ நாம் கஷ்டப்பட்டு மனச்சாட்சிக்கு நியாய மாகப் பக்தி சிரத்தையுடன் உழைத்தாலன்றி வெற்றி பெற முடியாது. ஆசை இருந்தால் மட்டும் போதாது. லட்சியத்தில் பக்தி வேண்டும். பெரும் முயற்சிகள் அனைத்திற்கும் சிரத்தை தேவை.

- ராஜாஜி

❖ எல்லாம் வேடிக்கைதான்! நமக்கு நடக்காமல் மற்றவர் களுக்கு நடக்கும் வரை.

- வி. ரோஜர்ஸ்

❖ வெயில்... வெயில்...
தாகம்... தாகம்...
நா... வறண்டு, வறண்டு
போகிறது.
சில்...லென்று... தண்ணீர்...
அடிக்கடி குடிக்கிறீர்கள்.
ஆனால்... ஒன்று தெரியுமா
உங்களுக்கு...?
பல தம்ளர் 'சில்'
நீர் பருகுவதற்குப் பதில்
ஒரு தம்ளர் வெந்நீர்
குடித்தால் அடிக்கடி
தாகம் எடுக்காது!

❖ நதியைக் கடக்கும் வரையில் முதலைகளை முறைத்துக் கொள்ளக் கூடாது.